
கண்ணா
வருவாயா?
ரம்யா ராஜன்

# கண்ணா வருவாயா?

**ரம்யா ராஜன்**

**அன்பு இல்லம்**

கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

# கண்ணா வருவாயா?

1

தென் தமிழகத்தைச் சேர்ந்த பாலையம்பட்டி என்னும் கிராமம், பச்சைப் போர்வையை விரித்தது போல் பார்க்கப் பசுமையாக இருக்கும் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றம்தான் மிஞ்சும்.

ஏனென்றால், இங்கு எல்லாம் பருவ மழை என்பது மூன்று, நான்கு வருடங்களுக்கு ஒரு முறைதான். தண்ணீர் அதிகம் தேவைப்படாத பருத்தியோ அல்லது மக்காச்சோளமோதான் பயிரிடப்படும்.

வருடம் முழுவதும் சூரியன் சுட்டெரிக்கும் காரணத்தால், தண்ணீர் பஞ்சம் ஏற்படுவதும் உண்டு. மொத்தத்தில் வெயில் திரைப்படத்தில் வரும்

"வெயிலோடு விளையாடி, வெயிலோடு உறவாடி

வெயிலோடு மல்லுக் கட்டி ஆட்டம் போட்டோமே..."

கதைதான் இங்கும். பசுமை தான் குறைவே தவிர, மற்றபடி கிராமத்திற்கு ஏற்ற இலக்கணத்தைப் பெற்ற ஊர்.

இந்த ஊரில் இருக்கும் சாலைகளைத் தார்ச் சாலைகள் என்று சொல்வதை விடத் தார் பூசப்பட்ட சாலைகள் என்று சொல்லலாம். பெயருக்குத் தாரைப் பூசி விட்டுச் சென்றதால், ரோடு குண்டும் குழியுமாகத்தான் இருக்கும். அந்த ரோட்டிலும் யாரோ சைக்கிள் ரேஸ் வர்றாங்கப்பா... யாரு அதுன்னு பார்ப்போமா...?

முதலில் ஒரு சைக்கிள் வேகமாக வர... அந்தச் சைக்கிளில் இருந்தவள், மாநிறத்தில் உயரமாக அதே சமயம் மெலிவாக இருந்தாள். பள்ளிச் சீருடை அணிந்து இரட்டை ஜடை போட்டிருந்தாள்.

அதற்கு அடுத்து ஒரு சைக்கிள் வந்தது. அதில் இருந்தவள் சற்று உயரம் குறைவாக, ரொம்ப மெலிவாகக் கறுப்பாக இருந்தாள். பின் சற்றுத் தள்ளி மற்றொரு சைக்கிள் வந்தது. அதில் இருந்தவள் உயரத்திற்கு ஏற்ற உடல் எடையுடன் வெள்ளை நிறத்தில் இருந்தாள். சைக்கிள் பெடலுக்கு வலிக்கும் என்று நினைத்தாளோ என்னவோ... மெதுவாக மிதித்தபடி வந்தாள்.



சைக்கிள் ஓட்டிக் கொண்டே திரும்பிப் பார்த்த சந்தியா, தனக்குப் பின்னால் வந்தவளிடம், "ஹே சித்ரா...! இந்த நந்தினி சைக்கிள் ஓட்டுறாளா இல்லை உருட்டு றாளா...?" என்று பேசியபடி தன் சைக்கிளின் வேகத்தைக் குறைக்க,

அவளுடன் இணைந்த சித்ரா, "சரிதான் நீ சொல் றது... இந்தப் புள்ள இந்த வேகத்தில வந்தா... நாம பரீட்சைக்குப் போய்ச் சேர்ந்த மாதிரிதான்!" என்று சொல்லும் போதே அவர்களுடன் மூச்சு வாங்க இணைந்த நந்தினி,

"எதுக்குடி இவ்வளவு வேகமாப் போறீங்க...? நாம என்ன பந்தயத்துலேயா வண்டி ஓட்றோம்!" என்றாள்.

"உன்னோட சேர்ந்து நாங்க பந்தயத்துல வண்டி ஓட்டிட்டாலும் வௌங்கிடும்!" சித்ரா அலுத்துக் கொள்ள...

"வௌங்காம... முயல் ஆமை கதை கேட்ட தில்லை... நாங்க எல்லாம் லேட்டா வந்தாலும் லேட் டஸ்ட்டா வருவோம்ல!" என்று நந்தினி சைக்கிள் ஓட்டிய படி தன் சுடிதாரில் இல்லாத காலரைத் தூக்கி விட...

அவளைக் கேலியாய்ப் பார்த்த சந்தியா, "இன்னும் இதையே எத்தனை காலத்துக்குச் சொல்வீங்க. எல்லா முயலும் தூங்கிடாது நந்தினி...!" என்றவள், வேகமாகத் தன் சைக்கிளை மிதிக்க... சித்ராவும், நந்தினியும் அவ ளுடன் இணைந்து சென்றனர்.

மூவரும் அவர்கள் ஊர்ப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கின்றனர். பள்ளியின் உள்ளே வந்ததும்,

சைக்கிளை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி விட்டுச் செல்லும் போது... சந்தியா அடிக்கடி பின்பக்கம் திரும்பி தன் உடையைப் பார்த்தபடி செல்ல... அவளைச் சித்ரா வும், நந்தினியும் விசித்திரமாகப் பார்த்தனர்.

பள்ளியில் இருக்கும் மரத்தடியில் வந்து அமர்ந் ததும் சித்ராவும், நந்தினியும் புத்தகத்தை எடுத்துப் படிக்க... சந்தியா தன் விரல் நகத்தைக் கடித்தபடி அமர்ந்திருந்தாள்.

எப்போதும் கலகலப்பாக இருப்பவள் இன்று தீவிரமாக எதையோ யோசிப்பதைப் பார்த்துத் தங்கள் புத்தகத்தை மூடி வைத்த சித்ராவும், நந்தினியும் சந்தியாவையே பார்க்க...

சிறிது நேரம் சென்றுதான் அவர்கள் இருவரும் தன்னையே பார்ப்பதை உணர்ந்த சந்தியா, 'இப்ப என்ன இங்கே பார்வை?' என்பது போல் அவர்களைப் பார்த்து முறைத்தாள்.

அவள் பார்வையை லட்சியம் செய்யாத சித்ராவும், நந்தினியும், "இன்னைக்கு என்ன தில்லாலங்கடி வேலை செஞ்சிருக்க...? உன் முகமே சரியில்லையே...! உண்மையைச் சொல்லு...!" என்று மிரட்ட,

'இவங்க சொல்லலைன்னா விட மாட்டாங்க... எப்படியும் கொஞ்ச நேரத்தில ஊருக்கே தெரியப் போகுது!' என்று நினைத்தவள், "எல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம்தான்!" என்றாள் அலட்சியமாக.

அதைக் கேட்டு அதிர்ந்த சித்ராவும் நந்தினியும், "என்னடி சொல்ற? பொம்பளைங்க சமாச்சாரமா...? நீ



இன்னும் வயசுக்கே வரலியே...!" இருவரும் கோரசாக இழுக்க...

"ஷ்ஷ... கத்தி மானத்தை வாங்காதீங்க. அது நேத்து...!" என்ற சந்தியா அவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

"அடிப்பாவி! பிறகு எப்படி ஸ்கூலுக்கு வந்த...? வா, போய் முதல்ல டீச்சர் கிட்டே சொல்லுவோம்!" நந்தினி வேகமாக எழுந்திருக்க...

அவள் கைப்பிடித்துத் தடுத்த சந்தியா, "காரியத் தையே கெடுக்கப் பார்க்கிறியே...! நானே எங்க அப்பத்தா கண்ணுல படாம தப்பிச்சு வர்றதுக்குள்ள போதும் போதும்னு ஆகிடுச்சு.

"அப்பத்தா என் முகத்தைப் பார்த்தே கண்டு பிடிச்சிடும். இன்னைக்குத் தானே கடைசிப் பரிட்சை, எழுதிட்டுப் போய்ச் சொல்லிக்கலாம்...!" என்றவள்,

தானும் எழுந்து வகுப்பறைக்குச் செல்ல... அவளைத் தொடர்ந்த சித்ராவும், நந்தினியும் எப்போதும் போல் சந்தியாவை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

'தாங்கள் எல்லாம் விஷயம் தெரிந்ததும் பயத்தில் வைத்த ஒப்பாரி என்ன... இவள் பார், தைரியமாகப் பரிட்சை எழுத வந்திருக்கிறாள்!' என்று நினைத்தபடி பரிட்சை அறைக்குள் நுழைந்தனர்.

பெண்கள் பருவம் அடைவது நகர்ப்புறத்தில் சாதாரணமான விஷயமாகத் தெரிந்தாலும், கிராமப்

புறத்தில் இன்றும் பெரிய விஷயமாகத்தான் பார்க்கப் படுகிறது.

வேகமாகப் பரீட்சை எழுதி முடித்த சந்தியா, பரீட்சைப் பேப்பரைக் கொடுத்து விட்டு வெளியே வந்தவள், சித்ரா வுக்கும் நந்தினிக்கும் காத்திருக்காமல், தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள்.

அவள் வீட்டுக்குச் செல்லும் வழியில் எதிரே புல்லட் வரும் சத்தம் கேட்டது. அதன் சத்தத்தில் இருந்தே வருவது யார் என்று புரிந்து கொண்டவள் முகம் புன்னகையில் மலர்ந்தது.

சந்தியாவின் தாய் மாமன் மகன் கதிர் என்கிற கதிர்வேலன்தான் வந்து கொண்டிருந்தான்.

அவன் கல்லூரியில் பி.எஸ்சி. மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருக்கிறான். சந்தியா அவனிடம் நின்று பேசாமல் லேசாகப் புன்னகைத்தபடி அவனைக் கடந்து செல்ல... அவள்ள ஆச்சரியமாகப் பார்த்தவன், தன் வண்டியைத் திருப்பிக் கொண்டு சந்தியாவின் முன்பு சென்று அவளை வழி மறித்தான்.

“ஹே சில்வண்டு! எப்பவும் லொடலொடன்னு பேசுவ... இன்னைக்கு என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரிப் போற...! பரிட்சை நல்லா எழுதலையா...? அப்ப திரும்பவும் ஒன்பதாவது கிளாஸ்தான்...!” தன் அத்தை மகளைக் கதிர் கேலி செய்ய...

“போ மாமா...! அதெல்லாம் ஒண்ணும் இல்லை... நான் நல்லாத்தான் எழுதி இருக்கேன்!” என்றாள் சந்தியா ரோஷமாக.



“பிறகு ஏன் இவ்வளவு அமைதியா இருக்கே...? நீ எப்பவும் போல இருந்தா இந்நேரம் நூறு கதிர் மாமான்னு சொல்லியிருப்பே! என்ன ஆச்சு...?” கதிர் அவளை ஆராய்ச்சியாகப் பார்க்க...

சந்தியாவிற்கு அவனின் கூர்மையான பார்வை ஏதோ செய்ய... வெட்கத்தில் தலை குனிந்தவள், அங்கே மேலும் நிற்க முடியாமல் நெளிந்தாள்.

சந்தியாவையே பார்த்துக் கொண்டிருந்த கதிர், “பார்டா... என்னோட அத்தை மகளுக்குப் புதுசா வெட்கம் எல்லாம் வருது...!” என்று மேலும் கேலியில் இறங்க,

“போதும் மாமா. என்னை விடு... நான் வீட்டுக்குப் போகணும்...!” என்றவளின் முகத்தில் வெட்கம் இருந்தாலும், கூடவே... அவள் களைப்பாக இருப்பதைப் பார்த்த கதிர், அவளுக்கு ஒருவேளை உடல் நிலை சரி இல்லையோ என்று நினைத்து, மேலும் தாமதிக்காமல்,

“சரி, போ...!” என்று வழி விட்டவன், சற்று இடைவெளி விட்டு அவளைத் தொடர்ந்தான்.

கதிர் தன்னைத் தொடர்ந்து வருவதை உணர்ந்த சந்தியா, அவள் வீட்டு வாசலுக்கு வந்ததும், திரும்பி அவனைப் பார்த்தவள், “நீ போ...!” என்றதும், கதிருக்குக் கோபம் வந்து விட்டது.

“இது உன் வீடு மட்டும் இல்லை. என்னோட அத்தை வீடும் தான்...!” என்ற கதிர், வீம்புக்குத் தன் வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே வர... சந்தியா தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

கதிர் இருந்ததால் சந்தியா, தான் வயதுக்கு வந்தது பற்றித் தன் அம்மாவிடம் சொல்ல முடியாமல்... அவள் அறைக்குச் சென்று கட்டிலில் படுத்து விட்டாள்.

கதிரைப் பார்த்ததும் வேதவல்லி, தன் அண்ணன் மகனைச் சாப்பிட்டு விட்டுச் செல்லும்படி சொல்ல... கதிரும் உள்ளே இருந்து வந்த மீன் குழம்பு வாசத்தில் ஈர்க்கப் பட்டு சரி என்று சாப்பிட அமர்ந்தான்.

கதிர் சாப்பிட அமர்ந்ததும் சந்தியாவையும் சாப்பிட வரச் சொல்லி வேதவல்லி அழைக்க... அவள் பசியில்லை என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டே பின் கட்டில் இருந்து உள்ளே நுழைந்த சந்தியாவின் அப்பத்தா, கதிரைப் பார்த்ததும், "வாய்யா...!" என்று சொல்லி விட்டுத் தன் பேத்தியைத் தேடிச் சென்றார்.

"ஏன் தங்கம் சாப்பாடு வேண்டாம்னு சொல்ற...? காலையிலேயும் பரிட்சைன்னு சொல்லிட்டுக் கொஞ்சமாத் தானே சாப்பிட்டே...! இப்படிச் சாப்பிட்டா எப்படி உடம்பில தெம்பு இருக்கும்?

"உன் வயசுப் பிள்ளைங்க எல்லாம் சமஞ்சு ரெண்டு மூணு வருஷம் ஆச்சு...! நீ இன்னும் சின்னப் பிள்ளையாவே இருக்கியே...!" என்று பேத்தியின் கால் மாட்டில் அமர்ந்து அவள் கால்களைப் பிடித்து விட்டபடி புலம்பியவர், பேத்தி பதில் சொல்லாமல் இருக்கவும், தன் மருமகள் வேதவல்லியை அழைத்து, "இங்கே வந்து உன்



மகளைப் பாரு...! எதுவும் பேச மாட்டேங்கிறா...! உடம்புக்கு எதுவும் செய்யுதோ...!" என்றார் சந்தேகமாக.

வேதவல்லியும் பதறியபடி தன் மகள் இருந்த அறைக்குச் செல்ல... அவர்கள் அடிக்கும் கூத்தை எல்லாம் பார்த்தபடியே கதிர் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

சந்தியா, அவன் அத்தை வேதவல்லிக்குத் திருமண மாகி எட்டு ஆண்டுகள் கழித்துத்தான் பிறந்தாள். அதோடு அவருக்கு வேறு குழந்தையும் உண்டாகாததால், அவளே அந்த வீட்டின் மகாராணி, ராணி, இளவரசி எல்லாம். மற்றவர்கள் சேவகர்கள் போலத்தான் அவளுக்குப் பணிவிடை செய்வார்கள்.

வேதவல்லியும் சென்று தன் மகளைக் 'கண்ணே! மணியே!' என்று கொஞ்சிச் சாப்பிட அழைக்க... சந்தியா தன் வலது கையால்... கண்களை மறைத்துக் கொண்டு படுத்திருந்தாள்.

"கண்ணு, தலை வலிக்குதா...? இல்லை, பரிட்சை எழுதிக் கை வலிக்குதா...? கார்ல போன்னு சொன்னா கேட்காம சைக்கிள்ல போற...! ஒருவேளை கால் வலிக் குதா...?" ஒவ்வொன்றாகக் கேட்டுக் கொண்டே வந்த அப்பத்தாவுக்குத் திடீரென்று பல்பு எரிய...

"ஏன் வேதவல்லி... ஒரு வேளை பாப்பா பெரிய மனுஷி ஆகியிருக்குமோ...!" என்று இழுக்க...

"ஹப்பா...! இப்பவாவது கரெக்டா சொன்னியே...!" என்றபடி சந்தியா எழுந்து அமர்ந்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டு மகிழ்ந்த வேதவல்லியும், அவர் மாமியாரும், சந்தியாவைச் சந்தோஷமாகக் கட்டிக் கொண்டனர். பின்னே! இரண்டு மூன்று வருடங்களாகவே அவர்கள் ஆவலாக எதிர் பார்க்கும் விஷயம் அல்லவா...!

அதோடு, ஊரில் இருக்கும் மற்ற பெண்கள் எல்லாம் வயதுக்கு வந்தபோது, நம் வீட்டில் இருக்கும் பூ எப்போது மலரும் என்ற காத்திருந்தவர்கள் ஆயிற்றே! அதனால் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்.

வெளியில் அமர்ந்து அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்ட கதிரின் முகம் மலர்ந்தது. 'ஓ...! அதுதான் ஒரு மாதிரி இருந்தாளா...?' என்று நினைத்தவன், மேலும் தாமதிக் காமல் வேகமாகச் சாப்பிட்டு விட்டு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தன் வீட்டுக்குச் சென்றான்.

அவனுக்குத் தெரியும், இப்போது தான் சந்தியாவைப் பார்த்தால்... அவளுக்குச் சங்கடமாக இருக்குமென்று. வீட்டுக்குள் வந்தவனைப் பார்த்து அவன் அம்மா லஷ்மி, "வாடா வேலா, சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா...?" என்றார்.

"வேண்டாம்மா. அத்தை வீட்ல சாப்பிட்டேன்!" என்றவன், தொடர்ந்து,

"அம்மா! நான் இப்ப ஒரு விஷயம் சொன்னா... நீங்க ரொம்ப சந்தோஷப்படுவீங்க!" என்றதும்,

அவனை ஆர்வமாகப் பார்த்த லஷ்மி, "என்னடா, சீக்கிரம் சொல்லு...!" என்று அவசரப்பட,



"உங்க செல்ல மருமக பெரிய மனுஷி ஆகிட்டா...!" என்றான் கதிர் புன்னகையுடன்.

"நிஜமாவா...? என் மருமக பெரிய மனுஷி ஆகிட்டாளா...? ஊர்ல இருக்கிற பிள்ளைங்க எல்லாம் வயசுக்கு வந்திட்டு, இவ மட்டும் இன்னும் வரலை யேன்னு... அவ அம்மா கவலைப்பட்டுக்கிட்டுக் கிடந்தா...! நல்ல வேளை கடவுள் கண் திறந்திட்டார்!" என்றவர்,

"நான் போய் என் மருமகளைப் பார்த்திட்டு வரேன்!" என்று கை நிறையச் சந்தியாவிற்குத் திண்பண்டங்களை அள்ளிக் கொண்டு, தன் மகள் காவேரியையும் அழைத்துக் கொண்டு சென்றார்.

அடுத்த அரை மணி நேரத்தில் சந்தியா பெரிய மனுஷி ஆனது, அந்த ஊர் முழுவதும் தண்டோரா போட்டு அறிவித்தது போல், எல்லோருக்கும் சென்று சேர்ந்து விட்டது.

கிராமம் என்றால் அப்படித்தான். ஒரு வீட்டில் ஒரு விஷயம் நடந்தால்... அது காட்டுத் தீ போல் எல்லோருக்கும் பரவி விடும். அதே போல் நகரத்து மனிதர்கள் போல், அக்கம் பக்கம் என்ன நடந்தால் என்ன என்று கிராமத்து மனிதர்களால் இருக்க முடியாது. அவரவருக்கு என்ன முடியுமோ... அது பழமோ, பூவோ இல்லை இனிப்புகளோ வாங்கிக் கொண்டு வந்து சந்தியாவைப் பார்த்து விட்டுச் சென்றனர்.

மாலை சித்ரா வந்தபோது, கன்னத்தில் சந்தனத்துடன், தலை நிறையப் பூ வைத்து முகத்தில் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருந்த சந்தியா, சித்ராவைப் பார்த்ததும் ஆசையாக அழைத்துத் தன் அருகில் அமர வைத்துக் கொண்டாள்.

சித்ரா தயங்கிக் கொண்டே தன் அம்மா கொடுத்து விட்ட பூவைக் கொடுக்க, சந்தியா அதை வாங்கி மகிழ்ச்சியுடன் அப்போதே தன் தலையில் வைத்துக் கொண்டாள். சித்ரா ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். நந்தினி, சந்தியாவைப் போல் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். இருந்தாலும் மூன்று தோழி களும் எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல் நெருக்கமாகப் பழகி வந்தனர்.

ஆனால், நந்தினி வீட்டில் அவள் அம்மாவும், அப்பாவும் அந்தஸ்து பேதம் பார்ப்பவர்கள். அதனால் சித்ரா, சந்தியா வீட்டுக்கு வருவது போல்... நந்தினி வீட்டிற்குச் செல்ல மாட்டாள்.

சித்ரா வீட்டுக்குக் கிளம்பும்போது,. சந்தியாவின் அம்மா வேதவல்லி அவளிடம் விதவிதமான பழங்கள், இனிப்புகள் கொடுத்து அனுப்பினார். சித்ராவிற்கு ஒரு தம்பியும், தங்கையும் இருக்கிறார்கள். இங்கு கிடந்து வீணாவதற்கு, அந்தப் பிள்ளைகளாவது வயிறு நிறையச் சாப்பிடட்டும் என்று நினைத்தார். சந்தியா அவளை ஐந்தாம் நாள் நடக்கும் சடங்கிற்குக் கண்டிப்பாக வர வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.



சந்தியா வயதுக்கு வந்ததை முன்னிட்டு, கதிர் தன் அத்தை வீட்டுக்குச் செல்வது தடை செய்யப்பட்டது. இனி வயசு வந்த பொண்ணு இருக்கிற வீட்டிற்கு அடிக்கடி செல்லக் கூடாது என்று காரணம் சொல்லப்பட... கதிரும் சரி என்று கேட்டுக் கொண்டான்.

ஐந்தாம் நாள், வீட்டில் அனைத்து உறவினர் களையும் அழைத்துச் சந்தியாவிற்குப் பெரிய அளவில் சடங்கு செய்யப்பட்டது. கதிரின் மொத்தக் குடும்பமும் அங்கேதான் இருந்தது. பெண்கள் வீட்டின் உள்ளே இருக்க, ஆண்கள் வெளியே நின்று கதை பேசிக் கொண்டிருந்தனர். வீட்டின் மாடியில் பந்தி நடந்து கொண்டிருந்தது.

கதிர், தன் மாமாவிற்கு உதவிக் கொண்டிருந் தான். அப்போது அவன் தங்கை காவேரி வந்து, பரண் மேல் இருக்கும் சாமானை எடுக்க அவனை உள்ளே அழைக்கக் கதிரும் எடுத்துக் கொடுத்து விட்டுத் திரும்பி வரும்போதுதான் சந்தியாவைப் பார்த்தான்.

ஐந்து நாள் முன்பு பார்த்ததற்கும், இப்போது பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. ஒல்லியாக மாநிறத்தில் இருந்தவள், இப்போது சற்றுப் பூசினாற் போல், சந்தன நிறத்தில் பட்டைத் தீட்டிய வைரம் போல் ஜொலிக்க, அவள் அருகில் பட்டுப் பாவாடை தாவணியில் நந்தினி தேவதை போல் நின்றிருந்தாள். ஆனால், கதிருக்கு அப்போது தன் அத்தை மகள் மட்டும்தான் கண்ணிற்குத் தெரிந்தாள். எதேச்சையாகத் திரும்பிய

சந்தியாவின் விழிகளும் கதிரின் விழிகளைச் சந்தித்து விலகியது.

சந்தியாவின் சடங்கு முடிந்து நந்தினியும், சித்ராவும் சேர்ந்து சாப்பிடச் சென்றனர். அவர்கள் சாப்பிட அமர்ந்ததும், முதலில் ஒருவர் வந்து வாழை இலையைப் போட்டு விட்டுச் செல்ல... அடுத்து ஒருவர் வந்து கிளாஸில் நீர் ஊற்றி விட்டுச் சென்றார்.

இலையில் நீர் தெளிப்பதற்காக டம்ளரை கையில் எடுத்த நந்தினி, அதைத் தவறிவிட... அவள் இலை முழுவதும் நீர் கொட்டி விட்டது. இப்போது என்ன செய்வது என்பது போல் அவள் பரிதாபமாக விழிக்க...

சித்ரா, இலையில் இருந்த நீரைக் கையால் வழிக்க... அப்போது, "கொஞ்சம் கை எடுங்க..." என்ற கதிர், அந்த நீர் இருந்த இலையை மெதுவாக எடுத்து விட்டு, வேறொரு இலையைக் கொண்டு வந்து போட... அவன் செய்வதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நந்தினியின் முகம் மலர்ந்தது.

அவள் கதிரைப் பார்த்து, "தேங்க்ஸ்...!" என்றாள்.

கதிர் ஒரு புன்னகையுடன் அங்கிருந்து சென்று விட... நந்தினியின் மனதில் கதிரின் முகம் சலனத்தை ஏற்படுத்தியது.

கதிர், பந்தி நடப்பதை மேற்பார்வையிட, நந்தினி அவனை அடிக்கடி மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தவள், மெதுவாகச் சித்ராவிடம் கதிரைக் காண்பித்து யார் என்று விசாரிக்க...



"யாரு! கதிர் அண்ணனையா கேட்கிற...? உனக்கு அவங்களைத் தெரியாது...! அவங்க சந்தியாவோட மாமா பையன். சந்தியா அடிக்கடி கதிர் மாமான்னு சொல்வாளே... அது இவங்களைத்தான்... வெளியூர்ல ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கிறாங்க!" என்று சொல்லி விட்டுச் சித்ரா தன் சாப்பாட்டில் கவனமானாள்.

முழுக்கைச் சட்டையும் அதற்குப் பொருத்தமான பேண்ட்டும் அணிந்து முகத்தில் புன்னகையுடன் அவரவருக்கு ஏற்றபடி பேசி... அவன் விருந்தினரை உபசரிப்பதைப் பார்த்த நந்தினியின் மனதில் கதிர் மீது ஒரு ஈர்ப்பு உண்டானது.

"நம்ம பெரியசாமி மகன் கதிரு தானே நீ...! எப்படி இருக்க ராசா...?"

"நல்லா இருக்கேன் பெரியம்மா."

"நீ வெளியூர்ல தங்கி காலேஜ் படிக்கிறேன்னு சொன்னாங்க..."

"ஆமாம் பெரியம்மா... சிவகாசியில படிக்கிறேன்!" கதிர் சொன்னதும், அடுத்த இன்னொருவர் ஆரம்பித்தார்.

"நீயும் உங்க அப்பா மாதிரி விவசாயம் பார்க்கப் போறியா...? இல்லை, மேற்கொண்டு படிச்சிட்டு வேலைக்குப் போகப் போறியா...?"

"இன்னும் எதுவும் முடிவு பண்ணலை மாமா... இப்ப படிக்கிற வயசு, படிச்சிடுவோம். வேலைக்குப் போறதா...

விவசாயம் பார்க்கிறதான்னு... பிறகுதான் முடிவு பண்ண ணும்!" என்றான் கதிர்.

"நீ ரொம்பத் தெளிவு மாப்பிள்ளை... அப்படியே உங்க அப்பாரு மாதிரி...!" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கதிரின் தந்தை பெரியசாமியும் அங்கே வந்தார்.

நல்ல உயரமாக, நிறமாக இருந்தவர், அவர் வயதுக்கு ஏற்ற தோற்றத்துடன் பார்க்கக் கம்பீரமாக இருந்தார். அவரைப் பார்த்ததும் அதுவரை கதிருடன் பேசிக்கொண்டிருந்தவர், மரியாதைக்காக எழுந்திருக்க...

அவரைப் பிடித்து உட்கார வைத்த பெரியசாமி, "சாப்பிடும் போது எந்திரிக்கக் கூடாது. முதல்ல சாப்பிடு!" என்றார்.

"உங்க மகனும் அப்படியே உங்களை மாதிரியே தங்கமான குணமுங்க. நல்லா வருவாரு பாருங்க...!" என்றதும், தன் மகனைப் பெருமையாகப் பார்த்தார் பெரியசாமி.

நந்தினி வீட்டுக்குக் கிளம்பும் வரை அடிக்கடி திரும்பிக் கதிர் தன்னைப் பார்க்கிறானா என்று பார்க்க... கதிர் வேறு வேலையில் கவனமாக இருந்தான். நந்தினி யும் சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு, அவள் வீட்டுக்குக் கிளம்பி விட்டாள்.

கதிர் வெளியூரில் படிப்பதால், நந்தினியால் அதன் பிறகு அவனை மீண்டும் சந்திக்க முடியவில்லை. நந்தினி யும் சிறிது நாட்களில் கதிரை மறந்து விட்டாள்.



சந்தியா முன்பாவது கதிர் மாமா என்று ஏதாவது சொல்வாள்... இப்போது வயதுக்கு வந்ததில் இருந்து அவள் கதிரைப் பற்றிப் பேசுவது இல்லை. அதற்குக் காரணம் கதிர்தான்.

சந்தியா அவள் பெற்றோருக்கு ஒரே பெண் என்பதால், அவளை வெளியில் திருமணம் செய்ய அவள் பெற்றோருக்கு விருப்பம் இல்லை. அதனால் அவளுக்குக் கதிர்தான் தன் வருங்காலக் கணவன் என்பது சின்ன வயதிலிருந்தே தெரிந்தே கதைதான்.

முன்பெல்லாம் கதிரைப் பார்க்கும் போது எதுவும் தோன்றாது. ஆனால், இப்போது கதிர் அவளைப் பார்க்கும் பார்வையில் வித்தியாசம் இருப்பதால்... வித்தியாசம் என்றால், அவன் அவளைத் தவறாகப் பார்க்கவில்லை. அவன் பார்வையில் ஒரு உரிமை, இவள் என்னுடையவள் என்ற சொந்தம் தெரிந்தது. அதனால் சந்தியாவால் முன்பு போல அவனிடம் கலகலப்பாகப் பேச முடியவில்லை.

அவனைப் பற்றிப் பேசினாலே, அவன் பார்வை நினைவுக்கு வருவதால்... அவள் அவனைப் பற்றி வெளியில் மற்றவர்களிடம் பேசுவதையும் தவிர்த்தாள்.

நாட்கள் வேகமாகச் சென்றது. சந்தியா இப்போது பத்தாம் வகுப்பில் இருந்தாள். கதிர் மேற்படிப்பை அதே கல்லூரியில் தொடர... அவன் விடுமுறையில் ஊருக்கு வரும்போது, சந்தியாவின் வீட்டிற்கும் வருவான்.

"எப்படி இருக்கே சந்தியா...?"

"நல்லா இருக்கேன் மாமா. நீங்க...?"

"ம்ம்... நல்லா இருக்கேன். நீ நல்லாப் படிக்கி றியா...?"

"படிக்கிறேன்...!"

இவ்வளவுதான் எப்போதும் பேசிக்கொள்வார்கள். அதன் பிறகு கதிர் இருக்கும் அரை மணி நேரமும், சந்தியா ஏதோ வேலை இருப்பது போல் ஹாலிலேயே சுற்றிக் கொண்டிருப்பாள்.

கதிரின் பார்வை அவளையே தொடரும். அவன் இருக்கும் வரை அவன் வீட்டுப் பக்கம் செல்லாதவள், அவன் திரும்பக் கல்லூரிக்குச் சென்றதும், அவன் தங்கை காவேரியுடன் சேர்ந்து அங்குதான் ஆட்டம் போடுவாள். காவேரி இவளை விட இரண்டு வயது மூத்தவள்.

ஒரு நாள் சந்தியா தன் மாமா வீட்டிற்குச் சித்ராவையும் அழைத்துக் கொண்டு சென்றாள். அவள் மாமாவும் அத்தையும் ஒரு திருமணத்திற்குச் செல்வதால்... காவேரிக்குத் துணைக்குச் சென்றவள், மாடி ஹாலில் சத்தமாகப் பாட்டு வைத்துக் கொண்டு ஆடிக் கொண்டி ருந்தாள்.

அன்று கல்லூரி ஹாஸ்டலில் தங்கி இருந்த மாணவர்களுக்கிடையே சண்டை வந்ததால்... கல்லூரிக்கு மூன்று நாட்கள் விடுமுறை கொடுத்து எல்லோரையும்



வீட்டுக்கு அனுப்பி விட்டனர். திடீரென்று விடுமுறை கிடைத்ததால், கதிர் வருகிறேன் என்று போன் செய்யாமல் கிளம்பி வந்தான்.

தன் வீட்டின் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்த கதிரின் காதில் பாட்டுச் சத்தம் கேட்க... 'நம்ம வீட்ல யாரு இவ்வளவு சத்தமாப் பாட்டுக் கேட்கிறாங்க...?' என்று யோசித்துக் கொண்டே நின்றவனுக்கு, பாட்டுச் சத்தம் மாடியில் இருந்து வரவும், அழைப்பு மணியை அடிக்காமல் பின் பக்கம் இருக்கும் தன் சித்தப்பா வீட்டிற்குச் சென்றவன், அவர்கள் வீட்டின் மாடி வழியாக இவர்கள் வீட்டிற்குச் சென்றான்.

சத்தம் போடாமல் மெதுவாகக் கீழே இறங்கியவன், பாதிப் படியிலேயே நின்று, முதல் தளத்தில் என்ன நடக்கிறது என்று கவனித்தான்.

சந்தியா சுடிதார் போட்டிருந்தவள், அதன் துப்பட்டாவை இடுப்பில் இறுக்கிக் கட்டிக் கொண்டு... தலையை விரித்துப் போட்டு விட்டு...

"எப்ப மாமா மாமா ட்ரீட்டு
என்ன மாமா மாமா ட்ரீட்டு
நான் என்னை மறக்க
நீயும் விண்ணில் பறக்க
இந்த ட்ரீட்டு தானே ரூட்டு
எப்ப மாமா மாமா ட்ரீட்டு
என்ன மாமா மாமா ட்ரீட்டு

செம மூடு எனக்கு,

பாஸ்வேர்ட் உனக்குத் தரேன்

இன்பம் எல்லாம் காட்டு."

என்று சந்தியா உடலை வளைத்து, நெளித்துக் காஜல் அகர்வாலையே மிஞ்சும் அளவிற்கு ஆட... அதைக் காவேரியும், சித்ராவும் வாயைப் பிளந்தபடி ரசித்துக் கொண்டிருந்தனர்.

அடுத்து விஜய் பாடும் வரிகள் வர... அதற்கும் சந்தியா, விஜய் மாதிரியே ஆடினாள். கதிர், தன் செல்லில் அவள் ஆடுவதைப் படம் பிடித்து வைத்துக் கொண்டான்.

'இருடி...! இன்னைக்கு மாட்டின!' என்று நினைத்தபடி அவன் படியிறங்க, பாடலின் கடைசி வரிகளுக்கு இன்னும் வேகமாக, ஆவேசமாக ஆடிக் கொண்டிருந்த சந்தியா, "எப்ப மாமா ட்ரீட்டு...?" ஏன்று தள்ளாடியபடி நிற்கவும், கதிர் வந்து அவள் முன்பு நிற்கவும் சரியாக இருந்தது.

முதலில் சந்தியாவிற்கு ஒன்றும் தெரியவில்லை. அவள் ஆடின ஆட்டத்துக்குத் தலை கிறு கிறுவென்று சுத்தியதால்... அங்கு நிற்பது கதிர் என்று புரியாமல் நின்றவள், அவன் நிஜமாகவே அங்கே நிற்கிறான் என்று உணர்ந்த கணம், வேகமாக அங்கிருந்து ஓடப் பார்க்க... கதிர் அவளை எட்டிப் பிடிக்க... அவன் கைகளில் அவளின் கூந்தல்தான் மாட்டியது.

பிடித்தபடி விடாமல் கதிர் நிற்க,. "மாமா... மாமா! விடு மாமா. வலிக்குது..." சந்தியா கெஞ்ச...



"ஏன், இவ்வளவு நேரம் காக்கா வலிப்பு வந்தது மாதிரி ஆடின... அப்ப வலிக்கலை...? இப்ப மட்டும் வலிக்குதா...? இரு, நீ போட்ட ஆட்டத்தைச் செல்லுல பதிஞ்சிருக்கேன், உன் அம்மாட்டையும், அப்பாட்டையும் போட்டுக் காட்றேன்!" என்றதும்,

அரண்ட சந்தியா, "ஐயோ! மாமா! ஏன் உனக்கு இந்தக் கொலைவெறி...? அவங்க ரெண்டு பேரும் இதைப் பார்த்தா... இனிமே என்னை வெளியிலேயே போக விட மாட்டாங்க. நான் ஸ்கூல்ல இன்னைக்கு ஆடப் போறதுக்குச் சும்மா ப்ராக்டிஸ் பண்ணேன்!" என்று சொன்னதும்,

"என்னது! இப்ப ஆடின மாதிரி ஸ்கூல்ல வேற ஆடப் போறியா...? நீ ஆடுறதை நம்ம ஊர் பயலுங்க பார்த்தா... என்ன ஆகும் தெரியுமா?" என்று கதிர் சத்தம் போட...

"ஐயோ! ஏன் மாமா நீ வேற... நான் இங்க ஆடினது தெரிஞ்சாலே, எங்க அம்மா என்னைப் பேய் ஓட்டிடும். இதுல நான் ஸ்கூல்ல ஆடினா அவ்வளவுதான்! விறகுக்குப் பதில் என் காலையில்ல உடைச்சி அடுப்பில வச்சிடும். நான் வேற பாட்டுக்குத்தான் ஆடுறேன்... அதுவும் எங்க ஸ்கூல்ல சாமி பாட்டுக்கு மட்டும்தான் ஆடணும். நான் சும்மா காவேரி மதினிக்காக ஆடினேன்!" என்றாள்.

கதிர், அவளைச் சந்தேகமாகப் பார்க்க, "நிஜமா மாமா! நீ வேணும்னா சித்ராவைக் கேளு...!" என்று சந்தியா பரிதாபமாகச் சொல்ல, சித்ராவும் வேகமாக,

“ஆமாண்ணே! அவ சாமி பாட்டுக்குத்தான் ஆடுறா...!” என்றாள். கதிர், சந்தியாவின் கூந்தலை விட... சந்தியா வலித்த தன் கழுத்தைத் தடவி விட்டாள்.

“உன்னை நம்ப முடியாது. நான் இன்னைக்கு ஸ்கூலுக்கு வருவேன்...!” என்றான் கதிர்.

“தாராளமா வா...! வரும்போது கார்ல வா... ஃபங்ஷன் முடிய எப்படியும் ராத்திரி ஆகும். நானும் உன்னோடயே வீட்டுக்கு வந்திடுறேன்...!” என்று சொல்லி விட்டுச் சந்தியா, சித்ராவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றாள்.

சொன்னது போல் கதிர் அன்று மாலை சந்தியா படிக்கும் பள்ளிக்குச் சென்றான். அங்குதான் அவன் தங்கை காவேரியும் படிக்கிறாள். பெரியசாமிதான் அந்தப் பள்ளியின் கரெஸ்பான்டென்ட். அதனால் அவன் தந்தையுடன் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்தான்.

சிறிது நேரம் சென்று சந்தியா மஞ்சள் நிறத்தில் ரவிக்கை, புடவை அணிந்து, இன்னும் சில மாணவி களுடன் மேடைக்கு ஏறினாள். ஒரு கையில் வேப்பிலை யும் இன்னொரு கையில் மண் சட்டியும் வைத்துக் கொண்டு,

“மாரியம்மா கருமாரியம்மா

உன்னை வணங்குகின்றோம் கருமாரியம்மா!”

என்று அவள் பயபக்தியுடன் ஆடுவதைப் பார்த்ததும், கதிருக்கு இன்று மதியம் அவன் வீட்டில், அவள் போட்ட



ஆட்டம் நினைவுக்கு வர... பொத்துக் கொண்டு வந்த சிரிப்பை இதழுக்கிடையில் அடக்கியபடி அமர்ந்திருந்தான். அப்போது தான் நந்தினி அவனை மீண்டும் பார்த்தாள்.

## 2

**மே**டையின் அருகே நின்று சந்தியா ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த நந்தினி, பார்வையாளர்கள் பக்கம் தன் பார்வையைத் திருப்ப... மலர்ந்த முகமும், இதழில் புன்னகையுமாக அமர்ந்திருந்த கதிரைப் பார்த்து விட்டாள். நந்தினி மனதில் அத்தனை நாள் ஆழத்தில் இருந்த கதிரின் நினைவு மேலே வர... அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது ஆசிரியர் ஒருவர் நந்தினியை அழைத்து, அவளிடம் குளிர்பானங்கள் இருந்த தட்டைக் கொடுத்து, முன் வரிசையில் இருந்த விருந்தினருக்குக் கொடுக்கச் சொல்ல... நந்தினியும் கதிரை அருகே பார்க்கலாம் என்ற ஆவலில் சென்றாள்.

எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டே வந்த நந்தினி, கதிரின் அருகே வந்ததும், தட்டைத் தவற விட... அதில் இருந்த குளிர்பானம் கீழே கொட்டி விட்டது.

“என்னங்க... பார்க்கும் போது எல்லாம் எதையாவது தவற விடுறீங்க...!” என்று புன்னகையுடன் கதிர் சொல்ல...

நந்தினி, “சாரி, தெரியாம...!” என்று சொல்லி விட்டு அங்கிருந்து வேகமாகச் சென்றாள்.

அவள் உள்ளே சென்று மறுபடியும் குளிர்பானம் எடுத்துக் கொண்டு வந்து பார்த்த போது, கதிர் அங்கே இல்லை. நந்தினி அவனைத் தேட... அவன் தூரத்தில் நின்று கொண்டிருந்த காரில் ஏறிக் கொண்டிருந்தான். அவனுடன் சந்தியாவும், காவேரியும் சென்றனர். நந்தினி சோர்வோடு திரும்பிச் சென்றாள்.

மறுநாள் பள்ளி இடைவேளையில் சந்தியா பெஞ்சில் தலை வைத்துத் தன் நோட்டில் எதையோ கிறுக்கிக் கொண்டிருக்க...

"ஏன்டி! நேத்து உன்னோட மாமனைப் பார்த்ததும், எங்க கிட்ட சொல்லாம கூடப் போய்ட்ட...!" என்று சித்ரா அவளை வம்பிழுக்க...

"நான் எங்க போனேன்? அதுதான் வான்னு இழுத்துட்டுப் போச்சு...!" என்ற சந்தியா அப்போதும் கிறுக்கிக் கொண்டுதான் இருந்தாள்.

"ஒரே லவ்ஸ் ஆக்கும்...!" என்று சித்ரா நொடிக்க...

"மாமன் மகன்னா கண்டிப்பா லவ் பண்ணணுமா என்ன...?" இப்படிக் கேட்டது சந்தியா இல்லை, நந்தினி.

"அதுதானே...!" என்று எழுந்து அமர்ந்தாள் சந்தியா.

"என்ன, அது தானேன்னு இழுக்கிற... நீ உங்க கதிர் மாமாவைத் தானே கட்டிக்கப் போறே...?" என்று சித்ரா கேட்க, நந்தினி, 'இதற்குச் சந்தியா என்ன சொல்லப் போகிறாள்...?' என்பது போல் தவிப்பாக அவளைப் பார்த் தாள்.



"ஆமாம்! நான் எங்க கதிர் மாமாவைத்தான் கட்டிப்பேன்!" என்று தேங்காய் உடைத்தது போல்... அதுவும் நந்தினியின் தலையில் உடைத்தது போல் பட்டென்று சந்தியா சொல்ல... நந்தினி தன் ஏமாற்றத்தை மறைக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"பிறகு, இதுக்குப் பேர் லவ்ஸ் இல்லாம என்ன?" என்று சித்ரா, சந்தியாவைப் பார்க்க...

"ம்ம்... எனக்கு இதுதான் புரியவே மாட்டேங்குது சித்ரா. எனக்கு என் கதிர் மாமாவைப் பிடிக்கும். ஆனா... அது லவ்வான்னு தெரியலை... லவ்வுன்னு எப்படிக் கண்டு பிடிக்கிறது...?" என்று சந்தியா தன் கன்னத்தில் விரலைத் தட்டி யோசிக்க...

"என்னைக் கேட்டா... நான் மட்டும் என்ன இதுக்கு முன்னாடி பத்துப் பேரையா லவ் பண்ணியிருக்கேன்...!" என்ற சித்ரா, நந்தினியைக் காட்டி,

"இந்த மாதிரி அமுக்கினியைத்தான் நம்ப முடியாது. எதுக்கும் இவளைக் கேளு!" என்றாள்.

நந்தினிக்கு இவர்கள் பேச்சு எதுவும் ரசிக்கவில்லை. அவள் சித்ராவை முறைத்து விட்டு, ஏதோ படிப்பது போல் பாசாங்கு செய்தாள்.

"என்ன சித்ரா இப்படிச் சொல்ற...!" சந்தியா, சித்ராவின் தோளில் சாய...

"ஏய்! என்னைப் போட்டு ஏன்டி இம்சைப் படுத்துற...?" என்ற சித்ரா, சந்தியாவைத் தன் தோளில் இருந்து தள்ளி விட்டவள்,

"நீ சொல்றதைப் பார்த்தா இதுக்கு ஏதாவது துப்பறியும் நிபுணர்தான் வரச் சொல்லணும் போல.

"நீ இந்தச் சினிமாவெல்லாம் பார்த்தது இல்ல... லவ் பண்றவங்களுக்குப் பசிக்காது, தூக்கம் வராதுன்னு சொல்வாங்களே... உனக்கு இது மாதிரி எதுவும் அறிகுறி இருக்கா...?" என்ற சித்ரா, சந்தியாவைப் பார்க்க... சந்தியாவின் முகம் அழுகைக்குத் தயாரானது.

"இல்லையே...! நான் இப்பவெல்லாம் முன்னாடிய விட அதிகமாச் சாப்பிடுறேனே...! நைட்டும் நல்லாத் தூங்குறேன். அப்ப எங்க மாமா மேல எனக்கு லவ் இல்லையா...?" என்று சந்தியா சொல்லிக் கொண்டிருக்கும் போதே... பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கும் கீதா அவளைத் தேடிக் கொண்டு வந்தாள்.

"இங்கேதான் இருக்கியா புள்ள... நான் உன்னைத் தான் பார்க்க வந்தேன்...!" என்று கீதா சொல்ல...

"சொல்லு கீதாக்கா... எதுக்கு என்னைத் தேடின...?" என்று சந்தியாவும் பொறுமையாக விசாரிக்க...

"நான் அடுத்த வருஷம் காலேஜ்ல கம்ப்யூட்டர் குரூப் எடுக்கலாம்னு இருக்கேன். உங்க மாமாவும் எம்.சி.ஏ. தானே படிக்கிறாங்க. என்னை அவங்க கிட்ட கூட்டிட்டுப் போறியா...? எனக்குச் சில விவரம் கேட்கணும்... எனக்கும் காவேரிக்கும் சண்டை. இல்லைனா நான் அவளோடேயே போய் இருப்பேன்!" என்று கீதா சொல்லிக் கொண்டே வர, சந்தியா முகம் மாறியவள்,



"இன்னைக்குப் பொட்டிக் கடையில கூடக் கம்ப்யூட்டர் இருக்குது. விரல் சூப்புற பிள்ளை கூட கம்ப்யூட்டர்ல தான் விளையாடுது. இதுல நீ என் மாமன் கிட்ட என்ன கேட்கப் போற...?

"இந்த ஊர்லயே என் மாமா மட்டும் தான் கம்ப்யூட்டர் படிக்குதா...? மேலத் தெரு மாலதி அக்கா... நம்ம கோயில் அய்யர் பொண்ணு காயத்ரி இவங்களும் கம்ப்யூட்டர் சம்பந்தமாத்தான் படிக்கிறாங்க... அவங்களுக்குத் தெரியாததுதான் என் மாமனுக்குத் தெரியப் போகுதா...? இந்த ரூட் விடுற வேலை எல்லாம் வேற யார் கிட்டேயாவது வச்சுக்கோ... என் மாமன் கிட்ட உன் ஆட்டத்தைக் காட்டின..." பத்திரகாளியாகச் சந்தியா எழுந்து நிற்க...

அதற்கு மேல் அந்த கீதா அங்கே நிற்பாளா? அவள் அலறி அடித்துக் கொண்டு அவள் வகுப்பிற்கு ஓடி விட்டாள்.

சந்தியாவின் அவதாரத்தைப் பார்த்து நந்தினி, அரண்டு விட்டாள். அவள் சந்தியாவையே பார்க்க... சித்ரா, சந்தியாவின் தலையில் தட்டி உட்கார வைத்தவள், "கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஒருத்தி, நான் எங்க மாமாவை லவ் பண்றேனான்னு தெரியலைன்னு சொல்லிட்டு... பாவம் படிக்க வந்த புள்ளையை வெரட்டுறதைப் பாரு...!" என்றதும்,

"யாரு...? இது படிக்கிற புள்ளையா...? முதல்ல பன்னண்டாம் வகுப்பைத் தாண்டச் சொல்லு பார்க்கலாம்...!" என்ற சந்தியாவின் முகம் திடீரென்று மகிழ்ச்சிக்குத் தாவியது. "இப்ப எதுக்கு அப்படிச் சொன்னே?" என்றாள் சித்ராவைப் பார்த்து.

"கீதா அப்படிக் கேட்டதும் உனக்கு ஏன் இம்புட்டுக் கோபம் வருது...? உன் மாமனை நீ லவ் பண்றதுனால தான்!" என்று சித்ரா சொன்னதும், மகிழ்ந்த சந்தியா, தான் கிறுக்கிக் கொண்டிருந்த புத்தகத்தைப் பார்க்க... அதில் அவள் கதிர்... கதிர் என்றுதான் விதவிதமாக எழுதி இருந்தாள்.

சந்தியாவின் முகத்தைப் பார்த்த சித்ரா புன்னகையுடன், "ஏய் புள்ள...! நீ பாட்டுக்குப் பாட்டு சீனுக்குப் போய்டாதே... இப்ப நம்ம கணக்கு டீச்சர் வருவாங்க...!" என்றதும், வெட்கப்பட்ட சந்தியா, பாடத்தைக் கவனிக்கத் தயாரானாள். அந்த வருடம் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வை சந்தியா, நந்தினி, சித்ரா மூவரும் சிறப்பாகச் செய்தனர்.

எப்போதும் அவர்கள் ஊரில் வைகாசி மாதம்தான் திருவிழா நடக்கும். அப்போது பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை என்பதால், அவர்கள் ஊரே ஜன வெள்ளத்தில் மிதக்கும். இந்த முறையும் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்தனர்.

கதிருக்கு எப்போதும் நண்பர்களோடு ஊர் சுற்றுவது, தெருவில் நின்று நண்பர்களுடன் அரட்டை அடிப்பது



இதெல்லாம் பிடிக்காது. அவனுடைய பள்ளி நண்பன் ஒருவன் அதே ஊரில் கடை வைத்திருக்கிறான். கதிரும் அவன் மற்ற நண்பர்களும் அங்கே சந்தித்துப் பேசிக் கொள்வார்கள்.

கதிர் காலையில் கூட்டம் அதிகமாக இல்லாத நேரத்தில் கோயிலுக்கு வந்து விட்டுச் சென்று விடுவான். ஆனால், சந்தியாவும், காவேரியும் தினமும் வித விதமான உடைகள் அணிந்து காலையும், மாலையும் கோயிலில் நடக்கும் அனைத்து விசேஷங்களிலும் பங்கெடுத்து... ஒரு கலக்குக் கலக்கினர்.

இப்படியே திருவிழாவின் கடைசி நாளும் வந்தது. அன்று இரவு அவர்கள் ஊரில் ஆடலும், பாடலும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அதைப் பார்க்க மொத்த ஊருமே வரும். சந்தியாவும், காவேரியும் தங்கள் அம்மாக்களுடன் வந்தனர்.

நந்தினியும், சித்ராவும் இரண்டு வரிசை முன்பு உட்கார்ந்திருப்பதைப் பார்த்த சந்தியா, தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு அவர்களுடன் சென்று அமர்ந்தாள்.

நிகழ்ச்சி ஆரம்பிக்கச் சிறிது நேரம் இருந்த போது கதிர் வந்தான். அவனைப் பார்த்ததும் அவன் ஊர் இளவட்டங்கள், 'கதிர் அண்ணா!' என்று அழைத்து, அவனிடம் மரியாதையாகப் பேச... கதிரும் அவர்களை நலம் விசாரித்து விட்டுத் தன் நண்பர்களின் அருகே சென்று நின்றான்.

சந்தியா, எப்போது நிகழ்ச்சி ஆரம்பிப்பார்கள் என்று மேடையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஆடலும், பாடலும் பார்க்க மிகவும் பிடிக்கும்.

நிகழ்ச்சி ஆரம்பித்தது. முதலில் சாமி பாட்டுக்கு வந்து ஆடினார்கள். அடுத்து விஜய் பாட்டு, அஜித் பாட்டு என்று நிகழ்ச்சி களை கட்டியது.

சிறிது நேரத்தில் சந்தியாவின் அம்மாவும், அத்தையும் 'இதைப் போய் யாரு பார்க்கிறது?' என்று வீட்டுக்குக் கிளம்ப... சந்தியாவும், காவேரியும் அவர் களுடன் செல்ல மறுத்தனர். 'சரி, கதிரோட வாங்க!' என்று சொல்லி விட்டு அவர்கள் சென்று விட... ஒரு மணி நேரம் சென்று கதிர், காவேரியிடம், 'வா, போகலாம்!' என்று ஜாடை காட்ட... அவள் சந்தியாவை அழைத்தாள்.

சந்தியா, கதிரைப் பார்த்து, 'இன்னும் ஒரு பாட்டு பார்த்திட்டு வரேன்!' என்று ஜாடையில் சொல்ல... கதிர் திரும்பி மேடையைப் பார்த்தான். அந்தப் பாட்டும் முடிந்து அடுத்த பாட்டு வர.. இப்போது சந்தியா, மீண்டும், 'ஒரே ஒரு பாட்டு, ப்ளீஸ்...!' என்று கண்களால் கெஞ்ச... கதிர் சரியென்று அப்போதும் அமைதியாக இருந்தான். ஆனால், அந்தப் பாட்டு முடிந்தும் சந்தியா கிளம்பாமல் அமர்ந்திருக்க... கதிர், சந்தியாவையே பார்த்துக் கொண்டி ருந்தான்.

"சந்தியா, அண்ணன் இங்கேயே பார்க்குது. போக லாமா...?" காவேரி அழைக்க...



"தெரியும். நீ அதைப் பார்க்காதே... இன்னும் ரெண்டு பாட்டுப் பார்த்திட்டுப் போகலாம்!" என்ற சந்தியா, மேடையிலேயே கவனமாக இருக்க... கதிருக்குக் கோபம் ஏறியது. கதிருக்கு அவ்வளவு எளிதாகக் கோபம் வராது... வந்தால் போகாது.

அவன் சந்தியாவையும், காவேரியையும் பார்த்து முறைத்தவன், அங்கிருந்து கிளம்ப, அதை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த சந்தியாவும், காவேரியும் அலறியடித்துக் கொண்டு எழுந்து அவன் பின்னே சென்றனர். அவர்கள் வருவதைப் பார்த்த கதிர், நின்று அவர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நந்தினிக்குச் சந்தியாவைப் பார்த்துப் பொறாமையாக இருந்தது. அவளும் கதிர் தனக்குக் கிடைக்க மாட்டான் என்று மனதை தேற்றித்தான் வைத்திருந்தாள்.

ஆனால், கதிரைப் பார்த்ததும் தன் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கதிர் முன்னே நடக்க... சந்தியாவும் காவேரியும் சற்று பின்னே சென்றனர். "உங்க அண்ணன் ஏன் இதுக்கெல்லாம் மூஞ்சியை தூக்கி வச்சிட்டு வருது...?" என்று முனகியபடி சந்தியா சென்றாள். முதலில் கதிர் வீடு தான் வரும், அடுத்த இரண்டு தெரு தள்ளித்தான் சந்தியாவின் வீடு. அதனால் காவேரியை அவர்கள் வீட்டில் விட்டு விட்டுக் கதிர், சந்தியாவுடன் சென்றான்.

வீட்டை விட்டுத் தள்ளி வந்ததும், "என்ன மாமா! இந்தச் சின்ன விஷயத்துக்குப் போய் இவ்வளவு கோபப் படுற...?" என்று சந்தியா ஆரம்பிக்க...

"உனக்கு நம்ம ஊர் பயலுங்களைப் பத்தித் தெரியாது. இன்னும் கொஞ்ச நேரத்துல எல்லோரும் எழுந்து ஆடுவானுங்க... அப்புறம் எல்லார் மேலேயும் வந்து விழுவாங்க... இது தேவையா...? அதுக்கு முன்னாடி வீட்டுக்குப் போயிடலாம்னுதான் கூப்பிட்டேன்!" என்றான் கதிர். அவன் சொல்வது உண்மை என்பதால், சந்தியா அமைதியாக வந்தாள்.

அவர்கள் அடுத்த தெருவிற்குள் நுழைந்தபோது, சற்றுத் தள்ளி நாலைந்து பேர், இளவட்டங்கள்தான்... நின்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் வெளியூர் என்று கதிருக்குப் பார்த்ததும் தெரிந்து விட்டது. அவன் வலது பக்கம் நடந்து வந்த சந்தியாவை இடது பக்கத்துக்கு விட்டு, மெதுவாக அவளுடன் பேசியபடி சென்றான்.

சந்தியாவிற்கு ஏனோ அவர்களைப் பார்த்ததும் மனதிற்குள் கலக்கம் ஏற்பட்டது. அவள் பயந்தபடியே... வலது பக்கம் இருந்தவர்கள் மெதுவாக நடப்பது போல் இடப்பக்கம் மாறி நின்றனர். சந்தியா, கதிரின் முகம் பார்க்க... அவன் முகம் இறுகி இரும்பைப் போல் இருந்தது. அவளுக்கு அவனைப் பார்க்கவே பயமாக இருந்தது.

சந்தியாவும் கதிரும் அவர்களின் அருகே வந்ததும், ஒருவன் வேண்டுமென்றே மற்றொருவனைப் பிடித்துத் தள்ள... அவன் சந்தியாவின் மீது விழப் பார்க்க... கண்ணிமைக்கும் நேரத்தில் கதிர் சந்தியாவைப் பிடித்து அவன் அருகில் இழுத்ததால்... சந்தியா தப்பித்தாள். அவள் மீது விழ வந்தவன் ஏமாற்றமடைந்தான்.



சந்தியாவை வலப்புறம் விட்டு, அவள் தோள் மீது கைபோட்டு அணைத்தபடி கதிர் சென்றான். சந்தியா, கதிரின் முகத்தையும், அவள் தோள் மீது இருந்த அவனின் கையையும் மாறி... மாறிப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

தங்கள் பின்னால் அந்தக் காலிப்பயல்கள் வருவதை உணர்ந்த கதிர், அங்கேயே நின்றவன், சந்தியாவைப் பார்த்து, "சீக்கிரமா வீட்டுக்குப் போ...!" என்றான். இன்னும் நாலைந்து வீடு தள்ளினால் அவளின் வீடு.

சந்தியா கலக்கத்துடன், "நீயும் வா மாமா...!" என்றாள்.

"போன்னு சொல்றேன் இல்ல...!" என்று கதிர் கத்த, சந்தியா அவள் வீட்டை நோக்கி ஓடினாள்.

கதிர் நின்று அந்தப் பொறுக்கிகளைப் பார்த்துத் "தைரியம் இருந்தா இப்ப வாங்கடா!" என்று அழைத்தான். அவர்களும், 'நாம அஞ்சு பேர். இவன் ஒருத்தன்தானே!' என்று தைரியமாக முன்னேற, கதிர் அவர்களைக் கொன்று விடும் வெறியோடு நின்றான்.

வீட்டுக்குச் சென்ற சந்தியா கதவைத் திறந்த தன் தந்தையிடம், "அப்பா, நானும் கதிர் மாமாவும் வரும்போது,

காலிப்பயலுங்க வந்து வம்பு இழுத்தானுங்கப்பா... மாமா அவனுங்களோட தனியா இருக்குப்பா...!" என்று சொல்லிக் கூட முடிக்கவில்லை.

சந்தியாவின் அப்பா துரை வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கையில் கம்புடன் சென்றார். சந்தியா சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த அவளின் அப்பத்தாவும், அம்மா வேதவல்லியும் வீட்டில் இருந்த விளக்கமாறை ஆளுக்கு ஒன்று எடுத்துக் கொண்டு சென்றனர்.

அவர்கள் ஐந்து பேராக இருந்த போதிலும், கதிர் அவர்களை நன்றாகவே துவைத்து எடுத்துக் கொண்டு தான் இருந்தான். இதில் துரையும் வந்து அவனுடன் சேர்ந்து அவர்களைத் தாக்கிக் கொண்டிருக்கும் போது, வீட்டுப் பெண்களும் அவர்களுடன் சேர்ந்து அந்தப் பொறுக்கிகளை வெளுத்து வாங்க ஆரம்பித்தனர்.

அடி தாங்காமல் காலிப்பயல்கள் தப்பித்து ஓடப் பார்த்தனர். இவர்களின் சத்தம் கேட்டு வெளியே வந்த அக்கம் பக்கத்தினர் அவர்களை வளைத்துப் பிடித்தனர்.

கதிரிடம் நடந்ததைக் கேட்டுத் தெரிந்து கொண்ட துரை... கதிரை வீட்டுப் பெண்களுக்குக் காவல் வைத்து விட்டு, அந்தப் பொறுக்கிகளை அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் சென்றார்.

அப்பத்தா வெளியில் அமர்ந்து ஊர்ப் பெண்க ளுடன் பேச... வீட்டுக்கு வந்த கதிருக்கு வேதவல்லி



பால் கொண்டு வந்து கொடுத்து விட்டு, உள்ளே சென்று படுத்து விட்டார்.

கதிர் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டே பால் குடித்துக் கொண்டிருந்தவன், ஏதோ தோன்ற... சந்தியாவைப் பார்க்க... அவள் இமைக்காமல் அவ னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களில் இருந்த மயக்கத்தைப் பார்த் தவன், என்ன என்பது போல் புருவத்தை உயர்த்த... "நீ சூப்பர் மாமா...! நான் இது போல எல்லாம் சினிமா வுல மட்டும்தான் நடக்கும்னு நினைச்சேன்...!" என்றாள் உற்சாகமாக.

அவள் சொன்னதைக் கேட்டுக் கதிர் புன்னகைக்க... சந்தியா எழுந்து சென்று அவன் அருகில் சற்று இடை வெளி விட்டு அமர்ந்தவள், மெதுவாக, "ஐ லவ் யூ மாமா!" என்றாள்.

இப்போது கதிர் அவளைப் பார்த்து முறைக்க... சந்தியா பயந்து அவள் முன்பு அமர்ந்திருந்த இடத்திற்கே சென்று அமர்ந்தாள்.

"பத்தாங் கிளாஸ்தான் முடிச்சிருக்கே...! அதுக்குள்ள லவ்வு...!" என்றவன், "மனசை அலைய விடாம... ஒழுங்கா படிக்கிற வழியைப் பாரு...!" என்றான் கடுமையான குரலில்.

"ஆமா... இவரு மட்டும் ஆள முழுங்குற மாதிரிப் பாப்பாரு... நாம மட்டும் லவ் பண்றோம்னு சொல்லக் கூடாது..." சந்தியா வாய்க்குள்ளே முனக...

"என்ன அங்கே முனகல்... நீ இப்படியெல்லாம் பேசினா... இனி உன்னை நான் பார்க்க வர மாட்டேன்...!" கதிர் எச்சரிக்க... சந்தியாவின் கண்கள் கலங்கியது.

"இங்கே பாரு சந்தியா... இந்தக் காலிப்பசங்க யாரு? என்னன்னே தெரியலை... எதுக்கும் நீ ஜாக்கிரதையா இரு. தனியா எங்கேயும் போகாதே. வெளியே போனாலும் கவனமா இரு...!" கதிர் சொல்ல, சந்தியா அவன் சொன்னதைக் கவனிக்காமல் அலட்சியமாக அமர்ந்திருந்தாள்.

"சந்தியா! நான் சொல்றது உன் காதுல விழுதா இல்லையா...?" கதிர் கோபமாகக் கேட்க...

"நீங்க ஒண்ணும் என் மேலே அக்கறைப் பட வேண்டாம்... என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்...!" சந்தியாவும் பதிலுக்கு எரிந்து விழ...

"இப்ப என்னை என்னடி பண்ணச் சொல்லுற...? உனக்கு என்ன வேணும்...? சொல்லித் தொலை!" என்றான் கதிர் எரிச்சலுடன்.

"நான் சொன்னதுக்கு ஓ.கே.வா...? இல்லையா...?"

"நீ உதை வாங்கப் போற சந்தியா...!" என்றவன், தொடர்ந்து,

"நம்ம வீட்ல நம்ம ரெண்டு பேருக்கும்தான் கல்யாணம் பண்ணணும்னு நினைச்சிருக்காங்க... உனக்குத் தெரியாதா...?" என்று கேட்க...

"அது அவங்க நினைக்கிறது... நீங்க சொல்லுங்க, உங்களுக்கு என்னைப் பிடிக்குமா...?" சந்தியா அதே பிடியில் நிற்க...



அவளது உறுதியைப் பார்த்தவனின் முகத்தில் புன்னகை அரும்ப, "உன்னைப் பிடிக்காமத்தான்... ஊருக்கு வரும்போது எல்லாம் உன்னைப் பார்க்க இங்கே வர்றேனா...?" கதிர் சொன்னதும், சந்தியாவின் முகமும் மலர்ந்தது.

"ஹப்பா...! இதை வாயில் இருந்து வர வைக்கிறதுக் குள்ளே என்ன பாடு!" என்றவள், அவள் அருகில் இருந்த தலையணையை எடுத்து, அவன் மேல் தூக்கிப் போட... பதிலுக்கு அவனும் அவள் மேல் எறிந்தான்.

இருவரும் சந்தோஷமாகச் சிரித்தபடி ஒருவர் மேல் ஒருவர் தலையணையைத் தூக்கிப் போட்டு விளையாடிக் கொண்டு இருந்தனர், அவர்களுக்குக் காலம் வைத்திருக்கும் சோதனையை அறியாமல்.

பத்தாம் வகுப்புத் பொதுத் தேர்வில் சந்தியா அவர்கள் மாவட்டத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றுத் தேர்வாகியிருந்தாள். பள்ளியில் இரண்டாம் இடத்தை நந்தினி பிடித்திருந்தாள். சித்ராவும் நல்ல மதிப்பெண்கள் எடுத்திருந்தாள்.

எப்போதும் பள்ளியில் நடக்கும் தேர்வில் நந்தினி தான் முதலில் வருவாள். ஆனால், பொதுத் தேர்வில் சந்தியா முதலிடத்தைப் பிடித்தது, அதுவும் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்தது நந்தினிக்கு ஏமாற்றமாக இருந்தது. அவளுக்குத் தான் சந்தியாவிடம் எல்லாவற்றிலும் தோற்று விட்டது போல் தோன்றியது. அதனால், அவள் சந்தியாவிடமிருந்து விலக ஆரம்பித்தாள்.

தோழிகள் மூவரும் பதினோராம் வகுப்பில் அறிவியல் பிரிவை எடுப்பது என்று ஏற்கெனவே முடிவு செய்திருந்தனர். ஆனால், நந்தினி அறிவியலும், கணித மும் இருக்கும் பிரிவுக்குச் சென்று விட்டாள். சந்தியாவும், சித்ராவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் கேட்கவில்லை.

பள்ளி திறந்த சில நாட்களில் நந்தினி ஸ்கூட்டியில் வர ஆரம்பித்தாள். மூவரும் வெவ்வேறு பகுதியில் இருந்து வந்தாலும், காலையில் ஒரே இடத்தில் சந்தித்து அங்கிருந்து மூவரும் ஒன்றாகத்தான் பள்ளிக்கு வருவர். ஒரே வகுப்பு இல்லை என்றாலும் சேர்ந்து பள்ளிக்கு வருவதும், செல்வதுமாக இருந்த தொடர்பும், இப்போது நந்தினி ஸ்கூட்டியில் வருவதால் தடைப்பட, சந்தியா மிகவும் வருந்தினாள்.

ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை மூவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்ததே இல்லை. எப்பொழுதும் ஒன்றாகவே தரிசனம் தருவதால், பள்ளி யிலேயே அவர்களை முப்பெரும் தேவிகள் என்று தான் அழைப்பார்கள். அப்படி இருந்த மூவரும் இப்போது பிரிந்திருப்பது சந்தியாவிற்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது.

அவள் வருந்துவதைப் பார்த்த சித்ரா, "நீயும் வேணா அவளைப் போல வண்டி வாங்கிக்கோ புள்ள...! என்னை நினைச்சு யோசிக்காதே... நாமதான் ஒரே க்ளாஸ்ல இருக்கோம்ல!" என்று சொன்ன போது... சந்தியாவிற்கும் ஆசையாகத்தான் இருந்தது.



ஆனால், அவளுக்குச் சித்ராவை விட்டுச் செல்லவும் மனம் இல்லை. அவள் மட்டும் தனியே சைக்கிளில் வர வேண்டும். அவள் வீட்டுக்குச் சென்று ஸ்கூட்டியில் அழைத்துச் செல்ல எல்லாம் சந்தியா வீட்டில் அனுமதிக்க மாட்டார்கள்.

சிறிது நாட்களில் நந்தினி மதிய உணவு வேளைகளிலும் இவர்களைத் தவிர்க்க... சந்தியாதான் காரணம் தெரியாமல் தவித்து விட்டாள். "நீ முதல் மார்க் வாங்கிட்டேன்னு காண்டுல இருக்கா... 'விடு புள்ள...!" சித்ரா சொன்ன போதும் சந்தியாவின் மனது நந்தினியின் தோழமைக்காக ஏங்கியது.

நாட்கள் வேகமாகச் சென்றது. கதிர் முன்பாவது அடிக்கடி ஊருக்கு வருவான். அப்படி வரும்போது சிறிது நேரம் சந்தியாவின் வீட்டிற்கும் வருவான். ஆனால், எப்போது சந்தியாவிடம் உன்னைப் பிடிக்கும் என்று சொன்னானோ அன்றிலிருந்து வீட்டுப் பக்கமே வருவதில்லை.

அவன் எப்போது ஊருக்கு வருகிறான், போகிறான் என்பதே சந்தியாவிற்குத் தெரியாது.

காவேரியும் இப்போது கல்லூரியில் படிப்பதால், சந்தியாவால் இப்போது அவளோடு சரியாகப் பேச முடிய வில்லை. காவேரி, விருதுநகரில் இருக்கும் கல்லூரி யில் சேர்ந்ததால்... தினமும் காலையிலேயே கிளம்பி பஸ்சில் போய் விட்டு, மாலை இருட்டும் நேரம்தான் வீட்டுக்கு வருவாள்.

பண்டிகை தினங்களில்தான் சந்தியாவால் கதிரைப் பார்க்க முடிந்தது. அதுவும் சந்தியா பலகாரம் கொடுக்க அவர்கள் வீட்டிற்குச் செல்லும் போதுதான் பார்ப்பாள். கதிரின் குடும்பம் பெரியது. அவன் சித்தப்பாவின் குடும்பமும் அதே வீட்டில் இருக்கிறார்கள்.

அவனது சித்தப்பாவிற்கு இரண்டு ஆண் பிள்ளைகள். மூத்தவன் வெங்கடேஷ் சந்தியாவின் வயது, அடுத்தவன் விக்னேஷ் எட்டாம் வகுப்புப் படிக்கிறான்.

அவர்களோடு கதிரின் அப்பத்தாவும், அய்யாவும் இருக்கிறார்கள். அவர்கள் சந்தியாவிற்கும் தாத்தா, பாட்டி தான் (அதாவது அவள் அம்மாவின் பெற்றோர்கள்.) இருந்தாலும் சந்தியாவால் அங்கே கதிருடன் தனியே பேசவெல்லாம் முடியாது. அதனால் வெறுமனே பார்ப்பது மட்டும்தான்.

ஒரு முறை கதிர் ஊருக்கு வந்திருந்த போது... வண்டியில் தன் நண்பனைப் பார்க்க பக்கத்து ஊருக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது வழியில் நந்தினி அவள் ஸ்கூட்டியைத் தள்ள முடியாமல் தள்ளிக் கொண்டு செல்வதைப் பார்த்து, தன் வண்டியை அவள் அருகில் சென்று நிறுத்தியவன், "என்னங்க! வண்டியைத் தள்ளிட்டுப் போறீங்க? ஏதாவது பிரச்சினையா...?" என்றான்.

கதிரை அந்த நேரத்தில் திடீரென்று அங்கே பார்த்ததும் நந்தினிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவள் பதில் சொல்லாமல் முழித்தாள்.



கதிர் அவளிடமிருந்து வண்டியை வாங்கி அதை உதைத்துப் பார்க்க... வண்டி அப்போதும் எடுக்கவில்லை. கதிர் வண்டியை நிறுத்திப் பெட்ரோல் இருக்கிறதா என்று பார்த்தான். அவன் கண்ணுக்கு ஒன்றும் தட்டுப்படவில்லை. ஒரு குச்சியை எடுத்து உள்ளே விட்டுப் பார்க்க... பெட்ரோல் இல்லை என்று புரிந்தது.

"ஏங்க, இது என்ன சிட்டியா, வழியெல்லாம் பெட்ரோல் பங்க் இருக்க...? வண்டியில எப்பவும் பெட்ரோல் வச்சுக்க வேண்டாமா...?" என்ற கதிர், அங்கே கிடந்த சிரட்டையில் தன் வண்டியிலிருந்து பெட்ரோல் பிடித்து வந்து நந்தினியின் வண்டியில் ஊற்றினான்.

அவன் செய்வதையெல்லாம் பார்த்த நந்தினிக்குச் சந்தோஷமாக இருந்தது. அவனுக்குத் தன் மேல் அக்கறை இருக்கிறது என்று நினைத்தாள்.

நந்தினி புன்னகையுடன், "ரொம்ப தேங்க்ஸ்... உங்களுக்குத்தான் சிரமம் ஆகிடுச்சு!" என்றாள்.

"நீங்கன்னு இல்லை... யாருன்னாலும் நான் இதைச் செஞ்சிருப்பேன். அதுவும் நீங்க சந்தியாவோட சிநேகிதி... உங்களுக்குச் செய்யலைன்னு அவளுக்குத் தெரிஞ்சிதுன்னு வைங்க... என்னை வஞ்சே கொன்னுடுவா...!" என்றவன், புன்னகையுடன் அவன் வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்றான்.

'இவன் தன்னை சந்தியாவின் தோழி என்ற எண்ணத்தில் மட்டும்தான் பார்க்கிறான்!' என்று நினைத்த

நந்தினிக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இனி கதிரை நினைத்தும் பார்க்கக் கூடாது என்று முடிவெடுத்தாள்.

ஒரு நாள் காவேரிக்கு விடுமுறைதானே என்று சந்தியா அவள் வீட்டுக்குச் சென்றாள். கதிர் விடுமுறையில் வீட்டுக்கு வந்தால் மாடியில்தான் எப்போதும் இருப்பான். அவனுக்கு இளையராஜா இசையமைத்த பாடல்களைக் கேட்க மிகவும் பிடிக்கும். அதனால் அவன் வீட்டில் இருந்தால், மாடியில் எப்போதும் பாட்டு ஓடிக் கொண்டிருக்கும். அதோடு மாடியில் அவன் ஒரு சிறு பூந்தோட்டமும் வைத்திருக்கிறான்.

ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதால் தினமும் உடற்பயிற்சி செய்து பழக்கப்பட்டவன், அதனால் உடற்பயிற்சி செய்வது, குளிப்பது, தூங்குவது எல்லாம் மாடியில்தான். சாப்பிட மட்டும்தான் கீழே வருவான்.

சந்தியா வந்தபோது, காவேரி மட்டும்தான் ஹாலில் இருந்தாள். சந்தியா, அவளருகில் சென்று அமர... காவேரி, சந்தியாவைக் கண்டு கொள்ளாமல் யாருடனோ செல்லில் பேசியபடி இருந்தாள். சந்தியாவும் 'அப்படி யாரோடுதான் இவள் பேசுகிறாள்?' என்று கவனிக்க... காவேரி வாயசைப்பதும் தெரியவில்லை... பேசும் சத்தமும் கேட்கவில்லை. ஆனால், அவள் யாருடனோ பேசியபடி தான் இருந்தாள்.

சந்தியா, 'எப்படி இப்படிப் பேச முடியுது?' என்று ஆச்சரியப்பட்டவள், 'சரி, நாம டி.வி. பார்ப்போம்!' என்று டி.வி பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் சென்றும் காவேரி பேசி முடிக்கும் வழியைக் காணோம் என்றதும், "யாரு கூடப் பேசுற...?" என்று சந்தியா கேட்டுக் கொண்டிருக்கும் போதே, கதிர் மாடியில் இருந்து மதிய உணவிற்காக இறங்கி வந்தான். அவனைப் பார்த்ததும் சந்தியா முகம் மலர... கதிரும் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.



கதிர் வந்ததைக் கூடக் கவனிக்காமல் காவேரி போன் பேசிக் கொண்டிருக்க... கதிர் உள்ளே சென்று தன் அம்மாவிடம், "சாப்பாடு எடுத்து வைங்க!" என்றதும் அவரும் உணவு பரிமாற வந்தவர், சந்தியாவையும் சாப்பிட அழைத்தார்.

"இல்லத்தை! நான் வீட்ல சாப்பிட்டுட்டுத்தான் வந்தேன்... நீங்க மாமாவுக்கு வைங்க...!" என்றவள், காவேரியைப் பார்த்து, "நீ சாப்பிட்டியா...?" என்று கேட்டதும், கதிரின் பார்வை தன் தங்கையிடம் திரும்பியது. அப்போதுதான் காவேரியும் கதிரைக் கவனித்தாள். அவனைப் பார்த்ததும் போனை வைத்தவள், ஒன்றும் தெரியாதது போல் சென்று சாப்பிட அமர்ந்தாள்.

கதிர், அவளிடம் செல்லைக் கொடு என்று கையை நீட்ட... காவேரி, "எதுக்கு என்னோடதைக் கேட்கிறே...? அதுதான் உனக்கு ஒண்ணு இருக்கு இல்ல...!" என்று முதல் முறையாகக் கதிரை எதிர்த்துப் பேசினாள்.

"சும்மா பார்த்திட்டுத் தரேன், கொடு...!" என்று கதிர் செல்லைக் கேட்க... காவேரியும் வேறு வழியில்லாமல்

கொடுத்தாள். செல் வெந்நீர் பானை போல் கொதிப்பதைப் பார்த்த கதிர்... கால் ஹிஸ்டரி சென்று பார்க்க... சுபா என்று பதிவாகியிருந்த எண்ணிற்கு நாற்பது நிமிடம் பேசியிருந்தாள்.

"இவ்வளவு நேரம் அப்படி என்னதான்டி பேசுவ...? இன்னொரு தடவை உன் கையில செல்லைப் பார்த்தேன்... தூக்கிப் போட்டு உடைச்சிடுவேன்...!" கதிர் கோபப்பட...

"நான் என் ப்ரெண்டோட பேசுறேன்... உனக்கு என்ன வந்தது? நீ உன் வேலையைப் பாரு...!" காவேரி எடுத்தெறிந்து பேச... சந்தியா இருவரையும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் தங்கையைப் பார்த்து முறைத்த கதிர், தன் தாயிடம் திரும்பி, "அம்மா! நாற்பது நிமிஷம் பேசியிருக்கா... அப்படி என்ன பேசுவா...? நீங்க இதெல்லாம் கேட்க மாட்டீங்களா...?" என்றான்.

"தனியா காலேஜ் போயிட்டு வராளே... எதுக்கும் இருக்கட்டும்னு வாங்கிக் கொடுத்தா... எந்நேரமும் அதையே காதுல வச்சிருக்கா. என்னைக்கு உங்க அப்பா பார்த்திட்டு கத்தப் போறாரோ தெரியலை...!" என்று லஷ்மி சொல்லிக் கொண்டிருக்கும் போதே... பெரியசாமியும் சாப்பிட வீட்டுக்கு வர,.. அப்போதைக்கு அந்தப் பேச்சு நின்றது.

காவேரியும் அதோடு உஷாராகி விட்டாள். கதிரின் முன்பு செல்லைத் தொடுவது இல்லை. கதிரும் அதைப்



பற்றிப் பிறகு மறந்து விட்டான். அது எவ்வளவு பெரிய பிரச்சினையில் அவர்கள் குடும்பத்தைச் சிக்க வைக்கப் போகிறது என்று அப்போது யாருக்கும் தெரியவில்லை. காவேரி பேசியது சுபா என்கிற பெண்ணிடம் இல்லை, சுபாஷ் என்கிற ஆணிடம்.

## 3

ஒரு வருடம் நான்கு மாதங்களுக்குப் பிறகு...

சென்னை மருத்துவக் கல்லூரி, பரபரப்பிற்குப் பஞ்சமில்லாமல் இருந்தது. எங்கும் மனிதத் தலைகள். வைத்தியம் பார்த்துக் கொள்ள வந்தவர்கள் ஒருபுறம் என்றால்... அவர்களைப் பார்த்து நலம் விசாரிக்க வந்தவர்கள் ஒருபுறம், மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள் ஒருபுறம் என்றால்... வெள்ளைக் கோட்டும், கழுத்தில் ஸ்டெதாஸ்கோப் அணிந்து கண்களில் கனவுகளுடன் திரியும் மாணவர்கள் ஒருபுறம் என்று அந்த இடமே ஜேஜேவென்று இருந்தது.

பாலையம்பட்டியில் வெறும் எண்ணூற்று அறுபது பேர் கொண்ட பள்ளியில் படித்து, இன்று சென்னையில் இருக்கும் பிரபல மருத்துவக் கல்லூரிக்குள் நுழைந்த சந்தியா... பரபரப்பாக இருந்த கல்லூரியைச் சுற்றி வேடிக்கை பார்த்தபடியே நடந்தாள்.

சந்தியா, கிராமத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் பயனால் அவளுக்கும் நகரத்து வாழ்க்கை எப்படி இருக்கும் என்று

ஓரளவுக்குத் தெரியும். அதனால் நகரத்துக்கு ஏற்ற வகையில்... அதே சமயம் மற்றவர்களின் கண்களை உறுத்தாதவாறு, எளிமையான, அதே சமயம் அவளுக்குப் பொருந்துமாறு சுடிதார் அணிந்து வந்திருந்தாள்.

முதல் வருட மாணவர்களுக்கு நேற்றே கல்லூரி திறந்து விட்டது. நேற்று சந்தியாவின் அப்பா வந்து அவளைக் கல்லூரியில் விட்டு விட்டுச் சென்றிருந்தார். சந்தியா கல்லூரி ஹாஸ்டலில் தங்கி இருக்கிறாள். ஹாஸ்டல் வாசலில் பஸ் ஏறினால்... கல்லூரி வாசலில் வந்து இறங்கிக் கொள்ளலாம்.

முதல் வருட வகுப்பிற்குள் நுழைந்தவள், எங்கு உட்கார இடம் இருக்கிறது என்று கண்களால் தேடினாள். ஆண் - பெண் பாகுபாடின்றி எல்லோரும் கலந்து அமர்ந்திருந்தனர். பெண்கள் பள்ளியில் படித்த சந்தியாவுக்கு, அது சற்று வித்தியாசமாகப் பட, அவள் முதல் இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணின் அருகே சென்று அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் அவர்கள் வகுப்புப் பேராசிரியர் உள்ளே நுழைந்தார். தன்னை ஸ்ரீராம் என்றும், தான் அவர்களுக்கு உயிர் வேதியியல் எடுக்கப் போவதாகவும், தன்னைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டவர், மாணவர்களைப் பார்த்து, 'நீங்களும் உங்களைப் பற்றிச் சொல்லுங்கள், தெரிந்து கொள்வோம்!' என்றார்.

அப்போது ஒரு மாணவன் உள்ளே வர அனுமதி கேட்க... "இன்னைக்கு முதல் நாள். அதனால பரவாயில்லை... இனி லேட்டாக வரக்கூடாது...!" என்று எச்சரித்தே உள்ளே அனுமதித்தார்.



உள்ளே வந்த அந்த மாணவன், ஏற்கெனவே லேட்டாக வந்து விட்டோம் என்ற பரபரப்பில் இருந்ததால்... நேராகச் சென்று முதல் இருக்கையில் அமர்ந்திருந்த சந்தியாவின் அருகே சென்று உட்கார... சந்தியா திகைத்தவள், அவனைக் கலவரமாகப் பார்த்தாள். அவள் பார்வையில் குழம்பியவன், அப்போதைக்கு எதுவும் பேசாமல், வகுப்பில் என்ன நடக்கிறது என்று கவனிக்க ஆரம்பித்தான். ஒவ்வொருவராக எழுந்து தங்கள் பெயர் மற்றும் தங்களைப் பற்றிய சிறு குறிப்பை ஆங்கிலத்தில் சொல்லி விட்டு அமர... சந்தியாவிற்குச் சற்றுப் படபடப்பாக இருந்தது.

ஆங்கில வழிக் கல்விதான் அவளும் படித்தாள். ஆனால்... அவளுக்கு ஆங்கிலம் சரளமாகப் பேச வராது. அங்கே பாலையம்பட்டியில் யார் ஆங்கிலத்தில் பேசுவார்கள்? சந்தியா எல்லாப் பாடத்திலும் முதல் மதிப்பெண் வாங்கி விட்டு, ஆங்கிலத்தில் தான் குறைவான மதிப்பெண் பெற்றிருந்தாள். அவளுக்கு ஆங்கிலம் பேச வராது என்பதை விட, எங்கே தப்பாகப் பேசி விடுவோமா என்று பயம். என்ன செய்வது என்பது போல் பயந்து போய் உட்கார்ந்து இருந்தவள், மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கவனித்தாள்.

சந்தியாவின் அருகே அமர்ந்திருந்த மாணவன் எழுந்து, "ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல், தேங்க் யூ ஃபார் கிவிங் மீ அன் ஆப்பர்சூனிட்டி டு இன்ட்ரடியூஸ் மை செல்ஃப்.

"ஐ யாம் சித்தார்த்... பார்ன் அன் ப்ராட் அப் இன் சென்னை. ஐ ஹேவ் கம்ப்ளீட்டட் மை 12 த் வித் 96% இன் செட்டினாட் வித்யாஸ்ரமம். கம்மிங் டு மை பேமிலி, வி ஹேவ் த்ரீ மெம்பர்ஸ் இன் மை லைஃப். மை பாதர் அன்ட் மதர் போத் ஆர் டாக்டர்ஸ். மை ஹாபிஸ் ஆர் ப்ளேயிங் கேம்ஸ் ஆன் பி.சி. ப்ளேயிங் கிரிக்கெட் அன்ட் லிசனிங் மியுசிக்."

என்று படபடவென்று ஆங்கிலத்தில் சரளமாகப் பொரிய... இவன் எதுக்கு இவ்வளவு சொல்றான்...? நாமளும் இவ்வளவு பேசணுமா?' என்று பயந்தபடியே சந்தியா எழுந்தாள்.

"குட் மார்னிங் சார்...!" என்று பள்ளி மாணவி போல் ஆரம்பித்தவள்.

"ஐ யாம் சந்தியா... ஐ பிலாங் டு ய ஸ்மால் வில்லேஜ் கால்டு பாலையம்பட்டி. மை பாதர் இஸ் ய பார்மர் அன்ட் மை மதர் இஸ் ய ஹவுஸ் வைஃப்!" என்று மட்டும் சொல்லி விட்டு அவள் உட்கார...

"டெல் சம்திங் அபவுட் யுவர் ஹாபிஸ் அன்ட் இன்ட்ரெஸ்ட்?" என்று பேராசிரியர் கேட்க...

சந்தியாவுக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. அவள் திணறுவதைப் பார்த்த சித்தார்த்,

"ஃப்ரீ டைம்ல என்ன செய்யப் பிடிக்கும்னு கேட்கிறாரு...! இதைச் சொல்ல இவ்வளவு நேரமா...? சரியான பட்டிக்காடு...!" என்று முனக...



சந்தியா அவனைப் பார்த்து முறைத்து விட்டு, "ஸ்டடியிங் புக்ஸ் சார்...!" என்று சொல்ல... அவள் சொன்னதைக் கேட்ட பேராசிரியர் புன்னகைக்க... மற்ற மாணவர்கள் சிரித்தனர். சித்தார்த் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

சந்தியா, 'எதற்குச் சிரிக்கிறார்கள்?' என்று புரியாமல் சித்தார்த்தைப் பார்க்க, "ஸ்டடியிங் புக்ஸ் இல்ல... ரீடிங் புக்ஸ்!" என்றான்.

"அது எனக்கும் தெரியும்... எங்க அம்மா பள்ளிக் கூடத்துக்குப் புத்தகத்தைத் தவிர... வேற புத்தகத்தை எடுத்தா... முதுகுத் தோலை உரிச்சிடும். அதனாலதான் அப்படிச் சொன்னேன்!" என்றாள் சந்தியா, கெத்தாக.

அவள் சொன்ன விளக்கத்தில் எரிச்சலான சித்தார்த், 'இதெல்லாம் எங்கே படிச்சு சீட் வாங்கியிருக்கும், காசு கொடுத்துத்தான் வாங்கியிருக்கும்!' என்று மனதிற்குள் நினைத்தவன், வெளியே, "ரொம்பப் புத்திசாலி...!" என்றான் கிண்டலாக.

அவன் கிண்டல் செய்தது சந்தியாவின் கோபத்தைக் கிளற... அவள் ஏதோ சொல்ல வர... அப்போது, "சந்தியா, உன்னைப் பத்தி முக்கியமா ஒண்ணு சொல்ல மறந்திட்ட... நான் சொல்றேன், இங்கே வா...!" என்று பேராசிரியர் அழைக்க...

சந்தியா தயங்கியபடி பேராசிரியரின் அருகே சென்றாள்.

"நிறை குடம் தழும்பாதுன்னு ஒரு பழமொழி இருக்கு... அது உங்களுக்குத் தெரியுமா...? அதுக்கு உதாரணம் சந்தியா. போர்ட் எக்ஸாம்ல ஸ்டேட்ல மூணாவதா வந்த ரெண்டு பேர்ல சந்தியாவும் ஒருத்தி.

"எல்லா மெயின் சப்ஜெக்ட்லேயும் முதல் மார்க் வாங்கிட்டு, ஆங்கிலத்தில் மட்டும் மார்க் கொஞ்சம் கம்மியா வாங்கினதுனாலதான் மூணாவது இடத்துக்குப் போயிட்டா... இல்லன்னா சந்தியாதான் ஸ்டேட் ஃபர்ஸ்ட்!" பேராசிரியர் பெருமையாகச் சொல்ல... மாணவர்கள் எழுந்து உற்சாகமாகக் கை தட்டினர்.

'ஒரு நிமிஷம் அவளைப் பற்றி எப்படிக் குறைவா நினைச்சோம்!' என்று தன்னை நினைத்தே சித்தார்த் வெட்கப்பட்டான். சந்தியா நன்றி சொல்லி விட்டுச் சித்தார்த்தின் அருகில் சென்று அமர, அவன் அவளிடம், "சாரி...!" என்றான் உண்மையாகத் தன் தவறை உணர்ந்து,

சந்தியா பதிலுக்குப் பளிச்சென்று புன்னகைத்தாள். சித்தார்த்தும் முகம் மலர்ந்து புன்னகைக்க... இருவருக்கும் இடையே இருக்கும் ஆண், பெண் என்கிற பேதமெல்லாம் மறைந்து, அங்கே அழகான நட்பு உருவானது.

அடுத்த வாரத்தில் ஒரு நாள் சந்தியா கல்லூரிக்குள் நுழையும் போதுதான் சித்தார்த்தும் அவன் பைக்கை நிறுத்தி விட்டு வந்தான். அதனால் இருவரும் சேர்ந்து பேசியபடி சென்றனர்.



"அப்புறம் சந்தியா, காலேஜ் லைஃப் பிடிச்சிருக்கா...? ஹாஸ்டல் எப்படி, வசதியா இருக்கா...?"

"ம்ம்... காலேஜ் நல்லா இருக்கு. ஆனா... ஹாஸ்டல்ல இருக்கிறதுதான் பிடிக்கவே இல்லை. எங்க அம்மா, அப்பாவை விட்டுட்டு இருக்க ரொம்பக் கஷ்டமா இருக்கு... என் ஃப்ரெண்ட் சித்ரா இல்லாம போர் அடிக்குது. நான் எங்க வீட்ல எந்த வேலையும் செஞ்சது இல்லை. பாரு, எனக்குத் தலை பின்னிக்கக் கூடத் தெரியலை. ஊர்ல எங்க அப்பத்தாதான் தினமும் பின்னி விடும். பின்னல் போட வராமத்தான் வெறும் பேண்ட் மட்டும் போட்டுட்டு வரேன்...!" என்றவள், தொடர்ந்து,

"அதோட, சாப்பாடு ரொம்ப மோசம். நான் மூணு வேளையும் சுடச் சுடத்தான் சாப்பிடுவேன். இந்த ஊர் நல்லாவே இல்லை. ஒரே கூட்டமா கசகசன்னு இருக்கு... எனக்கு எங்க ஊர்தான் பிடிச்சிருக்கு!" என்றாள் கண்கள் கலங்க.

"நீ நல்லாப் படிச்சு டாக்டர் ஆகணும்னுதானே இங்கே வந்திருக்கே... இதெல்லாம் சின்ன விஷயம். இதுக்கெல்லாம் போய் கவலைப்படலாமா...!" சித்தார்த் சமாதானம் செய்ய...

பதிலுக்குச் சந்தியா, "நான் டாக்டர் ஆகணும்னு இங்கே..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே... மரத்தடியில் கும்பலாக அமர்ந்திருந்த மாணவர்கள், இவர்கள் இருவரையும் அழைத்தனர்.

இவர்கள் இருவரும் அருகில் சென்றதும், "நீங்க ஃபர்ஸ்ட் இயர் தானே... உங்க பேரு என்ன...?" என்று சற்று மிரட்டலாக அங்கிருந்த மாணவன் ஒருவன் கேட்க...

சந்தியா, சித்தார்த் என்று இருவரும் தங்கள் பெயர்களைச் சொன்னதும், அங்கிருந்த ஒரு பெண், "நாங்க உங்க சீனியர்ஸ். தெரியும் இல்லை... கேன்டீன் போய் எங்க எல்லோருக்கும் சமோசா... பிஸ்கட்... ஜூஸ் எல்லாம் வாங்கிட்டு வாங்க...!" என்றாள் அதிகாரமாக.

சந்தியா மகிழ்ச்சியுடன் சரி என்று தலையாட்ட... சித்தார்த்துக்கு எரிச்சலாக இருந்தது. அவன், "இங்கே ராகிங் இல்லைன்னு சொன்னாங்களே!" என்றான்.

"அது... நாங்க அப்படித்தான் வெளியே சொல்லி வச்சிருக்கோம்!" என்று ஒரு பெண் சொல்ல...

"இதெல்லாம் ஒரு ராக்கிங்கா ஃப்ரதர்... போங்க, சீக்கிரம் போய் வாங்கிட்டு வந்து கொடுத்துட்டு க்ளாஸ்க்குப் போங்க!" என்றான் இன்னொருவன்.

சந்தியாவும், சித்தார்த்தும் கேன்டீன் நோக்கிச் சென்றனர்.

"நாம் ஏன் இவங்க சொல்றது செய்யணும்...? நாம போய் சார் கிட்டே கம்ப்ளைன்ட் பண்ணலாம்" என்று சித்தார்த் சொல்ல...

"மெடிக்கல் காலேஜ்ல படிக்கிறோம்... இதெல்லாம் கூட இல்லைன்னா எப்படி? அவங்க நம்மைத் தப்பாவா எதுவும் செய்யச் சொன்னாங்க... சாப்பிடத்தானே



கேட்டாங்க... இதுக்குப் போய் முகத்தைத் தூக்கி வச்சிக்கிட்டு இருக்கே...? இன்னைக்கு அவங்க செய்யச் சொன்னதை நாளைக்கு நாமளும் நம்ம ஜூனியர்ஸ் கிட்ட கேட்கலாம், வா...!" சந்தியா, சித்தார்த்தைச் சமாதானம் செய்து அழைத்துச் சென்றாள்.

சந்தியாவும், சித்தார்த்தும் சீனியர் மாணவர்கள் கேட்டதையெல்லாம் வாங்கி வந்து கொடுக்க... அதில் இருந்த சாக்லெட்டைப் பார்த்து விட்டு, "ஹே! இது என்ன சாக்லெட்... நாங்க சொல்லவே இல்லை...!" அந்த சீனியர் பெண்களில் ஒருத்தி சொல்ல...

"அது நானாத்தான் வாங்கிட்டு வந்தேன். முதல் முதல்ல கொடுக்கும்போது ஸ்வீட் இல்லைன்னா எப்படி? அதுக்குத்தான்...!" என்றாள் சந்தியா.

"சோ ஸ்வீட் கேர்ள்...!" என்றாள் அங்கிருந்த மற்றொருத்தி.

"ஸ்வீட் எடு கொண்டாடுன்னு சொல்ற!" என்று சீனியர் மாணவன் ஒருவன் சொல்ல... சந்தியா புன்னகைத்தாள்.

அவளின் வெகுளியான பேச்சு சீனியர் மாணவர்களைக் கவர்ந்து விட... அவர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். அதோடு, அன்றிலிருந்து அவளோடு நட்பாகவும் பழகினார்கள். சீனியர் மாணவர்களின் சப்போர்ட் இருந்ததனால்... ஹாஸ்டலிலும் சந்தியாவிடம் யாரும் வம்பிழுக்கவில்லை. அதனால் சந்தியாவிற்குக் கல்லூரி வாழ்க்கை நன்றாகவே சென்றது.

நடுவில் கல்லூரியில் விழா வர, அதில் முதல் வருட மாணவர்களை நடனம் ஆடச் சொல்லியிருந்தனர். சந்தியாவும் விருப்பத்துடன் நடனத்திற்குத் தன் பெயரைக் கொடுக்க... 'கிராமத்துப் பொண்ணுக்கு வெஸ்டர்ன் டான்ஸ் வருமா...? இதை எப்படிச் சந்தியாவிடம் சொல்வது?' என்று மற்ற மாணவர்கள் நினைத்தனர்.

சந்தியா, தன் வகுப்பில் அனைவரிடமும் நன்றாகப் பழகினாள். அதனால் அவளின் மனது வருந்தும்படி எப்படிச் சொல்வது என்று தெரியாமல்... 'சரி, ஆடட்டும் பார்ப்போம். சரியா ஆடலைன்னு சொல்லி அனுப்பிட லாம்!' என்று நினைத்தனர். அவர்களுக்குத் தெரியாது. இல்லையா... சந்தியா எப்படி ஆடுவாள் என்று!

நடனப் பயிற்சி தொடங்கியது. மற்றவர்களை விட சந்தியா நன்றாக ஆட... 'நல்லவேளை, இவளை எதுவும் சொல்லலை!' என்று மற்ற மாணவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். சித்தார்த்துக்குச் சந்தியாவைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் சந்தியா அவனுக்குப் புதுமையாகத் தெரிந்தாள்.

அவன் இருக்கும் குடும்பச் சூழல், அவனுக்கு மனிதர்களைப் பணம், பதவி, தகுதி போன்றவற்றை வைத்துத்தான் பழகச் சொல்லித் தந்திருந்தது. ஆனால், சந்தியாவிடம்தான், அவன், அன்பால் எதையும் சாதிக்க லாம் என்று புரிந்து கொண்டான்.

கல்லூரியில் முதல் செமஸ்டர் முடிந்து, அடுத்து செமஸ்டருக்கான வகுப்புகள் தொடங்கியிருந்தது.



அப்போது ஒரு நாள் கல்லூரிக்கு வந்த சித்தார்த், சந்தியாவின் அருகில் அமர்ந்தவன், "தோழியா, என் காதலியா...? யாரடி நீ என் கண்ணே...!" என்று அடிக்கடி பாடிக் கொண்டிருந்தான்.

அதைக் கேட்ட சந்தியாவிற்கு, முதல் நாள் கல்லூரியில் தன்னை விட்டுச் சென்ற தந்தை சொன்னது தான் நினைவுக்கு வந்தது.

"நம்ம குடும்பத்துல நடந்த பிரச்சினை எல்லாம் உனக்குத் தெரியும். அதனால நாம எல்லோரும் எவ்வளவு கஷ்டப்படுறோம்னும் உனக்கு நல்லாவே தெரியும். திரும்பி அது மாதிரி ஒரு பிரச்சினை வந்துடாம... படிச்சி முடிக்கிற வழியைப் பாரு. இனி திரும்ப அது மாதிரி ஒரு விஷயம் நம்ம குடும்பத்தில நடந்தா... அதைத் தாங்கும் சக்தி யாருக்கும் இல்லை...!" என்று சொல்லி விட்டுச் சென்றிருந்தார்.

அதை நினைத்த சந்தியாவுக்குக் கண்கள் கலங்க... அவள் திரும்பி சித்தார்த்தின் முகத்தைப் பார்த்தாள். அவள் எதற்கு இப்படிப் பார்க்கிறாள் என்று தெரியாமல்... சித்தார்த், என்ன என்பது போல் தன் புருவத்தை உயர்த் தினான். சந்தியா, சித்தார்த்தின் நட்பு தொடர்ந்ததா...?

எப்பொழுதும் சித்தார்த்திடம் நன்றாகப் பேசும் சந்தியா, அன்று ஏனோ அமைதியாக இருந்தாள். காலை வகுப்பு இடைவேளையில் சித்தார்த், சந்தியாவை டீ குடிக்க அழைத்ததற்கும், வரவில்லை என்று சொல்லி

விட்டாள். சித்தார்த் மட்டும் மற்ற நண்பர்களோடு சேர்ந்து கேன்டீன் சென்றான்.

மதிய உணவு வேளையில் ஒரு பெரிய கும்பலே ஒன்றாக அமர்ந்துதான் சாப்பிடுவார்கள். அன்றும் அது போல் அமர்ந்திருந்தபோது... சித்தார்த், தான் வீட்டில் இருந்து கொண்டு வந்த உணவை சந்தியாவுக்குக் கொடுத்து விட்டு, அவளுடையதை எடுக்க... அவனிடம் இருந்து அதைப் பறித்த சந்தியா, "பரவாயில்லை, நான் என்னோடதே சாப்பிட்டுக்கிறேன்...!" என்றாள்.

சித்தார்த், அவளை ஆச்சரியமாகப் பார்த்தான். கல்லூரி தொடங்கிய இந்த ஆறு மாத காலமாகத் தினமும் அவன்தான் அவளுக்கு மதிய உணவு கொண்டு வருகிறான். அதை நன்றாக முழுங்கி விட்டு, அதில் ஆயிரத்தெட்டு நொட்டை சொல்லுவாள். இன்றைக்கு என்ன ஆச்சு? என்று குழம்பியபடி உணவு அருந்தியவன், சந்தியாவைப் பார்க்க... அவள் அருகில் இருந்த அனுவுடன் பேசியபடி உணவருந்திக் கொண்டிருந்தாள். ஆனால், எப்போதும் அவள் முகத்தில் இருக்கும் மலர்ச்சி இல்லை.

மதிய உணவு முடிந்து வந்த சந்தியா, சித்தார்த்தின் அருகில் அமராமல், அனுவின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள். அதைக் கவனித்த சித்தார்த்துக்குக் கோபம் வந்தது. 'என்ன ஆச்சு? நேத்து நைட் பேசும் போது கூட நல்லாத்தானே பேசினா...! காலையில கூட வழக்கம் போல குட் மார்னிங் மெசேஜ் அனுப்பினாளே...!' என்று குழம்பியபடி அமர்ந்திருந்தான்.



வகுப்பு முடிந்து பேராசிரியர் வெளியே சென்றதும் அடுத்த ஆசிரியர் வகுப்புக்கு வரும் இடைவேளையில் சித்தார்த், மேஜையில் தலை சாய்த்து, "தோழியா... என் காதலியா? யாரடி நீ பெண்ணே...?" என்ற பாட்டை வாய்க்குள் முனகியவள்... சட்டென எழுந்து அமர்ந்து, சந்தியாவைப் பார்த்தான்.

காலையில் இந்தப் பாட்டைப் பாடியதில் இருந்து தான் சந்தியா தன்னுடன் சரியாகப் பேசவில்லை என்று அவனுக்குத் தோன்றியது. அது அவன் கோபத்தை மேலும் அதிகமாக்க, முகம் இறுகி அமர்ந்திருந்தான்.

மாலை வகுப்பு முடிந்து சந்தியா, அனுவுடன் வெளியே வந்த போது... "நான் சந்தியாவுடன் கொஞ்சம் தனியாப் பேசணும்...!" என்று சித்தார்த், அனுவிடம் சொல்ல, அவளும் சரி என்று இருவரிடமும் விடைபெற்றுச் சென்றாள்.

சந்தியா அமைதியாக நடக்க, சித்தார்த்தும் அவளுடன் நடந்தவன், சற்றுத் தள்ளி வந்ததும், "நீ என்னைத் தப்பா நினைச்சிட்டே இல்லே... உனக்கு என் மேல இவ்வளவுதான் நம்பிக்கையா...?" என்று கேட்டதும், சந்தியா நின்று சித்தார்த்தின் முகம் பார்க்க...

"நான் காலையில் காலேஜ் வர்ற வழியில்... அந்தப் பாட்டுக் கேட்டேன்... அதுல இருந்து அதையே பாடிட்டு இருந்தேன். உன்னை நினைச்சுப் பாடினேன்னு நினைச்சிட்டே இல்ல...! உனக்கு என் கிட்டே ஏதாவது பிடிக்கலைன்னா நேரடியாச் சொல்லணும். இப்படிப்

பேசாம இருப்பியா?" சித்தார்த் வருத்தமாகச் சொல்லி விட்டு வேகமாக நடக்க, சந்தியாவின் முகம் மலர்ந்தது.

அவன் பின்னே வேகமாகச் சென்ற சந்தியா, சித்தார்த்தின் கை பிடித்து நிறுத்தினாள். இதுவரை சந்தியாவோ, சித்தார்த்தோ ஒருவரை ஒருவர் தொட்டுப் பேசியதே இல்லை. சித்தார்த், சந்தியா பிடித்திருந்த தன் கையையே பார்க்க...

அவள், "நீ என்னைப் பார்த்துத்தான் அப்படிப் பாடிட்டேன்னு தப்பா நினைச்சிட்டேன். நான் அப்படி நினைச்சிருக்கக் கூடாது. ஒரு நிமிஷம் ஒரு நல்ல ஃப்ரெண்ட்டை இழந்திடுவேனோன்ற பயத்தில்தான் அப்படி நடந்துக்கிட்டேன். சாரிடா...!" என்றாள்.

சந்தியா சொன்னதைக் கேட்டு சித்தார்த் திடுக் கிட்டான். 'தான் உண்மையிலேயே அவளைக் காதலித் திருந்தால்... அவள் தன்னை விட்டு ஒதுங்கியிருப்பாள் என்றுதானே சந்தியா சொல்கிறாள். அவளோடு பேசாமல் தன்னால் இருக்க முடியுமா...?' என்று நினைத்தவனுக்கு, 'நல்ல வேளை! நாம் அவளைக் காதலிக்கவில்லை!' என்றே எண்ணத் தோன்றியது. அவனுக்கு ஏனோ சந்தியாவிடம் அதுபோல் தோன்றவில்லை. அவள் என்றைக்கும் அவனுக்கு நல்ல தோழிதான்.

சித்தார்த் பேசாமல் அமைதியாக இருப்பதைப் பார்த்து சந்தியா, "என்னடா! இன்னும் உனக்கு என் மேலே கோபம் போகலையா...?" என்று பாவமாகக் கேட்க...



அவளைக் குறும்புப் புன்னகையுடன் பார்த்த சித்தார்த், "உன்னைப் போய் நான் லவ் பண்ணுவேன்னு நீ எப்படி நினைச்சே...? நீ எல்லாம் என் லிஸ்ட்லேயே இல்லை. என்னோட ரேஞ்சே வேற... நான் பாலிவுட்... ஹாலிவுட் எல்லாம் தாண்டி, ஒரு தேவதைக்காக வெயிட் பண்றேன்...!" என்றான் கண்களில் கனவுகளுடன்.

சந்தியா, அவன் சொல்லச் சொல்ல முகம் மலர்ந்தவள், "நீ மட்டும் இல்லாம... ஊரே உன் பொண்டாட்டியைப் பார்த்து ரசிக்கணும்னு சொல்றே...!" என்று சொன்னதுதான் தாமதம்,

கனவுலகில் இருந்து பட்டென்று கீழே விழுந்த சித்தார்த், சந்தியாவைப் பார்த்து முறைத்தவன், "என் பொண்டாட்டியைப் பத்தி தப்பாவா சொல்ற...!" என்று அவளை அடிக்கத் துரத்த, அவள் சிரித்துக் கொண்டே ஓடினாள்.

எங்கே தங்கள் நட்பை இழந்து விடுவோமோ என்று பயந்த இரு இள நெஞ்சங்களும், தங்கள் நட்பு என்றும் பிரியாது என்ற சந்தோஷத்தில் சிறகடித்து வானில் பறந் தனர். அந்த நாளுக்குப் பிறகு, சந்தியா, சித்தார்த் நட்பு இன்னும் ஆழமானது.

சித்தார்த் வீட்டில் ஞாயிற்றுக் கிழமை மட்டும்தான் எல்லோரும் சேர்ந்து அமர்ந்து உணவு அருந்துவார்கள். அவன் பெற்றோர்கள் மருத்துவர்கள் என்பதால், மற்ற நாட்களில் சேர்ந்து உணவு உண்ண அவர்களுக்கு

நேரமே இருக்காது. அன்றும் அது போல் மூவரும் ஒன்றாக அமர்ந்து மதிய உணவைச் சாப்பிட்டுக் கொண டிருந்தனர்.

"இன்னைக்கு மீன் குழம்பு ரொம்ப நல்லாயிருக் குல்ல...!" என்று சித்தார்த்தின் அம்மா வனிதா கேட்க...

சித்தார்த்தின் அப்பா பிரகாஷ், "ஆமாம் வனிதா, சூப்பர்...!" என்றார். அதைக் கேட்ட சித்தார்த்துக்கு, அப்போது சந்தியாவின் நினைவுதான் வந்தது. ஒரு நாள் அவன் அம்மா சமைத்த மீன் குழம்பைக் கொண்டு போய் அவளிடம் கொடுக்க... அதை முகர்ந்து பார்த்து விட்டு,

"இது என்ன, மீன் குழம்பு வாசமே வரலை...? புளியைக் கரைச்சு அதுல நாலு கரண்டி மிளகாத் தூளைப் போட்டுட்டா... அது பேர் மீன் குழம்பா...?" என்று சந்தியா சாப்பாட்டைக் குறை சொல்ல... சித்தார்த்துக்குக் கோபம் வந்து விட்டது.

"உனக்கு வேண்டாம்னா சாப்பிடாதே... எங்க அம்மா செஞ்சதை குறை சொன்னா எனக்குப் பிடிக்காது...!" என்று சித்தார்த் அவள் கையில் இருந்த பாத்திரத்தைப் பிடுங்க...

"சரி, சரி. இனிமே குறை சொல்லலை. இன்னும் நல்லா சமைக்கலாமேன்னு சொன்னேன்!" என்றவள், மீன் குழம்பை ஊற்றிச் சாப்பாட்டை ஒரு கட்டு கட்டி னாள். அதை இப்போது நினைத்த சித்தார்த்துக்குச் சிரிப்பு வர... அவன் அதை அடக்கியபடி சாப்பிட்டு எழுந்தான்.



சித்தார்த் வீட்டில் சந்தியாவைப் பற்றித் தன் பெற்றோரிடம் சொன்னது இல்லை. அவர்களுக்கும் அதைப் பற்றிக் கேட்க எல்லாம் நேரம் இல்லை. அவர்கள் பணம், அந்தஸ்து, அதைத்தான் பெரிதும் மதிப்பார்கள். அதனால்தான் சந்தியாவை அவன் வீட்டுக்கு அழைத் ததே இல்லை. அவனுக்கு சந்தியாவைத் தன் பெற்றோர் உதாசீனப்படுத்தினால் தாங்க முடியாது.

சந்தியாவும் கல்லூரி விட்டால் ஹாஸ்டல் என்று தான் இருப்பாள். எப்போதாவது ஒரு முறை அனுவுடன் ஷாப்பிங் செல்வாள். சித்தார்த்துக்கு அடுத்து அனுதான் சந்தியாவிற்கு நெருங்கிய தோழி. அனு குட்டையாகச் சற்று கொழுக் மொழுக் என்று சிவந்த நிறத்தில் இருப்பாள். கலகலப்பான சுபாவம் கொண்டவள். எல்லோரிடமும் நன்றாகப் பழகுவாள். சந்தியாவும், அனுவும் சேர்ந்தால்... அந்த இடமே சிரிப்புச் சத்தத்தில் அதிரும்.

சந்தியா ஊருக்குச் செல்ல வேண்டும் என்றால்... அவளின் அப்பா வந்து அழைத்துக் கொண்டு செல்வார். அதே போல்... அவரேதான் திரும்ப வந்து விட்டு விட்டும் செல்வார்.

இப்படியே அந்த வருடம் முடிந்து, அடுத்த வருட வகுப்புகள் ஆரம்பித்தன. சந்தியா, விடுமுறை முடிந்து கல்லூரிக்கு வந்தவள், சித்தார்த்திடம்,

"உனக்கு இந்த அட்ரஸ் தெரியுமா...?" என்று ஒரு மென்பொருள் நிறுவனத்தின் பெயரைக் காட்டிக் கேட்டாள்.

சித்தார்த், "நந்தனத்தில் இருக்கு...!" என்றதும்,

"அதுக்கு இங்கே இருந்து எந்த பஸ் போகும்?" என்று எல்லா விவரமும் கேட்டுத் தெரிந்து கொண்டாள். சித்தார்த்தும் அவளுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருப்பார்கள் என்று நினைத்தான்.

அவர்களுக்கு எப்போதும் செவ்வாய் அன்று காலை, முதல் இரண்டு வகுப்புகள் இருக்காது. அப்போது ஏதாவது வேறு வேலை செய்வார்கள். அந்த நாட்களில் எல்லாம் சந்தியா லேட்டாகத்தான் கல்லூரிக்கு வருவாள். அப்படி வருபவள் முகம் வாடி இருக்கும். சித்தார்த் அவளிடம் அதைப்பற்றி விசாரித்தும், அவள், அவனிடம் ஒழுங்காகப் பதில் சொல்லவில்லை.

'செவ்வாய்க் கிழமையானால் சந்தியா எங்கோ சென்று விட்டு வருகிறாள். அப்படி வருபவள், சாதாரணமாக இருந்தாலும் பரவாயில்லை. அன்று முழுவதும் ஒரே சோகம்தான். இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்!' என்று நினைத்த சித்தார்த், அந்த வாரம் அவனும், சந்தியா அன்று தன்னிடம் கேட்ட விலாசத்துக்குச் சென்றான்.

சந்தியா நந்தனத்தில் இருந்த அந்த மென்பொருள் நிறுவனத்தின் எதிரில் இருக்கும் கடையில், தலையில் துப்பட்டாவைப் போட்டுக் கொண்டு, ஏதோ சாமான் வாங்குவது போல் நின்று கொண்டிருந்தாள்.

சித்தார்த், சந்தியாவைப் பார்த்த போது... அவள் அந்த மென்பொருள் நிறுவனத்தின் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'இவ என்னத்தை இப்படிப் பார்க்கிறாள்?' என்று நினைத்த சித்தார்த், அவள் பின்னே சென்று,



"சந்தியா...." என்று அழைக்க, சந்தியா திடுக்கிட்டுத் திரும்பினாள்.

சித்தார்த்தைப் பார்த்ததும் சந்தியா நிம்மதிப் பெருமூச்சு விட... சித்தார்த், அவள் கலங்கிய கண்களைப் பார்த்து அதிர்ந்தான்.

"யாரை சந்தியா பார்க்கிறே...?" என்று சித்தார்த் கேட்க... சந்தியா தன் கையை நீட்டி எதிரில் காட்டினாள். அவள் காட்டிய திசையில் நிறையப் பேர் வந்து கொண்டும், போய்க் கொண்டும் இருந்தனர். 'இவள் யாரைச் சொல்கிறாள்?' என்பது போல் சித்தார்த் பார்க்க...

"அந்த ஐவரி கலர் ஷர்ட்...!" என்றாள் சந்தியா.

சந்தியா காட்டிய திசையில் ஐவரி கலர் ஷர்ட் அணிந்து ஒருவன் சென்று கொண்டிருந்தான். சித்தார்த், 'ஐயோ! முகத்தைப் பார்க்கலையே!' என்று நினைத்த போது... அவன் சொன்னது அங்கே சென்று கொண்டிருந்தவனுக்குக் கேட்டது போல்... நின்று பின்னே திரும்பி யாருடனோ பேசினான்.

ஐவரி கலர் முழுக்கை சட்டையும், காபி ப்ரௌன் நிற பேண்ட்டும் அணிந்து, அலையலையான கேசத்தைப் படிய வாரி, நெற்றியில் சின்னத் திருநீற்றுக் கீற்றுடன், ரொம்ப வெள்ளையாக இல்லாமல்... மாநிறத்துக்குச் சற்றுக் கூடுதலான நிறத்தில்... களையான முகத்துடன்,

பார்க்க நன்றாக இருந்தான். அவனோடு பேசியவன் ஏதோ சொல்ல... அவன் அதற்குப் பல் வரிசை தெரியச் சிரிக்க... இப்போது இன்னும் அழகாகத் தெரிந்தான்.

சித்தார்த்துக்கு அவனைப் பார்க்கும்போது... அந்நியன் ஒருவனைப் பார்ப்பது போலவே இல்லை. அவன் அலுவலகத்தின் உள்ளே சென்றதும், சித்தார்த்தின் பார்வை சந்தியாவை நோக்கித் திரும்பியது. அவள் முகமும் மலர்ந்திருந்தது.

"யாரு சந்தியா அவங்க...?"

"என்னோட கதிர் மாமா...!" என்ற சந்தியாவின் குரலில் துள்ளல் இருந்தது.

"உன்னோட மாமான்னா, நேர்ல போய்ப் பேச வேண்டியது தானே...! எதுக்கு மறைஞ்சு நின்னு பார்க்கிறே...?" என்று கேட்டதும், சந்தியாவின் முகம் மாற... அவள் அங்கிருந்து சென்றாள்.

அவளுடன் நடந்த சித்தார்த், "வா... என் பைக்கி லேயே போவோம்...!" என்றதும்,

"இல்ல... எங்க வீட்ல தெரிஞ்சா திட்டுவாங்க. நீ போ, நான் ஆட்டோவிலே வர்றேன்...!" என்றாள்.

அவளைப் பார்த்து முறைத்த சித்தார்த், "நீ இப்படி ரோட்ல நின்னு உங்க மாமாவை சைட் அடிக்கிறது மட்டும் தெரிஞ்சா... ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?" என்றான்.



"அது, அவங்கதான் என் மாமாவை நான் கட்டிக் கணும்னு சொன்னாங்க...!" என்றாள் சாதாரணமாக.

சித்தார்த் அவளை ஆச்சரியமாகப் பார்த்தவன், "அப்ப உனக்கு உரிமையான உங்க மாமாவை, ஏன் மறைஞ்சு நின்னு பார்க்கிறே...? நேர்ல பார்த்துப் பேச வேண்டியதுதானே..." என்றதும்,

மீண்டும் சந்தியாவின் கண்கள் கலங்க, "அது என்னோட பேசாது...!" என்றவள், அங்கே வந்த ஆட்டோவில் ஏறிக் கல்லூரிக்குச் சென்றாள். சித்தார்த் ஒன்றும் புரியாமல் குழம்பிப் போய் அங்கேயே நின்றான்.

## 4

கதிரைப் பார்த்து விட்டுக் கல்லூரிக்கு வந்த சந்தியா, பாடத்தில் கவனமாக இருக்க, சித்தார்த்தும் அப்போதைக்கு அவளிடம் எதுவும் கேட்கவில்லை. அவனுக்குச் சந்தியா, கதிரை காதலிக்கிறாள் என்று புரிந்தது. 'ஏதோ குடும் பத்துக்குள் பிரச்சினை, அவளே சொல்லட்டும்!' என்று நினைத்தான்.

இப்படியே சிறிது நாட்கள் சென்றது. சந்தியா வாரம் ஒரு நாள் சென்று கதிரைப் பார்த்து விட்டு வருவது மட்டும் தொடர்ந்தது. சித்தார்த், அதைக் கண்டும் காணாமல் இருந்தான்.

ஒரு வார நாளில் கல்லூரி விடுமுறை என்பதால், நண்பர்கள் அனைவரும் சேர்ந்து தி.நகரைச் சுற்றி விட்டு, ஒரு உயர்தர உணவகத்திற்கு மதியம் சாப்பிடச் சென்றனர்.

உணவருந்தி விட்டு வெளியே வரும்போது, கதிர் அவனுடன் பணிபுரிபவர்களுடன் பேசிக் கொண்டே உள்ளே வருவதைப் பார்த்த சந்தியா, அருகில் இருந்த அனுவிடம்,

"நீங்க எல்லாம் போங்க... எனக்குத் தெரிஞ்சவங்க இங்கே இருக்காங்க... நான் அவங்களோட பேசிட்டு வரேன்...!" என்றவள், திரும்பி ஹோட்டலின் உள்ளே சென்றாள்.

அனு மட்டும் தனியே வருவதைப் பார்த்த சித்தார்த், அவளிடம், "சந்தியா எங்கே?" என்று கேட்க,

"அவளுக்குத் தெரிஞ்சவங்க வந்திருக்காங்களாம். பேசிட்டு வரேன்... நீங்க போங்கன்னு சொன்னா...!" என்றாள்.

"சரி, நீங்க எல்லாம் போங்க. நான் அவளோடே வரேன்...!" என்ற சித்தார்த்தும் சந்தியாவைத் தேடி ஹோட்டலின் உள்ளே சென்றான்.

சந்தியா அங்கே ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தாள். மதிய நேரம் என்பதால், ஹோட்டல் மிகவும் கூட்டமாக இருந்தது. உட்கார இடம் இல்லை. சந்தியாவின் பார்வை செல்லும் திசையில் பார்த்த சித்தார்த், அங்கே கதிர் அமர்ந்திருப்பதைப் பார்த்து, 'ஓ...! அவங்க மாமாவைப் பார்க்கத்தான் இங்கே வந்தாளா...?' என்று நினைத்தவன், அவளுக்காக வெளியே சென்று காத்திருந்தான்.



ஒரு மணி நேரம் சென்று கதிர் அவன் நண்பர்களுடன் வெளியே வர, சந்தியாவும் அவன் பின்னே வெளியே வந்தாள். சித்தார்த், கதிரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகம் கடினமாக இருந்தது.

அவன் அருகில் இருந்தவன், "நீங்க சரியாகவே சாப்பிடலை கதிர்...!" என்றதற்கு,

"பசியில்லை...!" என்று சொல்லிக் கொண்டே கதிர், சித்தார்த்தைக் கடந்து சென்றான்.

கதிர் சென்றதும் சித்தார்த், சந்தியாவின் முகம் பார்க்க... அவள் கண்கள் கலங்கி இருந்தது.

"உங்க மாமா உன்னைப் பார்க்கலையா...?"

"பார்த்தாங்க... ஆனா, பேசலை...!"

"ஏன்...?"

ரொம்ப சின்னக் கேள்வி. ஆனால், சந்தியாவால் தான் பதில் சொல்ல முடியவில்லை. அதனால் அவள் மௌனமாக நடக்க,. சித்தார்த் அவளுடன் இணைந்து நடந்தான்.

"நீ உங்க கதிர் மாமாவை லவ் பண்றியா...?" என்று சித்தார்த் கேட்டதும், சந்தியா ஆமாம் என்பது போல் தலை அசைத்தாள்.

"அப்போ வேற என்ன பிரச்சினை? உங்க மாமா உன்னை லவ் பண்ணலையா...?" என்ற சித்தார்த்

மேற்கொண்டு நகராமல் அதே இடத்தில் நிற்க, சந்தியாவும் வேறு வழியில்லாமல் நின்றாள்.

ஆனால், பதில் சொல்லவில்லை.

சந்தியா இப்படி அமைதியாக இருப்பது சித்தார்த் துக்கு எரிச்சலாக இருந்தது. அதோடு அவனுக்காகச் சந்தியா கால் கடுக்க ஒரு மணி நேரம் நின்றும், கதிர் அவளைக் கண்டு கொள்ளாமல் சென்றது வேறு கோபம். அதைச் சந்தியாவிடம் காட்டினான்.

"இந்தக் காலத்திலே போய் மாமா பையன்... அத்தைப் பொண்ணு... காதல், கல்யாணம்... இதெல்லாம் கேட்கவே சுத்த மடத்தனமா இல்லை... நீ டாக்டருக்குப் படிக்கிற சந்தியா...!" என்று சித்தார்த் சொல்லிக் கொண் டிருந்த போதே...

அவனைக் கை காட்டித் தடுத்த சந்தியா, "நான் சென்னை மெடிக்கல் காலேஜ்ல சேர்ந்ததே கதிர் மாமா இங்கே இருக்காங்கன்னுதான். மத்தப்படி நீ நினைக்கிற மாதிரி பெரிய டாக்டர் ஆகணும்னு இல்லை...!" என்றாள் அழுத்தமாக.

அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்த சித்தார்த், 'காலேஜ்ல முதல் மார்க் வாங்கும் பெண்ணா இவள்?' என்றே நினைத்தான். சந்தியா வேறு காரணத்திற்காக மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த போதும், படிப்பில் என்றும் பின் தங்கியது இல்லை. அவளுக்கு இயல்பாகவே நன்றாகப் படிப்பு வந்தது.



"நீ தான் மாமா மாமான்னு உருகுற...! அவர் உன்னைக் கண்டுக்காம போய்ட்டார்...!" என்றான் சித்தார்த் குறையாத எரிச்சலுடன்.

"அது எப்பவுமே அப்படித்தான்...! மனசுல இருக்கிறதை வெளியே காட்டிக்காது. ஆனா... எனக்குத் தெரியும், அதுக்கு நான்னா ரொம்பப் பிடிக்கும். இப்பவும் என்னோட பேசாம போனதுக்கு அது மனசுக்குள்ளே வருத்தப்படத்தான் செய்யும். அது அப்படி வருத்தப்படக் கூடாதுன்னுதான், நான் இத்தனை நாள் அதை மறைஞ்சு நின்னு பார்த்தேன்...!" என்றாள்.

சந்தியா சொன்னதைக் கேட்ட சித்தார்த்துக்கு மேலும் கதிரைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் எழுந்தது.

அவன் சந்தியாவிடம், "நீ இப்படி உருகுற அளவுக்கு உன் மாமா கிட்டே என்ன இருக்கு சொல்லு...? நானும் தெரிஞ்சிக்கிறேன்...!" என்றான் ஆர்வமாக.

சந்தியாவுக்குக் கதிரைப் பற்றிப் பேசுவது என்றால் சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுவது போல், அதுவும் விருப்பப்பட்டு சித்தார்த் அவனாகவே வலிய வந்து மாட்டும்போது அவள் விடுவாளா...? சந்தியாவின் சிறு வயதில் ஆரம்பித்து, இரண்டு வருடம் முன்பு திருவிழா வின் போது கதிர் அவளுக்காகச் சண்டை போட்டது வரை சினிமாப் படம் போல் சுவாரசியமாகச் சந்தியா சொல்லச் சொல்ல...

சித்தார்த், முகத்தில் புன்னகையுடன் அவள் சொல் வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே ரயிலில் ஏறி, சந்தியா இறங்க வேண்டிய இடத்துக்கு வந்திருந்தனர்.

சந்தியா, "சரி. நான் கிளம்புறேன். நாளைக்குக் காலேஜ்ல பார்ப்போம்...!" என்று சொல்லி விட்டுச் செல்ல...

சித்தார்த், அவளைத் தடுத்து, "என்ன பாதியிலேயே விட்டுட்டுப் போற...? முழுசாச் சொல்லு. உன் கிட்டே பக்கம் பக்கமா காதல் வசனம் பேசாம... தன்னோட கண்ணியமான நடத்தையினாலேயே உன்னை அவர் பின்னாடி சுத்த வச்சிருக்கார் பாரு... ஐ லைக் யுவர் கதிர் மாமா...!" என்று மனதிலிருந்து சொன்னவன்,

"அப்படி இருந்த ரெண்டு பேரும்... இப்ப ஏன் பேசாம இருக்கீங்க...?" என்ற சித்தார்த், சந்தியாவின் முகம் பார்க்க...

தன் மாமாவைப் பற்றிப் பேசும் வரை முழு நிலவாக ஒளி வீசியவளின் முகம் இப்போது கறுக்க, "அதைப் பத்தி மட்டும் கேட்காதே சித்து, ப்ளீஸ்...!" என்றவள், வேகமாக அங்கிருந்து சென்றாள்.

சித்தார்த் அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தவன், 'சம்திங் சீரியஸ்!' என்று தனக்குள் சொல்லியபடி அங்கிருந்து சென்றான்.

மறுநாள் கல்லூரியில் முதல் வருட மாணவர்களுக்கு அனாடமி வகுப்பு நடந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு மாணவி பயத்தில் மயங்கி விழ, மற்ற மாணவிகள் அவளைத் தூக்கிக் கொண்டு வந்து வெளியே அமர வைத்தனர்.



அந்த இடமே பரபரப்பாக இருந்தது.

அப்போது அங்கே வந்த சித்தார்த்தும் சந்தியாவும், 'என்ன ஆனது?' என்று விசாரிக்க, மற்ற மாணவர்கள் நடந்ததைச் சொல்ல, சந்தியா விழுந்து, விழுந்து சிரித்தாள்.

சித்தார்த் அவளை அதட்டி விட்டு, அந்தப் பெண்ணுக்குத் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிய வைத்தான். அந்தப் பெண்ணிடம், "உன் பெயர் என்ன...?" என்று கேட்க,

"ஸ்ரீஜா..." என்றாள்.

அவளைப் பார்த்ததும் அவள் மலையாளி என்று நன்றாகத் தெரிந்தது. அளவான உயரத்தில், பாலில் சந்தனம் கலந்த நிறத்தில், இடை வரை இருந்த கூந்தலை எண்ணெய் தேய்த்துக் குளித்து மயில் தோகை போல் விரித்து விட்டு, வட்ட முகத்தில் பெரிய கருவிழிகளில் மை தீட்டி, நெற்றியில் சந்தனம் இட்டுப் பார்க்கக் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாள்.

சந்தியா அவளிடம், "எலும்புக்கூடு பார்த்து பயப்படுறியே...! இன்னும் நமக்கு ஹியூமன் அனாடமி இருக்குமே...! அப்ப என்ன பண்ணுவ...?" என்று கேட்டதும்,

ஸ்ரீஜாவின் முகம் கலவரமடைய, "எனக்கு இதெல்லாம் பார்த்தாப் பயமா இருக்கு. உங்களுக்கு இல்லையா...?" என்று ஸ்ரீஜா, சந்தியாவைப் பார்த்து அப்பாவியாகக் கேட்க...

"நான் வந்த அன்னைக்கே இவனைப் பார்த் துட்டேன்... இவனும் அந்த எலும்புக் கூடு மாதிரி தான் இருந்தான். அதனால பயமா இல்லை...!" சந்தியா, சித்தார்த்தைக் காட்டி விளையாட்டாகச் சொல்ல...

அதை உண்மை என்று நம்பிய ஸ்ரீஜா, அப்போது தான் அருகில் நின்ற சித்தார்த்தைத் தன் பெரிய கரு விழிகளை உருட்டி நன்றாகப் பார்த்தாள். உயரமாக அதற்கேற்ற உடல் எடையுடன் இருந்தவனைப் பார்த் தவள், சந்தியாவிடம், "இவங்க ஒண்ணும் அவ்வளவு ஒல்லியா இல்லையே...!" என்று சந்தேகமாக இழுக்க...

"அது இப்போ...! போன வருஷம் ரொம்ப ஒல்லியாத் தான் இருந்தான். என்னோட ஹாஸ்டல் சாப்பாடு சாப் பிட்டுத் தேறிட்டான்!" என்ற சந்தியா,

"அப்ப இவன் நல்லா இருக்கான்னு சொல்றியா...?" என்று ஸ்ரீஜாவை வம்பிழுக்க, அதைப் புரிந்து கொள்ளாத ஸ்ரீஜா, ஆமாம் என்றாள்.

சந்தியா வந்த சிரிப்பை அடக்க, அவளைப் பார்த்து முறைத்த சித்தார்த், ஸ்ரீஜாவிடம் திரும்பி, "டாக்டருக்குப் படிக்க வந்திட்டு அனாடமி க்ளாஸ்க்குப் பயப்படலாமா...? நாம மனித உடலைப் பத்தி நல்லா தெரிஞ்சுக்கிட்டாத் தான் ட்ரீட்மெண்ட் பண்ண முடியும். நாம இதையெல்லாம் பார்த்துப் படிக்கிறது, மத்தவங்க உயிரைக் காப்பாத்தன்னு நினைச்சுப் பாரு... உனக்குப் பயமா இருக்காது...!" என்றவன், தொடர்ந்து,



"மருத்துவர்களைத்தான் கடவுளுக்குச் சமமா நினைப்பாங்க... அப்படி உயர்ந்த இடத்தைத் தரும் படிப்பு கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும். நாமதான் தைரியமா இருக்கணும்..." என்று சித்தார்த், ஸ்ரீஜாவுக்குப் புரியும்படி விளக்க... அதைக் கேட்டு அவள் முகம் தெளிவானது.

ஸ்ரீஜா கேரளாவைச் சேர்ந்தவள் என்றாலும், பிறந்து வளர்ந்தது சென்னையில்தான். ஸ்ரீஜா இயல் பிலேயே பயந்த சுபாவம் கொண்டவள். அவள் பெற் றோருக்குத் தங்கள் பெண் மருத்துவர் ஆக வேண்டும் என்று ஆசை. அதனால், மருத்துவக் கல்லூரியில் சேர்ந் திருந்தாள்.

சித்தார்த்தும், சந்தியாவும் அவளுக்குத் தைரியம் சொல்லி விட்டு, அவர்கள் வகுப்பிற்குச் சென்றனர். அதன் பிறகு வந்த அனாடமி வகுப்புகளைச் சித்தார்த் சொன்ன வார்த்தைகளை மனதிற்குள் நினைத்துப் பார்த்துத் தைரிய மாக எதிர் கொண்டாள் ஸ்ரீஜா.

மறு வாரம் வழக்கம் போல் சந்தியா, கதிரைப் பார்க்கச் சென்றவள், ரொம்ப நேரமாக அவனுக்காகக் காத்திருந்தும் அவன் வரவில்லை என்று அவன் அலுவலக வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரொம்ப நேரம் ஆகியும் அவன் வரவில்லை என்றதும், 'ஒருவேளை அவனுக்கு உடம்பு சரி யில்லையோ...? அல்லது வீட்டில் வேறு யாருக்கும் உடம்பு சரியில்லையோ?' என்று கவலைப்பட்டவள், கல்லூரிக்குச் செல்லத் திரும்ப... அங்கே கதிர் எதிரில் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கதிரைப் பார்த்ததும் சந்தியாவின் முகம் மலர... "மாமா...!" என்று அழைத்தபடி கதிரின் அருகே செல்ல... அவளை ஒரு அந்நியப் பார்வை பார்த்த கதிர்,

"எல்லாத்தையும் நாசம் பண்ணிட்டு... இப்ப எதுக்குடி என் பின்னாடி சுத்துற...? நீ வாரா வாரம் இங்கே நிக்கிறது எனக்குத் தெரியும். எந்தத் தைரியத்துல இங்கே வர்றே...?" என்று கதிர் கடுமையான குரலில் கேட்க,

சந்தியாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்தது. "சாரி மாமா...!" என்றாள் மெதுவாக.

"நீ மன்னிக்கிற மாதிரி தப்பைப் பண்ணலை சந்தியா. நான் நிம்மதியா இருக்கணும்னு நினைச் சேன்னா... இனி என்னைப் பார்க்க இங்கே வராதே...! உங்க அப்பா, அம்மா உன்னை நம்பி இங்கே படிக்க அனுப்பியிருக்காங்க. அவங்க நம்பிக்கையையாவது காப்பாத்து...!" என்ற கதிர் அங்கிருந்து வேகமாகச் செல்ல... சந்தியா, அவன் செல்வதையே கண்களில் நீருடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் மாமா கதிரைப் பார்த்து விட்டு வரும் சந்தியா, எப்போதும் சோகமாகத்தான் இருப்பாள். ஆனால், இந்த முறை முன்னேற்றமாக அழுது வடிந்தாள். கண்களில் கண்ணீர் நிறைவதும், அதைத் தன் துப்பட்டாவில் துடைப்பதுமாக இருந்தாள். காரணம் புரியாமல் அனு, சித்தார்த்தைப் பார்க்க... அவன் முகம் கடுமையாக இருந்தது.



'இவளுக்கு இதே வேலையாப் போச்சு...! இந்த முறை என்ன ஆச்சுன்னு தெரியலை...!' என்று மனதிற்குள் திட்டியவன், சந்தியாவிடம் ஒன்றும் கேட்கவில்லை. அமைதியாக இருந்தான்.

மாலை வரை சித்தார்த் எதுவும் கேட்கவில்லை என்றதும், சந்தியா அவளாகவே சித்தார்த்திடம், "டேய்... இங்கே ஒருத்தி அழுதிட்டு இருக்கேன்... நீ என்னன்னு கேட்க மாட்டியா...?" என்று மிரட்டுவது போல் பேச...

"உன்னோட தெய்வீகக் காதலன் இன்னைக்கு வரலையா...?" சித்தார்த் நக்கலடித்தான்.

சந்தியா அவனைப் பார்த்து முறைத்து விட்டு அங்கிருந்து செல்ல, சித்தார்த் அவளைத் தடுத்து, அருகில் இருந்த பெஞ்சில் அமர வைத்துத் தானும் அவள் அருகில் அமர்ந்து கொண்டவன்,

"நீ அழுதிட்டே இருந்தா கடுப்பா இருக்காதா...? சொல்லு, என்ன ஆச்சு...?" என்றான்.

"எங்க மாமா இன்னைக்கு என்னை அங்கே பார்த்துட்டாங்க... இனிமே அங்கே என்னை வரக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க...!" என்று சந்தியா சோகமாகச் சொல்ல...

"ஹப்பா...! இனிமே வாரம் ஒரு நாள் உன்னோட அழுது வடியிற முகத்தைப் பார்க்க வேண்டாம்...!" சித்தார்த் போலியாகச் சந்தோஷப்பட... சந்தியா அவனை முறைத் தாள்.

"சரி. உங்க மாமா உன்னை அவரோட ஆபீஸ்க்குத் தானே வர வேண்டாம்னு சொன்னார். வீட்டுக்கு வரக் கூடாதுன்னு சொல்லலையே...! நீ அவரோட வீட்டுக்குப் போ...!" என்று சித்தார்த் யோசனை சொல்ல... சந்தியா வின் முகம் வாடியது.

"வீட்டுக்குப் போனா அத்தை, மாமா எல்லாம் இருப்பாங்க சித்து. அத்தை என்னைத் திட்டுவாங்களே...!" என்று சந்தியா பயப்பட...

சந்தியாவின் முகத்தைத் தீவிரமாக ஆராய்ந்த சித்தார்த், "சந்தியா! நீ என்ன தப்புப் பண்ணினே...? எதுக்கு இப்படிப் பயப்படுறே...? உன்னோட நடவடிக்கை யைப் பார்த்தா... நீதான் ஏதோ தப்புப் பண்ணியிருக்க மாதிரி இருக்கு. நான் இத்தனை நாள் கதிர் மேலதான் தப்புன்னு நினைச்சிட்டு இருந்தேன்...!" என்றதும், சந்தியா தலை குனிந்தாள்.

"சொல்லு சந்தியா? இப்படி அமைதியா இருந்தா என்ன அர்த்தம்...?" என்ற சித்தார்த், அவளின் முகம் பார்க்க...

"கதிர் மாமாவோட தங்கச்சி காவேரி லவ் பண்ணாங்க... அவங்க வீட்டுக்குத் தெரியாம ஓடிப் போய்க் கல்யாணம் பண்ணிக்கப் பார்த்தாங்க... நான் அவங்களுக்கு உதவி செஞ்சேன்!" என்று சந்தியா சொன்னதைக் கேட்ட சித்தார்த்துக்கே அதிர்ச்சியாக இருந்தது.



சந்தியா சொன்னதில் இருந்து, அவன் கதிரைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான். கதிர் நேர்த்தியான வாழ்க்கை முறையைப் பின்பற்றுபவன். மற்றவர்கள் தன்னைப் பார்த்துத் தேவையில்லாமல் எதுவும் பேசிவிடக் கூடாது என்று கவனமாக இருப்பவன்.

இந்த இள வயதிலேயே... தனக்கென்று ஒரு மரியாதையை ஏற்படுத்திக் கொண்டவன். அப்படிப் பட்டவனுக்குத் தன் தங்கை ஓடிப் போய்த் திருமணம் செய்து கொண்டால்... அது எவ்வளவு பெரிய தலைக் குனிவாக இருந்திருக்கும்.

அதுவும் கிராமத்தில் இப்படி நடந்தால், கேட்கவே வேண்டாம். அவனுடைய குடும்பத்தைப் பற்றி எல்லோரும் கண்டிப்பாகத் தவறாகப் பேசி இருப்பார்கள். அதுவும் கதிரின் அப்பா அந்தக் கிராமத்தில் முக்கிய மனிதராக இருப்பவர். அவருக்கு எவ்வளவு அவமானமாக இருந் திருக்கும் என்று நகரத்தில் வளர்ந்த சித்தார்த்துக்கே புரிந்தது. அது ஏன் சந்தியாவுக்குப் புரியவில்லை? என்று நினைத்தான்.

சித்தார்த் நினைப்பது சந்தியாவுக்குப் புரியாமல் இல்லை. ஆனால், அவள் அப்படி ஏன் செய்தாள் என்று எந்த விளக்கமும் சொல்லவில்லை. அமைதி யாக இருந்தாள்.

அவளின் அமைதியைப் பார்த்து சித்தார்த்துக்கு ஆத்திரம் வர, "உன்னை அப்படியே இழுத்து நாலு அறை விட்டா என்னன்னு தோணுது...!" என்றான் கோபமாக.

"ஏற்கெனவே எல்லார் கிட்டேயும் அடி வாங்கிட் டேன். நீ ஒருத்தன்தான் பாக்கி...!" என்று சந்தியா சாதாரண மாகச் சொல்ல...

"கதிரும் உன்னை அடிச்சாரா....?" என்று சித்தார்த் வருத்தத்துடன் கேட்க...

சந்தியா, "இல்லை... என்னை அடிச்சிருந்தா கூடப் பரவாயில்லை... அன்னையிலிருந்து என்னோட பேசவே இல்லை!" என்றாள் விரக்தியாக.

சித்தார்த்துக்கு சந்தியாவைப் பார்க்கவும் பாவமாக இருந்தது. 'அவளும் அப்போது சின்னப் பெண்தானே...! அவளுக்கு அவ்வளவு விபரம் இருந்திருக்காது. காவேரி பண்ணதுக்குப் பாவம் மாட்டினது சந்தியாதான். கண்டிப்பா எல்லோரும் சேர்ந்து நல்லா மொத்தியிருப்பாங்க. நாமும் அவளை நோகடிக்க வேண்டாம்!' என்று அவன் மனம் தன் தோழியின் சார்பாகவும் வாதிட்டது.

"சரி, விடு சந்தியா...! நீ செஞ்சது தப்புதான். இல்லைன்னு சொல்லலை... ஆனா நீ உதவி பண்ண லைன்னா மட்டும் காவேரி ஓடிப் போகாமலா இருந்திருக்கப் போறாங்க...!" என்று சித்தார்த் அவளைச் சமாதானம் செய்வதற்காகச் சொன்னது. உண்மையிலேயே ஆறுத லாக இருந்தது.

கதிருக்குச் சந்தியா எப்போதிலிருந்து அவனைப் பார்க்க வருகிறாள் என்று தெரியாது. அந்த ஐந்து மாடிக் கட்டிடம் முழுவதுமே அவர்கள் அலுவலகம்தான். அவன்



இருக்கை இருப்பது ஐந்தாம் தளத்தில். ஒரு நாள் தன் இருக்கைக்கு வந்து அமர்ந்தவனை, அவன் நண்பன் வேலையில் ஏதோ சந்தேகம் என்று அழைக்க...

கதிர் அவன் நண்பனின் இருக்கைக்குச் சென்றவன், அங்கிருந்த ஜன்னல் வழியாகச் சந்தியா யாரோ ஒருவனோடு நின்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

தூரத்தில் இருந்து பார்த்தால் அவனால் எதையும் சரியாகக் கவனிக்க முடியவில்லை. ஆனால், சந்தியாவின் கண்கள் அடிக்கடி தன் அலுவலகத்தைப் பார்ப்பதை வைத்து, அவளுக்கு இதுதான் அலுவலகம் என்று தெரிந்து தான் வந்திருக்கிறாள் என்று புரிந்து கொண்டான்.

கதிர் இறங்கிச் சென்று பார்த்த போது, சந்தியா சென்று விட்டாள். ஆனால், அவளோடு பேசிக் கொண்டி ருந்தவன் மட்டும் நின்று கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அவனும் வண்டியில் சென்று விட்டான்.

அன்றிலிருந்து தினமுமே அலுவலகம் வந்ததும், அவன் நண்பனோடு பேசுவது போல் ஜன்னல் அருகே நின்று, சந்தியா இருக்கிறாளா என்று பார்ப்பான். கண்ணாடி இருந்ததால் சந்தியா அங்கிருந்து பார்த் தாலும் கதிர் நிற்பது தெரியாது.

சந்தியாவைத் திரும்ப அவன் மறு வாரம்தான் பார்க்க முடிந்தது. தான் அலுவலகம் வரும்போது... அவள் எதிரில் இருக்கும் கடையில் நின்று பார்க்கிறாள் என்று புரிந்து கொண்டான்.

சிறிது நாட்கள் சென்று, அவளை ஒரு நாள் ஓட்டலில் சந்தித்தான். அன்றும் அப்படித்தான் ரொம்ப நேரம் நின்று கொண்டிருந்தாள். நண்பர்களோடு வந்திருந்தால் எதுவும் பேச முடியவில்லை.

அவர்களோடு சிறிது தூரம் சென்றவன், அவர்களிடம் பொய்யாக ஏதோ காரணம் சொல்லி விட்டுச் சந்தியாவிடம், 'இனி என்னைப் பார்க்க வராதே!' என்று சொல்லத் தேடி வந்தான்.

அவன் வந்தபோது, அன்று தன் அலுவலகத்தின் அருகே பார்த்தவனிடம், சந்தியா, 'நான் என் மாமாவுக்காகத்தான் இந்த ஊருக்கு வந்தேன்!' என்று சொன்னது காதில் விழுந்தது. அவன் சந்தியாவுடன் மருத்துவக் கல்லூரியில் படிப்பவனாக இருக்கும் என்று புரிந்து கொண்டவன், சித்தார்த் இருந்ததால் எதுவும் பேசாமல் திரும்பிச் சென்றான்.

ஆனால், அவள் மீண்டும், மீண்டும் அலுவலகத்தின் முன்பு வந்து நிற்பது கோபத்தைத் தூண்ட... இன்று அவளைத் திட்டி விட்டான். அவள் அழுது கொண்டே செல்வதைப் பார்த்தவனுக்கு வேதனையாக இருந்தது.

இரவு தூங்க முடியாமல் தவித்தவன், 'இவளுக்கு இதெல்லாம் தேவையா...? எப்படி ராணி மாதிரி இருந்தா...?' என்று நினைத்தவனுடைய நினைவு கடந்த காலத்திற்குச் சென்றது.

கதிர் எம்.சி.ஏ. முடித்து விட்டுச் சென்னைக்கு வேலை தேடி வந்து நண்பர்களோடு தங்கியிருந்தான்.



அவனுக்கு ஒரு கம்பெனியில் வேலையும் கிடைத்து விட்டது. நாற்பதாயிரம் சம்பளம். வருடத்திற்கு ஒரு முறை அவன் திறமையைப் பார்த்துச் சம்பளத்தை உயர்த்தித் தருவதாகச் சொல்லியிருந்தார்கள்.

கதிருக்கு வேலை கிடைத்த விஷயம் கேட்டு, அவன் தந்தை மிகவும் சந்தோஷப்பட்டார். கிராமத்தில் விவசாயம் செய்யும் அவர் கையில் மொத்தமாக அவ்வளவு பணம் நிற்பது எல்லாம் சாத்தியமில்லை.

விவசாயத்தில் இருந்து வரும் பணத்தைத் திரும்ப... அதில் செலவு செய்யும்படிதான் இருக்கும். நிறையக் கடைகள், வீடுகள் கட்டி வாடகைக்கு விடுவதால்... ஓரளவு அவர்கள் வசதியாக இருந்தனர்.

அதுவும் எப்போதும் பணமாகக் கையில் வைத்திருக்க மாட்டார்கள். கதிரின் அப்பாவும், சித்தப்பாவும் சேர்ந்து, அவர்கள் இருவரின் பேரில் ஏதாவது சொத்து வாங்கி விடுவார்கள்.

கதிருக்கு வேலை கிடைத்த சந்தோஷத்தோடு, சந்தியா பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநிலத்தில் மூன்றாவது இடம் பிடித்த சந்தோஷமும் சேர்ந்து கொள்ள... அந்த வருடத் திருவிழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

சந்தியா, அந்தத் திருவிழாவின் போதுதான் முதல் முறையாகப் புடவை அணிந்து இருந்தாள். குங்கும நிறத்தில் தங்க நிற பார்டர் வைத்த புடவையில்... கை நிறையத் தங்க வளையல்கள் சலசலக்க... கழுத்தில்

நிறைய நகை போட்டு... தலை நிறையப் பூ வைத்துப் பார்க்கக் கல்யாணப் பெண் போல இருந்தாள்.

கோயிலில் வைத்து சந்தியாவைப் பார்த்த கதிருக்குப் பார்வையை வேறு பக்கம் திருப்பவே முடியவில்லை. 'தனக்கும், சந்தியாவுக்கும் இன்றைக்கே கல்யாணம் செய்து வைத்திடக் கூடாதா?' என்று கூட நினைத்தான்.

கதிரைப் பார்த்த சந்தியாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. 'இது நம்ம மாமாவா... இதுக்கு இந்த மாதிரியெல்லாம் பார்க்கக் கூடத் தெரியுமா?' என்றுதான் முதலில் நினைத்தாள். 'எதுக்கு இப்படி ஆளை முழுங்குற மாதிரிப் பார்க்குது?' என்று நினைத்தவள், அவளும் அடிக்கடி ஆசையாகக் கதிரைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். இருவரின் விழிகளும் காதல் நாடகத்தை நடத்திக் கொண்டிருந்த நேரம்...

கதிரின் அருகில் நின்று கொண்டிருந்த அவனின் அப்பா, அவனிடம் ஏதோ சொல்ல, கதிரின் கவனமெல்லாம் சந்தியாவின் மீது இருந்ததால்... அவன் அவர் சொல்வதைக் கவனிக்கவில்லை. சந்தியாதான் ஜாடையில் அவன் அப்பாவைக் காட்டி ஏதோ சொன்னாள். பிறகுதான் கதிர் திரும்பித் தன் தந்தையைக் கவனித்தான். அவரும் கதிரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

கதிருக்கு ஒரு மாதிரி ஆகி விட்டது. தன் அப்பா கவனிக்கும்படி தான் நடந்து கொண்டோமே என்று நினைத்து வருத்தப்பட்டவன், வேகமாக அங்கிருந்து சென்றான். அதன் பிறகு சந்தியாவின் பக்கம் திரும்பவில்லை.



கதிரைக் கவனித்த சந்தியா, 'ஹப்பா...! இப்பத்தான் நம்ம மாமா போல இருக்கு... திடீர்னு ஒரு நிமிஷம் சந்தேகமே வந்துடுச்சு... இது வேற யாருமோன்னு...!' என்று மனதிற்குள் கதிரைக் கிண்டலடித்தாள்.

சந்தியாவை எப்போதுமே எல்லோரும் தலையில் வைத்துக் கொண்டாடுவார்கள். அதுவும் அவள் மாநிலத்தில் மூன்றாவதாக வந்ததும், இன்னும் எல்லோரும் அதிகம் தாங்கினர். துரைக்குப் பெருமை பிடிபடவில்லை. எல்லோரும், 'உன் மகளை மேற்கொண்டு என்ன படிக்க வைக்கப் போறே?' என்று கேட்டதற்கு, 'அவ தான் முடிவு செய்யணும்!' என்று சொல்லி விட்டார்.

தெரிந்தவர் ஒருவர் கதிரின் தந்தை பெரியசாமியிடமும், "உங்களோட மருமக மாநிலத்திலேயே மூணாவது ரேங்க் எடுத்துப் பாஸ் பண்ணியிருக்காமில்ல... நம்ம கதிருக்குத் தானே அந்தப் பிள்ளையைச் செய்யப் போறீங்க...!" என்று கேட்ட போது,

பெரியசாமி திரும்பித் தன் மகனைப் பார்த்தவர், அவன் முகத்தில் தெரிந்த ஆர்வத்தைக் கண்டு, "ஆமாம்... கதிருக்கு என்னோட தங்கச்சி மகளைத்தான் செய்யப் போறோம்...!" என்றார் உறுதியாக.

அதைக் கேட்ட கதிரின் முகம் புன்னகையில் மலர்ந்தது. தன் மகனின் சந்தோஷத்தைப் பார்த்தும் பார்க்காத மாதிரி இருந்தார் பெரியசாமி.

மகனின் மனதைப் புரிந்து கொண்டவர், மகளின் மனதைப் புரிந்து கொள்ளத் தவறினார். அதனால் நடந்த விபரீதம்...?

கல்லூரியில் இருந்து ஹாஸ்டல் திரும்பிய சந்தியாவிற்கு, இன்று கதிர் 'தன்னை இனி பார்க்க வராதே!' என்று சொன்னதே காதில் கேட்டுக் கொண்டிருந்தது. தன் படுக்கையில் சென்று விழுந்தவள், இந்த நிலைக்குக் காரணமான நாளை நினைத்துப் பார்த்தாள்.

திருவிழா முடிந்து கதிர் வேலையில் சென்று சேர்ந்து விட்டான். கதிர் சந்தியாவை மருத்துவக் கல்லூரியில்தான் சேரச் சொன்னான். அவள்தான் தன்னால் வெளி ஊருக்கு எல்லாம் சென்று படிக்க முடியாது என்றாள்.

அதே போல் அவள் அம்மாவும், அப்பத்தாவும் அவளை விட்டுப் பிரிந்திருக்க விரும்பவில்லை. துரைக்குத் தன் மகள் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று ஆசை இருந்தது. அவள் பள்ளி ஆசிரியர்களும் அதையே விரும்பினர்.

சந்தியாதான் உறுதியாக எந்த முடிவையும் எடுக்காமல் குழம்பிக் கொண்டிருந்தாள். எதற்கும் இருக்கட்டும் என்று மருத்துவம் படிக்க விண்ணப்பித்தும் இருந்தாள்.

சந்தியாவும், சித்ராவும் விருதுநகரில் இருந்த கல்லூரியில் பி.எஸ்சி., பட்டப்படிப்புக்கு விண்ணப்பம் கொடுக்கச் சென்றனர். கல்லூரியில் சென்று விண்ணப்பம் கொடுத்து விட்டுத் திரும்பும் வழியில், அந்த ஊரில் இருந்த ஐஸ்கிரீம் பார்லரைப் பார்த்தனர்.



வட்ட மேஜைகள் வைத்து, சுற்றி நாற்காலிகள் போடப்பட்டு, வண்ணமயமாக இருந்த கடையைப் பார்த்ததும், இருவருக்கும் அங்கே சென்று ஐஸ்கிரீம் சாப்பிட ஆசையாக இருந்தது. அவர்கள் ஊரில் இது போல் ஐஸ்கிரீம் சாப்பிட என்று தனியாகக் கடைகள் இல்லை.

இருவரும் சென்று ஒரு மேஜையில் அமர்ந்ததும், சர்வர் வந்து மெனு கார்ட் கொடுக்க... இருவரும் எதைச் சாப்பிடுவது என்று தீவிரமாக ஆராய்ந்து, முதலில் ஆளுக்கு ஒரு கார்னெட்டோ வரவழைத்துச் சாப்பிட்டனர்.

அவர்களுக்கு ஐஸ்கிரீம் சாப்பிட்ட மாதிரியே இல்லை. திரும்ப ஆளுக்கு ஒரு சாக்லெட் ஐஸ்கிரீம் வித் நட்ஸ் வாங்கி உள்ளே தள்ளிவிட்டு... அதிலும் திருப்தி அடையாமல், கடைசியில் ஆளுக்கு ஒரு குச்சி ஐஸ் வாங்கிச் சாப்பிட்டனர். நிறையப் புது விதமான ஐஸ்கிரீம்கள் வந்திருந்தாலும், குச்சி ஐஸில் இருக்கும் சுவை வேறெதிலும் இருப்பதில்லை.

இதுவரை இருவரும் இப்படித் தனியாக வெளி ஊருக்கு எல்லாம் வந்தது இல்லை. முதல் முறையாக இப்படித் தனியே வந்ததும், சந்தோஷத்தில் என்ன செய்வது என்று தெரியாமல்... தாங்கள் முதல் முறை தனியாக வெளியே வந்ததை, மூன்று ரவுண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

சந்தியா ஐஸ்கிரீம் சாப்பிட்டு முடிக்கும் நேரத்தில் தான், சற்று ஒதுக்குப் புறமாக இருந்த இருக்கையில் யாரோ ஒரு வாலிபனோடு அமர்ந்திருந்த காவேரியைப் பார்த்தாள்.

அந்த வாலிபன் உயரமாக, சற்றுக் கருமை நிறத்தில், களையான முகத்தோடு, பார்க்க லட்சணமாக இருந்தான். இருவரும் அருகருகே அமர்ந்து ஏதோ பேசிச் சிரித்தபடி ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

சந்தியா உருகி வழியும் ஐஸ்கிரீமைக் கையில் வைத்துக் கொண்டு, வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த சித்ரா, 'இவ ஏன் இப்படி அரண்டு போய் இருக்கா...?' என்று நினைத்தபடி தன் பார்வையைச் சுழற்றியவள், காவேரியை ஒரு பைய னுடன் பார்த்து விட்டு, அவளும் அதிர்ச்சி அடைந்தாள்.

"ஏய் புள்ள! அது கதிர் அண்ணாவோட தங்கச்சி தானே...! இங்கே என்ன பண்றாங்க? கூட இருக்கிற ஆளு யாரு...?" என்று சித்ரா கேள்விகளாக அடுக்க...

"நானும் உன்னோட தானே இருக்கேன். எனக்கு மட்டும் எப்படித் தெரியும்...?" என்று எரிந்து விழுந்த சந்தியா, எழுந்து சென்று தன் கையில் இருந்த குச்சியைக் குப்பைத் தொட்டியில் எறிந்தவள், தன் கையைக் கழுவிக் கொண்டு நேராகக் காவேரியின் எதிரே சென்று நின்றாள்.

சந்தியாவை அந்த இடத்தில் எதிர்பார்த்திராத காவேரி, அதிர்ச்சியில் எழுந்தே நின்று விட்டாள்.



சந்தியாவோடு வேறு யாரும் வந்திருக்கிறார்களா என்று பயந்து கொண்டே பார்த்தவள், அவள் சித்ராவோடு வந்திருப்பதைப் பார்த்து நிம்மதி அடைந்தாள்.

காவேரி அருகில் அமர்ந்திருந்த சுபாஷ், எந்த அதிர்ச்சியையும் முகத்தில் காட்டவில்லை. சந்தியாவைப் பார்த்து முகம் மலரப் புன்னகைத்தவன், "ஹாய் சந்தியா... எப்படி இருக்கே...?" என்று ரொம்ப நாள் பழகியவன் போல் விசாரிக்க... சந்தியா இன்னும் அவனைப் பார்த்து முறைத்துக் கொண்டுதான் இருந்தாள்.

"என்ன இப்படியே நிற்கப் போறியா...? உட்காரு...!" என்றவன், சித்ராவைப் பார்த்துத் தலை அசைத்து அங்கே அழைக்க, சித்ராவும் வந்து அவர்கள் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தவள், சந்தியாவையும் பிடித்து உட்கார வைத்து,

"அப்படி என்னதான் சொல்றாங்கன்னு கேட்போம்!" என்று அவள் காதில் முணுமுணுத்தாள்.

சந்தியாவின் முகம் கலவரமாக இருந்தது. 'அத்தை பெண்ணோட பேசவே நூறு தடவை யோசிக்கும் கதிர் மாமாவுக்கு இப்படி ஒரு தங்கச்சியா...?

'நான் சித்ராவோட ஐஸ்கிரீம் பார்லர் வந்தது தெரிஞ்சாலே வீட்ல ஒதை விழும். ஆனா... இந்தக் காவேரி மதினி பாரு... எவ்வளவு தைரியமா ஒரு ஆம்பளை யோட ஐஸ்கிரீம் சாப்பிட வந்திருக்கு!' என்று மனதிற்குள் புலம்பியபடி சித்ராவின் அருகே அமர்ந்தாள்.

'எப்படி ஆரம்பிப்பது...?' என்ற எண்ணத்தில் எல்லோரும் சிறிது நேரம் மௌனமாக இருக்க,

"இவங்க யாரு...?" என்று சுபாஷைக் காட்டிச் சந்தியா, காவேரியிடம் கேட்க...

"என்னோட பிரெண்ட்...!" என்று காவேரி தயங்கிக் கொண்டே சொல்ல...

"நீ லேடீஸ் காலேஜ்ல தானே படிக்கிறே...?" என்று சந்தியா அடுத்த கட்ட விசாரணையை ஆரம்பிக்க... காவேரி திருதிருவென்று முழித்தாள்.

"ஹா... ஹா...!" என்று சத்தமாகச் சிரித்த சுபாஷ், "இதுக்குத்தான் பொய் சொல்லக் கூடாது. பாரு, மாட்டிக்கிட்டே...!" என்றவன், "அதுவும் ஒரு ஸ்டேட் டாப்பர் கிட்டே பொய் சொல்லி ஏமாத்த முடியுமா...?" என்றான் சந்தியாவைப் பார்த்துக் கொண்டே...

சந்தியா, 'நீ என்ன ஐஸ் வச்சாலும்... நான் உருக மாட்டேன்!' என்று காட்டுவது போல் இறுக்கமாகவே அமர்ந்திருந்தாள்.

சந்தியாவைப் பார்த்து, "நீ நினைக்கிறது உண்மை தான் சந்தியா. நாங்க ரெண்டு பேரும், ரெண்டு வருஷமா காதலிக்கிறோம். நான் காவேரி படிக்கிற காலேஜ்லதான் லெக்சரரா இருக்கேன்!" என்றான் சுபாஷ் புன்னகையுடன்.

சுபாஷ் சொன்னதைக் கேட்ட சந்தியாவுக்கு, அவன் மேல் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. அவன் கண்களில் களவாணித்தனம் இல்லை. அவன் முதலில் இருந்தே



அவளைப் பார்த்துப் பயப்படவில்லை. தைரியமாகத்தான் பேசினான். அதோடு கல்லூரியில் வேறு வேலை பார்க்கிறான். காவேரி ஒன்றும் ஊர், பேர் தெரியாதவனை விரும்பவில்லை என்பது அவளுக்குச் சற்று நிம்மதியாகவும் இருந்தது.

'நன்றாகப் படித்திருக்கிறான், நல்ல வேலையில் இருக்கிறான். அதனால் அவனுக்குக் கண்டிப்பாகக் காவேரியைத் திருமணம் செய்ய வீட்டில் ஒத்துக் கொள்வார்கள்!' என்று நினைத்தவளின் முகம் கலவரத்தில் இருந்து அமைதிக்கு மாற... அதைக் கவனித்துக் கொண்டிருந்த காவேரியின் முகம் மலர்ந்தது.

"நான் உங்க வீட்ல வந்து காவேரியைப் பெண் கேட்கிறேன்!" என்று சுபாஷ் உறுதியாகச் சொல்ல, சந்தியாவும் சரி என்று தலை ஆட்டினாள்.

அப்போது அவளுக்குத் தெரியவில்லை... சுபாஷும், காவேரியும் சேர்ந்து, தங்கள் காதலுக்கு அவளைப் பிரச்சினையில் மாட்டி விடப் போவதை.

"ஐஸ்கிரீம் சாப்பிடுறியா சந்தியா...?" என்று சுபாஷ் சர்வரை அழைக்க,

"வேண்டாம். ஏற்கெனவே மூன்று சாப்பிட்டோம்... நாங்க கிளம்புறோம்!" என்ற சந்தியா எழுந்து கொள்ள...

சுபாஷுக்கு அவள் சொன்னதைக் கேட்டுச் சிரிப்பு வந்தது. அதை அடக்கிக் கொண்டு, சரி என்பதாகத் தலை அசைத்தான். காவேரியும் அவர்களோடு கிளம்பினாள்.

மூவரும் சென்று பஸ்சில் ஏற... சந்தியா அமைதியாக இருந்தாள். அவளுக்கு இதெல்லாம் சரியாக வருமா என்று குழப்பமாக இருந்தது. அவளையே பார்த்துக் கொண்டிருந்த காவேரிக்கு, மனதில் பயம் எழுந்தது.

எங்கே சந்தியா தன்னை வீட்டில் காட்டிக் கொடுத்து விடுவாளோ என்று பயந்தவள், "சந்தியா! வீட்ல நானே பார்த்துச் சொல்லிக்கிறேன். அதனால நீ யார் கிட்டேயும்... கதிர் அண்ணன் கிட்டே கூடச் சொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணு...!" என்று தன் கையை நீட்டிக் கேட்க...

சந்தியாவும் கதிரைக் காதலிக்கிறாள். அதே போல் தானே காவேரியும் என்று நினைத்தாள். அதனால் சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்தாள்.

மறு வாரம் ஊருக்கு வந்த கதிரின் முகத்தைப் பார்க்கவே சந்தியாவிற்குத் தயக்கமாக இருந்தது. எப்போதும் அவன் வீட்டுக்கு வந்தால், அவன் செல்லும் வரை அவனையே ஏதோ வேலை இருப்பது போல் சுற்றுபவள், இந்த முறை 'வாங்க!' என்று கேட்டதோடு சரி. அதன் பின் ஆளையே காணோம். அவளது அறையின் உள்ளேயே இருந்து கொண்டாள்.

'என்ன ஆச்சு? உடம்பு எதுவும் சரியில்லையா!' என்று நினைத்த கதிருக்கு, அவளைப் பார்க்காமல் செல்ல மனம் இல்லை. அதனால் அவன் அத்தையிடம், "சந்தியா என்ன அத்தை முடிவு எடுத்திருக்கா...? மெடிக்கல் காலேஜ் சேரப் போறாளா, இல்லையா...?" என்று அவரிடம் விசாரிக்க...



"இன்னும் ஒண்ணும் சரியாச் சொல்ல மாட்டேங்கிறா கதிர். நான் கூட முதல்ல அவளை அவ்வளவு தூரம் அனுப்பணுமான்னு நினைச்சேன். ஆனா... உங்க மாமாவுக்கு அவ டாக்டருக்குப் படிக்கணும்னு ஆசை இருக்கு. இந்தக் கழுதை இன்னும் சோறை நறுக்குன்னு அள்ளித் திங்காது. பாதி நேரம் நான்தான் ஊட்டி விடுறேன். இந்த லட்சணத்துல, இது மத்தவங்களுக்கு வைத்தியம் பார்க்கப் போகுதா...?" என்று வேதவல்லி, சந்தியாவைத் திட்டுவது போல் பேசினாலும், அவர் குரலில் மகளைக் குறித்து நிறையப் பெருமை இருந்தது.

"என்ன முடிவு எடுத்திருக்கான்னு நீயே அவ கிட்டே கேளு...!" என்றவர், "சந்தியா, உன்னை கதிர் மாமா கூப்பிடுறாங்க பாரு...!" என்றபடி எழுந்து அடுப்படிக்குச் செல்ல...

இவர்கள் பேசுவதை எல்லாம் உள் அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த சந்தியா, தயக்கத்துடன் வெளியே வந்தவள், நேராகச் சென்று கதிரின் எதிரே அமர்ந்தாள்.

"என்ன ஆச்சு சந்தியா...? ரொம்ப அமைதியா இருக்க...! உடம்பு சரியில்லையா...?"

"இல்ல மாமா. நல்லாத்தான் இருக்கேன்...!" என்றாள் சந்தியா, அவன் முகத்தைப் பார்க்காமல்.

"சந்தியா! முதல்ல நிமிர்ந்து என்னைப் பாரு. இப்ப என்ன உனக்குப் பிரச்சினை...? உனக்குச் சென்னைக்குப் போய் மெடிக்கல் படிக்க விருப்பம் இல்லையா...? உனக்கு இஷ்டம் இல்லைன்னா வேண்டாம். ஆனா... மெடிக்கல் படிக்க சீட் கிடைக்கிறது ஒண்ணும் சாதாரண விஷயம் இல்லை. நானும் அங்கேதான் சந்தியா இருக்கேன்... நான் உன்னைப் பார்த்துக்க மாட்டேனா...?" என்று பெற்றவர்களை விட்டு விட்டு அவள் வேறு ஊர் செல்லத் தயங்குகிறாள் என்று நினைத்துக் கதிர் பேச...

சந்தியா அமைதியாக இருப்பதற்குக் காரணம், காவேரியைப் பற்றி வீட்டில் சொல்லாமல் இருக்கும் குற்ற உணர்ச்சி என்று அவனுக்குத் தெரியவில்லை. சந்தியாவுக்குக் காவேரியின் காதலைக் கதிரிடம் சொல்லவும் தைரியம் இல்லை. சொல்லாமல் மறைப் பதும் கஷ்டமாக இருந்தது.

அன்று ஒரு நாள் யாரோ தோழியுடன் ரொம்ப நேரம் செல்லில் பேசியதற்கே எப்படித் திட்டினான். இவனிடம் அவள் காதலிப்பதைச் சொன்னால், என்ன ஆகுமோ என்று பயந்தாள். ஒரு வேளை சந்தியா, கதிரிடம் சொல்லியிருந்தால்... பிரச்சினை இவ்வளவு பெரியதாக ஆகியிருக்காதோ!

## 5

சந்தியா, கதிரை நேரில் சென்று பார்க்க முடியாமல் போனதால் மனதிற்குள் மருகிக் கொண்டுதான் இருந்தாள். ஆனால்,



அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உற்சாகமாக இருப்பது போல் நடித்தாள்.

சித்தார்த், அதைக் கண்டும் காணாமல் இருந்தான். அவனால் வேறு என்ன செய்ய முடியும்? தவறு செய்தது சந்தியா... கதிராக மனமிறங்கினால்தான் உண்டு என்று நினைத்தான்.

ஒரு நாள் கல்லூரியில் சந்தியா எப்போதும் போல் அனுவுடன் சேர்ந்து சித்தார்த்தை வம்பிழுத்துக் கொண்டு இருந்தாள். மதிய உணவுக்குச் செல்லும்போது வழி யில்... மீன் குழம்பு வாசம் ஆளைத் தூக்க...

"ஹா... ஹா...! யாரோ மீன் குழம்பு கொண்டு வந்திருக்காங்க...!" என்ற சந்தியா அந்த வாசத்தை மோப்பம் பிடித்துக் கொண்டே செல்ல... அவள் கூடவே அனுவும், சித்தார்த்தும் சென்றனர்.

ஒரு மரத்தடியில் இருந்த பெஞ்சில் அமர்ந்து ஸ்ரீஜா, அவள் தோழிகளுடன் சாப்பிட்டுக் கொண்டி ருந்தாள். அவள்தான் மீன் குழம்பும், மீன் வருவலும் கொண்டு வந்திருந்தாள்.

சந்தியா, ஸ்ரீஜாவின் அருகே சென்று அமர்ந்தவள், "ஹாய் ஸ்ரீஜா, எப்படி இருக்கே...?" என்று பாசமாக விசாரிக்க...

"நல்லா இருக்கேன் சந்தியா அக்கா. நீங்க எப்படி இருக்கீங்க?" என்று பதிலுக்கு ஸ்ரீஜாவும் விசாரிக்க...

"நல்லா இருக்கேன். இப்ப அனாடமி கிளாஸ்க்கு எல்லாம் பயப்படாமப் போறியா...? இல்லை, இன்னும் பயம்தானா...?" என்றாள் சந்தியா கிண்டலாக.

அவள் சொன்னதைக் கேட்டதும், ஸ்ரீஜா வெட்கப் பட்டுக் கொண்டே சித்தார்த்தைப் பார்க்க... அவனும் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"உன்னோட முடி கருப்பா... பட்டுப் போல இருக்கு...!" என்று சொல்லியபடி சந்தியா, ஸ்ரீஜாவின் எண்ணெய் தேய்த்துக் குளித்து விரித்து விட்டிருந்த நீளக் கூந்தலில் கை விட்டு அளைந்தவள்,

"நீ டெய்லி மீன் சாப்பிடுவியா...? அதனாலதான் உன்னோட முகம் பளபளன்னு ஜொலிக்குதா...?" என்று அடுத்த அஸ்திரத்தை எய்தாள்.

"நான் டெய்லி மீன் சாப்பிடுவேன். ஆனா... அதனாலதான் முகம் ஷைனிங்கா இருக்கான்னு தெரி யாது!" என்றாள் ஸ்ரீஜா அப்பாவியாக.

"அப்படின்னா, உனக்கு மீன் ரொம்பப் பிடிக்குமா...? எனக்கும் பிடிக்கும்...!" என்று சந்தியா சொன்னதும், ஸ்ரீஜா வேகமாக,

"உங்களுக்கும் மீன் பிடிக்குமாக்கா...? நான் இன்னைக்கு மீன் குழம்புதான் கொண்டு வந்திருக்கேன்... நீங்க சாப்பிடணும்!" என்றாள் பாசமாக.

சித்தார்த்தும், அனுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சந்தியா சுத்தி வளைத்துப் பேசியது இதற்குத் தானே என்று அவர்களுக்கா புரியாது.



சந்தியா இப்படித்தான் சித்தார்த்திடமும் அல்பத் தனமாக அடித்துப் பிடித்து... அவன் கொண்டு வரும் மதிய உணவைப் பிடுங்கிச் சாப்பிடுவாள். ஆனால், ஆள் என்னவோ தேய்ந்து கொண்டே தான் சென்றாள். காலையும், இரவும் ஹாஸ்டலில் ஒழுங்காகச் சாப்பிட மாட்டாள்.

"இல்ல... இல்லை. வேண்டாம், நீ சாப்பிடு...!" என்று சந்தியா மறுப்பது போல் நடிக்க...

"ப்ளீஸ்... கா...! நீங்க பிடிக்கும்னு சொல்லிட்டுச் சாப்பிடலைன்னா, எனக்கு மனசு கஷ்டப்படும். எனக்காகச் சாப்பிடுங்க...!" என்றவள், தன் டிபன் பாக்ஸை மூடிச் சந்தியாவிடம் கொடுக்க...

சந்தியா, "அப்ப உனக்கு...?" என்று கேட்க,

"நான் ஃப்ரெண்ட்ஸ் கூட ஷேர் பண்ணிப்பேன். பத்தலைன்னா கேன்டீன்ல வாங்கிக்கிறேன்...!" என்றாள் ஸ்ரீஜா அடக்கமாக.

"சமத்து. இனி ரெண்டு பாக்ஸ் கொண்டு வா. வீணா கேன்டீன்ல சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்காதே...!" என்று அவளைக் கொஞ்சிய சந்தியா, வந்த வேலை முடிந்த சந்தோஷத்தில் சித்தார்த்தையும், அனுவையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றவள்,

செல்லும் வழியில், "ஆளும் அழகு, குணமும் நல்லா இருக்கு சித்து. பேசாம நீ ஸ்ரீஜாவை லவ் பண ணேன்...!" என்று யோசனை சொல்ல,

"டேய்! இவ தூண்டில் போட்டு மீன் பிடிக்கிற மாதிரி... உன்னை இரையாப் போட்டு ஸ்ரீஜாவைப் பிடிக்கப் பார்க்கிறாடா. இவளை நம்பாதே... மீன் குழம்புக்காக... உன்னை லவ் பண்ணச் சொல்றாடா...!" என்று அனு, சந்தியாவைப் போட்டுக் கொடுக்க...

"எதுக்கு எனக்கு வேறு ஆளு... என்னோட செல்லம் நீ இருக்கும் போது...!" என்ற சித்தார்த், அனுவின் தோளில் கை போட்டவன், "குண்டூஸ்... நீ ஒரு பதினைஞ்சு கிலோ மட்டும் வெயிட் குறைஞ்சிட்டேன்னு வை... நான் உன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன் டா...!" என்றான் கண் சிமிட்டி.

"பதினைஞ்சு கிலோ... நானு... அதுக்கு வேற ஆளைப் பாரு. எனக்கு அப்படி உன்னைக் கல்யாணம் பண்ணனும்னு அவசியம் இல்லை. எனக்குன்னு ஒரு அமுல் பேபி வரும்!" என்ற அனு, சித்தார்த்தைத் தள்ளி விட்டுச் செல்ல... அவன் கீழே விழுவது போல் நடித்தான்.

"போடி...! உனக்கு வாழ்க்கை தரலாம்னு பார்த்தா வேண்டாம்னு சொல்ற...!" என்றவன், அருகில் நின்ற சந்தியாவைப் பார்த்து,

"நீ ஒருத்தி லவ் பண்ணிக் கஷ்டப்படுறது பத்தாதா...? உனக்கு ஏன் என் மேல இவ்வளவு காண்டு."

"சீரியஸா... எனக்கு ஸ்ரீஜாவைப் பார்க்கும் போது அப்படி எதுவும் தோணலை. அவ கள்ளமில்லாத முகத்தைப் பார்க்கும் போது, ஒரு சிஸ்டர் ஃபீலிங்தான்



வருது. நீ பாட்டுக்கு அவ மனசுல ஏதாவது ஆசையை விதைச்சிடாதே...!" என்றான் சித்தார்த் கடுமையாக.

சந்தியா, சரி என்று தலை ஆட்டி விட்டு நடக்க... சந்தியாவிடம் மீன் வறுவலைக் கொடுக்க வந்த ஸ்ரீஜா, அவர்கள் பேசியதைக் கேட்டு விட்டுப் புன்னகையுடன் திரும்பிச் சென்றாள். ஸ்ரீஜாவுக்கு, ஏற்கெனவே சித்தார்த்தை ரொம்பப் பிடிக்கும். இப்போது இன்னும் பிடித்தது, அண்ணனாக.

கல்லூரியில் படித்தால் காதலிக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. கல்லூரியில் நண்பர்களோடு இருக்கும் நாட்களே அழகானது.

இரண்டு மாதங்கள் கழித்து சந்தியா ஒரு ஞாயிறு அன்று தாம்பரம் தாண்டி இருக்கும் கதிரின் வீட்டிற்குச் சென்றாள்.

நகரத்தை விட்டுத் தள்ளி இருந்ததால், அங்கே செல்வதற்கே இரண்டு மணி நேரம் ஆனது. அவள் சென்றபோது மதிய நேரம்.

திட்டினாலும் பரவாயில்லை என்று வந்தவள், வாயில் மணி அடித்து விட்டு வெளியே காத்திருக்க... கதவைத் திறந்த கதிர், சத்தியமாகச் சந்தியாவை எதிர் பார்க்கவில்லை.

திட்டி விடுவானோ என்று சந்தியா பயத்தில் பார்க்க... திடீரென்று பார்த்ததும் என்ன பேசுவது என்று தெரியாமல் கதிர் அப்படியே நிற்க... உள்ளே இருந்து அவன் அம்மா

லக்ஷ்மி, யாரென்று கேட்டபடி வந்தவர், சந்தியாவைப் பார்த்து விட்டு முகம் மாறினார்.

தன் அம்மா பேச ஆரம்பிக்கும் முன், சந்தியா உள்ளே வர வழி விட்ட கதிர், அவள் உள்ளே வந்ததும், கதவைச் சாத்தி விட்டு அறைக்குள் சென்று விட்டான்.

"நீ எதுக்கு இப்ப இங்கே வந்தே...? இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா...? அதுதான் நீயும், இந்த வீட்ல பொறந்த எருமையும் சேர்ந்து எங்க மானத்தை வாங்கிட்டீங்களே.... அன்னைக்கு உன்னோட அம்மாவும், அப்பாவும் உனக்கு வரிஞ்சு கட்டிட்டுப் பேசினாங்க...

"தப்பு என் மேலேதான்... என் பொண்ணு மேல தப்பை வச்சிக்கிட்டு உன்னைப் பேச நான் யாரு...?" என்ற லக்ஷ்மிக்கு அழுகையில் குரல் அடைக்க...

அவரிடம் வேகமாக வந்த சந்தியா, "உங்களுக்கு என்னைப் பேச உரிமை இருக்கு அத்தை. அப்பாவும், அம்மாவும் பேசினதுக்கு நான் உங்க கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிறேன்!" என்றாள் கண் கலங்க.

"யாருக்கு வேணும் உன் மன்னிப்பு... சும்மாவே உன்னோட அம்மாவும், அப்பாவும் உன்னைத் தலையில தூக்கி வச்சிக்கிட்டு ஆடுவாங்க. நீ இப்ப டாக்டருக்கு வேற படிக்கிறே... நீ எங்க வீட்டுக்கு வந்தது தெரிஞ்சா அவ்வளவுதான்...! இன்னும் பிரச்சினை ஆகும். நீ முதல்ல கிளம்பு...!" என்றார் கறாராக.

"அத்தை, பெரிய மாமாவை மட்டும் ஒரு தரம் பார்த்திட்டுப் போய்டுறேன்... ப்ளீஸ்...!" என்று சந்தியா கெஞ்ச...



"அவரு இப்படி ஆனதுக்குக் காரணமே காவேரியும், நீயும்தானே...! எப்படிக் கம்பீரமா இருந்த மனுஷன்... இன்னைக்கு அவரு இருக்கிற நிலைமையைப் பார்த்தா, நெஞ்சுல ரத்தம் வடியுது...!" என்றார் அழுகையுடன்.

அதுவரை உள்ளே இருந்த சந்தியாவின் ஆச்சியும், தாத்தாவும் வெளியே வந்தனர். சந்தியா அவர்களைப் பார்த்ததும் அருகில் செல்ல... பாட்டி அவளை ஆவலாகப் பார்க்க... தாத்தா முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்று சோபாவில் அமர்ந்தார்.

"நீங்களாவது அத்தை கிட்டே சொல்லுங்க ஆச்சி. நான் வேணும்னு பண்ணலை. நான் ஒரே ஒரு தடவை மாமாவைப் பார்த்திட்டுப் போறேன்...!" என்றாள் சந்தியா அழுகையுடன்.

அவர் என்ன சொல்லுவது என்று தெரியாமல் தவிப்புடன் நிற்க... மாமாவைப் பார்க்காமல் நான் போக மாட்டேன் என்பது போல் சந்தியா உறுதியாக நின்றாள்.

அறையில் படுத்திருந்த பெரியசாமி, "யாரு... வந்தி... ருக்கா... சந்...தி...யா...வா...?" என்று தட்டுத் தடுமாறிப் பேச... தன் மாமாவின் குரல் கேட்டுச் சந்தியா வேகமாக அந்த அறைக்குள் ஓடினாள்.

வெள்ளை வேட்டி சட்டையில் கம்பீரமாக ராஜ நடை நடந்த தன் மாமா... இன்று ஒரு கையும், காலும் வராமல்... கட்டிலில் ஒடுங்கிப் போய்ப் படுத்திருப்பதைப் பார்த்து, அவளுக்கு நெஞ்சை அடைத்தது.

சந்தியா அவரின் அருகே அமர்ந்து, அவரின் கையைப் பிடித்துக் கொண்டு கதற... அதே அறையில் ஒரு ஓரத்தில் நெற்றியில் கை வைத்துத் தன் முகத்தை மறைத்துக் கொண்டு அமர்ந்திருந்த கதிரின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

சந்தியா அழுவதைப் பார்த்த பெரியசாமி, “அ... ழா...த... சந்..தியா... சரி..ரி..ரி... ஆகி..டும்...” என்று தன் மருமகளைத் தேற்ற,. சந்தியா அழுவதை நிறுத்தினாள். கதிர், தன் கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு எழுந்தவன், தன் அப்பாவைத் தூக்கிச் சாய்வாக உட்கார வைத்து விட்டு,

“அம்மா... அப்பாவுக்குச் சாப்பாடு கொண்டு வாங்க...!” என்றவன், மறந்தும் சந்தியாவின் பக்கம் திரும்பவில்லை. உணவு கொண்டு வந்த லக்ஷ்மி, சந்தியாவைப் பார்த்து முறைக்க, அவள் எழுந்து சென்று ஓரமாக நின்றாள். ல்க்ஷ்மி தட்டில் சாதம் போட்டுக் கொண்டு வந்தவர், அவரே சென்று தன் கணவருக்கு ஊட்டி விட்டார்.

பெரியசாமி சாப்பிட்டதும் அவருக்கு மருந்து மாத்திரை கொடுத்த கதிர், “அம்மா, சீக்கிரம் சாப்பிட்டுட்டு வாங்க... அப்பாவுக்குத் தேவையானது எல்லாம் வாங்கிட்டு வந்திடலாம்!” என்றவன், அந்த அறையில் இருந்து வெளியே செல்ல... அவனோடு லக்ஷ்மியும் சென்றார்.

சந்தியா,‘தன் மாமன் இருந்த கட்டிலிலேயே அவரின் எதிரில் அவர் கையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தாள்.



“நீ....யும் போ...ய்ச் சாப்...பிடு சந்தி...யா...!” என்று பெரியசாமி சொல்ல, சந்தியாவின் கண்கள் கண்ணீரால் நிரம்பியது.

பெரியசாமி மனதால் கூடப் பிறருக்குத் தீங்கு நினைக்காதவர். யார் உதவி என்று வந்தாலும், தன்னால் முடிந்த மட்டும் செய்து கொடுப்பார். வயதில் சிறியவர்கள் என்றாலும் அவர்களையும் மரியாதையாகத்தான் அழைத்துப் பேசுவார். எந்தவிதக் கெட்டப் பழக்கமும் இல்லாதவர். ‘அப்படிப்பட்டவருக்கு இப்படி ஏன் ஆக வேண்டும்?’ என்று சந்தியா மனதிற்குள் வருந்தியபடி இருந்தாள்.

சிறிது நேரம் சென்று உள்ளே வந்த கதிர், தன் அப்பாவைப் படுக்க வைத்து விட்டு வெளியே சென்றான். சந்தியா, உறங்கும் தன் மாமனின் முகத்தையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்க... அவள் தோளில் ஒரு கரம் விழுந்தது. சந்தியா திரும்பிப் பார்க்க... அங்கே அவள் ஆச்சி நின்று கொண்டிருந்தார்.

சந்தியா, அவரைப் பார்த்ததும் முகம் மலர, வெளியே வா என்று ஜாடை காட்டிய ஆச்சி வெளியே செல்ல... சந்தியாவும் எழுந்து அவர் பின்னே சென்றாள். வீடே அமைதியாக இருந்தது. சந்தியா, மற்றவர்கள் எங்கே என்பது போல் பார்க்க...

“உன் தாத்தா அந்த அறையிலே படுத்துத் தூங்கு றார்... உன் அத்தையும், கதிரும் வெளியே போய் இருக்காங்க...!” என்றார் ஆச்சி.

தன்னைச் சாப்பிடக் கூடச் சொல்லவில்லை என்று நினைத்த சந்தியா முகம் வாட... அவளையே பார்த்துக் கொண்டிருந்த அவளின் ஆச்சி, "கதிர் இன்னும் சாப்பிடலை... அவங்க திரும்பி வர்றதுக்குள்ளே உன்னைச் சாப்பிட வச்சு அனுப்பச் சொன்னான்!" என்றவர், சந்தியாவிற்கும், அவருக்கும் தட்டு வைத்துப் பரிமாற...

'ரொம்பத்தான் அக்கறை!' என்று கதிரை மனதிற்குள் திட்டியபடி சந்தியா சாப்பிட அமர்ந்தாள். சாப்பிட்டபடி சந்தியா அவளின் ஆச்சியிடம் பேச்சுக் கொடுக்க...

"என்னன்னு சொல்றது... எல்லாம் நேரம். எப்படி இருந்தவன் இப்படிப் படுக்கையில் இருக்கானே...! பாவம், கதிர்தான் கிடந்து பாடுபடறான். அவன் ஆபீஸ் இங்கே இருந்து ரொம்பத் தூரம். அவன் ஆபீஸ் பக்கத்தில் வீட்டு வாடகை ஜாஸ்தின்னு... இங்கே வீடு பார்த்திருக்கான். அதனால அவனுக்குத்தான் ரொம்ப அலைச்சல்.

"வீட்ல அவங்க அப்பாவையும் பார்த்துக்கிட்டு, வேலைக்கும் போயிட்டு வரான். அதோட மாசம் உன் மாமனோட வைத்தியத்துக்கு, பிசியோதெரபிக்கு, வீட்டு வாடகை... அப்புறம் நாங்க எல்லாம் சாப்பிடுற சாப்பாட்டுக்கு எல்லாம் அவன் சம்பளம்தான். பிள்ளை எப்படிச் சமாளிக்கிறானோ, தெரியலை!" என்றார் ஆச்சி கவலையாக.

"ஏன் ஆச்சி, ஊர்ல இருந்து கடை வாடகை, வீட்டு வாடகை எல்லாம் வருமே...!"



"இப்பவும் வருதுதான். ஆனா... இங்கே வர மாட்டேங்குதே...! உன் சின்ன அத்தையைப் பத்தி உனக்குத் தெரியும் இல்லை... ரொம்ப ஊதாரி. இப்ப அவ தன் புருஷனையும் கைக்குள்ள போட்டுக்கிட்டா... அவங்களே எல்லா வாடகையையும் வாங்குறாங்க... இங்கே ஒண்ணும் அனுப்புறது இல்ல... கேட்டா... விவசாயத்துல நட்டம் ஆகிடுச்சுன்னு சொல்லுதுங்க...!"

கதிர் ஒரு மணி நேரம் கழித்துத் தன் அம்மாவுடன் வீட்டுக்கு வந்தவன், அவரை உள்ளே சென்று படுக்கும் படி சொல்லி விட்டு, அவனே சென்று தனக்குத் தட்டில் பரிமாறிக் கொண்டு சாப்பிட அமர்ந்தான்.

டி.வி பார்த்துக் கொண்டே சாப்பிட்டவன், சாப்பிட்டதும் தலையணை எடுக்க அவன் தாத்தா, பாட்டி இருந்த அறைக்குள் செல்ல... அங்கே தரையில் பாய் விரித்துச் சந்தியா அவன் அப்பத்தாவைக் கட்டிக் கொண்டு தூங்குவதைப் பார்த்தான்.

'இவ இன்னும் போகலையா...? அம்மா பார்த்தாக் கத்தப் போறாங்க...!' என்று நினைத்தவன், அவளையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றான். சிறிது நேரம் சென்று வெளியே வந்தவன், அவனும் சோபாவில் படுத்து உறங்கினான்.

மாலை ஆனதும் தூங்கி எழுந்த லக்ஷ்மி, அவர் கணவரின் தேவைகளைக் கவனித்து விட்டு வெளியே வந்தவர், ஹாலில் அமர்ந்திருந்த சந்தியாவைப் பார்த்ததும் முகம் மாறினார்.

அதுவரை கதிரின் முகத்தைப் பார்த்துக் கொண் டிருந்த சந்தியா, அவள் அத்தையைப் பார்த்ததும் டி.வி. பார்ப்பது போல் நடித்தாள்.

லக்ஷ்மி முனகிக்கொண்டே சமையில் அறையில் வேலை பார்க்க... சிறிது நேரத்தில் கதிரும் தூக்கத்தில் இருந்து விழித்து எழுந்து அமர்ந்தான். சந்தியா அவனை ஓரக்கண்ணால் ஆராய்வதைப் பார்த்தவன், அங்கிருந்து எழுந்து, அவன் அப்பா இருந்த அறைக்குள் சென்றான்.

ஐந்து மணி ஆனதும், கதிர் அவன் அப்பாவுக்காக ஏற்பாடு செய்திருந்த பிசியோதெரபிஸ்ட் வந்து பெரியசாமிக்குத் தேவையான பயிற்சிகள் கொடுத்து விட்டு, அவரும் கதிரும் சேர்ந்து பெரியசாமியை இரு பக்கமும் பிடித்துக் கொண்டு, சிறிது தூரம் வீட்டிலேயே நடக்க வைத்தனர்.

சந்தியா அதை எல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு மணி நேரம் சென்று பிசியோ தெரபி செய்தவர் கிளம்பும்போது, கதிர் அவரிடம் ஐநூறு ரூபாயை எடுத்துக் கொடுக்க... அவர் அடுத்துச் செவ்வாய்க் கிழமை வருவதாகச் சொல்லிச் சென்றார்.

வாரம் மூன்று நாட்கள் பிசியோதெரபிஸ்ட் வருவதாகவும், மற்ற நாட்களில் கதிரே தன் தந்தைக்குப் பயிற்சி செய்வதையும் ஏற்கெனவே அவள் ஆச்சியின் மூலம் சந்தியா தெரிந்து கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்துச் சந்தியா எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு ஹாஸ்டலுக்குக் கிளம்ப... லக்ஷ்மி



முகத்தைத் திருப்பிக் கொள்ள, கதிர் கடைசி வரை அவளோடு பேசவே இல்லை.

சந்தியா பஸ் ஸ்டாண்ட் நோக்கி மெதுவாக நடந்தாள். அப்போது அவளை உரசிக்கொண்டு ஒரு பைக் வந்து நின்றது, சந்தியா திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க... அந்த வண்டியில் வந்தது கதிர்.

'கதிர் மாமா இப்போ எதுக்கு வந்திருக்காங்க?' என்பது போல் சந்தியா பார்க்க... கதிர், அவளைப் பார்த்து, "வண்டியில் ஏறு!" என்றான். சந்தியாவால் நம்பவே முடியவில்லை. அவள் மகிழ்ச்சியோடு வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

வீட்டில் தன்னைக் கண்டு கொள்ளாத கதிர், இப்போது அவனாகவே வந்து வண்டியில் ஏற்றிக் கொள்ளவும், சந்தியா சிறகில்லாமல் வானத்தில் பறந்தாள்.

'வீட்ல அத்தை இருந்ததுனாலதான் பேசலை போல...!' என்று அவளாகவே நினைத்துக் கொண்டாள்.

கதிரை வண்டியின் முன்புறக் கண்ணாடி வழியாகப் பார்த்துக் கொண்டு வந்தவள், சிறிது தூரம் சென்றதும், கதிரின் அருகில் நெருங்கி அமர, கதிருக்கு முதலில் ஒன்றும் தெரியவில்லை. சிறிது நேரத்தில் வித்தியாசத்தை உணர்ந்தவன்... முன்புறம் இருந்த கண்ணாடியில் சந்தியாவைப் பார்த்து முறைக்க... அவள், அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

கதிர் பல்லைக் கடித்துக் கொண்டு வண்டி ஓட்ட... சந்தியா இப்போது இன்னும் நெருங்கி அமர்ந்து, அவன்

இடையைச் சுற்றிக் கை போட... பொறுக்க முடியாத கதிர், வண்டியை ஓரம் கட்டி நிறுத்தியவன், திரும்பி சந்தியாவைப் பார்த்து, "இறங்கு!" என்றான்.

சந்தியா முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இறங்க... கதிர், "நீ ஆட்டோவுல போ...!" என்றான்.

சந்தியா, அவனைப் பார்த்து முறைத்தவள், "இருட்டு நேரம்... தனியா ஆட்டோவுல போகச் சொல்றீங்க... நான் ஒழுங்கா பஸ்லேயே போய் இருப்பேன்... எல்லாம் உங்களாலதான்...!" என்று புலம்ப...

"அப்ப என்னோட வர்றதுன்னா ஒழுங்கா வரணும். பொம்பளைப் பிள்ளை மாதிரியா நடந்துக்கிற...! இந்த ஊருக்கு வந்து ரொம்பக் கெட்டுப் போய்ட்ட...!" என்று சொல்லியபடி கதிர் வண்டியைக் கிளப்ப... சந்தியா சிரிப்பை அடக்கியபடி அவன் பின்னே அமர்ந்தாள்.

வண்டி சைதாப்பேட்டை சிக்னலில் நிற்க... இவர்கள் அருகில் இன்னொரு பைக் வந்து நின்றது, அதில் இருந்தவர்கள் காதலர்கள் போல்... ரொம்ப நெருக்கமாக இருந்தார்கள்.

பின்புறம் அமர்ந்திருந்த பெண் இருபக்கமும் கால் போட்டு அமர்ந்து, சுவரில் இருக்கும் பல்லி போல முன்புறம் இருந்தவனின் முதுகில் ஒட்டிக் கொண்டு அவன் காதில் எதையோ சொல்ல... அதைக் கேட்ட அந்த இளைஞன் சிரித்தான்.

'நாம மட்டும் இப்படித் தள்ளி உட்கார்ந்து வர... இவங்க மட்டும் இப்படி நெருக்கமா இருக்காங்களே...!'



என்று அவர்களைப் பார்த்த சந்தியாவுக்குப் பொறாமையாக இருந்தது.

"பொது இடத்தில எப்படி நடந்துக்கிறதுன்னே தெரியலை...!" என்று அவள் சத்தமாக முணுமுணுக்க... அதைக் கேட்ட அந்தக் காதலர்கள் திரும்பி சந்தியாவை முறைக்க...

"பேசாம இரு...!" என்று கதிர் சந்தியாவை அடக்க... அவளா அடங்குவாள்.

"உங்களுக்குத் தெரியாது மாமா... நீங்க பேசாதீங்க...!" என்றவள், திரும்பி அந்தக் காதலர்களைப் பார்த்து, "லவ் பண்ண வேற இடமே கிடைக்கலையா...?" என்று கேட்க...

பக்கத்து வண்டியில் இருந்தவன், "உண்மையாகவே இல்ல மேடம். நீங்க வேணா வேற இடம் பார்த்துத் தர்றீங்களா...?" என்றான் கிண்டலாக.

சந்தியா மேலும் அவனிடம் ஏதோ சொல்ல வர... 'இவளைப் பேசவிட்டா இன்னைக்கு ஏழரையைக் கூட்டிடுவா!' என்று நினைத்த கதிர், பின்னால் அமர்ந்திருந்த சந்தியாவின் கையைப் பிடித்து இழுத்துத் தன் இடுப்பைச் சுற்றிப் போட்டவன், அவளைக் கண்ணாடியில் பார்த்து, 'இப்ப சந்தோஷமா?' என்று கேட்க... சந்தியாவும் பக்கத்தில் இருந்தவர்களை மறந்து விட்டுக் கதிரைப் பார்த்துச் சந்தோஷமாகச் சிரித்தாள்.

சிக்னலில் இருந்து வண்டி சீறிப் பாய... சந்தியா கதிரோடு மேலும் ஒண்டினாள். அவளுக்கு இன்று நடப்ப தெல்லாம் கனவு போல் இருந்தது. 'நாம நிஜமாவே கதிர் மாமாவோட வண்டியில் போறோமா...?' என்று ஆராய்ச்சி செய்தபடியே அமர்ந்திருந்தாள்.

வண்டியைக் கல்லூரி ஹாஸ்டல் வாசலில் நிறுத்தாமல், கதிர் சற்றுத் தள்ளி நிறுத்த... சந்தியா வண்டியில் இருந்து இறங்கி, "தேங்க்ஸ் மாமா...! நான் போயிட்டு வரேன்...!" என்றவள், கதிரைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி செல்ல...

அவள் சிறிது தூரம் சென்றதும் கதிர், "சந்தியா..." என்று அழைத்தான்.

கதிர் அழைத்ததும் துள்ளிக் குதித்து ஓடி வந்தவள், "என்ன மாமா, கூப்டீங்களா...?" என்று ஆவலாக அவன் முகம் பார்க்க...

கதிரின் முகம் கடுமையாக இருந்தது. "இனி எங்க வீட்டுக்கு வராதே...!" என்றான். சந்தியா, அவன் சொன்னதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் புன்னகையுடன்,

"நான் வருவேன்...!" என்றாள்.

"நம்ம கல்யாணம் நடக்காது சந்தியா. வீணா மனசுல ஆசையை வளர்த்துக்காதே...!" என்றான் எங்கோ பார்த்துக் கொண்டு.

அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ந்த சந்தியா, "ஏன் மாமா...?" என்றாள் எழும்பாத குரலில்.



"ஏன் நடக்காது? எதுக்கு நடக்காது? இப்படிக் காரணம் எல்லாம் கேட்காதே. நடக்காதுன்னா நடக்காது. அவ்வளவு தான். இதைச் சொல்லத்தான் உன்னைக் கூட்டிட்டு வந்தேன்."

"எனக்குக் காரணம் தெரியணும்... சின்ன வயசுல இருந்து உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு நினைச்சிட்டு இருந்தேன். உங்களுக்கும் விருப்பம் இருந்தது. இப்பத் திடீர்னு வேண்டாம்னு சொன்னா... நான் என்ன, நீங்க வச்சு விளையாடுற பொம்மையா, வேணும்னா வச்சிக்கவும், இல்லைன்னா தூக்கிப் போடவும்...!" என்ற சந்தியாவின் முகம் கோபத்தில் சிவந்திருந்தது.

"என்னால என்னோட அம்மா, அப்பா பேச்சை மீற முடியாது சந்தியா. ஏற்கெனவே காவேரியால மனசு ஒடிஞ்சு இருக்கிறவங்களை... நானும் கஷ்டப்படுத்த முடியாது. அவங்க பெத்த ரெண்டு பிள்ளைகளுமே அவங்க பேச்சைக் கேட்கலைன்னா, அவங்க ரொம்ப வருத்தப்படுவாங்க."

"முதல்ல எனக்கு ஒண்ணு சொல்லுங்க மாமா... உங்களுக்கு அவங்க மட்டும்தான் முக்கியமா... நான் இல்லையா...? உங்களுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசை இல்லை. நீங்க என்னைக் காதலிக்கலை...?"

"நீ என்னோட அத்தை பொண்ணு சந்தியா... அதனால எனக்கு உன்னைப் பிடிக்கும். உன்னைத்தான்

கட்டிக்கணும்னு நினைச்சேன்... ஆனா... அது காதல் இல்லை சந்தியா. எங்க அம்மா, அப்பா உன்னை அவங்க மருமகள்னு சொன்னதுனாலதான் அந்த ஆசை வந்துச்சு. அந்த இடத்துல நீ இல்லாம வேற பொண்ணு இருந்திருந்தாக் கூட... நான் அப்பவும் சரின்னுதான் சொல்லியிருப்பேன்!" என்று சந்தியாவின் தலையில் கதிர் நெருப்பை அள்ளிக் கொட்ட... சந்தியா துடித்து விட்டாள்.

"அப்ப நீங்க என்னைக் காதலிக்கவே இல்லையா மாமா...?" என்று சந்தியா அழுகையுடன் கேட்க... கதிர் இல்லை என்று அழுத்தமாகத் தலை அசைத்தான்.

"நீங்க பொய் சொல்றீங்க மாமா. ஆனா ஏன் சொல்றீங்கன்னுதான் புரியலை... நான் காவேரி மதினிக்கு உதவி செஞ்சதுனாலேயா...?"

கதிர் இல்லை என்று தலை ஆட்ட... அப்ப வேற என்ன காரணம் என்பது போல் சந்தியா பார்க்க... கதிர் மௌனத்தைத்தான் பதிலாகத் தந்தான்.

கண்ணீருடன் சிறிது நேரம் கதிரின் முகத்தையே பார்த்தபடி நின்ற சந்தியா, "உங்களுக்கு என்னோட மனசு விளையாட்டாப் போய்டுச்சு இல்லை... நினைவு தெரிஞ்ச நாள்ல இருந்து உங்களைத்தான் புருஷனா நினைச்சிருக்கேன்.

"நீங்க என்னை விரும்பினாலும், விரும்பலைன்னாலும் நான் உங்களை விரும்புகிறேன், அது நிஜம். இனி நீங்களே வந்து என்னை விரும்புறேன்னு சொன்னாலும்... நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க



மாட்டேன்!" என்றவள், திரும்பி வேகமாக ஹாஸ்டலுக்குள் சென்றாள்.

கதிர், சந்தியா செல்வதையே பார்த்துக் கொண்டு இருந்தவன், அவள் உள்ளே சென்றதும் தன் வண்டியை எடுத்துக் கொண்டு சென்றான்.

சந்தியாவும், கதிரும் தங்கள் பேச்சிலேயே தீவிரமாக இருந்ததால்... சித்தார்த் அங்கிருப்பதைக் கவனிக்க வில்லை.

## 6

சந்தியா இன்று கதிர் வீட்டுக்குச் செல்வது சித்தார்த்துக்குத் தெரியும். 'அங்கே எல்லோரும் அவளிடம் நன்றாகப் பேசினார்களோ இல்லையோ... அவளை ஏதாவது திட்டி விட்டால்...' என்ற கவலையில், மாலை அவளைப் பார்க்க, அவள் ஹாஸ்டலுக்கு வந்தான்.

சந்தியா இன்னும் வரவில்லை என்பதால்... அவளுக்காக வெளியே காத்திருந்தவன், கதிரும், சந்தியாவும் ஒன்றாகப் பைக்கில் வருவதைப் பார்த்து மகிழ்ந்தான். அத்துடன் சந்தியா முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி... அவன் முகத்திலும் புன்னகையை வரவழைத்தது.

அவர்களுக்கு இடைஞ்சலாக இப்போது செல்ல வேண்டாம் என்று சற்றுத் தள்ளி நின்றான். 'சும்மாவே உலகத்தில் என் மாமனைப் போல வருமான்னு பேசியே...

என் காது ஜவ்வைக் கிழிப்பா... இப்ப அவங்க மாமாவோட ராசி வேற ஆகிட்டா போலிருக்கு...! இனி தினமும் கதிரைப் பத்திதான் பேசுவா!' என்று நினைத்தவனின் காதில் கதிர் சொன்ன, 'இனி எங்க வீட்டுக்கு வராதே...!' என்ற வாக்கியம் விழுந்து அவனை நிலைகுலையச் செய்தது.

அவனுக்குக் கதிர் பேசுவதைக் கேட்டு ரொம்பக் கோபம் வந்தது. 'இப்போது தான் ஏதாவது கோபத்தில் செய்யப் போய்... அது சந்தியாவை மேலும் பாதித்தால்...!' என்ற எண்ணத்தில், தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றான்.

கதிரும், சந்தியாவும் சென்றதும் சித்தார்த் அங்கிருந்த இருக்கையில் சிறிது நேரம் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். அவனுக்கே கதிர் சொன்னது அதிர்ச்சியாக இருந்தது. சந்தியாவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவளது அறையில் அவள் கண்ணீரில் மிதந்து கொண்டு இருந்தாள்.

சித்தார்த்துக்கு நன்றாகத் தெரியும்... இப்போது, தான் அழைத்தாலும் சந்தியா வர மாட்டாள் என்று. அதனால் அனுவுக்கு அழைத்துச் சந்தியாவைப் பற்றிக் கேட்டான்.

"வெளியே போய்ட்டு வரும்போதே ரொம்ப டல்லா வந்தா... அவ பெட்ல படுத்திருக்கா சித்து. அழற மாதிரி இருக்கு... என்ன பண்றது...?" என்றாள் அனு புரியாமல்.

"அப்படியே விட்டுடு... நாளைக்குச் சரி ஆகிடுவா. ஆனா... நைட் நடுவுல எழுந்து என்ன பண்றான்னு பார்த்துக்கோ...! நான் நாளைக்கு அவளைச் சரி பண்ணிடுறேன்!" என்றான்.

"சரி... உனக்குத் தெரியுமா, ஏன் இப்படி இருக்கான்னு...?"

"ம்ம்... ஒண்ணும் இல்லை... அவங்க மாமாவோட சண்டை. அதனாலதான். அவளைப் பார்த்துக்கோ...!" என்ற சித்தார்த், மனமே இல்லாமல் அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

மறுநாள் கல்லூரிக்கு வந்த சந்தியா, அமைதியாக இருக்க... சித்தார்த்தும் அவளைக் கண்டு கொள்ளாமல் இருந்தான். இரவெல்லாம் அழுதிருக்கிறாள் என்று அவள் வீங்கிய இமைகளைப் பார்த்துத் தெரிந்து கொண்டான். ஆனால், அவனாக எதுவும் கேட்கவில்லை.

மதியம் சந்தியா உணவருந்த வர மறுத்தவள், தனியாகச் சென்று ஒரு பெஞ்சில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அவளருகில் சென்று அமர்ந்த சித்தார்த், "என்ன மேடம்! சாப்பிட வரலை...?" என்று எப் போதும் பேசுவது போல் பேச...

"உனக்குத் தெரியுமா சித்து... கதிர் மாமா என்னை வேண்டாம்னு சொல்லிட்டாங்க...!" என்றாள் சந்தியா வேதனையாக.

"சொன்னா சொல்லிட்டுப் போறார். அவர் ஒருத்தர் மட்டும்தான் இந்த உலகத்துல இருக்காரா, என்ன...? எதுக்கு இந்தச் சோகம்...?" என்று, சந்தியா மனதில்

இருப்பதை வெளியே கொண்டு வருவதற்காகச் சித்தார்த் அலட்சியமாகப் பேச... ,

"எனக்குக் கதிர் மாமாதான் உலகம்...!" என்றாள் சந்தியா அழுத்தமாக.

'நேத்துதானே இவ கதிர் கிட்டே, 'நீ எனக்கு வேண் டாம்'னு சொன்னா...!' என்று நினைத்த சித்தார்த்துக்குப் புன்னகை வர, அதை அடக்கியவன்,

"ஆனா... நேத்து யாரோ நீங்களே இனி வந் தாலும்... நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு கதிர் கிட்டே சொன்னாங்களே...! நானே அதைக் கேட்டேனே...! அவங்க யாருன்னு உனக்குத் தெரியுமா சந்தியா...?" என்று அவளைச் சீண்ட... சந்தியாவின் விழிகள் கண்ணீரால் நிரம்பியது.

"அது உண்மைதான்... அதுக்காக நான் கதிர் மாமாவைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிப்பேன்னு அர்த்தம் இல்லை...!" என்றாள் ரோஷமாக.

"சரி, அப்படியே இரு...!" என்று சித்தார்த், சந்தியா வின் போக்கிலேயே சென்றவன்... அப்போதுதான் தள்ளி நின்று இவர்களையே பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீஜாவைக் கவனித்தான்.

சந்தியாவிற்கும் சேர்த்து உணவு கொண்டு வந்தவள், அதைக் கொடுப்பதற்காக அவளைத் தேட... சந்தியாவும் சித்தார்த்தும் ஏதோ தீவிரமாகப் பேசிக்



கொண்டிருப்பதைப் பார்த்து, அங்கு செல்வதா வேண் டாமா என்று தயக்கத்துடன் தள்ளி நின்று அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீஜாவைப் பார்த்த சித்தார்த் முகம் மலர,

"ஹாய் ஸ்ரீ...! வா. ஏன் அங்கேயே நிற்கிறே...?" என்றதும் அவர்கள் அருகில் வந்த ஸ்ரீஜா, இருவரின் முகத்தையும் மாறி, மாறிப் பார்க்க...

சந்தியா விழிகளைத் துடைத்து விட்டு, ஸ்ரீஜாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"இந்தாங்க அக்கா! உங்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்தேன்..." என்று ஸ்ரீஜா உணவுப் பாத்திரத் தைக் கொடுக்க...

சந்தியா அதை மறுப்பதற்கு முன் வாங்கிய சித்தார்த், "உங்க அக்காவுக்கு மட்டும்தானா... எனக்கு இல்லையா?" என்று புன்னகையுடன் கேட்டவன்,

ஸ்ரீஜா இங்கிருந்தால் சந்தியா சாப்பிடுவாள் என்று நினைத்து... "ஸ்ரீ... இன்னைக்கு நீயும் எங்களோட சாப் பிடேன்..." என்றான் சந்தியா முறைப்பதையும் பொருட் படுத்தாமல்.

ஸ்ரீஜா தயக்கத்துடன் சந்தியாவைப் பார்க்க... அவளும் வேறு வழியில்லாததால், "இங்கேயே சாப்பிடு ஸ்ரீஜு..." என்றாள்.

"சரி. நான் போய் என்னோட ஃப்ரெண்ட்ஸ் கிட்ட சொல்லிட்டு வர்றேன்..." என்று ஸ்ரீஜா கிளம்ப...

"அப்படியே அங்க அனுகிட்ட எங்களோட லஞ்ச் இருக்கும். அதையும் வாங்கிட்டு வா ப்ளீஸ்..." என்றான் சித்தார்த்.

ஸ்ரீஜா வந்ததும் மூவரும் சாப்பிட அமர்ந்தனர். மூவரும் உணவைப் பகிர்ந்து கொண்டு சாப்பிட...

சந்தியா விழிகளில் பெருகும் நீரை உள்ளே இழுத்தபடி உணவை அளைந்து கொண்டிருந்தாள்.

சித்தார்த் அவளைக் கண்டு கொள்ளாமல் ஸ்ரீஜாவுடன் பேசிக் கொண்டே சாப்பிட்டான்.

"உனக்கு டாக்டருக்குப் படிக்கணும்னு சின்ன வயசுல இருந்து ஆசையா ஸ்ரீ...?"

"அப்படியெல்லாம் இல்லை. என்னோட அப்பா, அம்மாவுக்கு நான் டாக்டர் ஆகணும்னு ஆசை. அதனாலதான் மெடிக்கல் காலேஜ் சேர்ந்தேன். ஆனா... இங்க வந்த பிறகு எனக்கே ரொம்பப் பிடிச்சிடுச்சு..." என்று ஸ்ரீஜா புன்னகையுடன் சொல்ல...

"எனக்கும் அப்படித்தான். எங்க அம்மா, அப்பா ரெண்டு பேருமே டாக்டர்ஸ். அதனாலதான் நானும் டாக்டருக்குப் படிக்க ஆசைப்பட்டேன். ஆனா, இங்க வந்த கொஞ்ச நாள்லயே... இங்க வர்ற நோயாளிங்க கண்ணுல தெரியுற தவிப்பையும், பயத்தையும்... அதே அவங்க குணமாகிப் போகும் போது, அவங்க முகத்துல தெரியுற மகிழ்ச்சியையும் பார்த்துத்தான் மருத்துவம் படிக்கிறது எவ்வளவு பெரிய விஷயம்னு புரிஞ்சிக்கிட்டேன்.



"மத்தவங்களோட துன்பத்தைத் தீர்க்கக் கடவுள் நமக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கும்போது... அதை இன்னும் சிறப்பாச் செய்யணும்னு நினைக்கிறேன். அதனாலதான் இப்ப இன்னும் ஈடுபாட்டோட என்னால படிக்க முடியுது.

"நாம சில பேரைப் பார்த்து நினைப்போம். இவங்களுக்கு என்ன கஷ்டம் இருக்கும்னு. ஆனா, அவங்களுக்குத்தான் எல்லோரையும் விட அதிகக் கஷ்டம் இருக்கும். அவங்க அதை வெளியே காமிச்சிக்கவே மாட்டாங்க. அதுவும் நாம டாக்டர்ஸ். நம்மோட கஷ்டத்தை எப்பவும் வெளியே காமிச்சிக்கக் கூடாது.

"நம்மகிட்ட வரும் நோயாளிங்க நம்மைப் பார்த்து இவங்களுக்கே ஏதோ பிரச்சனை இருக்கும் போலிருக்கே. இவங்க நமக்கு ஒழுங்கா வைத்தியம் பார்ப்பாங்களான்னு சந்தேகப்படுறது நல்லதா... அதோட நம்ம கஷ்டத்தையே நினைச்சிட்டு இருந்தா... நம்மாலதான் ஒழுங்கா வைத்தியம் பண்ண முடியுமா...

"அதனால இப்ப இருந்தே மனசைக் கட்டுப்பாடா வச்சுக்க நமக்குத் தெரியணும்..." என்று சித்தார்த் முதல் வருடம் படிக்கும் ஸ்ரீஜாவைப் பார்த்துப் பக்கம் பக்கமாக வசனம் பேச...

அவள் தலை சுற்றி அமர்ந்திருந்தாள்.

"போதும் நிறுத்து. ஸ்ரீஜு காதுல இருந்து ரத்தம் வருது பாரு. இனி, அவ நம்ம ரெண்டு பேரையும் பார்த்தாத் தலை தெறிக்க ஓடப் போறா. ஏன் இந்தக்

கொலைவெறி உனக்கு? அவ எனக்கு ஏதோ நல்ல சாப்பாடு கொண்டு வர்றா. அது உனக்குப் பொறுக் கலையா?" என்ற சந்தியா சித்தார்த்தின் முதுகில் அடிக்க... அதைப் பார்த்து ஸ்ரீஜா சிரித்தாள்.

சந்தியா உணவை முடித்து முகம் கழுவி வந்தவள், "எனக்குக் கொஞ்சம் படிக்க வேண்டியதிருக்கு. நான் கிளாஸுக்குப் போறேன். பாவம், அந்தப் பிள்ளைய விட்ரு!" என்று சித்தார்த்தைப் பார்த்துச் சொல்லி விட்டுத் தெளிவாகத் தன் வகுப்பறையை நோக்கிச் சென்றாள். அவளுக்குத் தெரியும், சித்தார்த் பேசியது தனக்காகத் தான் என்று.

சந்தியா சென்றதும், சித்தார்த் ஸ்ரீஜாவைப் பார்த்து, "தேங்க்ஸ்..." என்றான்.

"எனக்கு உங்க ரெண்டு பேரையும் பார்த்தாப் பொறாமையா இருக்கு. நான் உங்க ரெண்டு பேரையும் பார்த்துட்டு முதல்ல லவ்வர்ஸ்னு நினைச்சேன்..." என்று யோசிக்காமல் சொன்ன ஸ்ரீஜா, சித்தார்த் எதுவும் தப்பாக எடுத்துக் கொள்வானோ என்று அவன் முகம் பார்க்க...

சித்தார்த் புன்னகையுடன், "நாட்டுல ஏழு, எட்டு கேர்ள் ஃபிரெண்ட்ஸ் வச்சிருக்கிறவன் எல்லாம் சந்தோஷமா இருக்கான். நான் இந்த ஒண்ணை வச்சிக் கிட்டுப் படுற பாடு இருக்கே... இதுல இவனை நான் லவ் வேற பண்ணிட்டாலும் வெளங்கிடும்..." என்று அவள் சொன்னதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு கிண்டலாகப் பேசினான்.



சந்தியா மனதில் நிறைய வேதனை இருந்தது. அவர்கள் மதியம் குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ மனைக்குச் சென்ற போது... அங்கிருந்த பச்சிளங் குழந்தைகளின் வேதனையைப் பார்த்ததும் அவளுடைய வேதனை பின்னுக்குச் சென்று விட்டது.

ஒரு குழந்தைக்கு மண்டை பெரிதாக வீங்கி இருந்தது என்றால்... இன்னொரு குழந்தைக்குப் பிறப் புறுப்பில் காயம் பட்டிருந்தது. மற்றொரு குழந்தைக்குத் தீக்காயம் ஏற்பட்டிருந்தது.

அதுபோல் எண்ணற்ற குழந்தைகள். அதைத் தவிர மற்ற நோய்களினால் வந்திருந்த குழந்தைகள் ஏராளம். அவர்களுக்கு என்ன செய்கிறது என்று சொல்லக் கூடத் தெரியாத வயது.

அந்தப் பிள்ளைகளை விட, அவர்களின் தாய்மார்களைப் பார்க்கும்போதுதான் சந்தியாவுக்கு இன்னும் வேதனையாக இருந்தது. தங்கள் குழந்தைக்கு எப்படியாவது சரியாகிவிட வேண்டும் என்று உட்காரக் கூட இடம் இல்லாத இடத்தில், குழந்தையை வைத்துக் கொண்டு மருத்துவர்களுக்காகக் காத்திருந்தனர்.

மருத்துவர்களைப் பார்த்ததும், ஏதோ கடவுளையே நேரில் பார்த்தது போல்... அத்தனை பயபக்தியுடன் அவர்கள் எழுந்து நிற்பதைப் பார்த்து... தன் படிப்பின் முக்கியத்துவத்தை முழுவதுமாக சந்தியா உணர்ந்தாள்.

எப்போதும் அவள் நன்றாகவே படிப்பாள்தான். இத்தனை நாள் மருத்துவத்தையும் ஒரு படிப்பு என்ற

அளவில் மட்டும் எண்ணியிருந்தவள்... தன் படிப்பு தன்னை உயர்த்துவதற்கு மட்டும் அல்ல... மற்றவர் களின் நலன் காக்கவும் பயன்படப் போகிறது என்பதை முழுமையாக உணர்ந்தாள். அதனால் கதிரைப் பற்றிய எண்ணங்களை ஒதுக்கி வைத்து விட்டுப் படிப்பதில் கவனம் செலுத்தினாள்.

இப்படியே ஒரு மாதம் சென்ற நிலையில்... சித்தார்த்துக்கு அவளைப் பார்த்து நிம்மதியாக இருந்தாலும்... அவள் மொத்தமாகக் கதிரை ஒதுக்கி வைத்து விட்டு இருப்பதில் விருப்பம் இல்லை.

கதிர் அன்று நடந்து கொண்டதற்கு ஏதாவது காரணம் இருக்கும் என்றே அவன் நம்பினான். இப்படி விலகியே இருந்தால் இருவரின் பிரிவும் நிரந்தரம் ஆகிவிடுமோ என்று அஞ்சியவன் சந்தியாவைத் தேடிச் சென்றான்.

"சந்து... உங்க மாமாவைப் பார்க்கப் போகலை..." என்று தூண்டில் போட... சந்தியா அவனைப் பார்த்து முறைத்தாள்.

"ஹே... என்ன எதுக்கு முறைக்கிற? நான் கேட்டது உன்னோட தாய்மாமாவை!" என்றான் குறும்புப் புன்னகை யுடன்.

"நான் எதுக்குப் போய்ப் பார்க்கணும்?" என்று சந்தியா அலட்சியமாகக் கேட்க...

"உனக்கும் கதிருக்கும் தானே பிரச்சனை. உங்க மாமா என்ன செஞ்சார்? நீ இவ்வளவு சுயநலவாதியா



சந்தியா! உன்னோட மாமா படுக்கையில இருக்கார். நீ போய் அவரைப் பார்க்காம இருக்கிறது நல்லாவா இருக்கும்! உன் மாமா உன்னை வெறுக்கல இல்லை. நீ அவர் பொண்ணு ஓடிப் போக ஹெல்ப் செஞ்சும், அவர் உன்கிட்ட நல்லாத்தானே பேசுறார்?" என்றதும்,

"சும்மா நீயும் மத்தவங்களை மாதிரி நான் ஓடிப் போக உதவி செஞ்சேன்னு சொல்லாதே சித்து. அவங்க வீட்டுக்குத் தெரியாம கல்யாணம் பண்ணிக்கப் போனதே எனக்குத் தெரியாது. போதுமா...?" என்று சந்தியா உணர்ச்சி வசப்பட்டுக் கத்த... அவள் சொன்னதைக் கேட்டு சித்தார்த் திகைத்து நின்றான்.

சுபாஷ்க்கு விஜயவாடாவில் உள்ள பெரிய மருந்து தயாரிக்கும் கம்பெனியில் வேலை கிடைக்க... அதை அவன் காவேரியிடம் சந்தோஷமாகப் பகிர்ந்து கொண் டான். காவேரி அவன் விஜயவாடா செல்வதை எண்ணிக் கவலைப்பட்டாள்.

"கவலைப்படாதே காவேரி. நீ இந்த வருஷம் படிப்பை முடிச்சதும், நாம கல்யாணம் செஞ்சிப்போம்!" என்று சுபாஷ் அவளைச் சமாதானம் செய்ய...

காவேரி கடைசி வருடத்தில் இருப்பதால்... அவளுக்குச் சீக்கிரமே மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்று வீட்டில் பேசிக் கொள்வதாகச் சொன்னாள்.

"இப்பதான் எனக்கு நல்ல வேலை கிடைச்சிடுச்சே... நான் வந்து உங்க வீட்டுல பேசுறேன்..." என்றதும் காவேரி ரொம்பப் பயந்தாள்.

"எங்க வீட்ல லவ் பண்றது தெரிஞ்சா என்னைக் கொன்னுடுவாங்க..." என்றாள்.

அதைக் கேட்டு சுபாஷ்க்குக் கோபம் வந்தது. "அப்ப என்னை எதுக்கு லவ் பண்ண?" என்றான் வெடுக்கென்று.

காவேரிக்குக் கண்களில் கண்ணீர் பெருகியது. "தப்புதான். என்னை மாதிரிக் கோழைங்க எல்லாம் லவ் பண்ணவே கூடாது. ஆனா நான் என்ன பண்றது? எனக்கு உங்களைப் பார்த்ததும் ரொம்பப் பிடிச்சிடுச்சே..." என்றாள் தவிப்பாக.

இப்போது சுபாஷ்க்கு யோசனையாக இருந்தது. 'மண் குதிரையை நம்பி ஆத்துல இறங்குற கதை தானோ நம்ம கதை. இவ இவங்க வீட்டுல வேண்டாம்னு சொல்லிட்டா... நம்மை விட்டுடுவாளோ? வேற ஜாதிங்கிற துனால இவங்க வீட்ல ஒத்துக்கலைன்னா என்ன பண்றது?' என்று குழம்ப ஆரம்பித்தான்.

காவேரி அவன் தீவிரமாக எதையோ யோசிப்பதைப் பார்த்து... "என்ன யோசிக்கிறீங்க?" என்று கேட்க,

அவளையே பார்த்த சுபாஷ், "எனக்கு ஒன்னு மட்டும் சொல்லு. உங்க அப்பா நம்ம கல்யாணத்துக்கு ஒத்துக்கலைன்னா... நீ என்னோட வருவியா மாட்டியா?" என்று கேட்க... காவேரி தயங்கினாள்.

காவேரியின் வீட்டில் சென்று பெண் கேட்டு, அவர்கள் கொடுக்கவில்லை என்று சொல்லி விட்டால்... காவேரி அவனுக்குக் கிடைப்பது கஷ்டமே.



அதோடு அவர்கள் வீட்டில் காதல் விஷயம் தெரிந்து விட்டால்... அவளை வீட்டை விட்டு வெளியே அனுப்பவும் மாட்டார்கள். அவளுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் செய்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்தவன்...

"காவேரி நாம முதல்ல கல்யாணம் செஞ்சிக்கு வோம்..." என்றதும், காவேரி பயத்தில் அவனைக் கலவரமாகப் பார்க்க...

"நீ நினைக்கிற மாதிரி இல்லை. நாம கல்யாணம் செஞ்சு அதைப் பதிவும் பண்ணிடலாம். நீ உங்க வீட்டுக்குப் போயிடு. நான் விஜயவாடா போயிடுறேன். உன் படிப்பு முடிஞ்சதும்... நான் உங்க வீட்டுல வந்து பெண் கேட்கிறேன்..." என்றதும், இப்போது காவேரியின் முகம் கொஞ்சம் தெளிவானது.

அதைப் பார்த்த சுபாஷ் தொடர்ந்து, "அவங்க சரின்னு சொல்லிட்டா... நாம முன்னாடி கல்யாணம் செஞ்சிக்கிட்டதைச் சொல்ல வேண்டாம். அப்படி ஒத்துக்கலைன்னா... நம்ம பதிவுத் திருமணத்தைக் காட்டி, நான் உன்னை என்னோட கூட்டிட்டுப் போயிடுறேன்..." என்று சுபாஷ் சொன்னது காவேரிக்கு ஒத்துக்கொள்ளும் படி இருந்தது.

வீட்டில் மெதுவாகத் தனக்குத் திருமணமான விஷயத்தைச் சொல்லி விடுவோம் என்று நினைத்தாள்.

காதலிப்பதைச் சொல்லவே தைரியம் இல்லா தவள்... இவள் திருமணம் செய்து கொண்டதைச் சொல் வாளா?

மதுரையில் ஒரு கோவிலில் வைத்துத் திருமணமும், பிறகு அங்கேயே பதிவாளர் அலுவலகத்தில் திருமணத் தைப் பதிவு செய்து விட்டு, மாலை வீடு வந்து விடுவது என்று முடிவு செய்தனர்.

காவேரிக்கு மதுரை செல்லக் காரணம் வேண்டும். அதற்கு அவளுக்குச் சந்தியாவின் தயவு தேவைப்பட்டது.

அவள் சந்தியாவிடம் சென்று மதுரையில் இருக்கும் ஒரு பிரபலக் கல்லூரியின் பெயரைச் சொல்லி, "அங்க அப்ளிகேஷன் வாங்கிட்டியா சந்தியா? நான் வேணா உனக்குத் துணைக்கு வரேன். நீ எங்க வீட்ல வந்து என்னைத் துணைக்குக் கூட்டிட்டுப் போறேன்னு கேளு..." என்று மெதுவாகத் தூண்டில் போட...

சந்தியா முதலில், "எதுக்கு மதுரை வரை போகணும்? நான் இங்கயே பக்கத்தில இருக்கிற காலேஜ்ல படிக்கிறேனே...." என்றவளை, "ஸ்டேட் ரேங்க் வாங்கிட்டு இங்க இருக்கிற காலேஜ்ல படிக்கிறேன்னு சொல்றியே... பெரிய காலேஜ்ல படிச்சாத்தான் மதிப்பு இருக்கும்..." என்ற காவேரியின் பேச்சு மாற்றியது.

காவேரியின் சூது தெரியாமல் அதில் மாட்டினாள் சந்தியா.

வெள்ளிக்கிழமை அன்று காலை சந்தியாவும், காவேரியும் மதுரையை நோக்கிச் சென்றனர்.



காவேரி சற்றுப் பதற்றமாக இருப்பது போல் சந்தியாவுக்குத் தோன்றியது. ஆனால் அவள் காவேரியை எதுவும் கேட்கவில்லை.

மதுரையில் இருந்த கல்லூரியின் வாசலில் சுபாஷ் அவர்களுக்காகக் காத்திருந்தான். அவனைப் பார்த்ததும் காவேரி முகம் மலர... சந்தியா இவன் எதுக்கு இங்க வந்திருக்கான் என்பது போல் பார்த்தாள்.

சுபாஷ் சந்தியாவிடம் நலம் விசாரிக்க... சந்தியா சுரத்தே இல்லாமல் பதில் சொன்னாள்.

சுபாஷ் அவளிடம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுக்க... அதை வாங்கிப் பார்த்தவள்... அது அந்தக் கல்லூரியின் விண்ணப்பம் என்றதும் முகம் மலர்ந்து சுபாஷுக்கு நன்றி சொன்னவள்,

"காவேரி மதினி... நாம வந்த வேலை முடிஞ்சிடுச்சு. வாங்க போகலாம்!" என்றதும் காவேரியின் முகம் மாறியது.

"அதுக்குள்ளயா! இரு சந்தியா. பொறுமையாப் போவோம். மதுரையை ஒரு ரவுண்டு அடிச்சிட்டுக் கிளம்புவோம்..." என்று சுபாஷ் சாதாரணமாகச் சொல்ல...

"அதெல்லாம் வேண்டாம். வீட்டுல தெரிஞ்சா கொன்னுடுவாங்க. நாங்க போறோம்..." என்று சந்தியா கிளம்புவதிலேயே குறியாக இருக்க... சுபாஷும் காவேரியும் அவளுக்குத் தெரியாமல் கண்களால் பேசிக் கொண்டனர்.

"இரு சந்தியா. நாம வர லேட் ஆகும்னு சொல்லிட்டுத்தானே வந்தோம். வந்த்துக்குக் கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாம்..." என்று காவேரி சொல்ல...

"நீங்க வேணா இருந்துட்டு வாங்க. நான் போறேன்..." என்று சந்தியா பிடிவாதம் பிடித்தாள்.

"சுபாஷ் வெளியூருக்கு வேலைக்குப் போகப் போறாங்க சந்தியா. இன்னைக்கு விட்டா... நாங்க இனி பார்க்க முடியாது. புரிஞ்சிக்கோ ப்ளீஸ். இன்னைக்கு ஒரு நாள்..." என்று காவேரி கெஞ்ச... சந்தியா வேண்டா வெறுப்பாகச் சரி என்று தலையசைத்தாள்.

மூவரும் ஒரு ஆட்டோவில் சென்று ஏற... சுபாஷ் ஒரு கோவிலின் பெயரைச் சொன்னதும்... சந்தியா கோவிலுக்குத்தானே என்று நிம்மதியடைந்தாள்.

கோவிலுக்கு அவர்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று அவளுக்கு இன்னும் தெரியவில்லை.

நடுவில் காவேரி உட்கார்ந்து கொள்ள... ஒரு ஓரத்தில் சந்தியாவும், மறு ஓரத்தில் சுபாஷும் உட்கார்ந்து கொண்டனர். சந்தியா மனதில் பயத்தை வைத்துக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள்.

அப்போது அவர்கள் ஆட்டோ அருகில் இன்னொரு ஆட்டோ வந்தது. அதில் இருந்தது கதிரின் நண்பன் சோலை. அவன் கதிருடன் பன்னிரண்டாம் வகுப்பு வரை உடன் படித்தவன். இப்போது அவர்கள் ஊரிலேயே கடை வைத்திருக்கிறான். அவனும், கதிரும் ரொம்ப நெருக்கம் என்று சந்தியாவுக்குத் தெரியும்.



அவனைப் பார்த்ததும் சந்தியா முகம் மலர்ந்தவள், பிறகுதான் அவர்கள் சுபாஷுடன் செல்வது நினைவுக்கு வந்து, 'ஐயோ... இந்த அண்ணன் பார்த்துட்டாங்களே... கதிர் மாமா கிட்ட சொல்லிடுவாங்களே...!' என்று பயந்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டு வந்த சோலை, அவன் வாயில் விரல் வைத்து, சொல்லாதே என்பது போல் தலையசைக்க... சந்தியா சோலையைப் பற்றிக் காவேரியிடம் சொல்லவில்லை.

கோவிலில் சென்று இறங்கியதும், சந்தியா திரும்பிப் பார்க்க... சோலையும் செல்லில் பேசியவாறு அவர்கள் பின்னே வந்து கொண்டிருந்தான். ஒரு பக்கம் பயமாக இருந்தாலும், இன்னொரு பக்கம் சந்தியாவுக்கு நிம்மதியாக இருந்தது.

கோவிலின் உள்ளே சென்றால்... அங்கே சுபாஷின் நண்பர்கள் சிலரும் இருந்தனர். அவர்களைப் பார்த்ததும் சந்தியா இன்னும் பயந்தாள். அவள் காவேரியின் முகம் பார்க்க... அவளின் முகத்திலும் பயம் தெரிந்தது.

சந்தியா காவேரியிடம், "போகலாமா?" என்று கேட்க...

சுபாஷ், "சாமி கும்பிட்டதும் போவோம்..." என்றவன், அவனின் நண்பன் ஒருவனை அழைத்து, அவனிடம்

சந்தியாவை அழைத்துக் கொண்டு கோவிலைச் சுற்றி விட்டு வரும்படிச் சொல்ல... அதிர்ந்த சந்தியா சுபாஷைப் பார்த்து நேரடியாக முறைத்தவள்... நேராகச் சென்று சன்னதியில் நின்று சாமி கும்பிட ஆரம்பித்தாள்.

சந்தியா கண் திறந்து பார்க்கும்போது... சாமியின் பாதத்தில் வைத்திருந்த தேங்காய்ப் பழத் தட்டில் இருந்த தாலியைப் பார்த்து விட்டாள். அவளுக்கு ஏதோ தவறு நடக்கப் போகிறது என்று புரிந்தது.

சந்தியா திரும்பி காவேரியைப் பார்க்க... அவளும் சுபாஷும் அருகருகே நின்று கொண்டிருந்தனர்.

சந்தியா உடல் பதற நின்றவள், கண்களால் சோலை எங்கே என்று தேட... அவன் வெளி வாயிலில் நின்றிருந்தான்.

சந்தியா வேகமரக அவன் அருகில் சென்றவள், அவன் கையைப் பிடித்து இழுத்தாள். அவளுக்கு அதிர்ச்சி யில் பேச்சே வரவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் மட்டும் நிற்காமல் வழிந்தது.

சோலைக்கு அவளின் நிலைமை புரிந்தது. அவன், "இரு சந்தியா..." என்றவன், வெளிவாயிலைப் பார்க்க... சந்தியாவும் பார்த்தாள்.

அங்கே கதிர் வேர்க்க விறுவிறுக்க வேகமாக உள்ளே வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் தான் சந்தியாவுக்கு உயிரே வந்தது.



கதிர் உள்ளே வந்தவன் சந்தியாவைப் பார்த்து முறைக்க...

அவளால், "மாமா..." என்பதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியவில்லை. கதிர் விட்டால் சந்தியாவை அடித்து விடுபவன் போல நின்றான்.

அவர்கள் இருவருக்கும் இடையில் வந்த சோலை, "இப்ப நேரம் இல்லை. சீக்கிரம் வா..." என்றபடி கதிரை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல... சந்தியாவும் அவர்கள் பின்னே ஓடினாள்.

"நான் கூடச் சும்மா ஊர் சுத்தத்தான் மாப்பிள்ளை வந்திருக்காங்கன்னு நினைச்சேன். ஆனா... அவன் கல்யாணம் பண்ணக் கூட்டிட்டு வந்திருக்கான்டா... ரொம்ப விவரமா திட்டம் போட்டிருக்கான்..." என்று சொல்லியபடி சோலை கதிருடன் சென்றான்.

அவர்கள் உள்ளே நுழைந்த போது.... கோவில் ஐயர் தாலி இருந்த தட்டைக் கொண்டு வர... வேகமாக அவர் அருகில் சென்ற கதிர், அந்தத் தட்டில் இருந்த தாலியை எடுத்துத் தன் பேன்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அவனை அங்கே எதிர்பார்க்காத காவேரி அதிர்ச்சி யுடன், "அண்ணா..." என்று அழைக்க...

சுபாஷும் அப்போது அங்கே கதிரை எதிர் பார்க் காததால் அதிர்ந்து நின்றான்.

கதிர் காவேரியின் பக்கம் திரும்பவே இல்லை. சுபாஷைப் பார்த்து, "நீயெல்லாம் பாடம் சொல்லித் தர்ற வாத்தியாரு... உன்னை நம்பிப் பொம்பளைப் புள்ளைங் களைப் படிக்க அனுப்பினா... நீ வீட்டுக்குத் தெரியாம ஓடிப் போகச் சொல்லித் தர... உனக்கு வெட்கமா இல்லை.

"உங்க கதை வெளியே தெரிஞ்சுதுன்னா... நாளைக்கு எவனாவது பொம்பளைப் புள்ளைங்களை நம்பிப் படிக்க அனுப்புவானா?" என்றான் ஆத்திரமாக.

"பொண்ணு கேட்டிருந்தா மட்டும் கட்டித் தருவீங்களா என்ன? வெட்டி விடத்தானே பார்ப்பீங்க..." என்றான் சுபாஷ், கதிருக்கு இணையான கோபத்துடன்.

இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு நிற்க... கதிரின் அருகில் வந்த சோலை, "மாப்பிள்ளை, எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து கிளம்புறோமோ... அவ்வளவு நல்லதுடா!" என்றான் கிசுகிசுப்பாக.

கதிர் காவேரியைப் பார்த்து, "வா போகலாம்..." என்றான்.

"அவ வர மாட்டாள். நான் ஒண்ணும் அவளைக் கூட்டிட்டு ஓடணும்னு நினைக்கலை. அவ படிச்சு முடிஞ்சதும் உங்க வீட்ல வந்து பொண்ணு கேட் போம்னு தான் நினைச்சேன். ஒரு சேஃப்ட்டிக்குத்தான் இந்தக் கல்யாணம். இப்ப உங்களுக்குத் தெரிஞ்சிடுச்சு. இனி காவேரியை உங்களோட அனுப்பினா... நீங்க அவளுக்கு வேற இடத்தில கல்யாணம் செஞ்சுடுவீங்க..." என்று சுபாஷ் காவேரியை அனுப்ப மறுக்க...



கதிர் இருவரையும் பார்த்தவன், "உங்களுக்கே உங்க காதல் மேல நம்பிக்கை இல்லை. அப்படித்தானே! ஓடிப் போகத் தைரியம் இருக்கிறவங்களுக்கு வீட்ல பெத்தவங்க கிட்ட பேசத் தைரியம் இல்லையா...?" என்றான் நக்கலாக.

முகம் கருத்த போதிலும் சுபாஷ், "நீங்க என்ன வேணா நினைச்சிக்கோங்க. காவேரி உங்களோட வர மாட்டா..." என்றான் உறுதியுடன்.

கதிருக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை காவேரியை இரண்டு அறை வைத்து இழுத்துக் கொண்டு செல்லத்தான் நினைத்தான். இவர்களோ இரண்டு பேர்... அந்தப் பக்கம் சுபாஷின் நண்பர்கள் ஏழெட்டுத் தடியன்கள் இருந்தார்கள்.

இவன் ஏதாவது செய்யப் போய்... அவர்கள் காவேரியை அழைத்துக் கொண்டு சென்று விட்டால் கஷ்டம் என்று பொறுமையுடன் பேசினான்.

"அவருக்குத்தான் நம்ம குடும்பத்தைப் பத்தித் தெரியாது. உனக்குமா அக்கறை இல்லை. நம்ம அம்மா, அப்பாவைப் பத்தி நினைச்சுப் பார்த்தியா? அவங்களால இந்த அவமானத்தைத் தாங்கிக்க முடியும்னு நினைக்கிறியா?

"கண்டிப்பா சொல்றேன் காவேரி. அவங்க உயிரையே விட்டுடுவாங்க. என்னால அந்தக் கொடுமையை எல்லாம் பார்க்க முடியாது. நான் இப்படியே எங்கேயாவது போயிடுவேன்..." என்றான் கதிர் குரல் தழுதழுக்க.

கதிர் அவ்வளவு சொல்லியும் காவேரி அழுதாளே தவிர... அவள் நின்ற இடத்தில் இருந்து ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை.

சந்தியா தான் காவேரி வந்து விட மாட்டாளா என்று தவியாகத் தவித்தாள்.

காவேரியைப் பார்த்த கதிர், இனி அவள் சுபாஷை விட்டு வர மாட்டாள் என்று புரிந்து கொண்டவன், "நீ என்னோட இப்ப வா. நானே அப்பா கிட்ட பேசி உங்க கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றேன். நம்மைப் பெத்து வளர்த்தவங்க பேச்சைக் கேட்கலைன்னாலும்... அவங்க வயிறை எரிய வச்சிட்டுப் போறது நல்லது இல்ல காவேரி.

"என்னோட உயிரைக் கொடுத்தாவது, நான் கண்டிப்பா உங்களைச் சேர்த்து வைக்கிறேன்..." என்றான்.

அப்போதும் காவேரியும், சுபாஷும் நம்பிக்கை இல்லாமல் அவனைப் பார்க்க... அங்கு நின்று கொண்டிருந்த சந்தியாவை அருகில் இழுத்த கதிர், "உனக்குத் தெரியும்... அத்தை எத்தனை கோவில் ஏறி, இறங்கி விரதம் இருந்து பெத்த பொண்ணு சந்தியான்னு... அவ மேல சத்தியம். உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கிறேன். நம்பி என்னோட வா..." என்றான், சந்தியாவின் தலையில் கை வைத்து.

காவேரிக்குத் தெரியும், கதிர் சந்தியாவை விரும்புவது. அதோடு தான் திருமணம் செய்யப் போகும் பெண் மேல் அண்ணன் சத்தியம் செய்கிறான் என்றால்... உண்மையாகவே தங்களைச் சேர்த்து வைப்பான் என்று



நம்பியவள்... சுபாஷைப் பார்த்து, "நான் அண்ணனோட போறேன்..." என்றாள்.

சுபாஷும் காவேரியின் கண்களில் தெரிந்த நம்பிக்கையைப் பார்த்து, "சரி..." என்றான்.

ஒரு காரில் சந்தியாவையும், காவேரியையும் அழைத்துக் கொண்டு கதிரும், சோலையும் கிளம்பினார்கள். காரில் யாரும் யாரோடும் பேசவில்லை.

நேற்று சோலையின் கடைக்கு வந்த ஒருவன் சுபாஷ் – காவேரியின் காதலைப் பற்றிச் சொல்ல... கதிரிடம் எதற்கும் சொல்லி விடுவோம் என்று செல்லில் அழைத்துச் சோலை விஷயத்தைச் சொன்னான்.

அப்போது அவனுக்குமே சுபாஷும், காவேரியும் இன்று திருமணம் செய்து கொள்ளப் போவது பற்றித் தெரியாது.

எதேச்சையாக இன்று கடைக்குச் சரக்கு வாங்க பக்கத்து ஊருக்குக் கிளம்பிய சோலை சந்தியாவையும், காவேரியையும் பஸ் ஸ்டாண்டில் பார்க்க... காவேரியின் அதிகப்படியான ஒப்பனை அவனுக்குச் சந்தேகத்தைக் கிளப்ப... இருவரையும் தொடர்ந்து சென்றான்.

சோலை சொன்ன விஷயத்தைக் கேட்ட கதிருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

தன் பெற்றோரிடம் சொல்வதை விட... நாமே காவேரியிடம் நேரில் சென்று பேசுவோம் என்று சென்னையில் இருந்து கிளம்பி வந்தான்.

அவன் இரவு தாமதமாகக் கிளம்பியதால்... காலையில் அவன் ஊர் வந்து சேர நேரமாகி விட்டது. அவன் வந்தபோது... காவேரி வீட்டில் இல்லை. அவளும் சந்தியாவும் மதுரைக்குச் சென்றிருக்கிறார்கள் என்று அவன் அம்மா சொன்னபோது கூட... கதிர் பெரிதாக எதையும் நினைக்கவில்லை. அவள் வரட்டும் பேசிக் கொள்வோம் என்றுதான் நினைத்தான்.

ஆனால் சோலை அவனை அழைத்து, "ஊருக்கு வந்துட்டியா மாப்பிள்ளை?" என்றவன், தான் காவேரி யையும், சந்தியாவையும் தொடர்ந்து செல்வதாகச் சொல்ல....

சுபாஷும் அங்கே வருவான் என்ற சந்தேகத்தில் கதிரும் உடனே மதுரைக்குக் கிளம்பினான்.

அவன் நினைத்து வந்தது வேறு. ஆனால் இங்கோ இருவரும் திருமணம் வரை சென்று விட்டனர். தங்க ளுக்குத் தெரியாமல் தங்கள் பிள்ளைகள் திருமணம் செய்து கொள்வது பெற்றோருக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருக்கும். அது இந்த முட்டாள்களுக்குப் புரியவில்லையே... என்று மனதிற்குள் குமுறியபடி கதிர் காரில் உட்கார்ந்திருந்தான்.

சந்தியாவைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவள் தன் உடம்பில் இருந்த சக்தி எல்லாம் வடிந்து... சக்கை யாகச் சுருண்டு போய் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு இன்று நடந்தது அதிகப்படியான அதிர்ச்சியைத் தந்திருந்தது.



காலையில் வீட்டுக்கு வந்த கதிரின் முகம் சரியே இல்லை. அவன் வந்ததில் இருந்து காவேரியைப் பற்றியே விசாரித்தது வேறு லக்ஷ்மிக்குக் கலக்கமாக இருந்தது. அதுவும் வந்ததும் எங்கோ கிளம்பிச் சென்று விட்டான்.

கதிர் இப்படியெல்லாம் நடந்து கொண்டதே இல்லை. அதனால் மதியம் உணவு அருந்த வந்த தன் கணவர் பெரியசாமியிடம் லக்ஷ்மி புலம்ப... அவர் கதிரைச் செல்லில் அழைத்தார்.

"ம்ம்... சொல்லுங்கப்பா. வீட்டுக்குத்தான் வரேன். காவேரி என் கூடத்தான் இருக்கா..." என்று மட்டும் சொல்லி விட்டு கதிர் ஃபோனை வைக்க... பெரியசாமிக்கும் ஏதோ தவறாகவே பட்டது.

பெற்றவர்கள் இருவரும் கலக்கத்தில் இருக்க... அப்போது சந்தியாவின் அம்மா வேதவல்லி அழுது கொண்டே வந்தவர்,

"இவளுங்க ரெண்டு பேரும் வந்துட்டாளுங்களா? எங்க பக்கத்து வீட்டுச் சொந்தக்காரப் பையன் மதுரையில... அந்தக் காலேஜ்லதான் படிக்கிறான். அவன் அவங்களுக்குப் போன் செஞ்சு... சந்தியாவும், காவேரியும் யாரோ ஒரு ஆளோட ஆட்டோவுல போனதாச் சொல்லி யிருக்கான்.

"எனக்கு அதைக் கேட்டதுல இருந்து வயித்தைக் கலக்குது. இவ அப்பாவுக்குத் தெரிஞ்சா... அவளை வெட்டிப் போட்டுடுவாரு..." என்று சொல்லிக் கொண்டி ருக்கும் போதே... வீட்டு வாசலில் கார் வந்து நின்றது.

சந்தியாவும், காவேரியும் உள்ளே வந்ததும் இருவரின் அம்மாமார்களும், ஆளுக்கு ஒரு துடைப் பத்தை எடுத்து இருவரையும் விளாசி விட்டனர். கதிர் யாரையும் தடுக்கும் நிலையில் இல்லை. அவனே விட்டால் கதறி அழும் நிலையில் இருந்தான்.

சோலைதான் பெரியசாமியைத் தனியே அழைத்துச் சென்று நடந்ததைச் சொல்லி, "பார்த்துக்கங்க ஐயா... நான் வரேன்!" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

அவர்கள் பேசியதை லக்ஷ்மியும் வேதவல்லியும் கேட்டு விட்டு சந்தியா, காவேரியை இன்னும் மொத்தி னார்கள்.

பெரியசாமி சிலையாக அமர்ந்து விட்டார். அவருக்குத் தான் எங்கே தவறு செய்தோம் என்று தெரியவில்லை. அவளுக்குத் தேவையானது எல்லாம் பார்த்துப் பார்த்துத்தானே செய்தோம். பின்ன ஏன் இப்படிச் செஞ்சா... என்று மனதிற்குள் தவித்துக் கொண்டிருந்தார்.

நம் நாட்டில் பெற்றோரின் எண்ணம் இதுதான். அவர்கள் பிள்ளைகளுக்காக இரவு, பகல் பார்க்காமல் உழைப்பார்கள். அவர்களுக்குத் தேவையானது எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்வார்கள். ஆனால், பிள்ளைகள் தங்கள் விருப்பப்படிதான் நடக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.

பிள்ளைகளின் மனம்... அவர்களுக்கென்று ஒரு ஆசை, கனவு இருக்கும். திருமணத்தில் மட்டும் இல்லை.



சில பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த படிப்பைக் கூட விட்டு, பெற்றவர்களுக்குப் பிடித்த படிப்பைப் படிப் பார்கள். அதைப் பெற்றவர்களிடம் மனம் திறந்து பேச... பிள்ளைகளுக்குத் தைரியம் இருக்காது. அதை யார் கொடுத்திருக்க வேண்டும்... பெற்றவர்கள் அல்லவா!

எத்தனை பெற்றோர் பிள்ளைகளிடம் மனம் விட்டுப் பேசுகின்றனர். பெற்றவர்கள் மேல் பிள்ளைகளுக்குப் பாசம் இருக்க வேண்டுமே தவிர, பயம் இருக்கக் கூடாது. நம்ம அம்மா, அப்பா கிட்ட சொன்னா... அவங்க பார்த்துப்பாங்க என்ற நம்பிக்கையைப் பெற்றோர் தன் பிள்ளைகளுக்குத் தர வேண்டியது அவசியம் இல்லையா!

காவேரியும் அதைத்தான் சொன்னாள். தன் அப்பாவின் காலைக் கட்டிக் கொண்டு அழுதவள், "பயமா இருந்துச்சுப்பா. அதுதான் சொல்லலை!" என்றாள்.

"சந்தியா முன்பே சொல்லியிருந்தா... இவ்வளவு பெரிய பிரச்சனை வந்திருக்காது..." என்பது போல் லக்ஷ்மி சந்தியாவைக் குறை சொல்ல...

அதைக் கேட்ட வேதவல்லி, "இவங்க பொண்ணுக்கு எங்க போச்சாம் அறிவு..." என்று பதிலுக்குச் சாட, வீடே போர்க்களம் போல் இருந்தது.

வீட்டில் நடந்த பிரச்சனை தெரிந்ததும் பாண்டி யனும் துரையும் வந்து விட்டனர். ஆளாளுக்கு ஒன்று பேச... எல்லோரும் விஷயம் வெளியே தெரிவதற்குள் காவேரிக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்துத்

திருமணம் செய்து விடுவோம் என்றனர். இப்படி ஆளாளுக்கு ஒன்று பேச... பெரியசாமி வாயே திறக்கவில்லை.

எல்லோரும் அவரவர் வீட்டுக்குச் சென்றதும், கதிர் தன் அப்பாவின் எதிரே சென்று உட்கார்ந்தவன், "அவ விரும்பின பையனுக்கே கல்யாணம் செஞ்சு வச்சிடுவோம்ப்பா... அந்தப் பையனுக்கே அவளைக் கல்யாணம் செஞ்சுத் தர்றதா... வாக்குக் கொடுத்துதான் நான் கூட்டிட்டு வந்தேன்.

"அவன் நம்ப ஆளுங்க இல்லைங்கிறத தவிர... அவன்கிட்ட வேற எதுவும் குறை இல்லை. அவன் நல்லாப் படிச்சிருக்கான். நல்ல வேலையிலும் இருக்கான். அதோட அவனுக்குக் காவேரியை ரொம்பப் பிடிச்சிருக்கு. எங்கே அவளை இழந்துடுவோம்ங்கிற பயத்திலதான் அவசரமா கல்யாண ஏற்பாடு செஞ்சிருக்கான்.

"மத்தபடி அவனுக்குக் காவேரியை அவனோட கூட்டிட்டுப் போகணும்னு எண்ணம் இல்லை. அதோட நாம காவேரியை வேற இடத்தில கல்யாணம் பண்ணாலும்... அவ முழு மனசோட வாழ மாட்டாப்பா!" என்று தெளிவாக விளக்க... பெரியசாமி அப்போதும் அமைதியாக இருந்தார்.

மறுநாள் திரும்ப எல்லோரும் அமர்ந்து பேச...

"காவேரியை வேற இடத்தில செஞ்சா... நாளைக்கு அவங்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தா... பெரிய பிரச்சனை ஆகும். பொம்பளப் பிள்ளையைப் பத்தித் தப்பான பேச்சு வந்தா... அது நம்ம குடும்ப கௌரவத்தையும் பாதிக்கும்.



"கல்யாணம் வரை போயிட்டாங்க. இனி எனக்கு வேற இடத்தில செய்ய மனசு இல்லை. அதனால அந்தப் பையனுக்கே செஞ்சு வச்சிடலாம்னு பார்க்கிறேன்."

பெரியசாமி சங்கடத்துடன் சொன்னபோது... அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் மற்றவர்கள் இல்லை.

"இந்தக் கழுதை சொன்ன பேச்சுக் கேட்கலைன்னா.. கழுத்தைத் திருகிக் கொல்லுங்க. இல்லன்னா... கல்யாணம் ஆகாம வீட்டுலயே கிடக்கட்டும். ஆனா வேற ஜாதிக் காரனுக்குக் கட்டித் தர்ற வேலை வேண்டாம்." - பாண்டியன் துள்ள...

"அடப் பாருங்கப்பா! அடுத்தவன் பிள்ளைன்னா கொல்லச் சொல்வீங்களோ... இந்தக் காலத்துப் பிள்ளைங்களை நம்பி வார்த்தையை விடாதே பாண்டியா. நீயும் ரெண்டு பிள்ளைங்களை வச்சிருக்க. நாளைக்கு உனக்கும் இதே நிலைமை வரலாம். ஞாபகம் இருக்கட்டும்." பெரியசாமியின் மச்சினர் பேச (அவர் கதிரின் தாய் மாமா)... பாண்டியனும் துரையும் அவருக்கு எதிராக நின்றனர்.

துரையைப் பார்த்துக் கதிரின் மாமா, "உங்க பொண்ணும் சேர்ந்து செஞ்ச வேலைதானே..." என்றபோது துரை அவரை அடிக்கவே வந்து விட்டார்.

இரண்டு பக்கமும் வாய்த் தகராறு தடித்து, ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் சாடிக் கொண்டனர். இறுதியாக எல்லோரும் ஒரு வழியாகப் பேச்சு வார்த்தையை முடித்தபோது...

காவேரி – சுபாஷ் திருமணம் நடப்பது உறுதி செய்யப்பட்டது.

கதிர் – சந்தியாவின் திருமணம் அந்தரத்தில் நின்றது.

சுபாஷின் பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். பண்பு நிறைந்தவர்கள். அவர்கள் தங்கள் மகன் செய்த செயலுக்குப் பெரியசாமியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். இரு குடும்பத்தாரும் சேர்ந்து பேசி அடுத்த வாரத்திலேயே... நெருக்கமான உறவினர்களை மட்டும் அழைத்து... திருமணம் செய்வது என்று முடிவு செய்து, அதன்படியே திருமணமும் நடந்து கொண்டிருந்தது.

வேறு வேறு ஜாதி என்பதால் உறவினர்கள்... இரு குடும்பத்திற்கும் இடையே ஏதாவது பிரச்சனை உண்டு பண்ண... அதற்குச் சுபாஷின் பெற்றோர் இடம் தர வில்லை. அவர்கள் சொந்தக்காரர்கள் வந்து ஏதாவது குறை சொன்னால்... அவங்க வழக்கப்படியே செய்யட்டும் என்று விட்டுக் கொடுத்தனர்.

சந்தியா அன்றைக்குப் பிறகு இன்றுதான் கதிரைப் பார்க்கிறாள். அவன் அவளைக் கண்டுகொள்ளாமல் இருந்தான்.

கதிர் சுபாஷுடன் பேசினாலும், காவேரியுடன் பேசவில்லை. அதைப் பார்த்த சந்தியா என் மேலயும், காவேரி மதினி மேலயும் இருக்கிற கோபம் இன்னும் போகல போல... என்று நினைத்துக் கொண்டாள்.

எல்லோரும்... சந்தியாவும் காவேரிக்கு உதவி செய்ததாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தனர். சந்தியா அதை மறுத்து எதுவும் சொல்லவில்லை. ஏற்கெனவே காவேரியின் மீது கோபமாக இருக்கும் தன் பெற்றோர், இது வேறு தெரிந்தால்... இன்னும் கோபப்படுவார்கள் என்று மறைத்து விட்டாள்.

துரையும் பாண்டியனும் பெரியசாமியை விட்டுக் கொடுக்க முடியாமல்தான் திருமணத்திற்கு வந்திருந்தனர். திருமணம் முடிந்த உடனேயே துரை கிளம்ப... அவரோடு வேதவல்லியும் சந்தியாவும் கிளம்பினார்கள்.

சந்தியாவின் கண்கள் கதிரைத் தேடிப் பிடித்தது. அப்போது கதிரும் சந்தியாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கண்களில் தெரிந்தது என்ன? இப்போது வரை சந்தியாவுக்குப் புரியவில்லை.

## 7

சந்தியா சொல்லி முடித்துச் சித்தார்த்தைப் பார்க்க...

அவன், "உங்க அப்பா உன்னை ஒன்னும் சொல்லலையா?" என்றான்.

"ம்ம்... அவரும் கொஞ்ச நாள் என் மேல கோபமாத்தான் இருந்தார். இருந்தாலும் நான் அவர்

பெண்ணில்லையா? அதனால கொஞ்ச நாள்ல சரியாகிட்டார்..." என்றாள்.

சித்தார்த்துக்குக் காவேரி திருமணத்தைத் தவிர வேறு ஏதோ பிரச்சினை... இரு குடும்பத்திற்கும் இடையே இருக்கும் என்றே தோன்றியது. கதிரே அதைப் பற்றிச் சந்தியாவிடம் சொல்லாமல் இருக்கும் போது... நாம் அவளைத் தூண்டி விட வேண்டாம். கதிரே பார்த்துக் கொள்ளட்டும் என்று நினைத்தான்.

அந்த வார ஞாயிற்றுக் கிழமை சந்தியா ஹாஸ்டலில் பாட்டுக் கேட்படி மெதுவாக அவள் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அவள் செல் அழைத்தது. எடுத்துப் பார்த்தால் கதிரின் எண்.

மனதிற்குள் பட்டாம்பூச்சி பறக்க... சந்தியா ஆவலாக ஃபோனை எடுக்க... நீ இவ்வளவு சந்தோஷம் எல்லாம் படாதே என்பது போல்... அந்தப் பக்கம் அவள் ஆச்சியின் குரல் கேட்டது.

"சந்தியா, நீ இங்க வர்றியா கண்ணு? நானும் தாத்தாவும் இன்னைக்கு ஊருக்குப் போறோம்..." என்றார்.

"சரி வரேன், ஆச்சி!" போனை வைத்தவள், நிதானமாகக் கிளம்பிச் சென்றாள்.

அவள் கதிர் வீட்டுக்குச் சென்று சேர்ந்தபோது மணி மூன்று.

அவள் வருவாளென்று ஆச்சி சாப்பிடாமல் காத்துக் கொண்டிருக்க... சந்தியா சாப்பிட்டுத்தான் கிளம்பினேன் என்றாள்.



இங்கே சாப்பிடக் கூடாது என்று அங்கேயே சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறாள் என்று எல்லோருக்கும் புரிந்தது. போன முறை சந்தியா வந்தபோது, தான் சாப்பிடு என்று சொல்லவில்லை. அதனால்தானோ என்று லக்ஷ்மிக்குக் குற்ற உணர்ச்சியாக இருந்தது.

"உன்னைக் கவனிக்க உங்க ஆச்சி இருக்காங் கன்னுதான் சந்தியா... நான் பேசாம இருந்தேன்..." என்றார் லக்ஷ்மி அவராகவே.

"இருக்கட்டும், அத்தை. நம்ம வீடுதானே. பசிச்சா நானே போட்டுச் சாப்பிடப் போறேன். நான் என்ன விருந்தாளியா... கவனிக்க!" என்று சாதாரணமாகச் சொன்னவள்... அவள் மாமா இருந்த அறைக்குள் சென்றாள்.

பெரியசாமிக்கு இப்போது பேச்சு நன்றாகவே வந்தது. அவர் யாரையாவது பிடித்துக் கொண்டு நடக்கும் அளவிற்கு முன்னேறி இருந்தார்.

தன் மாமாவின் முன்னேற்றம் சந்தியாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

மாலை ஐந்து மணிக்குச் சந்தியா ஹாஸ்டலுக்குக் கிளம்பிச் சென்றாள். இதுவே வாடிக்கையானது.

சந்தியாவின் வருகையைப் பெரியசாமி ஆவலாக எதிர்பார்ப்பதால்... அவரைப் பார்ப்பதற்காக வாரத்தில் ஒரு நாள் கதிர் வீட்டிற்கு வரும் சந்தியா... அங்கே சாப்பிட மாட்டாள். அதே போல் கதிரையும் கண்டு கொள்ளாமல் இருந்தாள். கதிரும் அமைதியாக ஒதுங்கிச் சென்றான்.

ஒரு நாள் லக்ஷ்மி இல்லாதபோது சந்தியா தன் மாமனிடம் கதிரைப் பற்றி முறையிட்டாள்.

"மாமா, நான் சின்னதுல இருந்து கதிர் மாமா வைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு நினைச்சிருந்தேன். ஆனா, கதிர் மாமா எங்க கல்யாணம் நடக்காதுன்னு சொல்றாங்க. நீங்களே நியாயத்தைச் சொல்லுங்க மாமா..."

சந்தியா சொன்னதைக் கேட்ட பெரியசாமி திரும்பிக் கதிரைப் பார்க்க... அவன் அங்கிருந்த ஜன்னல் வழியாக வெளியே வெறித்தபடி இருந்தான். அவன் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தது.

அவன் மனதிற்குள் ஒரு எரிமலையை அடக்கிக் கொண்டிருக்கிறான் என்று தெரியும். மகனைப் பார்க்கப் பெரியசாமிக்கு வேதனையாக இருந்தது.

"நான் நியாயம் சொல்ற தகுதியை இழந்து ரொம்ப நாளாச்சும்மா..." என்றார் பெரியசாமி விரக்தியாக.

சந்தியா அவரைப் புரியாமல் பார்க்க... "காலம் எல்லாத்தையும் மாத்தும் சந்தியா. நாம நல்லதையே நினைப்போம். நீ சங்கடப்படாம இரு..." என்றார்.

இப்படியே சிறிது நாட்கள் செல்ல... ஒரு நாள் சந்தியா கதிர் வீட்டுக்குச் சென்றபோது, அங்கே காவேரியும் சுபாஷும் தங்கள் மகன் தருணுடன் வந்திருந்தனர்.

சந்தியாவும், காவேரியும் திடீரென்று ஒருவரை ஒருவர் பார்த்ததும் என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாக இருந்தனர்.



சுபாஷ் சந்தியாவைப் பார்த்து, "நல்லா இருக்கியா?" என்று கேட்க,

சந்தியா நன்றாக இருப்பதாகத் தலையசைத்தவள், வழக்கம் போல் அவள் மாமாவோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பி விட்டாள்.

கதிரையும் சந்தியாவையும் கவனித்த சுபாஷுக்கு ஏதோ சரியில்லை என்று புரிந்தது.

கதிர் சுபாஷைப் பார்த்து, "வாங்க..." என்று கேட்ட தோடு சரி. அதன் பிறகு அவனாக எதுவும் பேசவில்லை. சுபாஷாக ஏதாவது கேட்டால் பதில் சொன்னான்.

இப்படி இருப்பவனிடம் எப்படிப் பேசுவது என்று யோசித்த சுபாஷ், "சந்தியாவுக்கு எதுவும் தெரியாது. காலேஜுக்குப் போறோம்னு சொல்லித்தான் காவேரி அவளைக் கூட்டிட்டு வந்தா..." என்றான், ஒரு வேளை கதிர் அதனால்தான் சந்தியா மீது கோபமாக இருக்கிறானோ என்று நினைத்து.

"தெரியும்..." என்று ஒரு வார்த்தையில் பதில் சொன்ன கதிர், மேலும் அங்கிருக்காமல் எழுந்து, தன் அப்பாவின் அறைக்குள் சென்று விட்டான்.

அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மி காவேரியைப் பார்த்து முறைத்தார்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்த சுபாஷ், பக்கத்து அறையில் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த தன் மகனின் அருகில் சென்று படுத்தவன், தலைக்குப் பின்

தன் இரண்டு கைகளையும் கொடுத்து... விட்டத்தை வெறித்தபடி இருந்தான்.

அறைக்குள் வந்த காவேரி, அவன் அருகில் சென்று அமர்ந்தாள். "என்ன ஒரு மாதிரி இருக்கீங்க?"

"ம்ம்... நம்ம விஷயத்துல தேவையில்லாம சந்தியாவை இழுத்து விட்டுட்டோமோன்னு தோணுது!" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு காவேரி மௌன மாக...

"உங்க அண்ணன் நம்மகிட்ட சரியாப் பேச லைன்னா பரவாயில்லை. நாம தப்பு செஞ்சோம். அவருக்கு நம்ம மேல கோபம் இருக்கும். அது நியாயம் தான். ஆனா... சந்தியாவோட ஏன் பேசலை? சந்தியா வுக்கு எதுவும் தெரியாதுன்னு சொன்னா... எனக்குத் தெரியும்னு சொல்றார். பிறகு இவங்க ரெண்டு பேருக்கும் நடுவுல வேற என்ன பிரச்சனை?" என்று குழம்பியவன்,

"நீ இன்னும் கொஞ்ச நாள் இங்கதானே இருப்ப? அவங்க ரெண்டு பேரும் எப்படி இருக்காங்கன்னு கவனிச்சு வை..." என்றான்.

காவேரியும், "சரி..." என்றாள்.

சுபாஷ் அன்று இரவே விஜயவாடா திரும்பி விட, காவேரி தன் மகனுடன் அங்கிருந்தாள்.

திருமணத்திற்குப் பிறகு பிறந்த வீட்டிற்கு வரும் பெண்களுக்கு நடக்கும் சீராடல் எதையும் காவேரி



இதுவரை அனுபவிக்கவில்லை. பெரியசாமிக்கு உடம்பு முடியாமல் போனதும் காவேரியும், சுபாஷும் வந்து பெரியசாமியைப் பார்த்தனர்.

அப்போது லக்ஷ்மி காவேரியிடம், "இனி நீ இங்கே வராதே. உன்னைப் பார்த்தா அவர் திரும்ப டென்ஷன் ஆவார். அது அவர் உடல் நிலைக்கு நல்லதில்லை..." என்று சொல்லிக் காவேரியை அனுப்பி விட்டார்.

அதன் பிறகு காவேரி இப்போதுதான் வருகிறாள். காவேரியின் பிரசவத்தைக் கூட விஜயவாடாவிலேயே பார்த்துக் கொண்டனர். காவேரியின் மகனுக்கு இப்போது ஒன்பது மாதம். என்னதான் புகுந்த வீட்டில் தங்கத் தட்டிலேயே வைத்துத் தாங்கினாலும், பெண்களுக்குப் பிறந்த வீட்டில் கிடைக்கும் சுகம் தனி அல்லவா!

ஏனென்றால் அங்கே அம்மா என்று ஒருவர் இருப்பார். பிறந்த வீட்டிற்கு வரும் பெண்ணிற்கு வாய்க்கு ருசியாக வித விதமாகச் சமைத்துப் பரிமாறி... அவள் குழந்தைகள் பின்னே ஓடி... அவர்களுக்குச் சோறு ஊட்டி... எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வார். அதனால் பிறந்த வீட்டுக்கு வரும் பெண்கள் சந்தோஷமாக, நிம்மதியாகத் தங்கள் பிள் ளைகள் பற்றி எந்தக் கவலையும் இன்றி இருப்பார்கள்.

அதை எதிர்பார்த்துத்தான் காவேரியும் வந்திருந் தாள். சுபாஷும், அவன் பெற்றோரும் அவளை நன்றாகத் தான் பார்த்துக் கொண்டனர். இருந்தாலும் அவளுக்கு ஏதோ குறையாகவே இருந்தது.

இத்தனை நாள் அவள் அப்பாவை நினைத்துத்தான் வரத் தயங்கினாள். இப்போது அவள் அப்பாவிற்கும் உடல் நிலையில் முன்னேற்றம் இருப்பதால்... அவரையும் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று வந்திருந்தாள்.

அப்படி வந்தவள் இரண்டு நாட்களிலேயே ஏன் இங்கு வந்தோம் என்று நினைக்க ஆரம்பித்திருந்தாள்.

லக்ஷ்மிக்கு அவளோடு ஆற அமர உட்கார்ந்து பேச நேரம் இல்லை. அவர் சமையலையும் கவனித்து, வீட்டு வேலையும் பார்த்து, அதோடு பெரியசாமியையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

பெரியசாமிக்குக் காய்கறி சூப், பத்திய சமையல் என்று அவருக்கு வேலையின் பட்டியல் நீண்டு கொண்டே சென்றது.

கதிரைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவன் காலையில் எழுந்து, அவன் அப்பாவுக்குப் பல் தேய்க்க... குளிக்க, உடை அணிய, சாப்பிட உதவி விட்டுப் பின் தானும் கிளம்பி அலுவலகம் செல்பவன், இரவு எட்டு மணிக்கு மேல்தான் வீடு திரும்புவான்.

வீட்டிற்கு வந்ததும் அவன் அப்பாவோடு சிறிது நேரம் செலவழிப்பான்.

பிறகு இரவு உணவு அருந்தி விட்டு, அவன் மடிக் கணினியில் வேலை பார்க்க ஆரம்பித்து விடுவான்.

நள்ளிரவு வரை வேலை பார்த்து விட்டுத் தான் தூங்குவான்.



இதில் அவனுக்குத் தருணைக் கவனிக்க எல்லாம் நேரம் இல்லை. காவேரியின் மீது கோபம் இருந்த போதும், அவன் தருணைத் தள்ளி வைக்கவில்லை. குழந்தை தவழ்ந்து அவனிடம் வந்தால்... சிறிது நேரம் தூக்கி வைத்திருப்பான். அவ்வளவுதான் அவனால் முடிந்தது.

அதனால் இங்கே காவேரியே முழு நேரமும் தருணின் பின்னால் ஓட வேண்டியது இருந்தது. தருண் மிகவும் துறுதுறுப்பானவன். ஒரு இடத்தில் இரண்டு நிமிடங்களுக்கு மேல் இருக்க மாட்டான்.

அங்கிருந்தாலாவது சுபாஷும், அவன் பெற்றோரும் தருணைப் பார்த்துக் கொள்வார்கள். இங்கே அதற்கும் வழியில்லாமல் காவேரி அல்லாடினாள்.

பிறந்த வீட்டிற்கு வந்து சீராட முடியவில்லை என்ற ஏக்கம் ஒரு புறமும், தன் விருப்பத்திற்குத் திருமணம் செய்து கொண்டதால் தள்ளி வைக்கிறார்களோ என்று குற்ற உணர்ச்சி ஒரு புறமும் காவேரியின் மனதை அரிக்க... ஒரு நாள் வாய் விட்டே கேட்டு விட்டாள்.

"ஏன்மா என்னோட நேரம் செலவு செய்ய மாட்டேங் கறீங்க? தருணைக் கூடக் கவனிக்க மாட்டேங்கறீங்க. நாங்க வேண்டாத விருந்தாளியா?" என்றாள் அழுகை யுடன்.

லக்ஷ்மிக்கு அவள் சொல்ல வருவது புரிந்தது. அவருக்கு அவள் மேல் அதிகமான கோபம் இருந்தது உண்மைதான். ஆனால் அவரால் அதைப் பிடித்து

வைத்திருக்க முடியவில்லை. காவேரியின் மீது இருந்த கோபம், தருணைப் பார்த்ததும் காற்றில் கரைந்த கற்பூரமாய் மறைந்திருந்தது. அதுதான் தாய் உள்ளம்.

"நீ செஞ்சதை அவ்வளவு சீக்கிரம் மறந்துட முடியுமா? நீ மட்டும் ஓடிப் போய்க் கல்யாணம் பண்ணியிருந்தா... காலம் முழுசும் இன்னாரோட பொண்ணு ஓடிப் போயிருச்சுன்னு தான் பேரா இருந்திருக்கும். எந்தச் சாமி புண்ணியமோ உங்க அண்ணன் நேரத்துக்கு வந்தான்.

"இல்லைன்னா... உங்க அப்பா உயிரோட இருந்திருப்பாருன்னு நினைக்கிறியா! அதை நினைச்சாலே எனக்கு மனசெல்லாம் பதறுது. உன் மேல வருத்தம் இன்னும் இருக்குதான். இல்லைன்னு சொல்ல மாட்டேன். ஆனா... அதனால உன்னைக் கவனிக்காம இருக்கலை. நீயே பார்க்கிற எனக்கு எவ்வளவு வேலை இருக்குன்னு...

"வேலைக்கு ஆள் வச்சுப் பார்க்கும் நிலையில நாம இப்ப இல்லை. எனக்கும் தருணோட நேரம் செலவு பண்ணணும்னு ஆசை இருக்கு. ஆனா, இப்ப முடியாது. முதல்ல உங்க அப்பாவுக்கு உடம்பு சரியாகட்டும்..." என்றவர் தொடர்ந்து,

"தப்பு செஞ்ச உனக்கே... நான் உன்னோட பேசாம இருக்கிறது கோபம் வருதே... ஆனா, சந்தியாகிட்ட எத்தனை தடவை என்னோட கோபத்தைக் காமிச்சிருக்கேன் தெரியுமா! ஒரு முறை கூட... அவ எனக்கு இந்தக் கல்யாணத்தைப் பத்தித் தெரியாதுன்னு வாய் திறந்து சொல்லலை...



"நான் எத்தனை முறை அவளை அலட்சியப்படுத்தி இருக்கேன். அப்பாவும் அவ அமைதியாத்தான் இருப்பா. அவ மட்டும் எனக்கு இந்தக் கல்யாணத்தைப் பத்தித் தெரியாது. உங்க பொண்ணு என்னை ஏமாத்திட்டுக் கூட்டிட்டுப் போனானு சொல்லியிருந்தா... எனக்குத்தானே அசிங்கம். நான் என் மூஞ்சியை எங்க கொண்டு வச்சிக்கிறது சொல்லு!" என்றார் காவேரியைப் பார்த்து.

காவேரி தலை குனிய...

"ரொம்ப நல்ல பொண்ணு சந்தியா. அவ உங்க அண்ணனைக் கல்யாணம் பண்ணி நம்ம வீட்டுக்கு வர நாம கொடுத்து வச்சிருக்கணும்..." என்றவர், கதிர் வரும் நேரம் என்பதால்... எழுந்து இரவு உணவு சமைக்கச் சமையல் அறைக்குச் சென்றார்.

கதிர் இன்று சற்று முன்பே வந்தவன்... காவேரியும், அவன் அம்மாவும் பேசியது அனைத்தையும் வெளியே நின்று கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

வீட்டிற்குள் வந்த கதிர், அவர்கள் பேசியது எதையும் கேட்டதாகக் காட்டிக் கொள்ளாமல்... அமைதியாக அவன் வேலையைப் பார்த்தான்.

இரவு கதிர் ஹால் சோபாவில் அமர்ந்து, தன் மடிக் கணினியில் வேலை பார்க்க... காவேரி, தன் மகனுக்குத் தரையில் அமர்ந்து பால் சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

தருணின் கவனமெல்லாம் சற்றுத் தள்ளியிருந்த தண்ணீர் டம்ளரைக் கைப்பற்றுவதிலேயே இருந்தது.

அவன் மெதுவாக நகர்ந்து அதை எடுத்துப் பார்க்க... காவேரி அவனுக்கு வேகமாக ஒரு வாய் உணவு கொடுத்து விட்டுத் தண்ணீரை அவன் கைகளுக்கு எட்டாத தொலைவில் தள்ளி வைத்தாள்.

இப்படி அவனை ஏமாற்றித்தான் அவனுக்கு உணவு ஊட்ட முடிந்தது. சிறிது நேரத்தில் தாயின் தந்திரத்தைப் புரிந்து கொண்ட தருண்... அதன் பிறகு உணவு வாங்க வாயே திறக்கவில்லை.

தருணுடன் போராடிய காவேரிக்கு எரிச்சலாக இருந்தது. அந்த நேரம் பார்த்துத் தருண் டம்ளரைத் தட்டிவிட... அதிலிருந்த தண்ணீர் முழுவதும் கொட்டியது. காவேரி கோபத்தில் தருணின் முதுகில் பட்டென்று அடி வைத்து, "சொன்ன பேச்சுக் கேட்கவே மாட்டேங்குது. இந்த வயசுலேயே எவ்வளவு பிடிவாதம்..." என்றாள்.

அடி வாங்கிய தருண் சத்தமாக அழுதான். லக்ஷ்மி வந்து அவனைத் தூக்கிக் கொண்டு சென்றார்.

கதிர் நிமிர்ந்து காவேரியைப் பார்த்து முறைத்தவன், "சின்னக் குழந்தை அவனுக்கு என்ன விவரம் தெரியும்... அவன் உன் பேச்சைக் கேட்கலைன்னு அடிக்கிறியே... உனக்கு நம்ம அப்பா ஊர்ல எவ்வளவு முக்கியமான மனுஷன்னு தெரியாது... நம்ம குடும்பத்தைப் பத்தித் தெரியாது. அப்படித் தெரிஞ்சிருந்தும் வீட்டுக்குத் தெரியாம கல்யாணம் பண்ணத் துணிஞ்சிருக்க... உன்னை என்ன பண்றது?" என்றான் கோபமாக.



"இன்னும் எத்தனை நாளுக்கு அதையே சொல்லிக் காட்டுவீங்க? இப்ப அதனால என்ன ஆச்சு?" என்று காவேரி அலட்சியமாகக் கேட்க...

"என்ன ஆச்சா? நீ ஏன் கேட்க மாட்டே... எப்பவும் நீ உன்னைப் பத்தித்தானே கவலைப்படுவ. உனக்கு யாரு எப்படிப் போனா என்ன? நம்ம அப்பா இப்படி இருக்கிறது உன் கண்ணுக்குத் தெரியலையா?" என்றான் கதிர் பதிலுக்கு ஆத்திரமாக.

காவேரி, "அவருக்கு வயசாகிடுச்சு. வயசானா இப்படி ஏதாவது வரத்தான் செய்யும். அதுக்கு நானா பொறுப்பு?" என்றாள்.

கதிரின் கண்கள் கோபத்தில் சிவந்தன. "காவேரி மேடம், இப்ப ஒண்ணு தெரிஞ்சிக்குங்க. அப்பா இப்படி ஆனதுக்குக் காரணம் நீங்கதான். நீ என்னைக்கு வீட்டுக்குத் தெரியாம கல்யாணம் செய்யப் பார்த்தியோ அன்னையில இருந்து அவர் சுகர் மாத்திரை, பிரஷர் மாத்திரை எல்லாம் போடாம இருந்திருக்கார். நீ அவருக்கு வாழற ஆசையே இல்லாம பண்ணிட்ட..." என்றான் குரல் அடைக்க.

காவேரிக்கும் இந்த விஷயம் அதிர்ச்சிதான். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"காதலிக்கிறது அவ்வளவு தப்பாண்ணே! அப்பா ஏன் இப்படி ஒரு முடிவெடுத்தார்?"

"காதலிக்கிறது தப்பில்லை. ஆனா, நீ அதை வீட்டுல சொல்லாம மறைச்சு... ஓடிப் போய்க் கல்யாணம்

பண்ணப் பார்த்ததுதான் தப்பு. அவர்கிட்ட நீ உன் காதலைச் சொல்லி அதை அவர் மறுத்திருந்தா... நீ வேற முடிவுக்குப் போறதுல ஒரு நியாயம் இருக்கு. ஆனா, நீ அவருக்கு அப்படி ஒரு வாய்ப்பபே குடுக்கலையே!

"நம்ம அப்பா நம்மை விட்டு எங்காவது வெளியூர் சுத்திப் பார்க்கப் போய்ப் பார்த்திருக்கியா? இல்லை, அவருக்குன்னு தனியா ஏதாவது செஞ்சு பார்த்திருக்கியா? அவரோட உலகமே நம்ம குடும்பம்தான். அப்படிப் பட்டவருக்குத் தன் பொண்ணு தனக்குத் தெரியாமக் கல்யாணம் பண்ண நினைச்சது எவ்வளவு அதிர்ச்சியா இருந்திருக்கும்.

"அவர் நினைச்சிருந்தா உன்னைக் கட்டாயப்படுத்தி வேற யாருக்காவது கல்யாணம் செஞ்சு வச்சிருக்க முடியும். அவர் அந்த நிலையிலும் உன்னைப் பத்திதான் யோசிச்சார். ஆனா, நீ அவரைப் பத்தி யோசிச்சியா காவேரி?" என்று கதிர் கேட்டதும்...

காவேரி, "நான் செஞ்சது தப்பு தாண்ணே..." என்றவள், தன் தந்தை இருந்த அறைக்குச் சென்று, அவர் அருகில் உட்கார்ந்து அழுதாள்.

பெரியசாமி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். திடீரென்று காவேரி வந்து அழுததும், அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன்ப்பா... இப்படிப் பண்ணீங்க? ஏன் மாத்திரை சாப்பிடாம இருந்தீங்க? நான்தானே தப்பு செஞ்சேன்.



அம்மா, அண்ணன் எல்லாம் என்ன பண்ணாங்க?" என்றாள் அழுகையுடன்.

பெரியசாமி, "சரி விடு. அது முடிஞ்சு போனது. இப்ப எதுக்கு அதைப் பத்திப் பேசிட்டு... நான்தான் நல்லா ஆகிட்டேனே...." என்றவர், லக்ஷ்மியிடம் இருந்த தருணைப் பார்த்து, "வா..." என்றார்.

லக்ஷ்மி தருணைத் தூக்கிச் சென்று, கட்டிலில் அவரின் அருகே உட்கார வைக்க... பெரியசாமி பேரனோடு விளையாட ஆரம்பித்தார்.

அவர் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைப் பார்த்து, மற்றவர்கள் முகமும் மலர்ந்தது.

அன்றைக்குப் பிறகு வீட்டில் பழைய கலகலப்பு திரும்பியது. முன்பு அவர்கள் ஊரில் இருந்த அளவு இல்லையென்றாலும்... ஓரளவுக்கு எல்லோரின் மன இறுக்கமும் தளர்ந்திருந்தது.

காவேரியும், தன் தவறை உணர்ந்தது போல் நடந்து கொண்டாள். அவள் சமையலைப் பார்த்துக் கொள்ள... லக்ஷ்மிக்குப் பேரனோடு செலவு செய்ய நேரம் கிடைத்தது.

## 8

சந்தியா வெற்றிகரமாக இரண்டாம் வருடப் படிப்பை முடித்து விடுமுறைக்குத் தன் கிராமத்திற்குச் சென்றாள். அவளைப் பார்த்ததும் அவள் வீட்டினர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

சென்ற ஆண்டு அவள் இரண்டு முறை மட்டும்தான் ஊருக்கு வந்திருந்தாள்.

சந்தியா ரொம்ப நாள் கழித்து வீட்டுக்கு வந்ததால்... வீட்டில் அனைவரிடமும் செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தாள். சந்தியா வந்திருப்பதால் அன்று மதியம் அவர்கள் வீட்டில் விருந்து தடபுடலாக இருந்தது.

அனைவரும் சேர்ந்து அமர்ந்து உணவு அருந்தும் போது... சந்தியா அவள் சென்று பெரியசாமியைப் பார்த்து விட்டு வந்ததைப் பற்றிச் சொல்ல... அதைக் கேட்டதும் சந்தியாவின் அப்பா துரையின் முகம் மாறியது.

சந்தியா அதைக் கவனிக்காமல் பேசுவதைத் தொடர்ந்தாள். "மாமா இப்ப முன்ன மாதிரி இல்லை. நல்ல முன்னேற்றம் இருக்கு. எல்லாத்துக்கும் காரணம் கதிர் மாமாதான். அவங்க அப்பாவை அவங்க எப்படிப் பார்த்துக்கிறாங்க தெரியுமா!" என்றாள் பெருமையாக.

அதுவரை மௌனமாக இருந்த துரை, "நான் தான்... அவங்க உன் மேல கோபமா இருக்காங்க. அங்கே போகாதேன்னு சொன்னேன்ல..." என்றார் கோபத்தை அடக்கிய குரலில்.

அப்போதும் அதைப் புரிந்து கொள்ளாத சந்தியா, "மாமா உடம்பு முடியாம இருக்கும்போது... நானும் அதே ஊர்ல இருந்துட்டு எப்படிப்பா பார்க்காம இருக்க முடியும்? பெரிய மாமா என்கிட்ட நல்லாத்தான் பேசினாங்க. அத்தை தான் முதல்ல சரியாவே பேசலை. இப்ப அவங்களும் என்கிட்ட நல்லாப் பேசுறாங்க..." என்றாள் மகிழ்ச்சியாக.



அவள் பேசப் பேச... துரையின் முகம் கடுமையாக மாறியது. அவர், "கதிர் எப்படி உன் கிட்ட நல்லாப் பேசுறானா?" என்றார் ஒரு மாதிரிக் குரலில்.

சந்தியா கதிர் பேசவில்லை என்று சொன்னால் தன் அப்பா கோபிப்பாரோ என்று பயந்தாள். அதனால், "நல்லாப் பேசுறாங்களே..." என்றாள் கதிரை விட்டுக் கொடுக்காமல்.

அவ்வளவுதான். தன் முன்னால் இருந்த தட்டைத் தள்ளிக் கொண்டு கோபமாக எழுந்த துரை, வேத வல்லியைப் பார்த்து, "உங்க அண்ணன் குடும்பத்துக்கு மான ரோஷமே கிடையாதா? நான்தான் அன்னைக்கு அவ்வளவு சொன்னேனே... உன் பொண்ணுக்கு வேற ஜாதிக்காரனைக் கல்யாணம் செஞ்சா... என் பொண்ணை உன் பையனுக்குத் தர மாட்டேன்னு...

"அப்புறம் எந்த முகரையை வச்சிக்கிட்டு உன் அண்ணனும், அண்ணன் மகனும் என் பொண்ணுகிட்ட பேசுறானுங்க... என் மகளை மயக்கி உங்க அண்ணன் மகன் கல்யாணம் செய்யப் பார்க்கிறானா? அது நான் உயிரோட இருக்கும்வரை நடக்காது.

"உன் அண்ணன் குடும்பத்தோட உறவு முறிஞ்சது, முறிஞ்சதுதான். நான் அதை வெளியே காமிக்காம இருக்கிறதே பெரிசு. இதுல உங்க அண்ணனுக்கு என்னோட சம்பந்தம் செய்யும் ஆசை வேற இருக்கா?" என்று காட்டுக் கத்தலாகத் துரை கத்த...

வேதவல்லியும், அவர் மாமியாரும் பதற்றத்தோடு அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்க...

சந்தியா அதிர்ச்சியில் உறைந்து போய் இருந்தாள். அவளுக்கு இன்னும் நம்ப முடியவில்லை. தன் அப்பாவா இப்படிப் பேசினார் என்று!

அதிர்ச்சியில் இருந்து சந்தியா விலகும் முன், "இனி ஒரு தரம் நீ உங்க மாமனைப் பார்க்கப் போறது தெரிஞ்சது... நீ படிச்சுக் கிழிச்சது போதும்னு... இப்பவே ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கட்டி வச்சிடுவேன். ஜாக்கிரதை!" என்று துரை கோபத்துடன் சந்தியாவிடம் சொல்ல...

தன் மனதில் இருப்பதைச் சொன்னால், அவள் அப்பா புரிந்து கொள்வார் என்று நினைத்த சந்தியா, "நீங்கதானப்பா... கதிர் மாமாவுக்கு என்னைக் கல்யாணம் பண்ணித் தரப் போறதாச் சொன்னீங்க. சின்ன வயசுல இருந்து நான் அதையே மனசுல நினைச்சிட்டு இருக்கேன்..." என்றாள் மெதுவாக.

"உன்னைக் கதிருக்குக் கல்யாணம் பண்ணப் போறதா... உன்கிட்ட நான் எப்ப சொன்னேன்? நாங்க ஏதோ பெரியவங்க எங்களுக்குள்ள பேசிக்கிட்டோம். அது இப்போ இல்லைன்னு ஆகிடுச்சு. நீ படிச்சு முடிச்சதும், நான் உனக்கு டாக்டர் மாப்பிள்ளையே பார்த்துக் கட்டி வைக்கிறேன்..." என்றார் திமிராக.

உண்மையில் கதிரிடமோ, சந்தியாவிடமோ யாரும் உங்கள் இருவருக்கும் திருமணம் செய்யப் போகிறோம் என்று நேரடியாகச் சொன்னதில்லை தான். ஆனால் இவர்கள் பேசியதை நம்பி மனதில் ஆசையை வளர்த்துக் கொண்ட நாங்கள் முட்டாளா என்று சந்தியாவிற்கு ஆத்திரம் வர... அவள் தன் அப்பாவை எதிர்த்துப் பேசத் துணிந்தாள்.



அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த வேதவல்லி, அவள் கையைப் பிடித்து அழுத்தி, "இப்ப எதுவும் பேசாதே..." என்றவர் தன் கணவரிடம் திரும்பி, "அவளுக்கு என்ன தெரியும்? அவ சின்னப் பொண்ணு. நாம பேசினதை வச்சுச் சொல்றா. நீங்க சொன்னாக் கேட்கப் போறா..." என்றவர், தன் கணவருக்கு வேறு தட்டு வைத்து உணவு பரிமாற... சந்தியாவும் மேலும் எதுவும் பேசாமல் மௌனமானதால்... துரையும் அமைதியாகச் சாப்பிட உட்கார்ந்தார்.

துரை சாப்பிட்டு விட்டுச் சிறிது நேரம் சென்று வெளியே சென்றதும், தன் அம்மாவைத் தேடிச் சென்ற சந்தியா அவர் மடியில் விழுந்து கதறி அழுதாள்.

"அப்பாவாம்மா இப்படிப் பேசுறார்... என்னால நம்பவே முடியலை. நான் கதிர் மாமா என்னோட பேசுறாங்கன்னு சொன்னது பொய். அவங்க என்னோட பேசுறதே இல்லம்மா... காரணம் தெரியாம இத்தனை நாள் நான் கதிர் மாமாவைத் தப்பா நினைச்சிட்டு இருந்தேன்..." என்றாள் விசும்பியபடி.

அவள் தலையை ஆதரவாகத் தடவிக் கொடுத்த வேதவல்லி, "அவன் எப்படிப் பேசுவான்? மான ரோஷம்

உள்ள எவனுமே... உங்க அப்பா பேசின பேச்சைக் கேட்ட பிறகு பேசுவானா?" என்றார் விரக்தியாக.

சந்தியா தலை நிமிர்ந்து, தன் அம்மாவின் முகத்தைக் கேள்வியாகப் பார்க்க...

"உங்க மாமா காவேரியை அந்தப் பையனுக்கே கல்யாணம் செஞ்சு வைக்கப் போறேன்னு சொன்ன மறு நாள்... உங்க அப்பா என்னையும் வந்து உங்க அண்ணன்கிட்ட பேசுன்னு கூட்டிட்டுப் போனார்..." என்றவர் கடந்த கால நினைவுக்குச் சென்றார்.

வேதவல்லியும் தன் கணவர் சொல்லிக் கொடுத்தபடி தன் அண்ணனிடம் சென்று, "காவேரி நம்ம சொன்னாக் கேட்கும் அண்ணே... நம்ம ஆளுங் களையே யாராவது மாப்பிள்ளை பார்த்துக் கட்டி வச்சிட லாம்..." என்றார்.

"நீ சொல்றதும் சரிதான்மா. ஆனா, இவங்க கல்யாணம் வரை போயிட்டாங்க. இந்நேரம் அந்த விஷயம் கண்ணு, காது, மூக்கு வச்சு... நம்ம ஊர் முழுசும் தெரிஞ்சிருக்கும். இப்ப போய் நான் வெளியே செஞ்சா... நாளைக்கு அவங்களுக்கு விஷயம் தெரிஞ்சு பிரச்சனை ஆகும்.

"அதனால பாதிக்கப்படப் போறது நம்ம பொண்ணு வாழ்க்கைதான். நாம விஷயத்தை மறைச்சு வச்சுக் கல்யாணம் பண்ணிட்டோம்னு நம்ம குடும்பத்தையும் ஏசுவாங்க..." என்றார்.



"ஊர் உலகத்துல காதலிக்கிறவங்க எல்லாம் கல்யாணம் பண்ணிக்கிறாங்களா?" என்று துரை யாரிடமோ சொல்வது போல் சொல்ல...

"இல்லைதான். எனக்கு மத்தவங்களைப் பத்தித் தெரியாது. என் வீட்ல தப்பு நடந்துடுச்சு. அதை நான் மறைக்கிறதுனால மட்டும்... நடந்தது இல்லைன்னு ஆகிடுமா? என்னோட முதுகுக்குப் பின்னாடிப் பேசுற வங்க... நான் காவேரியை அந்தப் பையனுக்கே கல்யாணம் பண்ணி வைச்சா... என் முகத்துக்கு நேராப் பேசப் போறாங்க. அவ்வளவுதான் வித்தியாசம்.

"என்னால வேற இடத்துல என் பொண்ணைக் கல்யாணம் செஞ்சு நாளைக்கு அசிங்கமாப் பேச்சு வாங்க முடியாது. அதுக்கு, என் பொண்ணு விரும்புச்சு. நான் அதே பையனுக்குக் கல்யாணம் செஞ்சு வைச் சேன்னு இருந்துட்டுப் போகட்டும்..." என்றார் பெரியசாமி உறுதியாக.

அந்த இடத்தில் இப்போது கனத்த அமைதி நிலவி யது.

சிறிது நேரம் யோசனையில் இருந்த துரை, அங்கிருந்த கதிரைப் பார்த்துக் கொண்டே, "அப்படியா... சரி. நீங்க உங்க முடிவுல உறுதியா இருக்கீங்க. அப்ப நான் சொல்றதையும் கேட்டுக்கோங்க. நீங்க வேற ஜாதியில சம்பந்தம் பண்ணா... நான் என் பொண்ணு சந்தியாவைக் கதிருக்குக் கொடுக்க மாட்டேன்..." என்று ஒரு இடியை இறக்கினார்.

அவர் எதிர்பார்த்தது போல் கதிர் முகம் உடனேயே இருண்டது. பெரியசாமி, வேதவல்லி இருவருக்குமே அதிர்ச்சிதான்.

"இதுக்கும், அதுக்கும் என்ன சம்பந்தம் மாப்பிள்ளை?" என்றார் பெரியசாமி புரியாமல்.

"நீங்க உங்க பொண்ணுக்கு வேற ஜாதியில கல்யாணம் பண்ண பிறகு, நானும் உங்க வீட்ல என் பொண்ணைக் கொடுத்தா... நானும் அந்த ஜாதிக்காரப் பயலுக கூட உறவு கொண்டாட வேண்டி இருக்கும். என்னால அது முடியாது. நீங்க உங்க பொண்ணுக்கு உங்க இஷ்டப்படி கல்யாணம் செய்யுங்க... நான் என் பொண்ணுக்கு என் இஷ்டப்படி பார்த்துக்கிறேன்..." என்றார் துரை.

"இப்படிப் பேசினா எப்படி மாப்பிள்ளை நியாயம்? நாம அவங்க சின்ன வயசுலயே பேசி வச்ச விஷயத்தை இப்ப திடீர்னு மாத்தினா... சின்னஞ் சிறுசுங்க மனசு கஷ்டப்படாதா?" என்றார் பெரியசாமி தணிவாகவே.

"நீங்க நியாயம் பேசுற தகுதியை இழந்தாச்சு மச்சான். உங்க பொண்ணு வேணா உங்க பேச்சைக் கேட்காம இருக்கலாம். ஆனா, நான் என் பொண்ணை அப்படி வளர்க்கலை. சந்தியா நான் சொன்னாக் கேட்பா!" என்று உறுதியாகச் சொன்ன துரை... கதிரைப் பார்த்து, "உன் குடும்பத்துப் புத்தியை என் பொண்ணுகிட்ட காமிக்க நினைச்சா... நான் சும்மா இருக்க மாட்டேன்!" என்றார் கடுமையாக.



"அது என்னப்பா என் குடும்பத்துப் புத்தி?" என்று பெரியசாமி புரியாமல் கேட்க...

"காதலிச்சு வீட்டுக்குத் தெரியாம ஓடிப் போறது... என் பெண்கிட்ட பேசி மயக்கி, உங்க பையன் காரியம் சாதிச்சிடலாம்னு நினைக்கக் கூடாது இல்லையா?" என்று துரை சொன்னபோது... பெரியசாமி, கதிர் இருவரையுமே அவரின் பேச்சு சுட்டது.

அதுவும் கதிர் ஏற்கெனவே சில நாட்களாக ஏகப்பட்ட மன உளைச்சலில் இருந்தவன்... துரையின் பேச்சால் மேலும் வேதனையில் வாடினான்.

பெரியசாமிக்கு அவனைப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது. மகள் வாழ்க்கையைப் பார்க்கப் போய்... மகன் வாழ்க்கை பலியாகிறதே என்று அவருக்குக் கவலையாக இருந்தாலும்... அவரால் துரை பேசிய பேச்சிற்குப் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

"கதிர் மாதிரி ஒரு பையனை வேண்டாம்னு சொன்னா... உனக்குத்தான் கொடுப்பினை இல்லன்னு அர்த்தம். அதுக்குப் பிறகு உன் இஷ்டம். ஆனா... என் பையன் உன் பெண்ணை எந்த வகையிலும் தொந்தரவு செய்ய மாட்டான்..." என்றார், தன் மகன் மேல் இருந்த நம்பிக்கையில்.

பெரியசாமி உறுதி கொடுத்தவுடன் தான் துரை வேதவல்லியை அங்கிருந்து அழைத்துக் கொண்டு சென்றார்.

வீட்டிற்குச் செல்லாமல் பெரியசாமியின் தோட்டத் துக்குத்தான் வந்திருந்தனர். அதனால் பெரியசாமி, கதிர் இருவருக்கு மட்டுமே அங்கு நடந்தது தெரியும்.

வேதவல்லி சொல்லி முடித்ததும்...

"இவ்வளவு நடந்திருக்கு... ஏன்மா என்கிட்ட எதுவும் சொல்லலை?" என்று சந்தியா கேட்க...

"சொன்னா... நீ உங்க அப்பாகிட்ட சண்டைக்கு நிற்ப. அவர் உடனே உனக்கு வேற மாப்பிள்ளை பார்த்துக் கட்டி வைக்கப் பார்ப்பார். அதுக்குத்தான் சொல்லலை. இத்தனை நாள் நீ உங்க மாமா வீட்டுக்குப் போறதையும் சொல்லாதேன்னு சொன்னது இதுக்குத்தான். நீ இப்படி வந்து உளறி வைப்பேன்னு தெரியாது..." என்றார்.

"இப்ப... என்னம்மா பண்றது? எனக்கும் கதிர் மாமாவுக்கும் கல்யாணம் நடக்காதா? என்னால வேற யாரையும் நினைச்சுக் கூடப் பார்க்க முடியாதும்மா..." என்றாள் சந்தியா, பரிதாபமாக.

"நீ முதல்ல நல்லபடியாப் படிச்சு முடி. அதுக்கு எப்படியும் மூணு வருஷம் ஆகும். அதுக்குள்ள உங்க அப்பா மனசு மாறுதான்னு பார்ப்போம். இல்லன்னா வேற வழிதான் யோசிக்கணும். உங்க அப்பாவை ஜாதிப் பேய் பிடிச்சு ஆட்டுது. வேப்பிலைதான் அடிக்கணும்..." என்றார் வேதவல்லி நக்கலாக.

"அப்பா சம்மதிக்காம... கதிர் மாமா கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டாங்கம்மா..." என்றாள், நன்றாகக் கதிரைப் பற்றித் தெரிந்த சந்தியா.



"அதுக்கு இன்னும் நாளு இருக்கு.இப்பவே ஏன் அதைப் பத்தி நினைச்சு மனசை வருத்திக்கிற? பார்த்துக் கலாம்... கவலைப்படாம இரு..." என்ற வேதவல்லி எழுந்து செல்ல...

சந்தியாவிற்கு அவள் அம்மா பேசியதில் சிறிது நம்பிக்கை ஏற்பட்டாலும் என்ன நடக்கப் போகிறதோ என்ற பயமும் மனதை வருத்தியது.

சந்தியாவிற்கு உடனே சித்துவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அவனிடம் நடந்ததைச் சொல்லா விட்டால் அவளுக்குத் தலை வெடித்து விடும். அதனால் உடனே அவனைச் செல்லில் அழைத்து, எல்லாவற் றையும் சொல்லி ஒரு மூச்சு அழுதாள்.

அவள் சொன்ன எல்லாவற்றையும் பொறுமை யாகக் கேட்ட சித்தார்த், "எனக்கு இது முன்னாலயே தெரியும் சந்தியா. உங்க மாமா வீட்ல உன் மேல பெரிசா யாருக்கும் கோபம் இல்லை. ஆனா, அப்படி இருந்தும் கதிர் ஏன் உன்னிடம் இருந்து விலகி இருக்கார்னு யோசிச்ச போது... பிரச்சனை உங்க வீட்லதான்னு எனக்குப் புரிஞ்சது.

"கதிரே அதை உன்கிட்ட சொல்லாத போது.... நாம் எப்படிச் சொல்றதுன்னுதான் சொல்லலை..." என்றான் சித்தார்த் விளக்கமாக.

"பாவம் கதிர் மாமா... ஏற்கெனவே காவேரி மதினி கல்யாணம்... பெரிய மாமாவுக்கு உடம்பு முடியாமப்

போனது. பிறகு எங்க அப்பா பேசினதுன்னு மனதுக் குள்ள நிறைய வேதனையோடு இருந்தவங்களை... நான் வேற ரொம்ப நோகடிச்சிட்டேன். இப்ப என்னடா பண்றது?"

"உங்க அப்பாவா உன்னைக் கதிருக்குத் தரேன்னு சொல்லாம... கதிர் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டார். என்ன செய்யுறதுன்னு யோசிப்போம்..." என்ற சித்தார்த் செல்லை வைக்க...

சந்தியாவும் யோசனையோடு செல்லை வைத்தாள்.

சந்தியா மனதிற்குள் கோபம் கொந்தளித்தாலும் அதைத் துரையிடம் காண்பிக்காமல், அமைதியாக இருந்தாள்.

இரண்டு நாட்கள் சென்று சந்தியா வந்ததைக் கேள்விப்பட்டு சித்ரா அவளைப் பார்க்க வந்தாள்.

"ஏன் புள்ள... டாக்டருக்குப் படிக்கிற திமிரா? நீ வந்ததைக் கூட ஒரு போன் பண்ணிச் சொல்லலை!"

"இல்ல சித்ரா. ஒரு சர்ப்ரைஸா இருக்கட்டும்னு தான் சொல்லலை. ஆனா, இங்க வந்த பிறகு எனக்கு யார்கிட்டயும் பேச முடியும்னு தோணலை..." என்றாள் சந்தியா புதிராக.

"என்னடி சொல்ற? புரியும்படி சொல்லு."

"இங்க வேண்டாம் சித்ரா. வெளியே போய்ப் பேசுவோம்..." என்ற சந்தியா, தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு சித்ராவையும் அழைத்துக் கொண்டு கோவி லுக்குச் சென்றாள்.



அவர்கள் ஊர் கோவில் மிகவும் பெரியது. சந்தியா வும், சித்ராவும் சாமி தரிசனம் செய்து விட்டு ஓரமாகச் சென்று அமர்ந்தனர். அப்போது நந்தினி உள்ளே நுழைந்தாள்.

அவளைப் பார்த்ததும் சந்தியா, சித்ரா இருவரின் கண்களும் மகிழ்ச்சியில் பெரிதாக விரிந்தன.

நந்தினி முன்பே அழகுதான். இப்போது இன்னும் தங்கச் சிலை போல் அழகாக இருந்தாள். கோயம் புத்தூரில் அவள் சித்தப்பா வீட்டில் தங்கி இன்ஜினியரிங் படிக்கிறாள். படிப்போ, இல்லை இருக்கும் ஊரோ எதுவோ நந்தினியை இன்னும் அழகாக மாற்றியிருந்தது.

நீளமான தலைமுடியைத் தோள் வரை குட்டையாக வெட்டி இருந்தாள். அவள் போட்டிருந்த உடைக்குப் பொருத்தமாக ஆபரணங்கள் அணிந்து, விரல் நகங் களில் அழகாகப் பாலீஷ் போட்டு... பார்க்கக் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தாள்.

நந்தினி கோவிலுக்குள் சென்று விட... சித்ரா திரும்பிச் சந்தியாவைப் பார்த்தவள்... "நீயும் அவளை மாதிரி சிட்டியில தானே இருக்க? அந்தப் புள்ள எப்படி இருக்கு? நீ எப்படி இருக்க?" என்றாள் சந்தியாவின் தோற்றத்தை ஆராய்ந்து கொண்டே.

சந்தியா பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் போது எப்படி இருந்தாளோ... இன்னும் அப்படித்தான் இருந்தாள். "நீயெல்லாம் டாக்டருக்குப் படிக்கிறேன்னு வெளியே சொல்லிடாதே..." என்று சித்ரா அவளைக் கேலி செய்து

கொண்டிருந்தபோது... சாமி கும்பிட்டு வந்து நந்தினி வெளியே வந்தவள்... இவர்களைப் பார்த்ததும் இவர்கள் அருகில் வந்தாள்.

ரொம்ப நாள் கழித்துத் தோழிகள் மூவரும் சந்தித்ததால்... அந்த இடமே களை கட்டியது.

நந்தினியும் சந்தியா மீது இருந்த வருத்தம் மறைந்து இயல்பாகப் பேசினாள். சித்ரா விருதுநகரில் ஒரு கல்லூரியில் பி.எஸ்சி படிக்கிறாள். ஆளுக்கொரு இடம், வெவ்வேறு படிப்பு என்பதால் மூவருக்கும் பேச நிறைய விஷயம் இருந்தது.

மூவரின் கல்லூரிக் கதை பேசி முடித்ததும்... சித்ரா, "சரி, இப்ப சொல்லு. என்ன பிரச்சனை?" என்றாள் சந்தியாவைப் பார்த்து.

சந்தியா நந்தினி அங்கே இருக்கிறாள் என்று எல்லாம் யோசிக்கவில்லை. அவளுக்கு நந்தினியும் நல்ல தோழிதான். அதோடு நந்தினிக்குக் கதிர் மீது இருக்கும் விருப்பமும் அவளுக்குத் தெரியாது.

சந்தியா அவர்கள் வீட்டில் நடந்த பிரச்சனை... இப்போது அதனால் அவளுக்கும், கதிருக்கும் திருமணம் நடக்குமா என்ற கேள்வியில் நிற்பது வரை அனைத்தையும் சொல்ல... சித்ரா அவளுக்காக வருத்தப்பட... நந்தினி கவனமாகக் கேட்டுக் கொண்டாள்.

நந்தினியின் மனதில் அடி ஆழத்தில் இருந்த கதிரின் நினைவுகள் மேலே எழுந்தது. நந்தினி கதிரின் வாழ்க்கையில் நுழைய... சந்தியாவே சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்தாள்.



விடுமுறை முடிந்து சென்னை திரும்பிய சந்தியா... படிப்பில் கவனம் செலுத்தினாள்.

ஓரளவுக்கு அவருடைய வேலையை அவரே பார்க்க ஆரம்பித்ததும், பெரியசாமி தன் சொந்த ஊருக்குச் செல்ல முடிவு செய்தார்.

"அப்பா, நீங்க ஊருக்குப் போனா... நம்ம சொந்தக் காரங்க, ஊர்க்காரங்க பிறகு அக்கம் பக்கம் இருக்கிறவங்க வந்து ஏதாவது காவேரி கல்யாணத்தைப் பத்திப் பேசத்தான் செய்வாங்க. நீங்க அதைப் பெரிசா எடுத்து மனசைப் போட்டுக் குழப்பி, உங்க உடம்பையும் கெடுத்துக் கிறதா இருந்தா தயவு செஞ்சு போகாதீங்க...' என்றான் கதிர்.

அவனையே சிறிது நேரம் பார்த்த பெரியசாமி, "இல்லப்பா... நான் என்னோட தவறை உணர்ந்திட்டேன். நான் ஒழுங்கா மாத்திரை சாப்பிடாம இருந்ததுனால... எனக்கு மட்டுமா கஷ்டமாச்சு... நீயும், உங்க அம்மாவும் சேர்ந்துதான் கஷ்டப்பட்டீங்க... உங்களுக்காகவாவது நான் என்னை நல்லாப் பார்த்துப்பேன்..." என்றார் பெரியசாமி உறுதியாக.

"உங்களைப் பார்த்துக்கிறதை விட எங்களுக்கு வேற என்னப்பா முக்கியம்? நான் அதுக்குச் சொல்லலை. நீங்க மத்தவங்க பேசுறதைக் கேட்டு மனசு ஒடிஞ்சுப் போயிடக் கூடாது. அதுக்குத்தான் சொல்றேன்."

"நீ எனக்காகத்தான் சொல்றேன்னு தெரியும் கதிரு...! யாருப்பா இந்தக் காலத்தில பெத்தவங்களை இப்படிப் பார்த்துக்கிறாங்க. சாய்ஞ்ச மரமா இருந்த என்னை, நிமிர்ந்து நிற்க வச்சிட்டியேப்பா... நீ நல்லாயிருப்ப கதிரு... இன்னும் என்னைப் பத்தியே நினைச்சுக் கவலைப்படாம... நீ உன் வேலையில முன்னேறும் வழியைப் பாரு.

"இந்த வாரமே நானும், அம்மாவும் ஊருக்குப் போறோம். அங்க இருந்து வர்ற வருமானம் எங்களுக்குப் போதும். இனி நீ சம்பாதிக்கிறதைச் சேர்த்து வை. உனக்குக் கல்யாணம் ஆனா தேவைப்படும்..." என்றதும், கதிரின் முகம் சந்தியாவின் நினைவில் வாடியது.

அதை உணர்ந்த பெரியசாமி, "பார்ப்போம் கதிரு..." என்று தன் மகனின் தோளில் ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தார்.

கதிர் மறு வாரமே, தன் பெற்றோரை அழைத்துக் கொண்டு ஊருக்குச் சென்றான். ஒரு வாரம் அவர்களுடனே இருந்து, அவர்களுக்குத் தேவையானது எல்லாம் ஏற்பாடு செய்தான்.

வேதவல்லியும் துரையும் வந்து பெரியசாமியைப் பார்த்து விட்டுச் சென்றனர்,

கதிர் ஒரு நாள் கூடத் தன் அத்தையின் வீட்டுக்குச் செல்லவில்லை.

கதிர் தங்கள் வீட்டுக்கு வராத கோபத்தை வேதவல்லி தன் கணவரிடம் காண்பித்தார். "இப்ப எதுக்கு



முனங்கிக்கிட்டே திரியறே...? உன் அண்ணன் மகன் உன்னைப் பார்க்க வரலையாக்கும்! ரொம்ப ரோஷம் இருக்கிறவனா காட்டிக்கிறானா அவன்... அப்படின்னா நான் சொன்னதையும் மீறி, சந்தியாகிட்ட மட்டும் எதுக்குப் பேசினான்?" என்றார் துரை கோபமாக.

அவர் முன்பு தண்ணீர் சொம்பை நங்கென்று வைத்த வேதவல்லி, "அவன் ஒண்ணும் உங்க மவகிட்ட பேசலை. சந்தியா தான் நீங்க கதிர் பேசலைன்னு சொன்னா... திட்டப் போறீங்கன்னு பேசுனதா சொல்லி யிருக்கா. என் மருமகன் ஒண்ணும் ரோஷம் கெட்டவன் இல்லை..." என்றார் குத்தலாக.

துரை அவரின் பேச்சுக் காதில் விழாதது போல் சாப்பிட்டு விட்டு எழுந்து சென்றார்.

கதிர் மதியம் உணவு சாப்பிட்டதும், அவன் நண்பன் சோலையின் கடையில் சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பான். அன்றும் அது போல் பேசிக் கொண்டிருந்தனர்.

"ஏன்டா சோலை! உங்க அம்மா பார்க்கிற பெண்ணை எல்லாம் வேண்டாம்னு சொல்ற?"

"ம்ம்... அவங்க யாரையும் என் மனசுக்குப் பிடிக் கலை..." என்ற சோலையைக் கூர்மையாகப் பார்த்த கதிர்,

"அப்ப வேற யாரை உன் மனசுக்குப் பிடிச்சிருக்கு?" என்றதும்...

சிறிது நேரம் மௌனம் காத்த சோலை, "வேண்டாம் விடு. அது நடக்காது!" என்றான் மொட்டையாக.

"ஏன் நடக்காது...? நீ உன் மனசுல இருக்கிறது யாருன்னு முதல்ல சொல்லு. நான் நடக்குமா... நடக்காதான்னு சொல்றேன்!" என்றான் கதிர் பிடிவாதமாக.

"சித்ராவை எனக்குப் பிடிச்சிருக்கு. ஆனா... அது எப்படிடா என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கும். அது காலேஜ் எல்லாம் படிக்குது. நான் பன்னண்டாவது வரை தான் படிச்சிருக்கேன்..." என்றான் சோலை உள்ளே சென்ற குரலில்.

அவன் சொன்னதைக் கேட்டு யோசித்த கதிர், "உன்கிட்ட படிப்பு இல்லைங்கிறதைத் தவிர வேற என்னடா குறை? சொந்தத் தொழில் செய்யுற.... சொந்தமா வீடு வச்சிருக்க. இதையெல்லாம் விட எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத பையன். இதுக்கு மேல என்னடா வேணும்?" என்று தன் நண்பனின் சிறப்புகளைப் பட்டியலிட... அதைக் கேட்ட சோலையின் முகம் பளீரென்று ஒளிர்ந்தது.

"அப்படின்னா... சித்ரா என்னைக் கல்யாணம் பண்ண ஒத்துக்குமா?" என்ற சோலையின் குரலில் ஆசை பாதியும், நிராசை மீதியும் எட்டிப் பார்த்தது.

"அதைச் சித்ரா தான் சொல்லணும். பேசிப் பார்ப்போம்..." என்ற கதிர் சோலையிடம் விடைபெற்றுச் சென்றான்.



கதிர் அவன் வீட்டுக்குச் சென்றபோது, அங்கே அவன் அத்தை வேதவல்லி இருந்தார்.

கதிர் அவரைப் பார்த்து, "வாங்க அத்தை..." என்றான்.

"உன் மாமன் தான் கூறுகெட்டத் தனமா ஏதாவது பேசுறாருன்னா... நீயும் அவர் பேச்சைக் கேட்டு என்னையும், சந்தியாவையும் தள்ளி வைக்கிறியே... இது நியாயமா கதிர்?"

"அப்படியெல்லாம் இல்லத்தை... மாமா மனசு சங்கடப்படும்... அதுக்குத்தான்."

"பாவம் சந்தியா... இது எதுவும் தெரியாம அவங்க அப்பாகிட்ட வாய் கொடுத்து வாங்கிக் கட்டினா. அப்பா ஏன்மா இப்படி மாறிட்டாருன்னு ஊருக்குப் போற வரை ஒரே புலம்பல்... ஏதோ சமாளிச்சு அனுப்பி வைச்சேன்..." என்றார் பெருமூச்சு விட்டபடி.

இவர்கள் இருவரும் பேசிக் கொள்வதைக் கேட்ட லக்ஷ்மிக்கு எதுவும் புரியவில்லை.

அவர் குழப்பத்துடன் இருவரையும் மாறி மாறிப் பார்க்க... வேதவல்லி அவரை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றவர், நடந்த அனைத்தையும் சொல்லி அழுதார்.

"இது அநியாயம் வேதா... காவேரி பண்ணதுக்குக் கதிர் என்ன பண்ணுவான்? நான் சந்தியா என்னோட மருமகன்னுதான் அவளிடம் உரிமையாக் கோபத்தைக்

கூடக் காட்டினேன். கதிர் உன் மகளை அவனுக்கு வரப் போற பொண்டாட்டியாத்தானே நினைச்சிருப்பான். இப்ப திடீர்னு வேண்டாம்னு சொன்னா... அவன் மனசு கஷ்டப்படாதா...! உன் வீட்டுக்காரர் பண்றது நியாயமா... நீயே சொல்லு!" என்றார் லக்ஷ்மி, ஆத்திரமும் அழுகையுமாக.

"கவலைப்படாதீங்க அண்ணி... அவர் அன்னைக்கு ஏதோ கோபத்துல பேசிட்டார். அவரால கதிரை விட்டுக் கொடுக்க முடியாது. நிச்சயம் ஒரு நாள் அவரே அவர் தன் தப்பை உணர்வார்!" என்றார் வேதவல்லி ஆறுதலாக.

லக்ஷ்மி கண்ணைத் துடைத்துக் கொண்டு, தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தார்.

வெளியே எதையும் காட்டிக் கொள்ளாமல் இருந்தாலும், கதிரின் மனதிற்குள் புயல் அடித்துக் கொண்டுதான் இருந்தது.

சந்தியாவுக்கு எல்லா விஷயமும் தெரிஞ்சிடுச்சா...? இதுக்கு முன்னாடி நான் வராதேன்னு சொன்னாலும்... என்னைத் தேடி வந்தவ... இப்ப வராததுக்குக் காரணம் இதுதானா? அவங்க அப்பாவுக்கு விருப்பம் இல்லன்னா சந்தியா என்னை விட்டுப் போயிடுவாளா... என்று அவன் மனம் குழம்பித் தவித்தது.

அவனால் தன் மாமன் பேச்சை மறந்து சந்தியாவோடு இயல்பாகப் பேசவும் முடியவில்லை. அவளை வேண்டாம் என்று விடவும் முடியவில்லை.



மறுநாள் மதியம் வழக்கம் போல் கதிர் சோலையின் கடைக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தான்.

அப்போது சித்ரா சாமான் வாங்க வந்தாள். மதிய நேரம் என்பதால் கடைத் தெருவில் ஆள் நடமாட்டம் இல்லை. அதனால் இப்போதே சித்ராவிடம் சோலையின் விருப்பத்தைச் சொல்லி விடுவது என்று முடிவு செய்த கதிர்... சோலையைப் பார்த்துத் தலையசைக்க... அவனும் புரிந்து கொண்டு கடையில் இருந்து இறங்கி வெளியே சென்றான்.

அவன் போவதைப் பார்த்த சித்ரா, "ஏங்க... சாமான் குடுக்காம எங்கே போறீங்க?" என்று குரல் கொடுக்க...

"பக்கத்திலதான் போறான். இப்ப வந்துடுவான்..." என்று பதில் தந்தது கதிர்.

கதிரைப் பார்த்ததும் முகம் மலர்ந்த சித்ரா, "கதிர் அண்ணா... எப்படி இருக்கீங்க?" என்றாள் மகிழ்ச்சியாக.

"நல்லா இருக்கேன் சித்ரா... நீ எப்படி இருக்க?"

"நானும் நல்லா இருக்கேன்..." என்ற சித்ரா, மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் அமைதியாக...

"இந்த வருஷம் உன் படிப்பு முடியுதே... மேற்கொண்டு என்ன பண்ணப் போற சித்ரா?" என்றான்.

"மேல படிக்க வசதி இல்லை. வீட்டுல மாப்பிள்ளை பார்க்கிறாங்க. ஆனா எனக்கு வேலைக்குப் போகணும்னு ஆசை..." என்றாள் சித்ரா மெதுவாக.

"நீ சோலையைப் பத்தி என்ன நினைக்கிற?" என்று திடீரென்று கதிர் கேட்டதும்...

எதுக்கு இப்படிச் சம்பந்தம் இல்லாம கேட்கிறாங்க... என்று முதலில் நினைத்த சித்ராவுக்கு, கதிர் காரணம் இல்லாமல் எதையும் பேசுபவன் இல்லை என்று தெரிந்ததால்... "நான் ஒண்ணும் நினைக்கல. ஆனா நீங்க ஏதாவது சொல்லணுமா?" என்றாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்த கதிர், "நான் உனக்கு நல்லதுதான் நினைப்பேன் சித்ரா. சோலைக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. ஆனா அவன் உன் அளவுக்குப் படிக்கலைன்னு தயங்குறான். உனக்குச் சம்மதம்னா அவங்க வீட்ல சொல்லி உன்னைப் பொண்ணு கேட்கச் சொல்வான்..." என்ற கதிர், சித்ரா முகத்தில் மறுப்பு எதுவும் தெரியாததால் தொடர்ந்து...

"எனக்குச் சின்னதுல இருந்து அவனைத் தெரியும். நல்ல பையன் சித்ரா. உனக்கு மேற்கொண்டு படிக்க விருப்பம்னா உன்னைப் படிக்கவும் வைப்பான்..." என்று கதிர் சொல்லிக் கொண்டிருந்தபோதே சோலை கடைக்குள் நுழைந்தான்.

சித்ரா ஓரக் கண்ணில் சோலையைப் பார்க்க... அவன் முகத்தில் அத்தனை பதற்றம் தெரிந்தது.

அதைப் பார்த்துப் பொங்கிச் சிரித்த சித்ரா, "எனக்கு நான் படிச்ச பள்ளிக்கூடத்திலேயே டீச்சர் ஆகணும்னு ஆசை. அதுக்கு என்னைப் படிக்க வைப்பாங்களான்னு



கேளுங்க. அதுக்குச் சம்மதம்னா எனக்கு இந்தக் கல்யாணத்துல சம்மதம்தான்..." என்றாள் வெட்கத்துடன்.

அதைக் கேட்டு அதுவரை இருந்த பதற்றம் சட்டென்று வடிந்து சோலையின் முகம் நொடியில் பிரகாசமாக மாறியது.

"ம்ம்... கண்டிப்பாடா..." என்றான் கதிரிடம் சொல்வது போல்.

"அண்ணா, இன்னைக்குச் சரின்னு சொல்லிட்டு நாளைக்குப் பேச்சு மாறினா... நான் பொல்லாதவள் ஆகிடுவேன். நல்லா யோசிச்சுச் சொல்லச் சொல்லுங்க..." என்றாள் சித்ரா கண்டிப்புடன்.

"என்னடா மாப்பிள்ளை, என் மேல இவ்வளவுதான் நம்பிக்கையா? எனக்கும் என் பொண்டாட்டி டீச்சர்னா சந்தோஷம்தான்டா..." என்றான் சோலை முகம் முழுக்கப் புன்னகையுடன்.

இவர்கள் இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கதிரின் முகத்தில் அப்படி ஒரு சிரிப்பு.

"என்னை எதுக்குடா உங்களுக்கு நடுவுல இழுத்து விடுறீங்க... எதுன்னாலும் இனி நீங்களே பேசி முடிவு செய்யுங்க. என்னை ஆளை விடுங்க..." என்றவன், அங்கிருந்து செல்ல...

சித்ராவும் சோலையும் கதிரைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று சோலையின் முகம் வாட... சித்ரா என்ன என்பது போல் அவனைப் பார்க்க...

"அவன் இப்படிச் சிரிச்சு எத்தனை வருஷம் ஆகுது தெரியுமா?" என்ற சோலையின் குரலில் அத்தனை வேதனை இருந்தது.

"சந்தியாவும்தான் கஷ்டப்படுறா. பாவம், அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்குமா?" என்ற சித்ரா சோலையின் முகம் பார்க்க...

விடை தெரியாத கேள்விக்கு அவன் என்ன பதில் சொல்ல முடியும்?

அவன் மௌனமாகக் கதிர் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சித்ரா திருமணத்திற்குச் சம்மதம் சொன்னதும்... சோலை சற்றும் தாமதிக்காமல் தன் வீட்டில் சித்ராவைப் பெண் கேட்கச் சொல்ல... முதலில் அவர்கள் வசதி இல்லாதவர்கள் என்று சோலையின் பெற்றோர் தயங்க...

"அந்தப் பிள்ளை டீச்சர் வேலைக்குத்தான் படிக்கப் போகுது. அது டீச்சர் வேலைக்குப் போனா எவ்வளவு சம்பாதிக்கும் தெரியுமா!" என்று அவன் பெற்றோருக்கு ஆசை காட்டியவன்... மறைமுகமாகச் சித்ராவிடம் கொடுத்த வாக்கையும் நிறைவேற்றினான்.

சோலையின் பெற்றோரும் பெரிதாக மறுக்கவில்லை. அடுத்த வாரமே பெண் பார்க்கச் சென்றவர்கள்... அடுத்த மாதமே நிச்சயத்துக்கு நாள் குறித்து, வரும் சித்திரையில் திருமணம் என்று முடிவு செய்தனர்.



சித்ரா சந்தியாவுக்குப் போன் செய்து, தன் நிச்சயத்தைப் பற்றிச் சொன்னதும்... அவள் மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்தாள்.

சோலைதான் மாப்பிள்ளை என்று தெரிந்ததும், "சோலை அண்ணாவா...! அவங்க நல்லவங்கதான். ஆனா படிக்கலையே சித்ரா! உனக்கு ஓ.கே.வா? நீ இஷ்டப்பட்டுத்தானே இந்தக் கல்யாணம் நடக்குது..." என்று விதவிதமாகக் கேள்வி கேட்டாள். அவள் மனம் தோழிக்காகத் தவித்தது.

அவளின் தவிப்பை உணர்ந்த சித்ரா வேண்டுமென்றே, "எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டம் இல்லன்னா மட்டும்... என்னைக் கட்டிக்க டாக்டரும், கலெக்டரும் வரிசையில வந்து நிற்கப் போறாங்களா? இல்ல, எங்க அப்பாவுக்குத்தான் அப்படிப் படிச்ச மாப்பிள்ளை வந்தா வரதட்சணை கொடுக்க வசதி இருக்கா?" என்றாள் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

"ஏன்டி அப்படிச் சொல்ற? நீ எவ்வளவு படிக்கணுமோ படி. நான் எங்க அப்பாகிட்ட சொல்லி உன்னைப் படிக்க வைக்கிறேன். படிச்சு முடிச்சதும் நீயே உன் கல்யாணத்துக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்கலாம். அதை விட்டுட்டு உனக்குப் பிடிக்காத கல்யாணம் பண்ணிக்காதே சித்ரா... ப்ளீஸ்!" என்றாள் சந்தியா கெஞ்சலாக.

அவள் சொன்னதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்த சித்ரா, "எனக்கு இந்தக் கல்யாணத்துல ரொம்ப இஷ்டம் தான் சந்தியா... சும்மா உன்கிட்ட விளையாடினேன். அதுவும் இது எங்க அண்ணன் பார்த்த மாப்பிள்ளை. அதனால நம்பிக் கழுத்தை நீட்டலாம்..." என்றதும்,

"உனக்குத்தான் அண்ணனே இல்லையே!" என்று சந்தியா சந்தேகமாக இழுக்க...

"ஏன் சந்தியா... உன் கதிர் மாமாவை நான் அண்ணன்னு சொல்லக் கூடாதா?" என்று சித்ரா சொன்னதும், சந்தியாவின் முகம் மலர...

"கதிர் மாமாவா! அவங்க என்ன செஞ்சாங்க?" என்றாள் ஆர்வமாக.

சித்ரா நடந்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொல்ல... "மத்தவங்க காதல் எல்லாம் சேர்த்து வைக்கத் தெரியுது. ஆனா தான் மட்டும் காதலிக்கவே இல்லைன்னு சாதிப்பாராம்..." என்று முனங்கியவள்... சித்ராவிடம் தான் நிச்சயத்துக்குக் கண்டிப்பாக வருவதாகச் சொல்லிப் போனை வைத்தாள்.

சந்தியா சொன்னது போல் சித்ராவின் நிச்சயத்துக்கு ஊருக்குச் சென்றாள். சித்ராவின் குடும்ப நிலவரம் தெரியும் என்பதால்... ஆடம்பரமாக இல்லாமல் எளிமையான புடவையில் சென்றாள்.

சித்ரா வீட்டின் முன்புறம் பந்தல் போட்டு அங்கே தான் நிச்சயத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.



சந்தியா சீக்கிரமே வந்து சித்ராவுடன் இருந்தாள். மாலை ஆறு மணியானதும், மாப்பிள்ளை வீட்டினர் வந்தனர்.

சோலையுடன் மாப்பிள்ளைத் தோழனாகக் கதிர் வந்திருந்தான்.

சந்தியாவுக்குக் கதிர் நிச்சயத்துக்கு வருவான் என்று தெரியாது. திருமணத்திற்குத்தான் வருவான் என்று நினைத்திருந்தாள். திடீரென்று கதிரை அங்கு பார்த்ததும், அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. கதிருக்கும் அதே நிலைதான்.

இருவரும் சந்தித்துக் கிட்டத்தட்ட ஒரு வருடமாகப் போகிறது. ரொம்ப நாள் கழித்துச் சந்தித்ததால் இருவரின் மனமும் அவர்கள் பேச்சைக் கேட்காமல்... மகிழ்ச்சியில் குத்தாட்டம் போட்டது.

சந்தியா கதிரைப் பார்வையால் விழுங்க... அவனும் அவளை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் இருவரையும் கவனித்த சோலையும், சித்ராவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கேலியாகப் புன்னகைத்துக் கொண்டனர்.

அன்று சோலை - சித்ரா நிச்சயத்தில் கதிரும், சந்தியாவும் பேசிக் கொள்ளவில்லை. ஆனால் இருவரின் பார்வைகளுமே அவர்களுக்கு வேண்டிய பதிலைத் தந்ததால்... அதிலேயே சந்தோஷப்பட்டு இருவரும் நிம்மதியாக இருந்தனர்.

# 9

சித்ராவின் நிச்சயத்தன்று நந்தினி ஊரில்தான் இருந்தாள். சித்ரா நிச்சயத்துக்கு அழைத்தும், அவள் வரவில்லை.

ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த நந்தினியிடம் அவள் அம்மா, "இந்த வருஷத்திலிருந்து உனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம் பிச்சாத்தான்... அடுத்த வருஷம் உன்னோட படிப்பு முடிஞ்சதும் கல்யாணத்தை வைக்கலாம்..." என்று சொன் னதும், நந்தினியின் முகம் வாடியது.

நந்தினி, "இப்பவே என்னம்மா கல்யாணத்துக்கு அவசரம்?" என்றாள் எரிச்சலாக.

"உனக்குப் பண்ணிட்டுத்தான் உங்க அண்ண னுக்குப் பார்க்கணும்."

நந்தினி எரிச்சலுடன் அமர்ந்திருந்தபோது... வாச லில் அவளின் அண்ணன் மகேஷின் குரல் கேட்டது. யாரையோ வற்புறுத்தி வீட்டிற்குள் அழைத்துக் கொண்டி ருந்தான்.

இந்த அண்ணனுக்கு வேற வேலையே இல்லை என்று நந்தினி முணுமுணுக்க... அப்போது மகேஷுடன் உள்ளே நுழைந்த கதிரைப் பார்த்ததும்... அதுவரை இருந்த எரிச்சல் நொடியில் பறந்தோட... நந்தினியின் முகம் தாமரையாக மலர்ந்தது.

"வா... வாங்க..." என்று கதிரைத் தட்டுத் தடுமாறி அழைத்தவள்... அவன் உட்கார சோபாவைக் காட்டினாள்.



கதிர், "இல்லை... வேண்டாம்..." என்று மறுத்தவன், மகேஷைப் பார்த்து, "நான் கிளம்புறேன்..." என்றான்.

"இருங்க... போகலாம்!" என்ற மகேஷ், தன் அம்மாவிடம், "நான் உரக் கடைக்குப் போயிட்டுத் திரும்பி வரும் போது... வண்டி ரிப்பேர் ஆகி நின்னுடுச்சு. கதிர் அந்த வழியா வந்ததுனால... என்னை அப்படியே அவரோட வண்டியில ஏத்திட்டு வந்தார்..." என்றான்.

உடனே நந்தினி, "எனக்கும் ஒரு தடவை பெட்ரோல் இல்லாம வண்டி ரோட்ல நின்னபோது... அவர் வண்டி யில் இருந்து பெட்ரோல் தந்தார்!" என்றாள் குரலில் துள்ளலுடன்.

"நம்ம வீட்ல யார் வண்டி நின்னாலும்... கதிர் இருக் கிறதுனால கவலை இல்லை!" என்று சிரித்த மகேஷ், "காபி போடுங்கம்மா..." என்றான்.

"இல்லை வேண்டாம். நான் கிளம்புறேன்..." என்று கதிர் கிளம்புவதிலேயே குறியாக இருக்க... நந்தினி வேகமாக ஓடிச் சென்று குளிர் பானம் கொண்டு வந்து கொடுத்தாள்.

கதிரும் அதற்கு மேல் மறுக்க முடியாமல்... அதை வாங்கிக் கொண்டவன், மகேஷிடம் சில பொதுவான விஷயங்கள் பேசி விட்டு, அவர்களிடம் விடைபெற்றுச் சென்றான்.

கதிர் சென்றதும், "ரொம்ப நல்ல மாதிரி..." என்றான் மகேஷ், தன் அம்மாவிடம்.

நந்தினி புன்னகையுடன் நின்றிருக்க...

அவன் அம்மா, "இந்தப் பையனோட தங்கச்சி தானே வேற ஜாதிப் பையனைக் கல்யாணம் பண்ணிக் கிடுச்சு..." என்றார்.

"உனக்கு அவங்களைத் தெரியுமா அண்ணா?" என்று நந்தினி ஆர்வமாகக் கேட்க...

"ஒரே ஊரு... எப்படித் தெரியாம இருக்கும்?" என்ற மகேஷ், தன் தங்கையின் மகிழ்ச்சியைக் குறிப் பெடுக்கத் தவறவில்லை.

நந்தினி மேலும் கதிரைப் பற்றியே பேச...

"கதிருக்கு ஒரு முறைப்பொண்ணு இருக்கு. இல்லன்னா நம்ம நந்தினியைக் கதிருக்கே செய்யலாம். படிச்சுச் சென்னையில வேலை பார்க்கிறாப்புல... சொத்தும் நிறைய இருக்கு..." என்றான் மகேஷ், அவன் அம்மா விடம்.

நந்தினியின் முகம் மேலும் மலர, "அவங்களோட அத்தை பொண்ணு சந்தியா என்னோட ஃபிரெண்ட்தான். உனக்குத் தெரியுமே... அவளைப் போன தடவை பார்த்த போது அவங்க ரெண்டு குடும்பத்துக்கும் பிரச்சனை... அதனால அவங்க அப்பா கதிருக்கு அவளைச் செய்ய மாட்டேன்னு சொல்லிட்டாருன்னு சொன்னாள்..." என்றாள்.

"என்ன பிரச்சனையாம்?" என்று அவள் அம்மா மேலும் துருவ...



"அவங்க தங்கச்சியை வேற ஜாதியில கட்டிக் குடுத்ததுனால... இவங்க அப்பா இவளை அங்கே செய்ய மாட்டேன்னு சொல்லிட்டாராம்..." என்றாள்.

நந்தினிக்குக் கதிரைக் கல்யாணம் செய்து கொள் வதில் ரொம்ப விருப்பம் இருக்கிறது என்று புரிந்து கொண்ட மகேஷ், தனியே தன் அம்மாவிடம் கதிரை நந்தினிக்குப் பார்ப்போமா என்றபோது அவன் அம்மாவும் சரி என்றார்.

இதை எதையும் அறியாத கதிர், தன் அப்பாவை நல்லபடியாக ஊரில் கொண்டு வந்து சேர்த்து விட்டோம் என்ற நிம்மதியுடன் சென்னை கிளம்பிச் சென்றான்.

மகேஷுக்கு அவ்வளவாகப் படிப்பு வரவில்லை. தட்டுத் தடுமாறிக் கல்லூரிப் படிப்பை முடித்தவன்... அவன் அப்பாவோடு சேர்ந்து வியாபாரம் செய்கிறான். அவ னுக்குப் படிப்புதான் வரவில்லையே தவிர, வியாபாரத்தில் கெட்டிக்காரன். அவனுக்கு எங்கே எப்படிப் பேசினால் விஷயம் நடக்கும் என்று நன்றாகவே தெரியும்.

தன் தங்கை கதிரின் குடும்பத்தைப் பற்றிச் சொன்னது உண்மைதான் என்று தெரிந்து கொண்டவன், பெரியசாமியிடம் சென்று பேசினால் காரியம் நடக்காது என்பதையும் தெரிந்து வைத்திருந்தான். அதனால் கதிரின் தாய்மாமாவைச் சென்று சந்தித்தான்.

ஏற்கெனவே சந்தியாவின் அப்பா துரை மேல் இருந்த கோபத்திற்கு இப்போது பழி தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தால்... சும்மா இருப்பாரா அவர்?

உன் தங்கச்சிக்கும், கதிருக்கும் கல்யாணத்தை நடத்தி வைப்பது என் பொறுப்பு என்றார் வாசு, கர்வமாக.

அன்றிலிருந்து வாசு லக்ஷ்மியின் மனதைக் கலைக்க ஆரம்பித்தார். "உன் மகனுக்கு என்ன குறை? அந்தத் துரை அவன் பெண்ணைக் குடுக்கலைன்னா... என் மருமகனுக்கு வேற பொண்ணா கிடைக்காது? நான் பார்க்கிறேன் ஆயிரம் பொண்ணு!" என்பதில் ஆரம்பித்து...

"கதிரோட படிப்பையும் வேலையும் பார்த்து... என்கிட்ட நிறையப் பேரு உன் மகனை அவங்க பெண் ணுக்குக் கேட்கிறாங்க. ஆள் வேற பார்க்க அம்சமா இருக்கானா... அதுதான்!" என்று தங்கைக்கு ஐஸ் வைக்கத் தொடங்கி... அவரும் பல வழிகளில் முயற்சி செய்தார்.

ஒரு நாள் தன் மனைவியிடம் லக்ஷ்மியை அழைத்துக் கொண்டு கோவிலுக்கு வரச் சொன்னவர்... அதே போல் மகேஷிடமும் நந்தினியை அவன் அம்மா வுடன் கோவிலுக்கு அனுப்பும்படி சொன்னார்.

லக்ஷ்மி நந்தினியைப் பார்த்தால் அவள் அழகில் மயங்கிச் சரி என்று சொல்லி விடுவார் என்று நம்பினார்.

நந்தினியும், அவள் அம்மாவும் எதேச்சையாகக் கோவிலுக்கு வந்தது போல் லக்ஷ்மியிடம் காண்பித்துக் கொண்டனர். நந்தினியின் அம்மா லக்ஷ்மியிடம் உருகி, வழிந்து பேசினார். அவர் பேசியது அனைத்தும் நந்தினி யைப் பற்றித்தான்.



வீட்டிற்கு வந்த லக்ஷ்மியிடம் வாசு, "பொண்ணு எப்படி?" என்றதும்,

லக்ஷ்மி புரியாமல் முழிக்க... அவரைப் பார்த்துச் சிரித்த வாசு, "இன்னைக்குக் கோவில்ல பார்த்தியே நந்தினி... அதை நம்ம கதிருக்குக் கல்யாணம் செஞ்சு கொடுக்க... அவங்க வீட்ல ஆசைப்படுறாங்க..." என்றார்.

'ஓ... இதுக்குத்தான் அந்த அம்மா அப்படிப் பேசிச்சா...' என்று நினைத்த லக்ஷ்மி ஒன்றும் சொல் லாமல் அமைதியாக இருந்தார்.

"பொண்ணு எப்படி லட்சணமா இருக்கு பார்த்தியா? இன்ஜினியர்க்குப் படிக்குது. உன் மகனுக்கு ஏத்த பொண்ணு. வீணா உன் நாத்தனார் வீட்டை நம்பி, உன் மகனுக்கு வர்ற நல்ல சம்பந்தத்தை வேண்டாம்னு சொல்லாதே..." என்றார் அக்கறை உள்ளவர் போல்.

லக்ஷ்மிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இந்தத் துரை இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாரே... இவர் பெண்ணைக் கதிருக்குத் தருவாரா? இவங்களை நம்பிக் கதிருக்கு வர்ற சம்பந்தத்தை வேண்டாம்னு சொல்வதா... என்று யோசித்தவர்,

தன் தம்பியிடம், "பார்ப்போம்டா. நான் உங்க மாமாகிட்ட பேசிப் பார்க்கிறேன்... அவங்க அப்பா சொன்னா கதிர் மறுக்க மாட்டான்..." என்றவர் சமையல் அறைக்குள் செல்ல...

அவர் அக்கா சொன்னதைக் கேட்டு வாசு வெற்றிச் சிரிப்பு சிரிக்க... இவர்கள் பேசுவதைத் தன் இன்னொரு சகோதரன் பாண்டியன் வீட்டில் இருந்து கேட்ட வேதவல்லி அதிர்ச்சியடைந்தார்.

சந்தியா இதை எப்படித் தாங்குவாள் என்று நினைத்தபோது, அவரால் தாங்கவே முடியவில்லை. யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தன் வீடு நோக்கிச் சென்றார்.

இதை எதையும் அறியாத கதிரும், சந்தியாவும் சோலை – சித்ரா திருமண நாளை ஆவலாக எதிர் பார்த்திருந்தனர். அவர்கள் திருமணத்தில் இருவரும் மீண்டும் சந்தித்துக் கொள்ளப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் கண்களில் கனவுகளுடன் திரிந்தனர்.

சித்ராவின் திருமணம் புதன்கிழமையில் வந்ததால்... சந்தியா முன் தினம்தான் கிளம்பி வந்தாள்.

திருமணத்திற்குச் செல்லும் பரபரப்பில் அவள் தன் அம்மாவைச் சரியாகக் கவனிக்கவில்லை. கவனித்திருந் தால் அவரின் வாட்டம் தெரிந்திருக்கும்.

வேகமாகக் குளித்துக் கிளம்பியவள், ஆடையை யும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டு தயாராகிக் கீழே வந்தவள்... தன் அம்மாவிடமும், அப்பத்தாவிடமும் "நல்லா இருக்கா?" என்று ஆசையாகக் கேட்டாள்.

அவள் அம்மா லேசாகப் புன்னகைக்க... அவள் அப்பத்தா அவளுக்குத் திருஷ்டி கழித்தவர், "அழகா இருக்கடி ராஜாத்தி. இப்பதான் டாக்டருக்குப் படிக்கிற பிள்ள மாதிரி இருக்க..." என்றார் மகிழ்ச்சியாக.



சந்தியாவும் அவர்களிடமிருந்து மகிழ்ச்சி குறை யாமல் விடை பெற்று, உள்ளூர் என்பதால் திருமணத் திற்குத் தன் ஸ்கூட்டியில் சென்றாள்.

சித்ராவின் திருமணம் என்ற மகிழ்ச்சி ஒரு புறமும், கதிரைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவல் ஒரு புறமுமாகச் சென்றவளின் மனம் வானில் பறக்கும் காற்றாடி போல் உயரப் பறந்தது. அதற்குச் சற்றும் குறையில்லாமல் அவள் வண்டியும் பறந்தது.

வண்டியில் வேகமாகச் சென்றவள்... எதிரே ஒரு வண்டியில் வாசுவும், அவர் மனைவி மேகலாவும் வருவ தைப் பார்த்ததும், வண்டியின் வேகத்தைக் குறைத்தாள்.

வாசு வண்டியை நிறுத்தியதால்... வேறு வழி யில்லாமல் சந்தியாவும் அவரை மனதிற்குள் திட்டிக் கொண்டே வண்டியை நிறுத்தினாள்.

சந்தியாவைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்த வாசு, "நல்லாயிருக்கியா சந்தியா? எப்ப வந்த?" என்று விசாரித் தார்.

"இன்னைக்குத்தான் வந்தேன் சித்தப்பா. என்னோட ஃப்ரெண்ட்டுக்குக் கல்யாணம். அதுக்குத்தான் போயிட்டு இருக்கேன்..." என்றாள் சந்தியா புன்னகையுடன்.

"அப்படியா நல்லது. கூடிய சீக்கிரமே... நீ உன்னோட இன்னொரு ஃபிரெண்ட் கல்யாணத்துக்கும் வர வேண்

டியது இருக்கும்..." என்றதும், சந்தியா அவரைப் புரியாமல் பார்க்க...

"நந்தினி உன்னோட ஃப்ரெண்ட் தானே... அதுக்குத் தான் அடுத்த கல்யாணம்..." என்றதும், சந்தியாவின் முகம் மலர...

அவர் அடுத்துச் சொன்ன, "உன் மாமா மகன் கதிர் தான் மாப்பிள்ளை..." என்றதில் அவள் முகத்தில் புன்னகை மறைந்து, அதிர்ச்சி தோன்றியது.

அதை ஒரு கொடூரத் திருப்தியுடன் ரசித்தபடி வாசு அங்கிருந்து சென்றார்.

சிறிது நேரம் வரை அங்கேயே சிலையாக நின்ற சந்தியா... வாசு சொல்வது உண்மையாக இருக்காது என்றே நம்பினாள். அந்த நம்பிக்கையுடனே திருமணத் திற்கும் சென்றாள்,

வாசலில் நண்பர்களுடன் பேசியபடி புன்னகையுடன் நின்றிருந்த கதிரைப் பார்த்ததும்... அவள் மனதில் இருந்த கலக்கம் மறைந்து நிம்மதி வந்தது.

கதிர் சந்தியாவைக் கவனிக்கவில்லை. சந்தியா மண்டபத்தின் உள்ளே சென்றபோது... ஏற்கெனவே திருமணச் சடங்குகள் ஆரம்பித்திருந்தன.

கூட்டமாக இருந்ததால் சந்தியா அங்கேயே ஒரு ஓரமாக நின்று மேடையில் நடப்பதைப் பார்த்துக் கொண்டி ருந்தாள்.



சிறிது நேரத்தில் சித்ராவை மேடைக்கு அழைத்து வந்தனர்.

முகம் மலரச் சித்ராவைப் பார்த்த சந்தியாவின் முகம்... அருகில் வந்த நந்தினியைப் பார்த்ததும் மாறியது.

நந்தினி அழகான பட்டுப் புடவை உடுத்தி, நகைகள் அணிந்து பார்ப்பவர்களின் கண்களைக் கவரும்படி இருந்தாள்.

தாலி கட்டும் நேரம் நண்பர்களோடு கதிரும் மேடைக்கு வந்தான். நண்பர்கள் குழு சோலையைக் கிண்டல் செய்தபடி இருந்தது.

கதிரின் புன்னகை முகத்தையும், நந்தினி அவனை அடிக்கடி ஓரக் கண்ணில் பார்ப்பதையும் பார்த்த சந்தியா, வாசு சொன்னது உண்மையோ என்று நினைத்தாள்.

கதிரை நந்தினியோடு சேர்த்துப் பார்த்த சந்தியாவுக்கு அவள் உடல், மனம் இரண்டுமே எரிவதைப் போல் இருந்தது. நொடியில் அவள் உடலில் உஷ்ணம் பாய... கண்கள் சிவந்து காய்ச்சல் வருவது போல் இருந்தது.

சந்தியாவைப் பார்க்காத கதிர்... சோலையிடம், "சந்தியா கல்யாணத்துக்கு வருவேன்னுதான சொன்னா... சித்ராவைக் கேளு..." என்றான் மெதுவாக.

குனிந்த தலையுடன் அமர்ந்திருந்த சித்ராவின் காதில் சோலை, "சந்தியா எங்க இன்னும் வரலை?" என்றதும்,

கவலையாக நிமிர்ந்த சித்ரா, சுற்றிலும் பார்த்தவள், தூரத்தில் நின்ற சந்தியாவைப் பார்த்ததும் முகம் மலர்ந் தாள்.

சித்ராவையே பார்த்துக் கொண்டிருந்த சோலையும், கதிரும் அவள் பார்வை சென்ற திசையில் பார்த்தவர்கள்... அங்கே சந்தியா நிற்பதைப் பார்த்து, அவர்கள் முகமும் மலர்ந்தது.

சித்ரா சந்தியாவை மேடைக்கு வரும்படி தலை யசைக்க... சந்தியா வேண்டாம் என்று மறுத்தவள் அங்கேயே நின்று கொண்டாள்.

சித்ரா ஏன் என்பது போல் பார்க்க... ஒன்றும் இல்லை என்று பார்வையாலேயே அவளுக்குச் சமா தானம் சொன்ன சந்தியா, சிரிக்க முயன்று தோற்றாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த கதிருக்கும், சோலைக்கும் ஏதோ சரியில்லை என்று புரிந்தது.

கெட்டி மேளம் ஒலிக்க... மங்கல வாத்தியம் முழங்க... சோலை சித்ராவின் கழுத்தில் தாலி கட்டித் தன் மனைவி ஆக்கிக் கொண்டான்.

திருமணம் முடிந்தாவது மேடைக்கு வருவாள் என்று பார்த்தால்... சந்தியா திரும்பி வெளியே சென்று கொண்டி ருந்தாள். கதிர், சோலை, சித்ரா மூவரும் மாறி மாறி ஒருவரின் முகத்தை மற்றவர்கள் பார்க்க...

கதிரிடம் சோலை, "ஏதோ சரியில்லை மாப்பிள்ளை. நீ உங்க மாமாவுக்காகப் பார்த்துச் சந்தியாவை இழக்கப் போறியோன்னு தோணுதுடா..." என்று சொன்னதும், கதிர் வேகமாகக் கீழே இறங்கிச் சந்தியாவை நோக்கிச் சென்றான்.



வெளியே வந்த கதிர் சுற்றிலும் சந்தியாவைத் தேட... அவள் மண்டபத்தின் பக்கவாட்டில் நிறுத்தியிருந்த வண்டியைக் கிளப்பிக் கொண்டிருந்தாள்.

வேகமாக அவள் அருகில் சென்ற கதிர், "ஏன் சந்தியா அதுக்குள்ள போற?" என்று கேட்டதும்,

அவனை நிமிர்ந்து பார்த்த சந்தியாவின் கண்கள் கலங்கியிருந்தன. "சும்மாதான். சீக்கிரம் ஊருக்குக் கிளம்பணும்..." என்று சம்பந்தமில்லாமல் பேசினாள்.

"இப்ப மணி பத்துதான் ஆகுது. இப்ப எப்படி ஊருக்குப் போக முடியும்? நைட் தானே வண்டி..." என்றதும்,

"ஆமாம். நைட்தான் வண்டி. ஆனா நான் இப்ப போகணும்..." என்று பிடிவாதமாகச் சொன்னவள்... வண்டியைப் போட்டு உதைக்க அது கிளம்பவில்லை.

"வண்டி ஏன் கிளம்பவே மாட்டேங்குது. எனக்குக் கால் எல்லாம் வலிக்குது..." என்றாள் திடீரென்று குரலில் அழுகையுடன்.

அவளிடமிருந்து வேகமாக வண்டியை வாங்கிய கதிர், அதை உதைக்கச் சென்றவன்... அப்போதுதான் கவனித்தான், வண்டியில் சாவியே போடவில்லை என்று.

சந்தியாவைப் பார்த்து, "சாவி போடல சந்தியா..." என்றதும், தலையில் அடித்துக் கொண்டவள், பர்ஸில் இருந்து சாவியை எடுத்துக் கொடுத்தாள்.

அவள் முகத்தைப் பார்த்து, "உடம்பு சரியில்லையா சந்தியா?" என்ற கதிர்... அவள் கையைத் தொட்டுப் பார்க்க... அவள் உடல் கொதிக்கத்தான் செய்தது.

உடம்பு சரியில்லாததால் தான் அப்படி இருக்கிறாளோ என்று நினைத்தவன், "இந்த ஜுரத்தோட எப்படி வண்டி ஓட்டிட்டுப் போவ?" என்றான்.

"போயிடுவேன்..." என்றவள், அப்போதுதான் அவர்கள் அருகில் வந்த நந்தினியைப் பார்த்தாள்.

சந்தியா அவளைப் பார்த்து முறைத்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொள்ள...

நந்தினி, "என்ன சந்தியா... அதுக்குள்ள போற?" என்று கேட்டதுதான் தாமதம்... சந்தியா பொங்கி விட்டாள்.

"யாரு நீ? எதுக்கு என்கிட்ட பேசுற? உன்னை யாருன்னே எனக்குத் தெரியாது..." என்றாள், முகத்தில் அடித்த மாதிரி.

நந்தினியின் முகம் நொடியில் மாற, கதிர், "ஹே! உன் ஃபிரெண்ட்தானே! ஏன் இப்படிப் பேசுறே?" என்று அதட்ட,

சந்தியா, "இவ ஃபிரெண்ட்டா? வேண்டாம் மாமா, என்னைப் பேச வைக்காதே. அப்புறம் நான் ஏதாவது அசிங்கமாத் திட்டிடப் போறேன்!" என்றாள் கொதிப்பாக.



அவள் பேசுவதைக் கேட்டுத் திடுக்கிட்ட கதிர், நந்தினியைப் பார்க்க, அவள் அமைதியாக நின்றாள்.

"இதெல்லாம் என்ன பேச்சு சந்தியா? உனக்கு உன் ஃபிரெண்ட் மேலே என்ன கோபம்? இருந்தாலும், இப்படிப் பேசுறது தப்பு!" என்றவன், நந்தினியிடம், "அவளுக்கு உடம்பு சரியில்லை. அதுதான். நீங்க போங்க!" என்றான் சமாதானம் செய்வது போல்.

நந்தினியும் உடனே திரும்பிச் சென்று விட, அது இன்னும் எரிகிற தீயில் எண்ணெய் விட்ட மாதிரி ஆனது.

"ஓ...! அவளுக்குச் சப்போர்ட் எல்லாம் பலமா இருக்கு. அவ என்னை விட அழகா, கலரா இருக்கா இல்லே...!" என்றதுதான் தாமதம், கதிரின் கை, சந்தியாவின் கன்னத்தில் இடியாக இறங்கியது.

சந்தியா அதிர்ந்து நிற்க, "என்ன, பேச்செல்லாம் ஒரு மாதிரியா இருக்கு! நீ எல்லாம் டாக்டருக்குப் படிக்கிறேன்னு வெளியே சொல்லிடாதே. எதை வச்சு என்னை அந்தப் பெண்ணோட சேர்த்து வச்சுப் பேசுறே?" என்றான் கோபமாக.

சந்தியாவுக்கு அப்போதுதான் உறைத்தது, கதிருக்கு எந்த விஷயமும் தெரியவில்லை என்று. தான் வாசுவின் பேச்சைக் கேட்டு வாய் விட்டதை அப்போதுதான் உணர்ந்தாள். அவளுக்கு இப்போது உண்மையிலேயே பயமாக இருந்தது. 'கதிர், கோபத்தில் நந்தினியைக் கல்யாணம் செய்ய முடிவு செய்தால்...!'

மண்டபத்தில் திருமணம் முடிந்து அனைவரும் சாப்பிடச் சென்றதால், வெளியே யாரும் இல்லை. இன்னும் சிறிது நேரத்தில் ஆட்கள் வெளியே வர ஆரம்பித்து விடுவார்கள் என்பதை உணர்ந்த கதிர்,

சந்தியாவிடம், "சரி. நீ வீட்டுக்குக் கிளம்பு!" என்றவன், அவளிடம் வண்டியைக் கொடுக்க, சந்தியா, விட்டால் போதும் என்று வண்டியை எடுத்துக் கொண்டு சென்றாள்.

கதிர், அவன் வண்டியை எடுத்துக் கொண்டு, அவளைத் தொடர்ந்து வந்தான். சந்தியா, ஏதோ யோசனையிலேயே வண்டி ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் வீட்டுக்கு வந்ததும்தான் கதிரும் அவளோடு வந்ததைச் சந்தியா கவனித்தாள். சந்தியா ஏதோ சொல்ல வர, கதிர், கை காட்டி அவளைத் தடுத்தான். அவன் முகம் கடுகடுவென்று இருந்தது. அவனைப் பார்க்கவே சந்தியாவுக்குப் பயமாக இருந்தது. இப்போது அவளுக்குக் காய்ச்சல் விட்டுக் குளிர் எடுக்க ஆரம்பித்தது.

அவள் வண்டிச் சத்தம் கேட்டு வெளியே வந்த வேதவல்லி, "என்னடி... அதுக்குள்ளே வந்திட்டே?" என்றவர், கதிரைப் பார்த்ததும், "வாப்பா கதிரு...!" என்றார் மகிழ்ச்சியாக.

"இருக்கட்டும் அத்தை, நான் பிறகு வர்றேன். சந்தியாவுக்கு உடம்பு முடியலை போல. நீங்க அவளைப் பாருங்க. அவளைத் தனியா விடாதீங்க!" என்றவன், தன் வண்டியை எடுத்துக் கொண்டு சென்றான்.



சந்தியா வீட்டில் இருந்து வந்த கதிருக்கு, எங்கு செல்வது என்று தெரியவில்லை. 'மண்டபத்திற்குத் திரும்பிச் செல்வதா? அல்லது தன்னுடைய வீட்டுக்குச் செல்வதா?' என்ற குழப்பத்தில், ரோட்டிலேயே ஓரமாக வண்டியை நிறுத்தி விட்டு யோசித்தான்.

'இவளை மனசுல நினைச்சதுக்கு, என்னைத் தெருவுல நிறுத்திட்டா. எதுக்கு இன்னைக்கு அப்படிப் பேசினா?' என்ற குழப்பத்தில் இருந்தவன், 'இந்த மன நிலையில் மண்டபத்திற்குப் போக முடியாது' என்று தோன்றியதால், வண்டியை அவன் வீட்டிற்குத் திருப்பினான்.

கதிர் வீட்டிற்கு வந்தபோது, ஹாலில் வாசு, பெரியசாமியுடன் பேசிக் கொண்டிருந்தார். அவனுக்கு இப்போது யாரோடும் பேச விருப்பமில்லை. அதனால் உள்ளே செல்லாமல், வெளித் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டான்.

"உங்க அக்கா, கதிருக்கு நீ பொண்ணு பார்த்திருக்கிறாகச் சொன்னா...!" என்று பெரியசாமி ஆரம்பித்ததும், சோர்ந்து போய் உட்கார்ந்திருந்த கதிர், 'இது என்னடா வம்பு?' என்பது போல் நிமிர்ந்து உட்கார,

வாசு, சந்தோஷத்தில் வாயெல்லாம் பல்லாக, "ஆமாம் மச்சான். ரொம்ப நல்ல இடம். அவங்க வீட்ல ஆண் ஒண்ணு, பொண் ஒண்ணு. ரெண்டு பிள்ளைங்கதான். அதனால் பொண்ணுக்கு நல்லாச் செய்வாங்க!" என்று சொல்லிக் கொண்டே செல்ல,

அவரைத் தடுத்த பெரியசாமி, "நான் இப்போ கதிருக்குக் கல்யாணம் பண்றதா இல்லை. அவனுக்கு வயசு இப்போ இருபத்து ஆறுதான் ஆகுது. இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும், பார்ப்போம்!" என்றார்.

"பொண்ணு படிப்பு முடிக்கவும் இன்னும் ஒரு வருஷம் ஆகுமே! நாம இப்போ பேசி வச்சிக்கிட்டா, இன்னும் ஒண்ணு ரெண்டு வருஷத்துல மெதுவா கல்யாணத்தை வச்சுக்கலாம். ஏன் சொல்றேன்னா, நந்தினி மாதிரி அழகு, படிப்பு, வசதி எல்லாம் சேர்ந்த மாதிரி வேற பொண்ணு நம்ம கதிருக்குக் கிடைக்கிறது கஷ்டம்.

"உங்க தங்கச்சி பொண்ணையே எடுத்துக்கோங்க... டாக்டருக்குப் படிக்குது. ஆனா... நம்ம கதிர் அளவுக்கு நிறம் இல்லையே!" என்று வாசு, நந்தினியை உயர்த்திப் பேசுவது போல் சந்தியாவை மட்டம் தட்ட,

வாசு பேசியதைக் கேட்டுக் கோபத்துடன் வீட்டிற்குள் சென்றான் கதிர். அவனுக்கு இப்போது சந்தியா காலையில் பேசியதற்கான அர்த்தம் விளங்கியது. அவள், நந்தினி மீது ஏன் கோபப்பட்டாள் என்றும் புரிந்தது.

கதிர் பேசும் முன், "என் மருமகளுக்கு எதுக்கு நிறம்? தங்கமாட்டம் குணம், அது போதாது?" என்றார் பெரியசாமி பெருமையாக.

"ஹா... ஹா...! நீங்க சொல்றது சரிதான் மச்சான்!" என்று சிரித்த வாசு, "நந்தினியை நம்ம கதிருக்குக் கொடுக்க, அவங்க வீட்ல ரொம்பப் பிரியப்படுறாங்க!" என்றார் விடாமல்.



"நீ பொண்ணு வீட்ல சொல்லிடு... நாங்க கதிருக்கு இப்போ கல்யாணம் செய்யும் உத்தேசம் இல்லை. அவங்களை வேற மாப்பிள்ளை பார்த்துக்கச் சொல்லு!" என்றார் பெரியசாமி முடிவாக.

அவர் சொன்னதைக் கேட்டு வாசுவுக்குக் கோபம் வந்தது. "நீங்க இன்னும் உங்க தங்கச்சி வீட்ல சம்பந்தம் பண்ணும் நினைப்புல இருக்கீங்களா மச்சான்! உங்க மாப்பிள்ளை உங்க வீட்ல பொண்ணு கொடுக்க மாட்டான்!" என்றார் கிண்டலாக.

அவரை அழுத்தமாக ஒரு பார்வை பார்த்த பெரியசாமி, திரும்பி லக்ஷ்மியையும் ஒரு பார்வை பார்க்க, லக்ஷ்மி நடுங்கி விட்டார். அவருக்குப் பெரியசாமி என்ன நினைக்கிறார் என்று தெரியும்.

'உனக்கு உன் பிறந்த வீட்டுச் சொந்தம் வேணும்னா, இதோட உன் தம்பியை வாயை மூடச் சொல்லு'ன்னு அர்த்தம் என்று புரிந்து கொண்டவர்,

தன் தம்பி வாசுவிடம், "அதுதான் அவர் சொல் றாருல்ல, இப்போ கதிருக்குக் கல்யாணம் பண்ணப் போறது இல்லைன்னு. நீ அதோட விடேன். அவர் பார்த்து அவர் பையனுக்குக் கல்யாணம் பண்ணிப்பார்!" என்றார் லக்ஷ்மி பதற்றமாக.

அப்போதும் அடங்காமல் வாசு, "நானும் அதேதான் சொல்றேன். அவர் நல்லா இருக்கும்போதே மகனுக்குக்

கல்யாணம் பண்ணிட வேண்டியதுதானே! ஏற்கெனவே முடியாமல் இருந்தவர்!" என்றதும் லக்ஷ்மிக்கே கோபம் வந்தது. கதிரைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

"மாமா! போதும், நிறுத்துங்க. பெரியவங்க பேசும் போது குறுக்கே பேசக் கூடாதுன்னுதான், நான் இது வரை பொறுமையாக இருந்தேன். எங்க அப்பாவுக்கு, எது எப்போ செய்யணும்னு உங்களை விட நல்லாவே தெரியும். அவர் பார்த்துப்பார். நீங்க கவலப்படாதீங்க!" என்றான் பட்டென்று. வாசு, தலையைத் தொங்கப் போட்டபடி வெளியே சென்றார்.

பெரியசாமி, "இதெல்லாம் உன்னால!" என்றார் லக்ஷ்மியைப் பார்த்து.

"எனக்கு மட்டும் சந்தியா இந்த வீட்டுக்கு மருமகளாக வரணும்னு ஆசை இல்லையா என்ன? உங்க தங்கச்சி மாப்பிள்ளைதானே முரண்டு பிடிக்கிறார். அதுதான் வாசு இந்தச் சம்பந்தத்தைப் பத்திச் சொன்னதும், அவங் களே விரும்பி வரும்போது வேண்டாம்னு சொல்லணு மான்னு நினைச்சேன்."

"நீ நினைச்சதெல்லாம் போதும். போய் உன் வேலையைப் பார்."

"பார்க்கிறேன் சாமி. இவரு தங்கச்சி வீட்டை நம்பி, என் பையனுக்க வர்ற நல்ல சம்பந்தத்தை வேண்டாம்னு சொல்றார்!" என்று முனகியபடி லக்ஷ்மி உள்ளே செல்ல,

தன் அம்மா பேசியதைக் கேட்டுக் கதிரின் முகம் மேலும் வாடியது. அமைதியாக அவன் அறைக்குச்



சென்றான். பெரியசாமி, அவன் செல்வதை வருத்தத் துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

சந்தியா, பதற்றத்தோடு இருந்தாள். அவளிடம் வேதவல்லி, "என்ன?" என்று கேட்டதற்கு, இன்று வாசுவை வழியில் பார்த்ததையும், அவர் பேசியதையும் சொல்ல,

"அந்த மனுஷன் கொஞ்ச நாளா ரொம்ப ஆடிட்டுத் தான் இருக்கார். அவர் சொன்னா ஆச்சா! உங்க மாமா சொல்லணும். நீ அதை நினைச்சு வருத்தப்படாதே!" என்று சந்தியாவைத் தேற்றினார்.

சிறிது நேரத்தில் வெளியூரில் ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்த துரை வீட்டுக்கு வந்தார். மகளைப் பார்க்க ஆர்வமாக வந்தவர், அவளைத் தேடி அவள் அறைக்குச் செல்ல, அங்கே சந்தியா கட்டிலில் சுருண்டு படுத்திருந் தாள்.

"என்ன... பாப்பா இந்த நேரத்துக்குத் தூங்குறா?" என்று அவர் மனைவியை விசாரிக்க,

ரொம்ப அக்கறை என்று நொடித்த வேதவல்லி, "அவளுக்குக் காய்ச்சல்!" என்றதும் துரை பதறி விட்டார்.

சந்தியாவின் அருகே சென்று, மகளைத் தொட்டுப் பார்த்தவர், "ஆமாம், காய்ச்சல் அடிக்குது. டாக்டர் கிட்டே போவோமா?" என்றதும்,

அவரைப் பார்த்து முறைத்த வேதவல்லி, "அவளே டாக்டருக்குத்தானே படிக்கிறா... அது உங்களுக்கு நினைப் பிருக்கா? அதெல்லாம் அவ மாத்திரை போட்டுட்டுத்தான்

தூங்குறா. நீங்க அவளைத் தொந்தரவு பண்ணாமத் தூங்க விடுங்க!" என்று எரிந்து விழுந்தார்.

துரை, மகளின் அருகே கட்டிலில் அமர்ந்தவர், அவள் தலையை வருடிக் கொடுக்க, சந்தியா தூக்கத் திலேயே அவர் கையைத் தள்ளி விட்டாள். மகளுக்குத் தொந்தரவாக இருக்க வேண்டாம் என்று துரை எழுந்து, கதவைச் சாத்தி விட்டு வெளியே சென்றார்.

அவர் வெளியே சென்றதும், சந்தியா கண் திறந்தாள். அவள் தூங்கவில்லை... தூங்குவது போல் பாசாங்கு செய்தாள். அவளுக்கு, அவள் அப்பாவின் மீது கோபம். இவரால் அல்லவா... இவரின் ஜாதி வெறியால் அல்லவா இவ்வளவு துன்பம் என்று நினைத் தவள், தாங்க முடியாமல் அழுதாள்.

மதிய உணவுக்கு வந்து லக்ஷ்மி, கதிரை அழைக்க, சாப்பிட எழுந்து வந்தவன், தன் அப்பத்தாவிடம் சென்று, "அப்பத்தா, நீங்க அத்தை வீட்டுக்குப் போயிட்டு வர்றீங் களா? சந்தியாவைக் காலையில கல்யாண வீட்டில் பார்த்தேன். அவளுக்கு ரொம்பக் காய்ச்சல். இப்போ எப்படி இருக்கான்னு தெரியலை!" என்றான்.

அவன் சொன்னவுடன், "இதோ போறேன் ராசா!" என்ற அப்பத்தா, உடனே தன் மகள் வீட்டுக்குக் கிளம்பி யும் விட்டார். கதிருக்குத் தெரியும், அவர் அங்கு சென் றால், இங்கு நடந்ததைச் சொல்வார் என்று. அதைக் கேட்டால் சந்தியாவும் நிம்மதியாக இருப்பாள் என்று தான் அவரை அனுப்பினான்.



அவன் நினைத்தபடியே சந்தியாவைச் சென்று பார்த்த அப்பத்தா, அந்த அறையிலேயே அமர்ந்து, தன் மகளிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது வேதவல்லி, இன்று வாசு, சந்தியாவிடம், கதிருக்கும் நந்தினிக்கும் திருமணம் என்று சொன்னதைச் சொல்ல,

"அவன் கிடக்கிறான் லூசுப் பய. அதெல்லாம் ஒண்ணும் கிடையாது!" என்றவர், சந்தியாவிடம், "அதைக் கேட்டுத்தான் நீ இப்படிச் சீக்கு வந்த கோழி மாதிரிக் கிடக்கிறியா? கிறுக்குக் கழுதை. அதெல்லாம் உன்னோட பெரிய மாமனும், கதிரும் சேர்ந்து, அவனை விரட்டி விட்டுட்டாங்க!" என்றவர், நடந்ததைச் சொல்ல, சந்தியா எழுந்து உட்கார்ந்தாள்.

"உங்க மாமன், இன்னும் ரெண்டு வருஷத்துக்குக் கதிருக்குக் கல்யாணம் பண்ற நினைப்பில்லைன்னு சொல்லிட்டான். உன்னோட படிப்பு முடிய ரெண்டு வருஷம் ஆகுமே! அதை வச்சுத்தான் அப்படிச் சொல்லி இருப்பான்!" என்றதும், சந்தியாவின் முகம் மலர்ந்தது.

அதன் பிறகு சந்தியா தெளிவாக இருந்தாள். மதியம் துரை வந்ததும், "இப்போ எப்படி இருக்கும்மா?" என்றதற்கு, "பரவாயில்லைப்பா!" என்று பதில் தந்தாள்.

இருவரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டனர். சந்தியா அமைதியாகச் சாப்பிட்டாள். துரை, அவளுக்கு உடம்புக்கு முடியாததால் அப்படி இருக்கிறாள் என்று நினைத்தார்.

"இந்த வருஷம் நம்ம கோயிலுக்கு இன்னும் பொங்கல் வைக்கலை. அதனால்தான் சந்தியாவுக்கு உடம்புக்கு முடியலையோ என்னவோ! நாளைக்கு நைட் தான் சந்தியா ஊருக்குப் போறா. அதனால நாளைக் காலையிலே போய்ப் பொங்கல் வச்சிட்டு வந்திடுவோம்," என்றார் வேதவல்லி.

துரை அதற்குச் சரி என்றதும், "அப்படியே எங்க ரெண்டு அண்ணன்களுக்கும், உங்க தங்கச்சிக்கும் நாளைக்கு வரச் சொல்லிட்டு வந்திடுங்க!" என்றதும், துரை, வேதவல்லியை முறைக்க, "சொந்த பந்தத்தைக் கூப்பிடாம பொங்கல் வைக்க முடியுமா?" என்றார் வேதா.

அப்போது வேதாவின் அம்மா அங்கிருந்ததால், துரையால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதனால், சரி என்றவர், தன் இரு மச்சினர்களுக்கும் நேரில் சென்று சொன்னார். அதே போல் வெளியூரில் இருந்த தன் தங்கைக்கும் கைபேசியில் அழைத்துச் சொன்னார்.

திருமண மண்டபத்தில் இருந்து சொல்லாமல் வந்த தால், மாலை ஆனதும் கதிர், சோலையைச் சென்று பார்த்துப் பேசி விட்டு வந்தான். கதிர் சென்றதும், சோலை, சித்ராவிடம் விஷயத்தைச் சொல்ல,

"அதுதானே பார்த்தேன். நிச்சயத்துக்கு வரக் கௌரவத்தைப் பார்த்த நந்தினி, கல்யாணத்துக்கு மட்டும் எப்படி வந்தான்னு நினைச்சேன். கதிர் அண்ணன் வரு வாங்கன்னு தெரிஞ்சுதான் வந்திருக்கா. இருக்கட்டும்... ஒரு நாள் அவளுக்குப் பேய் ஓட்டுறேன்," என்றாள் சித்ரா கோபமாக.



"அம்மா, தாயே! நீ இன்னைக்கு மூட்-அவுட் ஆகிடாதேம்மா. அப்புறம் எனக்குக் கஷ்டம்!" என்று சோலை சிரிக்க, சித்ரா அவனைப் பார்த்துப் பொய்யாக முறைத்து விட்டு, உள்ளே சென்றாள்.

வீட்டிற்கு வந்த கதிரிடம் லக்ஷ்மி, துரை வந்து மறுநாள் பொங்கல் வைக்க அழைத்து விட்டுச் சென் றதைச் சொல்ல, கதிருக்கும் சந்தியாவை நேரில் பார்க்க வேண்டும் போல் இருந்ததால், அன்று ஊருக்குக் கிளம்புவதாக இருந்தவன், தன் பயணத்தைத் தள்ளி வைத்தான்.

எப்போதும், எங்கு சென்றாலும் ஒரே வண்டியில் தான் எல்லோரும் செல்வார்கள். இந்த முறை துரை, அவர் குடும்பத்துக்கு ஒரு வண்டியும், வேதவல்லியின் பிறந்த வீட்டினருக்கு வேறு ஒரு வண்டியும் சொல்லி இருந்தார்.

கதிர், அவர்களோடு செல்லாமல், சிறிது நேரம் சென்று அவன் பைக்கில் சென்றான். துரையின் குல தெய்வக் கோயில், ஊருக்கு வெளியில் தோட்டத்தில் இருந்தது.

எப்போதும் துள்ளித் திரியும் சந்தியா, இப்போது அமைதியாக இருந்தாள். பெரியசாமியிடம் நலம் விசாரித் தவள், தன் அப்பத்தாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் சென்று, "வாப்பா கதிரு...!" என்று அவள் அப்பத்தா சொன்னதும், கதிர் என்ற வார்த்தையில் கண் திறந்து பார்த்தவள், எதிரில் அவன் நிற்பதைப் பார்த்ததும், நம்ப முடியாமல், தூக்கத்தில் கனவோ என்று நினைத்துக் கண்களை நன்றாகக் கசக்கி விட்டுப் பார்த் தாள்.

அவள் செய்கையில் கதிருக்குச் சிரிப்பு வந்தது. அதை அடக்கியவன், சந்தியாவின் அப்பத்தாவிடம், "நல்லா இருக்கீங்களா பாட்டி?" என்று நலம் விசாரித்தான்.

"நல்லாயிருக்கேன் ராசா. நீ எப்படி இருக்கே? எப்போ ஊருக்கு வந்தே?" என்றார் பதிலுக்கு.

"நல்லாயிருக்கேன் பாட்டி. என் ஃபிரெண்டுக்குக் கல்யாணம். அதுக்கு வந்தேன்!" என்றவனின் பார்வை என்னவோ சந்தியாவின் மீதுதான் இருந்தது.

கதிர், தன் மேல் கோபத்தில் இருப்பானோ என்று பயந்து கொண்டிருந்த சந்தியாவுக்கு, அவன் பார்வையே வேண்டிய பதிலைத் தந்ததால், அவள் முகமும் மலர்ந்தது. சந்தியா எழுந்து, பொங்கல் வைக்கும் இடத்தில் சென்று அமர்ந்தாள்.

கதிர் வருவதற்கு முன் சோர்ந்து படுத்திருந்தவள், அவன் வந்ததும் எழுந்து உட்கார்ந்ததை அவள் அம்மா, அப்பத்தா, ஆச்சி கவனித்துக் கொண்டுதான் இருந்தனர்.

பெரியசாமியால் அதிக நேரம் ஒரு இடத்தில் உட்கார முடியாது என்பதால், அவர் காரிலேயே படுத்திருந்தார்.



வீட்டுப் பெண்கள் பொங்கல் வைக்கும் வேலையைப் பார்க்க, கதிர் சென்றபோது, துரையும் பாண்டியனும் அங்கு இல்லை.

கதிர், தன் சித்தப்பா மக்களோடு சேர்ந்து பேசிக் கொண்டிருந்தான். அப்போது அங்கே வந்த துரை, கதிரைப் பார்த்து, 'வா' என்று சொல்லவில்லை. அவருக்குக் கதிர் ஊருக்கு வந்திருப்பது இப்போதுதான் தெரியும். அவனைக் கண்டு கொள்ளாமல், வேறு வேலை இருப்பது போல் அங்கிருந்து நகர்ந்து விட்டார்.

கதிருக்குக் கோபமாக வந்தது. அவன் திரும்பி சந்தியாவைப் பார்க்க, அவளும் அங்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவள் முகமும் வாடி விட்டது.

சந்தியாவுக்காகத் தன் மாமா செய்த உதாசீனத்தைக் கதிர் பொறுத்துக் கொண்டான். பொங்கல் வைத்து முடித் ததும் சாமி கும்பிட்டனர். சாமி கும்பிட்டதும், எல்லோரும் சாப்பிட உட்கார, அப்போதும் துரை, கதிரைச் சாப்பிட வா என்று அழைக்கவில்லை.

அழைக்காமல் சாப்பிடக் கதிர் என்ன ரோஷம் கெட்டவனா? அவன் அங்கிருந்த எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு, சாப்பிடாமலே கிளம்பி விட்டான்.

"சாப்பிட்டுப் போ கதிரு...!" என்ற வேதவல்லியைப் பார்த்துப் புன்னகைத்தவன், அருகில் நின்ற சந்தியா வைத்திருந்த பொங்கலிலிருந்து சிறிது மட்டும் வாயில்

போட்டுக் கொண்டு, "என் ஃபிரெண்ட் சோலை இருக்கான் இல்ல... அவங்க வீட்ல இன்னைக்குக் கறி விருந்து. என்னைச் சாப்பிட வரச் சொல்லியிருக்கான். நான் அங்க சாப்பிட்டுக்கிறேன்..." என்றான் யாருக்கும் எந்த வருத்தமும் வராதபடி.

அவன் சொன்ன காரணம் ஏற்றுக் கொள்ளும்படி இருந்ததால்... வேதவல்லியும் அதற்கு மேல் அவனை வற்புறுத்தவில்லை. துரை அவனைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

கதிர் சாப்பிடாமல் சென்றதற்குக் காரணம் சந்தியாவுக்குத் தெரியும். அவள் மனதில் விலகி இருந்த சோர்வு மீண்டும் வந்தது. அவள் சாப்பிடப் பிடிக்கவில்லை என்று சொல்லி, அவள் அப்பத்தாவின் மடியில் படுத்துக் கொண்டாள்.

இப்படி ஒத்தப் பிள்ளையப் பெத்து வச்சிக்கிட்டு... அது மனசு புரியாம இருக்கானே... என்று சந்தியாவின் அப்பத்தா தன் மகனை நினைத்து வருத்தப்பட்டார்.

சந்தியாவுக்கு உடம்பு சரியில்லாததால்... துரையும் அவளுடன் வந்து கல்லூரியில் விட்டு விட்டுச் சென்றார். எப்போது ஊருக்குச் சென்றாலும் சந்தியாவே தான் சித்துவை அழைப்பாள். இந்த முறை அவள் அழைக்கவே இல்லை.

நேரில் வந்ததும் பேசிக் கொள்வோம் என்று இருந்த சித்துவிடம் வந்ததிலிருந்து சந்தியா பிடி கொடுத்தே



பேசவில்லை. மதிய உணவு வேளையில் கைபேசியுடன் தனியாகச் சென்ற சந்தியாவைச் சித்து தொடர்ந்து சென்றான்.

"எங்க அப்பா வீம்புக்குன்னே நம்ம கல்யாணத்தை நடக்க விட மாட்டார் மாமா. நீ பேசாம நந்தினியைக் கல்யாணம் பண்ணிக்கோ. உங்க ரெண்டு பேருக்கும் பொருத்தம் நல்லா இருக்கு..." என்ற சந்தியாவின் பேச்சைக் கேட்ட சித்து அதிர்ந்து நின்றான் என்றால்... அந்தப் பக்கம் கதிரின் நிலை?

## 10

**'நீ** நந்தினியவே கல்யாணம் பண்ணிக்கோ' மாமா... என்று சொல்லி விட்டுச் சந்தியா கதிரின் பதிலுக்காகக் காத்திருக்க... கதிர் பதில் சொல்லாமலே கைபேசியை அணைத்து விட்டான்.

சந்தியா சோர்வோடு திரும்ப... அங்கே சித்தார்த் கண்களில் கனல் பொங்க நின்று கொண்டிருந்தான்.

சந்தியா, "சித்து..." என்று அழைத்ததும்... அவள் பேசுவதைக் கேட்க விரும்பாதவன் போல் சித்தார்த் அங்கிருந்து செல்ல...

சந்தியா சோர்வோடு அங்கிருந்த இருக்கையில் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

சந்தியா உணவு நேரம் தாண்டியும் வகுப்பிற்கு வராததால்... சித்தார்த் அவளைத் தேடிக் கொண்டு

வந்தவன், அவள் ஓய்ந்து போய் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவள் அருகில் சென்று உட்கார்ந்தான்.

சித்தார்த்தைப் பார்த்ததும், "வேற வழி தெரியாமத் தான் கதிர் மாமா கிட்ட அப்படிப் பேசினேன். பாவம் சித்து அவங்க... என்னால ரொம்பக் கஷ்டப்படுறாங்க. எங்க பெரிய மாமா இப்பதான் உடம்பு கொஞ்சம் சரியாகி இருக்கார். அவர் நல்லா இருக்கும்போதே... கதிர் மாமா கல்யாணத்தை எங்க அத்தை செய்திடணும்னு நினைக்கிறது நியாயம்தானே..." என்றாள் கண்களில் கண்ணீருடன்.

சித்தார்த் அவள் சொன்னதுக்குப் பதில் சொல்லாமல், "நந்தினின்னு சொன்னியே அது யாரு?" என்று கேட்டான்.

"அவ என்னோட ஃப்ரெண்ட். உன் கிட்ட நான் முன்னாடியே சொல்லியிருக்கேன். நானு, சித்ரா, நந்தினி மூணு பேரும் ஒரே ஸ்கூல்லதான் படிச்சோம்..." என்றாள்.

"அவளுக்கும் கதிருக்கும் என்ன சம்பந்தம்?" என்று சித்தார்த் புரியாமல் பார்க்க...

சந்தியா ஊரில் நடந்த அனைத்தையும் சொன்னாள்.

அவள் சொன்னதைப் பொறுமையாகக் கேட்ட சித்தார்த், "நந்தினிக்கு நீ கதிரை விரும்புறது தெரியாதா?" என்றான்.

"தெரியும்..." என்று சொன்ன சந்தியாவின் முகம் வெறுப்பைக் காட்டியது.



"நல்ல ஃப்ரெண்ட்..." என்று சித்தார்த் கேலியாகச் சிரிக்க... சந்தியாவுக்கு அவமானமாக இருந்தது.

ஆனால் இந்த அவமானம் எல்லாம் நந்தினிக்கு இல்லை. அவள் எப்போதும் போல் இருந்தாள்.

திருமணம் முடிந்த மூன்றாம் நாள் சோலையும், சித்ராவும் சினிமாவுக்குக் கிளம்பினர்.

சித்ராவின் மாமியார், "முதல் தடவை சேர்ந்து வெளியே போறீங்க.... அதனால முதல்ல கோவிலுக்குப் போயிட்டுப் போங்க..." என்றார்.

அவர் சொல்படி இருவரும் கோவிலுக்குச் சென்றனர்.

சாமி கும்பிட்டு விட்டுத் திரும்பி வரும்போது... நந்தினி கோவிலுக்குள் நுழைந்தாள். இவளை எப்படிப் பார்ப்பது என்று நினைத்துக் கொண்டிருந்த சித்ராவுக்கு... நந்தினியே எதிரில் வந்ததும், இன்னைக்கு இவளை விடுறேனா பாரு... என்று நினைத்தவள், நந்தினியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

நந்தினி, "எப்படி இருக்க சித்ரா?" என்றாள்.

"ரொம்ப நல்லா இருக்கேன் நந்தினி. என்னை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிட்ட என்னோட புருஷன் என்னை நல்லாவே பார்த்துக்கிறார்."

"அப்படியா! ரொம்பச் சந்தோஷம்..." என்று நந்தினி புன்னகைக்க...

"ஆனா, உன்னைப் பார்த்தா தான் எனக்குப் பாவமா இருக்கு..." என்றாள் சித்ரா, வேண்டுமென்றே சோகமான குரலில்.

நந்தினி எதற்கு என்று புரியாமல் பார்க்க... "நீ என்னை விட அழகு, நல்ல படிப்பு, நிறைய வசதி இருந்தும்... உன்னை யாரும் விரும்பிப் பொண்ணு கேட்டு வரலையே..." என்றாள் பரிதாபப்படுவது போல்.

அவள் சொன்னதைக் கேட்ட நந்தினிக்குச் சுருக்கென்று இருக்க... சித்ராவைப் பார்த்து முறைத்தவள், "என்ன... பேச்செல்லாம் ஒரு மாதிரி இருக்கு. உனக்குத் தெரியுமா... என்னை யாரும் பெண் கேட்டு வரலைன்னு?" என்றாள் கோபமாக.

"பின்ன எதுக்கு... சந்தியாவை விரும்புற கதிரை நீ கல்யாணம் பண்ணிக்க நினைக்கிற?" என்றாள் சித்ரா பட்டென்று.

திகைத்து விழித்த நந்தினி, "அது... அது வந்து... இப்பத்தான் அவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப் போறது இல்லையே...! கதிர் எப்படியும் வேற யாரையோ கல்யாணம் பண்ணிக்கப் போறாங்க... ஏன் அது நானா இருக்கக் கூடாது?" என்றாள்.

அவளைப் பார்த்து இகழ்ச்சியாகப் புன்னகைத்த சித்ரா, "உன்னைப் பார்த்தா நிஜமாவே பாவமா இருக்கு நந்தினி... உன்னைக் கதிர் அண்ணன் வீட்ல வேண்டாம்னு சொன்னது உனக்குத் தெரியாதா?" என்றாள்.



அவள் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்ட நந்தினி, "நீ பொய் சொல்ற..." என்றாள்.

"நான் பொய் சொல்லலை... கதிர் அண்ணனுக்கும், சந்தியாவுக்கும்தான் கல்யாணம் நடக்கும். நீ வீணா உன் மனசுல ஆசையை வளர்த்துக்காதே. நம்மை விரும்பி வர்றவங்களைக் கல்யாணம் செஞ்சாத்தான் வாழ்க்கை சந்தோஷமா இருக்கும்.

"நீயும் எனக்குச் சந்தியாவைப் போலத்தான். சொல்லணும்னு தோணிச்சு... சொல்லிட்டேன். பிறகு உன் இஷ்டம்!" என்ற சித்ரா, தன் கணவன் சோலையின் கையைப் பற்றியபடி கோவிலை விட்டு வெளியே செல்ல... நந்தினி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சித்ரா ஒரு சாதாரணப் புடவை மற்றும் ஒரு மெல்லிய செயின் தான் அணிந்திருந்தாள். ஆளும் பார்ப்பதற்குச் சுமார்தான். ஆனால் அவள் முகம் பொலிவுடன் இருந்தது.

சோலையிடம் ஏதோ பேசிச் சிரித்தபடி சென்றாள். அவள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறாள் என்று பார்த்ததும் தெரிந்தது.

தனக்கும், கதிருக்கும் திருமணம் நடந்தால்... கதிர் தன்னுடன் இப்படிப் பேசிச் சிரிப்பானா... தானும் இப்படிச் சந்தோஷமாக இருப்போமா என்று நந்தினிக்கே சந்தேகமாக இருந்தது.

நந்தினி வீட்டிற்குச் சென்ற போது, அவள் அண்ணனும் அம்மாவும் பேசிக் கொண்டிருந்தனர்.

"என்னடா இப்படிச் சொல்ற? நம்ம நந்தினியைப் போய் யாராவது வேண்டாம்னு சொல்வாங்களா?"

"சொல்லிட்டாங்கம்மா... கதிரோட அப்பா வாசு கிட்ட சொல்லியிருக்கார்..." என்றான் மகேஷ், ஆத்திரமாக.

"சரி விடு. அவங்க கொடுத்து வச்சது அவ்வளவு தான்..." என்று அவன் அம்மா சாதாரணமாக எடுத்துக் கொள்ள...

மகேஷால் அவ்வளவு எளிதாக விட முடியவில்லை. "நான் கதிர்கிட்ட பேசுறேன்..." என்றான்.

அவர்கள் பேசுவதைக் கேட்டபடி உள்ளே வந்த நந்தினி, "வேண்டாம் அண்ணா! இதை இதோட விட்டுடு..." என்றாள்.

கதிர் தன்னை வேண்டாம் என்று சொன்னால் அவளால் தாங்க முடியாது. அதனால் அவன் சொல்வ தற்கு முன் நாமே முந்திக் கொள்வோம் என்று நினைத் தாள்.

"இன்னொரு பெண்ணை விரும்புறவர் எனக்கு வேண்டாம். எனக்கென்ன குறை? நாம ஏன் அவர்கிட்ட கெஞ்சணும்?" என்றாள் திமிராக.

மகேஷ் அவளைச் சந்தேகமாகப் பார்க்க...

"ஆமாம், நிஜமாத்தான் சொல்றேன். எனக்கு அந்தக் கதிர் வேண்டாம். அதே மாதிரி சந்தியாவுக்கும், கதிருக்கும்



கல்யாணம் நடக்கக் கூடாது. எனக்குக் கிடைக்காத கதிர் சந்தியாவுக்கும் கிடைக்கக் கூடாது..." என்றாள் ஆத்திர மாக.

மகேஷும், அவன் அம்மாவும் ஏன் என்பது போல் நந்தினியைப் பார்க்க...

"சந்தியா எப்பவும் எல்லாத்திலேயும் என்னைத் தோற்க வச்சிக்கிட்டே இருக்கா. நான் தான் ஸ்டேட் ரேங்க் வாங்கக் கஷ்டப்பட்டுப் படிச்சேன். ஆனா அவதான் வாங்கினா. அதேபோல நான் படிக்க ஆசைப்பட்ட டாக்டர் படிப்பை... இப்ப அவதான் படிக்கிறா. எனக்குச் சீட் கிடைக்கலை... எல்லாத்திலேயும் அவகிட்ட தோத் துட்டேன். இதுலயும் நான் தோத்துடக் கூடாது..." என்றாள் அழுகையுடன்.

தன் தங்கையின் கண்ணீரைப் பார்த்த மகேஷ், "நான் உன்னைத் தோற்க விட மாட்டேன்..." என்றான்.

அவன் அம்மா அவர்கள் இருவரையும் மாறி மாறிக் கலவரமாகப் பார்த்தவர்,

நந்தினி அவள் அறைக்குச் சென்றதும், "அவதான் லூசு மாதிரிப் பேசுறானா... நீயும் அவளோட சேர்ந்துட்டுப் பேசுற... இப்படி மத்தவங்க மேல பகையை வளர்க்கிறது நல்லது இல்ல. நீ அவளுக்கு வேற மாப்பிள்ளை பார்க்க ஆரம்பி... அப்பதான் அவ மனசு மாறும்..." என்றார்.

மகேஷ் அதற்கும் "சரி..." என்றான்.

இரண்டு வாரங்கள் சென்றிருந்தது.

சந்தியா கதிரிடம் நந்தினியைத் திருமணம் செய்து கொள் என்று சொல்லி விட்டு... பாவம் அவள்தான் தவித்துப் போனாள்.

சித்தார்த்துக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"உனக்கு இது தேவையா! உன் நாக்குல சனி சடுகுடு விளையாடுதுன்னு நினைக்கிறேன். கல்யாணத் துக்குப் போனோமா... உங்க மாமாவைப் பார்த்துச் சைட் அடிச்சோமான்னு இல்லாம... எதுக்குத் தேவையில்லாம வாயை விடணும்... இப்ப வருத்தப்படணும்...?"

"ரொம்பத் தெரிஞ்ச மாதிரிப் பேசாதே சித்து... முதல்ல நான் வாசு சொன்னதை நம்பவே இல்லை. ஆனா, மேடையில கதிர் மாமாவையும் நந்தினியையும் பார்த்ததும் பொறுக்க முடியலை."

"பொறாமை..." என்று சித்தார்த் கிண்டலாகச் சிரிக்க...

"ஆமாம். பொறாமைதான். நீ லவ் பண்ணும்போது உனக்கும் அது புரியும்..." என்றாள் சந்தியா.

"சரி. அன்னைக்கு அப்படிப் பேசித்தான கதிர்கிட்ட அறை வாங்கின... பிறகும் உனக்குப் புத்தி வரலையே! திரும்ப ஏன் கதிரை நந்தினியைக் கல்யாணம் பண் ணிக்கச் சொல்லிச் சொன்ன?"

"அன்னைக்குக் கதிர் மாமா கோவில்ல இருந்து சாப்பிடாமலே போயிட்டாங்க. அப்ப அத்தைதான்



சொன்னாங்க... உங்க மாமா உன்னைக் கதிருக்குக் கல்யாணம் செய்யணும்னு ரொம்ப நம்பிக்கையா இருக்காரு. ஆனா, உங்க அப்பா இவ்வளவு பிடிவாதமா இருக்கிறதைப் பார்த்தா... உங்க கல்யாணம் நடக்கு மான்னு தெரியலை...

"உங்க மாமா நல்லா இருக்கும்போதே கதிருக்குக் கல்யாணத்தை முடிச்சிட்டா... நிம்மதியா இருக்கும்னு பார்த்தேன்... அப்படின்னு சொன்னாங்க. அவங்க சொல்றதும் சரின்னு தோணிச்சு. அதான் அப்படிப் பேசிட்டேன்."

"அவங்க ஏதோ பேசினாங்க சரி. அதுக்காக நீ கதிர்கிட்ட இப்படியா பேசுறது? இப்படி எல்லாரும் சேர்ந்து அவருக்கு டென்ஷன் கொடுத்தா... அவரும் தான் என்ன பண்ணுவார்?" என்று சித்தார்த் கதிருக்குப் பரிந்து பேச...

"ம்ம்... ஆமா. கதிர் மாமா டென்ஷன்தான் ஆகியிருப்பாங்க. என்னால கதிர் மாமாவை யாருக்கும் விட்டுத் தர முடியாது. அதை நான் உணர்ந்துட்டேன். ஆனா கதிர் மாமா கோபமா இருக்காங்க. போன் பண்ணாக் கூட எடுக்க மாட்டேங்கிறாங்க. இப்ப என்ன பண்றது?" என்று சந்தியா சித்தார்த்தைப் பார்க்க...

"சந்தியா, நீ ஒண்ணு புரிஞ்சிக்கோ... இதுல கதிர் செய்ய எதுவுமே இல்லை. அவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாராத்தான் இருக்கார். பிரச்சனை பண்றது உங்க அப்பா. உங்க அப்பா மனசு மாறினாத்தான் உங்க கல்யாணம் நடக்கும். உங்க அப்பா மனசை எப்படி மாத்துறதுன்னு யோசி..." என்றான்.

சந்தியா, எப்படி மாற்றுவது என்று தீவிரமாக யோசித்தாள். அன்றுதான் அவர்களுக்குக் கடைசிப் பரிட்சை.

பரிட்சை முடிந்து மாணவர்கள் சென்றிருந்தனர். இவர்கள் இருவரும் கல்லூரி வளாகத்திற்குள் இருந்த மரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"இது ஓ.கே.வா பாரு..." என்ற சந்தியா, "அப்பா, நீங்க என்னைக் கதிர் மாமாவுக்குக் கல்யாணம் பண்ணித் தரலைன்னா... நான் காலம் முழுவதும் கல்யாணம் பண்ணிக்காம கன்னியாவே இருந்துடுவேன்..." என்று நாடக பாணியில் வசனம் பேச...

சித்தார்த் சுற்றி ஏதாவது கல் இருக்கிறதா என்று பார்த்தவன், "கொன்னே புடுவேன்... வீணா என்னைக் கொலைகாரன் ஆக்காதே. ஒழுங்கா யோசி!" என்றான்.

சந்தியா திரும்ப யோசிக்க ஆரம்பிக்க... "நீ யோசிச்சது போதும். நான் ஒரு யோசனை சொல்றேன்..." என்ற சித்தார்த், "நீ வேற ஜாதிப் பையனை லவ் பண்றேன்னு உங்க அப்பாகிட்ட சொல்லு. உடனே உங்க அப்பா உன்னை வெளி ஆளுக்குச் செய்யுறதுக்குப் பதில் கதிருக்கே கல்யாணம் செஞ்சுடலாம்னு முடிவு செய்வார்.

"நீ முதல்ல ஒத்துக்க முடியாதுன்னு சொல்லு. அப்புறம் உங்க அப்பாவுக்காக ஒத்துக்கிற மாதிரி ஒத்துக்கோ. எப்படி என் ஐடியா?" என்று சித்தார்த் கேட்க...

சந்தியா தன் நண்பனைப் பெருமையாகப் பார்த்தாள்.



அப்போது, "சூப்பர்... சூப்பர் ஐடியா!" என்று குரல் கேட்டுச் சந்தியாவும் சித்தார்த்தும் திரும்ப... அங்கே கதிர் நின்று கொண்டிருந்தான்.

கதிருக்கும் சித்தார்த்துக்கும் ஏற்கெனவே ஒருவரை ஒருவர் தெரியும் என்றாலும்... இவ்வளவு அருகில் பார்ப்பது இன்றுதான்.

கதிரை அந்த நேரத்தில், அந்த இடத்தில் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை என்பது சந்தியா கண் சிமிட்டாமல் அவனைப் பார்ப்பதிலிருந்தே கதிருக்குப் புரிந்தது.

அவளது விரிந்த விழிகளும், நம்பாத பாவனையும் பார்த்தவனின் முகத்தில் புன்னகையை வரவழைக்க...

மலர்ந்த முகத்துடன் சித்தார்த்தின் பக்கம் திரும்பியவன், "நீ எங்க கல்யாணம் நடக்க ஐடியா தர்ற மாதிரித் தெரியலை... சந்தியாவை அவங்க அப்பாகிட்ட அடி வாங்க வைக்கப் பார்க்கிற மாதிரிதான் தெரியுது..." என்றான்.

கதிர் சொன்னதைக் கேட்ட சந்தியா, "ஆமாம்..." என்று தலையாட்டிக் கொண்டே சித்தார்த்தைப் பார்க்க...

கதிர் தொடர்ந்து, "நீ சொன்னபடி செஞ்சா... சந்தியாவோட தோலை உரிச்சி எங்க மாமா தொங்க விட்டுடுவார். பரவாயில்லையா?" என்றான் புன்னகையுடன்.

இப்போது சந்தியா சித்தார்த்தைப் பார்த்து முறைத்தாள்.

அவளின் முக பாவனைகளைப் பார்த்த சித்தார்த், "அடிப் பாவி! இவ்வளவு நேரம் நான் சொன்னதுக்குச் சரின்னு சொல்லிட்டு... இப்ப உங்க மாமாவைப் பார்த்ததும் கட்சி மாறிட்ட பார்த்தியா! இந்த லவ் பண்றவங்களுக்கு மட்டும் ஃப்ரெண்டாவே இருக்கக் கூடாது..." என்று புலம்ப...

அதைப் பார்த்த சந்தியாவும், கதிரும் சிரித்தனர்.

அவர்கள் இருவரையும் பார்த்த சித்தார்த்தின் முகமும் மலர்ந்தது.

அவனே கதிரின் அருகில் சென்று கை நீட்ட... அதை நட்புடன் பற்றிக் கொண்ட கதிர், "என்னைப் பத்தி நான் சொல்ல வேண்டியது இல்லைன்னு நினைக்கிறேன்..." என்றான் சந்தியாவைப் பார்த்துக் கொண்டே.

"உண்மைதான் கதிர். சந்தியா உங்களைப் பத்திப் பேசிப் பேசி... எனக்கே உங்க மேல லவ் வந்துடுச்சுன்னா பார்த்துக்கோங்களேன்..." என்று சித்தார்த் புன்னகைக்க...

அவன் சொன்னதைக் கேட்டு ஒரு நொடி திகைத்த கதிர்... மறு நொடி வாய் விட்டுச் சிரித்தான்.

அவர்கள் இருவரும் பேசிக் கொள்வதைப் பார்த்த சந்தியாவுக்குப் பொறாமையாக இருந்தது. இவனுங்க ரெண்டு பேரும் அக்னி நட்சத்திரம் பிரபு, கார்த்திக் மாதிரி தானே எப்பவும் பார்த்துப்பாங்க. இப்ப என்ன ரொம்ப உருகுறாங்க... என்று நினைத்த சந்தியா சித்தார்த்தைப் பார்த்து முறைக்க...



"வந்ததிலிருந்து நீங்க என்கிட்ட மட்டும் பேசுறதைப் பார்த்து உங்க ஆளுக்குப் புஸுபுஸுன்னு கோபம் ஏறுது..." என்று கதிரின் காதில் சித்தார்த் கிசுகிசுக்க...

சந்தியாவைப் பார்த்த கதிர், அவளை அலட்சியப் படுத்தி விட்டுத் தொடர்ந்து சித்தார்த்துடன் மட்டும் பேசினான்.

கதிர் தன்னைக் கண்டு கொள்ளாமல் சித்தார்த்துடன் மட்டும் பேசுவதைப் பார்த்த சந்தியா, தான் எதற்கு இங்கு தேவையில்லாமல் அமர்ந்திருக்க வேண்டும் என்று நினைத்தவள், பொதுவாக, "நான் ஹாஸ்டலுக்குப் போறேன்..." என்று சொல்ல... கதிர் அப்போதும் அவளைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கதிரை ஆச்சரியமாகப் பார்த்த சித்தார்த், "நீங்க சந்தியாவைப் பார்க்க வரலையா?" என்றான்.

"இல்லை. என் ஃப்ரெண்டுக்குக் கால்ல அடி. அவனை இந்த ஹாஸ்பிடல்ல காமிக்கக் கூட்டிட்டு வந்தேன்..." என்று கதிர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

"டேய் கதிர்! வண்டியை பார்க் பண்ணிட்டு வர்றதுக்குள்ள எங்கடா போன?" என்று கேட்டபடி அங்கே ஒருவன் வந்தான்.

அவனைத் தன் நண்பன் பாலா என்று சித்தார்த்திடம் அறிமுகப்படுத்திய கதிர், அவனுக்குக் காலில் அடி என்று சொல்ல... சித்தார்த்தும், சந்தியாவும் பாலாவின் காலைப்

பார்க்க... அங்கே பெரிதாக எந்த அடியும் இல்லை. லேசாக விரலில் அடிபட்டு ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

'இது ஹாஸ்பிடலுக்கு வர்ற அளவுக்குக் காயமா' என்று நினைத்த சந்தியா... கதிரைப் பார்த்து முறைக்க...

கதிர் ஏதோ விளையாடுகிறான் என்று புரிந்து கொண்ட சித்தார்த் சிரிப்பை அடக்கிக் கொண்டு நின்றான்.

"எனக்குச் சின்ன வயசுல இருந்து ஹாஸ்பிடல் போகணும்னாலே பயம். ஜுரம் வந்தாக் கூட மெடிக்கல் ஷாப்புல மாத்திரை வாங்கித்தான் சாப்பிடுவேன். என்னைப் போய் எதுக்குடா இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வந்திருக்க? எனக்கு இந்த ஹாஸ்பிடலைப் பார்த்தாத்தான் லேசா நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக்கு!" என்று பாலா புலம்ப...

"சின்னக் காயமுன்னு அலட்சியமா இருந்திடக் கூடாதுடா. இரு டாக்டரைப் பார்த்துடலாம்..." என்ற கதிர்... சித்தார்த்தைப் பார்த்துக் கண் சிமிட்ட...

புரிந்து கொண்ட சித்தார்த், "வாங்க பாலா. நான் உங்களுக்கு ட்ரீட்மெண்ட் தர்றேன்..." என்று சொல்லி அங்கிருந்து பாலாவை அழைத்துக் கொண்டு சென்றான்.

"நீ நிஜமாவே டாக்டர்தானே... போலி டாக்டர் இல்லையே!" என்று கேட்டபடி சித்தார்த்துடன் சென்ற பாலா... சிறிது தூரம் தள்ளிச் சென்றதும், "இங்க என்ன நடக்குது? யார் அந்தப் பொண்ணு? கதிருக்கும் அந்தப் பொண்ணுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்க...



கதிரின் நண்பன் என்பதால் சித்தார்த்தும் சந்தியாவைப் பற்றிச் சொல்ல... கேட்ட பாலாவுக்கு இப்படியும் காதலர்கள் இருப்பார்களா என்றே நினைக்கத் தோன்றியது.

பெற்றவர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு, ஊர் சுற்றும் காதலர்களைத்தான் அவன் இதுவரை பார்த்திருக்கிறான். ஒரே ஊரில் இருந்தும் பெரியவர்களின் பேச்சை மதித்துக் கதிர் சந்தியாவை விட்டு விலகி இருந்ததைப் பார்க்கும் போதே... அவனுக்குத் தன் நண்பனைக் குறித்துப் பெருமையாகவே இருந்தது.

கதிர் சந்தியாவை நேரில் சந்திக்கத்தான் தன்னை இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான் என்று புரிந்து கொண்ட பாலா சித்தார்த்துடன் செல்ல... சித்தார்த் அவன் காயத்துக்கு மருந்திட்டு விட்டு, அவனை அழைத்துக் கொண்டு அங்கிருந்த உணவகத்திற்குச் சென்றான்.

சந்தியா எங்கோ வேடிக்கை பார்க்க... கதிர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் சென்று கதிரின் பக்கம் திரும்பிய சந்தியா, 'இந்தப் பார்வைக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை...' என்று மனதிற்குள் நினைத்தவள், "நான் போறேன்..." என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்ப...

அவள் கைபற்றித் தடுத்த கதிர், அவளை அங்கிருந்த பெஞ்சில் உட்கார வைத்தவன்... சிறிது இடைவெளி விட்டுத் தானும் அவள் அருகில் அமர்ந்தான்.

"எதுக்கு இந்த நாடகம்?" என்றாள் சந்தியா கதிரிடம் நேரடியாக.

"உன்னைப் பார்க்க ஒரு காரணம் வேணு மில்லை..."

"எதுக்குப் பார்க்கணும்?"

"மனுஷனை நிம்மதியா இருக்க விடுறியா நீ? சும்மா நை நைன்னு போனைப் பண்ணி உயிரை எடுக்கிற? அதுக்குத்தான் நேர்ல பார்க்க வந்தேன்."

"பொய் சொல்லாதீங்க. என்னோட போனுக்கு எல்லாம் அசர்ற ஆளா நீங்க? வேற ஏதாவது காரணம் இருக்கும்..." என்றாள் நன்றாகக் கதிரைப் பற்றித் தெரிந்த சந்தியா.

"ம்ம்... ஆமாம். எனக்குப் பெங்களூர்ல வேலை கிடைச்சிருக்கு. இன்னும் நாலு நாள்ல அங்க போய் வேலையில சேரணும். உனக்குப் பரிட்சை முடிந்து... நீ ஊருக்குப் போயிட்டா உன்னைப் பார்க்க முடியாது இல்ல. அதான் நேர்ல பார்த்துச் சொல்லிட்டுப் போக லாம்னு வந்தேன்..." என்றான் கதிர்.

நேரில் சந்திக்கவில்லை என்றாலும் ஒரே ஊரில் இருக்கிறோம் என்ற நிம்மதியும் இனி இல்லை என்று நினைத்த சந்தியாவின் கண்கள் கலங்க...

அவள் கையை ஆதரவாகப் பற்றிய கதிர், "இதுக் கெல்லாமா வருத்தப்படுவாங்க? பெங்களூர் என்ன



ரொம்பத் தூரமா? இப்ப கிடைச்சிருக்கிற வேலையில சம்பளம் ஜாஸ்தி சந்தியா! நீ படிப்பை முடிக்கிறதுக்குள்ள நானும் ஓரளவுக்குச் செட்டில் ஆகிடுவேன்.

"நான் நல்லா இருக்கிறதைப் பார்த்தாவது உங்க அப்பா மனசு மாறுதான்னு பார்க்கலாம்..." என்றான் கதிர்.

அவன் கையைத் தட்டி விட்ட சந்தியா, "உங்களுக்கு எங்க அப்பாதான் முக்கியம். நான் இல்லை. எப்பவும் அவரைப் பத்தித்தான் நினைப்பீங்க. என்னைப் பத்தி நினைக்க மாட்டீங்க..." என்று குற்றம் சாட்ட...

சிறிது நேரம் அமைதியாக இருந்த கதிர், "எல்லாப் பையன்களுக்கும் அவங்க அப்பாதான் முதல் ரோல் மாடல். எனக்கும் அப்படித்தான் சந்தியா. எங்க அப்பாவைக் கம்பீரமாவே பார்த்துப் பழகின எனக்கு... காவேரி வீட்டுக்குத் தெரியாம கல்யாணம் பண்ணப் பார்த்த அன்னைக்கு ராத்திரி, அவர் மொட்டை மாடியில தனியா நின்னு அழுததைப் பார்த்ததும் நெஞ்சே வெடிக்கிற மாதிரிதான் இருந்தது.

"எங்க அப்பா அழுது நான் அதுவரை பார்த்ததே இல்லை சந்தியா. என்னால இப்ப அதை நினைச்சாலும் தாங்க முடியாது. காவேரி கல்யாணத்தின்போது எங்க அப்பா மத்தவங்களால பட்ட அவமானத்தை நேர்ல பார்த்தவன் நான். அப்படியிருக்கும்போது என்னால எப்படிச் சந்தியா அதே கஷ்டத்தை இன்னொரு தகப்ப னுக்குக் கொடுக்க முடியும்?

"எங்க அப்பா மாதிரிதானே உங்க அப்பாவும். அவருக்கு இஷ்டமில்லாம நம்ம கல்யாணம் நடக்கிறதுல எனக்கு விருப்பம் இல்லை!" என்ற கதிர் தொடர்ந்து... "உங்க அப்பா, அம்மாவுக்கு நீ ரொம்ப வருஷம் கழிச்சுத்தான் பிறந்த. உங்க அப்பா உன்னை எப்படிச் சீராட்டி வளர்த்தார்னு நேர்ல பார்த்தவன் நான்.

"சின்ன வயசுல நீ சின்னதா சத்தம் கேட்டாக் கூடப் பயப்படுவ. உனக்காக உங்க அப்பா உங்க அம்மாவைக் குக்கர்ல சமைக்க விட மாட்டார். மிக்ஸி கூடப் போட விடமாட்டார். அத்தை அம்மியிலதான் அரைப்பாங்க. உன்னைத் தரையில நடக்க விடாம, தன்னோட தோள்ல தூக்கிட்டே திரிவார் உங்க அப்பா...

"அப்படி உன்னைப் பார்த்துப் பார்த்து வளர்த்தவர் மனசு கஷ்டப்படுத்தி நம்ம கல்யாணம் நடக்க வேண்டாம் சந்தியா. அவர் சம்மதிக்கும் வரை நாம பொறுமையாக் காத்திருப்போம்..." என்று கதிர் சொன்னதும்,

"அப்ப எங்கப்பா கடைசி வரை பிடிவாதமா இருந்துட்டா... நீங்க என்னை வேண்டாம்னு விட்டுடு வீங்களா மாமா?" என்ற சந்தியா தவிப்பாகக் கதிரின் முகம் பார்க்க...

"இல்லை..." என்று அழுத்தமாக மறுத்த கதிர், "நாம முடிஞ்சவரை அவர் மனசுக் கஷ்டப்படாம பார்த்துக் கலாம் சந்தியா. எனக்குப் பத்து வயசா இருக்கும் போது... நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணப் போறதா



நம்ம வீட்ல பேசினாங்க. எனக்கு அப்ப ஒரு விவரமும் தெரியாது.

"ஆனா... எனக்கு விவரம் தெரிஞ்ச வயசுல இருந்து, நீதான் என்னோட வருங்கால மனைவின்னு என் மனசுல பதிஞ்சு போயிடுச்சு. ஒருத்தன் காதலிக்கிற பொண்ணை வேணா விட்டுக் கொடுக்க முடியும். ஆனா, பொண்டாட்டிய எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? நீ என் பொண்டாட்டி சந்தியா. நான் உன்னை நிச்சயமா விட்டுக் கொடுக்க மாட்டேன்..." என்று கதிர் உறுதியாகச் சொன்னதும், சந்தியாவின் முகம் தாமரையாக மலர்ந்தது.

"நீங்க எங்க அப்பாவை எவ்வளவு நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கீங்க... ஆனா, அவர் உங்க மேலதான ரொம்பக் கோபத்தில இருக்கார்..." என்று சந்தியா வருத்தப்பட...

"அவருக்கும் எனக்கும் என்ன சொத்துத் தகராறா? இல்லை, வாய்க்கா தகராறா? அவருக்கு மனசுல பயம். எங்கே அவர் அருமையா வளர்த்த பொண்ணை... நான் தள்ளிட்டுப் போயிடுவேனோன்னு! அதனால என் மேல கோபமா இருக்கிற மாதிரிக் காட்டிக்கிறார். வேறொன்னு மில்லை..." என்ற கதிர் சிரிக்க... சந்தியாவும் அவனோடு இணைந்து கொண்டாள்.

"நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன் இல்ல சந்தியா!" என்று கதிர் கேட்டதும்,

சந்தியா, ஆமாம்... இல்லை... என்று இரு பக்கமும் தலையாட்ட...

அவளின் குறும்பை ரசித்த கதிர், "நந்தினி விஷயத்துல நீ ரொம்ப டென்ஷன் ஆகிட்ட இல்ல. தப்பு என் மேலதான். நான் இன்னைக்கு உன்கிட்ட பேசிப் புரிய வச்ச மாதிரி... முன்னாடியே பேசி இருக்கணும். சரி, இப்ப உன் சந்தேகமெல்லாம் தீர்ந்துடுச்சா? இனிமேலாவது நீ நிம்மதியா இருப்பியா?" என்றான்.

சந்தியா மகிழ்ச்சியுடன் ஆம் என்று தலையாட்ட...

"அப்ப சரி. நான் கிளம்புறேன்..." என்று கதிர் எழுந்து கொள்ள...

அவன் கைப்பற்றி இழுத்த சந்தியா, "ப்ளீஸ் மாமா... இன்னும் கொஞ்ச நேரம் இருங்க. நான் நாளைக்கு ஊருக்குப் போயிடுவேன். இனி எப்ப பார்ப்போமோ?" என்றாள் கெஞ்சலாக.

கதிருக்கும் அவளை விட்டுச் செல்ல மனமில்லை. அதனால் சந்தியாவின் அருகில் அமர்ந்தான்.

அங்கே கேன்டீனில் இருந்த ஸ்ரீஜா, அனுவுடன் சித்தார்த்தும், பாலாவும் இணைந்து கொண்டனர்.

சித்தார்த் பாலாவை அவர்கள் இருவருக்கும் அறிமுகம் செய்ய...

"கதிர் வந்திருக்காங்களா...! எனக்கு அவங்களைப் பார்க்கணும்..." என்று ஸ்ரீஜா துள்ள...

அவளை அடக்கி உட்கார வைத்த சித்தார்த், "அவ ஆளைப் பார்க்க நீ ஏன் தவிக்கிற?" என்று சந்தேகமாக இழுக்க...



"ச்சே... என்னைச் சந்தேகப்படுறியா நீ? சந்தியா கதிரைப் பத்திப் பேசிப் பேசி... கதிர் மேல எனக்கு ஒரு பிரதர் ஃபீலிங் வந்துடுச்சு..." என்று ஸ்ரீஜா சொல்ல...

"அப்பன்னா ஓ.கே. ஆனா அவர் இப்பதான் வந்தார். சந்தியாவோட கொஞ்ச நேரம் பேசட்டும். நாம மெதுவாப் போவோம்..." என்று சித்தார்த் சொன்னதும்,

"ஏன்மா... உன் முன்னாடி ஸ்மார்ட்டா ஒருத்தன் உட்கார்ந்திருக்கேனே... உனக்குத் தெரியலையா?" என்று பாலா ஸ்ரீஜாவை வம்பிழுக்க...

"யாரு அங்கிள் அது?" என்று பதிலுக்கு ஸ்ரீஜா பாலாவை வார...

பாலாவின் முகம் போன போக்கைப் பார்த்துச் சித்தார்த்தும், அனுவும் சிரிப்பை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

பாலா ஸ்ரீஜா பேசியதைச் சகஜமாக எடுத்துக் கொண்டான். தனக்குத் திருமணமாகி இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறது என்று தன்னைப் பற்றிச் சொன்னவன், தன்னுடைய கலகலப்பான பேச்சால் வெகு சீக்கிரத்தில் அவர்கள் நட்பு வட்டத்திற்குள் நுழைந்தும் விட்டான்.

சிறிது நேரம் பேசிச் சிரித்தபடி ஸ்நாக்ஸ் வாங்கிச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்ததும் கதிர், சந்தியா இருந்த இடம் நோக்கிச் சென்றனர்.

கதிரும், சந்தியாவும் இன்னும் பேசிக் கொண்டிருப் பதைப் பார்த்தவர்கள், சற்றுத் தள்ளியே நின்றனர். பாலா

அவர்களைத் தன் வீட்டுக்கு ஒரு நாள் வரும்படி அழைத் தான்.

சித்தார்த் பாலாவுடன் பேசிக் கொண்டே எதேச்சை யாகப் பார்வையைச் சுழல விட... அங்கே சந்தியாவின் அப்பா துரை கோபமாகக் கதிர், சந்தியா அமர்ந்திருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

சித்தார்த் அதிர்ந்து நிற்க... பாலாவுக்கும் மற்றவர் களுக்கும் அவன் ஏன் அப்படி நிற்கிறான் என்று புரிய வில்லை. ஒரு நொடி அதிர்ந்து நின்ற சித்தார்த், மறு நொடியே சுதாரித்தவன்... கதிர், சந்தியாவை நோக்கி வேகமாகச் செல்ல... மற்றவர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

ஆனால் சித்தார்த் அங்கே செல்வதற்கு முன்பே துரை... கதிர், சந்தியா அருகில் சென்றிருந்தார்.

தங்கள் உலகில் இருந்த கதிரும், சந்தியாவும் துரையைக் கவனிக்கவில்லை. அருகில் யாரோ வருவதை உணர்ந்த சந்தியா திரும்பிப் பார்க்க... அங்கே ருத்ர மூர்த்தியாக நின்றிருந்த தன் அப்பாவைப் பார்த்ததும், தன்னை அறியாமல் எழுந்து நின்றாள்.

சந்தியா, "அப்பா..." என்றழைக்க...

அவள் அந்த வார்த்தையை முடிக்கும் முன்பே துரையின் கை சந்தியாவை அறைந்து கீழே தள்ளி யிருந்தது.

கதிர், "மாமா..." என்று அலற... சித்தார்த்தும் மற்ற வர்களும் சந்தியா என்று அழைத்தபடி ஓடி வந்தனர்.



கீழே விழுந்த சந்தியாவைச் சித்தார்த் தூக்கி விட... துரை மீண்டும் அவளை அடிக்க முயல... கதிர் தன் மாமனைத் தடுத்து நிறுத்தினான். கதிரைப் பார்த்த துரை யின் முகத்தில் ரௌத்திரம் தாண்டவம் ஆடியது.

"உன்னைப் பற்றி நான் உயர்வா நினைச் சிருந்தேன். இந்த மாதிரிச் சில்லறைத் தனமான வேலையெல்லாம் நீ பண்ண மாட்டேன்னு நம்பித்தான் என் பெண்ணை இங்க படிக்க அனுப்பி வைச்சேன். என்னோட நம்பிக்கையை இப்படி வேரோட சாய்ச் சிட்டியே..." என்று துரை கதிரைக் குற்றம் சொல்ல...

கதிர் மறுத்துப் பேசாமல் அமைதியாக இருந்தான். ஏதோ சொல்ல வந்த சந்தியாவையும் பார்வையால் தடுத்து விட்டான்.

அதைப் பார்த்த துரைக்கு மேலும் ஆத்திரம் வந்தது. "உங்க அப்பா அன்னைக்கு உனக்கு ரொம்பப் பரிஞ்சு பேசினாரு. ஆனா... நீயும் மத்தவங்க மாதிரின்னு காட்டிட்ட இல்ல..."

"நீங்க நினைக்கிற மாதிரி இல்ல மாமா. நான் இன்னைக்குத்தான் சந்தியாவைப் பார்க்க வந்தேன்."

கதிர் சொல்ல, அதைக் காதில் வாங்கும் நிலையில் துரை இல்லை. ஆத்திரம் அவர் கண்ணையும் அறிவை யும் மறைத்தது.

சந்தியாவிடம் திரும்பிய துரை, "பொம்பளைப் பிள்ளைங்களைப் படிக்க வச்சா என்ன நடக்கும்னு காட்டிட்ட இல்ல. படிக்க அனுப்பி வச்சா ஒழுங்காப் படிக்கிற

வேலையை மட்டும் பார்க்கணும். மாப்பிள்ளை பார்க்கும் வேலையைப் பார்க்கக் கூடாது. அதுக்குத்தான் பெத்த வங்கன்னு நாங்க உயிரோட இருக்கோம்," என்றார் கடுமையாக.

சந்தியாவுக்கு, ஏற்கெனவே மற்றவர்கள் முன்பு அடி வாங்கியது, இப்போது அவள் அப்பா குற்றவாளி போல் நிற்க வைத்துக் கேள்வி கேட்பது, எல்லாம் சேர்ந்து அழுகையை வரவழைக்க, அவள் தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

"போதும் நீ படிச்சுக் கிழிச்சது. கிளம்பு...!" என்றவர், ஒரு நொடி தாமதித்து, "நீ என்னோட வருவியா... இல்லை, உன் மாமன்தான் முக்கியம்னு அவன் கூடப் போகப் போறியா? " என்று இளக்காரமாகச் சந்தியாவைப் பார்க்க, சந்தியாவிற்கு நெஞ்சில் சுறுக்கென்று வலித்தது. தன் கண்களை ஒரு முறை அழுந்த மூடித் திறந்தவள், வேகமாக வாயிலை நோக்கிச் செல்ல, துரையும் அவள் பின்னே சென்றார்.

இதெல்லாம் ஒரு ஐந்து நிமிடத்திற்குள் நடந்து முடிந்திருந்தது. அதுவரை அதிர்ச்சியில் நடந்ததைப் பார்த்துக் கொண்டு இருந்த சித்தார்த், சந்தியா அவள் அப்பாவிடம் மறுத்துப் பேசாமல், அவருடன் கிளம்புவதைப் பார்த்தவன்,

"ஒரு நிமிஷம் நில்லுங்க சார்!" என்றான் அழுத்த மான குரலில். துரை நின்று திரும்பிப் பார்க்க, சந்தியாவும் நின்றாள்.



"நீங்க பாட்டுக்கு வந்தீங்க... ஏதோ பேசுனீங்க... இப்போ கிளம்புறீங்க. உங்களுக்கு இங்கே என்ன நடந்துச்சுன்னு தெரியுமா? இன்னைக்குப் பார்த்ததை வச்சு நீங்களா ஒரு முடிவுக்கு வராதீங்க. வீணா தப்பாப் புரிஞ்சுக்கிட்டு, சந்தியாவோட படிப்பை நிறுத்திடாதீங்க. கதிர் இன்னைக்குத்தான் முதல் தடவை எங்க காலேஜுக்கு வந்தார்," என்றான் துரைக்குத் தெளிவு படுத்தி விடும் நோக்கத்தோடு.

சித்தார்த்தைப் பார்த்து முறைத்த துரை, "உன் கிட்டே நான் விளக்கமெல்லாம் கேட்டேனா? நீ யாரு முதல்ல?" என்றார் கோபமாக.

"நான் சந்தியாவோட பிரெண்ட்!" என்றதும், திரும்பி சந்தியாவைப் பார்த்த துரை, அவளை அடிக்கக் கை நீட்ட, சந்தியா சற்றுத் தள்ளி நின்றதால், அவருக்கு எட்ட வில்லை.

"உன்னைப் படிக்க அனுப்பினா, ஆம்பளைப் பிள்ளைகளைப் பிரெண்ட் பிடிக்கிறியோ? உன் பொண்ணு படிக்காம, அவ மாமன் மகனோட ஊர் சுத்துறான்னு, அந்த மகேஷ் பையன் என்கிட்ட வந்து சொன்னபோது கூட நான் நம்பலை. இப்போ நேர்லேயே பார்த்துட்டேன்."

"இல்லப்பா... சித்தார்த் என் கிளாஸ்தான்பா. கதிர் மாமாவோட நான் எங்கேயும் சுத்தலை!" என்று சந்தியா சொல்ல,

"பொய் சொல்லாதே!" என்ற துரை, அவளை ஆத்திரமாக மீண்டும் அடித்தார். அதற்கு மேல் கதிரால் பொறுக்க முடியவில்லை.

"மாமா! நீங்க உங்க பெண்ணை விசாரிக்கிற துன்னா, உங்க வீட்ல வச்சு விசாரிங்க. இது என்ன பழக்கம்? வெளி இடத்துல வச்சு, நாலு பேரு முன்னாடி கை நீட்டுறது?" என்றான்.

அப்போது பாலாவும், "சார்! இப்போ அவனவன் கையில செல்போனை வச்சுக்கிட்டு, எப்படா ஏதாவது நடக்கும், அதை வீடியோ எடுத்துப் பத்து பேருக்கு வாட்ஸ்-அப்ல அனுப்புவோம்னு திரியுறானுங்க. அவங்களுக்கு, அடுத்தவன் பெர்சனல் விஷயத்துல தலையிடுறோமேன்கிற அறிவு கூட இல்லை. இப்படி இருக்கிறவனுங்க மத்தியில நாமதான் சார் ஜாக்கிரதையா இருக்கணும்!" என்றான்.

பாலா சொன்னதைக் கேட்டதும் சிறிது அமைதியான துரை, "இதுக்கு முன்னே நான் இவளை அடிச்சிருக்கேனா? இதெல்லாம் உன்னால... இதோட என் பொண்ணை விட்டுடு!" என்று கதிரின் பக்கம் கை நீட்டி எச்சரித்து விட்டுச் சந்தியாவை இழுத்துக் கொண்டு அங்கிருந்து வேகமாகச் சென்றார்.

துரையும், சந்தியாவும் சென்றதும், "நீங்க ஏன் கதிர் அமைதியாக இருந்தீங்க? சந்தியாவை ஏன் அவங்க அப்பாவோட போக விட்டீங்க? அவர் இப்பவே இப்படி அடிக்கிறார்... இன்னும் சந்தியா அவரோட போனா என்ன நடக்குமோ?" என்று சித்தார்த் வருந்த,

"அவ யாரோ தெரியாதவர் கூடப் போகலை. அவளோட அப்பாவோடதான் போறா. நான் சந்தியா



வுக்குப் பரிந்து பேசினா, இன்னும் அவர் ஆத்திரம் அதிகம் ஆகும். அதையும் சந்தியா கிட்டேதான் காண்பிப்பார். நீ கவலைப்படாதே. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் தானாகவே அமைதியாகிடுவார்."

நடந்ததையெல்லாம் ஒரு திகில் படம் பார்ப்பது போல் ஸ்ரீஜா பார்த்திருக்க, "அவ அப்பா ரொம்பக் கோபமாக இருக்காரே! சந்தியாவை இனிமேல் காலேஜுக்கு அனுப்புவாரா?" என்று அனு கேட்டாள்.

அவள் பக்கம் திரும்பிய கதிர், "நான் பெங்களூர்ல வேலை கிடைச்சு அங்கே போறேன். அதைச் சொல்லி நான் அவரைச் சம்மதிக்க வைக்கிறேன். இப்போ உடனே அவர் கிட்டே பேச முடியாது. நான் எங்க அப்பா மூலமாகப் பேசிப் புரிய வைக்கிறேன்," என்றவன், சித்தார்த்திடம் விடைபெற்று, பாலாவை அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றான்.

கதிர் சென்றதும், சித்தார்த் மனம் கேட்காமல் அனுவை ஹாஸ்டலுக்கு அனுப்பி வைத்தான். அனு சென்றபோது சந்தியாவின் அப்பா ஹாஸ்டல் வராண்டாவில் உட்கார்ந்திருக்க, சந்தியா அவள் அறையில் பெட்டியில் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

அனுவைப் பார்த்ததும் சந்தியா அவளை, "வா அனு..." என்று சாதாரணமாக வரவேற்றாள்.

"உனக்குப் பயமாக இல்லையா சந்தியா? உன் அப்பா உன்னைத் திரும்பக் காலேஜ் அனுப்பலைன்னா நீ என்ன பண்ணுவே?"

"தெரியலை. என்னால இப்போ எதுவும் யோசிக்க முடியாது. ஊருக்குப் போய்த்தான் பார்க்கணும்..." என்றவளின் செல்லை அவள் அப்பா வாங்கிக் கொண்டதால், அனு செல்லில் இருந்து சித்தார்த்தை அழைத்தாள்.

சந்தியாவின் குரலைக் கேட்டதும்தான் சித்தார்த்துக்கு இயல்பாக மூச்சு வந்தது. "சந்தியா, உனக்கு ஒண்ணும் இல்லையே! நீ நல்லாத்தானே இருக்கே?" என்று கேட்டவனின் குரலில் அவ்வளவு பதட்டம்.

"அதெல்லாம் நல்லாத்தான் இருக்கேன். நீதான் டென்ஷனாக இருந்தே... அதுதான் உனக்கு முதல்ல போன் பண்ணேன்.",

"என்ன, உங்க அப்பா இப்படிப் பேசுறார்? ஆனால், நீயும் கதிரும் சாதாரணமாக இருக்கீங்க?" என்று சித்தார்த் ஆதங்கம் தாங்காமல் கேட்டு விட,

"நீ இப்போதானே அவரைப் பார்க்கிறே! அது தான் அப்படி. நாங்க சின்ன வயசுல இருந்து அவரைப் பார்க்கிறோம்... அதனால அவர் கோபம் எங்களுக்கு அத்துப்படி."

"இருந்தாலும் சந்தியா, உங்க அப்பா உன்னைக் காலேஜ் அனுப்பலைன்னா என்ன பண்றது?" என்று சித்தார்த் கேட்க,



சந்தியாவுக்கும் அந்தப் பயம் மனதில் இருக்கத்தான் செய்தது. ஆனால், அதை மறைத்து, "அதெல்லாம் அனுப்புவார். நான் எங்க வீட்டுக்குப் போய் அவருக்குக் கொடுக்கிற டார்ச்சர்ல, என்னைப் பத்தி விட்டுட்டுத்தான் மறு வேலை பார்ப்பார். அதனால நான் காலேஜுக்கு வர மாட்டேன்னு நினைச்சு, நீ சந்தோஷமாக இருக்காதே! உன்னைத் தொல்லை பண்ண நான் கண்டிப்பாக காலேஜுக்கு வருவேன்," என்றாள்.

அதைக் கேட்டுச் சித்தார்த் சிரித்தான்.

சித்தார்த்திடம் கேலியாகப் பேசி போனை வைத்த சந்தியா, அடுத்து கதிரை அழைத்தாள். கதிர் போனை எடுத்ததும், "மாமா..." என்றாள்.

சந்தியாவின் குரலைக் கேட்டதும், பாலாவிடம் பைக்கை ஓரமாக நிறுத்தச் சொன்ன கதிர், "நானே உன் கிட்டே எப்படிப் பேசுறதுன்னு நினைச்சிட்டிருந்தேன். நல்ல வேளை நீயே போன் பண்ணிட்டே. நான் இன்னைக்கே ஊருக்கு வந்தா, மாமாவோட கோபம் இன்னும் அதிகம் ஆகும். அதனால ரெண்டு நாள் கழிச்சு வரேன். அப்பா கிட்டே பேசுறேன். அவர் பார்த்துப்பார். சரியா?" என்று சமாதானம் செய்ய, சந்தியா அரை மனதாகச் சரி என்றாள்.

அதை உணர்ந்த கதிர், "என்னடா...?" என்றதும், சித்தார்த்திடம் மனதை மறைத்துப் பேசியது போல், கதிரிடம் அவளால் மறைக்க முடியவில்லை. சந்தியா உடைந்து அழுதாள்.

"ஹேய்...! இப்படி அழாதேடி. என் மனசுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கு. அப்பாதானே அடிச்சாங்க. அவரை அந்த மகேஷ் வேற ஏதோ சொல்லி ஏத்தி விட்டிருக் கான் போலிருக்கு. நம்ம ரெண்டு பேரையும் சேர்ந்து பார்த்ததும் அவருக்குக் கோபம் வந்துடுச்சு.

"நீ பொறுமையாக இரு சந்தியா. மாமா மேலே கோபப்படாதே. அவர் ரொம்ப டென்ஷனாக இருக்கார். நீ அவரைப் பார்த்து ஊருக்குக் கூட்டிட்டுப் போ. முதல்ல நீ படிப்பை நல்லபடியாக முடிக்கணும். அதுக்கு வழி பார்ப்போம். பிறகு நம்ம கல்யாணத்தைப் பத்திப் பார்த்துக்கலாம். தைரியமாகப் போ!" என்ற கதிருக்குமே, அப்போது பிரச்சினயின் தீவிரம் தெரியவில்லை.

சந்தியா போன் பேசி முடித்த போது, அனு அவளுடைய பெட்டியை அடுக்கி முடித்திருந்தாள். அவளுக்குப் பயம், எங்கே சந்தியாவின் அப்பா, 'ஏன் தாமதம்?' என்று கேட்டு, அதற்கு வேறு சந்தியாவை அடித்தால்! அதனால் அவளே சந்தியாவின் பெட்டியை அடுக்கி விட்டாள். சந்தியா அவளைக் கட்டிக் கொள்ள, அனுவும் கண்ணீருடன் சந்தியாவுக்கு விடை தந்தாள்.

வெளியே வந்து, காத்திருந்த தன் தந்தையுடன் ஆட்டோவில் ஏறிய சந்தியா, பார்வையைச் சுழல விட, சற்றுத் தள்ளி சித்தார்த்தும் ஸ்ரீஜாவும் மறைவாக நின்றிருந்தனர். சந்தியா, அவள் அப்பாவுக்குத் தெரி யாமல், அவர்களுக்குக் கை அசைத்து விட்டுச் சென் றாள்.



கோயம்பேடு பேருந்து நிலையம் சென்றவர்கள், அவர்கள் ஊருக்குச் செல்லும் பேருந்துக்குப் பயணச் சீட்டு வாங்கி விட்டுக் காத்திருக்கும் நேரத்தில், துரை சந்தியாவை அழைத்துக் கொண்டு, பக்கத்தில் இருந்த ஹோட்டலுக்குச் சென்றவர், மகளுக்கு ஒரு தோசையும், தனக்கு ஒரு டீ மட்டும் வாங்கினார்.

கதிர் சொல்லி அனுப்பி இருந்ததால், சந்தியா மறுக்காமல் வாங்கிச் சாப்பிட்டாள். அவள் சாப்பிடும் வேகத்தைப் பார்த்தவர், மகள் ரொம்பவே பசியில் இருக்கிறாள் என்று புரிந்து கொண்டு, அவளுக்கு மேலும் ஒரு தோசையை வாங்கினார். சந்தியா, அதையும் மறுக் காமல் சாப்பிட்டாள்.

பஸ்ஸில் ஜன்னல் ஓரத்தில் சந்தியா அமர்ந்து கொள்ள, அடுத்துத் துரை அமர்ந்து கொண்டார். பஸ் மெதுவாக நகர ஆரம்பித்த போது, ஒரு கடைக்குப் பக்கத்தில் கதிரும், பாலாவும் நின்றிருந்தனர். கதிரைப் பார்த்ததும், சந்தியாவின் முகம் மலர, அவள் திரும்பித் தன் தந்தையைப் பார்த்தாள்.

துரை, அந்தப் பக்கம் அமர்ந்திருந்த ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். சந்தியா, நிம்மதியாகக் கதிரைப் பார்க்க ஆரம்பித்தாள்.

பேருந்து நிலையத்தில் அதிக வண்டிகள் நின்றதால், பேருந்து மெதுவாகத்தான் நகர்ந்தது.

கதிர், பாலாவுடன் பேசிக் கொண்டே சந்தியாவைப் பார்த்துக் கண் சிமிட்ட, முதலில், தான் சரியாகப் பார்க்க

வில்லையோ என்று நினைத்த சந்தியா, திரும்பக் கதிரைப் பார்க்க, அவன் மீண்டும் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான். சந்தியா, அவன் குறும்பைப் பார்த்துப் புன்னகைத்தாள். அதைப் பார்த்த கதிரின் முகமும் மலர்ந்தது.

அவள் அழுததால், கதிர் மனம் தாங்காமல் பேருந்து நிலையம் வந்திருந்தான். பேருந்து கண்ணை விட்டு மறையும் வரை கதிரும், சந்தியாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். கடைசியாகச் சந்தியா திரும்பிக் கதிரைப் பார்த்தபோது, அவன் கை அசைத்து அவளுக்கு விடை தந்தான்.

தன்னைச் சுற்றி இருப்பவர்கள், தன் மீது காட்டும் அக்கறையை நினைத்துச் சந்தியாவிற்குக் கண்கள் கலங்கின. இதில் யார் மனதையும் தான் நோகடித்து விடக் கூடாது என்று அவள் கடவுளை வேண்டினாள். அவள் வேண்டுதல் நிறைவேறியதா?

சந்தியாவிடம் சொன்னது போல் கதிர் அன்று இரவே தன் தந்தையைச் செல்லில் அழைத்து, நடந்த அனைத்தையும் சொல்லி விட்டான்.

"ஏன் கதிரு அவசரப்பட்டே? சந்தியா படிப்பை முடிக்கிற வரை பொறுமையாக இருந்திருக்கலாம் இல்லையா? நானே சந்தியா படிப்பு முடிஞ்சதும் துரை கிட்டே பேசுறதாகத்தான் இருந்தேன்."

"இல்லப்பா...! வாசு மாமா, சந்தியாகிட்ட எனக்கும், நந்தினிக்கும் கல்யாணம்னு சொல்லி இருப்பார் போல.



அவ அதை நினைச்சே கவலைப்பட்டுக்கிட்டு இருந்தா. அதனால அவளை நேர்ல பார்த்திட்டு, அப்படியே அவகிட்ட பெங்களூர் போறதையும் சொல்லிடலாம்னு நினைச்சுத்தான் போனேன். ஆனால், இப்படி ஆகும்னு நினைக்கலை," என்று கதிர் சொன்னதும்,

"என்ன சொன்னாலும் நீ செஞ்சது தப்புத்தான் கதிர். துரை கோபப்பட்டதுல தப்பு இல்லை!" என்று பெரிய சாமி, கதிரைக் கண்டிக்க, கதிர் மௌனமாக இருந்தான்.

"சரி. நடந்தது நடந்திடுச்சு. நான் துரை கிட்டே பக்குவமாகப் பேசி, சந்தியாவைக் காலேஜுக்கு அனுப்பப் பார்க்கிறேன். நீ இப்போ ஊருக்கு வர வேண்டாம். நீ நேராகப் பெங்களூர் போய் வேலையில் சேரு!" என்று சொல்லிப் பெரியசாமி போனை வைத்து விட்டார்.

ஆனால், எதிர்பார்த்தது போல் துரை, அவரிடம் வந்து கதிரைப் பற்றி எந்தப் புகாரும் சொல்லவில்லை. மாறாக, அவர் தன் மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கும் வேலையில் இறங்கினார்.

சந்தியாவோடு வீட்டுக்கு வந்த துரை, வேதவல்லி யிடம், கதிரையும் அவன் குடும்பத்தையும் பற்றித் திட்டித் தீர்த்தார். வேதவல்லியும், துரையின் கோபம் குறை யட்டும், பிறகு பேசுவோம் என்று நினைத்து அமைதி யாக இருந்தார்.

துரை நினைத்தது போல்... சந்தியாவுக்கு மாப்பிள்ளை பார்ப்பது ஒன்றும் அவ்வளவு எளிதாக

இல்லை. மாப்பிள்ளை வீட்டினர் முதலில் கேட்ட கேள்வியே, 'ஏன் மருத்துவம் படிக்கும் பெண்ணுக்குத் திடீரென்று திருமணம் செய்கிறீர்கள்?' என்பதுதான்.

அந்தக் கேள்விக்கே துரையால் பதில் சொல்ல முடியவில்லை. அப்படியே அவர் சமாளித்துச் சொன்ன பதிலை ஏற்றுக் கொண்ட சில மாப்பிள்ளை வீட்டினர், 'இந்தக் காலத்தில் வெறும் எம்.பி.பி.எஸ். வச்சு ஒண்ணும் பண்ண முடியாது. மேலே எம்.டி. படிச்சிருந்தா வேணும்னா யோசிக்கலாம். நீங்க இன்னும் உங்க பொண்ணு படிப்பையே முடிக்கலைன்னு சொல்றீங்க...!' என்று சந்தியாவை மறுக்க, துரை நொந்து போனார்.

நொந்த மனதுடன் இருந்தவர் முன்பு மகேஷ் வந்து, "என்ன... உங்க மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கிறீங்க போல...! நான் சொன்னது உண்மைன்னு தெரிஞ்சுக் கிட்டீங்களா?" என்று நக்கலாகக் கேட்க, துரை மௌனமாக இருந்தார்.

மகேஷுக்கு, தன் தங்கை ஆசைப்பட்ட டாக்டர் படிப்பை சந்தியாவும் படிக்கக் கூடாது. அதோடு அவ ளுக்குக் கதிரோடும் திருமணம் நடக்கக் கூடாது என்று நினைத்தான். துரையை எதேச்சையாகப் பார்ப்பது போல் பார்த்தவன், அவன் சென்னைக்குச் சென்றிருந்த போது, கதிரும் சந்தியாவும் ஊர் சுற்றுவதை நேரில் பார்த்தது போல் சொன்னான். அதை நம்பித் துரையும் ஏமாந்தார். மகேஷ், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த கர்வத் துடன் நின்றான்.



திடீரென்று துரைக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர், "நீ ஏன் சந்தியாவைத் திருமணம் செஞ்சுக்கக் கூடாது?" என்று மகேஷிடம் கேட்க,

அதைக் கேட்ட மகேஷுக்கு உள்ளுக்குள் சந்தோஷ மாகத்தான் இருந்தது. ஆனால், சந்தியாவை வெறுக்கும் தன் தங்கையின் முன்பு, அவளை எப்படித் திருமணம் செய்து கொண்டு வாழ முடியும் என்று நினைத்தவன், வேண்டுமென்றே துரையின் மனம் நோக வேண்டு மென்பதற்காக, "உங்க ஓடுகாலிப் பெண்ணை என் தலையில் கட்டப் பார்க்கிறீங்களா? அதுக்கு வேற ஆளைப் பாருங்க!" என்றான் கிண்டலாக.

அதைக் கேட்டதும் துரைக்குச் சுருக்கென்றது. அவர் விடு விடுவென்று வீட்டை நோக்கிச் சென்றார்.

மகேஷின் முகத்தில் மகிழ்ச்சிக் கூத்தாடியது. அவனுக்குத் தெரியவில்லை, அவனுக்கே தெரியாமல் கதிரும், சந்தியாவும் சேர அவன்தான் காரணமாக இருக்கப் போகிறான் என்று.

தன் அண்ணனின் மூலம் சந்தியாவிற்குத் தன் கணவர் மாப்பிள்ளை பார்க்கும் விஷயத்தைக் கேள்விப் பட்ட வேதவல்லி, கோபத்தின் உச்சியில் இருந்தார்.

வீட்டுக்கு வந்த தன் கணவரிடம், "என்ன... உங்க மகளுக்கு மாப்பிள்ளை பார்க்கிறீங்க போலிருக்கு?" என்று வேதவல்லி கேட்டதும்தான், சந்தியாவுக்கே அந்த விஷயம் தெரியும். அவள் அதிர்ச்சியுடன் தன் தாய், தந்தையைப் பார்த்தாள்.

"ஏன் வர வர உங்களுக்கு அறிவு தேய்ஞ்சுக்கிட்டே போகுது? படிச்சிட்டு இருக்கிற பொண்ணுக்கு இப்போ எதுக்குக் கல்யாணம்?" என்று வேதவல்லி கோபமாகக் கேட்க,

ஏற்கெனவே மகேஷ் செய்த கிண்டலில் கொதிப் புடன் இருந்த துரை, "நான் உன் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்தாலும், எவனும் அவளைக் கட்டிக்கத் தயாரா இல்லை. இவ உன் அண்ணன் மகனோட ஊர் சுத்தினது தான் எல்லோருக்கும் தெரிஞ்சிருக்கே. அதோட, படிக்கிற பொண்ணுக்கு எதுக்குக் கல்யாணம் பண்றீங்கன்னுதான் கேட்கிறாங்க!" என்றார் ஆத்திரமாக.

"கூறு கெட்ட மனுஷா! நீயே உன் பொண்ணை இப்படிக் கேவலப்படுத்துறியே! அவ யார் கூடப் பேசினா? என் அண்ணன் மகன், அவளுக்கு உரிமைப்பட்ட மாமன் மகனோட தானே பேசுனா. அதை நீயே பெருசாக்கி, என் பொண்ணை சந்தி சிரிக்க வச்சுடுவே போலிருக்கே! நீ இப்படி அவளுக்கு அவசரமா அவசரமாக மாப்பிள்ளை பார்த்தா... ஊர்ல நாலு பேரு நாலு விதமாகப் பேசுவங்களே...!" என்று வேதவல்லி நெஞ்சில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைக்க, அதைக் கேட்ட சந்தியாவின் அப்பத்தாவும் அழுதார்.

சிறிது நேரம் சென்று கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்த வேதவல்லி, அழுது கொண்டிருந்த சந்தியாவிடம் வந்தவர், "நீ இங்கேயிருந்து போயிடு சந்தியா..." என்றதும், மற்றவர்கள் அவரை அதிர்ந்து நோக்க,



"நீ இங்கே இருந்தா... இன்னும் இந்த ஆளு கோபத்துல என்ன கூத்து பண்ணி வைக்குமோ? நீ உன் பெரிய மாமா வீட்டுக்குப் போ. உங்க மாமா பார்த்து எதுன்னாலும் செய்யட்டும். அவர் எது செஞ் சாலும் யோசிச்சுத்தான் செய்வார்," என்று சொல்ல,

சந்தியா, "இல்லம்மா. நான் உங்களை விட்டுப் போக மாட்டேன்!" என்றாள்.

"என் மகளை நீ எப்படிடி வெளியே போகச் சொல்லுவே?" என்று துரை கத்த,

"யாரு உங்க பொண்ணு? இவ உங்க பொண்ணா? அதை நான் சொல்லணும். நான் இப்போ சொல்றேன், இவ உங்க பொண்ணு இல்லை!" என்று வேதவல்லியும் பதிலுக்குக் கோபத்தில் கத்த, துரை அவரை அடிக்கத் தொடங்கினார்.

தாயும் தந்தையும் சண்டையிடுவதைப் பார்த்த சந்தியா, "ஐயோ...! ரெண்டு பேரும் விடுங்களேன். நான் எங்கேயும் போகலை!" என்று கெஞ்சியதைக் கவனிக்கும் நிலையில் அவர்கள் இருவரும் இல்லை.

துரையைப் பிடித்துத் தள்ளி விட்ட வேதவல்லி, சந்தியாவைப் பார்த்து, "போ...!" என்று ஆங்காரமாகக் கத்தினார்.

பதிலுக்கு அழுத சந்தியா, "நானே போனாலும், அப்பா சம்மதிக்காமல், கதிர் மாமா என்னைக் கல்யாணம் செஞ்சுக்க மாட்டாங்க!" என்றாள் அழுகையுடன்.

அதைக் கேட்ட வேதவல்லி, 'பார்த்தியா?' என்பது போல் துரையைக் கர்வமாக ஒரு பார்வை பார்க்க, ஒரு தகப்பனாகத் துரை மனதில் அடி வாங்கினார். தன் மகளுக்குத் தன்னை விடக் கதிரே முக்கியம். அவள், அப்பாவை விட்டுப் போக மாட்டேன் என்று சொல்லவில்லை. கதிர் சம்மதிக்க மாட்டான் என்றுதான் சொல்கிறாள் என்று தவறாகப் புரிந்து கொண்டு, அவரையும் வதைத்து, மற்றவர்களையும் வதைக்க ஆரம்பித்தார்.

சந்தியாவின் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து, "அவன் வான்னு சொன்னா... அவன் கூடப் போயிடு வியா நீ? போடி பார்க்கலாம். போ... போடி!" என்று சந்தியாவைப் பிடித்துத் தள்ள,

"போ... போன்னு சொன்னா எப்படிப் போறது? கல்யாணம் பண்ணி வையுங்க், போறேன். நான் ஏன் ஓடிப் போகணும்? நீங்க உயிரோட தானே இருக்கீங்க? ஏன், நீங்களா கல்யாணம் பண்ணினா கைக் காசு கரைஞ்சிடும்னு பார்க்கிறீங்களா?" என்று பதிலுக்குச் சந்தியாவும் ஆத்திரமாகக் கேட்டாள். அவளும் எவ்வளவு நேரம்தான் பொறுப்பாள்.

அவளை முறைத்த துரை, வேதவல்லியிடம் திரும்பி, "உங்க அண்ணனைப் பரிசம் போட வரச் சொல்லு. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இவ இந்த வீட்ல இருந்து போகணும். என்னை விட இன்னைக்கு வந்த அவ மாமன் முக்கியமாகப் போயிட்டான் இல்ல... நானும் பார்க்கிறேன், அவன் இவளை எப்படி வச்சிருக்கான்னு!" என்று சீறிவிட்டு வெளியே செல்ல, வீடே போர் ஓய்ந்தது போல் அமைதியானது.



வேதவல்லி, 'ஹப்பாடா...!' என்று நிம்மதியாக உட்கார, அப்பத்தாவும் மகிழ்ந்தார். ஆனால், சந்தியாதான் கதறி அழுதாள். எது நடக்கக் கூடாது என்று அவளும், கதிரும் நினைத்தார்களோ, அதுதான் இப்போது நடந்தது. தனக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்று சந்தோஷப் பட முடியாமல், தன் அப்பாவின் முழுச் சம்மதம் இல்லாமல் தங்கள் திருமணம் நடக்கப் போகிறது என்ற வருத்தமே முன் நின்றது. இது கதிருக்குத் தெரிந்தால், அவன் வேறு என்ன சொல்வானோ? என்று பயந்தாள்.

## 11

சந்தியா - கதிர் திருமணத்திற்குத் தன் கணவர் சம்மதம் சொன்னவுடன், வேத வல்லி ஒரு நொடி கூடத் தாமதிக்காமல், தன் அண்ணன் வீடு நோக்கிச் சென்றார். அவ ருக்கு, எங்கே வேதாளம் (சந்தியாவின் அப்பா) திரும்பவும் முருங்கை மரம் ஏறி விடுமோ என்று பயம்.

"அண்ணா! நான் உங்களை நம்பித்தான் வந்திருக்கிறேன். நீங்க உடனே கதிருக்கும், சந்தியாவுக்கும் கல்யாண ஏற்பாடு பண்ணுங்க. குணம் கெட்ட புருஷனை வச்சிக்கிட்டு, நான் எப்போ என்ன ஆகுமோன்னு பயந்துக்

கிட்டே இருக்க முடியாது," என்று வேதவல்லி கண்ணீர் விட, பெரியசாமி குழப்பத்தில் இருந்தார்.

'சந்தியா இன்னும் படிப்பை முடிக்கவில்லை. கதிர் இப்போது பெங்களூரில் வேலை பார்க்கிறான். இவர்களுக்கு இப்போது திருமணம் செய்தாலும், அவர்கள் தனித்தனியேதான் இருக்க வேண்டும். திருமணம் முடிந்த பின்பு பிரிந்து இருப்பது இருவருக்குமே கஷ்டமாக இருக்கும்!' என்று யோசித்தார். ஆனால், வேதவல்லி, கதிர் – சந்தியா திருமணத்தை உடனே நடத்தி விடுவதில் பிடிவாதமாக இருந்தார்.

பெரியசாமிக்கு, துரை, சந்தியாவிற்கு வெளியில் மாப்பிள்ளை பார்த்த விவரம் தெரியும். அதனால், எதற்கும் ஒரு முறை துரையிடம் கேட்டு விடுவோம் என்று நினைத்துத் தன் தம்பி பாண்டியனை அவரிடம் அனுப்பி வைத்தார்.

பாண்டியன், "மாப்பிள்ளை பரிசத்தை இப்போ போட்டுட்டுக்கலாம். கல்யாணத்தை வேணும்னா கொஞ்ச நாள் தள்ளி வச்சுப்போமா?" என்று கேட்டதற்கு,

"அது உங்க இஷ்டம். ஆனால், நான் சந்தியாவைக் காலேஜுக்கு அனுப்ப மாட்டேன்," என்றார், துரை பிடிவாதமாக.

"ஏன்?"

"அவ காலேஜுல போய்ப் படிக்கிறாளா? இல்லை, உன் அண்ணன் மகனோட ஊர் சுத்துறாளான்னு, நான் பார்த்துட்டே இருக்க முடியுமா?" என்றார் துரை.



பாண்டியனுக்குக் கதிரைப் பற்றி நன்றாகவே தெரியும். அதனால் அவருக்குத் துரையின் பேச்சு கோபத்தை வரவழைத்தது. 'இந்தாளோட பேசுறது சுத்த வேஸ்ட்!' என்று நினைத்த பாண்டியன், தன் அண்ணனிடம் வந்து நடந்ததைச் சொல்ல, நன்றாக யோசித்த பெரியசாமி, கதிரை செல்லில் அழைத்தார்.

"கதிர்! ஆபீஸ் நேரத்துல தொந்தரவு பண்ணிட் டேனாப்பா?"

"இல்லைங்கப்பா. சாப்பிடத்தான் கிளம்பிட்டு இருந் தேன். சொல்லுங்க, எதுக்குக் கூப்பிட்டீங்க?" என்று கதிர் கேட்டதும், பெரியசாமி, நடந்த அனைத்தையும் சொல்ல, அதைக் கேட்ட கதிரின் கண்கள் கோபத்தில் சிவந்தன.

"ஏன்பா மாமா இவ்வளவு கோபப்படுறாரு? நாங்களாகவா தேடிப் போய் விரும்பினோம்? நீங்க எங்களுக்குக் கல்யாணம் பண்ணப் போறீங்கன்னு சொன்னதை நம்பித்தானே எங்க மனசுல ஆசையை வளர்த்துக்கிட்டோம். ஆனா, இப்போ அவர் என்னை ஏதோ விரோதியாகப் பார்க்கிற மாதிரி பார்க்கிறார்ப்பா. மனசுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கு...!" என்று கதிர் வருந்த,

பெரியசாமி, அவனைச் சமாதானம் செய்தார். "உங்க மாமா நல்லவன்தான். ஆனால், முன்கோபி. அதனால், தான் பிடிக்கிற முயலுக்கு மூணு காலுன்னு பிடிவாதம் பிடிப்பான்.

"நாம காவேரியை வெளியிடத்தில் செஞ்சது அவனுக்குப் பிடிக்கலை. அதனால் சந்தியாவுக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்தான். ஆனால், ஒண்ணும் சரியா வரலை. இப்போ கல்யாணத்தை உடனே வைக்கச் சொல்லிப் பிடிவாதம் பிடிக்கிறான். சரி, விடு. அவன் குணம் தெரிஞ்சதுதானே!" என்றார்.

"அவர் சொல்றபடியெல்லாம் என்னால் ஆட முடியாதுப்பா. சந்தியாவுக்கு இன்னும் ரெண்டரை வருஷம் படிப்பு இருக்கு. அவளால படிப்பை விட முடியுமா? இல்லைன்னா, என்னாலதான் வேலையை விட்டுட்டு அங்கே வர முடியுமா?"

கதிர் ஆத்திரப்பட, அவன் கோபத்திலும் நியாயம் இருப்பதை உணர்ந்த பெரியசாமி, அமைதியாக இருந் தார்.

தன் கோபத்தைத் தந்தையிடம் காட்டுகிறோம் என்று உணர்ந்த கதிர், தன்னைக் கட்டுப்படுத்தியவன், "எனக்கு ஒரே குழப்பமாக இருக்குப்பா. நீங்களே முடிவு பண்ணுங்க. உங்க முடிவுக்கு நான் கட்டுப்படுறேன்!" என்றான் முடிவாக.

அவனுக்குச் சலிப்பாக இருந்தது. எவ்வளவு சொன் னாலும் புரிஞ்சுக்காம இருந்தா என்ன செய்யறது?

தன் திருமணம் எப்படி நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஆனால், இப்போது எல்லாமே மாறி விட்டது.



"வர்ற வெள்ளிக்கிழமை பரிசமும், ஆனியில வர்ற முதல் முகூர்த்தத்தில் கல்யாணத்தையும் வச்சிடலாம்னு பார்க்கிறேன்," என்று பெரியசாமி சொன்னதும்,

"சரிப்பா. நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படியே நடக்கட்டும். என்னால பரிசத்துக்கு வர முடியாது. வேலைக்குச் சேர்ந்து நாலு நாள்ல லீவு கொடுக்க மாட் டாங்க. அதனால நீங்க நடத்துங்க. நான் கல்யாணத்துக்கு வர்றேன்!" என்று, வேறு யாரோ ஒருவர் திருமணத்திற்கு வருவதைப் போல் பேசிக் கதிர் போனை வைத்து விட்டான்.

அவன் நிலை உணர்ந்த பெரியசாமியும், அதற்கு மேல் அவனை வற்புறுத்தவில்லை. தன் தங்கையின் வீட்டுக்குப் பரிசம் போட வருகிறோம் என்று ஆள் அனுப்பித் தகவல் தெரிவித்தார். அதுவரை, கதிர் என்ன சொல்வானோ என்று பயந்து கொண்டிருந்த சந்தியா, நிம்மதியாக உணர்ந்தாள்.

திருமணம் என்பது சாதாரண நிகழ்வு அல்ல. வாழ்க்கையின் முக்கியமான திருப்பம். அதன் பிறகுதான் வாழ்க்கையில் நிறையப் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியது வரும் என்று சந்தியாவுக்கு அப்போது தெரிய வில்லை. ஆனால், கதிர் அதை நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான்.

லக்ஷ்மி, தன் மகள் காவேரிக்குப் போன் செய்து, கதிரின் நிச்சயத்தைப் பற்றிச் சொன்னார். "அது எப்படி?

எனக்கு ரெண்டு நாளைக்கு முன்னேதான் சொல்ல ணும்னு தோணுச்சா?" என்று காவேரி சண்டைக்கு வரிந்து கட்டி நிற்க,

லக்ஷ்மிக்குக் கோபம் வந்து விட்டது. "இது எல்லாம் உன்னாலதான்!" என்று அவர் காவேரியைப் பிடி பிடியென்று பிடித்தார். காவேரி கண்ணீருடன் போனை வைக்க, சுபாஷ், அவளிடம் நடந்ததைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

சுபாஷ், காவேரியை மட்டும் நிச்சயத்துக்குப் போகச் சொன்னவன், திருமணத்திற்கு இன்னும் சில நாட்களே இருப்பதால், திருமணம் வரை அவளை அங்கேயே தங்கி யிருந்து, அவள் பெற்றோருக்கு உதவச் சொன்னான்.

"நான் போறேன், சரி. ஆனா நீங்க...!" என்று காவேரி சந்தேகமாக இழுக்க,

"நான் கல்யாணத்துக்கு வரேன்!" என்று சுபாஷ் சொன்னதும், அவனைப் பார்த்து முறைத்த காவேரி, "நீங்க ஏன் மத்தவங்களுக்காக எங்க அண்ணன் நிச்சயத்துக்கு வராம இருக்கணும்? நாம எந்த விதத்துல குறைஞ்சு போயிட்டோம்? எனக்கும் அந்த வீட்ல எல்லா உரிமையும் இருக்கு!" என்றாள் கோபமாக.

"காவேரி! சுயநலமாக இருக்காதே! இன்னைக்குக் கதிருக்கும் சந்தியாவுக்கும் இப்படி ஒரு நிலை வர, நாமதான் காரணம். அன்னைக்கு உன் குடும்பத்தைப் பத்தி நினைச்சியா? உங்க அண்ணன் வந்து உன்னைக் கூப்பிட்டபோது, உடனே நீ அவர் கூடப் போனியா? இல்லையில்ல...! உனக்கு உன் வாழ்க்கைதானே முக்கியமா இருந்துச்சு? இப்போ மட்டும் என்ன, ரொம்ப உரிமை கொண்டாடுறே?

"எல்லோரும் கலப்புத் திருமணங்களை ஆதரிப் பாங்கன்னு எதிர்பார்க்க முடியாது. ஆனால், நாம நிஜமாகவே கொடுத்து வச்சவங்க. நம்ம கல்யாணம் எந்தப் பிரச்சினையும் இல்லாமலே நடந்தது. ஜாதிக் காகக் காதலர்களைக் கௌரவக் கொலைகள் செய்யறது பத்தி நீ கேள்விப்பட்டது இல்லை...!

"இப்போதான் கொஞ்சம் கொஞ்சமாகக் காதல் திருமணமும் நடக்க ஆரம்பிச்சிருக்கு. மாற்றம் என்பது ஒரே நாளில் வராது. உங்க மாமாவும் ஒரு நாள் புரிஞ் சுப்பார்."

சுபாஷ் சொன்னதைக் கேட்ட அவனது பெற்றோர், "நீ சொல்றது உண்மை சுபாஷ். ஏற்கெனவே உங்களால அந்தக் குடும்பத்துல நடந்த பிரச்சினை போதும். கதிர் - சந்தியா கல்யாணம் நல்லபடியாக முடியுற வரை, நாம கொஞ்சம் விலகியே இருப்போம்.

"கல்யாணத்துக்கு நாங்க வந்தா, நம்ம சொந்தக் காரங்களையும் கூப்பிட வேண்டியதாக இருக்கும். அது வேற சந்தியா அப்பாவோட கோபத்தை இன்னும் அதிகமாக்கும். அதனால, நாங்க டெல்லி டூர் போயிட் டோம்னு சொல்லிடு," என்றனர்.

சுபாஷுக்கு உண்மையிலேயே தன் பெற்றோரை நினைத்துப் பெருமையாக இருந்தது. நாங்கள் சம்பந்தி வீட்டினர் என்று வீணாக வெட்டிப் பந்தா செய்து அலட்டிக் கொள்ள நினைக்காமல், விட்டுக் கொடுக்கும் தன் பெற்றோரை உயர்வாகப் பார்த்தான்.

"அங்கே போய் எந்தப் பிரச்சினையும் பண்ணாம, ஒழுங்கா இருந்துட்டு வரணும்!" என்று எச்சரித்தே சுபாஷ், காவேரியையும் தன் மகனையும் விமானம் ஏற்றி அனுப்பி வைத்தான்.

திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட நிச்சயம் என்றாலும், பெரியசாமி சிறப்பாகவே செய்தார். தன் நெருங்கிய உறவினர்களை எல்லாம் அழைத்துச் சீர்வரிசையாக இருபத்தொரு தட்டுக்கள் ஊர்வலமாக எடுத்துக் கொண்டு சென்று, அந்த ஊரே வியந்து பார்க்கும் அளவிற்குப் பெரிய அளவில் செய்தார்.

அதோடு சந்தியாவிற்கு விலை உயர்ந்த பட்டுப் புடவை, நகைகள் எல்லாம் சீராகக் கொடுத்துத் தன் மகனுக்குப் பேசி முடித்தார். துரையே இந்த அளவிற்கு எதிர்பார்க்கவில்லை.

நிச்சயத்தில் தாய் மாமன்தான் முக்கியம். சந்தியாவிற்குத் தாய் மாமாவே மாப்பிள்ளையின் அப்பாவாக இருப்பதால், அடுத்திருந்த சின்ன மாமன் பாண்டியனும், கதிரின் தாய் மாமா வாசுவும் தட்டு மாற்றிக் கொண்டனர். அதனால் துரைக்கு, வந்தவர்களை வாங்க,



சாப்பிடுங்க என்று சொல்வதைத் தவிர, பெரிதாக வேறு வேலைகள் இல்லை.

சந்தியா நிச்சயப் புடவையைக் கட்டிக் கொண்டு சபைக்கு வந்து, பெரியவர்கள் எல்லோருக்கும் சேர்த்துப் பொதுவாக விழுந்து கும்பிட்டாள். காவேரி, அவளை அழைத்துச் சென்று, அவளுக்கென்று போடப்பட்டிருந்த இருக்கையில் அமர வைத்தாள்.

சந்தன நிறத்தில் அரக்கு வண்ணக் கரை வைத்த பட்டுப் புடவையும், கற்கள் பதித்த நகைகளும் அணிந்து, சந்தியா வானத்து நட்சத்திரமாக ஜொலித்தாள். லக்ஷ்மி, தன் மருமகளுக்குத் தாங்கள் சீர்வரிசையாகக் கொண்டு வந்த நகைகளை அணிவித்து, நெற்றியில் குங்குமமும், தலையில் பூவும் வைத்து அழகு பார்த்தார்.

பெண்கள் எல்லோரும் நலங்கு வைத்து முடித்ததும், பெரியசாமி, தன் மருமகளை ஆசிர்வாதம் செய்யச் சென்றார். தன் மருமகளுக்குத் திருநீறும், குங்குமமும் வைத்து விட்ட பெரியசாமி, தன் மருமகளின் முகத்தைக் கூர்ந்து நோக்க, சந்தியாவின் முகத்தில் பொலிவை விடக் களைப்பே தெரிந்தது.

அதைப் பார்த்து வருந்தியவர், "என்ன சந்தியா, இப்படி இருக்கே? சந்தோஷமாக இருக்க வேண்டாமா?" என்று கேட்க,

கண் கலங்கிய சந்தியா, "கதிர் மாமாவை நினைச்சாப் பயமா இருக்கு மாமா. அவங்க நிச்சயத்துக்குக் கூட

வரலையே! அவங்களுக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லையா?" என்றாள் மெதுவான குரலில்.

"அதெல்லாம் எதுவும் இல்லை. அவனுக்கு இப்போ லீவு கிடைக்கலை. அதுதான் வர முடியலை," என்றவர், உடனே தன் செல்லில் கதிரை அழைத்தார்.

அங்கே, கதிரும் நிச்சயத்துக்குப் போகமுடிய வில்லையே என்ற வருத்தத்தில்தான் இருந்தான். தன் அப்பா அழைப்பதைப் பார்த்ததும், உடனே செல்லை எடுத்தவன், "சொல்லுங்கப்பா...!" என்றதும்,

"நிச்சயம் நல்லபடியாக முடிஞ்சுது கதிரு. நீ வரலைங்கிறதைத் தவிர, வேற எந்தக் குறையும் இல்லை. சந்தியாதான் நீ வரலைன்னு ரொம்பக் கவலைப்பட்டுச்சு. இந்தா... அது கிட்டே ஒரு வார்த்தைப் பேசு. அப்பத்தான் அது நிம்மதியா இருக்கும்...!" என்று செல்லை சந்தியா விடம் கொடுத்தார்.

திடீரென்று கதிரிடம் பேசச் சொல்லிப் போனைக் கொடுத்ததும், சந்தியாவுக்கு உடலெங்கும் இனிய படபடப்பு. அவள், "சொல்லுங்க மாமா!" என்றாள் மெதுவாக.

"ஹாய் பொண்டாட்டி. எப்படி இருக்கே?" என்ற கதிரின் துள்ளலான குரலில், சந்தியாவின் வருத்தங்கள் சட்டென்று மறைந்து, முகம் பிரகாசமானது.

சந்தியா பதில் சொல்லாமல் அமைதியாகப் புன்னகைத்தபடி நிற்க, "என்னடி! எதுவுமே பேச மாட்டேங்கிறே?" என்று கதிர் அடுத்த கேள்விக்குத் தாவ,



"இங்கே நிறையப் பேர் இருக்காங்க மாமா. இன்னும் பங்ஷன் முடியலை," என்றாள் சந்தியா கிசுகிசுப்பாக.

அவளின் நிலையைப் புரிந்து கொண்ட கதிர், "அப்படியா? சரி, நைட் பேசுறேன்," என்று போனை வைக்க, சந்தியாவும் வைத்தாள்.

பெரியசாமியும், சந்தியாவும் பேசுவதைத் தூரத்தில் இருந்து துரை பார்த்துக் கொண்டுதான் இருந்தார். அவருக்குக் கதிர் வராதது கோபம்தான். 'பெரிய இவன்னு பந்தா காட்டுறான் போலிருக்கு!' என்று கதிரை மனதிற்குள் திட்டிக் கொண்டுதான் இருந்தார். அவருக்குத் தெரிய வில்லை, இனி அவன்தான் தன்னை ஆட்டி வைக்கப் போகிறான் என்று.

கதிர் பேசியது, சந்தியாவுக்குச் சற்றுத் தெம்பாக இருந்தது. அவள் முகத்தில் வருத்தம் மறைந்து, மலர்ச்சி தோன்றியது. சந்தியாவின் கூடவே சித்ரா இருந்து அவளைப் பார்த்துக் கொண்டாள்.

அங்கே நந்தினி கொதித்துப் போய் இருந்தாள். மகேஷ் முகம் இறுக, அவள் அருகில் அமர்ந்திருந்தான். அவன் நிச்சயமாக இதை எதிர்பார்க்கவில்லை. அவ னொன்று நினைத்துச் செய்ய, நடந்தது வேறொன்று. இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால், சந்தியாவை மணக்கச் சம்மதம் சொல்லியிருக்கலாமே என்று இப்போது நினைத்து வருத்தப்பட்டான்.

நிச்சயம் முடிந்த அன்று இரவு சந்தியா, சித்தார்த்தை அழைத்தாள். நிச்சயத்தைப் பற்றி அவள் இதுவரை

சித்தார்த்திடம் எதுவும் சொல்லவில்லை. ஏன், ஊருக்கு வந்த பிறகு அவனை அழைக்கவேயில்லை. இப்போது தான் அழைக்கிறாள்.

"ஹே சந்தியா! எப்படி இருக்கே? பிரச்சினை ஒண்ணும் இல்லையே! நான் போன் பண்ணினா உனக்கு ஏதாவது பிரச்சினை ஆகப் போகுதுன்னு நினைச்சுத்தான் இதுவரை போன் பண்ணலை," என்று சித்தார்த் பேசிக் கொண்டே செல்ல,

இடையில் சந்தியா, "எனக்குக் கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சு சித்து..." என்றாள். அவள் சொன்னதைக் கேட்டு ஒரு நிமிடம் சித்தார்த் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து விட்டான்.

"என்னடி சொல்றே? கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சா?"

"ஆமாம்டா. இன்னைக்குத்தான்!" என்றாள் சந்தியா.

அவள் குரலில் வருத்தமோ, அழுகையோ இல்லாததை வைத்தே, மாப்பிள்ளை யார் என்பதைப் புரிந்து கொண்ட சித்தார்த், "உனக்கு என் கிட்டே இப்போதான் சொல்லணும்னு தோணுச்சா? உன் கதிர் மாமா வந்ததும் என்னை மறந்துட்டே இல்ல...!" என்று கோபத்தில் போனை வைத்து விட,

சந்தியா அவனை மீண்டும் மீண்டும் அழைத்தாள். சிறிது நேரம் அவளைத் தவிக்க விட்டே போனை எடுத்தான் சித்தார்த். போனை எடுத்த போதிலும் அவனாகப் பேசவில்லை.



அவன் பேசப் போவதில்லை என்பதை உணர்ந்த சந்தியா, "சாரிடா. சொல்லக் கூடாதுன்னு இல்லை. எனக்கே நிச்சயம் நடக்குமான்னு கடைசி வரை பயமாக இருந்தது. கதிர் மாமாவே நிச்சயத்திற்கு வரலை தெரியுமா?" அவள் ஊருக்குச் சென்ற பிறகு நடந்த அனைத்தையும் சொல்ல,

"என்ன இருந்தாலும், நீ என் கிட்டே சொல்லாமல் இருந்ததை என்னால ஏத்துக்க முடியாது. உன்னோட கல்யாணத்துக்காவது என்னைக் கூப்பிடுவியா? இல்லை, அதுக்கும் சொல்ல மாட்டியா?" சித்தார்த் சுருக்கென்று கேட்டு விட,

சந்தியாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. "நீ கூட என்னைப் புரிஞ்சுக்கலைன்னா எப்படி சித்து? இன்னும் படிப்பே முடியலை... அதுக்குள்ளே கல்யாணம். எனக்குச் சந்தோஷப்படுறதா, இல்லை வருத்தப்படுறதான்னே தெரியலை.

"எங்க அப்பா வீம்புக்குன்னே பண்றார். கடைசி வரை ஏதாவது சண்டை போட்டு, எங்க அப்பா நிச்சயத்தை நிறுத்தி விடுவாரோன்னு பயத்தில்தான் இருந்தேன், தெரியுமா?"

சந்தியா அழுததும், சித்தார்த்துக்கு வருத்தமாகப் போய் விட்டது. "சரி. அழாதே விடு. ஏதோ கோபத்தில் பேசிட்டேன். உன் கல்யாணத்தில் ஒரு கலக்குக் கலக்கிடுறேன், பாரு!" என்றான் சமாதானமாக.

அதற்குள் கதிர் அழைப்பதைப் பார்த்த சந்தியா, "கதிர் மாமா கால் பண்றாங்கடா. நான் அப்புறம் பேசுறேன்!" என்றாள்.

"ம்ம்... இனி ஒரே ரொமான்ஸ்தான். நடக்கட்டும்... நடக்கட்டும்..." என்று சித்தார்த் போனை வைக்க, சந்தியா புன்னகையுடன் கதிரின் அழைப்பை ஏற்றாள்.

நிச்சயத்திற்கும், திருமணத்திற்கும் இடையே வெறும் நாற்பது நாட்களே இருந்தது. அதிலும் கதிர் இப்போது பார்த்துப் புது இடத்தில் வேலைக்குச் சேர்ந்ததால், அவனால் விடுமுறை எடுக்க முடியாமல், பெரியசாமியே எல்லாவற்றையும் பார்க்க வேண்டியதாக இருந்தது.

தன் மகனின் திருமணம் என்ற உற்சாகத்தில், உடம்பு முடியாத நிலையிலும், பெரியசாமி திருமண ஏற்பாடுகளைச் சிறப்பாகவே செய்தார். பெரியசாமியும் துரையும் நேரடியாகப் பேசிக் கொள்வது இல்லை. எது பேசுவது என்றாலும், பாண்டியனை நடுவில் வைத்தே பேசிக் கொண்டனர்.

பெரியசாமிக்குத் தன் மகன் இருக்கையில், துரை வெளியே மாப்பிள்ளை பார்த்த வருத்தம். துரைக்கு வீம்பு. துரை சென்று பேசியிருந்தால், பெரியசாமியும் பேசி இருப்பார்தான். ஆனால், துரை இறங்கி வருவதாக இல்லை.

கதிருக்குக் கல்யாணக் கனவு காண நேரம் இல்லை. அலுவலகத்தில் திருமணத்திற்கு ஒரு வாரம்



விடுமுறை கேட்டிருந்ததால், அதற்கும் சேர்த்து இப்போது அதிக நேரம் அவன் வேலை பார்க்கும்படி இருந்தது. அதிக வேலை இருந்தாலும், சந்தியா கைபேசியில் அழைக்கும்போது, எடுத்துப் பேசுவான்.

கதிருக்குச் சந்தியா மீது எந்த வருத்தமும் இல்லை. முதலில் அவள் மீது வருத்தம் கொள்ள எந்தக் காரணமும் இல்லை. அதனால், அவளோடு இயல்பாகப் பேசுவான். தன் தந்தையால் மனதில் காயப்பட்டிருந்த சந்தியாவுக்குக் கதிரின் பேச்சு ஆறுதலாக இருந்தது.

அவர்கள் பேசும்போது, துரையைப் பற்றிப் பேச்சு வந்தால், கண்டிப்பாகக் கதிர் அதைத் தவிர்த்து விடுவான். இல்லையென்றால், வேறு விஷயத்துக்குத் தாவி விடுவான். அதைச் சந்தியாவும் உணர்ந்துதான் இருந்தாள். அவளுக்கு மனதிற்குள் கலக்கமாகவே இருந்தது.

பெரியசாமி அலைய முடியாத காரணத்தால், ஒரு ஞாயிற்றுக் கிழமை கதிர் நேரில் சென்று சுபாஷ் குடும்பத்திற்குப் பத்திரிகை வைத்து விட்டு வந்தான். அப்போது அவன், சுபாஷின் பெற்றோரைக் கண்டிப்பாகத் திருமணத்திற்கு வர வேண்டும் என்று அழைக்க, அவர்கள் தயங்கினார்கள்.

அவர்களின் தயக்கத்தை உணர்ந்த கதிர், "நீங்களும் எங்க குடும்பம்தான். அதனால் கண்டிப்பாக வந்து முன்னே நின்னு கல்யாணத்தை நடத்திக் கொடுக்கணும்!" என்று அழைத்த போது, சுபாஷின் பெற்றோர், மனம் உருகி நின்றனர்.

கதிர் திரும்பிச் செல்லும்போது ரயில் நிலையம் வரை சுபாஷும் அவனுடன் சென்றான். "எங்க கல்யாணம் நடந்தபோது... நீங்க ரொம்பக் கோபமாக இருந்தீங்க கதிர். இப்போ கோபம் போயிடுச்சா?"

"இல்லை. இப்பவும் அந்தக் கோபம் இருக்கு. இப்பவும் நீங்க அன்னைக்குச் செய்ய நினைச்ச கல்யாணத்தை நான் சரின்னு சொல்ல மாட்டேன்!" என்ற கதிர், சுபாஷின் பக்கம் திரும்பி நின்று, "பிறகு ஏன் உங்களை நேர்ல வந்து கல்யாணத்துக்குக் கூப்பிட வந்தேன்னு நினைக்கிறீங்களா? அது, நீங்க எங்க குடும்பத்துக்குள்ள வந்த விதம் வேணும்னா தப்பா இருக்கலாம்... ஆனால், நீங்க தப்பானவர் இல்லைன்னு புரிஞ்சதுனால.

"அதோட, நீங்க எங்க வீட்டு மாப்பிள்ளை. நாங்க செய்ய வேண்டிய மரியாதையை ஒழுங்காகச் செய்யணும் இல்ல...!" என்று கதிர் புன்னகையுடன் சொல்ல, சுபாஷும் பதிலுக்குப் புன்னகையுடன், "தேங்க்ஸ் மாப்பிள்ளை!" என்றான்.

கதிருக்கு, ஏற்கெனவே தங்கள் திருமணத்தில் வருத்தம் என்று தெரியும். அதோடு தன் திருமணத்தின் பொருட்டே சந்தியாவைக் கதிருக்குக் கொடுக்க மாட்டேன் என்று துரை சொன்னதும் சுபாஷுக்குத் தெரியும். அதனால் கதிர் எப்படி நடந்து கொள்வானோ என்று மனதிற்குள் கவலைப்பட்டுக் கொண்டுதான் இருந்தான். ஆனால், இப்போது கதிரே நேரில் வந்து தன் திருமணத்திற்கு அழைத்ததும், சுபாஷுக்குச் சந்தோஷமாக இருந்தது.



திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்பு, ஊர்க் கோயிலில் கதிர் - சந்தியா திருமணத்தை முன்னிட்டுச் சிறப்புப் பூஜை நடந்தது. சந்தியா குனிந்த தலை நிமிராமல் பூசாரி சொன்னபடி பிள்ளையாருக்குப் பூஜை செய்து கொண்டிருந்தாள். சுற்றி இருவரின் பெற்றோரும், உறவினர்களும் இருந்தனர்.

அப்போது கதிர், சித்தார்த், அனு, ஸ்ரீஜா, பாலா மற்றும் அவன் மனைவி, குழந்தையுடன் காரிலிருந்து இறங்கினார்கள். சந்தியா, பூஜையில் கவனமாக இருந்ததால், அவர்களைக் கவனிக்கவில்லை.

சித்தார்த், அனு மற்றும் ஸ்ரீஜா, அவளிடம் திருமணத்தன்று வருவதாகத்தான் சொல்லியிருந்தனர். அதனால் அவள் அவர்களை அப்போது எதிர்பார்க்கவும் இல்லை.

"நம்மைப் பார்த்ததும் சந்தியா துள்ளிக் குதிக்கப் போறா...!" என்று அனு சொல்ல,

"நீங்க சென்னையில் பார்த்த சந்தியாவையே இங்கேயும் எதிர்பார்க்காதீங்க. அவ, எல்லோரும் இருக்கிறதுனால ரொம்ப அடக்க ஒடுக்கமா இருப்பா!" என்று கதிர் புன்னகையுடன் சொல்ல, அனு அதை நம்பவில்லை.

கதிரைப் பார்த்ததும் எல்லோரும், "வா கதிரு...!" என்று அவனைச் சூழ்ந்து கொள்ள, சந்தியாவிற்குக்

கதிரின் பெயரைக் கேட்டதும் படபடப்பாக இருந்தது. அவள் குனிந்த தலை நிமிராமல், பூஜையில் கவனமாக இருந் தாள்.

அவளுக்குச் சிறு வயதிலிருந்தே கதிரைத் தெரியும் தான். இருந்தாலும், திருமணம் என்றவுடன், மனதிற்குள் புரியாத ஒரு பயம்.

துரை, இதற்கு முன்பு இருந்தது போல் கதிரைக் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. இப்போது அவன்தான் மாப்பிள்ளை. அவர் கண்டிப்பாக, வா என்று அவனைக் கேட்க வேண்டும்.

அங்கு இருந்த உறவினர்கள் சிலர், "துரை... மாப்பிள்ளை வந்திருக்கார் பாரு... போய் வாங்கன்னு சொல்லிக் கூப்பிடு!" என்றதும், அவர்கள் முன்பு கோபத்தைக் காண்பிக்க முடியாமல், துரை சென்று கதிரை, "வாங்க...!" என்று அழைக்க, அவரின் நிலையை உணர்ந்த கதிர், சிரிப்பை அடக்கிக் கொண்டு, அவரைப் பார்த்துத் தலை அசைத்தான்.

இருவரும் அதற்கு மேல் எதுவும் பேசிக் கொள்ள வில்லை. சந்தியாவுக்குத் தன் அப்பா கதிரிடம் எப்படி நடந்து கொள்வாரோ என்ற கவலை இருந்தது. அதனால் அவள் ஓரக் கண்ணால் அவர்கள் இருவரையும் பார்த் தாள். ஆனால், அப்போதும் அவள் தன் நண்பர்களைப் பார்க்கவில்லை.

எல்லாச் சந்நிதியிலும் பூஜை நடந்தது. சந்தியா தலை நிமிர்ந்து கதிரை மட்டுமில்லை, வேறு யாரையும்



பார்க்கவில்லை. காவேரி சென்று, "அண்ணன் உன்னைக் கூப்பிடுது சந்தியா...!" என்றவுடன், சந்தியாவுக்கு மேலும் படபடப்பானது. அவள் வர மாட்டேன் என்று மறுத்து, தன் உறவுப் பெண்களுடன் சென்று நின்று கொண்டாள்.

கதிர், அவள் செய்வதை எல்லாம் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்க, அனுவும், ஸ்ரீஜாவும், 'இது நம்ம சந்தியாவா?' என்று ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். சித்தார்த், கிராமத்துக்கு வருவது இதுதான் முதல் முறை என்பதால், அந்தக் கோயிலைச் சுற்றிப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

முருகன் சந்நிதியில் பூஜை நடக்கும்போது, சந்தியா மெதுவாகத் திரும்பி கதிரைப் பார்க்க, கதிரும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரின் விழி களும் ஒரு நொடி சந்தித்து மீண்டது. அது இருவருக்கும் சுகமாகவும் இருந்தது.

சந்தியா புன்னகையுடன் முன்பக்கம் திரும்பிக் கொள்ள, கதிரின் அருகில் நின்ற பாலா, "என்னடா நடக்குது இங்கே?" என்றான் கிசுகிசுப்பாக.

"நீ சாமி கும்பிடாம இங்கே என்னடா பார்க்கிறே?" என்றான் கதிர் பதிலுக்குப் புன்னகையுடன்.

"எல்லாம் நேரம்டா..." என்று பாலா புலம்பும்போது, சந்தியா மீண்டும் திரும்பிக் கதிரைப் பார்க்க, அதுவரை கதிரின் மற்றொரு பக்கம் நின்று கொண்டிருந்த சித்தார்த், சட்டென்று கதிரின் முன்பு வந்து நின்று, சந்தியாவைப் பார்த்து, 'ஹாய்...!' என்று கை அசைத்தான்.

சந்தியா, அங்கே சித்தார்த்தைப் பார்த்ததும், நம்ப முடியாத ஆச்சரியத்தில் உறைந்து போய் நின்று விட்டாள். அவளுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

'சித்தார்த், திருமணத்தன்று வருவதாகத்தான் சொல்லியிருந்தான். ஆனால், அவன் வருவானோ... மாட்டானோ...!' என்று கவலையில் இருந்த சந்தியாவிற்கு, சித்தார்த் திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்பே வந்தது, சந்தோஷத்தில் கண்ணீரை வர வைத்தது.

சந்தியா கண் கலங்குவதைப் பார்த்த சித்தார்த், புன்னகையுடன் சற்றுத் தள்ளி நின்ற அனுவையும், ஸ்ரீஜாவையும் அவளுக்குக் காண்பித்தான். பின்பு சந்தியாவிடம் திரும்பி, சாமி கும்பிடும்படி ஜாடை செய்தான்.

சந்தியாவும் புன்னகையுடன் முன்பக்கம் திரும்பினாள். அப்போதுதான் அவளையே பார்த்துக் கொண்டிருந்த துரையைப் பார்த்தாள். துரை அவளைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தார். 'ஐயோ! கடவுளே! இவர் வேற பார்த்துட்டாரா...?' என்று நினைத்த சந்தியா, சாமி கும்பிடுவது போல் கண்களை மூடிக் கொண்டாள்.

"டேய்...! மெயின் பிக்சரை மறைச்சுட்டு, நீ என்னடா சைட்ல ட்ரைலர் ஓட்ற...?" பாலா, சித்தார்த்தைப் பார்த்துக் கேட்க,

"பின்னே என்ன பாலா அண்ணா! நாங்க வந்திருக்கிறதைச் சொல்லாம... இவர் மட்டும் சந்தியாவை நல்லா சைட் அடிக்கிறார்?" என்றான் சித்தார்த் கடுப்புடன். அவன் சொன்ன தினுசில், பாலாவும் கதிரும் வாய் விட்டுச் சிரித்தனர்.



அவர்கள் சிரிப்புச் சத்தத்தில் திரும்பிப் பார்த்த உறவினர்களிடம், அவன் நண்பர்கள் என்று பாலாவையும், சித்தார்த்தையும் காட்டிச் சொன்னவன், அனுவையும், ஸ்ரீஜாவையும் சந்தியாவின் தோழிகள் என்று அறிமுகம் செய்தான்.

அனுவும், ஸ்ரீஜாவும் சென்று சந்தியாவுடன் நின்று கொண்டனர். சந்தியா, அவர்களை நலம் விசாரித்தாள். ஆனால், அப்போதும் வெளிப்படையாகத் தன் மகிழ்ச்சியைக் காண்பிக்காமல், அமைதியாக நின்றாள்.

கோயிலில் பூஜை முடிந்ததும், கதிர், சந்தியாவிற்குப் பாலாவின் மனைவி ராஜியை அறிமுகம் செய்தான். சந்தியாவோடு அவள் வீட்டுக்கு அனு, ஸ்ரீஜா மற்றும் பாலாவின் மனைவியும் குழந்தையும் செல்ல, கதிர், தன்னோடு பாலாவையும், சித்தார்த்தையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

கதிரின் அறை மிகவும் பெரிதாக இருந்தது. நல்ல வெளிச்சத்தோடு, காற்றோட்டமாக இருந்தது. அந்த அறையிலேயே சித்தார்த், பாலா மற்றும் கதிர் மூவரும் தங்கிக் கொண்டனர்.

உறவினர்களுக்கு, அவர்களுடைய இன்னொரு வீட்டைக் காலி செய்து ஒதுக்கி இருந்தனர். அதில்

உறவினர்கள் தங்கிக் கொள்ள, கீழே இருந்த அறையில் சுபாஷும் காவேரியும் இருந்தனர். கதிர் விரும்பி அழைத்த தால், சுபாஷின் பெற்றோரும் வந்திருந்தனர்.

அதோடு, பெரியசாமி சுபாஷின் உறவினர்களுக்கும் முறைப்படி பத்திரிகை வைத்திருந்தார். அது வேறு துரையின் கோபத்தை மேலும் அதிகரித்து இருந்தது. துரை முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டே சுற்றிக் கொண்டு இருந்தார்.

அங்கே வீட்டுக்கு வந்ததும், சந்தியா, தன் தோழிகளைக் கட்டிக் கொண்டு உற்சாகமாகச் சத்தமிட்டபடி ஆட்டம் போட, 'ஹப்பாடா... நம்ம சந்தியா வந்தாச்சு!' என்பது போல் அனுவும், ஸ்ரீஜாவும் அவளைப் பார்க்க, அப்போது சமையல் அறையில் இருந்து குழம்புக் கரண்டி பறந்து வந்தது.

"நாளன்னிக்குக் கல்யாணம் ஆகப் போற பொண்ணு மாதிரியா இருக்கே? இப்படிச் சத்தம் போட்டு ஆடினா, வீட்டுக்கு வந்திருக்கிற சொந்தமெல்லாம் என்ன நினைப்பாங்க? நான் பொண்ணைச் சரியா வளர்க்க லைன்னுதான் சொல்லுவாங்க...!" என்று வேதவல்லி திட்டிக் கொண்டே அங்கே வந்தார்.

சந்தியா, தன் இடுப்பில் கை வைத்து நின்று கொண்டு, "போம்மா... நீ போ...!" என்று ஜெயம் சதா போல் பேசிக் காட்ட, அவள் குறும்பைப் பார்த்து உறவினர்கள் சிரிக்க, வேதவல்லி, "அடி செருப்பால..." என்று அடிக்க வர, சந்தியா, அங்கிருந்து தன் தோழிகளை அழைத்துக் கொண்டு சிட்டாகப் பறந்தாள்.



அதைப் பார்த்து வேதவல்லியும்... அவள் மாமியாரும் மனம் நிறையச் சிரித்தனர். அவர்களுக்கு இப்போதுதான் பழைய சந்தியாவைப் பார்ப்பது போல் இருந்தது. சந்தியாவின் முகத்தில் மகிழ்ச்சியைப் பார்த்ததும் தான் வீட்டிற்கே ஒரு கல்யாணக் களை வந்தது போல் இருந்தது. வீட்டில் துரை எப்போதும் உர்ரென்று இருப்ப தால், சந்தியாவும் மௌனமாக ஒதுங்கிச் சென்று விடு வாள்.

மாடிக்கு வந்ததும், "ஹப்பா... என்னோட ரூமுக்கு வந்தாச்சு. இனி இங்கே என்ன ஆட்டம் வேணும்னாலும் போடலாம்..." என்றவளுக்கு, அப்போதுதான் பாலாவின் மனைவி ராஜி நினைவுக்கு வர, அனுவையும், ஸ்ரீஜாவை யும் அவள் அறையில் இருக்கச் சொல்லி விட்டுப் பாலாவின் மனைவியைத் தேடிக் கீழே சென்றாள்.

அதற்குள் வேதவல்லி ராஜிக்கும் அவள் மகளுக்கும் குடிக்க ஏதோ கொடுத்துக் கொண்டிருந்தார். சந்தியாவைப் பார்த்ததும் முறைத்த வேதவல்லி, "கதிரு உன்னை நம்பித்தானே இவங்களை இங்கே அனுப்பி வச்சது? இதுதான் நீ பார்த்துக்கிற லட்சணமா?" என்றதும்,

சந்தியா, தவறு செய்த குழந்தையைப் போல ராஜியைப் பார்க்க, "விடுங்கம்மா... கல்யாணத்துக்கு முன்னாடிதான் இப்படி எல்லாம் ஆட்டம் போட முடி யும். இதைப் போய்ப் பெரிசு பண்ணிக்கிட்டு...!" என்று சந்தியாவுக்கு ராஜி பரிந்து பேச, சந்தியாவின் முகம் மலர்ந்தது.

"அப்படிச் சொல்லுங்க!" என்ற சந்தியா, ராஜியின் மகளைத் தூக்கியவள், "பாப்பாவோட பேரு என்ன?" என்று கேட்டபடி, அவர்களை அழைத்துக் கொண்டு, மாடியில் இருக்கும் அவள் அறைக்குச் சென்றாள். சந்தியாவின் அறை, குளிர் சாதனம் பொருத்தப்பட்டது. அதனால் குளிர்ச்சியாக இருந்தது.

காலையில் மதுரை ரயில் நிலையத்தில் இறங்கி, அங்கிருந்த ஹோட்டலில் குளித்து, காலை உணவை அருந்தி விட்டே வந்திருந்ததால், இப்போது சந்தியாவின் அறையில், முகம் மட்டும் கழுவிக் கொண்டனர். வெயிலுக்கு இதமாக எல்லோருக்கும் இளநீர் வந்தது.

சிறிது நேரம் எல்லோரும் உட்கார்ந்து அரட்டை அடித்தனர். அப்போது மதிய உணவுக்கு அழைப்பு வர, "நாங்க திடீர்னு சொல்லாம வந்திருக்கோமே...! சாப்பாடு பத்துமா?" என்று ஸ்ரீஜா கவலைப்பட,

அவளை, 'லூசாப்பா நீ...!' என்பது போல் ஒரு பார்வை பார்த்த சந்தியா, "இது உங்க ஊர்னு நினைச்சியா? இங்கே எல்லாம் வீட்டுக்கு வந்தவங்களைச் சாப்பிடாம அனுப்ப மாட்டாங்க. அது எந்நேரம் வந்தாலும் சரி. எப்பவும் வீட்ல கூட ரெண்டு ஆளுக்குச் சேர்த்துத்தான் சமைப்பாங்க. அதுவும் வீட்ல இப்ப விசேஷம். ஊரே இங்கே வந்துதான் சாப்பிடும்," என்று விளக்கியபடி, அவர்களைச் சாப்பிட அழைத்துக் கொண்டு சென்றாள்.

மதிய விருந்த தடபுடலாக இருந்தது. எல்லோரும் ஒரு வெட்டு வெட்டி விட்டு அறைக்கு வந்தனர். உண்ட



களைப்பில் மற்றவர்கள் தூங்கி விட, 'சித்து என்ன செய்கிறானோ...!' என்று கவலைப்பட்ட சந்தியா, அவனைச் செல்லில் அழைத்தாள். அவன் எடுக்கவில்லை என்றதும், கதிரை அழைத்தாள்.

"என்ன...! உன் பிரெண்ட் எப்படி இருக்கான்னு விசாரிக்கப் போன் பண்ணுனியா?" என்று கதிர் சரியான காரணம் சொல்லி விட,

அவனிடம் உண்மையை ஒப்புக் கொள்ளாமல், "இல்லையே...! நான் உங்க கூடப் பேசத்தான் போன் பண்ணினேன்!" என்றாள் சந்தியா வீம்பாக.

"அப்படியா, சரி..." என்ற கதிரும், சித்தார்த்தைப் பற்றிப் பேசாமல், வேறு விஷயம் பேச, சிறிது நேரம் பொறுத்த சந்தியா, அதற்கு மேல் முடியாமல், "சித்து எங்கே? சாப்பிட்டானா?" என்று கேட்டாள்.

"யாருக்குத் தெரியும்?" என்று கதிர் அலட்சியமாகப் பதில் சொல்ல,

"என்ன, இப்படிச் சொல்றீங்க? நான் அவனை உங்களை நம்பித்தானே அங்கே விட்டேன். வீட்டுக்கு வந்த விருந்தாளியைக் கவனிக்காம அப்படி என்ன பண்ணுறீங்க?" என்றாள் சந்தியா கோபமாக.

"என்னது...? நீ அவனை இங்கே விட்டியா?" என்று அதிர்ந்த கதிர், "நான் அவனுக்கு நேர்ல போய்ப் பத்திரிகை கொடுத்து, அவனை மதுரை வரை டிரெயின்ல வர வச்சு, நானே ரயில்வே ஸ்டேஷன் போய், அங்கிருந்து

கார் பிடிச்சு, எங்க வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தா... பத்திரிகையை போஸ்ட்ல மட்டும் அனுப்பி வச்சிட்டு, அவன் வந்தா வரட்டும்னு இருந்த நீ சொல்ற... என்னை நம்பி விட்டேன்னு. இது உனக்கே அநியாயமாத் தெரியலை?" என்று சொன்னதும்,

"சாரி... சாரி... சாரி. நான் ஒரு ஃப்ளோல சொல்லிட்டேன்!" என்று சந்தியா, கதிரிடம் சரணடைய, கதிர், "அது... அந்தப் பயம் இருக்கட்டும்!" என்றான் புன்னகையுடன்.

அவன் சொன்னதை ரசித்த சந்தியா, முழு மனதுடன், "தேங்க்ஸ் மாமா!" என்றாள்.

"சித்தார்த் எங்களோடதான் வந்தான் சந்தியா. மேலே என்னோட ரூமுக்கு வந்து, அவன் பெட்டியை வச்சிட்டு, முகம் கழுவிட்டு வந்தான். அப்போ சாப்பிடக் கூப்பிட்டாங்க. கீழே போனோம். அவனும் எங்களோட தான் சாப்பிட உட்கார்ந்தான்.

"அப்போ நம்ம வெங்கடேஷ் இல்ல... (கதிரின் சித்தப்பா மகன்) அவன் வந்தான். வந்தவன், இவனைப் பார்த்து, 'இதையா நீங்க சாப்பிடப் போறீங்க? வேண்டாம், வாங்க. வேற இருக்கு'ன்னு சொல்லிக் கூட்டிட்டுப் போனான். அப்போ போனவன்தான், இன்னும் வரலை!" என்று கதிர் சொன்னதும், சந்தியா, சித்தார்த்தை நினைத்துப் பயப்பட,

"அதெல்லாம் நல்லாப் பார்த்துப்பான். நான் சொல்லித்தான் அனுப்பி இருக்கிறேன். நீ கவலைப் படாதே!" என்று கதிர், சந்தியாவைச் சமாதானம் செய்ய,



"அவங்களோட பாலா அண்ணா போகலையா?" என்று சந்தியா கேட்க,

வாய் விட்டுச் சிரித்த கதிர், "இதையேதான் பாலாவும் கேட்டான், நானும் வரட்டுமான்னு? ஆனால், கல்யாணம் ஆனவங்க இல்லைன்னு சொல்லி, அவனை இங்கேயே விட்டுட்டுப் போயிட்டான்!" என்றதும், அந்தப் பக்கம் சந்தியாவும் சிரிக்க,

"டேய்...! புதுசா கல்யாணம் பண்ணப் போறவங்க பேசுற பேச்சா இது? ஒரு சின்னப் பையனை வச்சிக் காமெடி பண்ணிக்கிட்டு... பேச்சை மாத்து!" என்று பாலா கட்டிலில் திரும்பிப் படுக்க, தரையில் படுத்திருந்த கதிர், "சரி. பிறகு பேசுறேன்!" என்று போனை வைத்தான்.

கதிர் போனை வைத்ததும், "டேய்... நீ கல்யாணம் பண்ணப் போற பொண்ணு கிட்டப் பேசுற மாதிரியா பேசுற? நீ எப்போவும் சந்தியாவோட இப்படித்தான் பேசுவியா? இல்லை, நான் இருக்கேன்னு இன்னைக்கு இப்படிப் பேசுறியா?" என்று பாலா கேட்டதும், கதிர் எதுவும் சொல்லாமல் சமாளிக்கத்தான் பார்த்தான். ஆனால், பாலா விடவில்லை.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சை விட்ட கதிர், "என்ன பேசச் சொல்ற? எனக்கும் நீ சொல்றது புரியத்தான் செய்யுது. ஆனால், சில விஷயங்கள் அந்தந்தக் கால கட்டத்தில் நடந்தாத்தான் நல்லாயிருக்கும்.

"இதே சந்தியா, அவ படிப்பை முடிச்ச பிறகு எங்க கல்யாணம் நடந்தா... நானும் நீ சொல்றபடிதான்

இருந்திருப்பேன். சந்தியாவுக்குக் காலேஜ் திறந்தாச்சு. கல்யாணம் முடிஞ்ச நாலு நாள்ல, நான் அவளைக் காலேஜ்ல விட்டுட்டுப் பெங்களூர் போயிடுவேன். படிக்கிற பொண்ணு கிட்டே காதல் வசனம் பேசி மனசைக் கலைக்கச் சொல்றியா?" என்று கதிர் வருத்தத்துடன் கேட்ட போது, பாலாவுக்குக் கதிரின் நிலை நன்றாகவே புரிந்தது.

அவனும் திருமணம் ஆனவன்தான். அவனுக்குத் திருமணம் முடிந்த பிறகு, மனைவியைப் பிரிந்து இருப்பது எவ்வளவு கஷ்டம் என்று தெரியும். கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரின்னு இதைத்தான் சொல்வாங்களோ! என்று மனதில் நினைத்தான்.

சிறிது நேரம் சென்று சித்தார்த், அவனாகவே சந்தியாவை அழைத்தான். "ஹாய் சந்தியா...!" என்று அவன் உற்சாகமாகப் பேச,

"எங்கேடா இருக்கே நீ? சாப்பிட்டியா?" என்றாள் சந்தியா அக்கறையாக.

"நான் இப்போ விருதுநகர்ல இருக்கேன். வெங்கி யோட பிரெண்ட்ஸ் பத்துப் பேர் சேர்ந்து இங்கே வந்தோம். இங்கே ஒரு ஹோட்டல்ல எண்ணெய்ல போட்ட பரோட்டா, சால்னா, அப்புறம் மட்டன் ஃப்ரை சாப்பிட்டேன். ரொம்ப டேஸ்ட். இப்போ ஊருக்குத் திரும்பி வந்திட்டிருக்கோம்.

"அப்புறம், நான் வெங்கியோட நைட் ஷோ சினிமாவுக்குப் போறேன். உங்க ஊர் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் ரொம்ப ஜாலியா இருக்கேன். உங்க



ஊர் பொண்ணுங்க எல்லாம் சூப்பர். என்னை ஏதோ ஹீரோ மாதிரிப் பார்க்கிறாங்க. நான் என்ஜாய் பண்ணிக் கிட்டிருக்கேன். நீ என்னை டிஸ்டர்ப் பண்ணாதே. ப்ளீஸ்...!" என்ற சித்தார்த், போனை வைத்து விட்டான்.

"எல்லாம் என் நேரம்...!" என்று நொந்தபடி, சந்தியா போனை வைத்தவள், கதிருக்கு அழைத்துச் சித்தார்த் சொன்னதைச் சொல்லிப் புலம்ப,

"விடு சந்தியா. அவனுக்கு வில்லேஜ் லைஃப் புதுசு இல்லையா? அவன் விருப்பப்படி நடக்கட்டும்!" என்று அவனும் சித்தார்த்துக்குப் பரிந்து பேச,

"எப்படியோ போங்க!" என்று சந்தியா போனை வைத்து விட்டாள்.

மாலை வேதவல்லியும், அப்பத்தாவும் வந்து சித்தார்த்தைப் பார்த்து விட்டுச் சென்றனர். "நீ என் பேத்திக்கு ரொம்பத் தோஸ்த்தாமே! காலேஜ்ல நீதான் அவளை நல்லாப் பார்த்துப்பியாம். எப்பவும் அப்படியே பார்த்துக்க. அவ இதெல்லாம் உனக்குப் பிடிக்கும்னு சொன்னா..." என்று ஒரு பலகாரக் கூடையை அவனிடம் கொடுத்து விட்டுச் சென்றார் அப்பத்தா.

சித்தார்த்துக்கு அந்த ஊரையும், அங்குள்ளவர் களையும் பிடித்திருந்தது. எவ்வளவு என்று கேட்டால்...? அந்த ஊரில் யாராவது அவனுக்குப் பெண் கொடுக் கிறேன் என்று சொன்னால், மறுக்காமல் தலை ஆட்டும் அளவிற்கு!

திருமணத்தன்று காலை சந்தியா, தன் உறவினர்கள் மற்றும் தோழிகள் புடைசூழ, மண்டபத்திற்குச் சென்றாள். சந்தியா காரிலிருந்து இறங்கும்போது பச்சைக் கலர் சில்க் காட்டன் சட்டையும், கரை வைத்த வேஷ்டியும் அணிந்து, தலையைத் தூக்கி வாரி, அந்த விடியற்காலை நேரத்தில் கண்களில் கூலிங் கிளாஸ் போட்டுக் கொண்டு ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

சந்தியா மண்டபத்திற்குள் நடந்து செல்லும்போது, 'யாரு இந்த மல்லு வேட்டி மைனர்?' என்று யோசித்துக் கொண்டே சென்றவளுக்கு, அருகில் வந்ததும்தான், அது சித்தார்த் என்று தெரிந்தது.

சந்தியா, அதிர்ச்சியில் அவனையே பார்க்க, போட்டிருந்த கண்ணாடியை மேலேற்றிய சித்து, சந்தியாவைப் பார்த்துக் கண் சிமிட்ட, அப்போது அவன் அருகில் வந்த வெங்கி, அதே போன்ற உடையுடன், சட்டை மட்டும் சிவப்பு நிறத்தில் அணிந்து கொண்டு நின்றான்.

'எல்லாம் ஒரு மார்க்கமாகத்தான் இருக்குங்க....!' என்று நினைத்த சந்தியா, மண்டபத்திற்குள் செல்ல, அவள் அருகில் வந்த சித்தார்த், "எப்படி இருக்கேன்? சூப்பரா!" என்றதும், சந்தியா தலையில் அடிக்க,

"ஹே... உனக்குப் பொறாமை. எத்தனைப் பொண்ணுங்க என்னைப் பார்க்குது தெரியுமா? அதுங்க பார்க்கிறது கூடப் பரவாயில்லை. உங்க அப்பா எப்படி என்னையே முறைச்சுப் பார்க்கிறார் தெரியுமா? நான் அவ்வளவு அழகா இருக்கேன்!" என்றான் சித்தார்த் பெருமையாக.



அப்பா என்றதும் சந்தியா சுற்றி விழிகளால் தேட, துரை, சித்தார்த்தைப் பார்த்து முறைத்துக் கொண்டுதான் இருந்தார். ஆனால், ஆசையாக இல்லை, கோபமாக. அதைப் பார்த்து சந்தியாவுக்கு வருத்தமாக இருந்தது.

சந்தியாவின் முகம் வாடுவதைப் பார்த்த சித்தார்த், பேச்சை மாற்றும் பொருட்டு, "நீ என்ன, என்னைப் பார்த்தே இப்படித் திகைச்சிட்டே! இன்னும் நீ கதிரைப் பார்த்தா என்ன சொல்லுவே? இருக்கிறதுலேயே அவர் கலர்தான் சூப்பர்!" என்றதும், சந்தியா உண்மையிலேயே பயந்து விட்டாள்.

அந்தப் பயம், மாப்பிள்ளை அழைப்பு முடிந்து, கதிர் மண்டபத்திற்கு வரும் வரை தொடர்ந்தது. கதிர் மண்டப வாசலில் வந்து நின்றதும், சந்தியா மாடியில் அவள் அறையில் இருந்து, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

கதிர் பட்டு வேட்டி, பட்டுச் சட்டையில் கம்பீரமாக, அழகாக நின்றான். சந்தியா, அவனை விழி எடுக்காமல் பார்த்து ரசிக்க, கதிர் அருகில் நின்ற சித்தார்த், அவளைப் பார்த்துக் கிண்டலாகப் புருவத்தை உயர்த்த, சந்தியா, அவனைப் பார்த்துப் பொய்யாக முறைத்தாள்.

இதுவரை எல்லாம் நன்றாகத்தான் சென்றது. துரை மட்டுமே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தார். அதை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், மாப்பிள்ளையை மண்டப வாசலில் வந்து நிற்கும் போது செய்ய வேண்டிய மரியாதையைப் பெண்ணின் சகோதரன்தான் செய்வார். அப்படி யாரும்

இல்லையென்றால், பெண்ணின் தந்தைதான் செய்ய வேண்டும்.

சந்தியாவிற்கு உடன் பிறந்த சகோதரன் யாரும் இல்லாத காரணத்தால், தன் சகோதரியின் மகனை அழைத்துக் கதிருக்குச் செயின், மோதிரம் போடச் சொன்னார் துரை. அதுவரை சரிதான். ஆனால், திருமண மாலையையும் அவனையே போடச் சொன்னார். அது அவர் போட வேண்டியது.

சந்தியாவின் அத்தை மகன், கதிரை விட இளை யவன். ஏன், சந்தியாவை விட அவன் இளையவன். கதிருக்கு, அவர் தன்னை வேண்டுமென்றே அவமானப் படுத்துவது போல் இருந்தது. அவன் முகம் கோபத்தில் சிவந்தது. சுற்றியிருந்த உறவினர்களுமே ஒரு மாதிரிப் பார்த்தனர்.

சித்தார்த்துக்கு, இந்த முறை பற்றியெல்லாம் தெரியாது. ஆனால், புன்னகையுடன் இருந்த கதிர் முகம் மாறியவுடன் குழப்பத்துடன் சுற்றிப் பார்க்க, அப்போது காவேரி, தன் கணவனிடம் கோபமாகப் பேசுவதை வைத்துத்தான் அவனுக்குப் புரிந்தது.

இதையெல்லாம் மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சந்தியா அழுதாள். இப்படித் திருமணம் செய்வதற்குத் தன் தந்தை திருமணத்திற்குச் சம்மதிக் காமலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றியது.

கதிரும் எவ்வளவுதான் பொறுத்துப் போவான்? தன் தந்தை அவனை ரொம்பவும் சோதிக்கிறார் என்று



சந்தியாவுக்குப் புரிந்தது. தான் மட்டும் அன்று கதிரையும், நந்தினியையும் இணைத்துப் பேசாமல் இருந்திருந்தால், கதிர் தன்னைப் பார்க்கக் கல்லூரிக்கே வந்திருக்க மாட்டான். இதெல்லாம் தன்னால். ஆனால், தன் அப்பாவோ கதிரைத்தான் குற்றவாளியாகப் பார்க்கிறார்.

இதையெல்லாம் யார் போய் அவரிடம் சொல்வது? கேட்பதற்குத்தான் அவருக்குப் பொறுமை இருக்கிறதா? என்று மனதிற்குள் வேதனைப்பட்டே சந்தியா நொந்து போனாள்.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்து, கதிர் நேராக மணமேடைக்குத்தான் செல்ல வேண்டும். ஆனால், அவன் மாடியை நோக்கிச் சென்றான். ஒரு வேளை மேலே அவன் அறையில் உடை எதுவும் சரி செய்யப் போகிறானோ என்று நினைத்த சுபாஷும், சித்தார்த்தும் அவனுடன் சென்றனர்.

சோலைக்கு, எதுவோ சரியில்லை என்று புரிந்ததால், அவன் பதற்றத்துடனே பின் செல்ல, அவனைப் பார்த்துப் பாலாவும் சென்றான்.

மேலே சென்ற கதிர், தனது அறைக்குச் செல்லாமல், நேராகச் சந்தியாவின் அறைக்குள் சென் றவன், ஜன்னலின் அருகே நின்று கொண்டிருந்த சந்தியாவைத் தொட்டுத் திருப்பினான். கதிரை அங்கே எதிர்பார்க்காத சந்தியா, திகைத்து விழித்தாள். அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரைப் பார்த்ததும், கதிரின் கோபம் சற்று அடங்கியது.

மணமகள் அலங்காரம் முடிந்து, மாப்பிள்ளை அழைப்பு ஆரம்பித்ததும், சந்தியாவை அவள் தோழிகளுடன் விட்டு விட்டு, உறவுப் பெண்கள் கீழே சென்று விட்டனர். அதனால் அப்போது வேறு யாருமில்லை.

கதிர் சுற்றி இருந்த மற்றவர்களைப் பார்க்க, எல்லோரும் அமைதியாக வெளியே சென்றனர்.

அந்த அறையில் கதிரும், சந்தியாவும் மட்டும் தனித்து இருந்தனர்.

சந்தியாவின் அருகில் நின்ற கதிர், ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆனால், அவன் மனதிற்குள் குமுறிக் கொண்டிருக்கிறான் என்று புரிந்த சந்தியா, "போதும் மாமா... என்னால நீங்க அவமானப்பட்டது. கல்யாணத்தை நிறுத்திடுங்க!" என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்ட கதிர், அதுவரை எரிமலையாக இருந்தவன், இப்போது குளிர்ந்த நீரோடை போல் மாறி விட்டான்.

"ஹே... ஏதாவது உளறாதே! மனசு சரியில்லை, அப்படியே போய் மணமேடையில் உட்கார்ந்தா நல்லாயிருக்காதுன்னுதான் உன்னைத் தேடி வந்தேன். வாழ்க்கையில் ஒருமுறை நடக்கிற கல்யாணத்தில் அழுது வடிஞ்சா நல்லாயிருக்காது இல்ல... நான் சொல்றது சரியா?" என்றதும்,

சந்தியா புரிந்தும் புரியாமலும் தலை ஆட்ட,



"ஒரு முறைதான் கல்யாணம் பண்ணிக்க முடியும் இல்ல...!" என்று கதிர் சோகமாக இழுக்கவும், சந்தியா, அவனைப் பார்த்து முறைத்தாள்.

"இப்பத்தான் புரியுதா?" என்று அவளைப் பார்த்துக் கதிர் சிரிக்க, சந்தியாவும் புன்னகைத்தாள்.

மணமேடைக்குச் செல்ல வேண்டிய நேரத்தில், மணமக்கள் இருவரும் ஒரு அறையில், திருமணத்தைப் பற்றி எண்ணமே இல்லாமல் நின்று கொண்டிருந்தால், மற்றவர்களும் அப்படியே இருப்பார்களா என்ன?

"என்னாச்சு....? மாப்பிள்ளையை இன்னும் காணோம்?" என்று ஆளாளுக்குக் கேட்க ஆரம்பிக்க,

அப்போது ஒரு பொடுசு வந்து, "கதிர் மாமா, சந்தியா அக்காவோட பேசிட்டு இருக்காங்க!" என்று போட்டுக் கொடுத்ததும், 'இந்நேரத்தில் பெண்ணும், மாப்பிள்ளையும் அப்படி என்ன பேசிக் கொள்கிறார்கள்?' என்று எல்லோருக்கும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

துரைக்கே, 'கல்யாணம் நடக்குமா?' என்று மனதிற்குள் பயம் வந்து விட்டது. அவருக்கே நன்றாகத் தெரியும், தான் இன்று நடந்து கொண்டது அதிகப்படி என்று. அவர் குற்ற உணர்வுடன் வேதவல்லியைப் பார்க்க, அப்போது அவரும் துரையைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பார்வை, 'நீயெல்லாம் ஒரு மனுஷனா? பெத்த பொண்ணு வாழ்க்கையிலே இப்படி விளையாடிப் பார்க்கிறியே!' என்பது போல் இருந்தது.

## 12

**வே**தவல்லி நொந்து போய் விட்டார். வேறு எந்த மாப்பிள்ளை வீட்டினர் என்றாலும், இந்நேரம் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்கி இருப்பார்கள். தன் அண்ணன் என்பதால் பொறுத்துப் போகிறார் என்று தெரியும். அவர் பதற்றத்துடன் மாடியை நோக்கிச் செல்ல, துரையும் அவர் பின்னே சென்றார்.

சிறிது நேரம் சென்று சந்தியாவின் அறையிலிருந்து கதிர் வெளியே வர, "டேய்...! உனக்கு ரொமான்ஸ் பண்ண வேற நேரமே கிடைக்கலையா? தாலி கட்டுற நேரத்துல, எல்லோருக்கும் தண்ணியைக் காட்டுற...?" என்று பாலா சொன்னதும், கதிர் புன்னகைக்க, அவன் சிரிப்பே வித்தியாசமாக இருந்தது.

அவனை ஆழ்ந்து நோக்கிய சோலை, "டேய் மாப்பிள்ளை...! நீ இப்படி எல்லாம் பண்றவன் இல்லை... ஒரு நிமிஷம் எல்லாருமே அரண்டுட்டாங்க தெரியுமா?" என்றதும்,

"தெரியும். என் மாமனாரு ரொம்ப ஆடினாரு... பதிலுக்கு, நான் கொஞ்சம் ஆடினா எப்படி இருக்கும்னு காட்டத்தான் இப்படிப் பண்ணினேன். இனி அவரு அடங்குவாரு பாரு!" என்றான் கதிர்.

இதுவரை கதிரை அமைதியானவன், மென்மையானவன் என்று மட்டும் நினைத்திருந்தவர்களுக்கு, 'சாது மிரண்டால் காடு கொள்ளாது!' என்பதைக் கதிர் நிரூபித்தான்.



கதிரின் இந்தப் புதிய அவதாரத்தைப் பார்த்துச் சித்தார்த்தே திகைத்து விட்டான். அவன் வேகமாகச் சந்தியாவின் அறையை எட்டிப் பார்த்தான். அவனுக்குச் சந்தியா அழுகிறாளோ என்ற கவலை. ஆனால், அங்கே சந்தியா புன்னகையுடன் நின்றிருந்ததைப் பார்த்ததும்தான் நிம்மதியடைந்தான்.

பெரியசாமிக்கும், 'என்ன ஆச்சு? கதிர் ஏன் இப்படி நடந்து கொள்கிறான்?' என்று புரியவில்லை. அவருக்கு மாடிப்படி ஏறுவது கஷ்டம். இருந்தாலும், அவர் மாடியை நோக்கிச் செல்ல, கதிர் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தான். தன் தந்தை மேலே வருவதைப் பார்த்தவன், இன்னும் வேகமாகக் கீழே இறங்கி வந்தான்.

அவனைப் பார்த்த பெரியசாமி, மேலும் அவனை ஆராய, அவன் இயல்பாக இருப்பது போல் தான் இருந்தது. "சரி, மேடைக்குப் போ!" என்று அவனை அங்கே அனுப்பியவர், தானும் மெதுவாக மேடையில் ஏறினார்.

முகூர்த்தம் முடிய இன்னும் சில நிமிடங்களே இருந்ததால், சந்தியாவும் அழைக்கப்பட்டாள். நல்ல நேரத்தில் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் முன்னிலையில், கதிர் தங்கச் சங்கிலியால் கோத்திருந்த திருமாங்கல்யத்தைச் சந்தியாவின் கழுத்தில் அணிவித்து அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

திருமணச் சடங்கு எல்லாம் முடிந்த பிறகு, மணமக்களைக் குதிரைச் சாரட்டில் அமர வைத்து, பேண்ட் வாத்தியம் முழங்க, ஊர்வலமாக ஊரை வலம் வந்து, மாப்பிள்ளையின் வீட்டிற்கு அழைத்துச் செல்வது அவர்கள் ஊரின் வழக்கம்.

அதேபோல் கதிரையும், சந்தியாவையும் குதிரைச் சாரட்டில் அமர வைத்து, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். மற்றவர்கள் நந்தினியை மறந்திருந்தாலும், சித்தார்த் மறக்கவில்லை. நந்தினியின் வீட்டை சித்ரா, சித்தார்த்துக்குக் காட்ட,

அந்த இடத்தில் மட்டும் கிட்டத்தட்ட இருபது நிமிடங்களுக்கு மேல் நின்று வாத்தியம் முழங்க, சித்தார்த்தும், வெங்கியும் சேர்ந்து குத்தாட்டம் போட் டனர். பத்தாததற்குச் சோலை வேறு நந்தினியின் வீட்டு வாசலில் சர வெடியைக் கொளுத்தி விட, நந்தினியின் வீடே அதிர்ந்தது.

கதவெல்லாம் சாத்திக் கொண்டு தன் அறையில் காதை மூடிக் கொண்டு அமர்ந்திருந்த நந்தினி, சிறிது நேரத்திற்குப் பின் பொறுக்க முடியாமல், கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்ததும்தான், அவள் வரவிற்காகக் காத்திருந்தது போல் ஊர்வலம் மெல்ல நகர்ந்தது.

கம்பீரமான மணமகனாகக் கதிரையும், அருகில் ஒரு இளவரசியைப் போல் அமர்ந்திருந்த சந்தியாவையும் பார்த்த நந்தினியின் மனதில் பொறாமைதான் தோன்



றியது. 'நாம எவ்வளவு தடுக்கப் பார்த்தும், கல்யாணம் முடிஞ்சிடுச்சே! ஆனாலும் இவ எப்படி டாக்டர் படிப்பை முடிக்கிறான்னு பார்ப்போம். கல்யாணம் முடிந்த பிறகு படிப்பது அவ்வளவு சுலபமா என்ன?' என்று அடுத்ததற்குத் தாவினாள்.

'நந்தினியை வெளியே வரலைன்னா விட்டுடு வோமா? யார் கிட்டே....' என்பது போல் சித்தார்த் அவளை ஒரு பார்வை பார்க்க, நந்தினியின் அருகில் நின்ற அவளின் அம்மா, "யாருடி அவன்? உன்னைப் பார்த்து இந்த முறை முறைக்கிறான்?" என்றதும்,

நந்தினி, "என்னைக் கேட்டா... எனக்கு எப்படித் தெரியும்?" என்று எரிந்து விழுந்தபடி உள்ளே சென்றாள்.

'இவளுக்கு முதல்ல ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணத்தை முடிக்கணும். அப்பதான் இவ திருந்துவா!' என்று நினைத்தபடி, அவள் அம்மாவும் உள்ளே சென்றார்.

அவரவர் மனப்படிதான் வாழ்க்கை அமையும். ஆயிரம் தடைகள் வந்த போதும், சந்தியா, தான் விரும் பியவனையே கைப்பிடித்துத் தன் புகுந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள்.

நேரம் இரவு எட்டு மணி. இடம் சந்தியாவின் அறை. குளியல் அறையிலிருந்து குளித்து விட்டு வெளியே வந்த கதிர், தன் உடைகளை எடுத்து அணிய, சந்தியா கைகளில் பாத்திரங்களுடன் உள்ளே நுழைந்தாள்.

கதிர், என்ன என்பது போல் அவளைப் பார்க்க, "நைட் சாப்பாடு மாமா!" என்றாள் சந்தியா, அவளாகவே புரிந்து கொண்டு.

"இங்கே ஏன் எடுத்திட்டு வந்தே? நானே கீழே வருவேன் இல்ல...!"

"இல்ல... அம்மாதான் சொன்னாங்க, ரூமுக்கு எடுத்திட்டுப் போகச் சொல்லி. கீழே நிறையப் பேர் இருக்காங்க... அதான்!" என்ற சந்தியா, அந்த அறை யில் ஓரமாக இருந்த சின்ன டேபிளில், கொண்டு வந்த பாத்திரங்களை வைக்க, வெளியே வேதவல்லி, சந்தியாவை அழைக்கும் குரல் கேட்டது.

வெளியே சென்ற சந்தியா, திரும்பி வரும்போது, அவள் கையில் இன்னும் சில பாத்திரங்கள் கொண்டு வந்தாள். கதிர் சாப்பிட உட்கார்ந்ததும், சந்தியா, கதிருக்குப் புது வெள்ளித் தட்டில் பரிமாற,

கதிர் முதல் வாய் உணவை எடுத்துச் சந்தியாவின் வாய் அருகே கொண்டு செல்ல, நின்று டம்ளரில் நீர் ஊற்றிக் கொண்டிருந்த சந்தியா, கதிரின் செயலில் திடுக்கிட்டுப் போய், பதற்றத்தில் ஊற்றிக் கொண்டிருந்த நீரைக் கீழே சிந்தினாள்.

அவளைப் பார்த்துச் சிரித்த கதிர், "நீ என்ன அடிக்கடி ஜெர்க் ஆகிறே?" என்று கிண்டல் செய்தவன், அவளைப் பிடித்து அருகில் இருந்த சேரில் உட்கார வைத்து, கையில் வைத்திருந்த இட்லியை அவளுக்கு



ஊட்டி விட்டான். சந்தியா, வெட்கப் புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள்.

"நீயும் சாப்பிடு சந்தியா!" என்று கதிர் சொன்னதும், சந்தியா தனக்கும் தட்டில் உணவை எடுத்துக் கொண்டாள். வேதவல்லி மருமகனுக்காக இட்லி, தோசை, சப்பாத்தி என்று விதவிதமாகச் சமைத்துக் கொடுத்திருந்தார்.

சந்தியா எடுத்த முதல் வாய் உணவை, கதிர் அவனுக்கு ஊட்டி விடச் சொல்லிக் கேட்க, சந்தியா வெட்கத்துடன், 'முடியாது!' என்று மறுக்க,

"ஹே...! ப்ளீஸ் சந்தியா. இன்னைக்குத்தான் நமக்குக் கல்யாணம் ஆகியிருக்கு. இந்த நாள் நமக்கு ஸ்பெஷல் இல்லையா?" என்றதும், சந்தியா, கதிரின் முகம் பார்க்காமல், வேறு பக்கம் பார்த்துக் கொண்டு, அவனுக்கு ஊட்டி விட்டாள்.

அவளது செய்கையில் கதிரின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. மேலும் அவளைச் சங்கடத்தில் ஆழ்த்தாமல், அங்கிருந்த தொலைக்காட்சியை உயிர்ப்பித்தவன், அதைப் பார்த்துக் கொண்டே மெதுவாகச் சாப்பிட்டான்.

சந்தியா, கதிரை அடிக்கடி பார்ப்பதும், பின் தலை குனிந்து சாப்பிடுவதுமாக இருந்தாள். அவள் பார்வையை உணர்ந்தாலும், அதைக் கண்டு கொள்ளாமல், கதிர் இருந்தான்.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும், பாத்திரம் எடுக்க வந்த வேதவல்லியிடம், சந்தியா எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து விட்டு வந்தாள்.

கதிர் சென்று கட்டிலில் சாய்ந்து அமர, சந்தியா, என்ன செய்வதென்று தெரியாமல் நிற்க, அவளையும் கட்டிலில் உட்காரச் சொன்ன கதிர், சந்தியா அமர்ந்ததும், அவளது வலது கையைத் தன் கையில் எடுத்து வைத்துக் கொண்டான்.

மருதாணி வைத்திருந்த சிவந்த விரல்களை நீவி விட்டவன், "நம்ம கல்யாணம் நடந்துடுச்சு. இப்ப உனக்குச் சந்தோஷமா?" என்றதும், சந்தியா வெட்கத்துடன், ஆமாம் என்று தலையாட்ட, கதிர் மருதாணி வைத்திருந்த அவள் உள்ளங்கையில் தன் இதழ் பதித்தான்.

அவனின் முதல் முத்தம், சந்தியாவின் உடல் முழுவதும் சிலிர்க்கச் செய்ய, அவள் தன் கையை அவனிடமிருந்து உருவப் பார்க்க...

அவளின் வெட்கத்தை உணர்ந்து கையை விட்ட கதிர், கட்டிலில் சாய்ந்திருந்த தன் தலையை, அவளின் மடிக்கு இடம் மாற்றம் செய்தான்.

சட்டென்று, கதிர் மடியில் படுத்ததும், சந்தியாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அவளுக்கு ஒரே படபடப்பாக இருந்தது. அறையில் ஏசி ஓடிக் கொண்டிருந்ததால், கதவு சாத்தித்தான் இருந்தது. கதிர் அதை எல்லாம் கண்டு கொள்ளும் நிலையில் இல்லை. அவன் ஏதோ யோசனையில் இருந்தான். சந்தியாவின் விரல்களை அப்போதும் நீவி விட்டுக் கொண்டுதான் இருந்தான்.



சிறிது நேரத் தயக்கத்திற்குப் பின், சந்தியா, கதிரின் தலையை மெதுவாக வருடி விட, கதிருக்கு அது மிகவும் சுகமாக இருக்க, அவன் கண்களை மூடிக் கொண்டான்.

சந்தியா, இன்றுதான் கதிரின் முகத்தை இவ்வளவு அருகில் பார்க்கிறாள். அடர்த்தியான புருவமும், பெரிய விழிகளும், வழவழப்பான கன்னங்களும், அளவான மீசையும், சிவந்த இதழ்களும் என்று ஒவ்வொன்றாக ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இருவரும் ஏதோ ஒரு மோன நிலையில் இருந்தனர். சந்தியா, அவன் தலை முடியை வருடி விட்டபடி இருக்க, திரும்பிப் படுத்த கதிர், சந்தியா புடவை கட்டியிருந்ததால், தெரிந்த' அவளின் இடையில் விரல்களால் கோலம் வரைய, சந்தியாவின் உடலெங்கும் புது ரத்தம் பாய்ந்தது போல் இருந்தது. அதோடு அவளுக்கு மிகவும் கூச்ச மாகவும் இருந்தது.

அவளால் கதிரின் கையைத் தள்ளி விடவும் முடியவில்லை. தடுக்கவும் பயமாக இருந்தது. சந்தியா கூச்சம் தாங்காமல் நெளிய ஆரம்பிக்க, அவளின் அசை வில் அதுவரை மோக வலையில் இருந்த கதிர் வெளியே வந்தான்.

'இவ பக்கத்தில் இருந்தா, நம்ம கண்ட்ரோல் எல்லாம் போயிடுது!' என்று நினைத்தவன், அதற் காக உடனே அவளிடமிருந்து விலகவில்லை. அப்படி விலகினால், அது சந்தியாவை வருத்தப்பட வைக்கும்

என்று தெரியும். அதனால், சந்தியாவிடம் சிறிது நேரம் வேறு பேசினான்.

"இந்நேரம் சித்து, பாலா எல்லாம் டிரெயின்ல ஏறி இருப்பாங்க. மதுரையில் மீனாட்சி அம்மன் கோயில் பார்த்திட்டுக் கிளம்பறதாச் சொல்லி இருந்தாங்க. அதனாலதான் மதியம் சாப்பிட்டதுமே கிளம்பிட்டாங்க."

"ம்ம்... ஆமாம். என் கிட்டேயும் சொன்னாங்க," என்றாள் சந்தியா.

சந்தியாவின் முகத்தைப் பார்த்த கதிர், "கல்யாண நாள் அதுவுமா அழுதிட்டே இல்ல நீ? நாம எதிர்பார்க்காதது எல்லாம் நடந்துடுச்சு!" என்றான் வருத்தத்துடன். சந்தியா பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். ஆனால், அவள் கைகள் கதிரின் தலையை வருடுவதை மட்டும் நிறுத்தவில்லை.

"சந்தியா... உனக்குக் காலேஜுக்குத் தேவையான டிரஸ் எல்லாம் நாளைக்கு எடுத்துத் தயரா வச்சுக்கோ. இனி நான் உன்னைப் படிக்க வைக்கிறேன். அதனால உங்க அப்பா கிட்டே பணம் எதுவும் வாங்காதே!

"அப்பா கிட்டே நீ காலேஜ்ல போட்டுக்கிற மாதிரி மெலிசாகத்தான் தாலிச் செயின் செய்யச் சொல்லியிருந்தேன். அதனால் அது ஒண்ணும் பிரச்சினை இல்லை!" என்றவன், சந்தியாவின் மார்பின் மீதிருந்த தாலியைக் கையில் எடுத்துப் பார்க்க, அவன் விரல்களின் தீண்டலில் சந்தியாவிற்கு மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. ஆனால், அதையெல்லாம் கவனிக்கும் நிலையில் கதிர் இல்லை. அவன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.



"உனக்கு ரொம்பத் தேவையான நகைகளை மட்டும் எடுத்திட்டு, மிச்சத்தை உங்க வீட்டிலேயே கொடுத்துட்டு வந்திடு!" என்றான்.

துரையின் முழுச் சம்மதம் இல்லாமல் நடந்த திருமணத்தில், அவர் கொடுக்கும் சீரை மட்டும் வாங்கிக் கொள்ள கதிர் விரும்பவில்லை. அதனால் அப்படிச் சொல்கிறான் என்று சந்தியாவிற்குப் புரிந்தது.

காலையில் தன் தந்தை அடித்த கூத்துக்குக் கோபப்படாமல் இந்த அளவு பொறுமையாகப் பேசு கிறானே... அதுவே பெரிய விஷயம்! என்று சந்தியா நினைத்தாள். ஆனால், அவளுக்குத் தெரியாது, திரு மணம் முடிந்து, சந்தியா வீட்டிற்கு வர மாட்டேன் என்று கதிர் சொன்னது.

மறு வீட்டிற்குச் செல்லும் நேரத்தில், தன் தந்தை யிடம் வந்த கதிர், "நான் அங்கே போக மாட்டேன்!" என்றான் எங்கோ பார்த்துக் கொண்டு.

அவன் சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்ட பெரிய சாமியும், லக்ஷ்மியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "உன் மாமனாருக்குத்தான் எது எப்போ செய்யறதுன்னு தெரியலைன்னா, நீயுமா கதிரு? இன்னைக்கு நீங்க ரெண்டு பேரும் அங்கேதானே தங்க ணும்?" என்றார் பெரியசாமி கோபமாக.

"நீ இன்னைக்குக் கண்டிப்பா அங்கேதான் தங்கணும். நீ அங்கே போகலைன்னா, கேட்கிறவங்களுக்குப் பதில் சொல்ல முடியாது. இன்னைக்கு ராத்திரி சடங்கு வேற இருக்கும்!" என்றார் லக்ஷ்மியும் தவிப்பாக.

"என்ன முறை? என்ன சடங்கு? அது எல்லாம் வேண்டாம்!" என்றான் கதிர் எரிச்சலாக.

அவன் எதற்கு அப்படிச் சொல்கிறான் என்று பெரியசாமிக்குப் புரிந்தது. அதனால் அவர், "நீ போ கதிரு... எந்தச் சடங்கும் வைக்காம நான் பார்த்துக்கிறேன். நீ இன்னைக்கு ஒரு முறைக்கு மட்டும் அங்கே போய்த் தங்கிட்டு வந்திடு. பிறகு அங்கே போறதும், போகாததும் உன் விருப்பம்!" என்றார்.

தன் தந்தை சொன்னதற்காகத்தான் கதிர் இங்கு வந்திருந்தான். அதைச் சொல்லி சந்தியாவை வருத்தப்பட வைக்க விரும்பாமல், அமைதியாக இருந்தான்.

சந்தியாவின் மடியில் படுத்திருந்த கதிர், அவள் முகத்தைப் பற்றி அருகில் இழுத்து, அவள் நெற்றியில் இதழ் ஒற்ற, அவளின் இதழ்களும் 'வா!' என்று அழைப்பதைப் போல் இருக்க, கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கியவன், அவள் மடியிலிருந்து விலகிப் படுத்து, "ரொம்ப நேரம் ஆயிடுச்சு. நீ போய்த் தூங்கு சந்தியா!" என்றான்.

கட்டிலிலிருந்து எழுந்த சந்தியா, பெரிய விளக்கை அணைத்து விட்டு, இரவு விளக்கைப் போட்டு விட்டுக் கதவைத் திறந்து கொண்டு பக்கத்து அறைக்குச் சென்றாள்.



சந்தியாவுக்குக் கதிருடன் நடந்த திருமணமே போதும். அவள் இப்போதைக்கு வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. அவளுக்குக் காலையிலிருந்து கல்யாண அல்லச்சல் வேறு. அதனால் படுத்ததும் உறங்கி விட்டாள். கதிர்தான் சிறிது நேரம் புரண்டு கொண்டே இருந்தான். பிறகு, களைப்பின் காரணமாக அவனுமே சீக்கிரம் உறங்கி விட்டான்.

வேதவல்லியைத் தேடி மாடிக்கு வந்த துரை, சந்தியா தனியாக வேறொரு அறையில் படுத்திருப்பதைப் பார்த்து, "ஏன் தனியாப் படுத்திருக்கு?" என்றதும், அவரைப் பார்த்து முறைத்த வேதவல்லி, "இன்னைக்கு நாள் நல்லா இல்லையாம். அண்ணன் சொன்னாங்க, அதுக்குத்தான்!" என்றார். ஆனால், துரை அதை நம்பவில்லை.

அவரையே பார்த்த வேதவல்லி, "ரெண்டு பேரும் ஆளுக்கு ஒரு ஊர்ல இருக்கப் போறாங்க. ரெண்டு நாள் சேர்ந்திட்டு அப்புறம் பிரிஞ்சு இருந்தா கஷ்டமாக இருக்காதா? அதனால வேண்டாம்னு கதிர் நினைச்சிருக்கும்!" என்றார்.

"ஒழுங்காப் படிப்பை முடிச்சதும் கல்யாணத்தை வச்சிருக்கலாம். பாவம், சின்னஞ் சிறுசுங்க. இன்னும் எவ்வளவு நாளைக்குப் பிரிஞ்சு இருக்கணுமோ...?" என்று முனகிக் கொண்டே வேதவல்லி அவரின் வேலையைப் பார்க்க,

"ஏன், உன் அண்ணன் மகனைச் சென்னைக்கு வேலையை மாத்திட்டு வரச் சொல்லு!" என்று துரை வாயை விட,

"நல்லா என் வாயில் வந்திரும். அவன் மாம னாருதான் அங்கே கம்பெனியை வச்சு நடத்துறது, கேட்டதும் வேலையை மாத்திக் கொடுக்க...!" என்று வேதவல்லி கொதிக்க, இதற்கு மேல் பேசினால் அவ்வளவுதான் என்று உணர்ந்த துரை, வேகமாகக் கீழே இறங்கிச் சென்றார்.

தன் பெண் கதிரோடு சேர்ந்து ஊர் சுற்றுவதாக நினைத்துத்தான் அவர் வேகமாகத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். 'ஆனால், அப்படி ஊர் சுற்றுபவனாக இருந்தால், திருமணம் முடிந்த பிறகு தன் மனைவியை விட்டு விலகி இருப்பானா? நாம்தான் யாரோ சொன்னதை வைத்துத் தவறாக நினைத்து விட்டோமோ...!' என்று முதன் முறையாக யோசிக்க ஆரம்பித்தார்.

கதிர், மறுநாள் காலை எழுந்ததும், ஓடிக் கொண்டிருந்த ஏசியை அணைத்தவன், அந்த அறையின் ஜன்னல்ககளைத் திறந்து விட்டுக் குளியல் அறைக்குள் சென்றான். அவன் திரும்பி வந்த போது, சந்தியா அங்கே இருந்தாள்.

தலை குளித்து, இன்னும் சரியாகக் காயாததால், கூந்தலை விரித்து விட்டிருந்தாள். அதிகாலையில் பூத்த புத்தம் புது மலரைப் போல் இருந்தவளைப் பார்த்ததும், அணைக்கத் துடித்த கரங்களை அடக்கினான் கதிர். அவனுக்கு நேற்றே புரிந்திருந்தது, ஆரம்பித்தால் நிறுத்துவது கஷ்டம் என்று.

சந்தியா, கதிரைப் பார்த்துப் புன்னகைத்தவள், அவனுக்குக் கொண்டு வந்த காபியை ஊற்றிக்



கொடுக்க, அவளைப் பார்த்தபடியே அதைக் குடித்து முடித் தான். சந்தியா, அவள் உடைகளை எடுத்துப் பெட்டியில் அடுக்கி வைத்தாள்.

கதிர் குளிக்கக் கிளம்பியதும், "நான் போய் டிபன் எடுத்திட்டு வரேன்," என்று சந்தியாவும் எழுந்து கொள்ள,

"ஹே...! எதுக்கு என்னை ரூம் உள்ளேயே அரெஸ்ட் பண்ணி வச்சிருக்கே? நான் கீழேயே வந்து சாப் பிட்டுக்கிறேன்!" என்று கதிர் சொன்னதும், சந்தியாவும் சரி என்றாள்.

துரை, கதிரிடம் எப்படி நடந்து கொள்வாரோ என்று பயந்தே, அவனை அறையிலேயே வைத்திருக்கச் சொல்லி, வேதவல்லி சொல்லியிருந்தார்.

கதிர் குளித்து முடித்துத் தயாரான போது, சந்தியா வும் பட்டுப் புடவை உடுத்தித் தலையைப் பின்னி, மல்லிகைப் பூ வைத்திருந்தாள்.

தலை நிறையப் பூவும், நெற்றி வகிட்டில் குங்கும மும் வைத்து, மங்களகரமான அழகோடு நின்றவளைப் பார்த்ததும்,

"ஹே...! என்னை ஒழுங்கா இருக்க விட மாட்டே போலிருக்கே...!" என்று சொல்லிக் கொண்டே கதிர் அவளை அணைக்க, சந்தியா புன்னகையுடன் அவன் மார்பில் சாய்ந்தாள்.

இருவருக்கும் விலகவே மனமில்லை. சந்தியாவை அணைத்தபடியே, "என்ன, உலக அதிசயமா இருக்கு! நீ வாயைத் திறந்தா மூடவே மாட்டே... ஆனா இப்பப்

பேசவே மாட்டேங்கிறே?" என்று கதிர், அவளை வம்பிழுக்க,

"அது அப்படித்தான்!" என்று கிசுகிசுப்பாகச் சொன்ன சந்தியா, இன்னும் அழுத்தமாகத் தன் கணவனின் மார்பில் ஒன்றினாள்.

கதிரும், சந்தியாவும் கீழே இறங்கிச் சென்றபோது, அங்கே உறவினர்கள் அனைவரும் பரபரப்பாக ஆளுக்கொரு வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இன்று மாப்பிள்ளை வீட்டினருக்குப் பெண் வீட்டில் விருந்து கொடுக்க வேண்டும்... அதற்குத்தான் இந்தப் பரபரப்பு.

கதிர், ஹாலில் அமர்ந்து உறவினர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். வேதவல்லி, அவனைச் சாப்பிட அழைத்ததும், எழுந்து வந்தவன், "மாமா சாப்பிட்டாங்களா அத்தை?" என்று விசாரிக்கவும் மறக்கவில்லை.

"இல்ல கதிரு... அவரு இன்னும் குளிக்கலை. ஏதோ வேலையா இருக்காரு. நீயும், சந்தியாவும் முதல்ல சாப்பிடுங்க!" என்று வேதவல்லி உணவைப் பரிமாற, உள் அறையிலிருந்து துரை இதையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

கதிர் சாப்பிட்டதும், "நான் கொஞ்சம் நேரம் வெளியே போயிட்டு வரேன்," என்றவன், சோலையின் கடைக்குக் கிளம்பிச் சென்றான்.

மதிய விருந்துக்குக் கதிரின் குடும்பத்தாரும், உறவினர்களும் வந்தனர்.



சுபாஷைப் பார்த்ததும், சற்று இளகி இருந்த துரை, மீண்டும் முறுக்கிக் கொண்டார்.

அதற்கு ஏற்றாற்போல் வாசு வேறு, "அன்னைக்கு என்னமோ அந்தக் குதி குதிச்சே! இப்ப நீயே உன் பெண்ணை அவங்க வீட்ல செஞ்சிருக்கே...?" என்று கிண்டலாகக் கேட்டதும், துரையின் முகம் கோபத்தில் சிவந்தது.

மதிய விருந்து முடிந்து கிளம்பிய கதிரின் குடும்பத்தாருடன் சந்தியாவும் கிளம்பிய போது, பெற்ற மகளைப் பிரியும் வருத்தத்தில், துரையின் கண்களும் கலங்கத்தான் செய்தது. அதுவும் சந்தியா அப்படியொரு அழுகை அழுதாள்.

சாதாரணமாக என்றால், அவள் அப்படி அழுதிருக்க மாட்டாள். அவளுக்குத் தன் தந்தையின் முழு விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டு செல்வது, மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

"நீ என்ன வெளியே யார் வீட்டுக்கோ வாக்கப்பட்டுப் போற மாதிரி இப்படி அழறே? உன் தாய் மாமா வீட்டுக்குத்தானே போறே? அதுவும் அடுத்த தெருவில் இருக்கிற வீட்டுக்கு...!"

"நீ அங்கே இருந்து அம்மான்னு கூப்பிட்டா, உங்க அம்மா இங்கிருந்து ஓடி வரப் போறா! இதுக்கு இம்புட்டு அழுகையா?" என்று நிலவரம் தெரியாமல் உறவினர்கள் கேலி செய்ய, சந்தியாவும் அழுகையை நிறுத்தி விட்டுத் தன் கணவன் வீடு சென்றாள்.

முன் தினமே புது மருமகள் செய்ய வேண்டிய சடங்கு, சம்பிரதாயங்களைச் சந்தியா செய்திருந்ததால், லக்ஷ்மி, அவளைக் கதிரின் அறைக்குச் சென்று ஓய்வு எடுக்கச் சொன்னார். கதிரும் அவளுடன் சென்றான்.

சந்தியா, நேராகச் சென்று கட்டிலில் விழுந்தவள், அதன் பிறகு ஒரே அழுகைதான். கதிரும் சமாதானம் செய்து களைத்து விட்டான். ஆனால், சந்தியாவின் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை. சிறிது நேரம் சென்று, அழுதபடியே சந்தியா உறங்கி விட, கதிரும் தரையில் ஒரு தலையணையைப் போட்டுப் படுத்து விட்டான்.

மாலையில் எழுந்த சந்தியாவிற்கு, முதலில் ஒன்றும் புரியவில்லை. முதலில் இது காலையா, மாலையா என்றே தெரியவில்லை. சுற்றிக் கடிகாரம் எங்கிருக்கிறது என்று பார்த்த போதுதான், அது கதிரின் அறை என்பதே நினைவுக்கு வந்தது.

பின் ஒவ்வொன்றாக நினைவுக்கு வர, 'அழுதிட்டே தூங்கிட்டோம் போலிருக்கு!' என்று நினைத்தவள், தன் கணவன் எங்கே என்று தேட, கதிர் கீழே படுத்து, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

அவனைப் பார்த்ததும், சந்தியாவுக்கு அவள் குறும்புத்தனம் தலைதூக்க, 'இரு மாமா, வரேன்!' என்று நினைத்தவள், கீழே சென்று கதிரின் அருகில் நெருங்கிப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள்.

சிறிது நேரம் வரை ஒன்றும் நடக்கவில்லை. சந்தியா மெதுவாகக் கண் திறந்து பார்க்க, கதிர் அப்போதும் தூங்கிக் கொண்டுதான் இருந்தான்.



'இது வேலைக்காகாது!' என்று நினைத்தவள், மெதுவாகத் தன் கால் கட்டை விரலால், கதிரின் பாதத்தை வருட, கதிரின் தூக்கம் கலைந்தது. சந்தியா, நல்ல பிள்ளை போல் கண்களை மூடிக் கொண்டாள்.

தன் பெரிய விழிகளைக் கொஞ்சமாகத் திறந்த கதிர், வெகு அருகில் சந்தியாவைப் பார்த்ததும், புன்னகையுடன் அவளை அணைத்துக் கொண்டான். சந்தியாவுக்கு உடலெங்கும் புதுவித மயக்கம். கதிர் அதோடு நிறுத்தாமல், மேலும் முன்னேற, இப்போது சந்தியாவுக்குத்தான் திண்டாட்டம்.

சந்தியாவின் கழுத்து, நெற்றி, கன்னம் என்று முத்தமிட்டுக் கொண்டே வந்த கதிர், அவள் இதழ்களை நெருங்கும் வேளையில், இருவரின் உதட்டுக்கும் சிறு நூல் அளவே இடைவெளி இருந்தபோது, "மாமா! கதவு திறந்திருக்கு!" என்று சந்தியா முனக,

குளிர் நீரை முகத்தில் கொட்டியது போல் கதிர் துள்ளி எழுந்தான். எழுந்த வேகத்தில், "ஹே...! நீ எப்படி இங்கே வந்தே?" என்று சந்தியாவைப் பார்த்துக் கேட்க, அப்போது சந்தியாவின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

'பெண்டாட்டியைப் பார்த்துக் கேட்கிற கேள்வியைப் பாரு! தூக்கத்தில்தான் கட்டிப் பிடிச்சிருக்கு போல...!' என்று நினைத்தவள், பதில் சொல்லாமல் எழுந்து கட்டிலுக்குச் செல்ல,

கதவைச் சாத்தி விட்டு வந்த கதிர், "உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா? கதவு திறந்திருக்கும்

போது இப்படித்தான் கிட்ட வந்து படுப்பியா? யாராவது மாடிக்கு வந்திருந்தா...?" என்ற சந்தியாவைத் திட்ட,

அவனைப் பார்த்து முறைத்த சந்தியா, "அதெல் லாம் விடுங்க... நீங்க கொடுக்க வந்ததைக் கொடுங்க!" என்றதும், கதிர் ஒன்றும் புரியாமல் பார்க்க,

கண் சிமிட்டி, உதடு குவித்து, முத்தம் என்று சந்தியா ஜாடை செய்ய, "அடிங்க... கொழுப்பைப் பாரு...!" என்று கதிர் அவளை அடிக்க வர,

"சரி. நீங்க கொடுக்கலைன்னா பரவாயில்லை. நான் கொடுக்கிறேன்!" என்று சந்தியாவும் வர, "அடிப்பாவி!" என்று அலறியபடி கதிர் திரும்பி ஓட, சந்தியா அவனைத் துரத்த... என்று இருவரும் சிறிது நேரம் கட்டிலைச் சுற்றி ஓடினார்கள்.

சிறிது நேரம் ஓடி விட்டு, "முடியலை...!" என்று கதிர் கட்டிலில் விழ, சந்தியாவும் அவன் அருகில் படுத்தாள். இருவரும் காரணமே இல்லாமல் சிறிது நேரம் சிரித்துக் கொண்டிருந்தனர். பின் சந்தியாவின் பக்கம் திரும்பிய கதிர், அவள் கேட்டதைக் கொடுத்தான்.

ஏதோ சொல்லப் போகிறான் என்று நினைத்துச் சந்தியா பார்க்க, கதிர் அவள் இதழில் தன் இதழை அழுத்த மாகப் பதித்தான்.

முத்தம் என்பது முடிவுரை அல்ல... அது தாம்பத் தியத்தின் முன்னுரை என்பதை அறியாத இரண்டு இள உள்ளங்களும், தங்கள் முத்தத்தில் திளைக்க... அது முடிவு பெறாமல் அடுத்த கட்டத் தேடுதலை இருவ ருக்கும் தூண்டியது.



விலக மனமில்லாமல் விலகிய கதிர், "எனக்கு நீ இப்பவே வேணும் போல இருக்கு சந்தியா..." என்றான் ஏக்கமாக.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட சந்தியாவிற்கு... அவன் உணர்ச்சிகளோடு விளையாடி விட்டோம் என்று புரிந்தது.

அவளால் இப்போது என்ன பதில் சொல்ல முடியும்? படிப்பையும் முடிக்காமல்... ஆளுக்கொரு ஊரில் இருந்து கொண்டு தாம்பத்திய வாழ்க்கையைத் தொடங்க முடியுமா...! அப்படியே தொடங்கினாலும், இன்று கூடி நாளை பிரிவது கதிருக்கு எவ்வளவு துன்பமாக இருக்கும் என்று நினைத்தவள்... மௌனமாகத் திரும்பிப் படுத்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

கதிருக்குத் தன் உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டு வருவது பெரும் போராட்டமாக இருந்தது. அவன் கண் மூடித் தன்னைச் சமன்படுத்த முயன்றான்.

அப்போது கீழிருந்து லக்ஷ்மி அவர்களை அழைக்கும் குரல் கேட்க... வேகமாக எழுந்த கதிர் முகம் கழுவி, வேறு உடை மாற்றியவன், "நான் கீழே போறேன். நீ சீக்கிரம் ரெடியாகி வா, சந்தியா!" என்று சொல்லிச் சென்றான்.

சந்தியாவும் அழுதது தெரியாமல் இருக்க... ஒரு குளியல் போட்டு... வேறு புடவை கட்டிப் பளிச்சென்று கீழே செல்ல... அவளை ஆசையாகப் பார்த்த லக்ஷ்மி, அவளுக்குத் தலை நிறையப் பூவை வைத்து விட்டார்.

கதிரும், சந்தியாவும் ஒருவரை ஒருவர் பார்ப்பதைத் தவிர்த்தனர்.

சந்தியா எல்லோருக்கும் காபி கொண்டு வந்து கொடுக்க...

ஹாலில் கதிர் அருகில் அமர்ந்திருந்த சுபாஷ், "என்ன மாப்பிள்ளை... மாடியில கபடி விளையாண்ட சத்தம் கேட்டது..." என்று கிண்டலாகச் சிரிக்க...

தானும், சந்தியாவும் மாடியில் ஓடியதைத் தான் சொல்கிறார் என்று புரிந்த கதிர், புன்னகையை மட்டும் பதிலாகத் தர... சந்தியா வெட்கத்துடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

அதன் பிறகு கதிரும், சந்தியாவும் இயல்பாக இருந்தனர். மாலை சொந்த பந்தம் எல்லாம் ஒவ்வொரு வராகக் கிளம்பிச் செல்ல... இரவு உணவிற்குக் குடும்பத் தார் மட்டுமே இருந்தனர்.

இரவு உணவுக்கு என்ன செய்வது என்று பேச்சு வந்தபோது... "வீட்டுக்குப் புதுசா வந்த மருமகதான் சமைக் கணும்..." என்று சுபாஷ் சொல்ல... சந்தியா அதிர்ந்தாள்.

பின்னே அவளுக்குச் சாப்பிட மட்டும்தான் தெரியும். அவள் வீட்டில் அம்மாவும், அப்பத்தாவுமே எல்லா வேலைகளையும் செய்வார்கள்.

சந்தியா முழிப்பதைப் பார்த்துச் சிரித்த கதிர், "நீங்க தாங்குவீங்க மச்சான்!" என்றான் மொட்டையாக.

"ஹே... என்னை வச்சுக் காமெடி பண்றியா? மொட்டையா... தாங்குவேன்னு சொன்னா எதுக்கு? என்ன தாங்குவேன்? அதைச் சொல்லு முதல்ல!" என்று சுபாஷ் கேட்க...



"இல்ல. காவேரி சமைச்சதைச் சாப்பிட்டே... நீங்க நல்லாத்தானே இருக்கீங்க. அதனால சந்தியா சமையலைச் சாப்பிட்டாலும் உங்களுக்கு ஒன்னும் ஆகாது..." என்றான் கதிர், அடக்கிய சிரிப்புடன்.

"ஹே... உன் பொண்டாட்டியைப் பத்திப் பேசும் போது... என்னை எதுக்கு வம்பிழுக்கிற?" என்று காவேரி சண்டைக்கு வர...

"ஆமாம் மாப்பிள்ளை. பொதுவுல இப்படி உண்மை யெல்லாம் சொல்லக் கூடாது. ஏதோ எங்க அம்மா இருக்கிறதுனால என் பாடு ஓடுது..." என்று சுபாஷ் உண்மையைப் போட்டு உடைக்க...

"ஓ... இதுதான் நீங்க நல்லா இருக்கக் காரணமா!" என்று கதிர் போலியாக வியக்க...

அதைக் கேட்டு மற்றவர்கள் சிரிக்க... காவேரி சுபாஷை முறைத்தாள்.

குடும்பத்துடன் சேர்ந்து பேசி எல்லோரும் சந்தோஷமாக உணவு அருந்தினர். பெரியசாமிக்கு மிக வும் மகிழ்ச்சியாக இருந்தது. மகன், மகளோடு புது வரவான மருமகன், மருமகள் மற்றும் பேரனையும் சேர்ந்து பார்ப்பதில் உண்டான மகிழ்ச்சி.

இரவு உணவிற்குப் பிறகு சந்தியாவின் தலையில் மேலும் கொஞ்சம் பூவை வைத்த லக்ஷ்மி... அவள் கையில் பால் செம்பைக் கொடுத்து, "சீக்கிரம் நம்ம வீட்டுக்குப் பேரனோ... பேத்தியோ வரட்டும்..." என்று வாழ்த் தியவர், எதேச்சையாகத் திரும்பிப் பார்க்க... அங்கே கதிர் அவரைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தான்.

'ஐயோ! இவன் இருக்கிறதைப் பார்க்காம வாய் விட்டுட்டோமே...' என்று நினைத்த லக்ஷ்மி வேகமாக அங்கிருந்து செல்ல... அதைப் பார்த்துச் சந்தியாவிற்குச் சிரிப்பு வந்தது.

கதிர் மாடி ஏற... சந்தியாவும் அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

அறைக்குள் வந்ததும்... சந்தியா கதிரிடம் பாலைக் கொடுக்க... அதை வாங்கி ஒரு வாய் பருகியவனின் முகம் அஷ்டகோணலாக... பாலைச் சந்தியாவிடம் நீட்டினான்.

'எதுக்கு இப்படி மூஞ்சிய சுளிக்கிறாங்க...' என்று நினைத்த சந்தியா, அதை வாங்கிக் குடிக்க...

அது பால் போல் இல்லை. பாயசம் போல் இருந்தது. பாலோடு முந்திரி, பிஸ்தா இன்னும் என்னென்ன சேர்க்க முடியுமோ எல்லாவற்றையும் லக்ஷ்மி அதில் சேர்த்திருந்தார்.

"எங்க அம்மாவுக்கு இந்தப் பாலைக் குடிச்சத் தெம்போட, நாம முதலிரவு கொண்டாடி... நாளைக்கே அவங்ககிட்ட புஷ்டியா ஒரு பேரனைக் கொடுத்திட ணும்னு திட்டம். அதுதான் இப்படி..." என்று கதிர் சிரிக்காமல் சொல்ல... அதைக் கேட்ட சந்தியா விழுந்து விழுந்து சிரித்தாள்.

அவள் சிரிப்பதைப் பார்த்தபடியே கதிர் கையில் ஒரு தலையணையும், போர்வையையும் எடுத்தவன்...

"சரி. நீ இங்க தூங்கு. நான் மாடிக்குப் போறேன்..." என்றதும்,



முகம் மாறிய சந்தியா, "நீங்களும் இங்கேயே தூங்குங்க மாமா..." என்றாள்.

தன் தலைக்கு மேல் இரண்டு கைகளையும் தூக்கிக் கும்பிட்ட கதிர், "அம்மா... தாயே! ஆளை விடு. பொண் டாட்டிய பக்கத்தில வச்சிக்கிட்டு ஒண்ணும் பண்ணாமத் தூங்குற அளவுக்கு நான் நல்லவன் இல்லை..." என்று மேல் மாடிக்குச் சென்று விட... சந்தியா கட்டிலில் தனியாகப் படுத்தாள்.

மறுநாள் காலை எழுந்த கதிர், சந்தியா இருவருமே அமைதியாக இருந்தனர். அதற்குக் காரணம் இன்று இரவு அவர்கள் ஊருக்குக் கிளம்புகின்றனர். அதோடு நாளை பிரிந்து அவரவர் பாதையில் செல்ல வேண்டுமே என்ற கவலை.

பதினோரு மணி போல் அவர்கள் அறைக்கு வந்த சந்தியா... கசகசப்பாக இருக்கிறது என்று அவள் நகைகளைக் கழற்றியவள்... "என்னங்க... நாம ஊருக்குப் போறதுக்கு முன்னாடி, எங்க வீட்டுக்கு ஒரு தடவை போயிட்டு வரலாமா?" என்றாள், கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த கதிரைப் பார்த்து.

அவ கேட்டதற்குப் பதில் சொல்லாமல், "உனக்குத் தேவையான நகையை மட்டும் எடுத்துக்கிட்டு, மிச்சத்தை உங்க வீட்டுலயே குடுத்துட்டு வான்னு சொன்னேனே..." என்றான் கதிர், அவள் அணிந்திருந்த அதிகப்படியான நகைகளைப் பார்த்து.

"ஆமாம், சொன்னீங்கதான். ஆனா... அம்மாதான் மறு வீட்டுக்குப் போகும்போது எல்லாத்தையும் தான்

எடுத்துக்கிட்டுப் போகணும்னு சொன்னாங்க..." என்றாள் சந்தியா.

"அப்ப நான் சொன்னதுக்கு மதிப்பு இல்லை. நான் அவ்வளவு சொன்ன பிறகும், நீ எல்லா நகையையும் எடுத்துட்டு வந்திருக்க... ஏற்கெனவே உங்க அப்பா என்னை மதிக்க மாட்டேங்கிறார். இனி உன் நகைக் காகத்தான் உன்னைக் கல்யாணம் பண்ணினேன்னு சொன்னாலும் சொல்லுவார்..." என்று கதிர் கோபமாகப் பேச....

"ஏன் மாமா நீங்களாக் கற்பனை பண்ணிட்டுப் பேசுறீங்க... அப்பா அப்படியெல்லாம் நினைக்க மாட்டார்!" என்று சந்தியா தன் தந்தைக்குப் பரிந்து பேசியதும், கதிரின் கோபம் எல்லையைக் கடந்தது.

"உங்க அப்பாவைப் பத்தித் தானே பேசுற..." என்று சந்தேகமாகக் கேட்டவன் தொடர்ந்து, "ஆமாம், அவர் ரொம்ப நல்லவர். நான்தான் கெட்டவன். என்னை உங்க அப்பாவுக்குச் சின்ன வயசில இருந்து தெரியும். நானும் நீயும் ஒரே ஊர்லதான் இருந்தோம். எத்தனை தடவை நான் உன் பின்னாடி சுத்துறதை உங்க அப்பா பார்த்தார்.

"என்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்சிருந்தும் என்னை ஏதோ பொம்பளை பின்னாடி சுத்துறவன் மாதிரி உங்க அப்பா பேசலை... சரி, கல்யாணம் நிச்சயம் ஆன பிறகாவது சும்மா இருந்தாரா? வேணும்னே என்னை மண்டப வாசல்ல வச்சு அவமானப்படுத்தல...

"என் பொறுமைக்கும் ஒரு அளவு இருக்கு. அவர் என்னை அலட்சியப்படுத்தினபோது எல்லாம்... போய்யா



நீயும் வேண்டாம். உன் பொண்ணும் வேண்டாம்னுதான் நினைப்பேன். ஆனா உன்னை விட முடியலை. அதோட, உன் இடத்தில வேற எந்தப் பெண்ணையும் என்னால நினைக்க முடியலை. அதனாலதான் அவர் செஞ்ச அவமானத்தை எல்லாம் பொறுத்துக்கிட்டேன்.

"ஆனா... நான் இனியும் அப்படியிருப்பேன்னு எதிர்பார்க்காதே. நான் அவர் மேல ரொம்ப மரியாதை வச்சிருந்தேன். ஆனா, அதை அவர் காப்பாத்தல. இனி, அவரா தன் தவறை உணர்ந்து வராம... நான் உங்க வீட்டு வாசப்படி மிதிக்க மாட்டேன். நான் நேத்தே உங்க வீட்டுக்கு வந்திருக்க மாட்டேன்தான். ஆனா... சொந்த பந்தம் முன்னாடி எனக்கு அவரை விட்டுக் கொடுக்க மனசு வரலை.

"இனி நீதான் புரிஞ்சு நடந்துக்கணும் சந்தியா..." என்ற கதிர், அந்த அறையை விட்டு வெளியே செல்ல...

சந்தியாவுக்கு ஏதோ புயல் அடித்து ஓய்ந்தது போல் இருந்தது. கதிருக்கும் துரைக்கும் இடையே நடக்கும் போரில்... மத்தளம் போல் இரண்டு பக்கமும் அடி வாங்குவது சந்தியாதான்.

மதிய உணவு முடிந்ததும் அறைக்கு வந்த கதிர்... அங்கே சந்தியா தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்தவன், "நீ உங்க வீட்டுக்குப் போகலை..." என்றான் சாதாரணமாக.

"எப்படிப் போறது? கல்யாணமான ரெண்டாவது நாளே தனியா வந்தா என்ன நினைப்பாங்க?" என்று சந்தியா கண் கலங்க...

"சரி வா. நான் உன்னை உங்க வீட்டுல விடுறேன். ஆனா உள்ளே எல்லாம் வர மாட்டேன்..." என்று கதிர் சொன்னது... சந்தியாவுக்குக் கோபத்தை வரவழைத் தாலும்... வேறு வழியில்லாமல் அவனுடன் சென்றாள்.

அவள் வீட்டுக்குச் செல்வதற்கு முன் பெரிய சாமியிடம் சென்ற சந்தியா, "கதிர் மாமா நகைகளை எங்க வீட்ல வைக்கச் சொல்றாங்க மாமா... நான் எங்கே வைக்கட்டும்?" என்று அவரிடமும் ஒரு தடவை கேட்க...

"அவன் சொல்றதும் சரிதான்மா... எனக்கும் உடம்பு முடியலை. நகையைப் பத்திரமாப் பாதுகாக்க எல்லாம் முடியாது. நீ உங்க வீட்லயே வச்சுக்க..." என்று பெரியசாமியும் சொல்லி விட... சந்தியா நகைகளை எடுத்துக் கொண்டு கதிருடன் சென்றாள்.

அவளை வாசலில் இறக்கி விட்ட கதிர், "திரும்ப வரும்போது... உங்க அம்மாவோட வந்துடு!" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

சாப்பிட்டு விட்டு சந்தியாவைப் பார்க்கப் போவோமா... அவள் இங்கு வருவாளா... என்று யோசித்துக் கொண்டிருந்த வேதவல்லி, சந்தியாவே வந்ததும் சந்தோஷமாக வரவேற்றார்.

சந்தியா மட்டும் தனியாக வருவதைப் பார்த்து, "எங்கம்மா! உன் மாப்பிள்ளை கூட வரலை...?" என்று அப்பத்தா கேட்க...

"வந்தாங்க அப்பத்தா. அவங்கதான் கொண்டு வந்து விட்டாங்க. ஏதோ வெளியே போற வேலை இருக்குன்னு போயிட்டாங்க..." என்று சந்தியா சமாளிக்க... அதை யாரும் நம்பவில்லை.



வேதவல்லி துரையைக் குற்றம் சாட்டும் பார்வை பார்த்தார்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த சந்தியா, தன் கைப்பையில் வைத்திருந்த நகைகளை எடுத்துக் கொடுக்க...

"இதை ஏன் இங்க கொண்டு வந்த?" என்று வேதவல்லி அதிர்ச்சியடைய...

"இல்லம்மா... நான் இன்னைக்குச் சென்னைக்குப் போறேன். காலேஜுக்குக் கொண்டு போக முடியாது இல்ல. அதனாலதான் பெரிய மாமாவும், கதிர் மாமாவும் நம்ம வீட்லயே வச்சுக்கச் சொன்னாங்க..." என்று சந்தியா தயங்கித் தயங்கிச் சொல்ல...

"கல்யாணத்துக்குப் பாத்திரம், பண்டம் எதுவும் வாங்க வேண்டாம். பின்னால பார்த்துக்கலாம்னு சொன்னாங்க. இப்ப போட்ட நகையையும் திருப்பித் தந்தா... இங்க மட்டும் வேற யாரு இருக்கா? ஒத்தப் பெண்ணைப் பெத்து வச்சிக்கிட்டு... அதுக்குச் சீர் செய்யக் கூட முடியாத அளவு, நாங்க வக்கத்துப் போயிட்டோமா?" என்று வேதவல்லி சொல்லி அழ...

"அப்படி இல்லம்மா... என்னை இந்த நகையைப் போட்டுக்க வேண்டாம்னு யாரும் சொல்லலை. நான் இங்க வரும்போது போட்டுக்கிறேன். சரியா..." என்று சந்தியா சமாதானம் செய்தாள்.

"உன் மகளுக்கு எப்பவும் அப்பன் வீட்டை விட... மாமன் வீடுதானே உசத்தி! அவ அங்களுக்குத்தான் பரிந்து பேசுவா..." என்று துரை கிண்டலாகச் சொல்ல...

துரையின் பேச்சில் கோபம் கொண்ட சந்தியா, "ஆமாம். அப்படித்தான் வச்சுக்கோங்க. நீங்க என்னை வீட்டை விட்டுப் போன்னு கழுத்தைப் பிடிச்சுத் தள்ளின போது... எனக்குக் கல்யாணம் பண்ணிப் போறதுக்கு மாமா வீடு இருந்துச்சு.

"ஆனா, மாமா இனி என்னை வேண்டாம்னு தள்ளினா... நான் எங்கே போறது? அதனால நான் என் புருஷனுக்குத்தான் பரிந்து பேசுவேன்..." என்றாள், பதிலுக்கு ஆத்திரமும் அழுகையுமாக.

அவள் பேச்சு எல்லோருக்கும் வருத்தத்தைத் தந்தது. "அப்படியெல்லாம் பேசக் கூடாது. இது எப்பவும் உன் வீடுதான். நீ நம்ம வீட்டுக்கு வந்து போய் இருக்கணும்..." என்று சந்தியாவிடம் சொன்ன அப்பத்தா...

"என்ன வீட்டுக்கு வந்த பிள்ளைக்குச் சாப்பிட ஒண்ணும் கொடுக்காம உட்கார்ந்திருக்க..." என்று தன் மருமகளையும் அதட்டினார்.

வேதவல்லி எழுந்து சென்று சந்தியாவிற்குப் பலகாரம் செய்தவர், அதை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு, அதோடு சந்தியா கொடுத்த நகையில் பாதி யையும் எடுத்துக் கொண்டு, அவளையும் அழைத்துக் கொண்டு தன் அண்ணன் வீடு நோக்கிச் சென்றார்.



## 13

சந்தியா வீட்டிற்குள் வரும் போதே... அவளின் அழுது சிவந்திருந்த விழிகளைக் கதிர் கவனித்தான்.

வேதவல்லி தான் கொண்டு வந்த பலகாரத்தை எல்லோருக்கும் அவரே தட்டில் வைத்துக் கொடுக்க... சந்தியா மாடிக்குச் சென்று விட்டாள்.

சந்தியா மேலே சென்றதும், இன்று வீட்டில் சந்தியா துரையிடம் பேசியதைச் சொல்லிக் கண் கலங்கிய வேதவல்லி, "எங்களுக்கும் அவ ஒரே பொண்ணுதானே அண்ணி... அவளுக்குச் செய்யாம வேற யாருக்குச் செய்யப் போறோம்?

"அவங்க அப்பாதான் வீம்புக்குன்னு எல்லாத் தையும் செய்றார். நானும், சந்தியாவும் என்ன தப்புப் பண்ணோம்? நான் எங்க வீட்டுக்குச் சந்தியா வரும் போது போடப் பாதி நகையை எடுத்து வச்சிட்டேன். மீதி இங்க இருக்கட்டும். அவ இங்க வரும்போது போட்டுக் கட்டும்..." என்று லக்ஷ்மியிடம் நகைகளைக் கொடுக்க... பெரியசாமியும், கதிரும் அமைதியாக இருந்ததால்... லக்ஷ்மியும் நகைகளை வாங்கி உள்ளே வைத்துக் கொண்டார்.

சந்தியா இன்னும் பலகாரம் சாப்பிடவில்லை என்றதும், கதிர் அவளுக்கு அவனே எடுத்துக் கொண்டு மேலே சென்றான்.

கதிர் அவர்கள் அறைக்குச் சென்ற போது... சந்தியா பெட்டி அடுக்கிக் கொண்டிருந்தாள்.

சந்தியா கதிரைக் கண்டுகொள்ளவே இல்லை. சந்தியாவின் முகத்தைப் பார்த்த கதிர், ரொம்பக் கோபமா இருக்கா போலிருக்கே... இவளை எப்படிச் சமாளிக்கிறது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

சந்தியா ஊருக்குச் செல்ல... ஒவ்வொன்றாகப் பார்த்து எடுத்து வைக்க... கதிர் அவள் பின்னாடியே சுற்றிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் அவன் சேட்டையைப் பொறுத்தவள், "என்னை இப்படிச் சுத்துறதுக்குப் பதிலா... கோவிலைச் சுத்தினாவாவது புண்ணியம் கிடைக்கும்..." என்றாள்.

கதிர், "எனக்குப் பொண்டாட்டிதான்ப்பா தெய்வம்..." என்று கை எடுத்துக் கும்பிட...

"இந்தப் பேச்சுக்கு ஒன்னும் குறைச்சல் இல்லை. போதும்... எனக்குச் சாம்பிராணி போட்டது. போய் உங்க பெட்டியை அடுக்குங்க..." என்று சந்தியா சொன்னதும்...

கட்டிலில் ஏறி நன்றாகச் சாய்ந்து படுத்து, கால் மேல் கால் போட்டுக் கொண்ட கதிர், "நான் ஏன் அடுக்கணும்? எனக்குப் பொண்டாட்டி வந்தாச்சுப்பா... இனி இதெல்லாம் அவள் வேலை..." என்றான்.

சந்தியா கதிரைப் பார்த்து முறைக்க... கதிர் 'ப்ளீஸ்...' என்று பார்வையால் கெஞ்ச... சந்தியா போனால் போகிறது என்று அவன் பெட்டியை எடுத்து அடுக்க ஆரம்பித்தாள்.

சந்தியாவுக்கே இதற்கு முன்பு வரை வேதவல்லி தான் பெட்டி அடுக்கிக் கொடுப்பார். அதனால் அவளுக்கே சரியாக அடுக்க வரவில்லை.



அதைக் கவனித்த கதிர், எழுந்து வந்து அவளுக்கு உதவி செய்தவன், "இப்படித்தான் உன் பெட்டியையும் அடுக்கினியா?" என்றவன், அவளுடைய பெட்டியையும் திறந்து ஒழுங்காக அடுக்க ஆரம்பிக்க...

சந்தியா அதில் உள்ளாடைகள் எல்லாம் வைத் திருந்ததால், "வேண்டாம் ம்மாமா. இருக்கட்டும் பரவா யில்லை..." என்று சொன்னதைக் கதிர் கண்டுகொள்ளவே இல்லை.

கதிர் அடுக்கி முடித்தபோது... அதில் இன்னும் துணிகள் வைக்க நிறைய இடம் இருந்தது. அவ்வளவு நேர்த்தியாக அடுக்கியிருந்தான்.

இருவரின் பெட்டிகளையும் கொண்டு போய் ஓரமாக வைத்து விட்டு வந்த கதிர், சந்தியாவை இழுத்துத் தன் மடி மேல் உட்கார வைத்துக் கொண்டான்.

"ஊருக்குப் போறதைச் சொல்லிக்கத்தானே உங்க வீட்டுக்குப் போன... அதைப் பண்ணாம எதுக்குடி உங்க அப்பாகிட்ட சண்டைக்குப் போன?" என்று கதிர் சொன்னதும்...

சிலிர்த்து எழுந்த சந்தியாவை விடாமல் இறுக்கிப் பிடித்த கதிர், "உதை பிய்ச்சிடுவேன். ஒழுங்கா இங்கேயே உட்காரு..." என்றான் அதட்டலாக.

"அவர்தான் என்னை வம்பிழுத்தார். நான் என்ன பண்றது?" சந்தியா கேட்க...

"சந்தியா, நீ ஒண்ணு புரிஞ்சுக்கோ. எனக்கும் உங்க அப்பாவுக்கும்தான் பிரச்சனை. அதை நாங்க

சரி பண்ணிக்கிறோம். உனக்கு அவர் நல்ல அப்பா. நீ எப்பவும் போல அவர்கிட்ட இரு. அதை விட்டுட்டு நீ எனக்காக அவர்கிட்ட சண்டை போட்டா... அவருக்கும், எனக்கும் இருக்கிற விரிசல் இன்னும் அதிகம்தான் ஆகும்..." என்று கதிர் சொல்லி விட்டு சந்தியாவின் முகத்தைப் பார்க்க... அவள் கதிரின் மார்பில் சாய்ந்து தூங்குவது போல் நடித்தாள்.

அவளின் நடிப்பைப் புரிந்து கொண்ட கதிர்... அவள் இடையில் விரல்களால் கிச்சுக் கிச்சு மூட்ட... சந்தியா துள்ளி எழுந்தாள்.

"போதும் உங்க அட்வைஸ்..." என்ற சந்தியா, அங்கிருந்த பலகாரத் தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தவள், அதை உள்ளே தள்ளும் வேலை யைச் செவ்வனே பார்க்க... கதிர் கட்டிலில் படுத்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன்டி! புருஷனுக்கு வேணுமான்னு ஒரு பேச்சுக் காவது கேட்கிறாயா?" என்றதும்,

சந்தியா பாதி கடித்த வடையுடன் கதிரைப் பார்க்க... அவன் அவளை வா என்று அருகில் அழைத்தான்.

சந்தியா வாயில் பாதி வடையும், கையில் பாதி வடை யுமாகக் குழந்தை போல் தவழ்ந்து கதிரின் அருகில் செல்ல... அவளை இழுத்துத் தன் மேல் போட்ட கதிர்... அவள் கையில் இருந்த வடையை வாங்காமல், அவள் வாய்க்குள் வைத்திருந்த வடையைச் சுவைக்க... அங்கே ஒரு முத்த யுத்தம் அரங்கேற்றமானது.



புதிதாகத் திருமணமானவர்கள்... அதோடு இன்று ஊருக்கும் செல்வதால்... கதிரும், சந்தியாவும் தங்கள் பிரிவு உபச்சார விழாவை எல்லையைக் கடக்காமல்... கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஊருக்குச் செல்ல நேரமாகி விட்டதால்... கீழே இருந்து லக்ஷ்மியும், வேதவல்லியும் மாற்றி மாற்றி அழைத்தும்... கதிரும், சந்தியாவும் கீழே இறங்கி வரும் வழியைக் காணோம். அவர்கள் வேறு உலகத்தில் இருந்தனர்.

"இதுக்கு மேல நீங்க வரலைன்னா பஸ் போயிடும்..." என்றதும்தான், இருவரும் அடித்துப் பிடித்து வேகமாகக் கிளம்பி வந்தனர்.

இருவரும் வேகமாக உணவை அள்ளி வாய்க்குள் போட்டு விட்டு, எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு விடைபெற்றனர்.

வெங்கிதான் அவர்கள் இருவரையும் காரில் பேருந்து நிலையம் அழைத்துக் கொண்டு சென்றான். காரில் சென்று கொண்டிருந்த போது, காரைத் துரையின் கடையின் எதிரே நிறுத்தச் சொன்னான் கதிர்.

வெங்கி காரிலிருந்து இறங்கியதும், சந்தியாவிடம் திரும்பிய கதிர், "போய் உங்க அப்பாகிட்ட சொல்லிட்டு வா. அவர் நீ இந்தப் பக்கம் வருவேன்னு தெரிஞ்சு, இங்கதான் இருப்பார்..." என்றான்.

சந்தியா கதிரைப் பார்த்து முறைக்க...

"ப்ளீஸ் சந்தியா. என்னால நீயும் உங்க அப்பாவும் சண்டை போட்டுக்கிறது எனக்குக் கஷ்டமாயிருக்கு. நம்மைப் பெத்தவங்க கிட்ட கௌரவம் பார்க்கக் கூடாது..." என்றதும்,

சந்தியா காரிலிருந்து இறங்கி, அவள் அப்பாவின் கடையை நோக்கிச் சென்றாள்.

கதிரும் காரிலிருந்து இறங்கி வெளியே நின்றான்.

துரைக்குச் சந்தியா இந்தப் பக்கம்தான் போவாள் என்று தெரியும். அதனால் அவர் வாசலைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அவள் கடைக்கு வருவாள் என்று எல்லாம் அவர் எதிர்பார்க்கவில்லை.

எதிர்பாராமல் மகளைச் சந்தித்ததும், அவர் கோபம் எங்கே போனது என்றே தெரியவில்லை. "வா பாப்பா... ஊருக்குக் கிளம்பிட்டீங்களா?" என்றார்.

"ஆமாம்ப்பா. கிளம்பிட்டோம். சொல்லிட்டுப் போக லாம்னு வந்தேன். போயிட்டு வரேன்ப்பா."

"சரி பாப்பா. பார்த்துப் போங்க. அடிக்கடி ஊருக்கும் வாங்க..." என்று துரை சொன்னபோது.... அவர் குரலும் நெகிழ்ந்துதான் இருந்தது.

துரை கதிரையும் சேர்த்துப் பன்மையில்தான் பேசினார். ஆனால் சந்தியா அதைக் கவனிக்கவில்லை.

சந்தியா காரை நோக்கிச் செல்ல... துரையும் அவளோடு சென்றவர், "சாப்பிட்டீங்களா?" என்று கேட்க...

சந்தியா, "சாப்பிட்டோம்..." என்றாள்.



அப்போது மணி ஏழுதான். "அதுக்குள்ளயா... இவ்வளவு சீக்கிரம் சாப்பிட்டா நைட் பசிக்குமே..." என்றவர், "இரு வரேன்..." என்று அருகில் இருந்த கடைக்குச் சென்று ஏதோ வாங்கி வந்தார்.

துரை சந்தியாவிடம் ஒரு கவரைக் கொடுத்து, "பஸ்ல சாப்பிடுங்க..." என்றதும்,

"எதுக்குப்பா இதெல்லாம்... ஏற்கெனவே அம்மாவும், அத்தையுமே நிறையக் கொடுத்திருக்காங்க..." என்று சந்தியா மறுக்க...

"இருக்கட்டும்... வச்சிக்கோ..." என்றவர், மகளோடு காரை நோக்கிச் செல்ல...

கதிர் அங்கே நின்று கொண்டிருப்பதைப் பார்த்த சந்தியா, "அப்பா, நீங்க இங்கேயே இருங்க. நான் போய்க்கிறேன்..." என்றாள் மெதுவாக.

துரை நின்று சந்தியாவை ஏன் என்பது போல் பார்க்க...

"நீங்க அங்க வந்துட்டு மாமாவோட பேசலைன்னா... அவங்க ரொம்ப வருத்தப்படுவாங்கப்பா. உங்களுக்குக் கதிர் மாமா மேல ஏதாவது வருத்தம் இருந்தா... அதுக்குக் காரணம் நான்தான். கதிர் மாமா இல்லை.

"அவங்க என்னை விட்டு விலகித்தான் இருந் தாங்க. நான்தான் அவங்களுக்குப் போன் பண்ணிட்டே இருந்தேன். அதனாலதான் அன்னைக்கு அவங்க காலேஜுக்கு வந்தாங்க. ஆனா, நீங்க கதிர் மாமாவைத் தப்பா நினைச்சுப் பேசிட்டீங்க. எனக்கு நீங்க ரெண்டு பேருமே முக்கியம்.

"நீங்க ஒருத்தருக்கு ஒருத்தர் பேசாம முறைச்சிட்டு இருந்தா... நான் எப்படிப்பா சந்தோஷமா இருக்க முடியும்? உங்களுக்குக் கதிர் மாமாவோட பேசப் பிடிக்கலைன்னா அமைதியா இருங்க. ஆனா, அவங்க வருத்தப்படுற மாதிரி எதுவும் செஞ்சுடாதீங்கப்பா. அதை என்னால தாங்க முடியாது..." என்ற சந்தியா வேகமாகச் சென்று காரில் ஏற... துரை அதே இடத்தில் திகைத்துப் போய் நின்று விட்டார்.

வெங்கியோடு பேசிக் கொண்டிருந்த கதிர்... சந்தியா காரில் ஏறியதும், திரும்பி அவன் மாமனாரைப் பார்த்து விட்டு, அவனும் காரில் ஏறினான்.

கார் கிளம்பியதும் சந்தியா துரையைப் பார்த்துக் கையசைக்க... அவரும் பதிலுக்குக் கையசைத்தார். அதைப் பார்த்த கதிர் நிம்மதி அடைந்தான்.

இவர்கள் பேருந்து நிலையம் வந்தபோது... இவர்கள் செல்ல வேண்டிய பேருந்து கிளம்பிக் கொண் டிருந்தது. கதிரும் சந்தியாவும் ஓடிச் சென்று அதில் ஏறினர்.

இருவரும் சென்று அவர்கள் இருக்கையில் அமர்ந்ததும், "சந்தியா, நான் கூடிய சீக்கிரம் சென்னை வருவேன்..." என்று வெங்கி சொல்ல...

"அப்படியா! நீ யாரு... உன்னை எனக்குத் தெரியாதே..." என்றாள் சந்தியா முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்டு.

அதைப் பார்த்துக் கதிர் சிரிக்க... "ஹே... போயும் போயும் உன்னையா பார்க்க வருவேன். உனக்கு



ரொம்பத்தான் ஆசை. நானே எங்க அண்ணன் உன் கிட்ட மாட்டிக்கிட்டாரேங்கிற வருத்தத்துல இருக்கேன். இதுல இந்த அம்மாவைப் பார்க்க வேற வர்றாங்களாம்..."

"நான் உன்னைப் பார்க்க வரலை. என்னோட ஃப்ரெண்ட் சித்துவைப் பார்க்க வரேன். அவன் என்னை வரச் சொல்லியிருக்கான். ஒரு நாலு நாள் வந்து தங்குற மாதிரி பிளான்..." என்று வெங்கி நன்றாகச் சந்தியாவை வெறுப்பேற்ற... சந்தியா கதிரைப் பாவமாகப் பார்த்தாள்.

"அவன் கிடக்கிறான் லூசு... மாமா உன்னைப் பார்க்க வரேன்..." என்று கதிர் அவளைச் சமாதானம் செய்ய... சந்தியா வெங்கிக்கு நாக்கைத் துருத்தி அழகு காட்டினாள்.

அது படுக்கை வசதி கொண்ட பஸ் என்பதால் கதிரும், சந்தியாவும் வசதியாகப் படுத்துக் கொண்டனர். நடைபாதைப் பக்கம் இருந்த திரையை இழுத்து விட்டு... ஜன்னல் பக்கம் இருந்த திரையைத் திறந்து விட... வானில் பால் நிலவு. நிலவும் அவர்களோடு தொடர்ந்து பயணம் செய்தது.

காற்றுக்காக ஜன்னலைத் திறந்து வைத்தவர்கள்... மற்றவர்களுக்குக் கேட்கக் கூடாது என்பதற்காக நெருங்கிப் படுத்து, மெதுவாகப் பேசிக் கொண்டே வந்தனர். இருவருக்கும் இந்தப் பயணம் முடியாமல்... தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது.

விடியற்காலையில் கோயம்பேடு பேருந்து நிலையம் வந்தவர்கள், ஒரு ஆட்டோ பிடித்துச் சந்தியாவின் ஹாஸ் டலுக்குச் சென்றனர்.

சந்தியாவை அங்கே இறக்கி விட்ட கதிர், "சரிடா. பார்த்து இருந்துக்கோ. நான் இப்படியே சென்ட்ரல் போய், அங்கிருந்து டிரெயின்ல பெங்களூர் போறேன்..." என்றான்.

முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் குழந்தை, அம்மாவைப் பிரிந்திருக்க அழுமே... அது போல் சந்தியாவும் அழ... கதிர் அவளைச் சமாதானம் செய்தான்.

அவனுமே அந்த நிலையில்தான் இருந்தான். என்ன ஒன்று... சந்தியா அழுதாள். கதிர் அழவில்லை. அதுதான் வித்தியாசம்.

"சந்தியா, நீ இப்படி அழுதா... நான் எப்படிப் போறது? எனக்கு ஆறே காலுக்கு டிரெயின்!" என்றதும்,

சந்தியா, "சரி மாமா. நீங்க போயிட்டு வாங்க..." என்றாள் அழுகையை அடக்கிக் கொண்டு.

கதிருக்கும் அவளைப் பிரிந்து செல்லும் தவிப்பு இருந்தாலும்... ரெயிலுக்கு நேரமாவதால்... அவளிடம் சொல்லிக் கொண்டு ஆட்டோவில் ஏறினான்.

சந்தியா கண்ணில் நீரோடு அவன் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்திருந்தாள்.

சந்தியா வந்தது விடியற்காலை நேரம் என்பதால்... ஹாஸ்டலில் இன்னும் யாரும் எழுந்து கொள்ளவில்லை. இந்நேரம் சந்தியாவின் திருமணம் பற்றி நிறையப் பேருக்குத் தெரிந்திருக்கும். யார் என்ன கேட்கப் போகி றார்களோ என்று நினைத்தபடி சந்தியா தன் அறைக்குச் சென்றாள்.



சந்தியாவைப் பார்த்ததும், அனு தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள். சிறிது நேரம் அனுவுடன் பேசி விட்டுச் சந்தியா கல்லூரிக்குக் கிளம்பத் தயாரானாள்.

ரயிலில் ஏறியதும் கதிர் சந்தியாவிற்கு அழைத்துச் சொன்னான். அதிகம் பேசவில்லை. திரும்ப இரவு அழைப்பதாகச் சொல்லி வைத்து விட்டான்.

காலை உணவு அருந்தச் சென்ற சந்தியாவைப் பார்த்ததும், அவள் விடுதித் தோழிகள் ஒரே கேலியும், கிண்டலும்தான்.

சந்தியாவிற்கு எதைப் பற்றியும் யோசிக்கவே நேரம் இல்லை. கல்யாணத்தைப் பற்றி விசாரித்தவர்களுக்குப் பதில் சொல்லி விட்டுக் கல்லூரிக்குக் கிளம்பிச் சென்றாள்.

கல்லூரி திறந்து பத்து நாட்கள் ஆகியிருந்ததால்... நடத்தியிருந்த பாடங்களைப் பற்றிச் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

சந்தியா அனுவுடன் கல்லூரிப் பாடங்களைப் பற்றிப் பேசியபடி வர... அவள் எதிரில் புன்னகையுடன் சித்தார்த் வந்து நின்றான். சித்தார்த்தைப் பார்த்ததும் சந்தியாவின் முகமும் மலர்ந்தது.

அனு முன்னே வகுப்புக்குச் சென்று விட்டாள்.

"ஹாய் கல்யாணப் பொண்ணு. எப்படி இருக்க?" என்று சித்தார்த் சந்தியாவிற்குக் கை கொடுக்க...

அவன் கையைப் பற்றிக் குலுக்கிய சந்தியா, "நீயே சொல்லு. எப்படி இருக்கேன்?" என்றாள் பதிலுக்கு.

சித்தார்த் அவளை நன்றாகப் பார்த்தான். காட்டன் சுடிதாரில், நெற்றி வகிட்டில் சிறிதாகக் குங்குமம் வைத்து... இன்னும் அவள் முகம் கல்யாணக் களை மாறாமல் இருந்தது.

அதையே அவளிடம் சொன்னவன், "எப்படி உங்க மாமாவை விட்டுட்டு வந்த?" என்றாள், அடுத்த கேள்வியாக.

"வேண்டாம் சித்தார்த். இப்ப அவங்களைப் பத்தி எதுவும் ஆரம்பிக்காதே. பிறகு நான் இப்படியே பெங்களூர் கிளம்பிப் போனாலும் போயிடுவேன். நான் காலேஜ் வராத போது நடத்தினது எல்லாம் நீதான் சொல்லித் தரணும். வா..." என்று அவனை அழைத்துக் கொண்டு, அவள் வகுப்பு நோக்கிச் சென்றாள்.

செல்லும் வழியில் சித்தார்த், "சந்தியா! நான் உன் கல்யாணத்துக்கு வந்துட்டு... மீனாட்சி அம்மன் கோவில் போனேன், தெரியுமில்ல. அங்க உன்னை மாதிரியே ஒரு பெண்ணைப் பார்த்தேன்..." என்றதும்,

சந்தோஷப்பட்ட சந்தியா, "உண்மையாவா! என்னை மாதிரியே இருந்தாளா?" என்று ஆர்வமாகக் கேட்க...

"உன்னை விட அழகா இருந்தா..." என்றான் சித்தார்த் வீம்புக்கு.

அவனைப் பார்த்து முறைத்த சந்தியா, "நான் ஒண்ணும் அழகுன்னு சொல்லிக்கிட்டது இல்ல. நீதானேடா என்னை மாதிரி இருந்தானு சொன்ன... அதான் கேட்டேன்..." என்றாள்.



"ஹே! கோவிச்சுக்காதே சந்தியா. சும்மா உன்னை வம்பிழுக்கச் சொன்னேன். அந்தப் பொண்ணு உன்னை மாதிரின்னா... அவளும் உன்னை மாதிரியே வாயைத் திறந்தா மூட மாட்டேங்கிறா. அதைச் சொன்னேன்.

"பக்கத்தில் இருந்த பெண்ணோட பேசிக்கிட்டே கோவில் வந்தவ... கோவிலை விட்டு வெளியே போற வரை ஒரே பேச்சுதான். சுத்தி யாரையும் பார்க்கலை. என் கடமை பேசுவதே அப்படிங்கிற மாதிரி ஒரே பேச்சுதான்."

"ஓ... நீ சைட் அடிக்கிறதை அவ கண்டுக்கலை யாக்கும். உனக்கு அந்தக் காண்டு..." என்று சந்தியா சரியாகச் சொல்லி விட... சித்தார்த் அசடு வழிந்தான்.

"யாருடா... அந்தப் பொண்ணு? நீ இவ்வளவு கவனிச்சுப் பார்த்திருக்கேனா உனக்குப் பிடிக்காமயா பார்த்திருப்ப?"

"ஹே.. நீ பாட்டுக்குக் கற்பனையை வளர்த்துக் காதே. அவ உண்மையிலேயே உன்னை மாதிரிதான் இருந்தா. அதனாலதான் அவளைக் கவனிச்சுப் பார்த் தேன். வேற ஒண்ணும் இல்லை..." என்று சித்தார்த் மழுப்ப... சந்தியா அவனை நம்பாமல் பார்த்தாள்.

சந்தியா தன்னையே பார்ப்பதை உணர்ந்த சித்தார்த், "ஐ லைக் ஹெர். போதுமா... ஆனா யாருன்னு தெரியலை. நான் கோவில்ல இருந்து வெளிய வந்து பார்த்த போது.. அவ எந்தப் பக்கம் போனானு தெரி யலை..." என்றான்.

"அனு, ஸ்ரீஜாவுக்குவாவது அந்தப் பெண்ணைக் காட்டினியா...?" அவர்களைக் கேட்டால் அந்தப் பெண்

ணைப் பற்றி விவரம் எதுவும் தெரிய வருமா என்ற எண்ணத்தில் சந்தியா கேட்க...

"நீ அங்க இருந்திருந்தா உன்கிட்ட சொல்லியிருப்பேன். எனக்கு அவங்ககிட்ட சொல்லணும்னு தோணலை..." என்றான் சித்தார்த்.

"என்னடா பிடிச்சிருக்குன்னு சொல்ற.. ஆனா யாருன்னு தெரியலை..." என்று சந்தியா வருந்த...

"ஹே! நோ ஃபீலிங்க்ஸ். லைக்னு தான் சொன்னேன். லவ்-னு சொல்லலை. விட்டுடு..." என்று... சந்தியாவைச் சமாதானம் செய்யச் சொன்னானா, இல்லை... தன்னையே சமாதானம் செய்து கொணடானோ தெரியவில்லை.

மதிய இடைவேளை வரை தொடர்ந்து வகுப்புகள் இருந்ததால்... களைத்துப் போய்ச் சந்தியா சாப்பிட அமர்ந்தாள்.

உணவருந்தி முடித்ததும் மற்ற நண்பர்கள் சென்று விட... சந்தியா, சித்தார்த், அனு மற்றும் ஸ்ரீஜா அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

சந்தியா பாடத்தில் ஏதோ சந்தேகம் கேட்க... சித்தார்த் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது சந்தியாவை மெதுவாகச் சுரண்டிய அனு...

அவள் திரும்பியதும், "என்ன நடந்துடுச்சா...?" என்று கிசுகிசுப்பாகக் கேட்க...

சந்தியாவிற்கு ஒன்றும் புரியவில்லை.



அவள், "என்னது?" என்று புரியாமல் கேட்க...

தலையில் அடித்துக் கொண்ட அனு, சந்தியாவை அவள் அருகில் அழைக்க... ஸ்ரீஜாவும் நெருங்கி அமர்ந்தாள்.

"அதுதான்டி அது நடந்துச்சா...?" என்று அனு கண் சிமிட்டி கேட்க...

சந்தியாவிற்கு அந்த அது... எது என்று தெரியாமல் கோபம் வர... "சொல்றதை ஒழுங்காச் சொல்லு. ஒண்ணுமே புரியலை!" என்றாள் சத்தமாக.

அனு தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட... "அதுதான்க்கா ஃபர்ஸ்ட் நைட். அது நடந்துடுச்சான்னு கேட்கிறாங்க. இல்ல அனு அக்கா..." என்று ஸ்ரீஜா பட்டென்று போட்டு உடைத்து விட... அதைக் கேட்டு சந்தியாவின் முகம் உடனே சிவந்தது.

சித்தார்த் காதில் விழுந்து விட்டதோ என்று பதற்றத்துடன் சந்தியா அவனைப் பார்க்க.... அவன் புத்தகத்திலேயே கவனமாக இருந்தான்.

சந்தியா ஹப்பாடா... என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவள், திரும்பி அனுவையும், ஸ்ரீஜாவையும் பார்த்து முறைக்க... அவர்கள் இருவரும் 'சாரி' என்றனர்.

அவர்கள் பேசியது சித்தார்த் காதில் விழத்தான் செய்தது. அதனால் மேலும் அங்கிருந்து சந்தியாவைச் சங்கடப்படுத்தாமல், "நீங்க பேசிட்டு வாங்க. நான் கிளாஸ் போறேன்..." என்று கிளம்பி விட்டான்.

சித்தார்த் சென்றதும், அனு மேலும் சந்தியாவை விசாரணை செய்ய...

"ஒண்ணும் நடக்கலை போதுமா..." என்று சந்தியா சொன்னதை நம்பாமல்...

அனு மேலும் நோண்ட... பொறுக்க முடியாத சந்தியா அங்கிருந்து எழுந்து ஓடி விட்டாள்.

அப்போது அவளுக்குத் தெரியவில்லை. அனு கேட்டது எல்லாம் ஒன்றுமே இல்லை. இனித் தான் கேட்க வேண்டியது நிறைய இருக்கும் என்று.

கதிர் ஒரு மணி போல் தன் நண்பர்களுடன் தங்கி இருக்கும் வீட்டிற்கு வந்தவன், குளித்து வெளியில் சென்று சாப்பிட்டு விட்டு அங்கிருந்தே அலுவலகமும் சென்று விட்டான்.

சந்தியாவிற்கு இப்போது வகுப்பு நேரம் என்பதால், தான் வந்து சேர்ந்ததைப் பற்றி அவளுக்குக் கைபேசியில் தகவல் மட்டும் அனுப்பி விட்டு, அவன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தான்.

மாலை ஹாஸ்டல் வந்த சந்தியாவை அங்கு தங்கியிருக்கும் மற்ற பெண்கள் கேலியும், கிண்டலும் செய்ய... சந்தியாவும் புன்னகையுடன் அமர்ந்திருந்தாள்.

சற்று நேரம் சென்று அவர்கள் பேச்சு எல்லை மீற ஆரம்பிப்பது போல் இருந்ததும், சந்தியா அங்கிருந்து ஏதோ ஒரு காரணம் சொல்லி விட்டு நகர்ந்து விட்டாள்.

அவளுக்குத் திருமணமானது கொஞ்சம் பேருக்குத் தான் தெரியும். அதற்கே இந்த நிலைமை. அவள்



ஹாஸ்டல் வார்டனும், இன்னும் சில பேராசிரியர்களும் அவள் திருமணத்தைக் குறித்து அவளிடம் விசாரிக்கத் தான் செய்தனர்.

நல்லா படிக்கிற பொண்ணு. படிப்பை மட்டும் விட்டுடாமப் படிச்சு முடிச்சிடு என்பதே அவர்கள் கோரிக் கையாக இருந்தது.

சந்தியாவும் சரி என்று தலை ஆட்டி விட்டு வந்திருந்தாள்.

அவர்கள் கல்லூரியில் திருமணமான பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் போஸ்ட் கிராஜுவேட் படித்துக் கொண்டிருந்தனர். பெரிய வர்கள்... அதனால் அவர்களிடம் வம்பு வளர்க்க யாருக்கும் தைரியம் இல்லை. சந்தியா சின்னப் பெண் என்பதால் அவளை ரொம்பவும் கேலி செய்தனர்.

அன்று இரவு சந்தியா அவள் அறையில் புத்தகங் களுக்கு நடுவே அமர்ந்திருந்தபோது, கதிர் அவளை அழைத்தான். அப்போது நேரம் பத்து மணி.

"ஹாய் மாமா... வீட்டுக்கு வந்துட்டீங்களா...?"

"இல்லை... இன்னும் ஒரு மணி நேரம் ஆகும் கிளம்ப.... நீ தூங்கிடப் போறியோன்னு கால் பண்ணேன்."

"ஏன்... இவ்வளவு நேரம் ஆகுமா எப்பவும் கிளம்ப...? இல்லை, இன்னைக்குக் காலையில லேட்டா வந்ததுனாலயா...?"

"இல்லை. நான் எப்பவுமே காலையில பொறுமை யாத்தான் வருவேன். காலையில எழுந்து ஜாகிங்

பண்ணிட்டு, ஏதாவது டிபன் நானே செஞ்சு சாப்பிட்டு... பத்து, பத்தரை போலத்தான் ஆபீஸ் வருவேன். அதனால நைட் டிராபிக் எல்லாம் குறைஞ்சதும் மெதுவாக் கிளம்பிப் போவேன்.

"நான் நைட் சீக்கிரம் வீட்டுக்குப் போய் என்ன செய்யப் போறேன் சொல்லு? அதே நீ இருந்தா ஆறு மணிக்கே வந்துடுவேன்..." என்று கதிர் சிரிப்புடன் சொல்ல...

"நான் வேணா வந்துடட்டுமா..." என்றாள் சந்தியா கிசுகிசுப்பாக.

"வந்துடடி. ரொம்பக் கஷ்டமா இருக்கு. மூணு நாளா நீ என் பக்கத்திலேயே இருந்திட்டு, இப்ப தனியா இருக்கணும்னு நினைச்சாலே பிடிக்கலை. இதுக்குத்தான் கல்யாணத்தைத் தள்ளி வைக்கலாம்னு சொன்னேன். உங்க அப்பா கேட்டாரா... " என்று கதிர் ஆரம்பிக்க...

"போதும் ஆரம்பிக்காதீங்க. நடக்கணும்னு இருந்துச்சு. நடந்திடுச்சு. அவ்வளவுதான்..." என்று சந்தியா சொல்லிக் கொண்டிருக்கும் போதே... சீனியர்ஸ் அவள் அறைக்கு வருவதைப் பார்த்தவள் "நாளைக்குப் பேசுறேன் மாமா..." என்று வைத்து விட்டாள்.

சந்தியாவிற்குச் சீனியர் மாணவர்களிலும் நிறைய நண்பர்கள் இருந்தார்கள். ஆனால்... அவர்கள் எல்லாம் படிப்பு முடித்துச் சென்று விட்டனர். இப்போது கடைசி வருடத்தில் இருக்கும் மாணவ, மாணவிகள் ரொம்பவும் அடாவடியாகப் பேசுவார்கள்.



ஒரு முறை சண்டை போட்டு விட்டால்... பார்க்கும் போது எல்லாம் வம்புக்கு இழுப்பார்கள் என்று சந்தியா வாய் கொடுக்காமல் ஒதுங்கித்தான் போவாள்.

அறைக்கு வந்தவர்கள் சந்தியாவைக் கலாட்டா செய்ய...

சந்தியா, 'கடவுளே எனக்குப் பொறுமையைக் கொடு' என்று வேண்டியபடி உட்கார்ந்திருந்தாள்.

நல்ல வேளையாக வார்டன் அந்த நேரம் வந்து விட.. அதனால் மற்றவர்கள் எழுந்து வெளியே செல்ல... சந்தியா வேகமாக எழுந்து கதவைத் தாழ் போட்டு விட்டு வந்தாள்.

அனுவிற்குச் சந்தியாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அன்றிலிருந்து சந்தியா அவர்களிடம் தனியாக மாட்டிக் கொள்ளக் கூடாது என்று முடிவெடுத்தாள்.

மறுநாள் கல்லூரிக்கு வந்த சந்தியா, நெற்றி வகிட்டில் குங்குமம் கூட வைத்துக் கொள்ளவில்லை. அது வேறு அவளைத் திருமணம் ஆனவள் என்று காட்டிக் கொடுப்பதால்.. அதைப் பார்த்தால் மேலும் கிண்டல் செய்வார்கள் என்று பயந்து போய் வேண்டாம் என்று விட்டு விட்டாள்.

சித்தார்த் கூட அதற்கு அவளைக் கிண்டல் செய்தான்.

"என்ன... உங்க மாமா மேல இருந்த லவ்ஸ் அதுக்குள்ள குறைஞ்சிடுச்சா..." என்று.

சந்தியா அவனிடம் எதையும் சொல்லவில்லை. நண்பர்கள் என்றாலும் எதைச் சித்தார்த்திடம் சொல்ல முடியுமோ அதைத்தான் சந்தியா சொல்வாள்.

ஹாஸ்டலில் சந்தியா எதைச் செய்தாலும், அதை அவள் திருமணமானவள் என்ற எண்ணத்திலேயே பார்க்கப்பட்டது. அறையில் அனு இருக்கிறாள் என்று செல்லை எடுத்துக் கொண்டு வெளி வராண்டாவுக்கு வந்தால்... அவளைக் கிண்டலாகப் பார்ப்பதும், என்ன போனலயே குடும்பம் நடத்துறியா என்றும் கேலி செய்தனர்.

அதற்குப் பயந்து கொண்டு அனு இருந்தாலும்... பரவாயில்லை என்று தன்னுடைய கட்டிலில் படுத்துப் போர்வையைத் தலை வரை மூடிக் கொண்டுதான் கதிரிடம் பேசுவாள்.

சந்தியா படித்துக் கொண்டிருப்பதால் கதிரும் அந்தரங்கமாகப் பேசுவதை முடிந்தவரை தவிர்க்கத்தான் பார்ப்பான். ஆனாலும் சில நேரங்களில் மனைவி என்பதால் உரிமையுடன் பேசவும் செய்வான்.

நான்காம் வருடம் என்பதால் சந்தியாவிற்கு இப்போது படிப்பதற்கு அதிகம் இருந்தது. அதோடு முக்கியமான ஆண்டும் கூட.

அதே போல் கதிருக்கும் அடுத்த இரண்டு மாதத்தில் ப்ராஜெக்ட் ரிலீஸ் இருந்தது. இது அவன் புது வேலையில் சேர்ந்த பிறகு வரும் முதல் ரிலீஸ் என்பதால்... அவனும் தன் திறமையை நிரூபிக்கக் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தான்.



ஒரு மாதம் வேகமாகச் சென்ற நிலையில்... கதிர் ஒரு வார இறுதியில் சென்னைக்கு வந்தான்.

அவன் வருவதைச் சந்தியாவிடம் சொல்லவில்லை. அவளுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியாக இருக்கட்டும் என்று சொல்லாமல் வந்தான்.

சனிக்கிழமை காலை சென்னை வந்தவன், நேராக அவன் நண்பர்களுடன் முன்பு தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று, சிறிது நேரம் தூங்கி விட்டு... பிறகு நண்பர்களுடன் அரட்டை அடித்துவிட்டு, மதியம் ஆனதும் சந்தியாவைப் பார்க்கத் தன் நண்பனின் வண்டியை எடுத்துக் கொண்டு வந்தான்.

சந்தியாவிற்கு அன்று மதியம் வரை வகுப்புகள் இருந்தது.

வகுப்பு முடிந்து கல்லூரிக்குள் இருக்கும் பெஞ்சில் தனியாக அமர்ந்து, தன் தாலியைக் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கே சில நேரம் சந்தேகம் வரும்... தனக்குத் திருமணமாகி விட்டதா என்று. அப்போது எல்லாம் இப்படித்தான்!

சித்தார்த் அவளை ஒரு புன்னகையுடன் கடந்து சென்று பக்கத்தில் இருந்த இன்னொரு பெஞ்சில் அமர்ந்தான். அவனுக்குமே சில நேரங்களில் சந்தியாவை இப்படிப் பார்க்கப் பாவமாக இருக்கும். ஆனால் அவளைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவான். சந்தியாவும் சிறிது நேரத்தில் சரியாகி விடுவாள்.

அன்றும் அது போல் இருக்க... சித்தார்த் தான் முதலில் கதிர் வருவதைக் கவனித்தான். பார்த்தவன் முகம் புன்னகையில் மலர.... சந்தியாவைப் பார்த்து, "சந்தியா! கதிர்..." என்றான்.

பொய் சொல்கிறான் என்று நினைத்த சந்தியா, "இப்ப எதுக்குத் தேவையில்லாம அவங்களை இழுக்கிற...! பிறகு எனக்கு இப்பவே அவங்களைப் பார்க்கணும் போல இருக்குன்னு சொல்வேன். நீதான் என்னைப் பெங்களூர் கூட்டிட்டுப் போக வேண்டியது வரும்..." என்று சித்தார்த்தை மிரட்ட...

அதைக் கேட்டுக் கொண்டே புன்னகையுடன் வந்த கதிர் சந்தியாவின் அருகே சென்று அமர்ந்தான்.

## 14

கதிர் வந்ததைக் கவனிக்காமல் சந்தியா அவள் பாட்டுக்குப் பேசிக் கொண்டே செல்ல...

"நான் எதுக்கு உன்னைக் கூட்டிட்டுப் போகணும்... உன் பக்கத்தில் ஒருத்தர் உட்கார்ந்திருக்கார் பாரு... அவர் கிட்ட கேளு...." என்று சித்தார்த் புன்னகையுடன் சொல்ல...

சந்தியா புரியாமல் திரும்பிப் பார்க்க.. அங்கே கதிரைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் கண்களைப் பெரிதாக விரித்தாள்.

கதிரை நேரில் பார்த்தும்.... அவன் வந்ததை இன்னும் சந்தியாவால் நம்ப முடியவில்லை.



கனவோ என்று நினைத்து, அவள் கையில் கிள்ளிப் பார்க்கச் சென்றவள்... ஏதோ தோன்ற, குறும்புப் புன்னகையுடன் கதிரின் பக்கம் கிள்ளுவதற்குக் கையைக் கொண்டு செல்ல...

அவளைப் பார்த்துப் பொய்யாக முறைத்த கதிர், சித்தார்த் பக்கம் கண்ணைக் காட்ட...

புரிந்து கொண்ட சந்தியா சித்தார்த்தைக் கிள்ளு வதற்கு எழுந்து சென்றாள்.

அதுவரை இருவரும் விழிகளால் பேசிக் கொள் வதைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த், "அடங்... கொய்யால... உங்களுக்கு நான்தான் கிடைச்சேனா டெஸ்ட் பண்ணிப் பார்க்க... ஆள விடுங்கடா சாமி..." என்று எழுந்து ஓட... சந்தியா அவனைத் துரத்திக் கொண்டு ஓடினாள்.

சித்தார்த் ஓடுவதையும்... சந்தியா அவனைத் துரத்துவதையும் பார்த்த அனுவும், ஸ்ரீஜாவும் அங்கு வர... சித்தார்த்தைப் பிடிக்க முடியாமல் சந்தியா வந்து கதிரின் அருகில் அமர்ந்தாள்.

கதிர் அவளைப் பார்த்துச் சிரிக்க... அப்போதுதான் அனுவும், ஸ்ரீஜாவும் கதிரைக் கவனித்தனர்.

கதிரைப் பார்த்ததும் அவர்கள் இருவரும் அவனிடம் சென்று நலம் விசாரிக்க... சித்தார்த்தும் வந்து அவர் களுடன் சேர்ந்து கொண்டான்.

எல்லோரும் பேசிக் கொண்டிருக்க... சந்தியா மட்டும் எதுவும் பேசாமல் கதிரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்குக் கதிரைப் பார்த்தது அவ்வளவு மகிழ்ச்சி. மற்றவர்களுடன் பேசினாலும் கதிரின் கண்களும் சந்தியாவை அடிக்கடி தழுவிச் சென்றது.

கதிர் மற்றவர்களுடனே பேசுவதைப் பார்த்த சந்தியா பொறுமை இழந்தவள், "நீங்க போகலை. டைம் ஆகுது..." என்று அனுவையும், ஸ்ரீஜாவையும் பார்த்துக் கேட்க...

மற்ற நாட்களில் எல்லோரும் கிளம்பினாலும் கிளம் பாமல்... மற்றவர்களையும் கிளம்ப விடாமல் செய்பவள், இன்று ரொம்ப நல்லவள் மாதிரிப் பேசவும்... அனுவும் ஸ்ரீஜாவும் சந்தியாவை வெறுப்பேற்றுவதற்காகவே கதிருடன் சிரித்துச் சிரித்துப் பேசினர்.

சந்தியா செய்த கண் ஜாடைகளை எல்லாம் கண்டுகொள்ளாமல் அவர்கள் இருவரும் இன்னும் தீவிரமாகக் கதிருடன் பேச... அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கதிர் சிரிப்பை அடக்கிக் கொண்டு இருந்தான்.

அவள் என்னதான் செய்கிறாள் பார்ப்போம் என்று கதிர் நினைக்க...

சந்தியாவா விடுவாள்? அவர்கள் இருவரிடமும் தன் வேலை நடக்கவில்லை என்றதும், சந்தியா சித்தார்த்தைப் பார்த்துப் பாவமாக ஒரு லுக் விட... புரிந்து கொண்ட சித்தார்த் அனுவையும் ஸ்ரீஜாவையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

நண்பேன்டா... என்று சித்தார்த்தைப் பற்றிப் பெரு மையாகச் சந்தியா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். சிறிது தூரம் சென்ற அனு திரும்பி வந்தவள், "நீ இப்ப



ஹாஸ்டலுக்கு வருவியா...?" என்று சந்தியாவைப் பார்த்துக் கேட்க... அவள் திரும்பிக் கதிரைப் பார்க்க...

"இல்ல... இப்ப வெளியே போயிட்டு நைட் கொண்டு வந்து விடுறேன்..." என்றான் கதிர்.

"அப்ப உன் பையைக் கொடு. நான் கொண்டு போறேன்..." என்று அனு சந்தியாவின் புத்தகப் பையை வாங்கிக் கொண்டு செல்ல... தன் தோழியின் அக்கறை யில் சந்தியாவிற்குப் புல்லரித்தது.

அவர்கள் சென்ற பிறகு கதிர் சந்தியாவைப் பார்த்து, "போகலாமா...?" என்றான்.

சந்தியா காது கேட்காதது போல அமர்ந்திருக்க... கதிருக்குத் தெரியும் அவளுக்குக் கோபம் என்று!

அவனும் பேசாமல் இருக்க... சிறிது நேரம் பொறுத்த சந்தியா முடியாமல்... கதிரை ஓரக் கண்ணில் பார்க்க... அவளையே பார்த்துக் கொண்டிருந்த கதிர் சிரித்து விட்டான். சந்தியாவிற்கும் சிரிப்பு வந்தது.

"இவ்வளவு நேரம் என்னைக் கண்டுக்காம இருந்துட்டு, இப்ப மட்டும் எதுக்குச் சிரிக்கிறீங்க? நீங்களும் அவங்களோட சேர்ந்துட்டு என்னை வெறுப்பேத்துறீங்க இல்ல..." என்று கேட்டு சந்தியா கதிரை அடிக்க...

கல்லூரியில் இருந்த சிலர் அவர்கள் இருவரையும் ஆர்வமாய்ப் பார்ப்பதை உணர்ந்த கதிர், "இது காலேஜ் சந்தியா... வா. வெளியே எங்காவது போகலாம். தனியா இருக்கும்போது அடிப்பியாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

கதிருடன் பைக்கில் இரு பக்கமும் கால் போட்டு அமர்ந்து, அவன் இடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு... சாலையில் பறந்தபோது சந்தியாவிற்கு அவள் கண்ட கனவு பலித்த சந்தோஷம்.

அவள் முகத்தைக் கண்ணாடி வழியாகப் பார்த்த கதிர், "அன்னைக்குச் சிக்னல்ல மேடம் யார்கிட்டயோ சண்டைக்குப் போனீங்க. இப்ப நீங்க மட்டும் இப்படி உட்கார்ந்து வரலாமா...?" என்று அவன் கேலியாகக் கேட்க...

"அவங்க லவ்வர்ஸ். அதனால தப்பு. நாம புருஷன், பொண்டாட்டி தானே! அதனால் தப்பு இல்லை..." என்ற சந்தியாவின் மொக்கைக் காரணத்தைக் கேட்டு கதிர் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அன்று இரவு வரை இருவரும் சேர்ந்து சென்னையை வலம் வந்தனர். இரவு உணவிற்குப் பிறகு கதிர் சந்தியாவை ஹாஸ்டலில் விட்டு விட்டு... காலையில் சீக்கிரம் வருவதாகச் சொல்லிச் சென்றான்.

பொதுவாகச் சனிக்கிழமைகளில் ஹாஸ்டலில் உள்ளவர்களும் வெளியே சென்று விட்டுத் தாமதமாகத்தான் வருவார்கள் என்பதால் அன்று சந்தியாவை யாரும் பார்க்கவில்லை.

மறுநாள் காலை சீக்கிரம் எழுந்து குளித்துத் தயாரான சந்தியா... ஏழு மணிக்கே வந்த கதிருடன் வெளியே சென்று விட்டாள்.

கதிருக்கும், சந்தியாவிற்கும் இவ்வளவு அதிகாலையில் எங்கே செல்வது என்று தெரியவில்லை.



கோவில்தான் இந்நேரம் திறந்திருக்கும் என்பதால்... இருவரும் அஷ்டலக்ஷ்மி கோவில் சென்று வழிபட்டு விட்டு, அப்படியே அங்கிருந்த கடற்கரையில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

"உங்க அப்பா கூடப் போன் பேசிட்டுத்தானே இருக்க...?"

"அம்மாவோட தினமும் பேசுவேன்... அப்பா கூட ரெண்டு மூணு நாளைக்கு ஒரு தரம் பேசுவேன். அதே மாதிரி அத்தை, மாமாவுக்கும் வாரத்தில் ஒரு நாள் நான் போன் செய்வேன். இன்னொரு நாள் அவங்களே பண்ணுவாங்க..."

"ம்ம்.... தெரியும். அப்பா சொன்னார்..." என்று கதிரும் சந்தியாவும் பேசிக்கொண்டிருந்த போது... பாலா கதிரைக் கைபேசியில் அழைத்தான்.

"ஹாய் பாலா! எப்படி இருக்க...? என்ன காலையிலேயே போன் பண்ணியிருக்கே?"

"ஏன்டா கேட்க மாட்ட...! சென்னைக்கு வந்திருக்க. ஒரு போன் கூடப் பண்ணலை. சித்தார்த் சொல்லித்தான் நீ வந்திருக்கேனு தெரியும்... பெங்களூர் போனதும் என்னை மறந்திட்டியா...?" என்று பாலா குறை பாட....

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை. சந்தியாவைப் பார்த்து ஒரு மாசம் ஆச்சு. இந்த வாரம் கொஞ்சம் வேலை கம்மியா இருந்தது. அதுதான் கிளம்பி வந்தேன். முன்னாடியே பிளான் பண்ணியிருந்தா உனக்குக் கண்டிப்பா சொல்லியிருப்பேன்."

"யாரு... நீ...! சும்மா காரணம் சொல்லாதடா... சரி அதை விடு. இப்ப எங்க இருக்க?"

"பெசன்ட் நகர் பீச்ல...."

"சந்தியாவைக் கூட்டிட்டு எங்க வீட்டுக்கு வா. மதியம் எங்க வீட்லதான் உங்க ரெண்டு பேருக்கும் சாப்பாடு...." என்றதும்,

கதிர் தயங்க... பாலா அவன் சம்மதிக்கும் வரை விடவில்லை.

கதிர் சந்தியாவிடம், "பாலா அவங்க வீட்டுக்கு நம்மைக் கூப்பிடுறான். போவோமா...?" என்று கேட்டதற்கு, சந்தியாவும் "சரி..." என்றாள்.

பாலாவிடம் வருவதாகச் சொல்லி விட்டுப் போனை வைத்த கதிர்... சந்தியாவை அழைத்துக் கொண்டு காலை உணவு சாப்பிட ஹோட்டல் சென்றவன்... சாப்பிட்டதும் ஸ்வீட், பழங்கள் வாங்கிக் கொண்டு பாலா வீட்டிற்குச் சென்றான்.

கதிரையும், சந்தியாவையும் பாலா தம்பதியினர் சிறப்பாக வரவேற்றனர். பாலாவின் மகள் ரியா அப்போதுதான் தூங்கி எழுந்திருந்தாள்.

டீ குடித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் சென்று பாலாவும், ராஜியும் கடைக்குக் கிளம்ப...

"ராஜி வேணா வீட்ல இருக்கட்டுமே... நான் உன்னோட வரேன்..." என்று கதிர் சொல்ல...



"வேணாம்டா. அப்புறம் நான் நிறைய மறந்திடுவேன்... இவ என்னைத் திரும்பத் திரும்பக் கடைக்கு அனுப்புவா. இவளோட போனா ஒரே தடவையில எல்லாத்தையும் வாங்கிட்டு வந்திடுவேன். ப்ளீஸ் நான் பாவம்!" என்று பாலா சோகமாகச் சொல்ல.. ராஜி அவனின் தோளில் இடித்தாள்.

"சரி. ஆனா ரியா எங்களோட இருக்கட்டும்."

"அவ இருக்க மாட்டா..." என்று பாலா சொல்லும் போதே... "நான் இருப்பேன்..." என்ற ரியா பாலாவிடமிருந்து கதிரிடம் தாவியிருந்தாள்.

அதற்கு மேல் ஏதாவது சொன்னால்... கதிர் இப்போதே சந்தியாவுடன் கிளம்பி விடுவான் என்பதை உணர்ந்த பாலா... தன் மனைவியை மட்டும் அழைத்துக் கொண்டு சென்றான்.

"என்ன... உங்க ஃப்ரெண்டுக்காகப் பெரிய திட்டம் போட்டீங்க... ஆனா அவர் உங்க திட்டத்தைத் தகர்த்திட்டார் போல..." என்று ராஜி கிண்டல் செய்ய...

"எனக்கு அவனைப் பத்தி நல்லாவே தெரியும். அதுவும் நம்ம வீட்ல... வாய்ப்பே இல்லை. அவன் கல்யாணத்துக்கு முன்னாடியே சொன்னான்... சந்தியா படிச்சு முடிக்கிறவரை எதுவும் இல்லைன்னு! இல்லன்னா... இங்க ஹோட்டல்ல ரூம் போட்டிருக்க மாட்டானா...?"

"அவன் சந்தியாவோட ஃப்ரீயாப் பேசிட்டு இருக்கட்டும்னு நினைச்சேன்..." என்ற பாலா, தன் பைக்கைக் கிளப்ப... ராஜி பின்னால் ஏறி உட்கார்ந்தாள்.

பாலாவும், ராஜியும் ஒரு மணி நேரம் சென்று கடையில் இருந்து திரும்பி வந்த போது... கதிர் ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். சந்தியாவும் ரியாவும் படுக்கை அறையைத் தவிர இருந்த இன்னொரு அறையில் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண் டிருந்தனர்.

அதைப் பார்த்த பாலாவுக்கு ஏதாவது சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ராஜி அவனைப் பார்த்துக் கிண்டலாகச் சிரித்து விட்டு உள்ளே சென்றாள்.

"ரியா செல்லம்! உன்னோட ஃப்ரண்ட்ஸ் எல்லாம் கீழே பார்க்ல விளையாடறாங்க. நீங்க போகலையா...?" என்று பாலா தன் மகளிடம் கொஞ்ச...

"ம்ம். சரி போறேன்..." என்றவள்... சந்தியாவை "நீயும் வா...." என்று அழைக்க...

பாலா, "அவங்க வேண்டாம். நான் வரேன்..." என்று அழைத்துக் கொண்டு சென்றவன், கீழே சென்று ரியாவை அவள் நண்பர்களுடன் விளையாட விட்டு வந்தான்.

பாலா வந்தபோது கதிரும், சந்தியாவும் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

கதிர் சந்தியாவை ராஜிக்குச் சமையலில் உதவும்படி சொல்லிக் கொண்டிருந்தான். சந்தியாவும் சரி என்று எழுந்து உள்ளே சென்றாள்.

பாலா கதிருடன் பேசாமல் டி.வி. பார்க்க...

"என்னடா ஆச்சு... உர்ன்னு இருக்க..." என்றான் கதிர்.



"ஏன் சொல்ல மாட்ட? நீ என்னை உண்மை யாவே ஃபிரெண்டா நினைக்கிறியா கதிர்! எங்க வீட்டுல சந்தியாவோட சாதாரணமா இருக்க ஏன் இவ்வளவு யோசிக்கிற? அதுக்கு நீங்க எங்க வீட்டுக்கு வராமலே இருந்திருக்கலாம்.

"எங்கேயாவது வெளியே போயிருந்தாக் கூட ஃப்ரீயா இருந்திருப்பீங்க.... நான்தான் தேவையில்லாம உங்க ரெண்டு பேரையும் கஷ்டப்படுத்துறேன்..." என்று பாலா வருத்தப்பட...

"நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லடா... நாங்க நேத்துல இருந்து தனியாத்தான் இருந்திருக்கோம். இப்ப உங்களோட சேர்ந்து இருக்கிறது சந்தோஷம்தான்..." என்று கதிர் பாலாவைச் சமாதானம் செய்தான்.

சமையல் அறையில் ராஜி பழங்களை நறுக்கிக் கொண்டிருக்க... சந்தியா அவளோடு பேசிக் கொண்டி ருந்தாள்.

"ஏதாவது காய் நறுக்கணுமா? நான் நறுக்கித் தரேன் ராஜி... தாங்க."

"இன்னைக்கு மட்டன் பிரியாணி, சிக்கன் வறுவல் தான். அதனால பெரிசா வேலையில்லை. சீக்கிரம் முடிஞ்சிடும். பாலா ஹெல்ப் பண்ணுவார். நீ போய்க் கதிரோட பேசிட்டு இரு..." என்று ராஜி சொல்லிக் கொண் டிருக்கும் போதே... பாலா உள்ளே நுழைந்தான்.

பாலா வசதியாகச் சமையல் மேடையில் ஏறி அமர்ந்து கொள்ள...

ராஜி அவனிடம் நறுக்க வேண்டிய காய்களைக் கழுவிக் கொடுக்க... பாலா அதை அழகாக நறுக்க ஆரம்பித்தான். ராஜி கோழி வறுவலுக்கு மசாலா சேர்த்து ஊற வைத்தாள்.

அப்போது கதிர் சந்தியாவை அழைக்கும் குரல் கேட்க...

ராஜி அவளிடம் பழங்கள் இருந்த தட்டைக் கொடுத்து, "போய் ரெண்டு பேரும் சாப்பிடுங்க..." என்று அனுப்பி வைத்தாள்.

ஹாலில் இருந்த கதிரிடம் சென்று சந்தியா தட்டில் இருந்த பழங்களைக் கொடுக்க... கதிர் ஒரு கையில் தட்டை வாங்கிக் கொண்டு மறு கையால் சந்தியாவின் கைபற்றி, அவன் அருகில் அமர வைத்துக் கொண்டான்.

இருவரும் பேசிக் கொண்டே பழங்களைக் காலி செய்தனர். சாப்பிட்டதும் கதிர் டி.வி.யை அணைத்து விட்டு, சந்தியாவை அழைத்துக் கொண்டு அவளும் ரியாவும் விளையாடிய அறைக்குச் சென்றான்.

அங்கே இருந்த பால்கனியில் நின்று இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு அறையின் கதவைத் தாழிட்டு விட்டு வந்த கதிர், வசதியாகச் சுவரில் சாய்ந்து கொண்டு... சந்தியாவைத் தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டான்.

"மாமா, ராஜி அக்கா சமைக்கிறாங்க. பாலா அண்ணா ஹெல்ப் பண்றார். பார்க்கவே நல்லாயிருக்கு தெரியுமா! நமக்கு இது மாதிரி ஒரு வீடு எப்ப வரும்?"



சந்தியா ஆசையாகக் கேட்க... கதிருக்கு அவளது ஏக்கம் புரிந்துதான் இருந்தது. ஆனால் அதை மேலும் அதிகமாக்க விரும்பாமல், "முதல்ல நீ எனக்கு ஒரு விஷயம் சொல்லு. இப்ப நாம நம்ம வீட்டுலயே இருக் கோம்னு வச்சுக்கோ... உனக்கு முதல்ல சமைக்கத் தெரி யுமா?" என்று அவன் பதில் கேள்வி கேட்க...

சந்தியா தெரியாது என்று பரிதாபமாக ஒரு பார்வை பார்த்தாள். அப்போது அவள் மிகவும் அழகாக இருந்தாள்.

கதிருக்கு அவளை உடனே முத்தமிட வேண்டும் போல் தோன்ற... அவள் இதழில் இதழ் பதித்தவன்... "தெரியாது இல்ல... முதல்ல நீ ஊருக்குப் போகும் போது... உங்க அம்மாகிட்ட, எங்க அம்மாகிட்ட சமையல் எல்லாம் கத்துக்க. பிறகு நாம தனிக் குடித்தனம் போவதைப் பற்றி யோசிப்போம்..." என்றான்.

"நான் சமையல் கத்துக்கிட்டா... நீங்க உடனே சென்னைக்கு மாத்திட்டு வந்துடுவீங்களா?" என்று சந்தியா கேட்டதிலேயே...

விட்டால்... இவள் இன்னும் ஒரு வாரத்தில் சமையல் கற்றுக் கொண்டு விடுவாள் என்பதை உணர்ந்த கதிர், இவளிடம் என்ன சொல்வது என்பது போல் பார்க்க... சந்தியா அவனையே குறுகுறுவென்று பார்த்திருந்தாள்.

"சந்தியா, பாலா என்னை விட நாலு வருஷம் சீனியர். நீ அவங்களையும் நம்மையும் கம்பேர் பண்ணாதே. நான் இன்னும் ரெண்டு வருஷத்துக்குக் கல்யாணம் பண்றதாவே இல்லை. உங்க அப்பா

பிரச்சனை பண்ணதுனால... கோபத்துல உன்னை வேற யாருக்காவது கல்யாணம் பண்ணிடுவாரோன்னு நினைச் சுத்தான் கல்யாணத்துக்குச் சரின்னு சொன்னேன்.

"அதோட நான் இப்பதான் வேற வேலையில சேர்ந்தேன். இன்னும் ரெண்டு வருஷத்துக்கு நான் கம்பெனி மாறுறதா இல்லை. அதனால நீ இப்ப வேற எதைப் பத்தியும் யோசிக்காம... படிக்கிறதை மட்டும் பாரு..." என்ற கதிர் அவளை மடியிலிருந்து எழுப்பியவன், அங்கு ஓரமாக இருந்த பாயை விரித்துப் படுத்து விட்டான்.

சந்தியா கோபமாக இருந்தாள். சிறிது நேரம் சென்று கதிர் கண் திறந்து பார்த்த போது... சந்தியா கலங்கிய கண்களோடு அதே இடத்தில் அமர்ந்திருந்தாள். அவளை அப்படிப் பார்க்கவே கதிருக்கு வருத்தமாக இருந்தது.

அவளை இழுத்துத் தன் மேல் போட்டுக் கொண்டு, "இன்னும் கொஞ்ச நாள்தான்டா... பிறகு நாமளும் ஒரே வீட்ல சந்தோஷமா இருக்கலாம்..." என்று சமாதானம் செய்தவன்... அவள் முதுகை வருடிக் கொடுக்க...

சிறிது நேரத்தில் சந்தியாவின் கண்கள் தூக்கத் திற்குச் சென்றது. கதிரும் கண் அசந்தான்.

பாலா தன் மனைவிக்குச் சமையலில் உதவி விட்டு... கீழே சென்று மகளுடன் விளையாடிக் கொண் டிருந்தான். ராஜி சமையல் முடிந்தது என்றதும்தான் மேலே வந்தான்.

"அந்த அக்கா எங்கே?" என்று கேட்ட ரியாவிடம்,



"தூங்குறாங்கடா... பாப்பாவும் சமத்தா சாப்பிட்டுட்டு தூங்குங்க. சாயங்காலம் அவங்களோட விளையாட லாம்..." என்றதும், ரியாவும் சமத்தாகச் சாப்பிட்டு விட்டு விளையாடிய களைப்பில் உறங்கி விட்டது.

பால்கனி கதவு காற்றுக்கு மூடிய சத்தத்தில்தான் கதிர் கண் விழித்தான். அவன் தோளில் சந்தியா தலை வைத்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளை முத்தமிட எழுந்த ஆவலை... அவளிடம் அப்படிப் பேசி விட்டுத் தானே அவள் ஆசையைத் தூண்டி விடுவது போல் நடந்து கொள்வது சரியில்லை என்று தோன்றியதால்... முத்தமிடும் எண்ணத்தைக் கைவிட் டவன்... செல்லை எடுத்து நேரத்தைப் பார்க்க... அப்போது மணி இரண்டு.

பாலாவும் ராஜியும் தங்களுக்காகச் சாப்பிடாமல் காத்திருப்பார்களே என்று அவன் தூங்கிக் கொண்டிருந்த சந்தியாவை எழுப்ப... சந்தியா இன்னும் கதிரை இறுக அணைத்துக் கொண்டு உறங்கினாள்.

இது வேலைக்காகாது என்று உணர்ந்தவன்... எழுந்து உட்கார்ந்து சந்தியாவைப் பிடித்து உலுக்க... சந்தியா மெதுவாகக் கண் திறந்தாள்.

அவளிடம், "பாலாவும் ராஜியும் காத்திருப்பாங்க..." என்றதும், அவளும் வேகமாக எழுந்து முகம் கழுவி வர... இருவரும் வெளியே வந்தனர். வெளியே டைனிங் டேபிளில் ராஜியும், பாலாவும் சாப்பிட எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டிருக்க... சந்தியாவும் அவர் களோடு சேர்ந்து கொண்டாள்.

'நாலு பேருதானே... எதுக்கு இத்தனை தட்டு...' என்று சந்தியா யோசிக்கும் போதே... வீட்டின் அழைப்பு மணி அடித்தது. ஒரு தடவை இல்லை மூன்று முறை.

"வந்துடுச்சுங்கடா... வானரங்க!" என்று சொல்லிக் கொண்டே பாலா சென்று கதவைத் திறக்க...

அவனைத் தள்ளியபடி சித்தார்த், அனு மற்றும் ஸ்ரீஜா உள்ளே வந்தனர்.

"ஹாய்... ஹாய்..." என்று மூவரும் ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைய... தன் நண்பர்களைப் பார்த்ததும், சந்தியாவிற்கும் உற்சாகம் தொற்றிக் கொள்ள... அவளும் அந்த வானரக் கூட்டத்தோடு ஐக்கியமானாள்.

பாலாவின் வீட்டில் மதிய உணவு பெரும் ஆர்ப் பாட்டத்துடன் நடந்தது. அவரவருக்கு வேண்டியதை அவர்களே பரிமாறிக் கொண்டு சாப்பிட்டனர். பேசிக் கொண்டே சாப்பிட்டதால் உணவு நேரம் முடியத் தாமத மானது.

உணவு அருந்தியதும், கீழே இருந்த பார்க்கில் சென்று அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரம் சென்று அங்கிருந்த ஷட்டில் கோர்ட்டில் கதிரும், சித்தார்த்தும் ஷட்டில் விளையாட... மற்றவர்கள் அமர்ந்து வேடிக்கை பார்த்தனர்.

நண்பர்களைப் பார்த்ததும் சந்தியாவும் மகிழ்ச்சி யாகத்தான் இருந்தாள். ஆனால் நேரம் செல்லச் செல்ல... கையில் இருந்த செல்லில் நேரம் பார்ப்பதும், கதிரைப் பார்ப்பதுமாக இருந்தாள்.



இன்று இரவு அவன் பெங்களூர் கிளம்பி விடுவான் என்பதால்... அவள் மனம் வேறு எதிலும் ஈடுபட மறுத்தது.

விளையாட்டில் கவனமாக இருந்த கதிர், முதலில் இதைக் கவனிக்கவில்லை. சிறிது நேரம் சென்று சந்தியாவின் முகத்தைப் பார்த்த கதிருக்கு... அதில் இருந்த சோர்வு நன்றாகவே தெரிந்தது.

அதனால் அந்த ஆட்டத்தோடு விளையாட்டை முடித்துக் கொண்டவன், மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டு சந்தியாவோடு அங்கிருந்து கிளம்பி விட்டான்.

முதலில் அவன் நண்பர்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றவன்... நண்பனிடம் வாங்கிய வண்டியின் சாவியைக் கொடுத்து விட்டு, அங்கிருந்த அவனுடைய தோள் பையை எடுத்துக் கொண்டு, அவர்களிடம் விடை பெற்று வெளியே வந்து, அங்கே காத்திருந்த சந்தியாவின் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு நடந்தான்.

"சாரி சந்தியா! உன்னை உள்ளே கூட்டிட்டுப் போகலைன்னு நினைக்காதே. பேச்சுலர்ஸ் இல்லையா! கொஞ்சம் அப்படி, இப்படி இருப்பாங்க. அதனாலதான்..."

"பரவாயில்லை மாமா. எனக்குத் தெரியும்."

"பாரு சந்தியா! நாம மட்டும் இருக்கும்போது என்னை இனி மாமான்னு கூப்பிடாதே. கதிர்ன்னே கூப்பிடு..." என்று கதிர் சொல்ல...

சந்தியா பதில் சொல்லாமல் புன்னகைக்க...

கதிர் விழிகளால் 'ப்ளீஸ்' என்று கெஞ்ச... சந்தியா சம்மதமாகத் தலையசைத்தாள்.

இருவரும் அப்போது வந்த பேருந்தில் ஏறிக் கடற்கரைக்குச் சென்று, கூட்டம் அதிகம் இல்லாத இடத்தில் அமர்ந்தனர். இருவருக்கும் பேச நிறைய விஷயம் இருந்தாலும்... இன்னும் சிறிது நேரத்தில் பிரிய வேண்டும் என்பதைப் பற்றியே மனம் நினைக்க... அந்தத் தவிப்பில் அமைதியாக இருந்தனர்.

சந்தியா கதிரின் தோளில் சாய்ந்து கடலைப் பார்த்தபடி இருந்தாள். கதிர் அவளை அணைத்தபடி அமர்ந்திருந்தான்.

இரவு எட்டு மணி வரை அங்கே இருந்து விட்டுப் பின் இருவரும் உணவகத்திற்குச் சென்றனர். சந்தியா சரியாகவே சாப்பிடவில்லை.

கதிர் அவளைக் கெஞ்சிக் கொஞ்சிச் சாப்பிட வைத்தான்.

சந்தியாவின் விழிகள் எப்போது வேண்டுமானாலும் அணையை உடைத்துக் கரையைக் கடக்கும் நிலையில் இருந்தது. கதிருக்கு அவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

சந்தியாவை ஹாஸ்டலில் விட்டு விட்டுக் கதிர் கிளம்ப... சந்தியா அவனைப் போகவே விடவில்லை.

"ட்ரெயின் பதினொரு மணிக்குத்தானே! ப்ளீஸ் கதிர்... இன்னும் கொஞ்ச நேரம் இருங்க..." என்று சந்தியா அழுகையை அடக்கிய குரலில் சொல்ல... கதிரும் சந்தியாவோடு பேசியபடி ஹாஸ்டலின் வெளியே நின்றான்.



ஹாஸ்டலில் இருக்கும் பெண்கள் சிலர் சந்தியாவையும், கதிரையும் ஆர்வமாகப் பார்ப்பதைச் சந்தியா கவனித்தாலும்... அவர்களைக் கண்டுகொள்ளவில்லை.

அரை மணி நேரம் போல் பேசிக் கொண்டிருந்த கதிர், "இப்ப கிளம்பினா சரியா இருக்கும். கிளம்பட்டுமா?" என்று சந்தியாவின் முகம் பார்க்க...

அவள் விழிகள் கண்ணீரைப் பொழிந்தது.

சந்தியாவின் முகத்தைத் தன் கரங்களால் அழுந்தப் பற்றிய கதிர், தன் இரு பெரு விரல்களால் அவள் விழிநீரைத் துடைத்தபடி, "அழக் கூடாது. சீக்கிரம் திரும்ப வரேன்..." என்றவன், அவள் நெற்றியில் லேசாக முட்ட...

"ஒரு தடவை முட்டிட்டு விட்டாக் கொம்பு வரும். இன்னொரு தடவை முட்டுங்க..." என்று சந்தியா குறும்புப் புன்னகையுடன் சொல்ல... கதிர் அவள் சொன்னபடி செய்து விட்டு, அவளிடம் விடை பெற்றுச் சென்றான்.

சந்தியா கதிர் சென்ற பின்னரும் அங்கேயே சிறிது நேரம் நின்று, தன் மனதை நிலைப்படுத்திய பின்னர் ஹாஸ்டலின் உள்ளே சென்றாள்.

அங்கே உள்ளே சந்தியாவின் வருகைக்காக, அவள் தோழிகள் ஆவலுடன் காத்திருந்தனர்.

"மணமகளே, மருமகளே வா வா...
உன் வலது காலை எடுத்து வைத்து வா... வா..."

என்ற பாட்டில் ஆரம்பித்து,

"நினைச்சபடி நினைச்சபடி
மாப்பிள்ளை அமைஞ்சதடி...
உனக்கெனப் பிறந்தானோ...
உயிருடன் கலந்தானோ...?"

என்று வரிசையாக, அடுத்தடுத்த பாடலுக்குத் தாவ... சந்தியாவும் அவர்களோடு ஆடிப் பாடி மகிழ்ந்தாள்.

எல்லாம் நன்றாகத்தான் சென்று கொண்டிருந்தது.

அப்போது அங்கே வந்த சீனியர் மாணவிகளில் சிலர்... "என்ன... உன் ஆளோட ஒரே ரொமான்ஸ் போலிருக்கு..." என்று ஆரம்பிக்க...

அது அங்கிருந்த மற்ற மாணவிகளின் கவனத் தையும் கவர... எல்லோரும் சேர்ந்து சந்தியாவைப் பயங்கரமாகக் கிண்டல் செய்ய ஆரம்பித்தனர்.

சாதாரணக் கேள்விகளில் ஆரம்பித்து, அந்தரங்க மான கேள்விகள் வர... சந்தியாவிற்குக் கோபம் வந்து விட்டது.

அவள் முகத்தில் தெரிந்த கோபத்தைக் கவனித்து விட்டு, இன்னும் அவளை அதிகமாகக் கிண்டல் செய்தனர்.

"நம்ம காலேஜ் ஹாஸ்பிடல்ல சந்தியாவுக்கும் ஒரு பெட் இப்பவே அட்வான்ஸ் புக்கிங் பண்ணி வச்சிட லாமா?" என்று ஒருத்தி சொல்ல... மற்றவள் எதற்கு என்று தெரியாதது போல் கேட்க...

"சந்தியாவும் அவங்க ஆத்துக்காரரும் இருக் கிற வேகத்தைப் பார்த்தா... இன்னும் பத்து மாசத்துல



டெலிவரி இருக்காது... அதுக்குத்தான்!" என்றபோது அங்கிருந்த அனைவருமே சிரித்தனர்.

மேலும் அவர்கள் எதுவும் பேசும் முன்... சந்தியா அங்கிருந்து வேகமாக அவள் அறைக்குச் சென்று விட்டாள். அனு அங்கே இல்லை. அதனால் சந்தியா சிறிது நேரம் மனம் விட்டு அழுதாள்.

அவளின் தனிப்பட்ட விஷயத்தை மற்றவர்கள் பேசியது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் இதற்கு முன் இவ்வளவு அந்தரங்கமான பேச்சுகளைக் கேட்டதும் இல்லை. அதனால் வந்த அழுகை.

அந்த நேரம் பார்த்து கதிர் அழைக்க...

"ஹாய் சந்தியா! ஸ்டேஷன் வந்துட்டேன். நீ என்ன பண்ற?"

"ரூம்ல இருக்கேன் மாமா."

"மாமா இல்லை... கதிர்..." என்று அவன் திருத்திய போது...

சந்தியா, "சரி..." என்றாள்.

அவள் குரலில் இருந்தே அழுதிருக்கிறாள் என்று புரிந்து கொண்ட கதிர்... அவன் பிரிவால் அழுகிறாள் என்று நினைத்தவன்... இனி சந்தியாவை முடிந்த அளவு சென்று பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று நினைத் தான்.

தான் ஒவ்வொரு முறை சென்று விட்டு வரும் போதும்... அவள் வருத்தம் மேலும் அதிகம்தான் ஆகும்.

அதற்குச் சில மாதங்கள் பார்க்காமல் இருப்பதே மேல் என்று நினைத்தான்.

சந்தியாவும் அந்த முடிவிற்குத்தான் வந்திருந்தாள். இந்த மாதிரியான பேச்சுகளைக் கேட்பதற்குக் கதிரைப் பார்க்காமல் இருப்பதே பரவாயில்லை என்று நினைத் தாள்.

கதிர் தினமும் சந்தியாவை அழைத்துப் பேசு வான். ஆனால் பெரும்பாலும் அவன் பேசுவது அவள் நலனைப் பற்றியும், படிப்பைப் பற்றியும் மட்டும்தான் இருக்கும். அவள் மனதில் ஆசை வளர்க்கும் விதமாக எதுவும் அவன் பேசுவதில்லை.

கதிர் சந்தியாவைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லவும் இல்லை. சந்தியா அவனை அழைக்கவும் இல்லை. கதிர் ஏன் என்று அதைப் பற்றி யோசிக்கவும் இல்லை.

நாட்கள் வேகமாகச் சென்றன.

பெரியசாமி கதிரையும் சந்தியாவையும் ஒரு முறை ஊருக்கு வந்து விட்டுச் செல்லும்படி அழைத்துக் கொண்டே இருந்தார்.

திருமணம் முடிந்து சென்ற பின்னர் இருவரும் இன்னும் ஊர் செல்லவில்லை.

முதல் முறை மட்டும் இருவரும் சேர்ந்து வந்து விட்டு, பிறகு அவரவர் வசதிப்படி வந்து போகட்டும் என்று பெரியசாமி நினைத்தார்.



சந்தியாவுக்கு விடுமுறை இல்லாததால் கதிரும் ஊருக்கு வராமல் இருந்தான்.

சந்தியாவிற்குத் தீபாவளிக்குத்தான் மூன்று நாட்கள் விடுமுறை கிடைத்தது. கதிரும் சந்தியாவும் மதுரை ரயில் நிலையத்தில் சந்தித்து, அங்கிருந்து ஒன்றாக ஊருக்குச் சென்றனர்.

இருவரும் ரொம்ப நாள் கழித்து மீண்டும் சந்தித்த மகிழ்ச்சியில்... பஸ்ஸில் ஊருக்குச் செல்லும்வரை பேசிக் கொண்டே வந்தனர்.

கதிரின் வீட்டிற்குச் சென்றபோது... அவன் பெற் றோர் இருவரும் இவர்கள் வருகையை எதிர்பார்த்து வாசலிலேயே நின்றிருந்தனர். இவர்களைப் பார்த்ததும் மகிழ்ச்சியாக வரவேற்றுப் பேசினர்.

லக்ஷ்மி வித விதமாகக் காலைப் பலகாரம் செய் திருந்தார். இவர்கள் வந்து சேரவே பத்து மணியானதால்... முதலில் சாப்பிட்டு விட்டுக் குளிக்கும்படி சொல்ல... சந்தியாவும் கதிரும் சரி என்று சாப்பிட அமர்ந்தனர்.

இவர்கள் சாப்பிட்டு முடிக்கும் வேளையில் வேதவல்லி வந்து விட... சந்தியா தன் அம்மாவைப் பார்த்த மகிழ்ச்சியில் அவருடன் பேச அமர்ந்து விட்டாள்.

கதிர் சந்தியாவைப் பார்த்தபடி மாடிக்குச் சென்று விட்டான். வீட்டுப் பெண்கள் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து பேச... லக்ஷ்மி பேசியபடி மதியச் சமையல் முடித்து விட்டார்.

"மதியம் சாப்பிடும் முன்னாடி போய்க் குளிச்சிட்டு வந்திடு, சந்தியா!" என்று லக்ஷ்மி அவளை விரட்ட...

"இதோ போறேன் அத்தை!" என்ற சந்தியா மேலும் அரை மணி நேரம் இருந்து அரட்டை அடித்து விட்டே சென்றாள்.

சந்தியா அவர்கள் அறைக்கு வந்தபோது கதிர் அங்கே இல்லை. மேல் மாடிக்குச் சென்றிருந்தான் போல... மேல் மாடிக் கதவு திறந்திருந்தது.

சந்தியா குளித்து முடித்து அவனைப் பார்ப்போம் என்று நினைத்தவள்... தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்து உடைகளை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள்.

கதிர் குளித்து முடித்திருந்தவன்... தன் உள்ளாடைகளை உலர்த்தவே மாடிக்குச் சென்றிருந்தான். கதிர் திரும்பி வந்தபோது, குளியல் அறையிலிருந்து நீர் விழும் சத்தம் கேட்க... சந்தியா உள்ளே இருப்பதைத் தெரிந்து கொண்டான்.

சந்தியா குளித்து முடித்து வெளியே வந்தபோது... கதிர் மெத்தையில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

கதிர் சந்தியாவைக் கண்டுகொள்ளவே இல்லை. பேப்பர் படிப்பதிலேயே கவனமாக இருந்தான்.

சந்தியா ஈரமான கூந்தலை விரித்து விட்டவள்... முகத்திற்கு ஒப்பனை செய்து நெற்றியில் பொட்டை



வைத்துக் கொண்டே கதிரைப் பார்க்க... அவன் அப்போதும் பேப்பர்தான் படித்துக் கொண்டிருந்தான்.

சந்தியா நைட்டியில் இருந்தாள். புடவை மாற்ற வேண்டும்.

கதிர் இருந்ததால்... கீழே சென்று மாற்றுவோம் என்று நினைத்துக் கையில் புடவையை எடுத்துக் கொண்டு திரும்ப... ஒரு அடி எடுத்து வைத்தவள்... அடுத்த அடி வைப்பதற்குள் கட்டிலில் கிடந்தாள்.

அவளைத்தான் கதிர் இழுத்துக் கட்டிலில் போட்டிருந்தானே. சந்தியா என்ன நடந்தது என்று யோசிப்பதற்குள், கதிர் அவள் எழ முடியாதபடி அவளின் இரண்டு பக்கமும் கையூன்றி, அவள் மேல் கவிழ்ந்தது போல் படுக்க,

சந்தியாவிற்கு வெட்கமாக இருந்தது. அவள் கதிரைப் பிடித்து விலக்க... விலக மறுத்தவன், சந்தியாவின் தோள் வளைவில் முகம் புதைத்து, "எவ்வளவு நேரம்டி வெயிட் பண்றது? மூணு மாசம் கழிச்சுப் புருஷனைப் பார்க்கிறோமே... அவனைக் கவனிப்போம்னு நினைக்காம மெதுவா ஆடி அசைஞ்சு வர்ற..." என்று கேட்டபடி கதிர் மேலும் முன்னேற, சந்தியாவிற்கும் அவனின் வெப்பம் தொற்றிக் கொண்டது.

கதிர், சந்தியாவின் முகம் எங்கும் முத்தமிட்டவன், அவள் இதழ்களில் கவி எழத ஆரம்பித்தான்.

அவனுக்கு அந்த முத்தமெல்லாம் பத்தவே இல்லை. சந்தியாவிடமிருந்து விலகியவன், அவள் நைட்டியைக் கழட்டப் பார்க்க,

சந்தியா, அவன் கைகளைப் பிடித்து, "வேண்டாம் மாமா... இல்லை, கதிரு... பயமா இருக்கு...!" என்று உளறிக் கொண்டிருந்தாள்.

கதிர், அவள் செல்வதைக் காதில் விழுந்த மாதிரியே காட்டிக் கொள்ளாமல், அவன் வேலையில் தீவிரமாக இருக்க... அப்போது கீழே இருந்து வக்ஷ்மி இருவரையும் சாப்பிட அழைத்தார்.

வேகமாக ஓடிக் கொண்டிருந்தவன் திடீரென்று நின்றால் எப்படி இருக்கும்...? கதிரும் அந்த நிலையில் தான் இருந்தான். கதிர், சந்தியாவிடமிருந்து விலகிப் படுக்க... சந்தியாவிற்கு அவனின் ஏமாற்றம் நன்றாகவே புரிந்தது.

புடவையைக் கையில் எடுத்த சந்தியா, குளியல் அறையில் நின்று புடவையைக் கட்டிக்கொண்டு வந்தாள். அவள் திரும்பி வந்த போது, கதிர் அதே நிலையில்தான் இருந்தான்.

"சாப்பிடப் போலாமா மாமா...?" என்று சந்தியா மெதுவாகக் கேட்க,

"நீ போ. எனக்குப் பசி இல்லை. நான் பிறகு சாப்பிட்டுக்கிறேன்," என்று கண்ணைத் திறக்காமலே சொன்ன கதிரின் குரலில் அவ்வளவு கோபம் இருந்தது.

"சாப்பிட்டதும் எங்க வீட்டுக்குப் போகலாமா...?" என்ற சந்தியா கதிரின் முகம் பார்க்க... அவன் திரும்பி அவளை முறைத்தான். அவன் கோபத்திற்குப் பயந்து சந்தியாவும் மேலே எதுவும் பேசாமல் சென்றாள்.



சந்தியா மட்டும் வருவதைப் பார்த்த லக்ஷ்மி, "கதிர் வரலையா...?" என்று கேட்க,

"அவங்களுக்குப் பசி இல்லையாம். பிறகு சாப்பிடுறாங்களாம்," என்றாள்.

வீட்டுப் பெண்களோடு சந்தியாவும் சேர்ந்து சாப் பிட்டாள். சாப்பிட்டதும் அவள் அம்மாவோடு தங்கள் வீட்டிற்குச் சென்றாள்.

மூன்று மணி போல் எழுந்து வந்த கதிர், அவன் அம்மா பரிமாறச் சாப்பிட்டான். சிறிது நேரம் பெரிய சாமியோடு உட்கார்ந்து பேசியவன், அவர் ஓய்வு எடுக்கச் சென்றதும், அவனும் அவன் அறைக்குச் சென்று கட்டிலில் படுத்தான்.

கதிருக்கே தான் இன்று சந்தியாவிடம் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது என்று புரிந்தது. 'அவள் படித்துக் கொண்டிருக்கிறாள். அதைத் தான் அடிக்கடி மறந்து விடுகிறோம். இனி கவனமாக இருக்க வேண்டும்!' என்று நினைத்தவன், சோலையைப் பார்க்கச் சென்றான்.

கதிர், சோலையோடு அதிக நேரம் இருந்து விட்டு, இரவு உணவை அவனுடனே வெளியே ஹோட்டலில் முடித்துக் கொண்டு, இரவு பத்து மணிக்கு மேல் தங்கள் வீட்டிற்கு வந்தவன், அவன் அறையில் சென்று பார்த்தபோது, சந்தியா அங்கே இல்லை.

கதிர் சென்று தன் அம்மாவிடம் விசாரிக்க, "அவ அவங்க அம்மாவோட போனவ திரும்பி வரலையே கதிரு. ஒரு வேளை இன்னைக்கு அங்கே தங்குவோம்னு நினைச்சாளோ என்னவோ...!" என்றார்.

கதிர், அவரிடம் பதில் சொல்லாமல் தங்கள் அறைக்கு வந்தவன், சந்தியாவைக் கைபேசியில் அழைக்க,

"சொல்லுங்க மாமா! எதுக்குக் கூப்பிட்டீங்க?" என்று சந்தியா தூக்கக் கலக்கத்தில் பேசக் கதிருக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை.

"இங்கே இல்லாம எங்கே போன நீ?" என்றான் அடக்கிய கோபத்துடன்.

"அம்மா வீட்ல இருக்கேன்," என்று சந்தியா சொல்லி முடிக்கும் முன்,

"நீ அங்கே தங்கப் போறேன்னு என் கிட்ட சொல் லிட்டுப் போனியா...?" என்று அவன் அடுத்த கேள்வி கேட்க,

"நான் உங்களையும்தான் இங்கே வர்றீங்களான்னு கேட்டேன்!" என்றாள் சந்தியா.

அவளின் பதில் கதிருக்கு மேலும் கோபத்தைத் தூண்ட, கண்களை அழுந்த மூடித் திறந்தவன், "நான் ஏன் அங்கே வர மாட்டேன்னு உனக்கு நல்லாத் தெரி யும். அப்படித் தெரிஞ்சும் கேட்கிறே...! என் கிட்ட சொல்லாமத்தானே போன நீ... இனி திரும்பி வராதே. உங்க அம்மா வீட்லேயே இருந்துக்கோ...!" என்று சீற்ற மாகச் சொல்லி விட்டுப் போனை வைத்து விட்டான்.

அவனே சந்தியாவிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்றுதான் நினைத்தான். ஆனால், அவளே விலகிச் சென்றது மனதில் மிகவும் வலித்தது.



சந்தியாவிற்கே தான் செய்தது தவறு என்று தெரியும். அவளுக்கு எங்கே எல்லை மீறி விடுவோமோ என்று பயம். ஹாஸ்டலில் சும்மாவே கேலி செய்கிறார்கள், இதில் கர்ப்பம் எதுவும் ஆகிவிட்டால், அவளைக் கேலி செய்தே ஒரு வழி ஆக்கி விடுவார்கள். படிக்கும் போது இதெல்லாம் வேண்டாமே என்று நினைத்தாள்.

இன்னொன்று, அவளுக்கு அவளிடமே நம்பிக்கை இல்லை. கதிரின் அருகில் இருந்தால், அவள் மற்றதை மறந்து, அவனை மட்டும்தான் நினைக்கிறாள். அவனோடு சேரத்தான் அவள் மனமும், உடலும் விரும்புகிறது. அதனால்தான் அவள் அம்மா வீட்டிலேயே இருந்து விட்டாள்.

திருமணம் செய்து கொண்டு, தான் ரொம்பவும் கதிரைக் கஷ்டப்படுத்துகிறோம் என்று அவளுக்குப் புரிந்தது. தூங்காமல் சந்தியா நடை பயில... அப்போது அங்கே வந்த துரை, "இன்னும் தூங்கலையா...?" என்று சந்தியாவைப் பார்த்துக் கேட்க,

"ம்ம்... தூங்கணும்...!" என்றவள், மேலே துரை எதுவும் கேள்வி கேட்கும் முன் உள்ளே சென்று விட்டாள். இன்னும் அப்பாவும், மகளும் முன் போல் பேச ஆரம் பிக்கவில்லை.

தங்கள் அறைக்கு வந்த துரை, வேதவல்லியிடம், "கதிரும் தானே வந்திருக்கான்! பிறகு ஏன் சந்தியா இங்கே தங்கினா? அவங்க வீட்ல தானே இருந்திருக்கணும்...!" என்றவர்,

"என்னன்னு தெரியலை தூங்காம இருக்கு. நீ போய் அதோட பேசிட்டு அங்கேயே படு...!" என்று தன் மனைவியை மகளுக்குத் துணைக்கு அனுப்பி விட்டுப் படுத்தார். சந்தியாவின் கவலை படிந்த முகம், அவரைத் தூங்க விடவில்லை.

"இனிமே நீ அங்கேயே இரு... இங்கே வராதே!" என்று கதிர் சொன்னதே காதில் கேட்க... சந்தியா தூங்க முயன்று தோற்றவள், "அம்மா, என்னை மாமா வீட்ல கொண்டு போய் விடுறீங்களா...?" என்று எங்கே அவள் அம்மா திட்டப் போகிறார்களோ என்று பயந்து கொண்டே கேட்க,

வேதவல்லி உடனே எழுந்தவர், "நான் அப்பவே கொண்டு போய் விடுறேன்னு சொன்னேன். நீ தான் கேட்கலை...!" என்றவர், துரையிடம் சென்று, "சந்தியா அங்கே போறேன்னு சொல்றா...!" என்றதும்,

'ஏன், எதற்கு?' இப்படி எந்தக் கேள்வியும் கேட்கா மல், துரையும் அவர்களுடன் துணைக்குச் சென்றார்.

அங்கே தூக்கம் வராமல் கதிரும் மேல் மாடியில் உலாவிக் கொண்டுதான் இருந்தான். சந்தியா அவள் பெற்றோருடன் வருவதைப் பார்த்த கதிர், வேகமாகக் கீழே இறங்கிச் சென்றான்.

துரை வெளி வாசலில் நிற்க, வேதவல்லி சந்தியா வோடு உள்ளே வந்தவர், கதவைத் தட்டச் செல்லும் முன் கதிரே கதவைத் திறந்து விட்டான்.

கதிரைப் பார்த்ததும் வேதவல்லி, "ரொம்ப நாள் கழிச்சுப் பார்த்தோம்ல... அதுதான் ரொம்ப நேரம் பேசிட்டு



இருந்திட்டோம்...!" என்று அவராகவே ஒரு காரணம் சொல்ல,

"பரவயில்லை அத்தை, உள்ளே வாங்க...!" என்று வீட்டுக்குரியவனாகக் கதிர் அழைக்க, "காலையிலே வரேன்...!" என்று விடைபெற்று வேதவல்லி கிளம்ப, கதிரும், சந்தியாவும் மாடிக்குச் செல்வதை லக்ஷ்மியும், பெரியசாமியும் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர்.

அறைக்கு வந்த சந்தியா தூங்குவது போல் கண் மூடிப் படுத்துக் கொள்ள, அவளைத் தட்டி எழுப்பிய கதிர், "உன்கிட்ட கொஞ்சம் பேசணும், எழுந்து உட்காரு...!" என்றான்.

'என்ன கேட்கப் போகிறானோ...?' என்று பயந்து கொண்டே சந்தியா எழுந்து உட்கார்ந்தாள்.

"ஏன் உங்க வீட்டுக்குப் போயிட்டு நீ நைட் திரும்பி வரலை?" என்று கதிர் நேரடியாக அவள் முகத்தைப் பார்த்துக் கேட்க,

சந்தியாவிற்கு உண்மையான காரணம் சொல்ல விருப்பம் இல்லை. அதனால், "சும்மாதான். ரொம்ப நாள் கழிச்சுப் போனேன் இல்லை, அதுதான்...!" என்று சமாளிக்கப் பார்க்க,

அவளையே பார்த்த கதிர், "பொய் சொல்லாதே சந்தியா... உனக்கு நான் மதியம் உன் கிட்டே அப்படி நடந்துக்கிட்டது பிடிக்கலை.

"நீ வேண்டாம்னு சொன்னா நான் என்ன உன்னை வற்புறுத்தவா போறேன். எனக்கே நான் அப்படி நடந்

துக்கிட்டது தப்புன்னு தெரியும்தான். உன்னை ரொம்ப நாள் கழிச்சுப் பார்த்ததும் என்னைக் கட்டுப்படுத்த முடியலை.

"அதுக்காக நீ என்னை இப்படிக் கேவலப் படுத்தி யிருக்க வேண்டாம். நான் எதுவும் செஞ்சிடுவேன்னு பயந்துதானே... நீ உங்க வீட்லேயே இருந்துட்டே...?" என்று கதிர் கேட்டபோது... சந்தியாவிற்கு அவனுக்கு எப்படி விளக்கிப் புரிய வைப்பது என்று எல்லாம் தெரிய வில்லை. அதனால் அவள் அழுதாள்.

அவள் மறுக்காமல் அழுததும், தான் சொன்னது தான் உண்மை என்று நினைத்துக் கொண்ட கதிர், "நீ என்னைப் பார்த்துப் பயந்து ஓட வேண்டாம். இனி என் விரல் கூட உன் மீது படாது...!" என்றவன், தரையில் தலையணையைப் போட்டுப் படுத்து விட்டான்.

"ஒரே ரூம்ல இருந்தாலும்... எனக்கு உன் மேல இனி எந்த ஆசையும் வராது. அதனால பயப்படாமத் தூங்கு...!" என்றவன், குப்புறப் படுத்து விட... சந்தியாவும் மேற்கொண்டு எதுவும் பேசாமல் அமைதியாகப் படுத்து விட்டாள்.

மறுநாள் காலை சந்தியா எழுந்த போது, கதிர் அங்கே இல்லை. அதன் பிறகு சந்தியா அறையில் இருக்கும் வேளையில், கதிர் அந்த அறைக்கு வரவே யில்லை.

மாலை அவளை அழைத்துக் கொண்டு சோலை யின் வீட்டிற்குச் சென்றான். சித்ரா கர்ப்பமாக இருப்ப



தால், அவளைச் சென்று இருவரும் பார்த்துவிட்டு வந்தனர். கதிரும் சந்தியாவும் சோலை, சித்ராவிடம் எதையும் காட்டிக் கொள்ளாமல் நடந்து கொண்டனர்.

துரை, வேதவல்லி இருவருமே வந்து, சீர் கொடுத்துத் தலை தீபாவளிக்கு அழைக்க, கதிர், "நாளை காலை வருகிறோம்!" என்றான்.

அதன்படியே தீபாவளி அன்று காலை சந்தியாவுடன் அவள் வீட்டிற்குச் சென்றவன், அங்கே பேருக்குச் சாப்பிட்டு விட்டு, சந்தியாவை அங்கேயே விட்டு விட்டு, அவன் மட்டும் உடனே கிளம்பி விட்டான்.

வேதவல்லிக்குக் கதிரின் செயல் கவலையை அளித்தது. சந்தியாவும் அவரிடம் எதுவும் சொல்ல மறுத்தாள்.

இன்னும் துரை மீது இருந்த கோபம் கதிருக்குப் போகவில்லை என்று நினைத்துக் கொண்டார்.

இரவு கதிரும் சந்தியாவும் ஒன்றாகத்தான் ஊருக்குக் கிளம்பினார்கள். சந்தியாவைச் சென்னை செல்லும் பஸ்சில் ஏற்றி விட்டவன், இறங்கும் முன் அவள் முகம் பார்க்க... எப்போதும் கதிர் அவளை விட்டுப் பிரியும் போது இருப்பாளே... இப்போதும் அது போலத்தான் இருந்தாள்.

அதைப் பார்த்ததும் கதிரின் மனம் இளக, "பார்த்துப் போ சந்தியா. ஹாஸ்டல் சாப்பாடு பிடிக்கலைன்னா, வெளியே வாங்கிச் சாப்பிடு. செலவைப் பத்திக் கவலைப் படாதே.

"நான் தேவையான அளவு பணம் உன் கணக்குல போட்டிருக்கேன். நீ அதை எடுத்துச் செலவு செய்றியான்னு நான் பார்ப்பேன்," என்றவன், பேருந்தை விட்டுக் கீழே இறங்க.... சந்தியாவிற்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

சந்தியாவிற்குத் தெரியும், கதிர் அவளிடம் பேசினாலும், அவன் கோபம் இன்னும் போகவில்லை என்று. இனி ஒரு நாளும் அவனாக அவளைத் தேடி வரமாட்டான் என்றும் தெரியும்.

## 15

மறுநாள் கல்லூரிக்கு வந்த சந்தியாவின் முகத்தில் அத்தனை சோகம். எப்போது கதிரை விட்டுப் பிரிந்து வந்தாலும், இரண்டு நாட்களுக்குச் சந்தியா அப்படித்தான் இருப்பாள் என்பதால், சித்தார்த் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இரண்டு நாட்கள் கடந்த பின்னரும் சந்தியா அப்படியே இருக்க, சித்தார்த், அவளிடம் தனிமையில் விசாரித்தான். கதிரிடமே சொல்லவில்லை. சித்தார்த்திடம் சொல்லும் விஷயம் இல்லை என்பதால்... சந்தியா வேறு ஏதோ காரணம் சொல்லிச் சமாளித்தாள்.

சித்தார்த்துக்கு அவள் ஏதோ காரணம் சொல்லிச் சமாளிக்கிறாள் என்று புரிந்ததால், அனுவை விசாரித்தான். சந்தியாவும், அனுவும் ஒரு அறையில் தங்கியிருப்பதால், அவளுக்கு ஏதாவது தெரியலாம் என்று நினைத்தான்.



"கதிரோட எதுவும் பிரச்சனை இருக்கிற மாதிரி தெரியலை சித்து. ஹாஸ்டல்லதான் சந்தியாவை ரொம்பக் கிண்டல் செஞ்சு ஓட்றாங்க. ஒரு வேளை அதனால அப்படி இருக்காளோ என்னவோ...!" எனறாள் அனு.

சித்தார்த்துக்குப் புரியவேயில்லை. கல்லூரியில் கிண்டல் கேலி சகஜம்தானே! இதில் சந்தியா வருத்தப்பட என்ன இருக்கிறது என்று நினைத்தான். அவன் என்ன நினைக்கிறான் என்று புரிந்து கொண்ட அனு, தயங்கித் தயங்கி "கிண்டல்னா சாதாரணமா இல்லை சித்து... ரொம்பப் பெர்சனல் விஷயம் எல்லாம் கேட்கிறாங்க," என்றதும், சித்தார்த்தின் முகம் மாறியது.

"யாரெல்லாம்?" என்றான் கோபத்தை அடக்கிய குரலில்.

அவனின் கோபத்தை உணர்ந்த அனு, "சித்து, சந்தியாவுக்குக் கல்யாணம் ஆகிடுச்சு. இந்த விஷயத்துல நீ சந்தியாவுக்குச் சப்போர்ட் பண்ணிப் பேசினா, உன்னையும் அவளையும் சேர்த்து வச்சுத் தப்பாப் பேசுவாங்க. பிரச்சனை இன்னும் பெரிசுதான் ஆகும். அதனால கண்டுக்காம விட்டுற தான் நல்லது!" என்றாள்.

சித்தார்த் எதுவும் பதில் சொல்லவில்லை. அவன் அமைதியாக இருக்க, அனு அவனிடம் சொல்லிக் கொண்டு சென்றாள். சித்தார்த் என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தான்.

மறுநாள் கல்லூரிக்கு வந்த சந்தியாவிடம் சித்தார்த், "லூசு! ஏதாவது பிரச்சனைன்னா சொல்ல மாட்டியா...? மனசுக்குள்ளேயே வச்சுக் கஷ்டப்படுவியா...!" என்றதும்,

சந்தியாவிற்கு அவன் எதைச் சொல்கிறான் என்று புரியவில்லை. அவளைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த், "ஹாஸ்டல்ல உன்னைக் கேலி பண்றதைத் தான் சொல்றேன். சொல்லியிருக்கலாம் இல்ல..." என்றவுடன், சந்தியா உனக்கு எப்படித் தெரியும் என்பதைப் போல் பார்க்க... "அனு சொன்னா...!" என்றான்.

சந்தியா அமைதியாக இருக்க, சித்தார்த், "நீ ஹாஸ்டல்ல இருக்காம பேசாம ஒரு வீடு எடுத்துத் தங்கேன் சந்தியா. கூடத் துணைக்கு உங்க பாட்டியைக் கூட்டிட்டு வந்து வச்சுக்கோ!" என்று யோசனை சொல்ல,

"அதெல்லாம் சரி வராது சித்து. பாட்டி கிராமத்தை விட்டு இங்கே வர யோசிப்பாங்க. அதோட கதிர் மாமா இதுக்கெல்லாம் ஒத்துக்கமாட்டாங்க!" என்றாள் சந்தியா.

"அப்ப இதுக்கு என்னதான் வழி? நீ இப்படியே கஷ்டப்பட்டுட்டே இருப்பியா...?"

"விடு சித்து... கொஞ்ச நாள் போனா சரி ஆகிடும். நான் அதுக்கு ஃபீல் பண்ணலை. நான் கதிர் மாமாவுக்குக் கோபம் வர்ற மாதிரி நடந்துக்கிட்டேன். அதுதான் எனக்குக் கவலையா இருக்கு!" என்றாள்.

"பேசினா தீராத பிரச்சனை எதுவும் இல்லை சந்தியா... அவர் கிட்டே பேசு...!" என்று சித்தார்த் சொன்னதும், சந்தியா சரி என்றாள்.

கதிர் தானாகச் சந்தியாவை அழைக்கவில்லையே தவிர, சந்தியா அழைத்தால்... அது எந்நேரம் ஆனாலும் எடுத்துப் பேசுவான். அவளிடம் கணவன் என்ற



உரிமையில் பேசும் பேச்சுக்களைத் தவிர்த்து, பொதுவாகப் பேசி வைத்து விடுவான்.

சந்தியா ஒவ்வொரு முறை அவனை அழைக்கும் போதும், அவனிடம் தான் அன்று அப்படி நடந்து கொண்டதற்கான காரணத்தைச் சொல்லி விடத்தான் நினைப்பாள். ஆனால், ஏதோ ஒன்று சொல்ல விடாமல் தடுக்கும்.

சந்தியா வழக்கம் போல அன்றும் கதிரை அழைத்துப் பேசியவள், அவனின் ஒட்டாத பேச்சில் கோபம் வந்து, கதிர் பாதி பேசிக்கொண்டிருக்கும்போதே தொடர்பைத் துண்டித்து விட்டாள்.

கதிருக்கு சந்தியா வேண்டுமென்றே தொடர்பைத் துண்டித்தாள் என்று தெரியவில்லை. அதனால் அவள் மீண்டும் அழைப்பாள் என்று காத்திருந்தான். ஆனால், சிறிது நேரம் சென்ற பின்னரும் சந்தியா அழைக்கவில்லை என்றதும் கதிர், அவனே அவளை அழைத்தான்.

சந்தியா முதல் தடவை எடுக்கவில்லை. மீண்டும் கதிர் அழைத்ததும் எடுத்தாள். அவளுக்கு அழுகையில் தொண்டையை அடைத்துக் கொண்டு, வார்த்தையே வரவில்லை.

"ஒரு நிமிஷம் இருங்க கதிர், வரேன்!" என்று கஷ்டப்பட்டுச் சொன்னவள், எழுந்து சென்று முகம் கழுவி, தண்ணீர் குடித்து விட்டு வந்தாள்.

"சொல்லுங்க கதிர்! எதுக்குக் கூப்டீங்க?" என்று கேட்ட போது, அவள் அழுதிருக்கிறாள் என்று கதிருக்குப் புரிந்தது.

"எதுக்கு இப்ப அழற? ஏன் போனை பாதியில வச்சே?" இப்படிக் கதிர் கேட்ட எந்தக் கேள்விக்கும் சந்தியா பதில் சொல்லவில்லை.

"எதுக்குடி என்னை இப்படிப் பேசாம வதைக்கிறே? நீ தானே போன் பண்ண...? பிறகு எதுக்குப் பாதியில வச்சே?" என்று கதிர் கோபப்பட,

"தெரியாமப் பண்ணிட்டேன் சாமி... இனிமே பண்ணலை. நீங்க பொண்டாட்டி கிட்ட பேசுற மாதிரியா பேசுறீங்க. யாரோ தெரியாதவங்க கிட்ட பேசுற மாதிரி பேசுறீங்க. இதுக்குப் பேசாமலே இருக்கலாம். உங்க ளுக்கு என்னைப் பிடிக்கலை!" என்று சந்தியாவும் பதிலுக்குத் தன் ஆத்திரத்தைக் காட்டினாள்.

"சந்தியா, அநியாயமாப் பேசாதே. என்னை என்னதான் பண்ணச் சொல்ற...? புருஷன்னு உரிமை காட்டி நடந்தாலும் பிடிக்காம விலகிப் போனவ நீதான். இப்ப நான் விலகிப் போற மாதிரிச் சொல்ற?

"உனக்கு என்னதான்டி பிரச்சனை?" என்று கதிர் எரிச்சலாகக் கேட்க, சந்தியா மௌனமாக இருந்தாள்.

"என்னைக் கொல்ற சந்தியா நீ. உனக்கு என்னோட கஷ்டம் புரியவே இல்லையா...? நீ வேணும்னா வர்ற துக்கும், வேண்டாம்னா போறதுக்கும் நான் என்ன உன் வீட்டு வேலைக்காரனா?

"இனி நீ இழுக்கிற இழுப்புக்கு எல்லாம் என்னால ஆட முடியாது. கண்டதையும் யோசிக்காம படிக்கிற வழியைப் பாரு. பிறகு... இனி எனக்குப் போன் பண்ணாத. நீ பண்ணாலும் நான் எடுக்க மாட்டேன். என்னை மறந்திட்டுப் படிப்பை மட்டும் பாரு!" என்று கதிர் தொடர்பைத் துண்டித்து விட்டான்.



சந்தியா, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள். அவன் ஏதோ போனிலாவது பேசிக் கொண்டிருந்தான். இப்போது உள்ளதும் போனது.

கதிர் சொன்னது போல் பிறகு சந்தியா அழைத்த போதும் எடுக்கவில்லை. நேரிலும் வந்து அவளைப் பார்க்க வரவில்லை.

சந்தியா படிப்பதில் முழுக் கவனம் செலுத்தலானாள். உண்மையில் கதிருடன் பேசாமல் இருப்பது அவளை வேறு எந்தச் சிந்தனைகளுக்கும் அழைத்துச் செல்லாமல் இருந்தது. இல்லையென்றால், அவனுடன் பேசும் போது எல்லாம் அவனை விட்டுப் பிரிந்து இருக்கிறோமே... எப்போது அவனுடன் சேருவோம் என்று நினைக்கத் தோன்றும்.

சந்தியா அந்தத் தடவை நடந்த தேர்வில், அவள் கல்லூரியில் முதல் இடத்தைப் பிடித்ததும், அவளைக் கேலி செய்தவர்கள் கூட, திருமணத்திற்குப் பிறகும் அவள் நன்றாகப் படிப்பதைத் பார்த்துத் தங்கள் கிண்டல் கேலியைக் கைவிட்டனர்.

சந்தியா வெற்றிகரமாக இறுதி வருட மருத்துவப் படிப்பில் அடி எடுத்து வைத்தாள். இப்போது அவள் படிக்கும் கல்லூரியின் மருத்துவ மனையிலேயே அவள் இண்டர்ஷிப் சென்று கொண்டிருந்தாள். சித்தார்த் இறுதி

வருடப் படிப்போடு, மேற்படிப்புக்காகத் தயார் செய்து கொண்டிருந்தான்.

சந்தியாவிற்கு வாரத்தில் ஒரு நாள்தான் விடுமுறை என்பதால், வேதவல்லியும் துரையும் அவர்களே வந்து சந்தியாவைப் பார்த்து விட்டுச் செல்வார்கள்.

கதிர் மட்டும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை சொந்த ஊர் சென்று, தன் பெற்றோரைப் பார்த்து விட்டு வருவான். அப்போதும் அவன் சந்தியாவின் வீட்டிற்குச் செல்ல மாட்டான். வேதவல்லிதான் வந்து பார்ப்பார்.

துரையும் கதிரை வீட்டிற்கு வா என்று அழைக்க வில்லை. நடப்பதை எல்லாம் பார்க்கும் போது வேத வல்லிக்குத்தான் கவலையாக இருக்கும்.

மனக்கவலையோடு வேதவல்லிக்குச் சில நாட்க ளாகவே உடல் நிலையும் சரியில்லை. மாதவிடாய் காலங்களில் அவருக்கு அதிக உதிரப்போக்கும், வலியும் இருந்தது.

மாதவிடாய் நிற்கும் சமயம் அப்படித்தான் இருக்கும் என்று அவராகவே நினைத்துக் கொண்டார். அதனால் மருத்துவரிடம் செல்லவுமில்லை. சந்தியாவிடமும் சொல்ல வில்லை.

ஏற்கெனவே கணவனைப் பிரிந்து இருக்கும் பெண்ணிற்கு, மேலும் கவலை கொடுக்க வேண்டாம் என்று நினைத்தார். தானாகவே சரி ஆகிவிடும் என்று நினைத்துப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கிக் கொண்டார்.



சுபாஷுக்குச் சென்னையில் வேலை கிடைத்து, அவர்கள் குடும்பத்துடன் சென்னைக்குக் குடி பெயர்ந் தனர். காவேரியும், சுபாஷும் ரொம்பவும் அழைத்ததால், கதிர் தட்ட முடியாமல் வார இறுதியில் அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தான்.

கதிர் விடியற்காலையில் வந்ததால்... சுபாஷ் அவனைச் சிறிது நேரம் தூங்கச் சொல்லி ஒரு அறை யைக் காட்ட, கதிரும் அங்கே சென்று உறங்கினான்.

கதிர் விழித்த போது மணி பத்தாகி இருந்தது. 'இவ்வளவு நேரமா தூங்கி விட்டோம்?' என்று நினைத் தவன், கட்டிலிருந்து எழுந்த போது, வெளியே சந்தியா வின் குரல் கேட்டது.

கதிருக்கு ஒரு நொடி இதயம் சந்தோஷத்தில் நின்று துடிதுடித்தது. தன்னவளை ஒன்றரை வருடங்கள் கழித்துப் பார்க்கப் போகும் ஆவலில் வேகமாகக் குளித்துத் தயாராகி வெளியே வந்தான்.

சந்தியாவுக்குக் கதிர் வந்திருப்பது தெரியாது. அவள் தருணுடன் ஹாலில் விளையாடிக் கொண்டிருக்க... கதிர் சென்று அவள் எதிரில் நின்றான். எதிர்பாராமல் கதிரைப் பார்த்ததும் சந்தியாவின் விழிகள் கண்ணீரால் நிரம்பியது. சமையல் அறையிலிருந்து வெளியே வந்த காவேரி, கதிரைப் பார்த்துவிட்டு, "இரு அண்ணா! காபி கொண்டு வரேன்...!" என்று உள்ளே சென்றாள்.

கதிர் சென்று சந்தியாவின் அருகே அமர... அவள் தள்ளி அமர்ந்தாள். கதிரும் அவளோடு சேர்ந்து நகர்ந் தான். சந்தியா, அவனைப் பார்த்து முறைத்தாள்.

சந்தியா எழுந்து கொள்ளப் பார்க்க, கதிர் அவளை விடாமல் பிடித்துக் கொண்டான். அப்போது காவேரி காபியுடன் வர, சந்தியா எழுந்து சமையல் அறைக்குள் சென்று விட்டாள்.

"மச்சான் எங்க காவேரி?"

"அவர் கடைக்குப் போய் இருக்கார் அண்ணா. இப்ப வந்திடுவார்!" என்று காவேரி சொல்லிக் கொண்டிருக்கும் போதே சுபாஷ் உள்ளே நுழைந்தான்.

சுபாஷ் வந்ததும் சந்தியா வெளியே வந்தாள். சந்தியாவைச் சுபாஷ் அப்போதுதான் பார்க்கிறான். "வா சந்தியா! நாங்க கூப்பிட்ட போது எல்லாம் வரலை... இன்னைக்குக் கதிர் வந்ததும்தான் வந்திருக்கே.

"கதிரோடதான் எங்க வீட்டுக்கு வரணும்னு இருந்தியா?" என்று கேட்ட சுபாஷ், கதிர் சொல்லித்தான் சந்தியா வந்திருக்கிறாள் என்று நினைத்தான்.

காவேரியும் அப்படித்தான் நினைத்தாள். சந்தியா பதில் சொல்லாமல் சிரித்தே சமாளித்தாள். அவள் தற்செயலாகத்தான் அங்கே வந்திருந்தாள். அவளுக்கு அன்று விடுமுறை.

காவேரி அனைவரையும் சாப்பிட அழைக்க, சந்தியா 'ஹாஸ்டல்ல சாப்பிட்டேன்...' என்று மறுக்க... காவேரி கதிருக்கும் சுபாஷுக்கும் உணவு பரிமாறினாள்.

"காவேரி, சந்தியாவுக்கும் டிபன் வை. அவ ஹாஸ்டல்ல சாப்பிட்டிருக்க மாட்டா!" என்று உரிமையுடன் சொன்ன கதிர், சந்தியாவைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து, தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டான்.



காவேரி முதலில் கதிரின் தட்டில் பூரி வைக்க, கதிர் அதை எடுத்துச் சந்தியாவின் தட்டில் வைத்தான். அடுத்து காவேரி தோசை ஊற்றிக் கொண்டு வந்தாள். அதையும் கதிர், சந்தியாவின் தட்டில் வைக்க...

அவன் செய்வதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சுபாஷ், புன்னகையுடன், "ஏன் மாப்பிள்ளை... உங்க பொண்டாடிக்கு நீங்கதான் பரிமாறணுமா...? நாங்க பரிமாறினா ஆகாதா...?" என்று கிண்டலாகக் கேட்டவன்,

சந்தியாவைப் பார்த்து, "நல்லா ட்ரைனிங் கொடுத்திருக்கம்மா..." என்றதும்,

'பார்த்தே வருஷம் ஆகுது, இதுல நாம ட்ரைனிங் கொடுத்தோமா...?' என்று மனதிற்குள் கவுன்டர் கொடுத்தவள், வெளியே கஷ்டப்பட்டுப் புன்னகைத்தாள்.

சாப்பிட்டு விட்டுச் சிறிது நேரம் சுபாஷுடன் பேசிக் கொண்டிருந்த கதிர், அவன் தங்கியிருந்த அறைக்குள் சென்று அவர்களுக்காக வாங்கி வந்த இனிப்பையும் மற்றும் தருணுக்காக வாங்கி வந்த விளையாட்டுச் சாமானையும் கொண்டு வந்து கொடுத்தான்.

"நானும் சந்தியாவும் வெளியே போயிட்டு வரோம். மதியம் எங்களுக்குச் சமைக்காதே!" என்று காவேரியைப் பார்த்துச் சொன்ன கதிர், சுபாஷிடம் சொல்லிக்கொண்டு சந்தியாவைப் பார்க்க... அவள் மற்றவர்கள் முன்பு ஒன்றும் சொல்ல முடியாமல் அவனுடன் சென்றாள்.

சுபாஷின் பைக்கில் இருவரும் சென்றனர். சந்தியா பேசாமல் அமைதியாக வர... சிறிதும் தூரம் சென்ற பின், கதிர் வண்டியை ஓரமாக நிறுத்தினான்.

சந்தியா வண்டியில் இருந்து கீழே இறங்கி நின்றவள், "உங்களுக்கு என்னோட பேசணும், என்னைப் பார்க்கணும்னு எல்லாம் ஆசையே இல்லை. நான்தான் உங்களையே நினைச்சிட்டு இருக்கேன். நீங்க இங்க வர்றதைக் கூட என் கிட்டே சொல்லலை.

"நான் இன்னைக்கு எதேச்சையா வந்ததுனால உங்களைப் பார்த்தேன். இல்லன்னா என்னைப் பார்க்காமலே போயிருப்பீங்க. அப்படித்தானே மாமா!" என்று சந்தியா, கதிரைக் குற்றம் சொல்ல...

கதிர் எதுவும் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், அவன் கொண்டு வந்த பையை அவளிடம் கொடுக்க, எதற்கு என்று புரியாமல் அதை வாங்கிச் சந்தியா பிரித்துப் பார்க்க... உள்ளே அவளுக்குப் பிடித்த ஸ்வீட்ஸ், அவளுக்கு உடைகள் எல்லாம் இருந் தன.

அதைப் பார்த்ததும், கதிர் தன்னைப் பார்க்கவும் வந்திருக்கிறான் என்று புரிந்து கொண்ட சந்தியாவின் மனதில் சந்தோஷம் பொங்க, அது அவள் முகத்திலும் வெளிப்பட்டது.

"சாரி மாமா! நீங்க என்னைப் பார்க்கவே வராம இருந்துடீங்களா...! பிறகு போனும் பண்ணலை... அதுதான் அப்படிப் பேசிட்டேன். உங்களைப் பார்க்காம



இருந்தது எவ்வளவு கஷ்டமா இருந்தது தெரியுமா?" என்ற சந்தியாவின் விழிகள் கலங்க...

"எனக்கும் அப்படித்தான் இருந்தது சந்தியா. ஆனா நீ என்னோட சேரவும் முடியாம, என்னை விட்டு விலகி இருக்கவும் முடியாம படுற பாட்டைப் பார்த்துத்தான், உன் மேல கோபமா இருக்கிற மாதிரி நடிச்சேன்.

"எனக்கு வேற வழி தெரியலை... இப்பவும் வந்திருக்க மாட்டேன். ஆனா இதுக்கும் மேலே உன்னைப் பார்க்காம இருக்க முடியும்னு தோணலை. இன்னும் அஞ்சு மாசம்தான் இருக்கு உன் படிப்பு முடிய. அதனால தான் பரவாயில்லைன்னு வந்துட்டேன்."

"கார்லேஜ் சீனியர்ஸ் ரொம்பக் கிண்டல் பண்ணாங்க. எனக்குமே படிச்சிட்டு இருக்கும் போது வேண்டாம்னு தோணுச்சு. சாரி, உங்களை ரொம்பக் கஷ்டப்படுத் திட்டேன்!" என்று சந்தியாவும், கதிரும் மாறி மாறி உருக...

இவர்கள் உருகியது வீட்டில் அல்லவே! ரோடு என்பதால், போவோர் வருவோர் எல்லாம் இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே செல்ல...

அதைச் சிறிது நேரம் சென்றே உணர்ந்த இருவரும் புன்னகையுடன் அங்கிருந்து சென்றனர்.

மதியம் வரை வெளியே சுற்றியவர்கள், ஒரு உணவகத்தில் சென்று மதிய உணவைச் சாப்பிட்டனர். சந்தியா, "வேறு எங்காவது போவோம்!" என்று சொல்ல... கதிர், "காவேரி வீட்டிற்குப் போகலாம்!" என்றான்.

'ஏன், அதுக்குள்ளே வீட்டுக்குப் போகலாம்னு சொல் றாங்க!' என்று குழம்பியபடி வந்த சந்தியாவிற்கு வீட்டிற்கு வந்ததும் விடை தெரிந்தது.

இவர்கள் வீட்டிற்குச் சென்ற போது சுபாஷும், காவேரியும் மதிய உணவைச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர். இவர்களைப் பார்த்ததும் சாப்பிட அழைத் தனர்.

"நாங்க சாப்பிட்டோம், நீங்க சாப்பிடுங்க!" என்ற கதிர், தூங்கப் போவதாகச் சொல்லி அறைக்குள் சென் றவன், உள்ளே இருந்து சந்தியாவை அழைக்க... சந்தியா ஹாலிலேயே உட்காரச் சென்றவள், கதிர் அழைக்கும் குரல் கேட்டு உள்ளே சென்றாள்.

சந்தியா உள்ளே வந்ததும், கதிர் கதவைச் சாத்த, "அவங்க ஏதாவது நினைக்கப் போறாங்க...!" என்று சந்தியா கதவைத் திறக்கச் செல்ல...

"ஹே... இதுவும் நம்ம வீடுதான். அவ என்ன வெளி ஆளா...? என் தங்கச்சிதான். பயப்படாம வா...!" என்ற கதிர், சந்தியாவைக் கைகளில் ஏந்தியவன், சட்டென்று அவளைக் கீழே இறக்கி விட்டு, "பார்த்தா ஆளு ஒல்லியா இருக்க... தூக்கினா இந்தக் கனம் கனக்கிறே.

"சினிமாவுல இந்த ஹீரோ எல்லாம் ஹீரோயினை எப்படிச் சட்டு சட்டுன்னு தூக்குறாங்கன்னே தெரிய லையே...! நம்மால முடியலடா சாமி!" என்று தன் முதுகைப் பிடித்துக் கொள்ள,

தன் இடுப்பில் கை வைத்து அவளை முறைத்த சந்தியா, " சும்மா சொல்லாதீங்க. நான் நாற்பத்தி எட்டு



கிலோதான் இருக்கேன். என்னை உங்களால் தூக்க முடியலையா...?" என்று சந்தேகமாகக் கேட்டாள்.

கதிர் வாய் விட்டுச் சிரித்தவன், "எலிக்குஞ்சு மாதிரி கீச்சுக் கீச்சுன்னு கத்தாதடி!" என்றவன், அவளை எளிதாகத் தூக்கி முன்னும் பின்னும் சுழற்ற... சந்தியாவும் அவனோடு சேர்ந்து சிரித்தாள்.

கதிர் சந்தியாவைக் கட்டிலில் சென்று விட்டவன், அவனும் அவள் அருகில் படுக்க... "இதுக்குதான் வீட் டுக்குப் போகலாம்னு என்னை அவசரமாகக் கூட்டிட்டு வந்தீங்களா?" என்று சந்தியா, கதிரைப் பார்த்துக் கேட்க, அவன், அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

சந்தியா, கதிரின் நெற்றி, கண்கள், கன்னங்கள் என்று முத்தமிடக் கதிர் கண் மூடிப் படுத்திருந்தான். "என்ன செய்றீங்க மாமா...?" என்று அவன் காதில் கிசுகிசுப்பாகக் கேட்ட சந்தியா, அவன் காதை வலிக்காமல் கடிக்க,

லேசாகக் கண் திறந்த கதிர், "என்ஜாயிங், யூ கன்டினியூ..." என்றான் குரலில் போதையுடன்.

அதைக் கேட்டுப் புன்னகைத்த சந்தியா... அவன் இதழை நெருங்க... அவன், அவளை ஆவலுடன் எதிர் கொண்டான்.

நீண்ட நேர முத்தத்திற்குப் பிறகு விலகிய இருவருக் கும் மூச்சு வாங்க... ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். அப்போது கதிரின் கைபேசி அழைத்தது.

அழைப்பது அவனுடைய தந்தை என்பதால், கதிர் எடுத்து பேச... அந்தப் பக்கம் பெரியசாமி சொன்ன

விஷயத்தைக் கேட்டு அதிர்ந்தவன், வேகமாகக் கட்டிலில் இருந்து இறங்கி வெளியே சென்றான்.

கதிர் கைபேசியில் பேசியபடி வெளியே சென்றவன், உடனே திரும்பி வந்து, "சந்தியா என்னோடதுல சிக்னல் சரியா இல்லை. உன்னோட செல்லைத் தா. ஒரு போன் பண்ணிட்டுத் தரேன்," என்று சந்தியாவுடைய கைபேசி யையும் வாங்கிக் கொண்டு வெளியே சென்றான்.

சந்தியாவும் கதிர் சொன்னதை நம்பித் தன் கை பேசியை அவனிடம் கொடுத்து விட்டு, அறையிலேயே அவனுக்காகக் காத்திருந்தாள்.

வெளியே வந்த கதிர், "அப்பா அத்தையை உடனே மதுரையில இருக்கிற பெரிய ஆஸ்பத்திரியில சேருங்க, நான் இப்பவே சந்தியாவோட கிளம்பி வரேன். லேட் பண்ணாம உடனே சேருங்கப்பா...!" என்று பதட்டமாகச் சொல்ல...

"இங்கே இருக்கிற டாக்டர் பொழைக்க வைக்க முடியாதுன்னு சொல்றாங்களேப்பா. ரொம்ப ரத்தம் போயிடுச்சு. கொண்டு போற வழியில ஏதாவது ஆகிட்டா!" என்று பெரியசாமி கவலைப்பட...

"அதெல்லாம் எதுவும் ஆகாது. நீங்க ஆம்பு லன்ஸ்ல கூட்டிட்டுப் போங்க... நாங்க வந்துடுறோம்!" என்று கதிர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, துரை, சந்தியாவின் கைப்பேசியில் அழைத்தார்.

அவரின் அழைப்பைப் பார்த்ததும், கதிர் தன் தந்தையின் அழைப்பைத் துண்டித்தவன், துரையின் அழைப்பை ஏற்க...



"பாப்பா! உங்க அம்மா ரொம்ப முடியாம இருக்கா டா... இங்கே டாக்டர் என்னென்னமோ சொல்றாங்களே...! எனக்கு ரொம்பப் பயமா இருக்கே...!" என்று அழுது கொண்டே துரை புலம்ப,

கதிருக்குத் தெரியும் கண்டிப்பாக யாராவது சந்தியாவை அழைப்பார்கள் என்று.

அதனால்தான் அவள் கைபேசியை அவன் வாங்கி வைத்திருந்தான்.

'சந்தியா இதை எப்படித் தாங்கப் போகிறாள்?' என்று தன் மனைவியை நினைத்து வருந்தியவன், இப்போது துரையைத் தேற்றுவதே முக்கியம் என்பதால்...

"மாமா, நான் கதிர் பேசுறேன். நீங்க தைரியமா இருங்க. அத்தைக்கு எதுவும் ஆகாது. அவங்களை உடனே மதுரையில இருக்கிற ஆஸ்பத்திரியில சேருங்க... நான் சந்தியாவோட அங்கே வந்திடுறேன்!" என்று கதிர் துரையைத் தேற்ற...

அவர் மறுத்து ஏதோ சொல்ல வர, "இப்ப நேரத்தை வீணாக்காதீங்க மாமா... ப்ளீஸ்! தயவு செய்து நான் சொல்றதைச் செய்யுங்க... முதல்ல ஆம்புலன்ஸுக்கு ஏற்பாடு பண்ணுங்க... நான் திரும்பக் கூப்பிடுறேன்," என்று அழைப்பைத் துண்டித்தவன், உடனே சித்தார்த்தை அழைத்தான். அப்போது கதிரின் அருகில் சுபாஷ் வந்து நின்றான்.

"ஹாய்! கதிர் எப்படி இருக்கீங்க?" என்று சித்தார்த் நலம் விசாரிக்க... அதற்குப் பதில் சொல்லாமல், கதிர் நேரடியாக விஷயத்திற்கு வந்தான்.

"சித்தார்த், சந்தியாவோட அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. கர்ப்பப் பையில் கட்டி இருந்திருக்கும் போலிருக்கு... அது தெரியாம... இப்ப வலி அதிகமாகி மயக்கம் ஆகிட்டாங்க. ஹாஸ்பிடல் போனா... ரொம்ப ரத்தம் போயிடுச்சு... காப்பாத்துறது கஷ்டம்னு சொல் றாங்களாம்.

"நான் அவங்களை மதுரைக்குக் கொண்டு போகச் சொல்லி இருக்கேன். உன்னால ஏதாவது உதவ முடியுமா...?" என்று கதிர் கேட்க, சுபாஷ், சித்தார்த் இருவருமே அதிர்ந்தனர்.

சந்தியாவை நினைத்து வருந்திய சித்தார்த், ஒரு நொடி என்ன செய்வது என்று புரியாமல் நிற்க, "சித்தார்த், ரொம்ப அவசரம். உனக்கு அங்கே யாராவது டாக்டர்ஸ் தெரியுமா...?" என்று கதிர் அழுத்திக் கேட்டதும்,

"எனக்குத் தெரியாது... ஆனா என் அம்மா அப்பாவுக்குத் தெரியலாம். நான் அவங்களைக் கேட்டுச் சொல்றேன்!" என்று தொடர்பைத் துண்டித்தவன், உடனே தன் பெற்றோரிடம் பேச...

சித்தார்த்தின் அம்மாவோடு படித்தவர் இப்போது மதுரையில் ஒரு பெரிய மருத்துவ மனையில் தலைமை மருத்துவராக இருப்பதால், அவரிடம் சந்தியாவின் அம்மாவை அழைத்துக் கொண்டு செல்லும்படி சொன்ன



வர்கள், அந்த மருத்துவரையும் அழைத்துப் பேசி னார்கள்.

உடனே கதிரை அழைத்துச் சித்தார்த் விபரம் சொல்ல... கதிர் உடனே துரையை அழைத்துப் பேசி னான். "மாமா, நமக்கு இருக்கிற நேரம் ரொம்பக் குறைவு... எவ்வளவு சீக்கிரம் அத்தையை அந்த ஹாஸ் பிடலுக்குக் கொண்டு போகிறோமோ... அவ்வளவு சீக்கிரம் நாம அவங்களைக் காப்பாத்திடலாம்.

"அதனால உடனே அவங்களை அந்த ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போங்க. சந்தியாவுக்கு இன்னும் விஷயம் தெரியாது. நான் அவ கிட்ட பக்குவமா விஷயத்தைச் சொல்லிக் கூட்டிட்டு வரேன்," என்றவன், தன் தந்தையையும் அழைத்து விவரம் சொன்னான்.

சித்தார்த், துரை, பெரியசாமி என்று ஒருவர் மாற்றி ஒருவரிடம் கதிர் பேசிக்கொண்டிருந்தாலும்... இடைப்பட்ட நேரத்தில் சுபாஷிடம் விமானத்தில் மதுரைக்குப் பயணச் சீட்டு வாங்கச் சொல்லவும் மறக்கவில்லை. சுபாஷ் இந்த வேலையைப் பார்க்கச் சென்றான்.

ரொம்ப நேரம் கதிருக்காகக் காத்திருந்த சந்தியா, அவன் வராததால் அவனைத் தேடி வெளியே வர, சந்தியாவைப் பார்த்த கதிருக்கு, 'ஐயோ...!' என்று இருந்தது.

'இவள் எப்படி இந்த விஷயத்தைத் தாங்குவாள்? இவளிடம் இந்த விஷயத்தைச் சொல்ல எனக்குச் சக்தி கொடு கடவுளே!' என்று வேண்டியபடி, சந்தியாவை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான்.

கதிர், சந்தியாவிடம் சொல்வதற்கு முன்பு காவேரி, "என்னண்ணே இது...! அத்தைக்குப் போயா இப்படி ஆகணும். கடவுளே! முதல்ல அப்பாவுக்கு, இப்ப அத்தைக்கு. எதுக்கு நம்ம குடும்பத்துக்கு மட்டும் இப்படிச் சோதனை வருதோ...?" என்றாள் அழுது கொண்டே.

முதலில் புரியாமல் பார்த்த சந்தியாவுக்குப் பிறகு புரிய, "அம்மாவையா சொல்றாங்க மாமா...? அம்மாவுக்கு என்ன ஆச்சு?" என்று கதிரைப் போட்டு உலுக்க...

"பயப்படுற மாதிரி ஒண்ணும் இல்லை... நீ டென்ஷன் ஆகாதே...! வயிறு வலியாம். வேற ஒண்ணும் இல்லை..." என்று கதிர் சமாளிக்க... அப்போது சித்தார்த் உள்ளே நுழைந்தான்.

சித்தார்த்தின் முகத்தைப் பார்த்ததுமே சந்தியாவுக்கு ஏதோ விபரீதம் என்று புரிந்தது. "அம்மாவுக்கு ஒண்ணும் இல்லைன்னா... என்னை இப்பவே அம்மாவோட செல்லுல பேச வைங்க...!" என்று சந்தியா விழிகளில் கண்ணீருடன் கேட்க...

'வேதவல்லி மயக்கத்தில் இருக்கிறார். இப்போது அவருடன் எப்படிப் பேச வைக்க முடியும்?' என்று நினைத்த கதிருக்கு ஆயாசமாக வந்தது. இனி மறைக்க ஒன்றும் இல்லை என்று நினைத்தவன், வேதவல்லி அபாயக் கட்டத்தில் இருப்பதை மட்டும் மறைத்து, மற்ற அனைத்தையும் சென்னான்.

கதிர் சொன்னதைக் கேட்ட சந்தியா கதறி அழ, கதிர் அவளைத் தேற்றும் வழி தெரியாமல் நின்றான். மதுரைக்கு விமானப் பயணச் சீட்டு இருக்கிறது என்று



சுபாஷ் சொன்னதும், அனைவரும் கிளம்ப, சித்தார்த்தும் அவர்களோடு கிளம்பினான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் வேதவல்லியை மதுரையில் உள்ள ஒரு பிரபல மருத்துவ மனையில் சேர்த்து இருந்தனர். கதிர் கைபேசியில் பேசிக் கொண்டே இருந்தான்.

அவன் ஒவ்வொரு முறை பேசும் போதும், தன் அம்மாவுக்கு என்ன ஆனதோ என்ற பயத்தில் சந்தியாவின் உடல் நடுங்க... அதை உணர்ந்த கதிர், அவளோடு சித்தார்த்தை விட்டு விட்டு விலகிச் சென்று பேசினான்.

அம்மா ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார் என்று சந்தியாவுக்குப் புரிந்தது. இல்லையென்றால் விமானத்தில் கிளம்ப மாட்டார்கள் என்று தெரியும்.

"அம்மா என்னை மதுரை மெடிக்கல் காலேஜ்லதான் சித்து படிக்கச் சொன்னாங்க. நான்தான் கதிர் மாமாவுக்காக இங்கே வந்தேன்.

"நான் அங்கேயே இருந்திருந்தா எங்க அம்மா வுக்கு இப்படி ஆகி இருக்காது இல்ல...!" என்று சந்தியா கேட்ட போது, சித்தார்த்துக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

அவள் சொன்னதைக் கேட்ட கதிருக்கு, 'தனக்காக அவள் பெற்றோர் குடும்பம் அனைத்தையும் விட்டு விட்டுத் தானே வந்தாள். அவளை நல்லபடியாக அவள் குடும் பத்துடன் சேர்த்து விட வேண்டும்!' என்று நினைத்தான்.

16

இவர்கள் அனைவரும் மதுரை சென்று சேர்ந்த போது... வேதவல்லியின் ரத்தப் போக்கு நிறுத்தப்பட்டு... அவருக்கு அறுவை சிகிச்சை செய்யத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

வேதவல்லி இன்னும் அபாயக் கட்டத்தைத் தாண்டவில்லை. அவரைத் தனி வார்டில் வைத்திருந்தனர். அவரை அந்த நிலையில் பார்த்த சந்தியா மயங்கி விழுந்தாள். அவளும் ஒரு மருத்துவர் என்றாலும், முதலில் அவள் தன் தாய்க்கு மகள்.

மயக்கத்தில் இருந்து தெளிந்த சந்தியாவிடம் கதிர் ஒரு குளிர்பானத்தைக் கொடுக்க... சந்தியா அதைக் குடிக்க மறுத்தாள்.

"சந்தியா, ப்ளீஸ் புரிஞ்சிக்கோ... எல்லோருமே அத்தையை எப்படியாவது காப்பாத்தத்தான் பார்க்கிறோம். நீ இப்படி இருந்தா நான் எப்படி அத்தையைக் கவனிக்கிறது? நான் உன்னைப் பார்ப்பேனா இல்லை அத்தையைப் பார்ப்பேனா சந்தியா...?" என்று கதிர் கேட்டதும்,

சந்தியா அவனிடம் இருந்த குளிர்பானத்தை வாங்கி ஒரே மூச்சில் குடித்தவள், "நீங்க போங்க மாமா... நான் நல்லாத்தான் இருக்கேன்," என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.

அவள் அழுகையை அடக்கி கொண்டு இருக்கிறாள் என்று கதிருக்குப் புரிந்தது. ஒரு பெருமூச்சுடன் அவளை



விட்டு எழுந்தவன், துரையுடன் மருத்துவரைப் பார்க்கச் சென்றான்.

"அவங்க இன்னும் கொஞ்சம் முன்னாடியே வந்திருக்கலாம். கட்டி ரொம்பப் பெரிசா இருக்கு. புற்று நோய் கட்டியா இருக்கவும் வாய்ப்பு இருக்கு. அதனால டெஸ்ட் பண்ணச் சொல்லி இருக்கேன்," என்று மருத்துவர் ஒரு குண்டைத் தூக்கிப் போட...

கதிர், துரை இருவருமே அதிர்ந்தனர். அவர்களின் கவலையை உணர்ந்த மருத்துவர், "அது புற்று நோய் கட்டின்னு நான் உறுதியாச் சொல்லலை. எதுக்கும் பார்த்திடுறது நல்லது.

"சாதாரணக் கட்டியா இருந்தா நாளைக்கே ஆபரேஷன் பண்ணலாம். அவங்களுக்கு ரத்தம் தேவைப் படும். உங்களுக்குத் தெரிஞ்சவங்களே ரத்தம் கொடுத்தா இன்னும் நல்லது. அப்படி யாராவது இருந்தா ஏற்பாடு பண்ணுங்க!" என்று மருத்துவர் சொன்னதும்,

"காப்பாத்திடலாம் இல்லையா...? உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்லையே...!" என்று துரை பயந்து கொண்டே கேட்க..

"இப்போ எதுவும் சொல்ல முடியாது. ஆபரேஷன் முடிஞ்சு அவங்க கண்டிஷன் பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்," என்றார் மருத்துவர்.

கதிர், சித்தார்த், சுபாஷ், வெங்கி, சோலை அனைவரும் தங்கள் ரத்தத்தைக் கொடுக்கத் தயாராக

இருந்த போதும், வேதவல்லிக்கு சித்தார்த் மற்றும் சுபாஷ் இருவரின் ரத்தம்தான் பொருந்தியது.

அவர்களுடைய ரத்தத்தைப் பரிசோதனைக்குக் கொடுத்து விட்டுக் காத்திருந்தனர். சந்தியா, தானும் ரத்தம் தருவதாகச் சொல்ல...

"நீ தெம்பா இருந்தாத்தான் உங்க அம்மாவைக் கவனிக்க முடியும். ரிசல்ட் வரட்டும், பார்ப்போம். வேற யாருடையதும் சரி வரலைன்னா நீ கொடு..." என்று கதிர், சந்தியாவின் உடல் நிலையை மனதில் வைத்துச் சொல்ல... சந்தியாவும் சரி என்றாள்.

சந்தியா தன் அம்மாவின் பக்கத்திலேயே உட்கார்ந் திருந்தாள். வேதவல்லிக்கு இருப்பது சாதாரணக் கட்டி தான் என்பது உறுதி செய்யப்பட, அனைவரும் நிம்மதி அடைந்தனர்.

மறுநாள் அறுவைச் சிகிச்சைக்கு வேதவல்லியைக் கொண்டு செல்ல... எல்லோரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வெளியில் காத்திருந்தனர்.

பெரியசாமி, தனக்கு உடல்நிலை சரியில்லாத நிலையிலும் அங்கேதான் இருந்தார்.

அறுவைச் சிகிச்சை அறையில் இருந்து வெளியே வந்த செவிலியர், கதிரிடம் ஒரு மருந்துச் சீட்டைக் கொடுத்து, அதில் இருக்கும் மருந்தை உடனே வாங்கி வரும்படி சொல்ல... கதிரும், சித்தார்த்தும் மருத்துவ மனையில் இருக்கும் மருந்தகத்திற்குச் செல்ல... அங்கே அந்த மருந்து இல்லை.



"ஆபரேஷன் நடந்திட்டு இருக்கு சார். இப்ப போய் இந்த மருந்து இல்லைன்னு சொல்றீங்களே...!" என்று கதிர் கவலைப்பட...

"இங்கே இருந்திருந்தா டாக்டர் போன் போட்டு எங்களையே நேரா கொண்டு வரச் சொல்லியிருப் பாங்க சார். இங்கே இல்ல... அதனாலதான் உங்க கிட்ட கொடுத்திருப்பாங்க..." என்றவர், வேறு சில மருத்துவ மனைகள் பெயரைச் சொல்லி, அங்கே சென்று விசாரிக்கச் சொல்ல...

கதிர், சித்தார்த் ஒரு பக்கமும், சோலை ஒரு பக்கமும் சென்றனர். கதிருக்கு அந்த மருந்து கிடைக்க வில்லை. ஆனால், சோலை எப்படியோ வாங்கி விட்டான். சோலை சரியான நேரத்தில் மருந்துடன் வர, துரை அவன் கையை நெகிழ்ச்சியுடன் பற்றிக் கொண்டார்.

ஆபரேஷன் முடிந்து வெளியே வந்த டாக்டர், "ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சிருக்கு. இப்போதைக்குப் பயப்பட ஒண்ணும் இல்லை. ஆனா பேஷன்ட் கண்ணு திறந்த பிறகுதான் உறுதியாச் சொல்ல முடியும்," என்றவர், தன் அறைக்குச் செல்ல...

டாக்டரின் வார்த்தையே இப்போதைக்கு எல்லோ ருக்கும் ஆறுதலாக இருக்க, அமைதியாக, வேதவல்லி கண் விழிக்கக் காத்திருந்தனர்.

வேதவல்லி அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்ததால், எல்லோரும் வெளியே காத்திருக்க. சந்தியா மட்டும் அடிக்கடி உள்ளே சென்று, தன் அம்மாவைப் பார்த்து விட்டு வந்தாள்.

வேதவல்லி மாலை வரை அனைவரையும் தவிக்க விட்டே கண் திறந்தார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்... அவர் நலமாக இருப்பதால், அறைக்கு மாற்றச் சொல்லி விட்டுச் செல்ல... எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

அதன் பிறகுதான் எல்லோரும் சாப்பிடச் சென்றனர். சித்தார்த்தும் சுபஷும் மட்டும் அன்று இரவு ஊருக்குக் கிளம்ப, சந்தியா அவர்கள் இருவருக்கும் கண்ணீருடன் நன்றி சொன்னாள்.

"அவங்க உனக்கு மட்டும் அம்மா இல்லை, எனக்கும்தான். அட்லீஸ்ட் நான் வந்ததுக்கு அவங்களுக்கு என்னால ரத்தமாவது கொடுக்க முடிஞ்சதே!" என்று அவன் செய்த பெரிய உதவியைச் சித்தார்த் சாதாரணமாகச் சொல்ல,

"நானும் இந்தக் குடும்பத்தில் ஒருத்தன்னுதான் நினைச்சிட்டு இருக்கேன். நீ எனக்கு நன்றி சொல்லிப் பிரிச்சு வைக்காதே!" என்றான் சுபாஷ்.

சந்தியா திரும்பித் தன் தந்தையைப் பார்த்தவள், "அப்பா! சித்தார்த்தும் சுபாஷ் அண்ணனும் நம்ம ஜாதி இல்லை. ஆனா அவங்க ரத்தம்தான் அம்மாவுக்குப் பொருந்தி இருக்கு.

"பெரிய மாமா வேற ஜாதியில சம்பந்தம் பண்ணாருன்னு தானே என்னைக் கதிர் மாமாவுக்குக் கொடுக்க மாட்டேன்னு சொன்னீங்க. இப்ப மட்டும் உங்க ஜாதி வெறி எங்கே போச்சு?

"இப்பவும் நம்ம ஜாதிக்காரங்க ரத்தத்தை மட்டும் அம்மாவுக்கு ஏத்த வேண்டியது தானே?" என்று சந்தியா



ஆத்திரத்துடன் கேட்க... துரை மௌனமாகத் தலை குனிந்தார்.

சந்தியா மேலும் ஏதோ சொல்ல வர, "போதும் சந்தியா.. ஏற்கெனவே அத்தைக்கு முடியலைன்னு கவலையில இருக்கிற மனுஷனை நீ வேற இன்னும் வாட்டாதே...!" என்று கடிந்த கதிர், துரையைப் பார்த்து, "நீங்க போங்க மாமா. அவ ஏதோ கோபத்தில பேசிட்டா... மனசுல வச்சுக்காதீங்க!" என்றான்.

அவனை நோக்கி நன்றிப் பார்வையைச் செலுத்திய துரை, வேதவல்லி இருந்த அறைக்குள் உட்கார்ந்து கொண்டார். கதிர், சந்தியாவைப் பார்த்து முறைக்க, சந்தியா, அவன் பார்வையை அலட்சியப்படுத்தினாள்.

சித்தார்த்தும், சுபாஷும் சென்று வேதவல்லியைப் பார்த்து விட்டுத் துரையிடம் விடைபெற... இருவரின் கைகளையும் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அமைதி யாக இருந்தவர், "சந்தியா கேட்டது எதுவும் தப்பு இல்லை.. நான் உங்க ரெண்டு பேரையும் ரொம்ப அலட்சியப்படுத்தி இருக்கேன்.

"எனக்கு அப்ப புரியலை.. ஜாதி வெறி என் கண்ணை மறைச்சிடுச்சி. நீங்க ரெண்டு பேரும் மனசுல எதையும் வச்சுக்காம ரத்தம் கொடுத்தீங்க.

"எனக்கு ஆண் பிள்ளைகள் இல்லை. இனி நீங்க ரெண்டு பேரும்தான் என் பிள்ளைகள். நம்ம வீட்டுக்கு வந்து போய் இருக்கணும்," என்று துரை நெகிழ்ந்த குரலில் சொல்ல...

துரையின் கலங்கிய கண்களைப் பார்த்த சித்தார்த், புன்னகையுடன், "நீங்க கோபமா இருந்தாத்தான்பா நல்லா இருக்கு. கோபமாவே இருங்க..." என்றான்.

"ஆமாம் சித்தப்பா. சித்து சொல்றது சரிதான். உங்களை டெரர்ராவே பார்த்திட்டு இப்படிப் பார்க்க நல்லாயில்லை..." என்று சுபாஷும் கேலி செய்ய, அதைக் கேட்டு அனைவரும் சிரிக்க... சந்தியா மட்டும் உர்ரென்றே இருந்தாள்.

இரவு கதிர், சந்தியா, துரையைத் தவிர மற்றவர்கள் வீட்டிற்குக் கிளம்ப, கதிர், துரையையும் வீட்டிற்குப் போகச் சொன்னான்.

"நீங்க போய் நைட் தூங்கிட்டுக் காலையில் அத்தைக்குத் தேவையானது எல்லாம் எடுத்திட்டு வாங்க மாமா."

துரைக்கு வேதவல்லியை விட்டுச் செல்ல விருப்பம் இல்லை. ஆனால், அதைக் கதிரிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல்... அவர் உதவிக்குச் சந்தியாவின் முகத்தைப் பார்க்க... அவள், 'நீயாச்சு, உன் மாப்பிள்ளை ஆச்சு!' என்பதைப் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

துரையின் தயக்கத்தைப் பார்த்த கதிர், அவர் அங்கே சென்றாலும் நிம்மதியாக இருக்க மாட்டார் என்பதை உணர்ந்து, பிறகு எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தான்.

சந்தியா, அவள் அம்மாவோடு அறையில் இருக்க...



கதிரும், துரையும் வெளியே காத்திருப்போர் இருக்கையில் உட்கார்ந்திருந்தனர்.

முன் தினத்தில் இருந்து அலைந்த அலைச்சல் காரணமாகக் கதிர் சோபாவில் உட்கார்ந்தவாறே உறங்க... துரை மெதுவாக எழுந்து, அவன் கால் வைத்துக்கொள்ள வசதியாக டேபிளை அவன் பக்கம் நகர்த்தியவர், ஓடிக் கொண்டிருந்த மின் விசிறியின் வேகத்தையும் அதிகப்படுத்தினார்.

கதிர் மட்டும் இல்லையென்றால்... அவரால் தனியாக இந்த நிலையை நல்லபடியாகக் கடந்திருக்கவே முடிந்திருக்காது. அதிர்ச்சியில் அவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நொடியில் விஷயத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு அவன் செயல்பட்டதால்தான் வேதவல்லியைக் காப்பாற்ற முடிந்தது.

வேதவல்லி அபாயக் கட்டத்தைத் தாண்டி இருந் தாலும், இன்றுதான் அறுவைச் சிகிச்சை செய்திருப்பதால், கதிர் அடிக்கடி எழுந்து சென்று தன் அத்தையைப் பார்த்து விட்டு வந்தான்.

அவன் அப்படி எழுந்து வேதவல்லி இருக்கும் அறைக்குச் செல்லும் போது எல்லாம்... அங்கே சந்தியா உறங்காமல் விழித்திருப்பதைப் பார்த்தான். சந்தியா அவனைப் பார்த்தாலும் கண்டு கொள்ளாமல் இருந்தாள்.

விடியற்காலையில் கதிர் வந்த போதும் சந்தியா உறங்காமல்தான் இருந்தாள். துரையிடம் வேதவல்லியைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு, சந்தியாவை டீ குடிக்க அழைத்துச் சென்றான்.

சந்தியா ஏதோ யோசனையிலேயே நடந்து வந்தாள். அவள் கைப்பிடித்து நிறுத்திய கதிர், "என்ன ஆச்சுடி? ஏன் ஒரு மாதிரி இருக்கே? உங்க அப்பா மேல என்ன கோபம் சந்தியா உனக்கு?" என்று கேட்க...

"அம்மாவுக்கு ஏதாவது ஆகி இருந்தா... அதை நினைச்சுப் பார்க்கவே முடியலை மாமா... அம்மா இல்லாம, ஒரு நாள் கூட யோசிக்க முடியலை.

"எனக்கு அப்பா மேல மட்டும் இல்லை, என் மேலேயே கோபம்தான். அம்மா என்கிட்ட ஏன் அவங்களுக்கு உடம்பு முடிலைன்னு சொல்லலை? அவங்களுக்கு என் மேலே கோபமா...?" என்று சந்தியா அழ...

அவளைத் தன் தோளோடு அணைத்த கதிர், "அப்படி இருக்காது சந்தியா. அவங்க சாதாரணமா நினைச்சி இருப்பாங்க. நீ வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காம, உங்க அம்மா நல்லா ஆனதும் அவங்க கிட்டேயே கேளு...!" என்று கதிர் சமாதானம் செய்ய... சந்தியா கண்ணீரைத் துடைத்தபடி அவனுடன் நடந்தாள்.

கதிர், மருத்துவ மனை அருகில் இருந்த ஹோட்டலில் ஒரு அறை எடுக்க, அதில் அவனும் துரையும் இரவு தங்கிக் கொண்டனர். மற்றவர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். அப்படி வருபவர்கள் வீட்டில் இருந்து உணவு கொண்டு வருவார்கள்.

மூன்று நாட்கள் சென்ற பிறகுதான் வேதவல்லியால் எழுந்து உட்கார முடிந்தது. அவருக்கு அடிவயிற்றில் தையல் போட்டிருந்ததால்... ரொம்பவும் வலி இருந்தது.



அவர் வலியால் துடிக்கும்போது எல்லாம் சந்தியா அழுவாள்.

ஐந்து நாட்கள் ஆனதும் வேதவல்லிக்கு வலி குறைந்தது. இந்த ஐந்து நாட்களும் தூங்கும் போது தன் அம்மாவுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்ற பயத்திலேயே சந்தியா உறங்கவில்லை.

வேதவல்லியைப் பார்க்க வந்த லக்ஷ்மி, சந்தியாவைப் பார்த்து அரண்டு விட்டார். "என்ன சந்தியா இது! இப்படி இருக்கே? உங்க அம்மாவுக்கு உடம்பு முடியலையா... இல்லை உனக்கா...? உன்னைப் பார்த்தாத்தான் உடம்பு முடியாதவ போலிருக்கு!" என்று வருத்தப்பட...

"நல்லாச் சொல்லுங்கம்மா... மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டு நைட் எல்லாம் தூங்கவே மாட்டேங்கிறா...!" என்றான் கதிர்.

"நான் இன்னைக்கு நைட் இங்கே இருக்கேன். நீயும் கதிரும் நம்ம வீட்டுக்குப் போங்க. நல்லாத் தூங்கி எழுந்து நாளைக்குக் காலையில வாங்க," என்று லக்ஷ்மி சொன்னதற்கு, முடியாது என்று சந்தியா மறுக்க...

"எனக்கு ஒண்ணும் இல்லை. இப்ப சரி ஆகிடுச்சு. நான் நல்லா இருக்கேன். நீ போயிட்டு வா!" என்று வேதவல்லியும் சொல்ல,

"ஆமாம்! நீங்க சொல்றதை நம்பிட்டாலும். உடம்பு இவ்வளவு முடியாம போற வரை சொல்லலை... இப்ப மட்டும் இவங்க சொல்றதை நம்பணுமாம்...!" என்று சந்தியா முனங்க...

"நானும் இப்படி ஆகும்னு நினைக்கலைடா. உங்க எல்லாரையும் ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்!" என்று வேதவல்லி வருந்த... அவர் வருந்தவது பிடிக்காமல் சந்தியா, கதிருடன் சென்றாள்.

வீட்டிற்கு வந்தவர்கள் குளித்துக் கதிரின் அப்பத்தா சமைத்து வைத்திருந்த உணவைச் சாப்பிட்டனர். சந்தியா கொறிக்க, கதிர், விட்டு விளாசினான்.

அவர்கள் அறைக்கு வந்ததும் கதிர் தலையணையை எடுத்துத் தரையில் போட்டுப் படுத்தவன், படுத்ததும் உறங்கி விட, கட்டிலில் படுத்திருந்த சந்தியா உறங்காமல் விழித்திருந்தாள்.

சந்தியாவும் உறங்கத்தான் நினைத்தாள். ஆனால், அவளுக்கு ஏனோ உறக்கம் வரவில்லை. உறங்காமல் கண்டதையும் நினைத்து மனம் தவிக்க,

கதிரோடு படுத்தாலாவது உறக்கம் வருமோ என்ற ஆசையில், கட்டிலிலிருந்து எழுந்தவள், கதிரின் பக்கத்தில் படுத்து அவனை அணைத்துக் கொண்டு கண்களை மூடித் தூங்க முயன்றாள்.

சந்தியா அணைத்ததும் தூக்கத்தில் இருந்து விழித்த கதிர்... கண் திறந்த போது... கண்களை இறுக்கமாக மூடி இருந்த சந்தியாவின் முகம்தான் தெரிந்தது.

அவள் தூங்க முடியாமல் தவிக்கிறாள் என்று புரிந்து கொண்டவன், அவள் முதுகை வருடி விட... அப்போதும் சந்தியா தூங்கவில்லை.



தனக்கு இனி உறக்கமே வராதோ என்று சந்தியா நினைக்க, இவளை எப்படித் தூங்க வைப்பது என்று யோசித்த கதிர்... அவள் மனம் முதலில் அவள் அம்மாவின் நினைவில் இருந்து வெளியே வர வேண்டும் என்று நினைத்தவன், அவள் மனதை மாற்றுவதற்காக முத்தமிட,

விலகுவாள் என்று நினைத்த சந்தியா, அவனுடன் மேலும் ஒன்றினாள். மனம் சந்தோஷமாக இருக்கும் நேரத்தை விட... துக்கமாக இருக்கும் போதுதான் தன் துணையை அதிகமாகத் தேடும். சந்தியாவும் இப்போது அந்த நிலையில்தான் இருந்தாள்.

சந்தியாவிடம் எதிர்ப்பின்றிப் போனதும், கதிரின் இதழ்களும், விரல்களும் அவள் உடல் எங்கும் சுதந்திரமாக ஊர்வலம் சென்றது. சிறிது நேரம் சென்று விலகிய கதிர், சந்தியாவைத் தூக்கிக் கொண்டு கட்டிலை நோக்கிச் சென்றான்.

அவளைக் கட்டிலில் விட்டவன், ஒரு நொடி தயங்க.. எங்கே அவன் தன்னை விட்டுச் சென்று விடுவானோ என்று பயந்த சந்தியாவின் முகத்தில் கலக்கம் சூழ்வதைப் பார்த்தவன், மேலும் தாமதிக்காமல் அவளுடன் சேர்ந்தான்.

திருமணமாகியும் மனைவியை விட்டு அதிக நாள் பிரிந்திருந்ததாலோ என்னவோ.. கதிரிடம் அதிக வேகம் இருந்தது. சந்தியா எல்லாவற்றையும் மறந்து கதிரை மட்டுமே நினைத்தாள். அவனின் வேகத்தால் அவளைத்

திணறடித்தவன், சங்கமம் முடிந்து விலகிய போது, வியர்வையில் தொப்பலாக நனைந்து இருந்தான்.

கதிர், அவளிடம் இருந்து விலகிய நொடி, சந்தியா ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றிருந்தாள். கண்களை மூடிப் படுத்திருந்த கதிர், தன் மூச்சுச் சீரானதும், சந்தியாவின் ஆடைகளைச் சரி செய்தவன், அவளை அணைத்தபடி உறங்கினான்.

எத்தனையோ போராட்டத்திறகுப் பிறகு தாம்பத் தியத்தில் இணைந்த இருவரையும், நித்திரை தேவி வாரி அணைத்துக் கொண்டாள்.

காலையில் முதலில் கண் விழித்த கதிர், அசந்து உறங்கும் சந்தியாவையே ஆசையாகப் பார்த்திருந்தான். இரவில் நடந்த கூடலை நினைத்ததும், அவனின் உடலும் உள்ளமும் மீண்டும் சந்தியாவிடம் சேரத் துடிக்க...

'அவள் அம்மா மருத்துவ மனையில் இருக்கும் போது நேற்றிரவு நடந்து கொண்டதற்கே சந்தியா என்ன நினைத்தாளோ? அவளின் சூழ்நிலையை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதாக நினைப்பாளோ...

'சந்தியா மட்டும் அப்படி ஏதாவது நினைத்து விட்டால், தன்னால் அதைத் தாங்கவே முடியாது!' என்று நினைத்தவன், மேலும் அங்கே இருக்க முடியாமல் எழுந்து குளியல் அறைக்குள் புகுந்து கொண்டான்.

கதிர் குளித்து முடித்து வெளியே வந்து தன் உடைகளை அணிந்து தயார் ஆன பிறகு கூடச் சந்தியா விழிக்கவில்லை. அப்போதே மணி எட்டு. இனி யும் தாமதித்தால் மருத்துவமனை செல்ல நேரமாகி



விடும் என்பதை உணர்ந்தவன்... சந்தியாவைத் தட்டி எழுப்பினான்.

சந்தியா சிரமப்பட்டுக் கண் திறக்க, அவள் சரியாக விழிக்கும் முன்பே,

"ஹாஸ்பிடல் போகணும் சந்தியா. சீக்கிரம் எந்திரி!" என்ற கதிரின் குரலைக் கேட்டவள், விழுந்து அடித்துக் கொண்டு எழுந்தாள்.

சந்தியாவுக்கு அப்போது வேறு எதுவும் நினைவு இல்லை. தன் அம்மா மருத்துவ மனையில் இருப்பது மட்டுமே ஞாபகத்தில் இருந்ததால், கையில் கிடைத்த உடையுடன் குளியல் அறைக்குள் சென்றாள்.

தலைக்குக் குளிக்க ஷவரைத் திறந்தவளின் உடலில் நீர் பட்டதும், அங்கங்கே வலிக்க... அப்போது தான் நேற்றிரவு நடந்தது நினைவுக்கு வந்தது.

'ஐயோ! இதை எப்படி மறந்தோம்?' என்று நினைத்த வளுக்கு வெட்கமாக இருக்க... தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அப்படியே நீருக்கு அடியில் நின்றாள்.

சிறிது நேரம் சென்று சந்தியா முகத்தில் புன்னகை யுடன், ஒரு பாடலைப் பாடியவாறு நேற்று நடந்ததை நினைத்தபடி மெதுவாகச் சோப்புப் போட...

சந்தியா சென்று ரொம்ப நேரம் ஆகியும் வராததால், "சந்தியா எவ்வளவு நேரம் குளிப்பே...? ஹாஸ்பிடல் போகணும், சீக்கிரம் வா...!" என்று கதிரின் குரலில் மயக்கம் தெளிந்த சந்தியா, வேகமாகக் குளித்து விட்டு வெளியே வந்தாள்.

கதிரின் முகத்தை எப்படிப் பார்ப்பது என்று நினைத்துக் கொண்டு சந்தியா வெளியே வர... கதிர் அங்கே அறையில் இல்லாதது சற்று ஏமாற்றமாகவும், அதே சமயம், நல்ல வேளை இல்லை என்றும் இரு வேறு எண்ணங்களில் தவித்தவள், தயாராகிக் கீழே சென்றாள்.

கதிரின் அப்பத்தா செய்து வைத்த உணவைச் சாப்பிட்ட இருவரும் காரில் மதுரைக்குச் சென்றனர். காரில் ஓட்டுனர் இருந்ததால், இருவரும் பேசிக்கொள்ள முடிய வில்லை.

மருத்துவ மனைக்கு இருவரும் சென்ற நேரம், சரியாக மருத்துவரும் வேதவல்லியைப் பார்க்க வந்திருந்தார். வேதவல்லியைப் பரிசோதித்துப் பார்த்த மருத்துவர், "இவங்களை இன்னைக்கே நீங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகலாம். ஆனா இன்னும் ஒரு மாசம் கவன மாப் பார்க்கணும். பத்து நாள் கழிச்சு திரும்ப இங்கே செக்கப் கூட்டிட்டு வாங்க," என்று சொல்ல... அதைக் கேட்ட அனைவரும் மகிழ்ந்தனர்.

மருத்துவர் கொடுக்க வேண்டிய மருந்துகளின் விவரத்தைச் சந்தியாவிடம் சொல்ல, அவள் கவனமாகக் கேட்டுக் கொண்டாள். கதிரும், துரையும் சென்று மருத்துவ மனைக்குக் கட்ட வேண்டிய மீதிப் பணத்தைக் கட்டி விட்டு வர... சந்தியா, தன் அம்மாவைக் காலை உணவு சாப்பிட வைக்க... லக்ஷ்மி அவர்களின் பொருட்களை எடுத்துத் தயாராக வைத்திருந்தார்.

அனைவருக்கும் காரில் இடம் இல்லாததால், ஓட்டுனரைப் பேருந்தில் வரச் சொல்லி விட்டுக் கதிரே



காரை எடுத்தான். அவர்கள் மெதுவாக வீடு வந்து சேர மதியம் ஆகி விட்டது.

வேதவல்லியின் மாமியார், அவர்கள் வருவது தெரிந்து வாசலிலேயே காத்திருந்தார். நல்லபடியாகப் பிழைத்து வீட்டுக்கு வந்த மருமகளை வாசலில் நிற்க வைத்துத் திருஷ்டி கழித்தே வீட்டுக்குள் செல்ல விட்டார்.

தன் அம்மா வீட்டுக்கு வந்த மகிழ்ச்சியில், சந்தியா கதிரைக் கவனிக்கவில்லை. அதனால் கதிர் வீட்டுக்குள் வராதது அவளுக்குத் தெரியவில்லை.

வேதவல்லி வீட்டுக்கு வந்தது தெரிந்து, அக்கம் பக்கத்தினர் வேறு அவரைப் பார்த்து விசாரிக்க வந்து விட்டனர். சந்தியா அதில் பிஸியாகி விட்டாள்.

அக்கம் பக்கத்தினர் சென்றதும்தான் சந்தியா கதிரைத் தேடினாள். கதிர் அங்கே இல்லாததை உணர்ந் தவள், லக்ஷ்மியிடம், "எங்க அத்தை உங்க மகனைக் காணோம்?" என்று விசாரிக்க,

"அவன் அப்பவே போயிட்டானே சந்தியா...!" என்று லக்ஷ்மி சொன்ன பதிலைக் கேட்டவள் திடுக்கிட்டாள். "ரொம்பத்தான் ரோஷம்...!" என்றவளின் விழிகள் கண்ணீரால் நிரம்ப... வேதவல்லியின் அருகே சென்று உட்கார்ந்து கொண்டாள். தன் அப்பா அழைக்காததால் தான் கதிர் சென்று விட்டான் என்றே சந்தியா நினைத்தாள்.

உணவே மருந்து என்று தெரிந்து வைத்திருக்கும் கிராமத்து மனிதர்கள் என்பதால்... வேதவல்லிக்குப் பத்திய உணவு தயாராக இருந்தது. அவர் மாமியார் பரிமாற, வேதவல்லி சாப்பிட்டார்.

அவர் சாப்பிடும் போதே லக்ஷ்மியையும், சந்தியா வையும் சாப்பிடச் சொல்ல... லக்ஷ்மி, சந்தியாவைப் பார்க்க.. அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்தாள்.

இருக்கும் நிலை தெரியாமல் துரை, "சாப்பிடு பாப்பா. முகமே வாடி இருக்கு!" என்று வாய் விட...

"உங்களுக்கு ரொம்பத்தான் அக்கறை..." என்று சந்தியா முனங்க... துரை, எதற்குக் கோபம் என்று புரியாமல் நின்றவர், "இப்ப என்ன ஆச்சு?" என்று கேட்டது தான் தாமதம், சந்தியா பொங்கி விட்டாள்.

"நீங்க தெரிஞ்சு பண்றீங்களா... தெரியாமப் பண்றீங்களான்னு எனக்குச் சுத்தமாப் புரியலை. அவர் வீட்டுக்குள்ளே கூட வராமப் போயிட்டார்.

"எத்தனை மருமகன்ப்பா மாமியார் ஆஸ்பத்திரியில இருக்கும் போது கூடவே இருந்து பார்த்துகிறாங்க. என் புருஷனை நீங்க மதிக்கவே மாட்டீங்களாப்பா?

"அவர் அமைதியா எல்லாத்தையும் பொறுத்துப் போறதுனால உங்களுக்கு அவரைப் பார்த்தா இளக் காரமா இருக்கா...? அவரை மதிக்காத வீட்டிலே நான் மட்டும் எதுக்கு இருக்கணும்?" என்ற சந்தியா விடுவிடுவென்று வாசலை நோக்கிச் செல்ல, அங்கே கதிர் வாசல் கதவில் சாய்ந்தபடி நின்றிருந்தான்.

திடீரென்று எதிர்பாராமல் கதிரைப் பார்த்ததும் சந்தியா அப்படியே நின்றாள். முகம் சிவக்கக் கண்களில் கண்ணீரோடு நின்றவளைப் பார்த்த கதிர், "காரை ஷெட்ல விட்டுட்டு வர்றதுக்குள்ள எதுக்குடி இங்க ஒரு



அலப்பறையை ஆரம்பிச்சு வச்சிருக்க? உங்க அப்பா என்னைக் கூப்பிடலைன்னு உனக்குத் தெரியுமா...? தெரியாம எதுக்குப் பேசுற?" என்று அவன் சந்தியாவைத் திட்ட...

தன் மகள் திட்டு வாங்குவதைப் பொறுக்க முடியாத துரை, "அதுக்குத் தெரியாது இல்ல... நீங்க இங்க இல்லைன்னதும், என்னமோ ஏதோன்னு நினைச்சுடுச்சு. நீங்க கை கழுவி விட்டுச் சாப்பிட வாங்க மாப்பிள்ளை!" என்று கதிரை மரியாதையாக அழைக்க... கதிரும் உள்ளே சென்றான்.

கதிரும் துரையும் ஒன்றாகச் சாப்பிட அமர... அப்பத்தா அவர்களுக்குப் பரிமாறினார். துரை, தன் மருமகனை விழுந்து விழுந்து உபசரித்தார்.

எல்லாம் சந்தியாவுக்குப் பயந்து கொண்டுதான் என்று கதிருக்குத் தெரியும். அவன் வந்த சிரிப்பை அடக்கியபடி உணவருந்த... 'இவங்க ரெண்டு பேருக்கும் மனசுல ரஜினி, தனுஷ்ன்னு நினைப்பு!' என்று மனதிற்குள் நொடித்த சந்தியா, இருவரையும் முறைத்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

அவர்கள் சாப்பிட்டதும் வீட்டுப் பெண்கள் சேர்ந்து சாப்பிட்டனர். வேதவல்லி கீழே இருந்த ஒரு அறை யிலேயே படுத்துக் கொண்டார்.

அது கிராமம் என்பதால், யாராவது வேதவல்லியை வந்து பார்த்தபடி இருந்தனர். வந்தவர்களுக்குக் குளிர் பானம் கொடுப்பது, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வது என்று சந்தியா பிஸியாக இருந்தாள்.

சந்தியா பிஸியாக இருப்பதைப் பார்த்த கதிர், தன் அம்மாவுடன் அவர்கள் வீட்டிற்குச் சென்று விட்டான். வேதவல்லியின் அம்மா, அதாவது கதிரின் அப்பத்தா வந்ததும், "நான் பார்த்துக்கிறேன், நீ கொஞ்ச நேரம் தூங்கு!" என்றதும், சந்தியாவும் சரி என்று சிறிது நேரம் தூங்கி எழுந்தாள்.

மாலை அவள் அம்மாவுக்குப் பாத்ரூம் செல்ல... முகம் கழுவ உதவி செய்த சந்தியா, அவரைக் கட்டிலில் உட்கார வைத்துத் தலை வாரி விட...

"நீயும் முகம் கழுவி ஏதாவது புடவை கட்டு சந்தியா... பெரிய மாமா சின்ன மாமா எல்லாம் வருவாங்க... இப்படிச் சுடிதார் போட்டுட்டு சுத்தாதே!" என்றார்.

சந்தியா அவள் அறைக்குச் சென்று குளித்து, ஒரு காட்டன் சேலை அணிந்து வர, அப்போது சித்ராவும் வேதவல்லியைப் பார்க்க வந்திருந்தாள்.

அவளுக்குக் குழந்தை பிறந்து சில மாதங்களே ஆகியிருந்தது. அதனால் குழந்தையை வீட்டில் அவள் அம்மாவிடம் விட்டு விட்டு வந்த காரணத்தால், உடனே கிளம்பினாள்.

"என்ன சித்ரா, அதுக்குள்ள போற? இன்னும் கொஞ்சம் நேரம் இருடி."

"குழந்தை திடீர்னு அழுதா அம்மாவால சமாளிக்க முடியாது. நீ இன்னொரு நாள் எங்க வீட்டுக்கு வா. அப்ப பொறுமையாப் பேசலாம்!" என்று வாசல் வரை சென்ற சித்ரா, திரும்பி வந்தவள்....



"உனக்குத் தெரியுமா சந்தியா... நந்தினிக்கு மாப்பிள்ளை பார்த்திருக்காங்க. அவரும் நம்ம கதிர் அண்ணன் பார்க்கிறது போல வேலைதான் பார்க்கிறாரு. எந்த ஊர் தெரியுமா...? பெங்களூர்ல. நீயும், நந்தினியும் ஒரே ஊர்லதான் இருக்கப் போறீங்க," என்று சொல்லி விட்டுச் செல்ல... சந்தியாவிற்கு உடலெங்கும் மிளகாயைத் தடவியது போல் எரிந்தது.

அவள் நந்தினியைப் பற்றி நினைக்கக் கூட விரும்பவில்லை. 'அவளே யாரோன்னு ஆகிடுச்சு. இனி அவ எங்கே இருந்தா எனக்கு என்ன?' என்று நினைத்தவள், வீட்டிற்குள் சென்றாள்.

பெரியசாமியும் பாண்டியனும் தன் சகோதரியைப் பார்க்க வந்திருந்தனர். வீட்டில் ஒரே சொந்த பந்தக் கூட்டம். சந்தியா தன் அம்மா அதிகம் பேசாமல் பார்த்துக் கொண்டாள். அனைவரும் சென்றதும், வேதவல்லி மிகவும் களைப்பாக உணர்ந்தார். அதனால் இரவு எட்டு மணிக்கே சாப்பிட்டு விட்டுப் படுத்து விட்டார்.

அதன் பிறகு கதிர் வந்தான். கதிர் வந்ததும் அவனைச் சந்தியா சாப்பிட அழைக்க, "அதுக்குள்ளவா நான் பிறகு அந்த வீட்ல சாப்பிட்டுக்கிறேன்," என்றதும், சந்தியா திரும்பி துரையைப் பார்க்க, அவர் பாவம் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

திரும்பச் சந்தியா தன் மாமனாரை வறுக்க ஆரம் பித்து விடுவாளோ என்று பயந்த கதிர், வேகமாகச் சாப்பிட அமர்ந்தான். 'அது... அந்தப் பயம் இருக்கட்டும்!' என்று நினைத்த சந்தியா, அவனுக்கு உணவு பரிமாறினாள்.

இரவு உணவு முடிந்ததும் ஒன்பது மணிக்கே சந்தியாவின் அப்பத்தா மற்றும் கதிரின் அப்பத்தா இருவரும் சேர்ந்து கதிரையும், சந்தியாவையும் தூங்கச் செல்லச் சொல்லி விரட்டினர்.

தயங்கிய சந்தியாவிடம், "நாங்க உங்க அம்மா நடுவுல எழுந்தா பார்த்துக்கிறோம். ப்ளாஸ்க்ல ஹார்லிக்ஸ் போட்டு ரெடியாத்தான் வச்சிருக்கோம். நீங்க போய் மேலே படுங்க!" என்று அவர்களை விரட்டுவதிலேயே குறியாக இருக்க... கதிர் சொல்ல வருவதை அவர்கள் இருவரும் கேட்பதாகவே இல்லை.

'இதுங்க இம்சை தாங்க முடியலையே!' என்று நொந்தபடி கதிர் மாடிக்குச் செல்ல... சந்தியா குடிக்கத் தண்ணீர் எடுத்துக் கொண்டு அறைக்குள் வந்தவள், அதை டேபிளில் வைத்து விட்டுக் கதவைச் சாத்தச் சென்றாள்.

"சந்தியா! இரு, கதவை மூடாதே. நான் இன்னைக்குப் பெங்களூர் கிளம்புறேன். அதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். என்னைப் பேசவே விடாம ரெண்டு பெரிசுகளும் சேர்ந்து மாடிக்கு அனுப்பிட்டாங்க!" என்று கதிர் பாவமாகச் சொல்ல...

அவன் சொன்னது காதில் விழாதது போல் சந்தியா சென்று கதவைச் சாத்தி விட்டு வந்தவள், நேராகக் கதிரிடம் செல்ல... இவள் என்ன செய்யப் போகிறாள் என்பது போல் கதிர் பார்க்க... சந்தியா ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் அவனை இறுக அணைத்திருந்தாள்.

அவளின் இறுகிய அணைப்பில்... காலையில் இருந்து தான் பட்ட துன்பங்கள் விலக... அவளைத்



தானும் அணைத்து, அவள் தோள் வளைவில் முகம் புதைத்தான்.

கதிரும் சந்தியாவும் விலகாமல் ஒருவரின் அருகாமையை மற்றவர் ரசித்தபடி இருக்க, சிறிது நேரம் சென்று, "சந்தியா! நான் ஊருக்குக் கிளம்பணும். விடுடி..." என்று கதிர் அவள் காதில் சொல்ல...

கதிரின் மார்பிலிருந்து தன் முகத்தை மட்டும் நிமிர்த்திய சந்தியா, "நீங்க ஊருக்குப் போயிட்டா என்னை யாரு தூங்க வைப்பா...?" என்று கண் சிமிட்டிக் கேட்க...

"ஹே...! நான் என்ன உனக்குத் தூக்க மாத்திரையா...?" என்று அவள் காதைப் பிடித்துத் திருகியவன், "நேத்து நைட் என்ன சந்தியா நடந்துச்சு?" என்று ஆர்வமாக அவள் முகம் பார்க்க...

"எனக்குத் தெரியாதுப்பா. நான் தூங்கிட்டேன்!" என்றாள் சந்தியா அப்பாவியாக.

"ஒருத்தன் உசுரக் கொடுத்து உழைச்சா... நீ தூங்கிற...! இன்னைக்கு நீ எப்படித் தூங்கறேன்னு நானும் பார்க்கிறேன்!" என்ற கதிர், சந்தியாவைக் கைகளில் அள்ளிக் கொண்டு கட்டிலுக்குச் சென்றான்.

கதிர் அவன் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் விதமாகச் சந்தியாவை இரவு முழுவதும் தூங்க விடாமல் அன்புத் தொல்லை செய்தவன், தான் இன்று ஊருக்குச் செல்ல வேண்டும் என்பதையே மறந்திருந்தான்.

விடியும் நேரம்தான் தூங்கியதால்... இருவரும் விழித்த போது நேரம் மதியமாகி விட்டது. 'இப்ப எப்படிக்

கீழே போய் எல்லாரையும் பார்க்கிறது...?' என்று இருவரும் தயங்கியே மேலும் நேரத்தைக் கடத்தினர்.

"ரெண்டு பேரும் தனித்தனியா குளிச்சா இன்னும் லேட் ஆகும். வா... சேர்ந்து குளிப்போம்!" என்ற கதிர், சந்தியாவையும் இழுத்துக்கொண்டு குளியல் அறையில் புகுந்து கொள்ள,

இத்தனை நாள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று இருந்த தன் மாமன், ஒரே நாளில் காதல் மன்ன னாக மாறிய விந்தை புரியாமல் சந்தியா திகைத்தாள்.

அவர்கள் இருவரும் கீழே வந்த போது, அங்கே யாரும் இல்லை. சந்தியா சென்று வேதவல்லி இருந்த அறையை எட்டிப் பார்க்க, அவர் கட்டிலில் படுத்திருந்தார்.

மகளைப் பார்த்தும் வேதவல்லி எழுந்திருக்க முயற்சி செய்ய, சந்தியா வேகமாகத் தன் அம்மாவின் அருகில் சென்று, அவர் உட்கார உதவி செய்தாள்.

"சாரிம்மா... லேட் ஆகிடுச்சு. சாப்பிட்டீங்களா...?" என்று சந்தியா குற்ற உணர்வுடன் கேட்க...

தன் மகள் தலை குளித்து மலர்ந்த பூப் போல் இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தவர், சந்தியாவின் தலை வருடி, "அதெல்லாம் ஆச்சு... இங்கே என்ன ஆளு களுக்கா பஞ்சம்? ஆளுக்கொரு வேலை பார்க்கிறாங்க. நீ போய் உன் மாமனைக் கவனி. கதிருக்குப் பசிக்கும். டிபன் வேணாம், நேரா சாப்பாடே வை...!" என்றார் புன்னகையுடன்.

கதிர் சாப்பிட அமர, சந்தியா சூடான உணவை அவனுக்குப் பரிமாற... அவன் ரசித்துச் சாப்பிட்டான்.



உணவு உண்டதும் கதிர் சென்று அத்தையை நலம் விசாரிக்கவும் மறக்கவில்லை.

"எப்படி இருக்கீங்க அத்தை? நல்லா சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க. உடம்பு நல்லா குணம் ஆகாம வேலை செய்யுறேன்னு கிளம்பிடாதீங்க. பிறகு, நான் இன் னைக்குப் பெங்களூர் கிளம்புறேன். ஆபீஸ் போக ணும்..." என்று கதிர் சொன்னதும், சந்தியாவைப் பார்த்த வேதவல்லி, "நீயும் காலேஜுக்குப் போகணும் இல்லை... அதனால நீயும் இன்னைக்குக் கிளம்பு!" என்றார்.

சந்தியாவின் விழிகளில் நீர் திரண்டது.

"உங்களை இப்படி விட்டு விட்டு... நான் எப்படிம்மா போறது? என்னால அங்கே போய் நிம்மதியாவே இருக்க முடியாது!" என்று சந்தியா அழுகையுடன் சொல்ல...

"இது என்ன சிட்டியா, நான் தனியா இருக்கேன்னு கவலைப்பட...? இங்கே நிறையப் பேர் இருக்காங்க. நம்ம தெருக்காரங்களே வந்து பேசிட்டு ஆளுக்கொரு வேலையைப் பார்த்திட்டுப் போறாங்க.

"நான் சும்மா படுத்துத்தான் கிடக்கேன். இதுல நீ இருந்து என்ன செய்யப் போறே...? போய் நல்லபடியா படிப்பை முடிச்சிட்டு வா...!" என்று வேதவல்லி நல்ல விதமாகவே தன் மகளுக்கு எடுத்துச் சொல்ல, ஆனால், சந்தியாதான் அதைக் கேட்கும் நிலையில் இல்லை.

சந்தியாவின் நிலை உணர்ந்த கதிர், "அவ இந்த வாரம் மட்டும் இருக்கட்டும் அத்தை. நீங்க நல்லா உடம்பைப் பார்த்துக்கோங்க. நான் கிளம்புறேன்..." என்று விடை பெற்றான்.

சந்தியாவும் கதிரும் வெளியே வர, அங்கே அவர்களின் இரு அப்பத்தாக்களும் உட்கார்ந்து கதை பேசியபடி வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இவர்கள் இருவரையும் பார்த்தவர்கள், "சாப்பிட் டீங்களா...? எங்கே அதுக்குள்ள கிளம்பிட்டீங்க? ரொம்ப வெயிலா இருக்கே...! இன்னும் செத்த நேரம் படுக்க லாம்ல...!" என்று அக்கறையாக விசாரிக்க,

"நாமே மதியம்தான் எழுந்து வந்திருக்கோம். இதுல இன்னும் தூங்கவாம்... இவங்க லொள்ளைப் பார்த் தியா...?" என்று சந்தியாவிற்கு மட்டும் கேட்கும்படி கதிர் கேலி செய்ய.. சந்தியா சிரிப்பை அடக்கியபடி நின்றாள்.

கதிரின் கிண்டல் பேச்செல்லாம் சந்தியாவிடம் மட்டும் தான். மற்றவர்களிடம் அவன் என்றுமே மரியாதையாகத் தான் நடந்து கொள்வான். இன்றும் அதே போல் பெரிய வர்களிடம் மரியாதையாகப் பேச, 'இவன், தான் மாடியில் பார்த்த கதிரா...?' என்று சந்தியா அதிசயப்பட்டாள்.

"ஊருக்குப் போறதுக்கு முன்னாடி இங்கே வந் துட்டுப் போவீங்கல்ல...?" என்று சந்தியா கேட்க,

"எதுக்கு, உன்னைத் தூங்க வைக்கவா...? ஆளை விடும்மா தாயே...! நான் அங்கிருந்தே கிளம்புறேன்," என்று கதிர் கண் சிமிட்டிச் சொல்ல, சந்தியா புன்னகை யுடன் அவனை வழி அனுப்பினாள்.

## 17

மறுவாரம் சனிக்கிழமை விடியற் காலையிலேயே வந்த கதிர், கதவைத் திறந்த தன் அம்மாவிடம், "நான் போய் அத்தையைப் பார்த்திட்டு சந்தியாவைக் கூட்டிட்டு வரேன் மா...!" என்று சொன்னவன், அவர் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் அங்கிருந்து விரைய...



"இப்ப கதிர் நிஜமாவே வந்தானா... இல்லை, கனவா?" என்ற குழப்பத்திலேயே லக்ஷ்மி உள்ளே சென்றார்.

"யாரே வந்த மாதிரி இருந்ததே, யாரு? " என்று கேட்டபடி பெரியசாமி வர...

"எல்லாம் உங்க பிள்ளைதான். வந்தவன் உள்ளே கூட வராம அவன் பொண்டாட்டியைப் பார்க்கப் போயிட்டான்!" என்று லக்ஷ்மி குறை சொல்ல...

"பாவம், அவனும் என்ன பண்ணுவான். கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் ஆகப் போகுது. இன்னும் அவன் பொண்டாட்டியோட நிலையா ஒரு இடத் திலிருந்து அவனால குடும்பம் நடத்த முடியுதா...?

"நாளை சந்தியா ஒரு பக்கமும் அவன் ஒரு பக்கமும் போகணும். இங்கே இருக்கிற வரை அவன் பொண்டாட்டி யோட இருந்திட்டுப் போறான், விடு...!" என்று பெரியசாமி சொன்னது லக்ஷ்மிக்கு நியாயமாகவே பட்டது.

"சந்தியா, மணி ஆறு ஆச்சு, எழுந்து குளி... கதிர் வரும்னு சொன்னியே...!" என்று வேதா, சந்தியாவை எழுப்ப...

"இவ்வளவு சீக்கிரம் வர மாட்டாங்கம்மா...!" என்ற சந்தியா, குப்புறப் படுத்து மீண்டும் உறங்க... வாசலில் அழைப்பு மணியின் ஒலி கேட்டது.

கதவைத் திறந்த துரையிடம் கதிர் பேசும் குரல் கேட்டுச் சந்தியா விழுந்து அடித்து எழுந்து அமர்ந்தாள்.

'அதுக்குள்ளே எப்படி வந்தாங்க?' என்று சந்தியா யோசிக்க...

"குளின்னு சொன்னா கேட்டியா... இப்ப கதிர் வந்தாச்சு... வேகமா இங்கேயே குளிச்சிட்டு வா...!" என்ற வேதவல்லி, மருமகனை வரவேற்க வெளியில் சென்றார்.

வேதவல்லியைப் பார்த்ததும், "நீங்க ஏன் அத்தை வந்தீங்க? நானே உள்ளே வந்திருப்பேனே...!" என்ற கதிர், தன் அத்தையை நலம் விசாரிக்க...

"இப்போ எவ்வளவோ பரவாயில்லை கதிர். வலி இல்லை, மெதுவா நடக்க முடியுது...!" என்று வேதா சொல்ல...

"அப்படியா? சந்தோஷம். இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாள் கவனமாவே இருங்க," என்ற கதிரின் விழிகள் சந்தியாவைத் தேட... அதை உணர்ந்த வேதா, "சந்தியா இப்பத்தான் குளிக்கப் போனா. நீ முகம் கழுவிட்டுக் காபி குடி. அவ அதுக்குள்ளே வந்திடுவா!" என்றார்.

கதிர் பல் துலக்கி, முகம் கழுவி வர, அங்கே அவனுக்காகச் சூடான குழிப் பணியாரம் தயாராக இருந்தது.

கதிர் அதைச் சாப்பிடும் போதே காபியும் வந்தது. கதிர் காபி குடித்துக் கொண்டே பேப்பர் படித்தான்.

அப்போது குளித்து விட்டு வந்த சந்தியா சென்று கதிரின் அருகில் உட்கார... இதமான சோப்பின் நறு மணத்தில் தலை நிமிர்ந்த கதிர், சந்தியாவைப் பார்த்



ததும் முகம் மலர... சந்தியாவும் பதிலுக்குப் புன்னகைத் தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்வையால் வருடியபடி இருக்க... அப்போது சந்தியாவிற்கும் காபியும் பணியாரமும் வந்தது.

"நாம மாடிக்குப் போனா சீக்கிரம் வரமாட்டோம்னு தெரிஞ்சு இப்பவே காலைப் பலகாரமும் தர்றாங்களோ...!" என்று கதிர் சந்தியாவிற்கு மட்டும் கேட்கும்படி சொல்லிச் சிரிக்க... சந்தியா வெட்கப்பட்டாள்.

அவர்கள் இருவரும் பேசுவதைப் பார்க்காதது போல் பார்த்துக் கொண்டிருந்த துரையின் முகத்தில் பெருமிதமே இருந்தது.

அறைக்கு வந்த கதிருக்கும் சந்தியாவிற்கும் நேரம் சந்தோஷமாகக் கழிந்தது.

அன்று மதியம் வரை இங்கிருந்து விட்டுப் பிறகு கதிரின் வீட்டிற்குச் சென்றனர்.

மறுநாள் சித்தார்த் வருவதாகப் போன் செய்ததும், இருவரும் மகிழ்ந்தனர்.

மறுநாள் காலை சித்தார்த்தை அழைக்கக் கதிர் பஸ் ஸ்டாண்ட் சென்றிருந்தான். அப்போது ரொம்ப நாள் கழித்து அவனுடன் படித்த நண்பன் ராஜ்குமாரைச் சந்தித்தான். இருவரும் பி.எஸ்ஸி. ஒரே கல்லூரியில் படித்தவர்கள். ஒருவரை ஒருவர் பார்த்ததும் நலம் விசா ரித்துக் கொண்டனர்.

"என்னடா, எங்க ஊரு பக்கம்?" என்று கதிர் கேட்க... ராஜ்குமார் முகத்தில் அசடு வழிந்தது. அவனின் முகத்தைப் பார்த்தே யூகித்த கதிர், " யாருடா அது... உனக்குப் போய் எங்க ஊரில் பொண்ணு தர்றது?" என்று ஆச்சர்யப்பட....

"டேய்! நீ பொண்ணு தர்றவங்களையும் தர விடாம பண்ணிடுவ போலிருக்கே!" என்று ராஜ்குமார் போலியாக வருந்த...

அவனைப் பார்த்துச் சிரித்த கதிர், "அதெல்லாம் செய்ய மாட்டேன். நீ முதல்ல பொண்ணு யாருன்னு சொல்லு?" என்றான் ஆவலாக.

"பேர் நந்தினி. இன்ஜினியரிங் படிச்சிருக்கு. உனக்குத் தெரியுமா...?" என்ற ராஜ்குமார், கதிரின் முக மாற்றத்தைக் கவனிக்காமல் தொடர்ந்து, "ஒரே ஊரு... உனக்கு எப்படித் தெரியாமல் இருக்கும்.?" என்றவன், கதிரின் முகம் பார்க்க...

அதற்குள் இயல்புக்கு வந்திருந்த கதிர், 'இவ்வளவு சின்ன ஊரில் நந்தினியைத் தெரியவில்லை என்று சொன்னால் அது நம்பும்படி இருக்காது!' என்று புரிந் தவன்,

"தெரியுமே...! சந்தியாவும் நந்தினியும் ஒரே க்ளாஸ் தான் படிச்சாங்க. அதனால தெரியும்!" என்றான் முகத் தில் எதையும் காட்டிவிடாத கவனத்துடன்.

"யாரு சந்தியா?" என்று ராஜ்குமார் புரியாமல் பார்க்க...



"சந்தியா என்னோட மனைவி," என்றான் கதிர் பட்டென்று.

"என்னடா! இவ்வளவு கூலா சொல்ற... உனக்குக் கல்யாணம் ஆகிடுச்சா...? எப்போ?"

"அது ஆகப் போகுது ரெண்டு வருஷம். ஆமாம், நீ என்ன இவ்வளவு காலையிலே வந்திருக்கே. வீட்ல சொல்லிட்டு வந்தியா இல்லே சொல்லாம வந்தியா...?" என்று கதிர் கேட்டதும்,

அசடு வழிந்த ராஜ்குமார், "அது எப்படிச் சொல்லிட்டு வர முடியும். சொல்லாமத்தான் வந்தேன். நிச்சயம் முடிஞ் சிடுச்சு. ஆனா கல்யாணம் வரை தனியா பார்த்துப் பேசக் கூடாதுன்னு வீட்ல ஒரே கண்டிஷன். அதுதான் நேரா பெங்களூர்ல இருந்து இங்கே வந்திட்டேன்!" என்ற போது அவன் செல்லுக்கு அழைப்பு வர... அவன் அதை எடுத்துப் பேசும் நேரத்தில் சித்தார்த்தும் வந்து விட்டான்.

கதிரின் கவனம் சித்தார்த் மீது இருந்ததால்... அவன் ராஜ்குமாரின் பதற்றத்தைக் கவனிக்கவில்லை. அதோடு கதிர் தூரத்தில் வந்து கொண்டிருந்த மகேஷைப் பார்த்ததால்... இனி தான் இங்கிருப்பது நல்லது இல்லை என்று புரிந்தவன், சித்தார்த்தை அழைத்துச் செல்லும் சாக்கில் ராஜ்குமாரிடம் விடை பெற...

ராஜ்குமாரும், "சரி, பிறகு பார்ப்போம்டா...!" என்று அங்கிருந்து விலகிச் செல்ல... கதிர், தன் பைக்கில் சித்தார்த்துடன் கிளம்பினான்.

ராஜ்குமாரின் பாட்டி தவறி விட்டதாக வந்த செய்தியால்... ராஜ்குமார் உடனே அங்கு கிளம்பிக் கொண்டிருந்த பஸ்சில் ஏறி விட்டான்.

அவன் வருவது நந்தினிக்கு மட்டும்தான் தெரியும் என்று நினைத்திருந்தான். அதனால் மகேஷ் வருவான் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

பஸ் கிளம்பிச் சிறிது தூரம் சென்றதும் மகேஷிடம் இருந்து அவனுக்கு அழைப்பு வர... கல்யாணம் நிச்சயம் ஆகி இருப்பதால், இப்போது துக்க விஷயத்தை அவர்கள் வீட்டில் சொல்ல வேண்டாம் என்று அவனின் தந்தை சொல்லியிருந்ததால்... அவன் மகேஷின் அழைப்பை எடுக்கவில்லை.

மகேஷுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. நந்தினி இன்று காலையில்தான் ராஜ்குமார் வரும் விஷயத்தை அவனிடம் சொல்லியிருந்தாள்.

'என்ன, இவன் வந்தான். வந்துட்டு அடுத்த பஸ்லேயே ஏறிப் போறான். போன் பண்ணாலும் எடுக்க மாட்டேன்கிறான்...!' என்று குழம்பியவனுக்கு, அப்போது தான் அவன் கதிருடன் பேசியது நினைவுக்கு வந்தது.

'அவன், இவனிடம் நந்தினியைப் பற்றி எதுவும் சொல்லி விட்டானோ?' என்று சந்தேகப்பட்டவன், கோபத் துடன் அங்கிருந்து சென்றான்.

**ரா**ஜ்குமாரின் சொந்த ஊர் கோவில்பட்டி. அவன் பெற்றோருக்கு அவன் ஒரே பிள்ளை. பெற்றோர் சொந்த ஊரில் இருக்க... இவன் மட்டும் பெங்களூரில் வேலை பார்க்கிறான்.

அதிகக் கட்டுப்பாடான குடும்பம். நந்தினியைப் பார்த்ததும் ராஜ்குமாருக்கு மிகவும் பிடித்து விட்டது. இவன் தொல்லை தாங்காமல் திருமணத்தைச் சீக்கிரம் வைக்க



நினைத்தனர். ஆனால், இவர்கள் கேட்ட தினத்தில் மண்டபம் இல்லாததால், திருமணத்தை ஐந்து மாதங்கள் தள்ளி வைக்கும் நிலையானது.

ஏற்கெனவே வீட்டினருக்குத் தெரியாமல் நந்தினி யைப் பார்க்க வந்த குற்றக் குறுகுறுப்பில் இருந்த ராஜ்குமார்... நந்தினிக்கு அழைத்துத் தான் வரவில்லை என்று சொல்லக் கூட மறந்து விட்டான்.

சித்தார்த் இப்போது துரையின் செல்லப் பிள்ளை ஆனதால்... அவனுக்கு ஆர்ப்பாட்டமான வரவேற்பு கிடைத்தது. துரை, அவனை விழுந்து விழுந்து உபசரித் தார்.

காலை வந்ததும் அவனுக்குக் காபி, டீ எல்லாம் கொடுக்கவில்லை... நேராக ஆட்டுக்கால் சூப்தான். அவனுக்கு என்று தனி அறை ஒதுக்கப்பட்டது.

அடுத்த முறை சித்து வருவதற்குள் அந்த அறை யில் குளிர்சாதனம் பொருத்திவிட வேண்டும் என்று துரை சொன்னது, சந்தியாவின் காதில் விழுந்து அவள் பொறாமையைத் தூண்டி விட, அவள் காதில் இருந்து புகை வருவதைக் கதிர் தவிர வேறு யாரும் கவனிக்க வில்லை.

சித்து வந்தது தெரிந்து வெங்கியும் வந்து விட்டான். காலையில் டிபன் பூரியும், நாட்டுக்கோழி குழம்பும். சித்தார்த்தும், வெங்கியும் ஒரு வெட்டு வெட்ட... கதிரும் அவர்களோடு அமர்ந்து சாப்பிட்டான்.

"மதியம் ஆத்து மீன் வாங்கி இருக்கு... நீ சாப்பிட வீட்டுக்கு வந்திடு ராசா..." என்று அப்பத்தா கரிசனையாகச்

சித்தார்த்திடம் சொல்ல... சந்தியா சோபாவில் அமர்ந்து முறைத்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த கதிர், சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தான்.

சித்தார்த் சாப்பிட்டதும் வெங்கியுடன் வெளியே கிளம்ப... 'மதியம் கண்டிப்பா வீட்டுக்கு வந்திடணும், சாப்பிட...!' என்று ஆளாளுக்குச் சொல்லியே வழி அனுப்பினர்.

சித்தார்த் சென்றதும் சந்தியாவைப் பார்த்து வேதவல்லி, "உனக்குச் சாப்பிட வான்னு தனியாச் சொல்லணுமா...? சாப்பிட்டுட்டுச் சட்டுபுட்டுன்னு கிளம்பி உன் வீட்டுக்குப் போ... மருமக வந்த பிறகும் உங்க அத்தை ஒத்தையாவே எல்லா வேலையும் பார்க்கிறாங்க. நீயும் கூடமாட ஒத்தசை செய்...!" என்றார் எதார்த்தமாக.

அவ்வளவுதான், சந்தியா பொங்கி எழுந்து விட்டாள். "ஓ...! உங்க மகன் வந்ததும், மகளை விரட்டுறீங்களா...?" இதுவரை ஒற்றைப் பெண் அரசியாய் தன் வீட்டை ஆண்டவளுக்கு, இன்று சித்து வந்ததும், தான் இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளப்பட்டத்தைப் பொறுக்க முடிய வில்லை.

எந்த நொடியும் தன் மனைவி வெடிப்பாள் என்று ஆவலாகக் காத்துக் கொண்டிருந்த கதிர், கால் மேல் கால் போட்டுச் சாவகாசமாக அமர்ந்து அவள் சண்டையை ரசிக்க ஆரம்பித்தான்.

"நேத்து வந்த என் புருஷனுக்கு வெறும் காப்பித் தண்ணி... அவனுக்கு மட்டும் ஆட்டுக்கால் சூப்பா...?"



"வெறும் காப்பித் தண்ணி மட்டுமா கொடுத்தோம்? கூட பணியாரமும் கொடுத்தோமே...!" என்ற அப்பத்தா வைப் பார்த்து முறைத்த சந்தியா, தொடர்ந்து,

"அவனுக்கு வக்கணையா ஆத்து மீன் ஆக்கிப் போடுவீங்க...! என்னை மட்டும் என் மாமியார் வீட்டுக்கு விரட்றீங்க. என்னைக்கோ ஒருநாள் வர்றவனுக்கு ஏசி ரூம் கேட்குதோ...!" என்று ஒருவரையும் விட்டு வைக் காமல், சந்தியா சரமாரியாகத் தாக்க...

"என்ன பாப்பா இப்படிப் பேசுற...?" என்று தன் மகளின் கோபத்தைப் பார்த்துத் துரை பதற, வேதவல்லி, 'நீ என்ன வேணும்னா பேசு!' என்ற ரீதியில் அமர்ந்திருந் தார்.

"உன்னை யாரு இங்கே வர வேண்டாம் போக வேண்டாம்னு சொன்னது...? அவ்வளவு தூரம் இருந்து வந்த பையனுக்கு ஆசையா சமைச்சுப் போட்டா உனக்கு எங்கே வலிக்குது.

"வசதியான வீட்டுப் பையன்... இங்கே வந்து கஷ்டப்படக் கூடாது... அதோட நாளைக்கு அவன் பொண்டாட்டி பிள்ளைங்களோட வந்து தங்க வீடு வசதியா இருக்க வேண்டாம். அதுக்குச் சொன்னா... நீ எதுக்குக் கிடந்து குதிக்கிற...?" என்று வேதவல்லி தன் மகளைக் கடிந்து கொள்ள...

"எதுக்குத் திட்ற...! சொன்னாப் புரிஞ்சிக்கப் போறா. நான் அன்னைக்குச் சித்துவை என் மகன்னு சொன்னது பேச்சுக்கு இல்லை... உண்மையா முழு மனசோடதான் சொன்னேன்," என்றார் துரை நெகிழ்ந்த குரலில்.

அதுவரை அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த கதிர், 'மாமா! இவ பேசுறதை எல்லாம் பெரிசா எடுத்துக்கிட்டு. இதே நீங்க சித்துவைச் சரியாகக் கவனிக்காம இருந்திருந்தா... அப்பவும் இவ உங்க கிட்ட சண்டைக்கு வந்திருப்பா...!" என்று அவன் சிரிக்க...

"கரெக்ட் கதிரு... இதுவரை இவளே செல்லமா இருந்திட்டா இல்லை. அதுதான் பொறுக்க முடியலை..!" என்ற வேதவல்லி, தன் மகளைப் பார்த்து, "நீ செல்லமா இருந்த காலம் எல்லாம் போய்டுச்சு... இனி உனக்குப் பொறக்கப் போற பிள்ளைங்கதான் எங்க செல்லம்...!" என்றார் கெத்தாக. அதற்கு அப்பத்தாவும் தலையாட்ட...

சந்தியா அவரை முறைக்க, "யாரு வந்தாலும் நீ தான்டா அப்பாவுக்கு எப்பவும் செல்லம்...!" என்று துரை மகளைச் சமாதானம் செய்ய...

சந்தியா அவர் தோளில் சாய்ந்து, தன் தாயைப் பார்த்து அழகு காட்டினாள். அதைப் பார்த்துக் கதிரும் வேதவல்லியும் மன நிறைவுடன் சிரித்தனர்.

கதிர்தான் தங்கள் வீட்டு மாப்பிள்ளையிடம் ஏதோ சொல்லிக் கொடுத்து விட்டான் என்று நினைத்து வீட்டிற்கு வந்த மகேஷ் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந் தான்.

நந்தினியும் ராஜ்குமாரை செல்லில் அழைத்துப் பார்க்க... அவன் செல் ஸ்விட்ச் ஆப் என்று வந்தது.

"கல்யாணம் மட்டும் ஏதாவது காரணத்தால நிற்கட்டும்... நான் அவனைக் கொன்னுட்டு ஜெயிலுக்குப்



போகக் கூடத் தயங்க மாட்டேன்," என்று மகேஷ் ஆத்திரத்தில் அறிவிழந்து பேச,

நந்தினியும் தன் அண்ணனுக்குச் சற்றும் குறை யாத கோபத்தில் இருந்தாள்.

மதியம் சித்து வந்ததும் வேதவல்லி அவனுக்குப் பார்த்துப் பார்த்துப் பரிமாற... "நீங்க ஏன்மா வேலை பண்றீங்க? நானே போட்டுச் சாப்பிடுறேன்."

"இருக்கட்டும்ப்பா... இன்னைக்கு ஒரு நாள் வேலை பார்க்கிறதுனால ஒண்ணும் ஆகாது," என்றார் வேதா.

" சந்தியா எங்கம்மா? "

" அவ அவங்க வீட்ல இருக்காப்பா...!"

"சந்தியாவுக்கு மீன் குழம்புன்னா ரொம்பப் பிடிக் குமே...! நான் வேணா கொண்டு போய்க் கொடுத்திட்டு வரவா...?"

" வேண்டாம். அவங்க மாமியாரும் இன்னைக்கு இதேதான் அங்கேயும் சமைச்சிருப்பாங்க," என்று சொன்னவருக்குச் சந்தியா காலையில் செய்த கலாட்டா நினைவுக்கு வர.... சிரித்துக் கொண்டார்.

"என்னம்மா, நீங்களா சிரிக்கிறீங்க?" என்றதும், வேதவல்லி மறைக்காமல் காலையில் நடந்ததைச் சொல்ல, சித்தார்த், "ரொம்ப ஃபீல் பண்ணாளா...?" என்றான் கவலையாக..

"அதெல்லாம் இல்லை. அவளுக்கு அவங்க அப்பா எப்பவும் அவளைத்தான் தாங்கணும். இப்ப போட்டிக்கு நீ வந்திட்டேன்னு பொறாமை. அதே சமயம் உன்னை

விட்டும் கொடுக்க மாட்டா. நீ வேணா பாரு, இன்னும் கொஞ்ச நேரத்தில் நீ வந்திட்டியான்னு போன் பண்ணுவா...!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வீட்டின் தொலைபேசி ஒலித்தது.

வேதவல்லி புன்னகையுடன் சென்று போனை எடுக்க... அந்தப்பக்கம் சந்தியாதான், "சித்து வந்திட்டானா...? சாப்பிட்டானா...?" என்று விசாரித்தாள்.

"வீட்டுக்கு வந்தவங்களுக்குச் சாப்பாடு போட எனக்குத் தெரியும். நீ முதல்ல உன் மாமியாருக்கு வேலை பார்த்தியா, அதைச் சொல்லு...!" என்றதும்.

வேலை பார்த்தால்தானே சொல்வதற்கு. அங்கே சென்ற சிறிது நேரம் எல்லோரோடும் பேசிக் கொண்டிருந்தவர்கள், அதன் பிறகு அவர்கள் அறைக்குச் சென்றுவிட்டு இன்னும் கீழேயே இறங்கவில்லை. இதில் எங்கே வேலை பார்ப்பது.

இதைச் சொன்னால் தன் அம்மா திட்டுவார்கள் என்று சந்தியா, "சித்துவை சாப்பிட்டதும் இங்கே வரச் சொல்லுங்க!" என்று அதிகாரமாகச் சொல்லி விட்டுப் போனை வைக்க, வேதவல்லி தனக்குள் சிரித்துக் கொண்டார்.

சித்தார்த் அங்கே சென்ற போது, எல்லோரும் சேர்ந்து மதிய உணவு சாப்பிட்டு கொண்டிருந்தனர்.

"நீங்களும் சாப்பிடுங்க தம்பி!" என்று பெரியசாமி உபசரிக்க...

"இல்லப்பா... இப்பத்தான் அங்கே சாப்பிட்டேன்," என்றான் சித்தார்த் பவ்யமாக.



"சரி. ராத்திரி இங்கேதான் சாப்பிடணும்," என்ற பெரியசாமி, தன் மனைவி லக்ஷ்மியைப் பார்க்க... அவரும் சித்தார்த்தை அழைத்தார்.

சாப்பிட்டு முடித்ததும் எல்லோருமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"இங்கே மலை மேலே ஏதோ கோயில் இருக்குன்னு சொன்னியே...! அங்கே போவோமா...?" என்று சித்தார்த் ஆர்வமாகச் சந்தியாவைப் பார்க்க... கோயில் என்றதும் சந்தியா திருட்டு முழி முழிக்க... கதிர் "போகலாமே...!" என்றான்.

கதிர் செல்வோம் என்றதும் சித்தார்த் உடனே எழுந்து கொள்ள...

"இரு, நான் போய் டிரெஸ் மாத்திட்டு வரேன்!" என்ற சந்தியா மாடிக்கு விரைய... அவள் பின்னால் கதிரும் சென்றான்.

இருவரும் கோயிலுக்குச் செல்வதால் வேகமாகத் தலைக்குத் தண்ணீர் ஊற்றி விட்டு வந்தனர். கதிர் குளித்தது தெரியவில்லை. ஆனால் சந்தியாவின் நீளக் கூந்தலில் இருந்து நீர் வடிய,

அதைப் பார்த்த சித்தார்த், "காலையில குளிச்சதானே...! அப்புறம் ஏன் திரும்பிக் குளிச்சே...?" என்று அப்பாவியாகக் கேட்க, அங்கிருந்த பெரியவர்கள் அவன் கேள்வி காதில் விழாதது போல் இருக்க... வெங்கி கிண்டலாகச் சிரித்தான்.

'இப்படி எல்லார் முன்னாடியும் என் மானத்தை வாங்குறானே...!' என்று மனத்திற்குள் புலம்பிய சந்தியா,

"இன்னைக்கு நான்-வெஜ் சாப்பிட்டேன் இல்லே... அது தான் கோயிலுக்குப் போறதுக்கு முன்னாடி குளிச்சிட லாம்னு நினைச்சேன்!" என்று சமாளித்தவள்,

'ஹப்பாடா...!' என்று மனதிற்குள் நிம்மதிப் பெருமூச்சு விட... அதற்கு ஆயுள் சில நொடிகள்தான்.

"நான்- வெஜ் சாப்பிட்டாக் குளிக்கணுமா...? அப்ப நானும் குளிச்சிட்டு வரவா...?" என்று சித்தார்த் கேட்க, வெங்கி அடக்க முடியாமல் சத்தமாகச் சிரிக்க... கதிர் அவனைப் பார்த்து முறைத்தான்.

மேலும் சித்தார்த் எதுவும் கேட்கும் முன், "வெங்கி நீயும், சித்துவும் ஒரு பைக்கில் வாங்க. நானும் சந்தியாவும் ஒரு பைக்கில் வர்றோம்!" என்ற கதிர், சந்தியாவுடன் முன்னால் நடக்க...

"புரோ! உங்களை ஏமாத்துறாங்க. நீங்களும் சின்னப் பையன் மாதிரி அவங்க சொல்றதை நம்புறீங்களே...!" என்று வெங்கி சொன்னது சித்தார்த் துக்குச் சுத்தமாகப் புரியவில்லை.

அவன் முழிப்பதைப் பார்த்த வெங்கி, "உங்களுக்குக் கல்யாணம் ஆகும் போது புரியும்!" என்றதும், சித்தார்த் துக்கு லேசாகப் புரிய ஆரம்பிக்க, 'ச்சே...! லூசு மாதிரி கேட்டுட்டோம். இனி பார்த்துப் பேசணும்!' என்று மன திற்குள் சொல்லிக் கொண்டான்.

மகேஷ் ஏற்பாடு செய்திருந்த ஆள், கதிர் எங்கோ வெளியே செல்வதை அவனிடம் சொல்லி விட்டுக் கதிரைப் பின் தொடர்ந்து செல்ல, கதிர் முதலில் சோலை வீட்டிற்குச் சென்றான்.



கதிரும் சந்தியாவும் இன்னும் சோலை - சித்ராவின் குழந்தையைப் பார்க்கவில்லை. அதனால் முதலில் அங்கு சென்றனர்.

சோலையும் சித்ராவும் அவர்களை அப்போது சுத்தமாக எதிர்பார்க்கவில்லை. திடீரென்று வந்தவர்களைச் சந்தோஷமாக வரவேற்றனர். அதுவும் சித்துவைப் பார்த் ததும் அவர்கள் சந்தோஷம் மேலும் பெருகியது.

கதிர், குழந்தைக்குச் செயின் வாங்கி இருந்தான். அதைச் சந்தியாவிடம் கொடுத்துப் போடச் சொன்னவன், அவன் வாங்கி இருந்த உடையைச் சித்தார்த்திடம் கொடுத்துக் கொடுக்கச் சொன்னான்.

சித்தார்த் அப்போதுதான் நாம் ஒன்றும் வாங்கி வரவில்லையே என்று நினைத்தான். கதிர், அவனிடம் உடையைக் கொடுத்ததும், நன்றி கலந்த புன்னகையுடன் அதை வாங்கிச் சித்ராவிடம் கொடுத்தான்.

அவனால் கதிரை நினைத்து வியக்காமல் இருக்க முடியவில்லை. 'அது எப்படித்தான் இவருக்கு மட்டும் ஒவ்வொருத்தர் மனசும் புரியுதோ...! நம்ம சந்தியா சும்மா ஒண்ணும் மாமா மாமான்னு இவர் பின்னால் சுத்தலை!' என்று நினைத்தான்.

அங்கே ஒரு மணி நேரம் இருந்தவர்கள், கோயி லுக்குக் கிளம்பும் போது அவர்களுடன் சோலையும், சித்ராவும் சேர்ந்து கொண்டனர்.

இவர்களைக் கோயில் வரை பின் தொடர்ந்து வந்த மகேஷின் ஆள், அவர்கள் கோயிலுக்குள் செல்வதை

மகேஷிடம் தெரிவிக்க, அப்போது வீட்டில் இருந்த மகேஷ் உடனே கிளம்ப... நந்தினியும் அவனுடன் சென்றாள்.

"நீ எதுக்கு நந்தினி வர?"

"எனக்கு அந்தச் சந்தியாவைப் பார்த்து நாலு வார்த்தை நறுக்குன்னு கேட்கணும். என் மாமான்னு ரொம்ப அலட்டுவா... உன் மாமனோட யோக்கியதையைத் தெரிஞ்சிக்கோன்னு காட்டணும்!" என்றாள்.

"சரி, வா...!" என்று அவளை அழைத்துக் கொண்டு மகேஷ் சென்றான்.

இவர்கள் மலை ஏறி கோயிலுக்குச் சென்ற போது, அங்கே அவர்கள் எல்லோரும் சாமி கும்பிட்டு விட்டு பேசிக் கொண்டிருந்தனர். சந்தியாவும் சித்ராவும் குழந்தையை வைத்துக் கொண்டு மண்டபத்தில் உட்கார்ந்திருக்க, அவர்களைச் சுற்றி மற்றவர்கள் நின்றனர்.

சந்தியா, குழந்தையை மடியில் வைத்திருக்க... அவளருகில் மண்டியிட்டு அமர்ந்த சித்தார்த், குழந்தையின் பிஞ்சுக் கை கால்களை மிருதுவாக வருடியவன்,

"ரொம்ப அழகா இருக்கு இல்ல...! உனக்கு எப்ப சந்தியா இப்படி ஒரு பாப்பா வரும்?" என்று கேட்டதும், சந்தியா வெட்கப்பட... கதிர் புன்னகைக்க...

"டேய்! குழந்தை என்னமோ ட்ரெய்ன்ல பஸ்ல ஏறி வந்திட்டு இருக்க மாதிரி எப்ப வரும்னு கேட்கிறே...?" என்று சோலை சொன்னதும் எல்லோரும் சிரிக்க,

கதிர் மற்றும் சந்தியாவின் முகத்தைப் பார்த்த சித்ரா, "சீக்கிரம் வந்திடும்னுதான் நினைக்கிறேன்!" என்றாள்.



அப்போதுதான் நந்தினி உள்ளே நுழைந்தாள். இவர்கள் எல்லோரும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தவள், தன் அண்ணனுக்கு முன்பாக விரைந்து சென்று சந்தியாவின் எதிரில் நின்றவள், "என்ன, நினைச்சதை சாதிச்சிட்டோம்னு சந்தோஷமா இருக்கியா?" என்று கேட்க,

அவளைப் புரியாமல் பார்த்த சந்தியா, குழந்தையைச் சித்ராவிடம் கொடுத்து விட்டு எழுந்து நின்றவள், "என்ன சொல்ற நீ! எனக்கு ஒண்ணுமே புரியலை...!" என்றாள்.

"ஹா... ஹா...! உனக்கு ஒண்ணுமே புரியாதே. இப்படித்தான் பத்தாவது படிக்கும் போது, நான் சரியாகவே படிக்கலைன்னு சொல்லிட்டு டிஸ்ட்ரிக்ட் ஃபர்ஸ்ட் வந்தே.

"உன் நடிப்பை எல்லாம் நீ வேற யார் கிட்டேயாவது காட்டு. என் கல்யாணம் நின்னுடுச்சுன்னு தானே நீ சந்தோஷமா இருக்கே...!" என்று நந்தினி சந்தியாவைக் குற்றம் சாட்ட, அதைக் கேட்டு சந்தியா மட்டும் இல்லை அங்கிருந்த எல்லோருமே அதிர்ந்தனர்.

கதிருக்குக் குழப்பமாக இருந்தது. 'காலையில் ராஜ்குமார் நன்றாகத்தானே பேசினான்...? அதற்குள் என்ன ஆனது?' என்று யோசிக்க..

"உன் கல்யாணம் நின்னுடுச்சா...? ஏன்? அதுவும் அதுக்கு நான் எப்படிப் பொறுப்பாவேன்?" என்று சந்தியா புரியாமல் கேட்க...

"நீ இல்லை. உன்னோட மாமாதான் என் கல்யாணம் நிக்கக் காரணம்!" என்று நந்தினி, கதிரைப் பார்த்துக் கொண்டே சொல்ல... கதிர் அதிர்ந்தான்.

"என் மாமா உன் கல்யாணம் நிக்க என்ன செஞ்சாங்க?"

"அது நீ அவங்களைத்தான் கேட்கணும். நேத்து வரை என் கிட்டே நல்லாப் பேசிட்டு, என்னை இன்னைக்குப் பார்க்க வரேன்னு சொன்ன ராஜ்குமார், நம்ம ஊர் வரை வந்திட்டு எங்க வீட்டுக்கு வரலை... நாங்க போன் பண்ணாலும் எடுக்க மாட்டேங்கிறார்.

"காலையில் அவர் கிட்டே உன் மாமாதான் பேசினார். அவர் ராஜ்குமார் கிட்டே என்னைப் பத்தி என்ன சொன்னாருன்னு கேளு?" என்று நந்தினி, சந்தியாவைப் பார்க்க,

சந்தியா திரும்பி கதிரைப் பார்க்கவே இல்லை. "என் மாமா நிச்சயம் உன் கல்யாணம் நிக்கிற மாதிரி எதுவும் பேசி இருக்க மாட்டார்!" என்றாள் உறுதியாக.

"அதை நீ சொல்லாதே. உன் புருஷனைச் சொல்லச் சொல்லு...!" என்று மகேஷ், சந்தியாவின் முன்பு கை நீட்டிப் பேச, அவன் கையைப் பற்றிப் பின்னுக்குத் தள்ளிய சித்தார்த், "ஒழுங்கா மரியாதையாப் பேசு...!" என்றான் கோபமாக.

"நீ யாருடா நடுவுல வர? ஓ...! நீ தானே இவளோட சென்னையில் ஊர் சுத்தினவன்...!" என்று மகேஷ் நக்கலாகக் கேட்க, சித்தார்த் ஒரே குத்தில் மகேஷின் மூக்கை உடைத்திருந்தான்.

மகேஷின் மூக்கில் இருந்து ரத்தம் வடிய, அவனால் வலி பொறுக்க முடியவில்லை. நந்தினி, தன் அண்ணனின் அருகில் செல்ல...



அந்த நிலையிலும் மகேஷ், "உண்மையைச் சொன்னா வலிக்குதா...? சென்னையிலே ஊர் சுத்தினது பத்தலையா...? இங்கேயும் வந்திட்டே...?" என்று கேட்க,

"சேர்ந்து படிக்கிறவங்களைச் சேர்த்து வச்சு அசிங்கமாப் பேசுற நீ... கதிர், சந்தியாவை விரும்புறார்னு தெரிஞ்சும், அவரைக் கல்யாணம் பண்ண நினைச்ச உன் தங்கச்சியைப் பத்தி என்னடா சொல்வே?" என்று சித்தார்த் கேட்டதும், நந்தினிக்கு அவமானத்தில் உயிரே போனது போல் இருந்தது.

"என் தங்கச்சியைப் பத்தி என்னடா சொன்ன?" என்று மகேஷ் ஆத்திரத்தில் சித்தார்த் மீது பாய,

"உன் தங்கச்சியைச் சொன்னா மட்டும் வலிக்குதா...?" என்று சித்தார்த்தும் பதிலுக்குப் பாய... அவர்களோடு வெங்கியும் சேர்ந்து கொள்ள, அந்த இடமே போர்க்களம் போல் இருந்தது.

ஒரு பெண்ணைத் தாக்க வேண்டும் என்று நினைத்தால், ஆண்கள் கையில் எடுக்கும் முதல் ஆயுதம் பெண்ணின் ஒழுக்கத்தைப் பற்றித் தவறாகப் பேசுவது தான்.

அதுவும் சித்தார்த்தோடு தன்னை இணைத்துப் பேசியதில் சந்தியா கலங்கிப் போய் இருக்க... கதிர் அவளைத் தோளோடு சேர்த்து அணைத்து, நான் இருக்கேன் உனக்கு என்று சொல்லாமல் சொன்னவன், சத்தமாக, "சித்தார்த்...!" என்று அழைத்தான்.

சித்தார்த் சண்டையை நிறுத்தி விட்டுக் கதிரைப் பார்க்க... அவனை விடு என்பது போல் கதிர் தலை அசைக்க, சித்தார்த் விலகி நின்றான்.

மகேஷை நேராகப் பார்த்த கதிர், "ராஜ்குமார் என்னோட படிச்சவன். அதனால அவனோட பேசினேன். உன் தங்கச்சியைப் பத்தி நான் எதுவும் சொல்லலை. அப்படி ராஜ்குமார் நான் சொன்னதா ஏதாவது சொன்னா... அப்ப வா சண்டைக்கு. நான் எங்க வீட்ல தான் இருப்பேன்!" என்றவன், சந்தியாவோடு நடக்க, மற்றவர்கள் அவனைப் பின் தொடர்ந்தனர்.

சிறிது தூரம் சென்றதும், கதிரின் முன் வந்து நின்ற வெங்கி, "உனக்கு என்ன மனசுல காந்தின்னு நினைப்பா? அவனை அப்படியே விட்டுட்டுப் போற...?" என்றான் கோபமாக.

அவனை அழுத்தமான பார்வை பார்த்த கதிர், "கொஞ்சம் அவன் இடத்தில் இருந்து யோசிச்சுப் பாரு. காலையில ராஜ்குமார் என்னோடதான் பேசினான். பிறகு அவன் ஆளும் வரலை. போனும் எடுக்கலைன்னா என்ன நினைப்பாங்க?

"விடு. ராஜ்குமார் கிட்டே பேசினா அவங்களுக்கே உண்மை தெரியும்!" என்றான்.

"அது சரி. ஆனா அண்ணியைப் பத்தித் தப்பாப் பேசுறான். அதைக் கேட்க மாட்டியா நீ...?" என்று வெங்கி மனம் தாளாமல் சொல்ல...

சுற்றி ஒரு முறை எல்லோரையும் பார்த்த கதிர், "எனக்கு என் பொண்டாட்டியைப் பத்தித் தெரியும். என்



மாமனார் சித்துவை மகனாகவே நினைக்கிறாருன்னா... அவன் எப்படிப் பட்டவனா இருப்பான்?

"அவங்க ரெண்டு பேரையும் பத்தி எனக்கு யார் கிட்டேயும் விளக்கணும்னு அவசியம் இல்லை. கண்டவங்க கண்டதையும் பேசினா நான் பதில் சொல்லணுமா?" என்றவனின் வார்த்தையில் அனல் பறந்தது.

மேலும் தொடர்ந்த கதிர், "மகேஷ் கிட்டே இந்த ஊர்க்காரன்ற முறையில பேசி இருக்கேன். அவன் தங்கச்சிகிட்ட சந்தியாவோட ஃப்ரெண்டுன்னு பேசி இருக்கேன். அவ்வளவுதான். எனக்கு அவங்க யாரும் இல்லை," என்றவன், சந்தியாவோடு அங்கிருந்து செல்ல...

அவன் நந்தினியின் பெயரைக் கூடச் சொல்ல விரும்பவில்லை என்று எல்லோருக்கும் புரிந்தது. நந்தினியின் பின்னால் நின்றிருந்த சித்தார்த், "இதை விட யாரும் அசிங்கப்படுத்த முடியாது. இனி மேலாவது திருந்தினா மனுஷ ஜென்மம்," என்று சொல்லி விட்டு நடக்க, மகேஷும், நந்தினியும் தலை குனிந்து நின்றனர்.

சோலையும் சித்ராவும் அவர்கள் வீட்டிற்குச் சென்று விட... சித்தார்த்தும் வெங்கியும் ஊர் சுற்றக் கிளம்ப... கதிரும் சந்தியாவும் மட்டுமே வீட்டிற்கு வந்தனர். அறைக்கு வந்த கதிர், இன்னும் கோபமாகவே இருக்க... சந்தியா கட்டிலில் அவன் அருகில் உட்கார்ந்தவள், "மாமா...!" என்று அழைக்க,

"சந்தியா, திரும்ப அங்கே நடந்ததைப் பத்திப் பேசாதே...!" என்றான் கதிர் சுள்ளென்று.

"ம்ம்... இல்லை, பேசலை...!" என்றவளின் நெஞ்சத்தில் தன் மாமனை நினைத்து அத்தனைப் பெருமிதம் இருந்தது.

சந்தியா, கதிரின் மார்பில் தலை சாய்க்க... கதிர் அவளின் முகத்தைப் பற்றி மெதுவாக நிமிர்த்த, அங்கே அவள் விழிகளில் தெரிந்த காதலில் தன்னைத் தொலைத்தவன்... எல்லாவற்றையும் மறந்து அவளுடன் கூட... அங்கே நிறைவான தாம்பத்தியம் அரங்கேறியது.

## 18

ஒன்பது மாதங்களுக்குப் பிறகு...

கதிரின் வீடே விழாக்கோலம் கொண்டிருந்தது. அன்று சந்தியாவிற்கு வளைகாப்பு. தன் திருமணப் புடவையில்... தாய்மையின் பொலிவால் சந்தியா ஜொலிக்க... கதிர், அவளை விழி எடுக்காமல் பார்த்து ரசித்தான்.

லக்ஷ்மியும், வேதவல்லியும் முகத்தில் பூரிப்போடு விருந்தினரை வரவேற்க, பெரியசாமியும், துரையும் தங்கள் குலம் தழைக்க வாரிசு வருவதை எண்ணி மகிழ்ந்தனர்.

கதிருக்கு வேலை பார்க்க விருப்பம் இல்லை. ஒரு வீட்டையும், காரையும் வாங்கி விட்டு, அதற்கு லோன் கட்டியே காலம் முழுவதும் கழிக்கும் வாழ்க்கையை அவன் விரும்பவில்லை.

சொந்த ஊரில் தன் சொந்த பந்தத்துடன் இருக்கவே விருப்பப்பட்டான். அதனால் மதுரையில் அவனே



சொந்தத் தொழில் ஆரம்பித்து அதை வெற்றிகரமாக நடத்தி வருகிறான். மேற்கொண்டு அவர்கள் கிராமத்தில் விவசாயமும் பார்க்கிறான்.

சந்தியா தாய்மை அடைந்ததால், இந்த வருடம் மேற்படிப்புக்குச் சேரவில்லை. அடுத்த வருடம் மதுரையிலேயே மேற்படிப்புப் படிக்க முடிவு செய்திருக்கிறாள்.

அனுவிற்குத் திருமணம் ஆகி, மும்பையில் இருந்தாள். ஸ்ரீஜா கடைசி வருடத்தில் இருப்பதால், வர முடியவில்லை. பாலா இப்போது குடும்பத்துடன் லண்டனில் இருக்கிறான். அதனால் சித்தார்த் மட்டுமே வளைகாப்பிற்கு வந்தான்.

பெண்கள் சந்தியாவிற்கு வளை அடுக்க... ஆண்கள் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது சித்தார்த்துக்குப் பின்புறம் இருந்து குரல், "ஹலோ... மிஸ்டர் பனைமரம். கொஞ்சம் நகர்ந்து நிக்கிறீங்களா...?" என்று.

'யாருடா இது, நம்மையே இவ்வளவு தைரியமாப் பனை மரம்னு சொல்றது...?' என்பது போல் சித்து திரும்ப, அங்கே அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

மூன்று வருடங்களுக்கு முன்பு... அவன் கோயிலில் சில நிமிடங்களே பார்த்த பெண், கையில் வளையல் தட்டுடன் நின்று கொண்டிருந்தாள். 'இவ எங்கே இங்கே?' என்பது போல் சித்தார்த் பார்க்க... அவனை அலட்சியமாகப் பார்த்த அந்தப் பெண், அவனைத் தாண்டிச் சென்றாள்.

அவள் நேராகச் சென்று சந்தியாவின் அருகில் உரிமையாக உட்கார்ந்தவள், சந்தியாவோடு சிரித்துப் பேச, சித்தார்த் அவளை ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண் டிருந்தான்.

டிசைனர் சுடிதார் அணிந்து, ஷாம்பூ போட்டு அலசிய கூந்தலை சென்ட்டர் க்ளிப்பால் அடக்கி, பார்த்ததும் மனதில் பதிவது போல் பளிச்சென்று இருந் தாள். அவளுக்கும் சந்தியாவிற்கும் உருவ ஒற்றுமை இருந்தது. சித்தார்த், 'இது எப்படி?' என்று ஆச்சர்யப் பட்டவன், அவளையே பார்க்க...

அவளும் அடிக்கடி சித்தார்த்தைப் பார்த்தாள். அவள் பார்வையில் இருந்து அவளுக்குத் தன்னை ஏற்கெனவே தெரியும் என்று சித்தார்த் புரிந்து கொண் டான்.

சித்தார்த்துக்கு அவளைப் பற்றி உடனே தெரிந்து கொள்ள வேண்டும் போல் இருந்தது. இல்லையென்றால் மண்டையே வெடித்து விடும். வளைகாப்பு முடிந்ததும் சந்தியாவைக் கேட்போம் என்று இருந்தான்.

எல்லோரும் வளையல் போட்டதும், கதிர் சென்று தன் மனைவிக்குத் தான் வாங்கியிருந்த பச்சைக் கற்கள் பதித்த தங்க வளையல்களை அணிவிக்க... சந்தியாவின் விழிகள் சந்தோஷத்தில் கலங்கியது. அதைத் தன் செல்லில் சித்தார்த் படம் எடுத்தான்.

வளைகாப்பு முடிந்ததும் முதலில் சந்தியாதான் சாப்பிட வேண்டும் என்று அவளை அழைத்துக் கொண்டு



சென்று விட்டனர். சித்து யாரிடம் கேட்பது என்று நினைக்கும் போது, அங்கே வெங்கி வந்தான்.

பந்தி பரிமாறச் சென்றவன், சித்தார்த்தைப் பார்த்ததும் நிற்க... சித்தார்த் அந்தப் பெண்ணைக் காட்டி, யார் என்று விசாரிக்க...

யார் என்று பார்த்த வெங்கி முகம் மலர்ந்தவன், “சந்தியாவோட அத்தை பொண்ணு. பேரு கார்த்திகா. இன்ஜினியரிங் படிக்கிறா...!” என்றவன், மேலும் ஏதோ சொல்ல வர... அப்போது கார்த்திகா அவர்கள் அருகில் வருவதைப் பார்த்தவன், வேண்டுமென்றே அவள் காதில் விழும்படி,

“அவ ஒரு சரியான அப்பா டக்கர்டா சித்து. மனசுல மதுரைக்கே இந்த அம்மாதான் ராணின்னு நினைப்பு. ஆ... ஊன்னா மதுரையோட பெருமையைச் சொல்லக் கிளம்பிடுவா. இவளுக்கு ஒரு தங்கச்சி இருக்கு, பேரு தயான்னு. ரெண்டும் சேர்ந்து பண்ற ரௌசு இருக்கே... மதுரையே குலுங்குதுப்பா. இவங்களுக்கு ஒரு தம்பி இருக்கான் பாரு... அவன் தங்கக் கம்பி!” என்று கார்த்தியின் வரலாற்றையே அவன் படிக்க...

அவன் சொன்னதைக் கேட்டபடி வந்த கார்த்திகா, பொங்கி விட்டாள். “ஹே...! இப்ப நீ யாரைப் பத்தி சொல்ற? இப் யூ வான்ட் டு டாக் அபௌட் மீ, டாக் டைரக்ட்லி...!” என்று சண்டைக்கு வர,

“நீ ஏதோ மதுரைப் பொண்ணுன்னு சொன்ன... இல்ல போலிருக்கே...! இவங்க லண்டன் ரிடர்ன் மாதிரி

இல்ல தெரியுது. வாயைத் தொறந்தா இங்கிலீஷ்தான் வருது...!" என்று சித்தார்த் அவன் பங்குக்குக் கார்த்தி காலை வார...

"செந்தமிழ்தான் எப்பவும் பேசுவாங்க. டென்ஷன் ஆனா மட்டும்தான் இங்கிலீஷ். இல்ல கார்த்தி...?" என்று வெங்கி சிரிக்க... கார்த்திகா இருவரையும் முறைத்தாள்.

"ஆமாம்! உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனே...!" என்று கார்த்தி சொன்னதும், சித்தார்த் தன் தலையை ஸ்டைலாகக் கோத...

"சந்தியா கல்யாணத்தில, நீங்க தானே பஞ்சு மிட்டாய் வித்தது?" என்று கார்த்தி, சித்தார்த்தின் கற்பனையில் மண்ணைப் போட...

சித்துவுக்குத் தெரியும், அவள் வேண்டுமென்றே சொல்கிறாள் என்று. இருந்தாலும் விடாமல், "நான் பஞ்சு மிட்டாய் வித்ததை நீ பார்த்தே...!" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

"பின்னே! நீங்க தானே பச்சைக் கலர் சட்டையும் வெள்ளை வேட்டியும் கட்டிட்டு... அந்த இருட்டுலேயும் கூலிங் கிளாஸ் போட்டுட்டு நின்னது. அதைப் பார்த்து நான் பஞ்சு மிட்டாய் விக்கிறவருன்னு இல்ல நினைச்சேன். இல்லையா...?" என்று கார்த்திகா போலியாக வியக்க,

"ஆமாம் மச்சான். அப்ப கூட ஒரு பொண்ணு வந்து பஞ்சு மிட்டாய் வேணும்னு திரும்பத் திரும்ப வந்து தொல்லை பண்ணலை... நாம கூடப் போன்னு விரட்டினோமே... அதுதான் இந்தப் பொண்ணு...!" என்று வெங்கி விடாமல் வம்பிழுக்க..



"ஆமாம்டா...! இப்பத்தான் நினைவு வருது...!" என்று சித்து, வெங்கிக்கு ஹை-ஃபை கொடுக்க...

கார்த்திகா பொறுமை இழந்து, பல்லைக் கடித்துக் கொண்டு "ஹி...!" என்று கத்த, வெங்கியும், சித்தார்த்தும் ஆளுக்கு ஒரு பக்கம் தெறித்து ஓடினர்.

'நான் எப்படி இவளைச் சந்தியா கல்யாணத்தில் பார்க்காம மிஸ் பண்ணேன். பக்கத்தில இருக்கும் போது பார்க்கலை... ஆனா கோயில்ல... தூரத்தில இருந்து பார்த்தேன். இவளை இனி பார்க்கவே மாட்டோம்னு நினைச்சா... இவளே இப்ப கண்ணு முன்னாடி நிற்கிறா...!

'நம்ம கிட்டத்தான் மாட்டிக்கிடணும்னு அவளுக்கு விதி இருந்தா என்ன செய்றது?' என்று சித்து நினைக்க,

அது தெரியாத சித்து, "போட்டு வைத்த காதல் திட்டம் ஓ.கே. கண்மணி...!" என்று உல்லாசமாகப் பாடிக் கொண்டிருந்தான்.

சித்து, வெங்கி, கார்த்திகா மூவருமே பந்தி பரிமாறினர். சித்துவும் கார்த்திகாவும் அடிக்கடி ஓரக் கண்ணில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள...

யாரும் இல்லாத பொழுது கார்த்திகாவின் அருகில் வந்து சித்து, "மூணு வருஷம் முன்னாடி நான் போட்டிருந்த டிரஸ் கலர் வரை சொல்ற... நீ என்னை அப்பவே சைட் அடிச்சியா...?" என்று கண் சிமிட்டிக் கேட்க, கார்த்திகா மாட்டிக் கொண்ட பார்வை பார்த்தாள். சித்தார்த் புன்னகையுடன் அங்கிருந்து சென்றான்.

அன்று மாலை வரை கார்த்திகாவின் விழிகளும், சித்துவின் விழிகளும் தழுவியபடி இருந்தது. இவர்கள்

இருவரையும் பார்த்த வெங்கி, சுபாஷிடம் போட்டுக் கொடுக்க, அவன் இவர்கள் இருவரையும் சேர்த்து வைத்து ஓட்டினான்.

சந்தியாவும் கார்த்தியும் பேசிக்கொண்டிருந்த போது அங்கே வந்த சித்து, "நான் கிளம்புறேன் சந்தியா...!" என்றதும், கார்த்தியின் முகம் வாடி விட்டது.

அதைப் பார்க்காதது போல் பார்த்த சித்தார்த், "அம்மா! உனக்கு வளையல் கொடுத்து விட்டாங்க சந்தியா... அப்போ கொடுக்க ஒரு மாதிரி இருந்துச்சு...!" என்றவன், இரு தங்க வளையல்களை எடுத்துக் கார்த்திகாவிடம் கொடுத்து, சந்தியாவிற்குப் போட்டு விடச் சொல்ல, கார்த்தியின் முகம் நொடியில் தாமரையாக மலர்ந்தது.

சித்தார்த், கார்த்தி இருவரின் முகத்தையும் பார்த்த சந்தியாவிற்கு ஏதோ புரிந்தது. ஆனால், அவள் எதையும் கேட்கவில்லை. கார்த்தி, சித்தார்த்திடமிருந்து வளையலை வாங்கிச் சந்தியாவிற்குப் போட்டு விட...

"சந்தியா...! மேடம் யாருன்னே சொல்லலையே...!" என்றான் சித்தார்த், கார்த்தியைக் காட்டி...

"ம்ம்... அப்படியா...? யாருன்னு தெரியாமத்தான் வளையல் கொடுத்து போடச் சொன்னியா...? இந்தக் கதையெல்லாம் உன்னைப் பத்தி தெரியாதவங்க கிட்டே வேணும்னா சொல்லு. என் கிட்டே வேண்டாம்!" என்று சந்தியா சிரிக்க...

"எம்.டி. – நியூராலஜி படிக்கிறவனைப் பார்த்துப் பஞ்சு மிட்டாய் விக்கிறவன்னு சொல்லிட்டா உன் அத்தைப் பொண்ணு...!" என்று சித்தார்த் புகார் சொல்ல, கார்த்திகா சங்கடமாகச் சந்தியாவைப் பார்க்க...



"சும்மா விளையாட்டுக்குச் சொல்லியிருப்பா. விளையாட்டுத் தனமா இருந்தாலும் ரொம்பப் பொறுப்பான... புத்திசாலியான பொண்ணு. இவளுக்கு உன்னைப் பத்தி எல்லாமே தெரியும். மதுரையில் நாங்க இவ வீட்டுப் பக்கத்திலதான் இருக்கோம்."

"அப்படியா! என்ட்ரன்ஸ் எக்ஸாமுக்குப் படிச்சதுனால... என்னால நீ பால் காய்ச்சும் போது வர முடியலை... அடுத்த மாசம் வரேன்!" என்று சித்தார்த் சொல்ல...

"இனி நீ அடிக்கடி வருவேன்னு தெரியும்!" என்ற சந்தியா, அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்து விலகிச் செல்ல... சித்தார்த், கார்த்தி இருவரும் தங்கள் மனம் திறந்து பேசினர்.

அன்று இரவு கதிரின் தோளில் சாய்ந்திருந்த சந்தியா, சித்தார்த்–கார்த்தி பற்றிக் கதிரிடம் சொன்னவள், "எனக்கு ரொம்பச் சந்தோஷம் மாமா. நீங்க என்னையும் சித்தார்த்தையும் புரிஞ்சிக்கிட்ட மாதிரி கார்த்தியும் எங்களைப் புரிஞ்சிக்கணும்.

"ஆண் – பெண் நட்பு திருமணத்திக்கு பின்னாடியும் எல்லோருக்கும் தொடர்வதில்லை...!" என்றாள்.

"அது நாம எப்படி நடந்துக்கிறோம் அப்படிங்கிறதைப் பொறுத்து. நீயும் சித்தார்த்தும் எப்பவும் ரொம்ப விழுந்து பழக மாட்டீங்க. பாரு, இன்னைக்குச் சித்தார்த் உனக்கு வளையல் கூடக் கார்த்தி மூலமாத்தான் கொடுத்தான்.

"நட்பானாலும் ஒரு எல்லையோட இருக்கணும். தோள்ல கை போட்டுச் சுத்தினாத்தான் நட்பா? இல்லை... இன்பத்திலும், துன்பத்திலும் தோள் கொடுக்கிறதுதான் நட்பு.

"அது புரிஞ்சு நீங்க ரெண்டு பேரும் நடந்துக் கிறதுனாலதான் உங்க நட்பு உங்களையும் தாண்டி நம்ம குடும்பம் வரை தொடருது!" என்ற கதிரின் புரிதலை எண்ணிச் சந்தியா சந்தோஷத்தில் அவனை இறுக அணைக்க...

"விடுடி! என் பொண்ணுக்கு வலிக்கப் போகுது...!" என்று கதிரும், "பொண்ணு இல்லை, பையன்தான்!" என்று சந்தியாவும்... எப்போதும் தங்களுக்குள் நடக்கும் செல்லச் சண்டையை ஆரம்பித்தனர்.

மறுநாள் கதிரை வற்புறுத்தி அழைத்துக் கொண்டு சந்தியா கடை வீதிக்குச் சென்றாள். அவர்கள் சாமான்கள் வாங்கிக் கொண்டு திரும்ப வரும் போது, எதிரில் நந்தினி யும், ராஜ்குமாரும் வந்தனர்.

ராஜ்குமார், கதிரைப் பார்த்ததும் ஆவலாக நின்று பேச, கதிர், வேறு வழியில்லாமல் நின்றான்.

ராஜ்குமார் அவனாகவே, "உன்னைப் பஸ் ஸ்டாண்ட்ல பார்த்த அன்னைக்கு எங்க பாட்டி இறந் திட்டாங்கடா. நான் அதனால உடனே கிளம்பிட்டேன்!" என்றான்.

கதிர் ஒன்றும் தெரியாதவன் போல், "அப்படியா...?" என்றான்.

பின் அவர்கள் இருவரும் தங்கள் வேலையைப் பற்றிச் சிறிது நேரம் பேசினார்.



"சரிடா...! நான் கிளம்புறேன். சந்தியாவுக்குக் கால் வலிக்கும்!" கதிர் சொல்ல...

"உன் மனைவியும், என் மனைவியும் ஒரே ஸ்கூல்லதானே படிச்சாங்க. ஆனா பேசிக்கவே மாட்டேங் கிறாங்க...!" என்று ராஜ்குமார் சந்தேகமாகக் கேட்க..

"லேடீஸ்னா அப்படித்தான். ஸ்கூல் படிக்கும் போது ஏதாவது சண்டை போட்டிருப்பாங்களா இருக்கும்..." என்ற கதிரை, சந்தியாவைப் பார்த்துக் கொண்டே, "உன் மனைவி தான் எப்பவும் நல்லாப் படிப்பாங்க. இவ பிட் அடிச்சு டிஸ்ட்ரிக்ட் ஃபர்ஸ்ட் வந்துட்டா.. அதுல இருந்து ரெண்டு பேருக்கும் லடாய்...!" என்று விளையாட்டாகச் சொல்ல...

"இப்படியெல்லாம் கூடவா சண்டை போடுவாங்க...?" என்று ராஜ்குமார் சிரித்துக் கொண்டே அவர்களை வழி அனுப்பினான்.

நந்தினி, நிமிர்ந்து சந்தியாவைப் பார்க்க.. சந்தியா ஒப்புக்குக் கூட அவளைப் பார்க்கவில்லை. நந்தினிக்கு இப்போது நன்றாகவே புரிந்தது. இழக்கக் கூடாத நட்பை இழந்து விட்டோம். இனி என்றும் அது தனக்குக் கிடைக் காது என்று.

அவர்களைத் தாண்டி வந்ததும் இடுப்பில் கை வைத்துக் கதிரைப் பார்த்து முறைத்த சந்தியா, "நான் பிட் அடிச்சு டிஸ்ட்ரிக்ட் ஃபர்ஸ்ட் வந்தேன்னா... அப்ப ஸ்டேட் தேர்ட் வந்ததும் பிட் அடிச்சா...?" என்று கோபமாகக் கேட்க,

"சும்மாடா...! ஏதாவது காரணம் சொல்லலைன்னா அவனுக்கு வீணாகச் சந்தேகம் வரும். அப்புறம் என்ன

விஷயம்னு நோண்டுவான். ஒரு பொண்ணோட வாழ்க்கைடா... ப்ளீஸ், விடு!" என்றதும், சந்தியா சுற்றிப் பார்க்க...

"என்ன பார்க்கிறே?" என்றான் கதிர் புரியாமல்.

"ம்ம்... உங்களுக்குச் சிலை வைக்க நல்ல இடமாத் தேடுறேன்...!" என்று சந்தியா சிரிக்காமல் சொல்ல, கதிர் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

கதிர் சிரிப்பதைப் பார்த்துச் சந்தியாவிற்கும் சிரிப்பு வர, வயிற்றில் குழந்தை இருந்ததால் அவளால் சிரிக்கக் கூட முடியவில்லை.

அவள் கஷ்டப்பட்டுச் சிரிப்பதைப் பார்த்து, "என் பொண்ணு உன்னைப் படுத்துறாளா...?" என்று கதிர் ஆரம்பிக்க,

"பொண்ணு இல்ல, என் பையன்...!" என்று சந்தியாவும் சண்டைக்குக் கொடி பிடிக்க,

அவர்களுக்கு என்ன குழந்தை? என்பதை உங்கள் விருப்பத்திற்கே விட்டு, அவர்கள் என்றும் இன்று போல் சந்தோஷமாக வாழ வாழ்த்தி விடை பெறுகிறேன்.


கண்ணா
வருவாயா?
ரம்யா ராஜன்